# கிறிஸ்தவம்

## தரம் 13

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

**(2010 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.)**

சமயக் கல்வித்துறை
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
2010

கிறிஸ்தவம்
தரம் - 13
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதற் பதிப்பு - 2010

சமயக் கல்வித்துறை
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**பதிப்பு:**

# முகவுரை

தேர்ச்சிகளை அடித்தளமாகக் கொண்ட கலைத்திட்டத்தைப் பாடசாலை முறைமையில் அறிமுகம் செய்யும் பணி 13ஆந் தரத்துக்குரிய ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அறிமுகங் செய்வதுடன் பூர்த்தியடைகின்றது. 12ஆம் 13ஆந் தர மாணவ மாணவியர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்காக நிலவும் கடுமையான போட்டிக்கு உள்ளாவதால் நிதமும் கணிசமான அழுத்தத்துக்கு ஆளாகின்றனர். க.பொ.த. உயர் தரத்துக்காக புதிய கலைத்திட்டத்தை முதல் தடவையாகப் பயன்படுத்தும் நிலையில் அவ்வழுத்தம் மேலும் அதிகரிக்கும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் உங்களது கைகளை அடையும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது பாடத்திட்டத்தைப் போன்றே முக்கியமானதாகும். இங்கு ஆசிரியர் முதன்மை யாகக் கவனத்திலெடுக்க வேண்டிய மூன்று அம்சங்கள் உள்ளன. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் பாடத்திட்டத்துடன் முழுமையாகப் பொருந்தியமைந்திருத்தல், கலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு கலைத்திட்டத் தத்துவத்தையும் தூரநோக்கையும் முதன்மையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல், 12ஆம் 13ஆந் தர மாணவர்களிடத்தே எதிர்பார்க்கப்படும் அடைவு மட்டத்தை மனதிற்கொண்டு தயாரிக்கப்பட்டிருத்தல் ஆகியனவே அவையாகும். எனவே இதனை நன்கு உசாவுதல் ஆசிரியரின் இன்றியமையாத பணியும் பொறுப்புமாகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் உங்களது கவனத்துக்குக் கொண்டு வருதவற்காகத் தேசிய கல்வி நிறுவகம் 13ஆந் தரத்தில் கற்பிக்கும் சகல ஆசிரிய ஆசிரியைகளுக்கும் உரிய பயிற்சியை வழங்கும் பணிகளையும் செய்து வருகின்றது. தொடர்ச்சியாக நடத்தப்படும் இப்பயிற்சி அமர்வுகளில் ஆசிரியர்கள் பங்குபற்றுவது இன்றியமையாததாகும். இங்கு தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் கோட்பாடுகள், செயன்முறைகளை விளங்கிக்கொள்வதற்கு அப்பயிற்சி பெரிதும் துணையாக அமையுமென்பதே அதற்கான காரணமாகும். குறிப்பாக பாடசாலை மட்ட மதிப்பீட்டுச் செயற்பாடுகளை தேர்ச்சி விருத்திக்குத் துணையாகக்கொள்ள எதிர்பார்க்கப் படுகின்றது. கற்பித்தலை பாட விடங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திவிடாது மாணவ மாணவியரது திறன்களுக்கு மெருகூட்டுதல் எனும் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு இவ்வெல்லாத் தலையீடுகளும் இன்றியமையாதவையாகும் என்பதை கல்வி மற்றும் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் நாம் அனைவரும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிக்கும் சிரமமிக்க பணியை நிறைவு செய்வதில் பங்களிப்புச் செய்ய தேசிய கல்வி நிறுவக கல்விசார் பணியணியினர் உட்பட ஏனைய சகல பணியணியினருக்கும் வெளிவாரியாகப் பங்களிப்புச் செய்த கல்விமான்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

**கலாநிதி உபாலி எம். சேதர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## முன்னுரை

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2009ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் தரத்திற்குரிய கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உங்களுக்குத் துணையாக அமையும். இந்த வழிகாட்டி நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரையில் நடைமுறையிலிருந்த பாடத்திட்டங்களிலிருந்து வேறுபட்டது. இது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அமைந்திருப்பதே அவ்வேறுபாடாகும். இங்கு தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை இத்தரத்திலேயே அடைய முடியாமற் போக இடமுண்டு. சிலவேளை, அதற்காக நீண்டகாலம் எடுக்கலாம். எனினும், தேர்ச்சி மட்டங்களையும் அந்தத் தேர்ச்சி மட்டத்தின் கீழ் தரப்பட்டுப்பட்டுள்ள கற்றற் பேறுகளையும் இத்தரம் முடிவடைவதற்குள் அடைதல் அவசியமாகும். எனவே, இத்தரத்திற்குரிய பாடங்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு அத்தேர்ச்சி மட்டங்களும் கற்றற்பேறுகளும் துணையாகும்.

இக்கற்றற்பேறுகளை கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் குறிக்கோள்களை வகுத்துக் கொள்வதற்கும் வகுப்பறை மதிப்பீட்டுக் கருவிகளை தயாரித்துக் கொள்வதற்குமான நியதிகளாகப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறோம். மேலும் இப்பாடத்தைப் பயிலும்போது உசாவுவதற்குரிய மேலதிக நூல்கள், இணைய வலை கடப்பிடங்கள் (Web Site) முதலானவை குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்வதற்கு இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி துணையாக அமையும்.

நீங்கள் ஆக்கபூர்வமான ஆசிரியராகச் செயற்படுவீர்கள் எனும் எதிர்பார்ப்புடனேயே உத்தேச செயற்பாடுகள் இங்கு மாதிரிச் செயற்பாடுகளாகத் தரப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ளுங்கள். குறிப்பாக ஆசிரியர் - மைய வகுப்பறைச் செயன்முறையை மாற்றி மாணவர் - மையச் செயன்முறையாக அமைத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மாணவரை நூல் உசாவுகை, இணையப் பயன்பாடு முதலான தேடல்களில் கவனம் செல்லத்தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

கற்பித்தலின்போது மரபு ரீதியான முறையில் குறிப்பு வழங்குவதற்குப் பதிலான கவர்ச்சிகரமான வகையில் புத்தறிவு, கோட்பாடுகள் முதலானவற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காக இப்புதிய வகுப்பறையில் தொழில்நுட்பத்தை உச்சளவில் உபயோகப்படுத்தும் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனவே, புதிய தொழில்நுட்பச் சாதனங்களை இன்றளவுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

13ஆம் தரத்தில் இப்பாடத்தைக் கற்கத் தொடங்கும் உங்கள் மாணவர்களுக்கு இப்பாடத்திட்டம் குறித்து தெளிவுபடுத்துவது பயனுடையதாகும். வருடத்துள் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் உங்களது கற்றல்-கற்பித்தல் திட்டத்தை அறிமுகஞ் செய்வதால் கற்றலின்பால் அம்மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டலாம். மேலும் முழுப் பாடத்தையும் கற்பதற்காக மாணவர்களை பாடசாலையின்பால் ஈர்ப்பதற்கும் அது துணையாகும். புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பினூடாக வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயன்முறையில் தெள்ளத் தெளிவாக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இப்பாடத்திட்டத்தையும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியையும் பயன்படுத்தி உங்களது ஆக்கத் திறனை விருத்தி செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த கல்விமான்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்கும் எனது விஷேட நன்றியைத் தெரிவிக்கின்றேன். இப்பணியில் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் நாயகம் கலாநிதி உபாலி எம். சேதர அவர்களுக்கும் அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கல்வி வெளியீட்டு ஆணையாளர் உட்பட ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றியுடையவனாவேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
கலைத்திட்ட அபிவிருத்திப் பீடம்.
தேசிய கல்வி நிறுவகம்

# ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும்

**ஆலோசனை :** **பேராசிரியர் லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

**திரு விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்.

**மேற்பார்வை :** **கலாநிதி மாவுல்கொட சுமணரத்தன தேரர்**
பணிப்பாளர், சமயக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்.

**ஆலோசனைக் குழு:** **மேதகு கலாநிதி வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை**
தலைவர், திருவிவிலியம், மறைக்கல்வி, கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு.

**மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
உப தலைவர், திருவிவிலியம், மறைக்கல்வி, கல்வி பற்றிய ஆயர்களின் ஆணைக்குழு.

**கலைமாணி அருட்பணி. ஐவன் பெரேரா**
பணிப்பாளர், தேசிய கத்தோலிக்க கல்வி ஆணைக்குழு.

**கலாநிதி அருட்பணி. ஜயசிறி பீரிஸ்**
செயலாளர் நாயகம், தேசிய கிறிஸ்தவ சபை.

**கலாநிதி அருட்பணி. ஞானமுத்து பிலேந்திரன்**
திணைக்களத் தலைவர், கிறிஸ்தவ, இஸ்லாம் நாகரிகம், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

**கலாநிதி திரு. ஷேலி விஜேசிங்க**
திணைக்களத் தலைவர், கிறிஸ்தவ நாகரிகம்,
களணிப் பல்கலைக்கழகம், களணி.

**முதுமாணி அருட்பணி. கிரகோரி பர்னாந்து**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
சமய, விழுமியப் பிரிவு, கல்வி அமைச்சு, இசுருபாய.

**இணைப்பாளர் :** **முதுமாணி அருட்பணி. அ.றெ. லொயிட் சாந்திகுமார்**
செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்.

**கலைமாணி அருட்பணி, கமுனு டயஸ் ஜயவர்தன**
உதவிச் செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்.

**ஆக்கியோர் குழு :** **கலாநிதி அருட்பணி. சிசில் ஜோய்,**
இயக்குனர், இறையியல் கல்லூரி, கொழும்பு - 08.
**முதுமாணி அருட்பணி. பிலிப்ஸ் இ. இயேசுதாசன்,**
விரிவுரையாளர் ''அமல உதயம்'',
உப்புவெளி, திருகோணமலை.
**முதுமாணி அருட்பணி. இந்திரா ரட்ணசிறி பர்னாந்து,**
இயக்குனர், கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்விப் பணியகம், கொழும்பு - 08.
**முதுமாணி அருட்பணி. ஷெறோன் சந்தன டயஸ்,**
விரிவுரையாளர், தேசிய குருமடம், அம்பிட்டிய.
**முதுமாணி அருட்பணி. ஆனந்த வீரக்கோன்,**
விரிவுரையாளர், இறையியல் கல்லூரி, குருநாகல்.
**கலைமாணி திரு. எஸ். ஜீ. கே. டீ. எல். சீ. பிரசாத்,**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்விப் பணிமனை, ஹோமாகம.

**அலுவலக உதவி :** **முதுமாணி அருட்பணி. கிறிஸ்தோபர் பால்ராஜ்**
**முதுமாணி அருட்பணி. றஞ்சித் ஜயவீர**
**முதுமாணி அருட்பணி. சுறங்க டி மெல்**
**கலைமாணி அருட்செல்வி. ஜசிந்தா பர்னாந்து**
**திருமதி. ரி. ஜே. போல் அன்ரனி**
**செல்வி. டி. ஐ. யோசப்**
**செல்வி. ஏ. கே. எஸ். ஏஞ்சல் மேரி**
**செல்வி. ஏ. மரில்டா புஷ்பராணி**
**செல்வி என். இவோன் பெலீசியா பர்னாந்து**
**திருமதி. சுரங்கி நெலுமா**

**கனிணிப் பதிப்பு :** **செல்வி. பிரான்சிஸ்கா டொறின் டானியல்**

**கனிணி வடிவமைப்பும் :** **திருமதி. எப். ஏ. எப். நிஸ்மியா**
தொழினுட்ப உதவியாளர்
தேசிய கல்வி நிறுவகம்

**தொகுப்பாசிரியர் :** **முதுமாணி அருட்பணி. அ.றெ. லொயிட் சாந்திகுமார்**
செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்.

**அட்டைப்படம் :** **திருமதி. எப். ஏ. எப். நிஸ்மியா**
தொழினுட்ப உதவியாளர்
தேசிய கல்வி நிறுவகம்

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | | **பக்கம்** |
| முகவுரை | ........................................................................ | iii |
| முன்னுரை | ........................................................................ | iv |
| ஆலோசனைக் குழுவும் ஆக்கியோர் குழுவும் | ........................................... | v |
| விடய உள்ளடக்கம் | ........................................................................ | 1 |
| பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம் | ........................................... | 187 |

**தேர்ச்சி 6.0** : பல நூற்றாண்டுகளாக இடம்பெற்ற திருச்சபையின் வளர்ச்சியை இனங்கண்டு, இன்றைய திருச் சபையின் வளர்ச்சிக்குப் பங்காளிகளாவர்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : திருச்சபையின் ஆரம்ப காலம் பற்றிய விடயங் களைத் தெரிந்து கொள்வர்.

**பாடவேளைகள்** : 50

**கற்றல் பேறுகள்** :

- திருச்சபையின் ஆரம்ப காலம் பற்றிக் கற்கக்கூடிய மூல நூல்களைத் தேடிக் கண்டு கொள்வர்.
- அப்போஸ்தலர் கால முடிவில், திருச்சபை பரவியிருந்த இடங்களை ஒரு வரைபடத்தில் குறித்துக் கொள்வர்.
- ஆதித் திருச்சபை அவ்வளவு விரைவாகப் பல இடங்களுக்குப் பரவுவதற்கு முக்கிய பங்களித்தவர்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பர்.
- ஆதித் திருச்சபை அவ்வளவு விரைவாகப் பரவுவதற்கு ஏதுவாக இருந்த ஏனைய காரணிகளை உரையாடல் மூலம் அறிந்து கொள்வர்.
- ஒரு வரைபடத்தில் புனித பவுல் தம் மறைத்தூதுப் பயணங்களின்போது தரிசித்த இடங்களைக் குறித்துக் கொள்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி** :

### 6.1.1. திருச்சபையின் ஆரம்ப காலம்

- திருச்சபை என்றால் என்ன? நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை இறை மகனாகவும், அனைத்துலக மீட்பராகவும் ஏற்று, அவர்மேல் விசுவாசம் கொண்டு, அவருடைய போதனைகளையும் ஏற்று வாழ்ந்து, அவருடைய பெயரால் திருமுழுக்குப் பெற்று, அவரே ஏற்படுத்திய அதிகாரத்தின் வழிநடத்துதலின் கீழ் வாழ்வோரின் (கிறிஸ்தவர்களின்) சமூகத்தையே நாம் திருச்சபை என்று அழைக்கிறோம்.
- திருச்சபையின் ஆரம்ப காலம் அல்லது வரலாறு என்றால் என்ன? அச்சபையின் ஆரம்பந்தொட்டு, முதல் மூன்று நூற்றாண்டுகளில் அதன் வளர்ச்சி, அதாவது, அதன் தாபகம், ஆரம்பம், அமைப்பு, வழிபாட்டு முறை, அதன் அபிவிருத்தி, அதன் விரிவடைவு, அது புரிந்துள்ள நற்செயல்கள், அதற்கு ஏற்பட்ட குரோதங்கள், அது முகங்கொடுத்த சவால்கள், அதற்குக் கிடைத்த வெற்றி, தோல்விகள் போன்றவை பற்றிய விபரங்களின் தொகுப்பையே குறிக்கின்றது. இக்காலம் அப்போஸ்தலர் காலம், அப்போஸ்தலிக்க பிதாக்களின் காலம், சத்தியத்தின் பாதுகாவலரின் (கலாபனைக்) காலம் என்பவற்றை உள்ளடக்குகின்றது.
- இக்காலம் பற்றித் தெரிந்துகொள்ள உதவக்கூடிய மூலங்கள்: திருத்தூதர் பணி நூல், அப்போஸ்தலர்களின் குறிப்பாக புனித பவுலின் திருமுகங்கள், நான்கு நற்செய்திகள், அப்போஸ்தலிக்க பிதாக்களின், சத்தியத்தின் பாதுகாவலரின் ஆக்கங்கள், அக்காலத்தைய சில கிறிஸ்தவர்களல்லாத வரலாற்று ஆசிரியர்களின் (பிளேவியஸ் யோசவ், ரசிற்றஸ், பிளினி போன்றவர்களின்) நூல்கள் என்பன.
- கிறிஸ்து தம் பணியின் ஆரம்பத்திலிருந்தே தமக்குப்பின் தம் பணியைத் தொடர்ந்து ஆற்ற, ''தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பவும்'' பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களை ஆயத்தம் செய்தார் (மாற். 3:13-19). அவர்களுக்குத் தம் வாழ்விலும், பணியிலும் பங்களித்து, செயல்முறைப் பயிற்சியும் அளித்தார்

(மாற். 6:6-13). இவ்வாறு கிறிஸ்து திருச்சபைக்கு அத்திவாரம் இட்டு, அதற்குரிய உள்கட்டமைப்பையும் ஏற்படுத்தினார். பின்னர் இக்குழுவுடன் வேறு எழுபத்திரண்டு சீடர்களையும் சேர்த்துக்கொண்டார் (லூக். 10:1-12).

- அக்குழுவிற்குத் தமது இடமாக நின்று, தலைமைதாங்கி, வழிநடத்த பேதுருவை நியமித்தார் (மத்.16:16-19). அவர்கள் ஆற்ற வேண்டிய பணியைத் தெளிவாக விளக்கினார். ‘‘நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்’’ (மத். 28:18-20).
- இயேசுவின் வாழ்க்கையின் இறுதியில் இக்குழு, இயேசுவின் தாய் மரியாவையும் ஏனைய சில பெண் சீடர்களையும் உள்ளடக்கிய 120 பேர் கொண்ட குழுவாக அதிகரித்தது (தி.ப. 1:15).
- திருச்சபைக்கு வேண்டிய சகல ஆயத்தங்களையும் செய்து முடித்தபின், இயேசு அச்சீடர்கள் குழு செயலூக்கம் பெற தூய ஆவியின் வருகைக்காகக் காத்திருக்கும்படி கூறிவிட்டு விண்ணகம் சென்றார். ‘‘நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம். என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள்... நீங்களோ இன்னும் சில நாட்களில் தூய ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள்’’ (தி.தூ.ப. 1:4-5).

### 6.1.1.1. தூய ஆவியின் வருகை (தி.ப. 2:1-13)

- ஆண்டவர் இயேசுவின் கட்டளைப்படி அவருடைய சீடர்கள் ஏறக்குறைய 120 பேர் எருசலேமில், மேல்மாடி அறையில், செபித்துக்கொண்டு, தூய ஆவியின் வருகைக்காக காத்திருந்தனர்.
- யூதர்களின் பெந்தக்கோஸ்து திருவிழா வந்தது. யூத வழிபாட்டில் மூன்று முக்கிய திருவிழாக்கள் இருந்தன.
  1) பாஸ்கா அல்லது கடத்தல் திருவிழா: எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து செங்கடலைக் கடந்து பெற்ற விடுதலை நினைவுகூரப்பட்டது.
  2) வாரங்களின் திருவிழா அல்லது ஐம்பதாம் நாள் (பெந்தக்கோஸ்து) திருவிழா: சீனாய் மலை உடன்படிக்கை நினைவு கூரப்பட்டது.
  3) கூடாரத் திருவிழா: நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் அகதிகளாகக் கூடாரத்தில் வாழ்ந்தது நினைவு கூரப்பட்டது.
- இந் நாட்களில் யாவே தம் பெயருக்கெனத் தெரிந்துகொண்ட இடத்தில் தம் திருமுன் வரப் பணித்திருந்தார். எனினும், பாஸ்கா விழாவிற்கு பாலஸ்தீனாவில் வாழ்ந்த யூதர்களே எருசலேமுக்கு வந்தனர். ஆனால் பெந்தக்கோஸ்து விழாவிற்கு உலகமெங்கும் சிதறுண்டு வாழ்ந்த யூதர்கள் பெருந்திரளாக எருசலேமுக்கு வந்து திருவிழாவில் பங்கெடுத்தனர்.
- பெந்தகோஸ்து தினத்தன்று திடீரென தூய ஆவியானவரின் வருகை இடம் பெற்றது. (தி.ப. 2:1-13). அங்கு நடந்ததை வார்த்தையில் விபரிக்க முடியாமல் ஆசிரியர் தத்தளிப்பதை அவதானிக்கிறோம். ‘‘கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல்... நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள்’’ பழைய ஏற்பாட்டில் (சீனாய் மலை) இறைமாட்சியை விபரிக்கப் பயன்படுத்திய சொற்களை இங்கு பயன்படுத்தி, தூய ஆவி இறைவன் என்பதையும், அவர் மேலிருந்து இறங்கி வருவதையும் ஆசிரியர் உணர்த்துகிறார்.
- தூய ஆவி பிளவுபட்ட நா வடிவில் அங்கு கூடியிருந்த ஒவ்வொருவர் மேலும் வந்து இறங்கியதை ஆசிரியர் வலியுறுத்துகிறார். ‘‘ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்து...’’ ‘‘அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு...’’ ‘‘அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேச’’ என்று மும்முறை கூறுவது, பெந்தக்கோஸ்தின் தனிச்சிறப்பு தூய ஆவியின் வருகை அல்ல. மாறாக, அவர் அங்கிருந்த அனைவர் மேலும் வந்ததென்பது வலியுறுத்தப்படுகிறது.

- முன்பு நடந்ததுபோல (இறைவாக்கினர், இயேசு போன்ற) ஒரு சிலருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் அல்ல. ஆனால் அங்கு கூடியிருந்த அனைவர் மேலும், நிரந்தரமாக வந்திறங்கினார். ‘‘அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும்’’. இவ் உண்மையை இறைவாக்கினர் யோவேல் முன்மொழிந்த வார்த்தைகள் உறுதி செய்கின்றன. ‘‘இறுதி நாளில் எல்லோர் மீதும் என் ஆவியைப் பொழிவேன்’’ இவ் விபரிப்பின் வழியாக ஆசிரியர் ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தை புத்துயிர் அளிக்கப்படுவதை, திருச்சபையின் பிறப்பைக் காட்டுகிறார். பெந்தக்கோஸ்து விழாவே திருச்சபையின் பிறப்பு விழாவாக அமைகிறது.
- இயேசுவின் சீடர்கள் தூய ஆவியைப் பெற்றதை அவருடைய செயற்பாடுகளால் உறுதிபடுத்தப்படுகிறது: படிப்பறிவில்லாத கலிலேயர் அயல் மொழிகளில் பேசியது, யூதர்களுக்குப் பயந்து, பூட்டிய அறையில் ஒழிந்திருந்த சீடர்கள் துணிவு பெற்று, வெளியே வந்து, அத்தனை மக்கள் முன்னிலையில் நற்செய்தியை அச்சமின்றிப் போதித்தது என்பன அவர்கள் தூய ஆவியின் கொடைகளை நிறைவாகப் பெற்றிருந்ததை உறுதி செய்கிறது.
- உலகெங்குமிருந்து எருசலேமில் கூடியிருந்த யூதர்கள் தத்தம் மொழிகளில் நற்செய்தி போதிக்கப்படுவதைக் கேட்பது, சீடர்கள் நற்செய்தியை உலகெங்கும் சென்று போதிக்க வேண்டுமென்பதைக் காட்டுகிறது. படிப்பறிவற்ற கோழையான மீன்பிடித் தொழிலாளியான பேதுரு அத்தனை ஆயிரம் மக்கள் முன்னிலையில் துணிவுடன் பேசியதை அந்த மக்கள் தத்தம் மொழியில் கேட்டது, கிறிஸ்தவம் எந்த ஒரு மொழிக்கோ, இனத்துக்கோ உரியதல்ல: மாறாக, அது ஒரு அனைத்துலக மதம் என்பதைக் காட்டுகிறது.
- பன்னிரு அப்போஸ்தலர்களின் பெயரால் பேதுரு ஆற்றிய முதல் மறையுரை அவரின் தலைமைத்துவத்தையும், அப்போஸ்தலர்களின் போதகத்தின் சாராம்சத்தையும் (கெறிக்மா) தருகிறது. இறைவாக்கினர்கள் முன்னறிவித்த இறைவாக்குகள் இயேசுவில் நிறைவேறியிருப்பதைச் சுட்டிக்காட்டி, இயேசுவே இறைவனால் வாக்களிக்கப்பட்டு, இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்டு, யூதரால் எதிர்பார்க்கப்பட்டிருந்த மெசியாவென எண்பித்தார். ‘‘இந்த இயேசுவை நீங்கள் திருச்சட்டம் அறியாதார் மூலம் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். ஆனால் கடவுள் அவரை மரண வேதனையினின்று விடுவித்து உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்’’ (தி.ப. 2:23-32).
- பேதுரு ஆற்றிய உரையின் விளைவாக ஏறக்குறைய 3000 பேர் இயேசுவின்மேல் விசுவாசம் கொண்டு, தங்கள் குற்றங்களை உணர்ந்து, மனம்வருந்தி, திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் சேர்ந்தனர். மறுநாள் பேதுரு கோவிலின் அழகு வாயிலில் கால் ஊனமுற்ற ஒருவரைக் குணமாக்கிய பின், சாலமோன் மண்டபத்தில் ஆற்றிய பிறிதொரு உரையால் ஏறக்குறைய ஐயாயிரம் பேர் இயேசுவின்மேல் விசுவாசம் கொண்டு, திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் சேர்ந்தனர். இவ்வாறாக தூய ஆவியின் வருகையுடன் ஆரம்பமாகிய திருச்சபை நாளுக்கு நாள் வளர்ந்து, பரவியது.

### 6.1.1.2. யூத பின்னணியில் கிறிஸ்தவம்

- கிறிஸ்தவம் (திருச்சபை) யூதப் பின்னணியிலேயே பிறந்தது. யூதரின் தலை நகரமாகிய எருசலேமில், யூதர்கள் மத்தியில் தோன்றியது.
- இயேசுக் கிறிஸ்து ஒரு யூத குடும்பத்திலே பிறந்த ஒரு யூதர். யூத மத, பண்பாடு கலாச்சாரத்திலேயே வளர்ந்தவர். யூதர்களுக்கே தம் நற்செய்தியைப் போதித்தார்.
- இயேசு தெரிந்தெடுத்த சீடர்கள் அனைவரும் யூதர்களே. இயேசுவைத் தொடர்ந்து அவர்களும் ஆரம்ப காலத்தில் தம் இனத்தவர்களாகிய யூதர்களுக்கே நற்செய்தியை அறிவித்தனர்.

- பெந்தக்கோஸ்து விழாவிற்காக எருசலேமில் கூடியிருந்த யூதர்களுக்கே பேதுரு நற்செய்தியைப் போதித்தார் அவர்கள் பலஸ்தினாவிலிருந்து வந்த எபிரேய மொழி பேசும் யூதர்களாக இருந்தாலென்ன, அல்லது பாலஸ்தீனாவுக்கு வெளியிலிருந்து வந்திருந்த கிரேக்க மொழி பேசுகின்ற யூதர்களாக இருந்தாலென்ன, அவர்கள் எல்லோரும் யூதர்களே. இவர்களிலிருந்தே ஏறக்குறைய 3000 பேர் மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர். சாலமோன் மண்டபத்தில் மனந்திருந்தி, திருமுழுக்குப் பெற்ற 5000 பேர்களும் யூதர்களே.
- ஸ்தேவானின் மறைச்சாட்சி மரணத்தை அடுத்து, எங்கும் சிதறுண்டு ஓடிய சீடர்களும் தாம் சென்ற இடங்களில் தம் இனத்தவராகிய யூதர்களுக்கே நற்செய்தியைப் போதித்தனர். திருத்தொண்டர் பிலிப்பு சென்று நற்செய்தியைப் போதித்து, திருச்சபையில் சேர்த்த சமாரியர்களும் பிரிந்து சென்ற யூதர்களே.
- கிறிஸ்துவின் மேல் கிறிஸ்தவர்கள் கொண்ட விசுவாசமே அவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்தது. அவர்கள் யூத சமுதாயத்தில் ஒரு சிறு சமூகமாக இருந்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையாகவே பட்டது.
- ஆதிக் கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களாக இருந்ததால், தங்களுடைய பழைய யூத மத அனுட்டானங்களை கைவிட வேண்டுமெனக் கருதவில்லை. முதலில் இயேசுவும், பின்பு அப்போஸ்தலர்களும், தொடர்ந்து அனைத்துக் கிறிஸ்தவர்களும் எருசலேம் ஆலயத்துக்கும், செபக் கூடங்களுக்குமே சென்று, அங்கு இடம்பெற்ற யூத வழிபாடுகளிலும், பலிகளிலும், செபங்களிலும் பங்கெடுத்து வந்தனர். அவர்களின் திருவிழாக்களையும், செப நேரங்களையும், வழிபாட்டு அபிநயங்கள், வார்த்தைகளையும் தொடர்ந்தும் கடைப்பிடித்தனர்.
- அவர்களுக்கென்று திருமுழுக்கு, அப்பம் பிட்குதல், தலைமேல் கைவிரித்துச் செபித்தல், பாவப் பரிகாரச் சடங்கு, நோயில்பூசுதல், திருமணம், திருநிலைப்படுத்தல் போன்ற சில சிறப்பு வழிபாடுகள் இருந்தாலும், அவர்கள் பொதுவாக விருத்தசேதனம், நோன்பு போன்ற யூத மத சட்டங்களையும், அனுட்டானங்களையும் கடைப்பிடித்தனர்.
- அப்போஸ்தலர்களின் போதனைகளால் அவர்கள் வழிநடத்தப்பட்டாலும், கிறிஸ்தவர் களுக்கென்று ஒரு வேத நூல் இருக்கவில்லை. யூதர்களின் வேத நூலையே (பழைய ஏற்பாடு) அவர்கள் தங்கள் வேத நூலாகக் கொண்டிருந்தனர்.
- இந்த நிலை 70ஆம் ஆண்டில் எருசலேம் ஆலயம் உரோமையரால் தகர்க்கப்பட்டு, யூதர்களின் ஜம்னா சங்கத்தினால் கிறிஸ்தவர்கள் யூத செபக்கூடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படும் வரை நீடித்தது.
- நூற்றுவர் தலைவனான கொர்னேலியுவின் மனமாற்றத்தை அடுத்து, சிறப்பாக எருசலேம் சங்கத்தின் தீர்மானத்தை அடுத்து, பல புறவினத்தவர்கள் திருச்சபையில் சேரவே, இவ்வளவு காலமும் யூத மயமாகவிருந்த திருச்சபை படிப்படியாக புறவின மயமாக மாறத்தொடங்கியது.
- இம்மாற்றம் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை அல்ல, அது ஒரு தனி மதம் என்ற கருத்து வளர வழிவகுத்தது. படிப்படியாக கிறிஸ்தவர்கள் யூத மத வழிபாடுகள், சட்டங்களிலிருந்து விடுபட்டு, ஒரு தனி மதமாக வளர்ந்தது.
- கிறிஸ்தவர்களின் தொகை வளரவே, திருச்சபையின் அதிகார, நிர்வாக அமைப்பும் ஒழுங்கு செய்யப்பட்டது. முதலில் திருச்சபைக்குத் தலைவராகிய பேதுரு, அடுத்து அப்போஸ்தலர் குழு, அடுத்து முதல்வர்கள் அல்லது கண்காணிப்பாளர்கள், அடுத்து மூப்பர்கள், திருத்தொண்டர்கள், சீடர்கள் அல்லது விசுவாசிகள் எனத் தரவாரப்படுத்தப்பட்ட அமைப்புக் கொண்ட தாபனமாக உருப்பெற்றது. திருச்சபையின் தலைமைத்துவம் அதிகாரம் செலுத்துகிறதொன்றாக அல்ல, மாறாக மக்களுக்குப் பணிவிடை செய்பவையாக, மந்தையைப் பராமரிக்கும் மேய்ப்பரின் பணியை ஒத்ததாக அமைந்திருந்தது.

**6.1.1.3. திருச்சபையின் விசேட பண்புகள்** (தி.ப. 2:42-47, 4:32-37, 5:12-16, 6:1-7)

- பன்னிரு அப்போஸ்தலரைக் கொண்ட ஒரு சிறிய குழுவாக ஆரம்பித்த திருச்சபை, அப்போஸ்தலர்களின் அயரா முயற்சியினாலும், போதனையினாலும், அவர்கள் செய்த அருங்குறிகளாலும் மிகத் துரிதமாக வளர்ந்து பரவியது.
- பேதுருவின் பெந்தக்கோஸ்து தினத்தின் மறையுரையை அடுத்து ஏறக்குறைய 3000 பேர் அவர் போதனையை ஏற்று, இயேசுவின் மேல் விசுவாசம் கொண்டனர். தொடர்ந்து மறுநாள் எருசலேம் சாலமோன் மண்டபத்தில் பேதுரு ஆற்றிய இரண்டாம் மறையுரையைத் தொடர்ந்து, ஐயாயிரம் ஆண்கள் உட்பட பலர் மனந்திரும்பி கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டனர்.
- ஆதித் திருச்சபையில் அப்போஸ்தலர்களின் போதனையை ஏற்று, ஆண்டவரும் மெசியாவுமாகிய இயேவுக் கிறிஸ்துவில் விசுவாம் கொண்டவர்களுக்கு உடனடியாகத் திருமுழுக்கு அளிக்கப்பட்டு, அவர்கள் திருச்சபையில் சேர்க்கப்பட்டனர்.
- திருமுழுக்கு வழியாக திருச்சபையில் சேர்ந்தவர்கள், ஒரே விசுவாசத்தினால் பிணைக்கப்பட்டு, ஒரு சமூகமாக வாழ்ந்தனர். பரந்த யூத சமுதாயத்தின் மத்தியில் ஒரு சிறு சமூகமாக, சிறு மந்தையாக அவர்கள் வாழ்ந்தாலும், அவர்களை ஏனைய யூத சமூகத்தினரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிய, சில சிறப்புப் பண்புகளை அவர்கள் மத்தியில் நாம் காண்கிறோம்.
- ''அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்'' (தி.தூ.ப. 2:42). இங்கு நாம் ஆதித் திருச்சபையின் மத வாழ்வின் நான்கு முக்கிய சிறப்புப் பண்புகளையும் படிக்கிறோம்.
- ஆதிக் கிறிஸ்தவர்கள் பேதுருவின் மறையுரை வழியாக தாங்கள் பெற்றுக் கொண்ட முதல் விசுவாசத்தை, தொடர்ந்து அப்போஸ்தலர்களின் போதனைகளை கேட்பதன் வழியாக, வளர்த்து உறுதிப்படுத்தினர். இறைவனை, கிறிஸ்துவை, மறையுண்மைகளை, வேத நூலை மென்மேலும் கற்றறிய ஆவலும் ஆர்வமும் உள்ளவர்களாகக், ஒரு கற்கும் சமுதாயமாகக் காணப்பட்டனர்.
- அவர்கள் எல்லோரும் அப்போஸ்தலர்களின் தலைமையின் கீழ் பொதுவாழ்வில் பங்கெடுத்து, ஒவ்வொருவருடன் அந்நியோன்னியமாகப் பழகி, நட்புறவுடன் உறவாடி, பொறுப்புணர்வுடன் நடந்தனர். உண்மைக் கிறிஸ்தவனுக்கு அடையாளமாக கிறிஸ்து கூறிய அன்பிலும், ஒற்றுமையிலும் ஒன்றித்து வாழ்ந்தனர்.
- ஆதிக் கிறிஸ்தவர்கள் எருசலேம் ஆலயத்திற்கும், செபக்கூடங்களுக்கும் சென்று, அங்கு நடைபெறும் பலிகளிலும், வழிபாடுகளிலும் பங்கெடுத்தாலும், ஒவ்வொரு நாளும் தனியார் வீடுகளில் மாலை வேளையில் ஒன்று கூடி, கிறிஸ்தவர்களுக்கே உரித்தான நற்கருணை வழிபாட்டில் எளிய உள்ளத்தோடும், பேருவகையோடும் பங்குபற்றினர். ''அப்பம் பிடுதல்'' என்பது நற்கருணை வழிபாட்டைக் குறிக்கும் சொற்றொடராகும். மேலும் ஓய்வு நாளையும் பிரமாணிக்கமாக அனுசரித்தனர்.
- அவர்கள் தனித்தனியே மட்டுமல்ல, எல்லோரும் ஒன்று கூடி, ஒரே குடும்பமாக, ஒரே சமூகமாக இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, தம் தேவைகளுக்காகவும், பிறருடைய தேவைகளுக்காகவும் அவர் உதவியை வேண்டினர். இவ்வாறு அவர்கள் செபத்தில் இறைவனோடு ஒன்றித்து, ஒரு செபிக்கும் சமுதாயமாக இருந்தனர்.
- அவர்கள் மத்தியில் அப்போஸ்தலர்கள் வழியாக பல புதுமைகளும் அரும்செயல் களும் நடைபெற்றன.
- அவர்கள் இறைவன் தங்களோடு, தங்கள் மத்தியில் பிரசன்னமாக இருக்கிறார் என்ற உணர்வுடன், தேவ பயத்துடனும், பயபக்தியுடனும் வாழ்ந்தனர். இவ்வாறு உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் சமுதாயமாக வாழ்ந்தனர்.
- உடமைகள் நிலபுலன்கள் உள்ளோர் அவற்றையெல்லாம் பொதுப் பொருளாகக் கொண்டனர். அவற்றை விற்று, அனைவர்க்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்து அளித்து, அவார்கள் தேவைகளை நிறைவு செய்து வாழ்ந்தனர்.

- அவர்களுள் எவ்வித வேற்றுமையோ வேறுபாடோ இன்றி, ஒற்றுமையாக வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிரும் உள்ளவர்களாய் இருந்தனர். அவர்களின் அன்பு நிறைந்த ஒற்றுமையான வாழ்க்கை ஏனையோரையும் கவர்ந்தது.
- ஆதித் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையிலே அறப்பணி முக்கிய இடத்தை எடுத்தது. கைம்பெண்கள், அனாதைகள், முதியவர்கள் போன்றோர் சிறப்பாகக் கவனிக்கப்பட்டார்கள்.
- அதனிமித்தம் அவர்கள் ஏனைய மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். இறைவனுடைய அருளும் ஆசீரும் அவர்களுக்குத் தாராளமாகக் கிடைத்தன. நாளுக்கு நாள் பல புது அங்கத்தவர்கள் அவர்களின் சமூகத்தில் சேர்ந்தனர்.
- வளரும் திருச்சபையில் எல்லாம் நிறைவாக இருக்கவில்லை. பலவீனமுள்ள மக்களால் ஆனதே திருச்சபை. எனவே, ஆதித் திருச்சபையில் சில குறைபாடுகளும் காணப்பட்டன. இதை நாம் அனனியா, சப்பிராவின் கதையிலும், கிரேக்க மொழி பேசும் கிறிஸ்தவர்களுக்கும், எபிரேய மொழி பேசும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கிலும் காண்கிறோம்.

### 6.1.1.4. புனித ஸ்தேவான் (தி.ப. 6, 7)

- திருச்சபை வளர்ந்து, கிறிஸ்தவர்களின் தொகை பெருகவே, அவர்களின் பொது வாழ்வில் பிரச்சினைகள் தோன்றின. அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் போதிப்பதில முழு மூச்சாய் ஈடுபட்டபடியால், அறப்பணியைச் சரிவரச் செய்ய அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. எனவே, பந்தி பரிமாறுவதற்கென ஏழு திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர்தான் ஸ்தேவான். அவர் ஒரு கிரேக்க மொழி பேசும் யூத கிறிஸ்தவர், யௌவன பண்பாட்டினர்.
- திருத்தொண்டர்கள் பந்தி பரிமாற, அதாவது அறப்பணிக்கென நியமனம் பெற்றாலும், பின்னர் அவர்கள் (ஸ்தேவான், பிலிப்பு) நற்செய்திப் பணியிலும், திருமுழுக்கு அளிப்பதிலும், புதுமைகள் செய்வதிலும், ஈடுபட்டனர். ஸ்தேவான் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பல புதுமைகளைச் செய்து, ஞானத்தோடு போதித்தார்.
- கிறிஸ்தவர்களின் தொகை அதிகரித்தது. குறிப்பாக சில யூத குருக்களும் இயேசுவை ஆண்டவரும், மெசியாவுமாக ஏற்று திருச்சபையில் இணைந்தது யூதர்களுக்கு கிறிஸ்தவர்கள் மேல் இருந்து வெறுப்பையும், எரிச்சலையும் அதிகரித்தது. இது படிப்படியாக கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஒரு யூத கலாபனைக்கு வழிகோலியது.
- யூத கலாபனைக்கான காரணிகள்: யூதர்கள் என்ன காரணத்திற்காக இயேசுக் கிறிஸ்துவை வெறுத்து, அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்களோ, அதே காரணத்திற்காகவே அவர்கள் கிறிஸ்துவின் சீடர்களையும், கிறிஸ்தவர் களையும் வெறுத்துப் பகைத்தார்கள்.
- யூதர்கள் ஒரு படையுடன் வரும் வலிமையுள்ள ஒரு லௌகிக மெசியாவை எதிர்பார்த்திருந்தனர். எனவே, அவர்கள் மாட்டுத் தொழுவத்தில், ஒரு ஏழைத் தச்சனின் மகனாகப் பிறந்த இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கவில்லை. இயேசுவின் போதனைகளும், செயற்பாடுகளும், அவர்களின் எதிர்பார்ப்பிற்கு முரணாக இருந்தபடியால், அவர்கள் அவரை மெசியாவாக ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். மேலும், இயேசு சிலுவை மரத்தில் தொங்கி இறந்தபடியால் அவர் இறைவனால் சபிக்கப்பட்டவர் என்பது அவர்கள் கருத்து. ஆனால், கிறிஸ்தவர்களோ இயேசுவை மெசியாவாக மட்டுமல்ல, இறைமகனாகவும் ஏற்று விசுவசித்தனர்.

- மேலும், கிறிஸ்தவர்கள் இயேசுவின் இறைக் கொலைப் பழியை யூதர்கள்மேல் சுமத்தினர். அவர்களின் முன்னோர்கள், ஆபிரகாம், யோசேப்பு, மோசே வழியாகப் பேசிய தூய ஆவிக்குச் செவிகொடுக்கவில்லையென்றும், இயேசுவின் வருகையை முன்னறிவித்த இறைவாக்கினரைக் கொலை செய்தனரென்றும் கூறி, அவர்களோ அந்த இயேசுவையே உரோமையரைக் கொண்டு கொலை செய்தார்களெனக் குற்றம் சுமத்தினர். ''நீங்கள் திருச்சட்டம் அறியாதோர் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள்.''
- ஆனால், யூதர்கள் எருசலேம் ஆலயம் உரோமையரால் தரைமட்டம் ஆக்கப்பட்டதற்கும், தாங்கள் உரோமையரால் துன்புறுத்தப்படுவதற்கும் கிறிஸ்தவர்கள் இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொண்ட பாவமே காரணமென, அவர்கள்மேல் பழியைப் போட்டனர்.
- மேலும், சதுசேயரோ, யூதக் குருக்களோ உயிர்ப்பிலும், மறுவுலக வாழ்விலும் நம்பிக்கை அற்றவர்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததை ஏற்று விசுவசித்து, அந்த உண்மையைத் திரும்பத் திரும்ப போதித்து, இயேசுவின் உயர்த்தெழுதலுக்கு அவரைக் கண்ட தாமே சாட்சிகளென்றும் கூறினர். அந்த இயேசுவின் பெயரால் பல புதுமைகளையும், அற்புதங்களையும் செய்தனர்.
- அதுமட்டுமன்றி, யூதர்கள் எருசலேம் ஆலயத்துக்கும், மோசேயின் சட்டத்திற்கும் மிக முக்கியத்துவம் அளித்தனர். ஆனால், கிறிஸ்தவர்கள் யூதப் பரம்பரை பழக்கவழக்கங்களையோ, மோசேயின் சட்டங்களையோ அவ்வளவு பெரிதாக மதிக்கவில்லை. கிறிஸ்துவின் அன்புக்கட்டளைக்கும், அன்புச் சமூகமென்ற கிறிஸ்தவ மனப்பான்மைக்குமே முக்கியத்துவம் கொடுத்தனர்.
- இறுதியாக யூதத் தலைவர்களான சதுசேயரும், பரிசேயரும், தலைமைக் குருக்களும் கிறிஸ்தவர்கள் பரவி வளர்ந்தால், சமுதாயத்தில் தங்கள் செல்வாக்கு அற்றுப் போய், தங்கள் பதவிகளும் பறிபோய்விடுமென அஞ்சினர். ஆகவே, இவ்விதமான பல காரணங்களுக்காக யூதர்கள் கிறிஸ்தவர்களை எதிர்த்து, வெறுத்துப் பகைத்தனர்.
- இந்த பதற்ற நிலை, யூத பரம்பரை மத நிறுவனங்களில் அதிக ஆர்வமுடைய யௌவன பண்பாட்டு (கிரேக்க மொழி பேசும்) யூதர்களுக்கும் திருத்தொண்டர் ஸ்தேவானுக்குமிடையே மோசேயின் சட்டம், எருசலேம் ஆலயம் பற்றி ஏற்பட்ட வாக்குவாதத்தில் உச்ச நிலை அடைகிறது. ஸ்தேவானே யௌவன பண்பாட்டு யூத கிறிஸ்தவர்களின் தலைவராகச் செயல்பட்டவர். அவரை எதிர்த்து வாதிட முடியாத யூதர்கள், மக்களைத் தூண்டி, குழப்பம் உண்டாக்கி, அவரைக் கைது செய்து தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தினர்.
- ஸ்தேவானுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றங்கள்:
  1) புனித இடத்திற்கும், திருச்சட்டத்திற்கும் எதிராகப் பேசியது.
  2) நாசரேத்தூர் இயேசு இவ்விடத்தை அழித்து விடுவார் எனக் கூறியது.
  3) இயேசு, மோசே நமக்குக் காட்டிய முறைகளை மாற்றி விடுவார் எனக் கூறியது
- தலைமைக் குரு ஸ்தேவானை விசாரித்தபொழுது, அவர் தம் சொந்த நியாயத்தை எடுத்துக் கூறாமல், தம் மறையின் விசுவாசத்தை எடுத்துக் கூறினார். தலைமைச் சங்கத்தின் முன் ஸ்தேவானின் உரை (தி.ப. 7:1-53).
- திருச்சட்டத்திற்கு எதிராகப் பேசியதாக யூதர்கள் ஸ்தேவான் மேல் குற்றம் சுமத்த, அவரோ யூதர்கள் அத்திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை என அவர்களைக் குற்றம் சாட்டினார்.
- மேலும் கடவுள் இஸ்ரயேலுக்கு வெளியிலுமிருந்து மக்களைத் தனக்கெனத் தெரிந்தெடுக்கலாமென்றும், எருசலேம் ஆலயத்திற்கு வெளியேயும் மக்கள் கடவுளை வழிபட வேண்டுமென்று கூறி, கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையல்ல: ஆனால், ஒரு புதிய தனி மதம் என்ற கருத்துக்களையும் உணர்த்தினார்.

- இறுதியில் இயேசுவின் இறைக் கொலைப் பழியை அவர்கள்மேல் சுமத்தி, ‘‘இதோ, வானம் திறந்திருப்பதையும், மானிடமகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்’’ எனக் கூறிய பொழுது, யூதர்கள் ஆவேசம் அடைந்து அவர்மேல் பாய்ந்து, அவரை நகருக்கு வெளியே தள்ளிக் கொண்டுபோய், கல்லால் எறிந்து கொன்றனர்.
- ஸ்தேவானோ, ‘‘ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்’’ என்று தம்மைக் கொலை செய்பவர்களுக்காக மன்றாடி, ‘‘ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்’’ எனக் கூறி, உயிர் நீத்தார். அவரே முதல் மறைசாட்சி. அவருடைய மரணம் கிறிஸ்துவின் மரணத்தை ஒத்ததாகத் தரப்படுகிறதை அவதானிக்கலாம்.

### 6.1.1.5. எருசலேம் பொதுச்சங்கம் (தி.ப. 15:1-29)

- ஸ்தேவானின் கொலை ஒரு பெரிய யூத கலாபனையின் ஆரம்பமாய் இருந்தது. குறிப்பாக கிரேக்க மொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்கள் (யௌவன பண்பாட்டினர்) மிகவும் கொடூரமாக துன்புறுத்தப்பட்டார்கள். அப்போஸ்தலர் எருசலேமில் மறைமுகமாக வாழ, ஏனைய கிறிஸ்தவர்கள் (யௌவன பண்பாட்டினர்) சிதறுண்டு எருசலேமிற்கு வெளியே, யூதேயாவின் நாட்டுப் புறங்களுக்கும், சமாரியா, செசாரியா, லிஸ்திரா, யோப்பா, தமாஸ்கு, பெனிசியா, சைப்பிரஸ், கலிலேயா, அந்தியோக்கியா வரைக்கும் ஓடிப்போனார்கள். இவ் யூத கலாபனையில் முக்கிய பங்கெடுத்தவர் சவுல் என்னும் பவுலாவார்.
- இவ்வாறு சிதறுண்டு ஓடிய கிறிஸ்தவர்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் நற்செய்தியை அறிவித்தனர். ஸ்தேவானின் மறைசாட்சி மரணமும், அதைத் தொடர்ந்து ஆரம்பமாகிய யூத கலாபனையுமே நற்செய்தி எருசலேமிற்கு வெளியே பரவுவதற்கு வழி செய்தன. மக்கள் செய்யும் தீமையைக் கடவுள் தம் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்துகிறார். கிரேக்க மொழி பேசும் (யௌவன பண்பாட்டு) யூதர்களே திருச்சபையின் முதல் மறைபரப்புத் தூதுவர்கள். அவர்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் தம் இனத்தவராகிய யூதர்களுக்கே நற்செய்தியை அறிவித்தனர்.
- திருத்தொண்டர் பிலிப்புவே ஸ்தேவானைத் தொடர்ந்து யௌவன பண்பாட்டு யூத கிறிஸ்தவர்களின் தலைவராகச் செயல்பட்டவர். பிலிப்பு சமாரியாவில் ஆற்றிய பணி: நற்செய்தியை அறிவித்தல், பேய்களை ஓட்டுதல், நோயாளர்களைக் குணமாக்குதல், திருமுழுக்கு அளித்தல், சமாரித்தர்களை மனந்திருப்பி, அவர்களுக்கு திருமுழுக்கு அளித்து, கிறிஸ்தவர்களாக்கியது அவரது சாதனையாகும். யூத மதத்தைத் தழுவிய எத்தியோப்பிய அண்ணகனுக்கும், மந்திரவாதி சீமோனுக்கும் திருமுழுக்கு அளித்தவரும் அவரே.
- பேதுரு, யோவானின் பணி: சமாரியா, லிஸ்திரா, யோப்பா, செசாரியா சென்று, அங்கு பிலிப்பு தாபித்த சபைகளைத் தரிசித்து, அங்கீகரித்து, ஊக்குவித்தல், கைகளை விரித்துச் செபித்து பரிசுத்த ஆவியை அளித்தல், மந்திரவாதி சீமோனைக் கண்டித்தல், குணமாக்குதல், உயிரளித்தல் போன்ற புதுமைகளைச் செய்து, பலரை மனமாற்றுதல்.
- செசாரியாவில் பேதுரு, தூய ஆவியின் வழிநடத்துதலின்படி, முதல் புறவினத்தவ ராகிய கொர்னேலியு என்ற உரோமைய நூற்றுவர் தலைவரையும், அவரது குடும்பத்தினரையும், சுற்றத்தார், நண்பர்கள் அனைவரையும் திருமுழுக்கு அளித்து, திருச்சபையில் சேர்த்தார்.
- பேதுரு புறவினத்தவராகிய கொர்னேலியுவுக்கும் மற்றவர்களுக்கும் திருமுழுக்கு அளித்து, திருச்சபையில் சேர்த்துக் கொண்டமைக்காக எருசலேம் திருச்சபையிலிருந்து எதிர்ப்பு எழுந்தது. யூத கிறிஸ்தவர்கள் புறவினத்தவர்களுக்கு திருமுழுக்கு கொடுத்தது அல்ல, மாறாக அவர்களுக்கு விருத்தசேதனம் செய்யாமல், அவர்களை யூதர்களாக்காமல் திருமுழுக்கு அளித்து கிறிஸ்தர் களாக்கியதும், தீட்டுப்பட்ட புறவினத்தவர்கள் வீட்டுக்குச் சென்றதும், அவர்களுடன் விருந்தோம்பியதுமே பெரிய துரோகமாகக் காணப்பட்டது.

- பேதுரு யோப்பாவில் தான் கண்ட காட்சியையும், தான் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டதையும் விளக்கிக் கூறி, ஒரு வகையாக அமைதியை ஏற்படுத்தினார். ஆனால், இப்பிரச்சினை யூத கிறிஸ்தவர்களின் மனதில் தொடர்ந்து நீடித்தது. திருச்சபையின் தலைவராகிய பேதுருவே, தூய ஆவியின் வழிநடத்துதலின் கீழ் புறவினத்தவரை திருச்சபில் சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 6.1.1.5.1. எருசலேம் பொதுச்சங்கம் கூடப்பட்ட பின்னணி

- கொர்னேலியுவின் திருமுழுக்கு நிகழ்வு திருத்தூதர் பணி நூலில் மூன்று முறைகள் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வலியுறுத்தப்படுவது அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. இச்சம்பவம் திருச்சபையின் வரலாற்றில் ஒரு புதிய யுகம் தொடங்கு வதைக் காட்டுகிறது.
- கொர்னேலியுவின் மனமாற்றத்தைத் தொடர்ந்து செசாரியாவிலும், அந்தியோக்கியாவிலும், பவுலின் முதல் மறைத்தூதுப் பயணத்தையடுத்து மத்தியதரை நாடுகளிலும், புறவினத்தவர் திருச்சபையில் பெருமளவில் சேர்ந்தனர். யூதர்கள் கிறிஸ்துவை மெசியாவாக ஏற்க மறுக்க, புறவினத்தவர்கள் பெருந் தொகையாக இயேசுவில் விசுவாசம் வைத்து, திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர். இதன் விளைவாக, திருச்சபை படிப்படியாக புறவின மயமாக மாறியது. இதை எருசலேமில் வாழ்ந்த யூத பழமைவாதிகள் விரும்பவில்லை.
- இப்புதிய சூழல் ஆதித்திருச்சபையில் ஓர் பெரும் பிரச்சினையை உருவாக்கியது. இவ்வளவு காலமும் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை எனக் கருதி வந்த யூத கிறிஸ்தவர்களின் மனதில் பல கேள்விகளை எழுப்பின.
- கிறிஸ்தவத்திற்கும் யூத மதத்திற்குமிடையே உள்ள தொடர்பு, உறவு என்ன? கிறிஸ்தவம் ஒரு தனி மதமா அல்லது யூத மதத்தின் ஒரு கிளையா? புறவினத்தவர்கள் திருச்சபையில் சேரும்பொழுது நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் என்ன? அவர்கள் விருத்தசேதனம் செய்து கொள்ளாமல், மோசேயின் சட்டங்களை ஏற்றுக் கடைப்பிடிக்காமல், அதாவது ஒரு யூதராக வராமல், கிறிஸ்தவர்களாக வர முடியுமா?
- ஆரம்ப கிறிஸ்தவர்கள் எல்லோரும் யூதர்கள் என்றபடியால் விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களாய், யூத வேத நூலை அறிந்தவர்களாய், மோசே சட்டங்களை கடைப்பிடிப்பவர்களாய் இருந்தார்கள். எனவே, கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளையென்ற கருத்து பரவலாக ஊன்றியிருந்தது. ஆனால், புறவினக் கிறிஸ்தவரர்கள் விருத்தசேதனம் செய்யப்படாதவர்கள், யூத வேத நூலையோ, மோசேயின் சட்டங்களையோ அறியாதவர்கள், இஸ்ரயேலரோடு எவ்வித தொடர்பும் இல்லாதவர் கள். ஆகவே, இவர்கள் மத்தியில் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை, பிரிவு அல்ல, அது ஒரு தனி மதம், ஒரு புது மதம் என்ற கருத்து வளர்ந்து வந்தது.
- பர்னபாவும் பவுலும் பராமரித்து வந்த சீரிய அந்தியோக்கிய திருச்சபை ஒரு கலப்புத் திருச்சபை. அங்கு யூத கிறிஸ்தவர்களும், புறவினக் கிறிஸ்தவர்களும் கலந்து, எவ்வித பிரச்சினையுமின்றி, ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.
- ஆனால், ஒரு நாள் எருசலேமிலிருந்து சில யூதப் பழமைவாதிகள், தாங்களாக எருசலேமிலிருந்து சீரியா - அந்தியோக்கியாவுக்குச் சென்று, மோசேயின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்யாதவர்கள், மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடியாதவர்கள், யூதனாக முதலில் மாறாதவர்கள், திருமுழுக்கு பெற முடியாது, திருச்சபையில் சேர முடியாது, மீட்புப் பெற முடியாதெனப் புறவினக் கிறிஸ்தவர்களுக்குப் போதித்தனர்.
- பவுலும், பர்னபாவும் அதை எதிர்த்து வாதாடினர். வாதம் பெரும் வாக்குவாதமாக மாறியது. அந்தியோக்கிய யூத - புறவினக் கலப்புத் திருச்சபையிலே இது பெரிய குழப்பத்தையும், பிளவையும் ஏற்படுத்தி, அமைதியைக் குலைத்தது. எனவே, இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாண, அந்தியோக்கிய சபையினர் பவுலையும், பர்னபாவையும், மற்றும் சிலருடன் எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள், மூப்பர்களிடம் அனுப்பி வைத்தனர். இதுவே, எருசலேம் சங்கம் கூட்டப்பட்ட பின்னணியாகும்.

### 6.1.1.5.2. எருசலேம் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்
(தி.ப. 15:4-35)

- **எருசலேம் பொதுச்சங்கம்:** இதுவே திருச்சபையின் முதல் பொதுச்சங்கம். இது 50ஆம் ஆண்டளவில் எருசலேமில் கூட்டப்பட்டது. இதற்கு திருச்சபையின் தலைவராகிய பேதுரு தலைமை தாங்கினார். இதில் பல்வேறு இடங்களிலிருந்து அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்களும், மூப்பர்களும் பங்கெடுத்தனர்.
- **கூட்டப்பட்ட நோக்கம்:** அந்தியோக்கியாவில் யூத கிறிஸ்தவர்களுக்கும், புறவினக் கிறிஸ்தவர்களுக்குமிடையே ஏற்பட்ட பிரச்சினைக்குத தீர்வு காண்பது. அதாவது, கிறிஸ்தவம் யூத மதத்தின் கிளையா அல்லது ஒரு தனி மதமா? ஒருவர் கிறிஸ்தவராக வருவதற்குமுன் விருத்தசேதனம் செய்து யூதராக வேண்டுமா? மோசேயின் கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமா? இல்லையா? எனத் தீர்மானிப்பதே சங்கத்தின் நோக்கமாகும்.
- சங்க உறுப்பினர்கள் மத்தியில் இரு முக்கிய குழுக்கள், கட்சிகள் இருந்தன: ஒன்று எருசலேம் ஆயரான யாக்கோபு தலைமையிலான யூதப் பழமைவாதிகளும், பரிசேயர்களும் மற்றது பவுல், பர்னபா தலைமையிலான புறவினக் கிறிஸ்தவர்கள்.
- ஆரம்பத்தில் இரு கட்சியினரும் தத்தம் கருத்துக்களை எடுத்துக் கூறி, நீண்ட நேரம் வாதம், பிரதிவாதம் செய்தனர்.
- இறுதியில் கூட்டத்திற்கு தலைமை வகித்த பேதுரு எழுந்து, தம் கருத்துக்களை முன் வைத்தார். செசாரியாவில் கொர்னேலியுவின் திருமுழுக்கின்போது தம் அனுபவத்தை எடுத்துக் கூறினார். முடிவாக, ''கடவுள் நமக்குத் தூய ஆவியைக் கொடுத்தது போல அவர்களுக்கும் கொடுத்து அவர்களை ஏற்றுக்கொண்டார். நம்பிக்கையால் அவர்களின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தினார். நமக்கும் அவர்களுக்கும் இடையே அவர் எந்த வேறுபாடும் காட்டவில்லை. ஆண்டவர் இயேசுவின் அருளால் நாம் மீட்புப் பெறுவது போலவே அவர்களும் மீட்புப் பெறுகிறார்களென நம்புகிறோம்'' என்றார்.
- பேதுருவின் இவ் உரை எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்க்கமான முடிவாக அமைந்தது. விருத்தசேதனமல்ல, விசுவாசம் தான் எம் எல்லாரையும் தூய்மை ஆக்குகிறது. மோசேயின் சட்டங்கள் அல்ல, இயேசுவின் அருள்தான் எம் எல்லோருக்கும் மீட்பு அளிக்கின்றது. பேதுருவின் முடிவை எல்லோரும் அமைதியாக ஏற்றுக்கொண்டனர். சங்கத்தின் முடிவு புறவினக் கிறிஸ்தவர்களுக்கு சாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.
- பேதுருவின் உரையை அடுத்து, பவுலும் பர்னபாவும் தம் மறைத்தூதுப் பயணத்தின் போது புறவினத்தாரிடையே கடவுள் தம் வழியாகச் செய்த அற்புதங்களையும், அருங்குறிகளையும் எடுத்துக்கூறி, அவையெல்லாம் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தையும், அவரின் வழிநடத்தலையும் காட்டுகின்றன என்றனர்.
- இறுதியாக அப்போஸ்தலரும், எருசலேம் சபையின் தலைவருமான யாகப்பர் தம் முடிவுரையைக் கூறினார். பேதுரு தம் உரையில் கூறியதை அவர் மீண்டும் வலியுறுத்தி, அதற்கு ஆதாரமாக இறைவாக்கினர் ஆமோஸ் முதலில் யூதரும், அடுத்து புறவினத்தாரும் மீட்புப் பெறுவர் எனக் கூறியதை (ஆமோ. 9:11-12) எடுத்துக் காட்டினார். எனவே, நாம் புறவினத்தாருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது, அவர்கள் விருத்தசேதனம் செய்யவேண்டியதில்லை எனக் கூறினார்.
- மேலும், எருசலேம் சங்கத்தின் இத் தீர்மானம் யூதக்கிறிஸ்தவர்களின், குறிப்பாக பரிசேயரின் கருத்துக்கு எதிராக அமைந்தபடியால், அவர்களையும் திருப்தி செய்ய, புறவினத்தவர்கள் யூதர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, பந்தி அமரும்பொழுது, அவர்களுக்கு அருவருப்பு கொடுப்பனவற்றை, அதாவது சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவு, கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தவை, மிருக இரத்தம், பரத்தமை போன்றவற்றைத் தவிர்ப்பது கிறிஸ்தவர்களின் நல்லுறவுக்கு உகந்ததெனக் கூறினார்.

- இப்பிரச்சினை அந்தியோக்கியா சபையில் ஆரம்பித்தபடியால், அச்சபைக்கு சங்கத்தின் தீர்மானத்தை சங்கத்தின் சார்பாக அறிவிக்க, சங்கத்தின் தீர்மானத்தை ஒரு கடிதத்தில் எழுதி, தங்கள் பிரதிநிதிகளான பர்னபா என்னும் யூதா, சீலாவிடம் கொடுத்து, பவுல் பர்னபாவுடன் அனுப்பினர்.
- கடிதத்தில் எழுதி அனுப்பப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:
  1. இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் புறவினத்தவர்கள்மேல் சுமத்தக்கூடாது.
  2. சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றைத் தவிருங்கள்.
  3. மிருக இரத்தத்தைத் தவிருங்கள்.
  4. கழுத்து நெரிக்கப்பட்டு செத்ததின் இறைச்சியைத் தவிருங்கள்.
  5. பரத்தமையைத் தவிருங்கள்.
- சில வேதநூல் வல்லுநர் முதல் தீர்மானத்தைத் தவிர, ஏனைய நான்கு தீர்மானங்களும் எருசலேம் சங்கத்தில் விவாதிக்கப்பட்ட பிரச்சினையோடு தொடர்பற்றபடியால், அவை உணவு ஒழுங்கு பற்றிய வேறொரு சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்று கூறுகின்றனர். எனினும், யூதர்களைத் திருப்தி செய்ய ஆசிரியர் அவற்றை இங்கு சேர்த்திருக்கிறார் என்றும் சிலர் கருதுகின்றனர்.
- எருசலேம் சங்கத்தின் தீர்மானம் உண்மையாகத் திருச்சபையின் வாழ்வில், ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. விருத்தசேதனம் அல்ல, விசுவாசம்தான் எம்மைத் தூய்மையாக்குகிறது. யூத சட்டங்கள் அல்ல, இயேசுவின் அருள்தான் எமக்கு மீட்பளிக்கிறது. கிறிஸ்தவம் ஒரு தனி மதம். அது ஒரு அனைத்துலக மதம்.
- ஒருவன் விருத்தசேதனம் செய்யாது, யூத சட்டங்களை கடைப்பிடியாது, யூதனாகாது கிறிஸ்தவனாகலாம். எவனும் தன் கலை, கலாசாரத்தை, பண்பாட்டை, மொழியை, இனத்தை, தனித்துவத்தை கைவிடாது திருச்சபையில் அங்கத்தவனாகலாம். திருச்சபை எந்தவொரு இனத்துக்கும், மொழிக்கும், கலாச்சாரத்துக்கும் புறம்பானது அல்ல.

### 6.1.1.6. திருச்சபையின் வளர்ச்சி

- பெந்தக்கோஸ்து தினத்தன்று எருசலேமில் தூய ஆவியின் வருகையுடன், 120 சீடர்களோடு ஆரம்பித்த திருச்சபை, மிகத் துரிதமாக வளர்ந்து, படர்ந்து, பெரிய விருட்சம் போல உலகமெங்கும் பரவியது.
- திருச்சபை அவ்வாறு விரைவாகப் பரவுவதற்குப் பலர் பலவிதமாகப் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.
- முதலில் நாம் உரோமைய படைவீரரைக் குறிப்பிடலாம். பெந்தக்கோஸ்து திருவிழாவிற்கு பாதுகாப்புக் கடமைக்காக எருசலேம் வந்திருந்த உரோமைய படைவீரர்கள், விழாவிற்குப் பின், தம் கடமைகளை முடித்துக்கொண்டு, தம் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றபொழுது, தத்தம் ஊர்களில் எருசலேமில் தாம் கண்ட, கேட்ட இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்ற நிகழ்வுகள் பற்றிய செய்திகளைக் கூறியிருக்கலாம்.
- அடுத்து பெந்தக்கோஸ்து விழாவிற்காக உலகெங்குமிருந்து எருசலேமிற்கு வந்திருந்த யூதர்கள், திருவிழாவின் பின் தம் சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் சென்று, எருசலேமில் தாம் கண்டதையும், கேட்டதையும், நடந்தவற்றையும் மற்றவர்களுக்குச் சொன்னார்கள்.
- பெந்தக்கோஸ்து தினத்தன்று தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட திருத்தூதர்களின் மறைபரப்பு ஆர்வமும், தீவிர போதனையும், அவர்கள் செய்த புதுமைகளும், அருங்குறிகளும் ஆயிரக்கணக்கானோரை (3000, 5000) மனந்திருப்பி, திருச்சபையினுள் கொண்டுவந்து சேர்த்தன.
- ஆதிக் கிறிஸ்தவ சமுதாயத்தின் அன்பு, ஒற்றுமை, பகிர்தல், சமத்துவம் நிறைந்த எடுத்துக்காட்டான வாழ்க்கையும் பலரைக் கவர்ந்து ஈர்த்தன.

- ஸ்தேவானின் மறைசாட்சி மரணத்தை அடுத்து ஆரம்பித்த கிறிஸ்தவர்களுக்கு எதிரான யூத கலாபனையும் கிறிஸ்தவம் எருசலேமுக்கு வெளியே பரவுவதற்கு சாதமாக அமைந்தது. கிரேக்க மொழிபேசும் யூத கிறிஸ்தவர்கள் பயந்து, பாதுகாப்புத் தேடி, யூதேயாவின் நாட்டுப் புறங்களுக்கும், சமாரியா, செசாரியா, லிஸ்திரா, யோப்பா, தமஸ்கு, பெனிசியா, சைப்பிரஸ், கலிலேயா, அந்தியோக்கியா வரைக்கும் ஓடிப் போனார்கள். இவ்வாறு சிதறுண்டு ஓடிய கிறிஸ்தவர்கள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றி, பல்லாயிரக் கணக்கானோரை மனந்திருப்பி திருச்சபையில் சேர்த்தனர்.
- பேதுரு, தூய ஆவியின் வழிநடத்துதலுக்கு அமைய, செசாரியாவில் புறவினத்தவராகிய உரோமைய நூற்றுவர் தலைவர் கொர்னேலியுவுக்கும் அவரது குடும்பத்தினர், சுற்றத்தார், நண்பர்கள் அனைவருக்கும் திருமுழுக்கு அளித்து, அவர்களைத் திருச்சபையில் சேர்த்தது திருச்சபையின் வரலாற்றிலே ஒரு புது யுகத்தை ஏற்படுத்தியது. இவ்வளவு காலமும் யூதர்களுக்கே நற்செய்தி போதிக்கப்பட்டு, விசுவசித்தவர்கள் திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.
- யூதர்கள்தான் கிறிஸ்தவர்கள் ஆகலாம் என்ற கருத்தே முதலில் இருந்தது. ஆனால், முதல் புறவினத்தவராகிய கொர்னேலியு திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் இணைந்தது, புறவினத்தவர்களுக்கு திருச்சபையின் கதவுகளைத் திறந்துவிட்டது. எனவே, கொர்னேலியுவைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான புறவினத்தவர்கள் திருச்சபையில் சேர்ந்தனர். அந்தியோக்கியாவில் யூத கிறிஸ்தவர்களையும், புறவினக் கிறிஸ்தவர்களையும் கொண்ட ஒரு பெரும் கலப்புக் கிறிஸ்தவ சமூகமே உருவாகியது.
- அந்தியோக்கிய கலப்புத் திருச்சபையில் ஆரம்பத்தில் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்க எருசலேமில் கூடிய முதல் பொதுச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்க்கமான முடிவுகள் புறவினத்தவர்களுக்குச் சாதகமாக அமைந்தன. இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் நாம் புறவினத்தவர்மேல் சுமத்தக்கூடாது. விருத்தசேதனமல்ல, விசுவாசம்தான் எம் எல்லாரையும் தூய்மையாக்குகிறது. மோசேயின் சட்டங்கள் அல்ல, இயேசுவின் அருள்தான் எம் எல்லோருக்கும் மீட்பு அளிக்கின்றது.
- திருச்சபையின் வளர்ச்சியிலே மிகப்பெரும் பங்காற்றியவர் அப்போஸ்தலரான பவுல். திருச்சபையின் விரோதியாகச் செயல்பட்ட அவருடைய வாழ்வில் ஏற்பட்ட தமஸ்கு அனுபவம், மனமாற்றம், அதைத் தொடர்ந்து அவர் மேற்கொண்ட மறைபோதக பயணங்கள் திருச்சபையின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்தன.
- அவரது அயராத உழைப்பினாலும், தீவிர போதனையினாலும் அப்போஸ்தலருடைய காலத்திலேயே திருச்சபை எருசலேம், யூதேயா, சமாரியா, கலிலேயா, அந்தியோக்கியா, சிப்புரு தீவு, பம்பிலியா, கலாத்தியா, பேர்கா, பிசியா நாட்டு அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, டேர்பே, பிலிப்பி, எபேசு, தியாத்திரா, சர்தை, இலவோதிக்கேயா, தெசலோனிக்கா, கொரிந்து, உரோமை, சிமிர்னா, போந்து, கப்பதோச்சியா, சின்ன ஆசியா, பித்தினியா போன்ற நாடுகளில் பரவியிருந்தது.
- திருச்சபை அதன் அங்கத்தவர்களின் தொகையிலும், கிறிஸ்தவ சமூகங்களின் தொகையிலும் மட்டுமல்ல, அதன் விசுவாச வாழ்விலும், நிர்வாக அமைப்பிலும், வழிபாட்டு முறைகளிலும், இறையியல், மறைக் கல்வியிலும் பெரும் வளர்ச்சி கண்டது.
- திருச்சபைக்கு எதிராக எழுந்த யூத, உரோமைய கலாபனைகள் கிறிஸ்தவத்தை அழிப்பதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தின. வேத கலாபனைகளின்போது, கலாபனைக்காரர்முன் கிறிஸ்தவர்கள் காட்டிய பொறுமை, தைரியம், தாம் விசுவசித்த சத்தியங்களுக்காக, தாம் சான்று பகர்ந்த உண்மைகளுக்காக தம் உயிரையே கொடுக்க முன்வந்தமை. கலாபனைக்காரரையே சிந்திக்க வைத்தன. வேதசாட்சிகளின் இரத்தம், திருச்சபையின் வித்தாக மாறியது.

- திருச்சபையைச் சீர்குலைக்க அதனுள் தோன்றிய பேதகங்கள் இறையியலின், மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு உதவின. பல பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டு, திருச்சபையின் விசுவாச உண்மைகள் அலசி ஆராயப்பட்டு, தெளிவான விளக்கங்கள் கொடுக்கச் சந்தர்ப்பங்கள் அளித்தன. பல இறையியல் கல்லூரிகளும் ஆரம்பிக்கப்பட்டன.
- இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மத உணர்வும், மத மறுமலர்ச்சியும் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. கிறிஸ்தவத்தின் மதக் கொள்கைகள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அடிமை வாழ்வில் துவண்டு, கொடுமைகளை அனுபவித்த மக்களுக்கு அழியாத ஆன்மா, பாவ மன்னிப்பு, மறுவுலக வாழ்வு போன்ற சத்தியங்கள் மன ஆறுதல் அளித்தன.
- உரோமைப் பேரரசின் அமைப்பு, நிர்வாகம், அதன் கீழ் எங்கும் நிலவிய அமைதி, அங்கு காணப்பட்ட நல்ல வீதிகள், போக்குவரத்து வசதிகள், எல்லா நாடுகளும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்தமையால் எங்கும் தங்குதடையின்றி பாதுகாப்பாக பயணம் செய்யக்கூடிய ஏற்பாடுகள், எங்கும் கிரேக்கம் பேசப்பட்டதால் கிரேக்க மொழியில் எங்கும், எவருடனும் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தமை, இவையெல்லாம் கிறிஸ்தவம் எங்கும் எளிதில் பரவுவதற்கு தாராளமாய் உதவின.
- மூன்றாம் நூற்றாண்டில் திருச்சபை ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில், மசதோனியா, எகிப்து, கிறீஸ், இல்லிரியா, இத்தாலி, இஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, பேர்சியா, அரேபியா போன்ற நாடுகளிலெல்லாம் தாபிக்கப்பட்டிருந்தது.
- திருச்சபையின் வரலாற்றில் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் அது யூத கலாபனை, உரோமைய கலாபனை, பேதகங்கள், திரிபுக் கொள்கைகள் போன்ற பல எதிர்ப்புகளுக்கும், இடையூறுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. அவை அதன் வளர்ச்சிக்கு பெரும் இடைஞ்சலாகவிருந்தன. எனினும், இத்தனை தடைகள், எதிர்ப்புக்கள் மத்தியிலும் அந்த முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் திருச்சபை வளர்ந்து பரவியதைப்போல் வேறெந்தக் காலத்திலிலும் அது வளரவில்லை. எனவேதான், திருச்சபையின் வரலாற்றில் முதல் மூன்று நூற்றாண்டுகளையும் திருச்சபையின் ‘‘வீர வரலாற்றுக் காலம்’’ என்றழைப்பர்.

### 6.1.2. புனித பவுலின் மறைத்தூதுப் பயணங்கள்

- ஆரம்ப திருச்சபையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் பவுல் என்றழைக்கப்படும் சவுல் ஆவார். புறவினத்தவர்களின் அப்போஸ்தலராக இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மத்தியில் நற்செய்திப் பணியாற்ற அனுப்பப்பட்டவர். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியைப் பொறுப்புடன் ஏற்றுக்கொண்ட பவுல், அதை நிறைவேற்ற பல மறைத்தூதுப் பயணங்களை மேற்கொண்டு, மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள நாடுகளெங்கும் சென்று, ஏன் அக்காலத்தில் உலகின் கடை எல்லையெனக் கருதப்பட்ட உரோமைக்கும் சென்று, பல எதிர்ப்புகள், துன்பங்கள் மத்தியில் நற்செய்தியைப் போதித்து, பலரை மனந்திருப்பி, அங்கெல்லாம் கிறிஸ்தவ சமூகங்களை ஏற்படுத்தியவர். எனவே, திருச்சபையின் வளர்ச்சியைப்பற்றி அறிய விரும்புகிறவர்கள், அவர் வாழ்வையும், அவர் ஆற்றிய பணியையும் அறிந்திருத்தல் அவசியம்.

#### 6.1.2.1. புனித பவுலின் வாழ்க்கைப் பின்னணி

- பவுல் என்னும் சவுல் ஒரு கிரேக்க மொழி பேசும் யூதன். யௌவன பண்பாட்டினர். அந்நிய படையெடுப்புகளின் நிமித்தம் பாலஸ்தீனாவிலிருந்து சிதறுண்டு ஓடி, சின்ன ஆசியாவின் செசிலியாவின் தலைநகராகிய தர்சு என்ற கிரேக்க நகரத்தில் குடியேறிய பென்ஜமின் குலத்தைச் சேர்ந்த யூத குடும்பத்தில் கி.பி. 10ஆம் ஆண்டளவில் பிறந்தவர். தார்சுவில் ஒரு பெரிய யூத சமூகம் இருந்தது.

- அவர் ஒரு யூதர் மட்டுமல்ல, ஒரு உரோமைக் குடிமகனும் கூட. அது அவரின் தந்தை வழியாகப் பெற்ற உரிமை. அவரின் யூத பெயர் சவுல். அவருடைய உரோமைய கிரேக்க பெயர் பவுல். புறவினத்தவரின் திருத்தூதராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், பணியைத் தொடங்கியது முதல் பவுல் என்றே தன்னை அழைத்துக்கொண்டார்.
- சவுல் சிறுவனாக இருந்த பொழுது தர்சுவில் கிரேக்கத்தால் பாதிக்கப்பட்ட யூதத்துவத்தில் வீட்டிலிருந்து தம் பெற்றோர் வழியாகப் பயிற்சி பெற்றார். ஆறு வயது தொடக்கம் தார்சுவில் இருந்த செபக்கூடத்தில் வேத நூல், எபிரேய மொழி போன்றவற்றைக் கற்றார்.
- தர்சு ஒரு வர்த்தக நகரம் மட்டுமல்ல, அது ஒரு பல்கலைக்கழக நகரம். கிரேக்க கலை கலாசாரத்தின் மையமாக விளங்கி, பல சிந்தனையாளர்களையும், தத்துவ வல்லுநர்களையும் உருவாக்கியது. இத்தகைய கிரேக்க சிந்தனைச் சூழலிலேயே சவுல் தன் சிறுபராயத்தைக் கழித்தவர். இவ்வாறு புறவினக் கிறிஸ்தவர்கள் மத்தியில், குறிப்பாக கிரேக்கர்கள் மத்தியில் நற்செய்தியை எடுத்துச்செல்ல மிகத் தகுதியுள்ளவர் அவரே.
- அவர் இளைஞனாக இருந்தபொழுது, இயேசுவின் மரணத்திற்குப் பின், எருசலேம் சென்று, மிகப் புகழ்பெற்ற சட்ட வல்லுநரான கமாலியேலின் கீழ் வேத நூலை நன்கு பயின்றார். பாலஸ்தீன யூதத்துவத்தின் பாரம்பரியங்களை நன்கு கற்றார். அவர் சட்டங்களைக் கற்றது மட்டுமல்ல, அவற்றை மிக நுணுக்கமாகக் கடைப்பிடித்த ஒரு பரிசேயனாகவும் மாறி, ஓர் சிறந்த ராபியாகவும் செயற்பட்டார்.
- யூத மறையில் அவருக்கு இருந்த பற்றும், யூத சட்டத்தில் அவருக்கு இருந்த அறிவும், அவரது மத ஆர்வமும் அவரைக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக எழச் செய்தன. ஸ்தேவானின் மறைசாட்சி மரணத்தை அடுத்து எருசலேமில் தொடங்கிய யூத கலாபனையிலே சவுல் மிக மும்முரமாக ஈடுபட்டார்.
- யூத மறையின்மேல் உள்ள பற்றினாலும், யூத சட்டத்தின்மேல் கொண்டிருந்த ஆர்வத்தினாலும் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்தவர்களையும் அழிக்கத் தீவிரமாக உழைத்தார். வீடுவீடாகச் சென்று, ஆண்களையும் பெண்களையும் இழுத்துச் சென்று, சிறையில் அடைத்தார். அவரின் பெயரைக் கேட்கவே கிறிஸ்தவர்கள் அஞ்சினார்கள்.
- தமஸ்கு நகரில் கிறிஸ்தவர்கள் இருந்ததைக் கேள்விப்பட்ட சவுல், அவர்களைக் கைதுசெய்து எருசலேமுக்கு இழுத்து வர, தலைமைக் குருக்களின் உத்தரவுப் பத்திரத்துடன், வேறு சிலரோடு தமஸ்கு நகரத்தை நோக்கிப் பயணம் சென்றார்.
- தமஸ்குப் பாதையில் அவருக்கு ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அது அவரது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவர் உயிர்த்த இயேசுவை நேருக்கு நேர் எதிர்கொண்டார். திடீரென்று வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்து கொண்டது. ஒளியின் பிரகாசத்தினால் பார்வை தெரியாது, சவுல் கீழே விழுந்தார். அப்போது ஒரு குரலொலியைக் கேட்டார். ''சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?'' என அக்குரலொலி கேட்டது. சவுல் ஒன்றும் விளங்காதவராய், ''ஆண்டவரே நீர் யார்?'' என்று கேட்க, அக்குரல் ''நீ துன்புறுத்தும் இயேசு நானே. நீ எழுந்து நகருக்குள் செல். நீ என்ன செய்ய வேண்டும் என்பது அங்கே உனக்குச் சொல்லப்படும்'' என்றது.
- பார்வையற்றிருந்த சவுலை அவரோடு கூடப் பயணம் செய்தவர்கள், கைகளைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போய் தமஸ்குவில் சேர்த்தனர். அங்கு அவர் அனனியாவிடம் திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் இணைந்து கொண்டார்.

- தமஸ்குப் பாதையில் சவுலுக்கும் உயிர்த்த இயேசுவுக்குமிடையே நடைபெற்ற இச்சந்திப்பு, சவுலின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இவ் அனுபவம் கிறிஸ்துவின் பகைவனாகிய சவுலை அவரின் திருத்தூதராக மாற்றியது. கிறிஸ்தவர்களின் விரோதியாகிய சவுலை கிறிஸ்தவர்களின் நண்பராக மாற்றியது. கிறிஸ்தவத்தை அழிக்கப் புறப்பட்ட சவுலை, கிறிஸ்தவத்தை எங்கும் போதித்துப் பரப்பும் திருத்தூதராக மாற்றியது. தன் புதிய பணியை உணர்ந்த பவுல், அதே மத ஆர்வத்துடனும், பற்றுறுதியுடனும் தம் புதுப் பணியை நிறைவேற்றப் புறப்பட்டார்.

### 6.1.2.2. புனித பவுல் மேற்கொண்ட மறைபோதகப் பயணங்கள் பற்றிய விளக்கம்

- மனமாற்றத்தையும், திருமுழுக்கையும் தொடர்ந்து, தமஸ்கு நகரிலேயே செபக் கூடங்களுக்குச் சென்று, இயேசு இறைமகனெனப் பறைசாற்றத் தொடங்கினார். ஆனால், எல்லோரும் அவரைச் சந்தேகக் கண்ணுடன் பார்த்தனர்.
- யூதர்களிடமிருந்தே அவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படவே, தப்பி எருசலேமுக்குச் சென்று, திருத்தூதர்களுடன் இணைய முற்பட்டார். அவர்களும் அவரில் சந்தேகம் கொண்டனர். இறுதியில் பர்னபா, நடந்ததை விளக்கி, பவுலை திருத்தூதருடன் சேர்த்து வைத்தார்.
- எருசலேமில் போதித்தபொழுது, அங்கும் கிரேக்க மொழி பேசும் யூதர்களால் அவருக்கு ஆபத்து ஏற்பட்டது. அதிலிருந்து தப்பித்துக்கொள்ள அவர் சொந்த ஊரான தர்சுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
- பின்பு பர்னபாவால் அந்தியோக்கியாவில் உருவாகிய முதல் யூத - புறவின கலப்புத் திருச்சபையில் பணிபுரிய உதவிக்கு தர்சு நகரத்திலிருந்து அழைத்து வரப்பட்டு, அங்கு ஓராண்டு பணி புரிந்தார்.
- ஒருநாள் அந்தியோக்கிய சபையிலிருந்த இறைவாக்கினர்களும், போதகர்களும் ஆண்டவரை வழிபடுகையில், தூய ஆவி பர்னபாவையும், சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்காக ஒதுக்கி வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.
- எனவே, அவர்கள் நோன்பிருந்து, செபித்து அவ்விருவர் மீதும் கைகளை விரித்து, செபித்து, புறவினத்தாருக்கு நற்செய்தியை அறிவிக்க அனுப்பி வைத்தனர். பர்னபா சைப்பிரசு தீவினர். அங்குதான் அவர்கள் முதலில் சென்றார்கள். அந்தியோக்கியாவின் துறைமுகமாகிய செலூக்கியாவரை தரை வழியே சென்று, அங்கிருந்து சைப்பிரசுக்கு கப்பல் ஏறினார்கள்.
- பவுலின் மறைப்பணி பற்றி லூக்கா திருத்தூதர் பணி நூலில் தரும் விபரிப்பை அடிப்படையாகக் கொண்டு, அதை பவுலின் மூன்று மறைத்தூதுப் பயணங்களாக வகுப்பது வழக்கம்.

### 6.1.2.2.1. புனித பவுலின் முதல் மறைத்தூதுப் பயணம் (தி.ப. 15:4-35)

- **இடம்பெற்ற காலம்:** கி.பி.46 - 49 வரை. ஏறக்குறைய மூன்று ஆண்டுகள்.
- **பயணத் தோழர்:** பர்னபா, யோவான் மாற்கு.
- **நோக்கம்:** பரிசுத்த ஆவியின் பணிப்புரையின்படி அந்தியோக்கிய சபையிலிருந்த இறைவாக்கினர் போதகர்களால் இன்னமும் நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத புறவினத்தவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க அனுப்பப்பட்டனர். சபையே மறைபரப்பாளர்களை அனுப்புவதைக் காண்கிறோம்.
- **எங்கு:** சைப்பிரஸ் தீவுக்கும், தென் கிழக்கு சின்ன ஆசியாவில் உள்ள நகரங்களுக்கும் அனுப்பப்பட்டார்கள்.
- **எப்படி:** அந்தியோக்கியாவின் துறைமுகமாகிய செலூக்கியாவரை தரை வழியே சென்று, அங்கிருந்து சைப்பிரசுக்கு கப்பல் ஏறினார்கள்.
- **தரிசித்த முக்கிய இடங்கள்:** சாலமி, பாப்போ, அங்கிருந்து கப்பலேறிச் சின்ன ஆசியா சென்று, பெருகை, பிசிதிய-அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, தெருபை என்ற இடங்களில் பணியாற்றினர்.

**நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்**

- **பாப்போ:** இதுவே பர்னபாவின் பிறப்பிடம். அங்கிருந்த சைப்பிரசு தீவின் ஆளுநன் செர்கியு பவுலு கடவுளின் வார்த்தையைக் கேட்க விரும்பி பர்னபாவையும் சவுலையும் வரவழைத்தான். ஆனால், அவனுக்குப் பணிபுரிந்த யூத மந்திரவாதி ‘‘எலிமா’’ என்னும் பார்ஏசு ஆளுநன் நம்பிக்கை கொள்ளாதபடி, அவர்கள் அவனிடம் போவதைத் தடுத்தான். அப்போது சவுல் அம் மந்திரவாதியைக் கண்டித்து அவனைக் குருடாக்கினார்.
- **பெருகை:** யோவான் மாற்கு குறிப்பிடப்படாத ஏதோ காரணத்திற்காக மனம் நொந்து, தூதுக் குழுவைப் பிரிந்து, எருசலேம் திரும்பினார்.
- **பிசிதியா அந்தியோக்கியா:** இங்கு செபக்கூடத் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஓய்வுநாளில் செபக்கூடத்தில் அவர்கள் யூதர்களுக்குப் போதித்தனர். இங்கேயே பவுலின் முதல் நீண்ட மறையுரையைக் காண்கிறோம். இது யூதர்களுக்கு அளிக்கப்பட்டது. இம்மறையுரை பேதுரு பெந்தக்கோஸ்து தினத்தன்று கொடுத்த மறையுரையை ஒத்திருக்கிறது. மக்கள் திரளைக் கண்ட யூதர்கள் பொறாமை கொண்டு, பவுலை எதிர்த்துப் பேசி குழப்பம் உண்டாக்கினார்கள். யூதர்கள் நற்செய்தியைப் புறக்கணிக்க, புறவினத்தவர்கள் அதை நம்பினர். அப்போது பவுலும் பர்னபாவும், ‘‘கடவுளின் வார்த்தையை உங்களுக்குத்தான் முதலில் அறிவிக்க வேண்டியிருந்தது. ஆனால், நீங்கள் அதை உதறித்தள்ளி, நிலைவாழ்வுக்குத் தகுதியற்றவர்களென்று உங்களுக்கு நீங்களே தீர்ப்பளித்துக் கொண்டீர்கள். எனவே, நாம் புறவினத்தாரிடம் செல்கிறோம்’’ என்றார்கள். ஆனால், யூதர்கள் மதிப்புக்குரிய பெண்களையும், முதன்மைக் குடிமக்களையும் தூண்டி, குழப்பம் உண்டாக்கி, பவுலையும், பர்னபாவையும் நாட்டிலிருந்து விரட்டி விட்டார்கள்.
- **லிஸ்திரா:** இது ஒரு உரோமைக் குடியேற்ற நகர். அங்கு பவுல் தன் உரையைக் கேட்க வந்திருந்த ஒரு முடவனைக் குணமாக்கினார். இதைக் கண்ட மக்கட் கூட்டம் ‘‘தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன’’ எனக் கூறி, பர்னபாவை ‘‘சேயுசு’’ (யூப்பிற்றர்) என்றும், உரையாற்றிய பவுலை ‘‘எமர்சு’’ (மெர்குரி) என்றும் அழைத்தனர். சேயுசு கோயில் அர்ச்சகன் காளைகளையும் பூமாலைகளையும் கொணர்ந்து, மக்களுடன் சேர்ந்து அவர்களுக்குப் பலியிட முயற்சித்தான். இதைக் கண்ட பவுலும் பர்னபாவும், ‘‘மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள் தாம்’’ எனக் கூறித் தடுத்தனர். ஆனால், அந்தியோக்கியாவிலிருந்தும் இக்கோனியாவிலிருந்தும் யூதர்கள் வந்து, அவர்களுக்கு எதிராக மக்களைத் தூண்டி, கல்லால் எறிந்து குழப்பம் உண்டாக்கினர்.
- பின்பு சென்ற வழியே திரும்பி வந்து, தேர்பே, லிஸ்திரா, இக்கோனியா, அந்தியோக்கியா ஆகிய நகரங்களுக்கு மீண்டும் சென்று, அங்குள்ள சீடர்களை உறுதிப்படுத்தி, அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தினார்கள். இறுதியில் அத்தாலியாவிலிருந்து கப்பலேறி சீரியா அந்தியோக்கியா வந்து சேர்ந்தனர்.
- அந்தியோக்கியாவில் சபையைக் கூட்டி கடவுள் தங்கள் வழியாகச் செய்ததை, தங்கள் அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டனர்.

### 6.1.2.2.2. புனித பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணம் (தி.ப. 15:36-18:23)

- **இடம்பெற்ற காலம்:** கி.பி.50-52 வரை. ஏறக்குறைய மூன்று ஆண்டுகள்.
- **பயணத் தோழர்:** சீலா, திமோத்தேயுவும், லூக்காவும் இடையில் சேர்ந்தனர்.
- **நோக்கம்:** சபைகளுக்கு எருசலேம் சங்கத்தின் தீர்மானங்களை அறிவித்து, அவர்களை ஊக்குவித்து, உறுதிப்படுத்தி, பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க.
- **எங்கு:** கலாத்தியா, சின்ன ஆசியா, மசதோனியா பகுதிகளுக்கு.
- **எப்படி:** அந்தியோக்கியாவிலிருந்து தரைமார்க்கமாகப் புறப்பட்டார்கள்.
- **தரிசித்த முக்கிய இடங்கள்:** சீரியா, சிலிசியா சபைகள், தேர்பே, லிஸ்திரா, துரோவா, பிலிப்பி, தெசலோனிக்கா, பெரேயா, ஏதென்ஸ், கொரிந்து.

**நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்:**

- **லிஸ்திரா:** திமோத்தேயு பயணத் தோழராக இணைகிறார். விருத்தசேதனம் அவசியமற்றதாய் இருந்தாலும், நற்செய்திப் பணிக்கு அது ஒரு இடைஞ்சலாக இருக்கக் கூடாதென்பதற்காக, அங்கு வாழ்ந்த யூதரின் பொருட்டு பவுல் திமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்வித்தார்.
- **தூய ஆவியின் வழிநடத்துதல்:** அவர்கள் ஆசியாவில் நற்செய்தி போதிப்பதையும், பித்தீனியாவுக்குச் செல்வதையும் தூய ஆவி தடுக்கவே, அவர்கள் பிரிகிய, கலாத்தியப் பகுதிகளைக் கடந்து, மீசியா வழியாக துரோவாவை அடைந்தனர்.
- **துரோவா:** அங்கு பவுல் ஒரு காட்சி கண்டார். பவுல் தம் மறைத்தூதுப் பயணங்களின் போது கண்ட ஐந்து காட்சிகளுள் இதுவே முதலாவது (தி.ப. 16:6-10, 18:9-10, 22:17-21, 23:11. 27: 23-24). அக்காட்சியில் மசிதோனியர் ஒருவர் தோன்றி, ''நீர் மசிதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்'' எனக் கேட்டார். அதுவே இறை சித்தமென உணர்ந்த பவுல், அங்கு செல்லத் தீர்மானித்தார். இங்கு பவுலின் பயணத்தோழராக லூக்காவும் இணைந்து கொள்கிறார்.
- **பிலிப்பி**: நான்கு முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றன:
  1) லிதியாவின் மனமாற்றம் (16:11-15).
  2) மந்திரம் கூறும் பணிப்பெண்ணிடமிருந்து அசுத்த ஆவியை விரட்டுதல் (16:16-18).
  3) பவுலும் சீலாவும் சிறையில் இடப்படல் (16:19-34).
  4) பவுலும் சீலாவும் விடுதலை செய்யப்படல் (16:35-40).
- **தெசலோனிக்கா**: யூதரில் சிலரும், யூதத்தைத் தழுவிய புறவினத்தவர்கள், குறிப்பாகப் பணக்காரக் கிரேக்கப் பெண்கள் பலரும், அவர்களின் போதனையை ஏற்று, திருச்சபையில் சேர்ந்தனர். பொறாமை கொண்ட யூதர்கள், ஊர்ச் சண்டியர்களைக் கூட்டிக் குழப்பம் உண்டாக்கினர்.
- **பெரேயா**: பெரேயா பவுலுக்கும் சீலாவுக்கும் நல்ல வரவேற்பு இருந்தது. யூதர்கள், கிரேக்கப் பணக்காரப் பெண்கள், ஆண்களௌனப் பலர் விசுவாசம் கொண்டனர். இதைக் கேள்விப்பட்ட தெசலோனிக்க யூதர்கள், அங்கு வந்து, குழப்பம் உண்டாக்கிக் கலகம் செய்தனர்.
- **ஏதென்ஸ்:** பவுல் அரேயோப்பாகு மன்றத்தில், அங்கு கூடியிருந்த கிரேக்க அறிஞர்களுக்கு உரையாற்றினார். இதுவே எங்களுக்குக் கிடைத்திருக்கும் பவுல் முழுக்கமுழுக்க புறவினத்தவர்களுக்கு ஆற்றிய ஒரேயொரு உரை. யூதர்களுக்கு ஆற்றிய உரைகளிலிருந்து வேறுபட்டது. கிரேக்க கவிஞர்களையும், ஞானிகளையும் மேற்கோள் காட்டிப் போதித்தார். அதுமட்டுமன்றி, அவர் உரையில் கிரேக்க தத்துவச் சிந்தனைகளும் காணப்படுகின்றன. பவுல் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசிய உடனே, சிலர் கிண்டல் செய்தனர். வேறு சிலர், ''இதைப் பற்றி மீண்டும் வந்து பேசும், கேட்போம்'' என்றனர். பவுலின் உரை ஏதென்சில் அவ்வளவு பலன் கொடுக்கவில்லை.
- **கொரிந்து**: இங்கு ஒன்றரை ஆண்டுகள் தங்கியிருந்து நற்செய்தியைப் போதித்தார். அக்கிலாவையும், அவருடைய மனைவி பிரிஸ்சில்லாவையும் சந்தித்து, அவர்களுடன் தங்கியிருந்து, கூடார வேலை செய்து, தன் செலவுக்காக உழைத்தார். செபக்கூடத் தலைவன் கிறிஸ்புவின் வீட்டாரும், கொரிந்தியர் பலரும், யூதர்கள் சிலரும் விசுவாசம் கொண்டனர். யூதர்கள் அவருக்கெதிராக ஒருமித்தெழுந்து, நடுவர்மன்றத்துக்கு அவரை இழுத்து வந்து, ஆளுநன் கல்லியோ முன் நிறுத்தினர். ஆனால், அவனோ யூதர்களின் மதம், திருச்சட்டத்தைப் பற்றிய பிரச்சினையில் தலையிட விரும்பாமல், அவர்களை மன்றத்திலிருந்து விரட்டிவிட்டான். ஆண்டவரும் காட்சியில் பவுலுக்குத் தோன்றி, ''அஞ்சாதே! பேசிக்கொண்டே இரு. நிறுத்தாதே! ஏனெனில், நான் உன்னோடு இருக்கிறேன்'' என்று ஊக்கமூட்டினார். பின் பவுல் அக்கில்லா, பிரிஸ்கில்லா வுடன் சீரியாவுக்குக் கப்பலேறி, எபேசு வழியாக செசாரியா சென்றடைந்தார்.

- இரண்டாம் திருத்தூதுப் பயணம் மூன்று ஆண்டுகள் நீடித்தன. இதுவே பவுலின் மறைத்தூதுப் பயணங்களில் நீண்டதும், முக்கியமானதும் ஆகும். இப்பயணத்தின் முக்கிய நிகழ்வு, பவுலின் பணி சின்ன ஆசியாவைக் கடந்து, ஐரோப்பாவில் முதன்முறையாக நற்செய்தி போதிக்கப்பட்டதாகும். பிலிப்பியிலும், தெசலோனிக்கா விலும், கொரிந்திலும் பவுல் ஆற்றிய நீண்ட பணியும், தாபித்த சபைகளும் சிறப்புள்ளவை. முக்கியமாக பல பணக்காரக் கிரேக்கப் பெண்கள் திருச்சபையில் சேர்ந்து, பவுலுடன திருத்தூதுப் பணியில் முழுமையாக ஈடுபட்டனர். கிரேக்க யூதர்கள் (யௌவன பண்பாட்டினர்) பவுலுக்கு அவர் சென்ற இடமெல்லாம் தொடர்ந்தும் பிரச்சினை கொடுத்தனர். உரோமைய அதிகாரிகள் கிறிஸ்தவர்களில் கொண்டிருந்த நல்லெண்ணம் குறிப்பிடத்தக்கது.

**6.1.2.2.3. புனித பவுலின் மூன்றாம் மறைத்தூதுப் பயணம்** (தி.ப. 18:23-21:20)

- **இடம்பெற்ற காலம்:** கி.பி. 54-58 வரை. ஏறக்குறைய மூன்று ஆண்டுகள்.
- **பயணத் தோழர்:** திமொத்தேயு, தீத்து.
- **நோக்கம்:** சபைகளைத் தரிசித்து, கிறிஸ்தவர்களை ஊக்குவித்து, உறுதிப்படுத்துவது.
- **எங்கு:** கலாத்தியா, பிரிகியா, மசதோனியா பகுதிகளுக்கு.
- **எப்படி:** அந்தியோக்கியாவிலிருந்து தரைமார்க்கமாகப் புறப்பட்டார்கள்.
- **தரிசித்த முக்கிய இடங்கள்:** எபேசு - அங்கு மூன்று ஆண்டுகள் தங்கிப் பணிபுரிந்தார். தொடர்ந்து, துரோவா, பிலிப்பி, தெசலோனிக்கா வழியாகப் பயணம் செய்து, கொரிந்து சென்றடைந்தார்.

**நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள்**

- **எபேசு:** உரோமை ஆசியாவின் தலைநகரம். செல்வம் கொழிக்கும் அழகிய நகரம். ஏழு உலக அதிசயங்களில ஒன்றாகிய தேவதை அர்த்தமி (தியானா) பெயரால் கட்டப்பட்ட ஆலயமும் அங்கேயே இருந்தது. அது அநேக பிறநாட்டு மக்களைக் கவர்ந்தது. எபேசு நகரம் அவள் ஆலயத்திலும் வழிபாட்டிலும், மாயவித்தைகளிலும், பேய்க் காரியங்களிலும் பெயர்பெற்று விளங்கிற்று. பொற்கொல்லர் அவளினதும், ஆலயத்தினதும் வடிவங்கள் செய்து விற்று, பெருந்தொகைப் பணம் சம்பாதித்தனர்.
  - பவுல் எபேசு சென்று, அங்கு அப்பொல்லோவிடமிருந்து யோவானின் திருமுழுக்கைப் பெற்றிருந்த பன்னிரண்டு சீடர்களுக்கு, தூய ஆவியினால் திருமுழுக்கு அளித்தார். அவர் அவர்கள்மீது கைகளை வைத்துப் தூய ஆவியை அளித்தபொழுது, அவர்கள் பரவசப் பேச்சுப் பேசி, இறைவாக்கு உரைத்தனர்.
  - மேலும், பவுல் அங்கிருந்த செபக்கூடத்திற்குச் சென்று, மூன்று மாதங்களாக இறையாட்சியைப் பற்றி மக்களுக்குப் போதித்து, அவர்களை நம்பச் செய்தார். நம்ப மறுத்த சிலர் அவர் நெறியை இகழ்ந்து பேசவே, அவர் செபக்கூடத்தை விட்டு, எபேசில் இருந்த ‘திரென்னு’ மன்றத்தில் நாள்தோறும் விவாதித்தார்.
  - இரண்டு ஆண்டுகளாக அவர் போதித்ததன் விளைவாக ஆசியாவில் வாழ்ந்த பலர், யூதரும், கிரேக்கரும் ஆண்டவர் வார்த்தையைக் கேட்டனர். ஆண்டவரும் பவுல் வழியாக பல அற்புதங்களைச் செய்தார். அவர் உடலில் பட்ட துணிகளை நோயாளர் மீது வைக்க, அவர்கள் குணமடைந்தனர். பொல்லாத ஆவிகளும் வெளியேறின.
  - பேயோட்டும் யூதர்கள் சிலர், ‘பவுல் அறிவிக்கும் ஆண்டவரின் பெயரால்’ பேயோட்ட முயன்றனர். ஸ்கேவா என்னும் தலைமைக்குருவின் ஏழு மக்கள் இவ்வாறு ஆண்டவர் பெயரால் பேயோட்ட முயன்றபோது, பொல்லாத ஆவி அவர்களிடம், ‘இயேசுவை எனக்குத் தெரியும், பவுலையும் எனக்குத் தெரியும். ஆனால், நீங்கள் யார்?’ எனக்கேட்டு, அவர்கள்மேல் பாய்ந்து அவர்களைத் திணறடித்தது.

- பவுல் சிலை வழிபாட்டிற்கும், மாய வித்தைகள், பேய்க் காரியங்களுக்கும் எதிராகப் போதித்து, மக்களை உண்மை மறைக்கு மனந்திருப்பினார். அவர்கள் தம் சிலை வழிபாட்டை விட்டு, சபையில் சேர்ந்தனர். அர்த்தமியின் (தியானா) ஆலயத்திற்கு வருவோரின் தொகையும், பொற்கொல்லருக்கும், கைவினைஞருக்கும் கிடைக்கும் வருவாயும் குறைந்தன.
- இதனால், ஆத்திரமுற்ற திமேத்திரியு என்ற பொற்கொல்லன், ஏனைய பொற்கொல்லர்களையும், கைவினைஞர்களையும் ஒன்றுதிரட்டி, பவுலுக்கும் கிறிஸ்தவ நெறிக்கும் எதிராகக் கலகம் உண்டாக்கினான். பவுல் மக்களின் மனதை மயக்குகிறார், கையால் செய்யப்பட்ட தெய்வங்கள் தெய்வங்களல்லவென்று போதிக்கிறார். இதனால், நமக்கு ஆபத்து ஏற்படும். நம் தொழிலும் மதிப்பை இழந்துவிடும். எம்மாபெரும் தேவதை அர்த்தமியின் மாண்பும் அழிந்துவிடும். அவள் ஆலயத்தின் பெயரும் மங்கிப் போகுமெனப் பிரச்சாரம் செய்தனர்.
- இதைக் கேட்ட எபேசியர் வெகுண்டெழுந்து, 'எபேசின் அர்த்தமி வாழ்க' என்று கத்தினர். பவுலின் தோழர்கள் இருவரைப் பிடித்து, அரங்கத்துக்கு இழுத்துக்கொண்டு சென்றனர். நகர் முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. கலகம் ஒருவாறு ஓய்ந்தபின், பவுல் சீடர்களை வரவழைத்து, அவர்களுக்கு ஊக்கமளித்து, வாழ்த்துக் கூறி, மசதோனியாவுக்குச் சென்றார்.

- **கொரிந்து:** துரோவா, பிலிப்பி, தெசலோனிக்கா வழியாகப் பயணம் செய்து, கொரிந்து சென்றடைந்தார். கிளைச் சபைகள் எருசலேம் தாய்ச் சபைக்குப் பண உதவி செய்ய வேண்டுமென நினைவூட்டினார். மூன்று மாதங்கள் கொரிந்தில் தங்கிவிட்டு, அங்கிருந்து கப்பலேறி, பாஸ்காவிற்கு எருசலேம் செல்ல திட்டமிட்டிருந்தார். ஆனால், யூதர்கள் அவருக்கெதிராக சதித்திட்டம் செய்ததால், அத்திட்டத்தை மாற்றி, மசதோனியா வழியாகவே திரும்பவும் பயணம் சென்றார். வழியில் பாஸ்கா விழாவைப் பிலிப்பியில் கொண்டாடிவிட்டு, துரோவா சென்று ஒரு வாரம் தங்கினார்.
- **துரோவா:** அங்கிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் வாரத்தின் முதல் நாளாயிருந்ததால் அப்பம் பிட்க சபையினர் அனைவரும் மூன்றாம் மாடியில் கூடினர். இறுதி இரவாயிருந்ததால் பவுல் நள்ளிரவுவரை அவர்களோடு தொடர்ந்து பேசினார். அப்போது பலகணியிலிருந்து பவுல் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த யுத்திகு என்ற இளைஞன் அயர்ந்து தூங்கி மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்து இறந்தான். ஆனால், பவுல் அவனை அணைத்துக் கொண்டு, அவன்மேல் படுத்து அவனை உயிர்ப்பித்தார்.
- **மிலேத்து:** காலையில் அங்கிருந்து புறப்பட்டு தரை வழியாக மித்திலேன் நகருக்குச் சென்று, கப்பலேறி கியூ தீவு, சாமு தீவு வழியாக மிலேத்து சென்றார். மிலேத்திலிருந்து எபேசுக்கு ஆளனுப்பி, மூப்பர்களை அங்கு வரவழைத்தார்.
  - அங்கு பவுல் எபேசு சபை மூப்பர்களுக்கு ஆற்றிய பிரியாவிடை உரை மிகவும் உணர்ச்சிகரமானது. இது இறுதிச் சாசன நடையில் தரப்பட்டிருக்கிறது. இதுவே, எமக்குக் கிடைத்திருக்கும் பவுல் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் ஆற்றிய ஒரேயொரு உரையாகும்.
  - அவர்கள் மத்தியில் தான் மூன்றாண்டுகள் ஆற்றிய பணியை நினைவூட்டி, எருசலேமில் தனக்குக் காத்திருக்கும் சிறைவாழ்வு, துன்பங்களைப் பற்றி தூய ஆவியின் வழியாக தான் முன் எச்சரிக்கை செய்யப்பட்டதை அறிவித்தார். தொடர்ந்து மூப்பர்களிடமிருந்து தன் எதிர்பார்ப்பை எடுத்துரைத்து தூய ஆவியே அவர்களைக் கடவுளின் திருச்சபைக்குக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தியதால், மந்தையைக் கவனமாகக் காத்துக்கொள்ளும்படி கூறினார்.
  - இறுதியில், இனி அவர்கள் தன் முகத்தைக் காணமாட்டார்கள் எனக்கூறி, சற்று நேரம் அவர்களோடு செபித்து, விடைபெற்றார். அவர்கள் அவரைக் கட்டித் தழுவி, முத்தமிட்டு, கண்ணீர் விட்டுக் கதறி, வழியனுப்பி வைத்தனர்.

- **செசாரியா:** பவுலும் அவரின் பயணத்தோழர்களும் மிலேத்துவிலிருந்து, எருசலேமுக்குக் கப்பலேறி, கோபு தீவு, ரோது வழியாக பத்தாரா சென்று, அங்கு கப்பல் மாறி, சீரியா வழியாக தீர் சென்றனர். அங்கிருந்து புறப்பட்டு தாலமாய் வழியாக செசாரியா சென்றடைந்து, தங்கள் கடல் பயணத்தை முடித்துக் கொண்டனர்.
  - இறுதியில், இனி அவர்கள் தன் முகத்தைக் காணமாட்டார்களா
  - செசாரியாவில் திருத்தொண்டர் பிலிப்புவின் வீட்டில் பல நாட்கள் தங்கினர். அப்பொழுது, யூதேயாவிலிருந்து அங்கு வந்த இறைவாக்கினர் அகபு, பவுலின் இடைக்கச்சையை எடுத்து தம் கைகளையும், கால்களையும் கட்டி, 'இக்கச்சைக்குரியவனை எருசலேமில் யூதர்கள் இவ்வாறு கட்டிப் புறவினத்தவரிடம் ஒப்படைப்பார்கள். தூய ஆவியார் தாமே இப்படிக் கூறுகிறார்' என்றார்.
  - இதைக் கேட்ட அனைவரும் பவுலை எருசலேமுக்குப் போகவேண்டாமெனத் தடுத்தனர். ஆனால் பவுல், 'நான் ஆண்டவரின் பெயருக்காக எருசலேமில் கட்டப்படுவதற்கு மட்டுமல்ல, சாவதற்கும் தயார்' என்று கூறி, தரைமார்க்கமாக எருசலேம் சென்றார்.
- **எருசலேம்:** எருசலேமில் பவுலும் அவர் குழுவினரும் சபையினரால் மகிழ்வுடன் வர வேற்கப்பட்டனர். பவுல் யாக்கோபு மற்றும் அனைத்து மூப்பர்களிடமும் சென்று, அவர்களை வாழ்த்தி, தம் திருப்பணி மூலம் கடவுள் புறவினத்தாரிடையே செய்ததை ஒவ்வொன்றாக அவர்களுக்கு விளக்கிக் கூறினார். அவர்கள் எல்லோரும் கடவுளைப் போற்றினர்.
  - பவுலின் மூன்றாவது மறைத்தூதுப் பயணத்தில் அவர் எபேசு நகரத்தில் மூன்று ஆண்டுகள் ஆற்றிய பணி மகத்தானது. அங்கு அவர் ஒரு பெரிய சபையை ஸ்தாபித்தது குறிப்பிடத்தக்கது.
  - மேலும், அவர் தலத்திருச்சபைகளுக்கு தம் தாய்த் திருச்சபை மட்டிலுள்ள கடமைகளை உணர்த்தி, அதனுடன் உறவை வளர்த்ததும் பாராட்டத்தக்கது.
  - பவுல் சென்ற இடங்களிலெல்லாம் சபையினர் அவரை மகிழ்வுடன் வரவேற்றனர். இது திருச்சபை எவ்வாறு மூலை முடுக்கெல்லாம் பரவியிருந்ததென்பதைக் காட்டுகிறது. எருசலேமில் தமக்கு ஆபத்துள்ளதைத் தெரிந்திருந்தும், பவுல் ஆண்டவர் அவரிடம் ஒப்படைத்த பணிக்கு இறுதிமட்டும் பிரமாணிக்கமாயிருக்க துணிவுடன் சென்றது போற்றுதற்குரியது.
  - மேலும், பவுல் தம் ஒவ்வொரு மறைத்தூதுப் பணியின் பின் எருசலேம் சென்று மூப்பர்களுக்கு தம் பணி பற்றிய அறிக்கை சமர்ப்பிப்பது, தாய்த் திருச்சபைக்கும் அவருக்குமிடையே இருந்த நல்லுறவை, திருச்சபையின் ஒற்றுமையைக் காட்டுகிறது.

### 6.1.3. புனித பவுலின் முக்கிய படிப்பினைகள்

- பவுல் முதல் புறவினத்தவர்களின் அப்போஸ்தலர் மட்டுமல்ல, அவரே முதல் கிறிஸ்தவ இறையியலாளரும் ஆவார்.
- ஒரு சிறப்புத் தேர்ச்சி பெற்ற யூத பரிசேயனான அவர் யூத சட்டங்களையும், பாரம்பரியங்களையும், இறையியலையும் நன்கு அறிந்திருந்தார். கிரேக்க தத்துவ சிந்தனைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- ஆனால், தம் தமஸ்கு அனுபவத்தின் அடிப்படையில் அவற்றை மீளாய்வு செய்து, புதிய கண்ணோட்டத்தில் நோக்கி, புதிய கருத்தில் விளங்கிக்கொண்டார். அதன் விளைவாக உருவாகியதே அவருடைய கிறிஸ்தவ இறையியல் சிந்தனைகள்.
- பவுல் ஒரு சிறந்த பேச்சாளர் அல்ல. அதை அவரே ஏற்றுக்கொள்கிறார். ஆனால், அவர் ஒரு சிறந்த இறையியற் சிந்தனையாளர். அது மட்டுமல்ல, அவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆவார்.
- அவர் எழுதிய திருமுகங்களிலே அவருடைய சிறந்த இறையியற் சிந்தனைகளும், கருத்துக்களும் காணக்கிடக்கின்றன. அதன் வழியாக, பவுல் கிறிஸ்தவ இறையியலின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களித்திருக்கிறார். அவற்றுள் முக்கியமான படிப்பினைகள் சில பின்வருவனவாகும்.

**6.1.3.1. இறையருள்** (உரோ. 2:12-19, 7:7-20; கலா. 3:15-29)

- ‘‘இறையருள்’’ஐ உணர்த்துவதற்கு புனித பவுல் பயன்படுத்தும் கிரேக்க பதம் ‘‘காரிஸ்’’. அது ‘‘இரக்கம்’’ அல்லது ‘‘நிலையான அன்பு’’ எனப் பொருள்படும்.
- பாவத்தின் விளைவாக கடவுளிடமிருந்து பிரிந்து, அவருடன் கொண்டிருந்த உறவை முறித்து, தீயவனுக்கு அடிமையாக வாழும் மனிதன் மோசேயின் சட்டத்தை பிரமாணிக்கமாக அனுசரிக்கும் தனது நற்செயல்களினால், தன்னைத் தானே மீட்டுக் கொள்கிறான், அதாவது, தன்னை கடவுளுக்கு ஏற்புடையவன் ஆக்கிக் கொள்கிறான் என்பது யூத மதத்தின் அடிப்படைக் கருத்து.
- இறைவனுக்கு ஏற்புடையவராகுதல் என்பது இறைவன் திருமுன் நீதிமானாகக் காணப்படுதல், இறைவன் ஒருவருக்கு நீதியாகக் கருதுதல், இறைவனோடு முன்னைய நேரிய உறவு நிலையை ஏற்படுத்தல் அல்லது இரட்சணியம் அடைதல், விடுதலை, மீட்பு அடைதல் எனப் பொருள்படும்.
- யூத மதத்தின மீதும், யூத சட்டங்களின் மீதும் மிதமிஞ்சிய பற்றுக் கொண்டிருந்த யூத பரிசேயனான பவுல், அதே இறையியல் கோட்பாட்டுடன்தான் வாழ்ந்து வந்தார். மனிதன் சட்டத்தை அனுசரிக்கும் தனது நற்செயல்களினால் தன்னைத் தானே இறைவனுக்கு ஏற்புடையவன் ஆக்குகிறான். அதன் நிமித்தமே பவுல் சட்டத்தை மதியாத கிறிஸ்தவர்களின் விரோதியாக மாறி, அவர்களை மிகவும் துன்புறுத்தினார்.
- அவரின் தமஸ்கு அனுபவம் அவருடைய சட்டம்பற்றிய கோட்பாட்டை மீளாய்வு செய்யச் செய்தது. உயிர்த்த கிறிஸ்து தம்மோடு ஐக்கியப்படுத்திய கிறிஸ்தவர்களை துன்புறுத்திய பாவியாகத் தான் இருந்த வேளையில் (‘‘நீ துன்புறுத்தும் இயேசு நானே’’), அவர் தன்மேல் இரக்கம்கொண்டு, தன்னை எதிர்கொண்டு, தன் பாவங்களை மன்னித்து, பரிசுத்த ஆவியை அளித்து, தன்னை மீட்டு, ஆட்கொண்டார். எனவே, தன்னை ஆண்டவருக்கு ஏற்புடையவராக்கியது சட்டம் அல்ல. மாறாக, இயேசுவின் அன்பு, அவரது இரக்கமே. தனக்கு மீட்பளித்தது சட்டங்களை கடைப்பிடிக்கும் நற்செயல்கள் அல்ல, கடவுளின் இறை அருளே என முடிவு செய்தார். ‘‘இப்பொழுது கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் செயலுக்கும் திருச்சட்டத்திற்கும் தொடர்பில்லை’’ (உரோ. 3:21).
- மனிதன் சட்டத்தை அனுசரிப்பதால் அல்ல, மாறாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தினால் மட்டுமே அவன் கடவுளுக்கு ஏற்புடையவன் ஆகிறான். ஏற்புடைமை இறைவனின் ஒரு இரக்கச் செயல். இறைவனின் அன்புக் கொடை. அது ஒரு இறையருள் என்பதே பவுலின் இப்போதைய போதனை, நற்செய்தியாகும்.
- சட்டம் கடவுளிடமிருந்து வருவது. அது புனிதமானது, நல்லது. அது இஸ்ரயேலுக்கு இறைவன் அளித்த தனிச் சலுகை. சட்டம் பாவம் என்ன என்பதை கூறுகிறது. ஆனால், அதனுடைய ஆற்றலிலிருந்து தப்புவது எப்படியெனக் கூறுவதில்லை. சட்டம்தான் மனிதனை பாவத்துக்கு இட்டுச் செல்கிறது. பாவத்தின் அடிமையாக்குகிறது. ஒழுக்க நெறியிலும்கூட அது நல்லது கெட்டது பற்றி அறிவிக்கிறதேயன்றி, நல்லதைச் செய்ய ஆற்றல் தருவதில்லை (உரோ. 7:16) என்பது பவுலின் முடிவு.
- நாம் பாவம் செய்யும்போது சட்டத்துக்கு எதிராகவல்ல, அளவில்லாத கடவுளுக்கு எதிராகவே பாவம் செய்கிறோம். ஆகவே, பாவம் அளவில்லா கனாகனம் உடையது. அதிலிருந்து விடுதலைபெற நாம் அளவில்லாத பரிகாரம் செய்ய வேண்டும். அற்ப அளவுள்ள பாவிகளாகிய நாம் ஒருபோதும் அளவில்லாத பரிகாரம் செய்ய முடியாது. ஆகவே, நாம் நாமாக நம்மை பாவத்திலிருந்து விடுவிக்க முடியாது. நாம் நாமாக எம்மை இறைவன் திருமுன் நீதிமான்களாக்க முடியாது. நமக்கு இறையருள் தேவை.
- தொடக்க காலத்தில் சட்டம் இறைமக்களுக்கு ஒரு வழிமுறையாகவும், துணை ஆசானாகவும் இருந்தது. ஒரு மீட்பரின் அவசியத்தை உணர்த்தியது. ஆனால், இப்போது மீட்பர் வந்துவிட்டதால், சட்டம் அர்த்தமற்றதாகிவிட்டது. இயேசுவே சட்டத்தின் முழுமை.

- இயேசுக் கிறிஸ்துவின் அருள் அவருடைய சிலுவை வழியாக வருகிறது. இயேசுக் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசம், அருள் வழியாக விசுவசிக்கும் எல்லோரையும் இறைவன் இலவசமாக தமக்கு ஏற்புடையவர்கள் ஆக்குகிறார். ஆகவே, ஏற்புடைமை அல்லது மீட்பு இறைவன் நமக்கு அளிக்கும் இலவசக் கொடை, இறையருள். எனவே, நாம் சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல, நம்பிக்கையினால், குறிப்பாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் நம்பிக்கையினாலேயே இறைவனுக்கு ஏற்புடையவராகுகிறோம்.
- எவரும் சட்டம் சார்ந்த செயல்களால் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை. எமக்குச் சட்டம் கிடைப்பதற்கு நானூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆபிரகாம் தம் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவரானார். ''அவர் கடவுள்மீது நம்பிக்கை கொண்டார். அதைக் கடவுள் அவருக்கு நீதியாகக் கருதினார்'' (தொ.நூ. 15:6). ஆபிரகாம் தம் விசுவாசத்தினால் இறைவனுக்கு ஏற்புடையவரானதுபோல, நாமும் இறைவன் ஆபிரகாமுக்கு வாக்களித்து, இப்போது அனுப்பியுள்ள இயேசுக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதாலேயே இறைவனுக்கு ஏற்புடையவராகிறோம்.
- கலாத்தியர் சட்டத்தைபற்றியே கேள்விப்படாமல் இருந்தவேளையிலேயே தூய ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். அதற்குக் காரணம், அவர்கள் இறையன்பு பற்றிய நற்செய்தியைக் கேட்டு இறைவனில் விசுவாசம் கொண்டார்கள்(கலா.3:1-14).
- யூதர்கள் சரி, புறவினத்தவர் சரி நாம் அனைவரும் மீட்புப் பெறுவது, இறைவன் முன் ஏற்புடையவர்களாவது சட்டத்தினாலல்ல: சட்டம்சார்ந்த செயல்களினாலுமல்ல. மாறாக, இயேசுக் கிறிஸ்துவில் நாம் கொள்ளும் விசுவாசத்தினாலேதான், இறை அருளால்தான்.
- மீட்பு ''விலைகொடுத்து வாங்கப் பெற்றது'' எனப் பவுல் குறிப்பிடப்படுகிறார் (1கொரி.6:20; கலா.3:13). ''கடவுள் தனது இரத்தத்தினால் சொந்தமாக்கிக் கொண்ட இறைவனுடைய திருச்சபை'' பற்றிப் பேசுகிறார் (தீத். 2:14). கிறிஸ்துவின் கல்வாரிப் பலியே நமது விடுதலையின், மீட்பின், கடவுளுக்கு ஏற்புடையவராக்கப்படுதலின், கடவுளால் நீதிமானாகக் கணிக்கப்படுவதின் கருவியாகும். அதற்காகக் கொடுக்கப்பட்ட விலையாகும்.
- மீட்பு இறைவனின் இலவசக் கொடை, இறையருள். யூதரும், புறவினத்தவரும், அனைவருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்துபோயினர். ஆயினும், அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர். அதாவது, கடவுள் பாவிகளை அவர்கள் நல்லவர்கள்போல் நடத்துகிறார்.

### 6.1.3.2. கிறிஸ்துவின் தலைமைத்துவமும் தாழ்ச்சியும்

(எபே. 1:3-10; கொலோ. 1:15-20; பிலி. 2:5-11)

**கிறிஸ்துவின் தலைமைத்துவம்** (எபே. 1:3-10; கொலோ. 1:15-20)

- கிறிஸ்துவின் தலைமைத்துவத்தைப் பற்றி பவுலின் படிப்பினையை நோஸ்டிக்கரின் போதனையின் பின்னணியிலேயே விளங்கிக்கொள்ள வேண்டும். நோஸ்டிக்கரின் கருத்துப்படி, கடவுளிடமிருந்து புறப்பட்ட பல சக்திகளில் ஒன்றே இயேசுக் கிறிஸ்து. எனவே, அவர் இணையற்ற, ஒப்பற்ற, தனிப்பட்ட ஒருவரல்ல. மேலும், இயேசுக் கிறிஸ்து கடவுளின் முழுமையான வெளிப்பாடு என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.
- இதற்கு எதிராகவே பவுல் இயேசுக் கிறிஸ்துவின் தனித்துவத்தை, இணையற்ற தன்மையை, தலைமைத்துவத்தைப் பற்றிப் பேசுகிறார். ''இயேசு கட்புலனாகாத கடவுளது சாயல், படைப்பனைத்திலும் தலைப்பேறு'' (கொலோ.1:15) என்பதே அவரின் நிலைப்பாடு.

- ''சாயல்'' என்பதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க பதம், ''பிரதிநிதித்துவம்'', ''வெளிப்பாடு'' எனப் பொருள்படும். எனவே, பவுல் இயேசு கடவுளின் முழுமையான வெளிப்பாடு என்கிறார். கடவுளை மனிதர் கண்டு, அறிந்து, விளங்குமளவிற்கு இயேசு அவரை நிறைவாக பிரதிநிதித்துவம் செய்கிறார். அவர் இறைவனின் அசலான, பிரமாணிக்கமான படம், ஓவியமாயிருக்கிறார்.
- தொடர்ந்து பவுல் இயேசுவுக்கும் படைப்புகளுக்கும் இடையே உள்ள தொடர்பு, உறவு பற்றிப் பேசுகிறார். இயேசு ''படைப்பனைத்திலும் தலைப்பேறு'' என்கிறார். எபிரேய, கிரேக்க சிந்தனையில் இச்சொற்றொடர், 'இயேசு படைப்புகளில் முதலானவர்' எனப் பொருள்படுவதில்லை. மாறாக, அது மகிமையை, மாட்சிமையைக் குறிக்கின்றது.
- மேலும் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, கட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அதாவது அனைத்துப் படைப்புகளும் அவராலேயே படைக்கப்பட்டன (கொலோ. 1:16).
- அது மட்டுமல்ல, அனைத்தும் அவருக்காகவே படைக்கப்பட்டன. இயேசு ஆரம்பத்தில் படைப்புகள் அனைத்தையும் படைத்தவர் மட்டுமல்ல, அவரே இறுதியில் படைப்பின் நோக்கமாக, குறிக்கோளாக, முடிவாக இருக்கிறார். அவரே படைப்பனைத்தையும், அவற்றின் ஆரம்பத்திற்கும் முடிவிற்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டிக் காப்பவர். அதாவது இந்த உலகைக் கட்டிக் காக்கும் இயற்கைச் சட்டங்கள், விதிகள் எல்லாம் அவரின் உள்ளத்தின் வெளிப்பாடேயாகும்.
- தொடர்ந்து பவுல், இயேசுவுக்கும் திருச்சபைக்குமிடையே உள்ள உறவு, தொடர்பு பற்றிப் பேசுகிறார் (கொலோ. 1:18-19). இயேசு உடலாகிய திருச்சபையின் தலை, தொடக்கம். திருச்சபை தலையாகிய அவரால் இயங்கும் உடல். ஆகவே இயேசுவே திருச்பைக்கு உயிர்கொடுக்கும் அதன் ஆவி.
- பாவத்தின் விளைவாக இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே இருந்த நல்லுறவு முறிபட்டு, மனிதன் கடவுளிடமிருந்து பிரிந்து வாழ்ந்தான். இருந்தும் கடவுள் தொடர்ந்தும் மனிதனை அன்பு செய்துகொண்டே வந்தார். எனவேதான் ஒப்புரவுப் பணிக்காக இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பியவர் இறைத் தந்தையே. இயேசு இவ் ஒப்புரவுப் பணியை நிறைவேற்றவே இவ்வுலகிற்கு வந்தார்.
- விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டாரெனப் பவுல் கூறுகிறார். கடவுள் மனிதரோடு மட்டுமல்ல, உயிருள்ள, உயிரற்ற அனைத்துப் படைப்புகளோடும் ஒப்புரவை விரும்பினார். இயேசுவின் சிலுவை வழியாக அனைத்து படைப்புகளும் கடவுளுடன் ஒப்புரவாக்கப்பட்டன.
- இவ்வாறு பவுல் படைப்புகள் எல்லாம் இயேசுக் கிறிஸ்துவுக்கு சமனற்றவை. அவர் படைப்புகள் எல்லாவற்றிற்கும் மேலானவர், அதி சிறந்தவர், உன்னதரெனக் காட்டுகிறார். இயேசுவின் தலைமைத்துவத்தை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். எங்கள் வாழ்விலும், எங்கள் குடும்பங்களின் வாழ்விலும் இயேசுவே தலைவராக இருக்கவேண்டும்.

**கிறிஸ்துவின் தாழ்ச்சி** (பிலி. 2:5-11)

- ''வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கின்றார்.'' என் வாழ்வு கிறிஸ்துவின் வாழ்வாக மாற வேண்டுமென்றால், முதலில் என் மனம் கிறிஸ்துவின் மனமாக மாறவேண்டும். எனவேதான், ''கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்'' (பிலி. 2:5) எனக் கூறிய பவுல், கிறிஸ்துவின் வாழ்விலும், செயலிலும் வெளிப்பட்ட அவரது மனநிலையை படம்பிடித்துக்காட்டி, அதே மனநிலையை ஒவ்வொரு கிறிஸ்தவனும் கொண்டிருக்க வேண்டுமென்கிறார். குறிப்பாக அவருடைய தாழ்ச்சியை எமக்குப் படிப்பிக்கின்றார்.

- ‘‘கடவுள் வடிவில் விளங்கிய அவர், தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார்.’’ ‘‘வடிவு’’ என்பதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் எச்சூழ்நிலையிலும் மாறாத தன்மையைக் குறிக்கிறது. அதாவது, ஒருவரின் இயல்பான நிலையைக் குறிக்கிறது. இயேசு அடிப்படையில் மாற்றமுடியாத தெய்வீக இயல்பை உடையவர். எந்நிலையிலும் என்றும் அவர் இறைவனே.
- இருந்தும் அவர் இறைவனுக்கே உரிய மகிமை, வல்லமை, ஆற்றல், அறிவு போன்ற புற உரிமைகள் ஒன்றையும் பற்றிக் கொண்டிருக்கவில்லை. அவற்றை தனக்கென்று மூடிமறைத்து வைத்திருக்கவில்லை. தன் சொந்த நலனுக்காக, மகிமைக்காக அவற்றைப் பயன்படுத்தவில்லை.
- ‘‘தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார்’’. வெறுமையாக்குவதற்கு பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல், ஒன்றுமில்லாமல் அனைத்தையும் முற்றுமுழுவதும் துறப்பதை, இல்லாமல் செய்வதைக் குறிக்கிறது.
- இங்கு இயேசுவின் மண்ணக வாழ்வின் நிலை வர்ணிக்கப்படுகிது. இயேசு மனுவுருவான மறைபொருளை பவுல் மிகவும் உயிருள்ள முறையில் விபரிக்கிறார். அவர் மனுஷீகத்தை, மனிதத்தை எடுப்பதற்காக, தானாகவே விரும்பி, தன்னுடைய தெய்வீகத்தை முற்றுமுழுவதும் வெறுமையாக்கினார். தனது உரிமை, மகிமை, ஆற்றல் அனைத்தையும் துறந்தார்.
- ‘‘அடிமையின் வடிவை ஏற்று...’’ இங்கு திரும்பவும் ‘‘வடிவம்’’ மாற்ற இயலா இயல்பைக் குறிக்கிறது. இயேசு மனிதன்போல், அடிமைபோல் நடிக்கவில்லை, தோன்றவில்லை. ஆனால், உண்மையில் மனிதனானார். மனிதனுடைய இன்ப துன்பம், கவலை, வேதனை, ஏழ்மை அனைத்திலும் பங்குகொண்டார். பாவத்தைத் தவிர, மற்றனைத்திலும் மனிதனுக்கு ஒப்பானார்.
- மனிதனாகியது மட்டுமல்ல, அவர் ஓர் அடிமையானார். அடிமையென்பவன் தனக்கென்று வாழாதவன், தனக்கென்று எவ்வித உரிமையும் இல்லாதவன். மற்றவனுக்கென்றே வாழ்பவன். அவனின் காலம், நேரம், ஆற்றல், அறிவு அனைத்தும் மற்றவனுக்கே சொந்தம். அனைவருக்கும் ஆண்டவனாயிருந்தவர் அனைவருக்கும் அடிமையானார்.
- ‘‘தம்மைத் தாழ்த்தி, மரணமட்டும், சிலுவை மரணமட்டும் கீழ்ப்படிந்தார்.’’ அடிமையானது மட்டுமல்ல, கேடுகெட்ட அடிமையானார். சிலுவை மரணம் ஒரு அடிமைக்கு, தன் உரிமைகள் அனைத்தையும் இழந்த ஒருவனுக்கே உரிய தண்டனை முறை. இதுவே இழிவின் கடைசி எல்லை. அவமானத்தின் உச்சக்கட்டம்.
- கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்வில் மிளிர்ந்த பண்புகளான தாழ்மை, கீழ்ப்படிவு, சுய பரித்தியாகம் போன்றவற்றை பவுல் அழகாகக் கூறுகிறார். அவர் மக்கள்மேல் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை: மாறாக, அவர்களுக்குப் பணிபுரியவே விரும்பினார். அவர் தன் விருப்பம்போல் வாழ விரும்பவில்லை: மாறாக, இறைத் தந்தையின் விருப்பப்படியே வாழ விரும்பினார். அவர் தம்மை உயர்த்திக்கொள்ள விரும்பவில்லை: மாறாக, மக்களுக்காகத் தம்மைத் தாழ்த்தி, தம் மகிமை அனைத்தையும் துறக்கவே விரும்பினார்.
- ‘‘ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் அருள் செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். இவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்’’ (2கொரி. 8:9).
- ‘‘தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளுகிறவன் உயர்த்தப்படுவான்’’ என புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் படிக்கிறோம். கிறிஸ்துவின் சுய பரித்தியாகம், அவரின் சுய வெறுமையாக்கல், தாழ்ச்சி அவருக்கு எந்தவொரு மனிதருக்கும் கிடைக்காத மாட்சிமையைக் கொணர்ந்தது. சாவை வென்று, புத்துயிருடன், புதுப்பொலிவுடன், வெற்றி வீரனாக உயிர்த்தெழுப்பப்பட்டார். இறைவனே அவரை உயிர்த்தெழச் செய்தார். அவரை மகிமைப்படுத்தினார்.

- இறைவன் அவரை மாட்சிமைப்படுத்தி, அவருக்கு எல்லாப் பெயருக்கும் மேலான பெயரை அளித்தார். புதிய பெயர் கொடுப்பது, ஒரு மனிதனின் வாழ்வில் ஒரு புதிய நிலை, கட்டம் ஆரம்பமாகுவதைக் குறிக்கிறது. இறைவன் கொடுத்த புதுப்பெயர் ''ஆண்டவர்.'' இப்பெயரினாலேயே ஆதித் திருச்சபையில் இயேசு அழைக்கப்பட்டார். அது இயேசு அனைத்து உயிர்களுக்கும் உரிமையாளர். அரசர்க்கெல்லாம் அரசர், அவர் இறைவன் எனப் பொருள்படும்.

### 6.1.3.3. உயிர்ப்பும் மறு வருகையும் (1தெச. 5:1-11)

- தலைமைக் குருக்களும், பரிசேயரும், யூதர்களும் இயேசு உயிர்த்தெழுந்ததை நம்பவில்லை. கிறிஸ்துவின் அடக்கம் செய்யப்பட்ட உடலை அப்போஸ்தலர்கள் கல்லறையினின்று திருடிவிட்டு, அதை மறைக்க கட்டிய கதையே அதுவென்பது அவர்கள் கருத்து.
- யூத பரிசேயனான சவுலும் அதே கருத்தையே கொண்டிருந்தார். ஆனால், தமஸ்குப் பாதையில் அவர் உயிர்த்த இயேசுவை நேருக்குநேர் எதிர்கொண்டது, அவர் கருத்தை மாற்றிவிட்டது.
- மேலும், பவுல் கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு மறைநூலையும், அப்போஸ்தலிக்க பாரம்பரியத்தையும், உயிர்த்த கிறிஸ்துவை தங்கள் கண்ணால் கண்டவர்களின் சாட்சியத்தையும் ஆதாரமாகக் கொள்கிறார்: ''நான் பெற்றுக் கொண்டதும், முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே: மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கேபாவுக்கும், அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார்... எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை எனக்கும் தோன்றினார்''(1கொரி.15:3-8).
- பவுலின் இறையியல் சிந்தனை, படிப்பினைகள் அனைத்தும் கிறிஸ்துவின் உயிர்ப்பையே அத்திவாரமாகக் கொண்டுள்ளன. ''கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும். நாங்களும் கடவுளின் சார்பில் பொய்ச்சான்று பகர்வோர் ஆவோம்'' (1கொரி.15:14). ''கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே. நீங்கள் இன்னமும் உங்கள் பாவங்களில் வாழ்பவர்களாவீர்கள்'' (1கொரி.15:17).

#### 6.1.3.3.1. இறந்தவர்களின் உயிர்ப்பு

- திருச்சபையின் ஆரம்பத்தில் இறந்தவர்களின் உயிர்ப்பைப்பற்றி தெளிவான கருத்துகள் இருக்கவில்லை. எல்லோரும் உடனடியாக நடைபெறும் என நம்பியிருந்த கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தனர். ஆனால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை தாமதிக்கவே, அதற்கிடையில் சில கிறிஸ்தவர்கள் இறந்த பொழுது, அவர்களுக்கு என்ன நடக்கும் என்ற கேள்வி எழுந்தது (1தெச. 4:14). மேலும், சில கொரிந்தியர்கள் உடலின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை (1கொரி. 15:12).
- பவுலின் இறந்தவர்களின் உயிர்ப்பைப்பற்றிய படிப்பினை தெசலோனிக்கரின், கொரிந்தியரின் சந்தேகங்களைத் தெளிவாக்கவே எழுதப்பட்டது.
- இறந்தவர்களின் உயிர்ப்பு, திருத்தூதர்களின் படிப்பினையிலிருந்து நாம் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் உயிர்ப்பின் தவிர்க்கமுடியாத, இயல்பான விளைவாகும். கிறிஸ்து மனிதத்தை ஏற்றுக்கொள்வோமேயானால், கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு மனிதனின் உயிர்ப்பு. எனவே, கிறிஸ்தவர்கள் அத்தகைய அனுபவத்தை எதிர்பார்க்கலாம். (1கொரி. 15:20; 1தெச. 4:14, 1கொரி. 15:3).
- கிறிஸ்து சாத்தானின்மேல், பாவத்தின்மேல், சாவின்மேல் கொண்ட வெற்றி, இறந்தவர்களின் உயிர்ப்பில் முழுமை அடைகிறது. (1கொரி. 15:21-22).

- ஆண்டவர் வானின்று மகிமையுடன் இரண்டாம் முறை வரும்பொழுது, கிறிஸ்து மீது நம்பிக்கைகொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர். கிறிஸ்து தம் இரண்டாம் வருகையின்போது செய்யப்போகும் முதல் வேலை தம்மீது நம்பிக்கை கொண்டு இறந்தவர்களை உயிர்ப்பித்தல் என்பது பவுலின் கருத்து.
- கிறிஸ்து இயேசுவில் நாம் கொள்ளும் விசுவாசத்தின் வெளிப்பாடே திருமுழுக்காகும். கிறிஸ்துவின் பெயரால் அளிக்கப்படும் திருமுழுக்கு (1கொரி. 1:13) திருமுழுக்குப் பெறுகிறவரை நம் ஆண்டவரின் இறப்போடும், புதைக்கப்படுதலோடும், உயிர்த்தெழுதலோடும் இணைக்கிறது (உரோ. 8:3; கொலோ. 2:12). தண்ணீரில் மூழ்குவித்தல் கிறிஸ்துவின் இறப்பையும், புதைக்கப்படுதலையும் குறித்துக் காட்டுகிறது. தண்ணீரினின்று வெளிவருதல், கிறிஸ்துவோடு இணைந்து உயிர்த்தெழுவதற்கு அடையாளமாய் இருக்கிறது. பாவத்துக்கு சாவதும், வாழ்வைக் கொடையாய்ப் பெறுவதும் இணைபிரியாதவை.
- நம் விசுவாசம், திருமுழுக்கு வழியாக நாம் கிறிஸ்துவோடு, அவர் வாழ்வோடு, அவர் இறப்பு, உயிர்ப்போடு ஒன்றிக்கின்றோம். ''வாழ்வது நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்.'' கிறிஸ்தவன், கிறிஸ்துவில் வாழ்பவன் அனுதினமும் பாவத்துக்கு இறந்து, கிறிஸ்துவின் புதுவாழ்விற்கு எழுந்து கொண்டிருக்கிறான். அவனுடைய வாழ்வு தொடர்ச்சியான இறத்தலும் உயிர்தெழுதலுமாகும்.
- திருமுழுக்கு வழியாக தூய ஆவியைப் பெற்ற மனிதன் கடவுளின் சுவீகார மகனாக ஏற்கனவே, தான் சுவைக்கும் கடவுளின் மாட்சியின் முழு நிறைவுக்காக எதிர்நோக்குடன் காத்திருக்கிறான். அந்நாளில் அவனுடைய ஆன்மா மட்டுமன்றி, அவனது உடலும் அழிவினின்று, சாவினின்று, பாவக் கருவியாக இருப்பதினின்று மீட்புப் பெறுவதற்காக நம்பிக்கையுடன் ஏங்கி நிற்கின்றது.
- புனித பவுல் இறந்தோர் உயிர்த்தெழுவதில்லை எனக் கூறும் கொரிந்தியர்கள் சிலரை மிகக் கடுமையாகச் சாடுகிறார். (1கொரி. 15:12-20).
- இந்த நம்பிக்கைதான் தன் வாழ்வில் பல ஆபத்துக்களை எதிர்கொள்ளுவதற்கு தனக்கு உற்சாகம் அளிப்பதாகப் பவுல் கூறுகிறார். அதேபோல் வரப்போகும் மாட்சியிலுள்ள நம்பிக்கை அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் நம்பிக்கை ஊட்ட வேண்டுமெனச் சொல்கிறார் (உரோ. 8: 18-25).
- மனிதன் மட்டுமல்ல அனைத்துப் படைப்புகளுமே வரவிருக்கும் மாட்சிக்காக ஏங்கி, எதிர்நோக்கோடு காத்திருப்பதாகக் கூறுகிறார். மனிதன் செய்த பாவத்திற்குத் தண்டனையாகச் சபிக்கப்பட்ட இயற்கையும், தன் விடுதலைக்காக, துன்பமற்ற, அழிவற்ற, சாவற்ற காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. பவுல், யூதர் இறுதி நாட்கள் பற்றிக் கொண்டிருந்த கருத்தை அடிப்படையாக வைத்து, இவ்வுலகத்தின் இன்றைய நிலைபற்றியும், வரப்போகும் நிலைபற்றியும் பேசுகிறார். (உரோ. 8:18). அந்நாளில் ஆண்டவர் சாத்தானையும், சகல தீய சக்திகளையும் தோற்கடித்து, அனைத்து மனிதரையும், படைப்பையும், இயற்கையையும் விடுவிப்பார். அனைத்துலகும் ஆண்டவரின் ஆட்சியின் கீழ் கொணரப்படும். எங்கும் அமைதியும், மகிழ்ச்சியும், சமாதானமும் இருக்கும்.

## உடலின் உயிர்ப்பு

- கிறிஸ்துவின் உயிர்ப்பையும், தொடர்ந்து கிறிஸ்துவில் நம்பிக்கைகொண்டு இறந்தவர்களின் உயிர்ப்பையும் வலியுறுத்திய பவுல், இறுதியாக இறந்தவர்கள் எப்படி, எத்தகைய உடலோடு உயிர்த்தெழுவார்களெனப் படிப்பிக்கின்றார். ஏனெனில், சில கொரிந்தியர் உடலின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அடக்கம் செய்யப்பட்டு, அழிந்துபோன உடல் எப்படி உயிர்த்தெழுப்பப்படும் என்பது அவர்களின் கேள்வி. எனவே, கிரேக்கரின் அழியாத ஆன்மாவையே அவர்கள் ஏற்றனர். உடலின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.

- பவுல் இறந்தவர்களின் உடலின் உயிர்ப்பை வலியுறுத்துகிறார். இறந்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட அதே உடலோடு, ஆனால் உருமாற்றம், மாற்றுரு பெற்ற உடலோடு, உயிர்த்தெழுவர். அதாவது, அங்கு உடலில் தொடர்ச்சியும், உருமாற்றமும் இடம்பெறும். உயிர்த்த இயேசுவின் உடலிலே ஆணிகளின் தழும்புகள் இருந்தன.
- உயிர்த்தெழுப்பப்படும் உடலின் இயல்பை விளக்குவதற்கு பவுல் விதைக்கப்படும் விதையை ஒரு ஒப்புவமையாகப் பயன்படுத்துகிறார். கோதுமை மணியை விதைக்கிறோம். அது நிலத்தில் விழுந்து, உக்கி, மடிந்து ஒரு பயிராக, மாற்றுருவுடன் முளைக்கின்றது. கடவுள் தம் விருப்பப்படி அப்பயிருக்கு ஒரு புதிய உருவைக் கொடுக்கிறார். அதே விதை, ஆனால் மாற்றுரு (1கொரி.15:35-38). அடக்கம் செய்யப்பட்ட உடலும், உயிர்த்தெழும் உடலும், விதைக்கப்படும் விதையும், முளைக்கும் பயிரும் போல, உருவில் வேறுபடுகின்றன. அங்கு தொடர்ச்சியும், உருமாற்றமும் காணப்படுகின்றன.
- மேலும் பவுல் இறக்கும்போதுள்ள உடலின் இயல்பை உயிர்த்தெழும்போதுள்ள உடலின் இயல்புடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்:

| **இறக்கும்போது** | **உயிர்த்தெழும்போது** |
|---|---|
| அழிவுக்குரிய உடல் | அழியாத உடல் |
| மதிப்பற்ற உடல் | மாண்புக்குரிய உடல் |
| வலுவற்ற உடல் | வல்லமையுள்ள உடல் |
| மனித இயல்புகொண்ட உடல் | ஆவிக்குரிய உடல் |
| களிமண்ணால் ஆன உடல் | விண்ணிலிருந்து வந்தவரின் உடல் |

### 6.1.3.3.2. கிறிஸ்துவின் (இரண்டாம்) மறுவருகை (1தெச. 5:1-11)

- புனித பவுல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றி படிப்பிப்பதை நாம் பழைய ஏற்பாட்டில் இறுதிக்காலம் பற்றிக் கூறப்படும் கருத்துக்களின் பின்னணியில் அதாவது, அங்கு காணப்படும் ''ஆண்டவரின் நாள்'' இப்பின்னணியில்தான் விளங்கவேண்டும்.
- யூதர்களின் இறுதிக்காலம் பற்றிய கருத்தின்படி, உலக வரலாற்றை நிகழும் யுகம், வரவிருக்கும் யுகமென இரு வகைப்படுத்துவர். நாம் இப்பொழுது நிகழும் யுகத்தில் இருக்கிறோம். அது சாத்தானின், சாவின் ஆதிக்கத்தில் இருக்கிறது. விரைவில் இவ் யுகம் முடிவுக்கு வரும். மெசியா வந்து, சாத்தானைத் தோற்கடித்து, மக்களை விடுதலையாக்கி, வரவிருக்கும் யுகத்தை ஆரம்பிப்பார்.
- இந்த இரண்டு காலங்களுக்கும் இடையில்தான் ''ஆண்டவரின் நாள்'' உள்ளது. அது இக்காலத்தின் இறுதிக் கட்டத்தில், அதாவது வரப்போகும் காலத்தின் விடிவின்போது இடம்பெறும். அது பொல்லாத நாள், பயங்கரமான நாள். அந்த நாளில்தான் இக்காலம் முற்றுப்பெற்று, வரப்போகும் காலம் உதயமாகும். அந்த நாளில்தான் இறைவன் மெசியாவை அனுப்பி, சாத்தானுடன் இறுதிப் போர் செய்து, அவனைத் தோற்கடித்து, உலகத்தை விடுவிக்கும் நாள். அந்த நாளில் பூமியதிர்ச்சிகளும், பூகம்பங்களும் ஏற்பட்டு, பிரபஞ்சமே அசைக்கப்படும்.
- வரவிருக்கும் யுகத்திலே நாம் இறைவனின் ஆதிக்கத்தின் கீழ், இறை அரசில் அமைதியாக வாழ்வோம். வரவிருக்கும் யுகத்தில்தான் இறந்தவர் உயிர் பெறுவர்.
- தமஸ்கு பாதையில் அவர் உயிர்த்த இயேசுவை எதிர்கொண்டது, அவர் வாழ்வில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. ஏனெனில், இயேசு உயிர்த்து விட்டாரென்றால், வருவிருக்கும் யுகம் ஏற்கனவே உதயமாகிவிட்டது. ஆகவே, சாவு தோற்கடிக்கப்பட்டு விட்டது, சாத்தான் தோற்கடிக்கப்பட்டு விட்டான். எனவே, இறுதித் தீர்க்கமான சமர், போர் நடைபெற்று முடிந்துவிட்டது.
- அது எங்கு, எப்போது நடைபெற்றது? அது கல்வாரியில் நடைபெற்றிருக்க வேண்டும். எனவே, இயேசுவே இறைவனால் வாக்களிக்கப்பட்டு, இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்டு, இஸ்ரயேலரால் எதிர்பார்க்கப்பட்ட மெசியாவென முடிவு செய்தார். அதை உறுதியாக விசுவசித்தார்.

- இயேசுவின் முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தை மெசியாவின் காலம் என்றழைக்கின்றோம். எனவே, இப்பொழுது நாம் மெசியாவின் காலத்தில் இருக்கிறோம். இது நிகழும் காலத்திற்கும், வரப்போகும் காலத்திற்கும் இடைப்பட்ட காலம். இக்காலத்தில் மெசியாவாகிய இயேசு, தம் மறை உடலாகிய திருச்சபை வழியாக உலகெங்கும் சிதறி, மறைந்து, ஒளிந்து இருக்கும் தீய சக்திகளைத் தேடிக் கண்டுபிடித்து, அழித்து, முழு உலகையும் படிப்படியாக இறைவனின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருகிறார்.
- திருச்சபையின் பணி வழியாக அனைத்துப் படைப்புகளும் இயேசுவின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட பின், இயேசு விரைவில் மறு (இரண்டாம்) முறை மாட்சியுடன் வந்து, மக்களுக்குத் தீர்ப்பு வழங்கி, தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட முழு உலகையும் ஆட்சிசெய்ய இறைவனிடம் ஒப்படைப்பார். பழைய ஏற்பாட்டில் ''ஆண்டவரின் நாள்'' என அழைக்கப்படும் அந்நாளே புதிய ஏற்பாட்டில் ''பரூசியா'', ஆண்டவரின் இரண்டாம் வருகையின் நாள் என அழைக்கப்படுகிறது.
- அந்த நாள் பயங்கரமான நாள். இயேசு நீதி வழங்க மறுமுறை வரும்போது சாதகமான தீர்ப்பு பெறுவதற்கு வழி, நாம் இப்பொழுது அவரில் விசுவாசம் கொள்ளவேண்டும். பவுல் இயேசுவின் இரண்டாம் வருகையை மக்களின் ஒழுக்க வாழ்வை ஊக்குவிக்கும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துகிறார். இதுவே, புனித பவுலின் இறையியலின், இறைபணியின் அடித்தளமாகவிருந்தது.
- பவுல் தம் பணியின் ஆரம்ப காலத்தில் தெசலோனிக்காவில் பணியாற்றியபொழுது, இதையே தெசலோனிக்கர்களுக்கு எடுத்து விளக்கியிருந்தார். அக்கருத்துக்களையே அவர் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் காண்கிறோம். ''கட்டளை பிறக்க, தலைமை வானதூதரின் குரல் ஒலிக்க, கடவுளுடைய எக்காளம் முழங்க, ஆண்டவர் வானினின்று இறங்கி வருவார்'' (1தெச. 4:16).
- தெசலோனிக்காவில் பணியாற்றியவேளை இயேசுவின் இரண்டாம் வருகை உடனடியாக இடம்பெறுமென்றும், அதன்போது உயிருடன் இருக்கப் போகிறவர்களுடன் பவுல் தன்னையும் சேர்த்துக் கொள்கிறார் (1தெச. 4:15). இயேசுவின் இரண்டாம் வருகை தாமதிக்கவே, நான்கு வருடங்களுக்குப் பின் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் திருமுகத்தில் அந்நாளில் இறந்தவர்களிடமிருந்து உயிர்த்தெழுபவர்களில் தானும் ஒருவராயிருப்பாரெனக் கூறுகிறார் (1கொரி. 6:14).
- இயேசு இரண்டாம் முறை மகிமையுடன் வரும்பொழுது அவர் செய்யப்போகின்ற முதல் வேலை தம்மில் நம்பிக்கை கொண்டு இறந்தவர்களை உயிர்ப்பிப்பதே என்கிறார் பவுல். பின்னர் உயிரோடு எஞ்சியிருப்பவர்களும் அவர்களோடு மேகங்களில் எடுத்துக்கொண்டு போகப்பட்டு, ஆண்டவரை எதிர்கொண்டு, அவரோடு இருப்பர்.
- உத்தானத்தின்போது இறந்தவர் மாற்றுரு அதாவது, ஆவிக்குரிய உடல் பெறுவர். இங்கு நாம் அக்காலத்தைய யூதர் கொண்டிருந்த கருத்திலிருந்து வளர்ச்சியைக் காண்கிறோம்.
- தொடர்ந்து கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தில் இன்னும் வளர்ச்சியைக் காண்கிறோம். இங்கு இறை ஊழியர்களில் ஏற்கனவே உத்தானம் செயல்படுவதாகவும், மனிதனின் உள்ளார்ந்த இயல்பு புதுப்பிக்கப்படும்போது இப்பொழுதே ஆவிக்குரிய உடல் உருவாகுவதாகவும் கூறுகிறார். மேலும், உடல் இறந்தவுடன், உடனடியாக விண்ணக வீடு எமக்குக் கிடைக்குமென்கிறார் (2கொரி. 5:2-10).
- உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் பவுல், திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவின் மரணத்தில் பங்கெடுத்த நாம் இப்பொழுதே கிறிஸ்துவின் உத்தான வாழ்விலும் பங்கெடுப்பதாகக் கூறுகிறார் (உரோ. 6:3; 8:17, 19).
- இயேசு நிச்சயமாக இரண்டாம் முறை வருவார். ஆனால், அந்நாள் திடீரென, திருடனைப் போல், கருவுற்றிருப்பவர்களுக்குப் பிரசவ வேதனை வருவதுபோல், எவரும் எதிர்பாராத வேளையில் வரும். இயேசுவே, ''அந்த நாள் எப்பொழுது வருமென எந்தவொரு மனிதனும் அறியான், தனக்கும் தெரியாது. இறைத் தந்தை மட்டுமே அறிவார்'' எனக் கூறியிருக்கிறார் (மாற்கு 13:32).

- அந்த நாள் ஆண்டவர் முழு மனுக்குலத்துக்கும் தீர்ப்பு வழங்க வரும் நாள். எனினும், கிறிஸ்தவர்கள் அதற்குப் பயப்படுவதற்கு, எதிர்பாராமல் அந்த நாளில் சிக்கிக் கொள்வதற்கு காரணமே இல்லை. இருளில் வாழ்பவன், தீய செயல்களைச் செய்பவனே. ஆயத்தமில்லாத வேளையில் ஆண்டவர் வந்தால் சிக்கி மாட்டிக்கொள்வான். ஆனால், ஒளியில் வாழும் கிறிஸ்தவனுக்கு, அந்நாள் எப்போது வந்தாலும் ஒன்றுமில்லை. ''கிறிஸ்துவோடு இணைந்திருப்போருக்கு இனித் தண்டனைத் தீர்ப்பே கிடையாது'' (உரோ. 8:1).
- இறுதியாக பவுல் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன் உலகில் சில அடையாளங்கள் இடம்பெறுமெனக் கூறுகிறார். (2தெச. 2:3-12).
- ஆகவே, சாத்தானின் தீய சக்திகள் இன்னமும் முழுமையாக அழிக்கப்படாமல் இருப்பதனால், தீய சக்திகள் மத்தியில் கிறிஸ்தவன் விழிப்போடும், அறிவுத் தெளிவோடும் வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால், அவன் எந்நேரமும் அந்நாளைச் சந்திக்க ஆயத்தமாயிருப்பான்.

**6.1.3.4. குடும்ப வாழ்வு** (1கொரி. 7:1-16; எபே. 5:22-30; கலா. 3:28)

- கிறிஸ்தவ குடும்பமே திருச்சபையின் உயிர்நாடி. பல கிறிஸ்தவ குடும்பங்களால் கட்டியெழுப்பப்பட்ட கடவுளின் பெரிய குடும்பமே திருச்சபை. கிறிஸ்தவ குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை. எனவே, கிறிஸ்தவ குடும்ப வாழ்வுக்கும், திருச்சபையின் வாழ்வுக்குமிடையே நெருங்கிய உறவு, தொடர்பு உண்டு.
- புனித பவுல் கிறிஸ்தவ குடும்ப வாழ்வுபற்றிக் கொண்டிருந்த கருத்தில் நாம் ஒருவித வளர்ச்சியைக் காண்கிறோம். முதல் எழுதிய திருமுகங்களில் (1கொரி) திருமணம்பற்றி ஒரு எதிர்மறையான, குறைவான மனப்பான்மை காணப்படுகிறது. தன்னைப்போல் எல்லோரும் திருமணம் செய்யாமலிருப்பதே நல்லதெனக் கூறுகிறார்.
- கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் புனித பவுல் திருமணம், குடும்ப வாழ்வுபற்றிக் கூறுவதை நாம் சரியாக விளங்குவதற்கு கொரிந்திய மக்கள் வாழ்ந்த சூழலையும், அவர் எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் நன்கு அறிந்திருக்கவேண்டும். அக்காலத்தில் வாணிப நகரமான கொரிந்து பரத்தமை, விபசாரம், சிற்றின்ப கேளிக்கைகளுக்கு பெயர்போன இடமாக இருந்தது. பாவத்துக்கு ஏதுவான இடங்களும், பாவச் சோதனைகளும் மலிந்திருந்தன. மேலும், பவுல் மெசியாவின் காலம் விரைவில் முடிவுக்கு வருமெனவும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை விரைவில் வருமென்றும் காத்திருந்ததையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.
- மேலும், சில கொரிந்தியரின் கருத்துப்படி, உடல் தீயது. ஆகவே, அதை நாம் அடக்கி ஆளவேண்டும், அழிக்க வேண்டும். முடியாவிடின் அதற்கு இயல்பாகவுள்ள சகல ஆசைகளையும், நாட்டங்களையும், உணர்வுகளையும் நாம் அடக்க வேண்டும். ஆகவே, ஒருவன் முழுமையான கிறிஸ்தனாக வாழ விரும்பினால், அவன் உடல் சம்பந்தமான விடயங்களை முழுமையாக விலக்கி, திருமணம் செய்யாமலிருக்க வேண்டும்.
- பவுலின் பதில் செயல்முறையானதொன்றாகத் தெரிகிறது. திருமணம் கணவன் - மனைவி இறைவன்மேல் கொண்டிருக்க வேண்டிய அக்கறையைக் குறைக்கிறது. எனவே, எல்லோரும் திருமணம் செய்யாமலிருப்பதே நல்லதெனக் கூறுகிறார். ஆனால், அதற்கு கடவுளின் விசேட அருட்கொடை வேண்டும். எல்லோருக்கும் அக்கொடை கிடைப்பது இல்லை. எனினும், கொரிந்திய சூழலின் நிமித்தமும், மனிதப் பலவீனத்தின் நிமித்தமும் திருமணம் செய்வது தன்னடக்கமில்லாத சிலருக்கு நல்லது எனக் கூறுகிறார் (எபே. 7:1, 6-7).

- ஒவ்வொருவரும் தத்தம் நிலையை, நாட்டத்தை, பலவீனத்தை அறிந்து செயல்பட வேண்டுமென்கிறார். பவுலின் இக்கூற்று காமப் பாவத்திலிருந்து தப்புவதற்காகவே அவர் திருமணத்தை அனுமதிப்பது போலத் தெரிகிறது. பின்பு அவர் மணமாகாதவர்களுக்கும், கைம்பெண்களுக்கும் வழங்கும் ஆலோசனையிலும் இக்கருத்தே காணக்கிடக்கிறது (எபே. 7: 8-9). ஆகவே, இங்கு பவுல் திருமணத்தைப் பற்றி ஒரு எதிர்மறையான, குறைந்த மனப்பான்மை உடையவராகக் காணப்படுகிறார்.
- தொடர்ந்து பவுல் திருமணத்தின் இயல்பு, கடமைகள், உரிமைகள் பற்றிப் பேசுகிறார். திருமணம் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும் ஒரு கூட்டு ஒப்பந்தம், உடன்படிக்கை. கணவனாவது, மனைவியாவது ஒரு தலைப்பட்சமாக, தன்னிச்சை யாகச் செயல்பட முடியாது. கூட்டு ஆலோசனையின்படி, கூட்டுச் சம்மதத்தின்படியே ஒழுக வேண்டும். கணவனும் மனைவியும் ஒருவரொருவருடனேயே வாழவேண்டும்.
- கணவன் மனைவியை தன் உடல் இச்சைகளைத் திருப்தியாக்கும் கருவியாகவோ, மனைவி கணவனை தன் உடல் இச்சைகளைத் திருப்தி செய்யும் கருவியாகவோ கணிக்கவோ, பயன்படுத்தவோ கூடாது. கணவனின் உடல் மனைவிக்கே சொந்தம். மனைவியின் உடல் கணவனுக்கே சொந்தம்.
- திருமண உறவில் ஒருவர் மற்றவருடைய உரிமைகளை மதித்து நடக்க வேண்டும். ஒருவர் மற்றவருடைய திருமண உரிமையை மறுக்க முடியாது. திருமண உறவிலே, கணவனும் மனைவியும், உடல் ரீதியிலும் சரி, ஆன்மீக ரீதியிலும் சரி, தம் ஆசைகளின் முழு நிறைவை, திருப்தியைக் காணவேண்டும்.
- இறைவேண்டுதலுக்காக, கூட்டுச் சம்மதத்துடன், இருவரும் சில காலத்துக்கு பிரிந்து இருக்கலாம். ஆனால் உணர்ச்சிகளை அடக்க முடியாத போது, சாத்தானின் சோதனைக்கு ஆளாகாமல், இருவரும் விரைவில் மீண்டும் கூடிவாழவேண்டும்.
- திருமணமானவர்களுக்கு புனித பவுல் கொடுக்கும் அறிவுரையில் கணவனும் மனைவி யும் பிரிந்து வாழக் கூடாதெனக் கூறி, அது ஆண்டவரின் கட்டளையென்கிறார். அப்படிப் பிரிந்து வாழவேண்டி ஏற்பட்டாலும், மறு திருமணம் செய்யக்கூடாது. ஆனால், விரைவில் இருவரும் ஒன்று சேரவேண்டும், ஒப்புரவாக வேண்டும்.
- அடுத்து, விசுவாசிகளுக்கும், விசுவாசிகளல்லாதவருக்கும் இடையே செய்துகொண்ட திருமணத்தைப் பற்றி அக்காலத்தில் கொரிந்தில் தவறான கருத்து இருந்தது. திருமணம் செய்த விசுவாசிகளும், அவிசுவாசிகளும் கூடிவாழக் கூடாது, மாறாக அவிசுவாசியை திருப்பி அனுப்பிவிட வேண்டும். அதுமட்டுமல்ல, திருமணமான அவிசுவாச தம்பதிகளில், ஒருவர் விசுவாசம் கொண்டால், விசுவசியாதவரை அனுப்பிவிடவேண்டுமென்ற கருத்தும் இருந்தது.
- அதற்கு எதிராக, பவுல் விசுவாசிகளுக்கும், விசுவாசிகளல்லாதவருக்கும் இடையே செய்துகொண்ட திருமணத்தைப் பற்றிய தன்னுடைய சொந்தக் கருத்துக்களைக் கூறுகிறார். விசுவாசியாயில்லாத கணவனோ, மனைவியோ விசுவாசியான மனைவியோடோ, கணவனோடோ வாழ உடன்பட்டால், ஒருவரையொருவர் விலக்கி விடாமல் இருவரும் கூடி வாழவேண்டும். ஏனெனில், விசுவாசமுள்ளவரின் விசுவாசத்தால் விசுவாசமில்லாதவர் தூயவராகிறாரெனக் கூறுகிறார்.
- ஆனால், விசுவசியாதவர் பிரிந்து வாழ விரும்பினால் அவ்வாறு செய்ய முடியும். அவ்வேளையில், விசுவாசியான கணவனோ மனைவியோ எவ்வித கட்டுப்பாடுமின்றி, வேறு திருமணம் செய்து கொள்ளலாம். இதைப் பவுல் அளிக்கும் விதிவிலக்கு என்பர்.
- எனினும், அவர்கள் கூடி வாழ்வதையே பவுல் விரும்புகிறார். ஏனெனில் விசுவாசியான தம்பதி விசுவசியாத தம்பதியை மீட்படையச் செய்யலாம் என்பது அவர் கருத்து.
- புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் திருமணம் பற்றிய இன்னும் சில கருத்துக்களைத் தருகிறார் (எபே. 5:22-30). இங்கு திருமணம் பற்றிய பவுலின் உண்மையான முதிர்ச்சியான கருத்துக்களைக் காண்கிறோம்.

- தம்பதிகளிடையிலான உறவு அதி உன்னதமானது, புனிதமானது. பவுல் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள உறவை கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே உள்ள உறவுக்கு ஒப்பிடுகிறார். இவ் உறவுக்கு அடிப்படையாக அன்பு உள்ளது.
- பவுல் கணவன் மனைவிமேல் கொண்டிருக்க வேண்டிய அன்பைபற்றிய தம் கருத்தைத் தருகிறார். அது ஒரு தியாக அன்பு. கிறிஸ்து திருச்சபையை அன்பு செய்ததுபோல், கணவனும் தன் மனைவியை அன்பு செய்ய வேண்டும். அது ஒருபோதும் சுய நலந்தேடும் அன்பாக இருக்கக் கூடாது.
- கிறிஸ்து திருச்சபை தனக்கு ஏதாவது நன்மை செய்யுமென எதிர்பார்த்து, திருச்சபையை அன்பு செய்யவில்லை. மாறாக, தான் திருச்சபைக்கு ஏதாவது நன்மை செய்யலாமென்று கருதியே அதனை அன்பு செய்தார்.
- கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பதுபோல், கணவனும் மனைவிக்கு தலையாயிருக்கிறார். இது அதிகாரம் செலுத்தும் தலைமைத்துவம் அல்ல: ஆனால், அன்பு செய்யும் தலைமைத்துவம்.
- மேலும், திருச்சபை ஆண்டவருக்குப் பணிந்திருப்பது போல் மனைவியரும் தங்கள் கணவருக்குப் பணிந்திருத்தல் வேண்டுமென்கிறார் பவுல். இப்பணிவும் பயத்தினால் அல்ல: மாறாக, அது அன்பிலிருந்து உருவாகும் பணிவாக இருக்கவேண்டும். கிறிஸ்து திருச்சபைமேல் கொண்டிருந்த அன்பு, திருச்சபையைத் தூய்மையாக்கி, இறைவனுக்கு சொந்தமாக்கியது. கணவனின் அன்பும் மனைவியைத் தூய்மையாக்கும், அவரை இன்னும் நல்லவராக்கும் அன்பாக இருக்க வேண்டும்.
- கணவன் மனைவிமேல் கொள்ளும் அன்பு ஒருபோதும் முறிக்க முடியாத அன்பு. இவ் அன்புக்காக கணவன் தன் தாய் தந்தையை விட்டு, தன் மனைவியோடு கூடியிருப்பான். இருவரும் ஒரே உடலாயிருப்பார்கள். ஒரு உடலின் உறுப்புக்கள்போல இருவரும் இணைந்து இருப்பார்கள்.
- கிறிஸ்துவில் வாழும் அவர்களுக்குள் ஆண் - பெண் என்ற வித்தியாசம், வேறுபாடு இருக்கக்கூடாது, அவர்கள் இருவரும் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்கிறார்கள் (கலா. 3:28). இருவரும் இறைவன் சாயலில் படைக்கப்பட்டவர்கள். எனவே, இருவரும் இறைவன் முன்னிலையில் சமமாக இருக்கிறார்கள்.
- கிறிஸ்தவ குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே இருக்க வேண்டிய உறவு பற்றிப் பேசிய பவுல், இறுதியில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே இருக்கவேண்டிய உறவுபற்றியும் பேசுகிறார். ''பிள்ளைகளே பெற்றோருக்குக் கீழ்படியுங்கள்... பெற்றோரே உங்கள் பிள்ளைகளை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி, வளர்த்து வாருங்கள்'' (எபே.6:1-4).

### 6.1.3.5. சகோதரத்துவமும் ஒற்றுமையும் (1கொரி. 8:9-13, 13:38; 2கொரி. 8:9)

- பவுல் குட்டித் திருச்சபையாகிய கிறிஸ்தவ குடும்பத்தில், கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகளிடையே இருக்க வேண்டிய அன்பு, உறவு, ஒற்றுமை பற்றிப் பேசியபின், கடவுளின் பெரிய குடும்பமாகிய திருச்சபையில் இருக்க வேண்டிய அன்புறவு, சகோதரத்துவம், ஒற்றுமை பற்றிப் படிப்பிக்கின்றார்.
- பவுல் தம் தமஸ்கு பயணத்தின்போது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையிலான மறைபொருளை, ஒப்புமையின் வெளிப்பாட்டினைக் கண்டு உணர்ந்தார். ''சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?..... நீ துன்புறுத்தும் இயேசு நானே.'' அந்த அனுபவத்தினால் கிளர்ந்தெழுந்த சிந்தனை வளர்ந்து, பின்பு அவர் எழுதிய திருமுகங்கள் எங்கும் பரவலாகக் காணக்கிடக்கிறது.
- அக்காலத்தில் வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளில், குறிப்பாக கொரிந்திய சபையில் காணப்பட்ட பிளவுகள், பிரிவுகளைச் சந்தர்ப்பங்களாகப் பயன்படுத்தி, பவுல் திருச்சபை பற்றிய தம் ஆழ்ந்த கருத்துக்களை நமக்குத் தெளிவாகத் தருகிறார்.
- தூய ஆவியின் அருளினால் இயேசுக் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் கொண்டு வாழ்பவர்கள் கிறிஸ்துவுடனும், ஒருவரொருவருடனும் ஒன்றிக்கின்றனர். திருமுழுக்கு வழியாக கிறிஸ்துவின் மீட்புச் செயலில் பங்குகொண்டு, அவரில் வாழ்கின்றனர்.

- புனித பவுல் திருச்சபையின் உறுப்பினர்களுக்கிடையில் காணப்படும் ஒற்றுமையை ஒரு மனித உடலின் உறுப்புகளுக்குள்ளே காணப்படும் ஒற்றுமையை ஒத்ததாகக் காண்கிறார். ''நீங்கள் கிறிஸ்துவின் உடலாக இருக்கிறீர்கள்.''
- கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் ஒரே ஆவியானவரே உயிரளிக்கிறார். அவர்கள் எல்லோரும் ஒரே எதிர்நோக்கைக் கொண்டவர்கள். அவர்கள் எல்லோரும் ஒரே நம்பிக்கையுடன்தான் வாழ்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஒரே ஆண்டவர். எல்லோரும் ஒரே விசுவாசத்திலும், ஒரே திருமுழுக்கிலும் பங்குகொண்டு, ஒரே கடவுளை தம் ஒரே தந்தையாகக் கொண்டிருக்கிறார்கள். அக்கடவுளே எல்லோருக்குள்ளும் இருந்து, எல்லோர் மூலமாகவும் செயலாற்றுகிறார். எனவே, கிறிஸ்தவர்கள் எல்லோரும் ஒன்றாக ஒரு மனத்துடன் வாழ்ந்து, அந்த ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும்.
- பவுல் கிறிஸ்தவர்களை தன் சகோதரர் சகோதரிகளென அழைத்து, தானும், அவர்கள் அனைவரும் ஒரே தந்தையின், கடவுளின் பிள்ளைகளென்பதை உணர்த்துகிறார். எனவே, கிறிஸ்தவ சமூகத்தில் பிளவுகள், பிரிவுகள் ஏற்படுவது தவறென்பதை உணர்த்தி, அவர்கள் சகோதர அன்பில் ஒற்றுமையாக வாழவேண்டுமெனக் கூறுகிறார்.
- ஒருவன் கிறிஸ்தவ சமூகத்தினுள் நுழையும்போது அச்சமூகத்துக்குரிய வாழ்வை அவன் வாழவேண்டும். (எபே. 4:2-3). இந்த ஒற்றுமைக்கு, ஒருமைப்பாட்டிற்கு அத்திவாரம், அடிப்படைக் காரணம் அவர்கள் எல்லோருக்கும் ஒரே எதிர்நோக்கு, ஒரே உடல், ஒரே ஆவி, ஒரே ஆண்டவர், ஒரே நம்பிக்கை, ஒரே திருமுழுக்கு, ஒரே கடவுள், ஒரே தந்தை.
- கிறிஸ்தவம் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே ஒரு புதிய உறவை அறிமுகம் செய்திருக்கிறது. இப்புதிய உறவில் சாதி, இனம், குலம், ஆண், பெண் போன்ற சகல புற வேற்றுமைகளும் அழிக்கப்படுகின்றன. (1கொரி. 12:13). கிறிஸ்துவில் வாழ்பவருக்குள் இவ்வேற்றுமைகள் கிடையாது. இப்புதிய உறவு சகல சரீர, இரத்த, குடும்ப, சமூக உறவுகளையும் தாண்டிச் செல்கிறது (கலா. 3:28, 29).
- இக்கருத்தை நாம் புனித பவுல் பிலமோனுக்கு எழுதிய திருமுகத்தில் காண்கிறோம். பவுல் ஒரு அடிமையான ஒனேசிமை, ''எனக்குச் சிறையிலிருந்தபோது பிள்ளையான ஒனேசிம்'' என அன்புடன் அழைக்கிறார். மேலும், பவுல் ஒனேசிமின் எசமானாகிய பிலமோனை அவர் அடிமையை அவருடைய அன்புச் சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்படி கூறுகிறார் (பில. 1:16). பிலமோன் பவுலை ஏற்றுக் கொள்வதுபோல், ஒனொசிமையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கிறார் (பில. 1: 17).
- இறுதியாக புனித பவுல், எல்லா உறுப்புகளும் தசைநார்களால் இறுக்கி இணைக்கப் பட்டிருந்தால்தான், ஒரு உடல் தேக சுகத்துடன் இருக்க முடியும், அதுபோல், திருச்சபையில் கிறிஸ்து அதன் தலையாகவும், ஒவ்வொரு உறுப்பினரும் அவரின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குபவராகவும் இருக்கின்றபோதுதான் திருச்சபையும் ஆரோக்கியத்துடன் இருக்கும். இவ்வாறு ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கே குறிக்கப்பட்ட பணியைப் பிரமாணிக்கத்துடன் செய்வதால், திருச்சபை உறுதியுடன் வளர்ச்சியடையும். இவ்வாறு புனித பவுல் திருச்சபையில் இருக்கவேண்டிய கூட்டுறவையும், ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தி, அதைக் கட்டிக் காத்து வளர்க்க வேண்டிய எம் பொறுப்பையும் எடுத்துக் கூறுகிறார்.

### 6.1.3.6. தூய ஆவியின் கனிகளும் கொடைகளும (1கொரி. 12, 14:1-18)

- ''ஆவி''யைக் குறிக்க பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் ''நெயூமா''. பழைய ஏற்பாட்டில் இதற்கான எபிரேயச் சொல் ''ரூஆக்''. இது ஆவியை மட்டுமல்ல, காற்றையும் குறிக்கும். பழைய ஏற்பாட்டில் இச்சொல், மனித சக்திக்கு, ஆற்றலுக்கு அப்பாற்பட்ட, ஒரு தெய்வீக சக்தியை, வலிமையை, ஆற்றலைக் குறித்து நிற்கிறது.

- இது புது வாழ்வின் ஆற்றல் மிகுந்த அடிப்படை சக்தி. இறைவனின் வாழ்வளிக்கும் வல்லமை. கிறிஸ்துவின் மீட்புச் செயலினால் இப்பொழுது மனிதர், பாவ நாட்டமுள்ள மனித இயல்பினால் அல்ல, தூய ஆவியினால் ஆட்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு அப்பாற்பட்ட சக்தியை, ஆற்றலைக் கொண்டிருக்கிறார்கள்.
- தூய ஆவி நமக்கு அளிக்கும் விசேட வரங்கள் ''அருட்கொடைகள்'' அல்லது ''அருங்கொடைகள்'' அழைக்கப்படுகின்றன. அது ''காரிஸ்மா'' எனற கிரேக்க சொல்லின் தமிழாக்கம். இதற்கு இறைவன் கருணையோடு வழங்கும் ''இலவசக் கொடைகள்'' என்பது பொருள். இதனை ''அருள்'' என்ற சொல்லாலும் குறிக்கலாம்.
- இறைவன் நமக்களிக்கும் கொடைகளுள் தலைசிறந்தது தூய ஆவியே. அத் தூய ஆவியானவர் நமது உள்ளங்களில் உறைகிறார். தாம் எமக்கு விரும்பி அளிக்கும் அருட்கொடைகளின் வழியாக தம்மையே எமக்கு வெளிப்படுத்துகின்றார்.
- தொடக்க காலத் திருச்சபையில் இக்கொடைகள் நிறைந்து காணப்பட்டன. புனித பவுல் தம் திருமுகங்களில் தூய ஆவியின் அருட்கொடைகளின் தன்மை, பண்பு, பயன் பற்றித் தெளிவாகப் பேசுகிறார் (1கொரி.12).
- தூய ஆவியே நாம் ''இயேசுவே ஆண்டவர்'' என அறிக்கையிடுவதற்கு எமக்கு ஆற்றல் அளிப்பவர் (1கொரி.12). அதாவது எமக்கு இயேசுவில் விசுவாசத்தை அளிப்பவர் அவரே. இதுவே தூய ஆவி நமக்கு அளிக்கும் முதற்கொடை.
- இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொள்பவர்களுக்கு, அந்த ஒரே ஆவியானவர் தொடர்ந்து அளிக்கும் ஏனைய பல கொடைகள் உள்ளன. இக்கொடைகளை அவர் அளிப்பதன் நோக்கத்தை பவுல் வலியுறுத்துகிறார். ''பொது நன்மைக்காகவே தூய ஆவியானவரின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது'' (1கொரி. 12:7). இக் கொடைகளெல்லாம் எங்கள் சொந்த, தனிப்பட்ட நன்மைகளுக்காக அல்ல: மாறாக, பொது நன்மைக்காக, கிறிஸ்தவ சமுதாயத்தின், திருச்சபையின் நன்மைக்காகவே அளிக்கப்படுகின்றன.
- எல்லாருக்கும் எல்லா கொடைகளும் அருளப்படுவதில்லை. கிறிஸ்தவ சமுதாயத்தில் வெவ்வேறு பணியாற்றும் வெவ்வேறு நபருக்கு, வெவ்வேறு கொடைகள் பகிர்ந்து அருளப்படுகின்றன. இவையெல்லாம் கடவுளிடமிருந்து வருவதால் அவையெல்லாம் கடவுளின் பணிக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
- புனித பவுல் முதலில் ஞானம் நிறைந்த சொல்வளத்தையும், அறிவுசெறிந்த சொல்வளத்தையும் குறிப்பிடுகிறார். இவை இரண்டும் ஒன்றுபோல் தோன்றினாலும், **''ஞானம்''** இறைவனுடன் தொடர்புகொள்வதால் பெறப்படும் அவர் பற்றிய ஆழ்ந்த உண்மைகளை அறியும் ஆற்றலையும், **''அறிவு''** அந்த ஞானத்தை நம் அன்றாட வாழ்க்கையில் செயல்முறையில் பயன்படுத்தும் ஆற்றலையும் குறிக்கிறது.
- அடுத்து, பவுல் இந்த ஞானத்தையும், அறிவையும் ஏற்றுக்கொள்ளும் **விசுவாசத்தைக்** குறிப்பிடுகிறார். முதலில் நாம் இயேசுவைக் கடவுளாக ஏற்றுக் கொள்ளும் விசுவாசம் பற்றிப் பார்த்தோம். அதை நாம் ''தேவ புண்ணியம்'' என அழைக்கிறோம். இங்கு நாம் ஞானத்தையும், அறிவையும் ஏற்றுக்கொள்ளும் விசுவாசத்தைப்பற்றிப் பேசுகிறோம். இங்கு பவுல் உள்ளத்தால் அவற்றை ஏற்றுக் கொள்வதைப் பற்றி மட்டுமல்ல, அவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலையும், அவற்றின்படி வாழ்வதையும் (பிரமாணிக்கம்) குறிப்பிடுகிறார்.
- அடுத்து, பவுல் தூய ஆவியின் இன்னொரு கொடையாகிய **பிணி தீர்க்கும்**, நோயாளிகளைக் குணப்படுத்தும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார். இது ஆதித் திருச்சபையில் பரவலாகக் காணப்பட்ட அருட்கொடைகளில் ஒன்றாகும்.
- பின்பு பவுல் வல்லசெயல் செய்யும் ஆற்றலைக் குறிப்பிடுகிறார். இது **பேயோட்டும் ஆற்றலைக்** குறிக்கிறது. அக்காலத்தில் எல்லா நோய்களும் அசுத்த அரூபியின் வேலையாகக் கருதப்பட்டன. எனவே, அசுத்த அரூபிகளை ஓட்டுவது திருச்சபையின் பணிகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. இன்றும் இப்பணியைக் காண்கிறோம்.

- **தொடர்ந்து, பவுல் இறைவாக்கு உரைக்கும் ஆற்றலையும், ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றலையும், பரவசப் பேச்சுப் பேசும் ஆற்றலையும், அதனை விளக்கும் ஆற்றலையும் குறிப்பிடுகிறார்.**
- இன்று நாம் தூய ஆவியின் கொடைகளாக **ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தேவபயமெனக்** கூறுகிறோம். தனிக் கிறிஸ்தவனின் வாழ்வும், திருச் சபையின் பொதுப் பணிகள் அனைத்தும் இந்த ஆவியின் அருட்கொடைகளையே சார்ந்து இருக்கின்றன.
- சில அருட்கொடைகள் **திருப்பணிகளுடன் தொடர்பு உடையவை**. இப்பணிகளில் நாம் அப்போஸ்தலத்துவப் பணி, இறைவாக்குரைக்கும் பணி, போதிக்கும் பணி, நற்செய்தி விளக்கப்பணி, மேய்ப்புப்பணி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- **மற்றும் சில அருட்கொடைகள் ஊழியம் புரிதல், போதித்தல், ஊக்கமூட்டுதல், இரக்கச் செயல்கள் போன்ற திருச்சபையின் நலனுக்குத் துணை நிற்கின்றன. ஞானம் செறிந்த பேச்சு, அறிவு செறிந்த பேச்சு, விசுவாசம், நோய்களைக் குணமாக்கும் ஆற்றல், புதுமை செய்யும் ஆற்றல், பல்வகைப் பரவசப் பேச்சு, ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறன் போன்ற அருட்கொடைகள் இவ்வகையைச் சாரும்.**
- இறுதியாகப் புனித பவுல், தூய ஆவியானவரின் கொடைகளுள் **அதிசிறந்த கொடையாகிய அன்பு** பற்றிப் பேசுகிறார். எல்லாக் கொடைகளுக்கும் அடிப்படையாக இருப்பது அன்பு. அன்பு என்ற கொடையில்லாமல், மற்றக் கொடைகளெல்லாம் வீணிலும் வீண் என்கிறார். ‘‘ஒலிக்கும் வெண்கலமும், ஓசையிடும் தாளமும்.’’
- இந்த அன்பு என்ற ஆவியின் கொடையின் பதினைந்து குணாதிசயங்களைப் பவுல் குறிப்பிடுகிறார்: பொறுமை, நன்மை செய்தல், பொறாமையின்மை, தற்புகழ்ச்சியின்மை, இறுமாப்பின்மை, இழிவானது செய்யாமை, தன்னலமின்மை, எரிச்சலின்மை, தீங்கு நினையாமை, தீவினையில் மகிழாமை, பொறுமை, விசுவாசம், நம்பிக்கை, மன உறுதி. இவற்றில் சில அன்பின் எதிர்நிலைப் பண்புகளாகவும், சில அன்பின் நேர்நிலைப் பண்புகளாகவும் உள்ளன.
- **புனித பவுல், ஊனியல்பின் செயல்களுக்கு எதிராக, தூய ஆவியின் கனிகளென: அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறார்** (கலா. 5:22)**.**
- **அன்புக்குப்** பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல் ‘‘அகபே’’. இது எப்பிரதிபலனையும் எதிர்பாராமல், மற்றவர்கள் என்ன தீங்குதான் எமக்குச் செய்தாலும், மற்றவரின் நன்மையையே விரும்பும் பண்பைக் குறிக்கிறது. இது ஒரு உள்ளத்தின் உணர்வு மட்டுமல்ல, இதயத்தின் உணர்வுமாகும்.
- **மகிழ்ச்சியெனக்** குறிப்பிடப்படுவது இவ்வுலக பொருட்களால் அல்லது வெற்றியால் ஏற்படும் மகிழ்ச்சியல்ல, மாறாக மத சம்பந்தந்தமான, கடவுளிடமிருந்து வரும் ஒரு மகிழ்ச்சியாகும்.
- **அமைதியென்பது** பிரச்சினைகள் இல்லாததால் கிடைக்கும் அமைதி அல்ல, நாம் கடவுள் பராமரிப்பில் வாழ்கிறோம் என்ற சிந்தனையிலிருந்து கிடைக்கும் அமைதியைக் குறிக்கிறது.
- **பொறுமை** என்பது எவர் எத்தீமை செய்திடினும், பழிவாங்கும் எண்ணமின்றி, கடவுள் நம்மை மன்னிப்பதுபோல் அவர்களை மன்னித்து, பொறுமையுடன் இருப்பதைக் குறிக்கிறது.
- **பரிவு, நன்னயம்** என்பன கிறிஸ்து பாவிகள் மட்டில் காட்டிய இரக்கம், நன்மைத் தனத்தைக் குறிக்கின்றன.
- **நம்பிக்கையென்பது** மற்றவர்கள் எம்மீது நம்பிக்கை கொள்ளக்கூடிய முறையில் வாழ்வது அல்லது பிரமாணிக்கமாயிருப்பது.
- **கனிவு** என்பது சுய மறுதலிப்பை, மற்றவர்கள்மேல் கரிசனை கொண்டு நடப்பதைக் குறிக்கிறது.

- இறுதியாக, **தன்னடக்கம்** என்பது தன் உணர்வுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும், மற்றவர்களுக்குப் பணியாளர்போல் இருக்கும் ஆற்றலைக் குறிக்கிறது.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு:**

- தொடக்கத் திருச்சபையின் வரலாறு பற்றிக் கற்கக்கூடிய நூல்களையும் தகவல்களையும் தேடி அறிந்து அவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- திருத்தூதர்களின் கால முடிவில் திருச்சபை பரவியிருந்த இடங்களை வரைபடத்தில் குறித்துக் காட்டி காட்சிப்படுத்தி அவற்றின் படிமுறை வளர்ச்சியை விளக்குங்கள்.
- தொடக்கத் திருச்சபை மிக விரைவாகப் பரவுவதற்கு ஏதுவாக இருந்த காரணிகளையும், அதற்கு முக்கிய பங்களிப்புச் செய்தவர்களின் பணிகளையும் பற்றி தகவல்களைத் திரட்டி சிறு கைந்நூலாக வெளியிடுங்கள்.
- தூய பவுலின் மறைத்தூதுப் பயணங்களை வகைப்படுத்தி, அவர் எதிர்கொண்ட சவால்களையும் வெற்றி கொள்ளக் கையாண்ட உத்திகளையும் அடிப்படையாகக் கொண்டு 'இன்று எமது மறைத்தூதுப்பணி' பற்றி விவாதம் நடாத்துங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**


- M.S. ஜேசுதாஸ் தங்கசாமி, திருச்சபை வரலாறு, நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில்.
- Alan Schreck, The Compact History of the Cathlic Church, St. Paul Press Training School, Mumbai, 2006.
- Ignatius Puthiadam S.J. A Short History of Religious Life, Asian Trading Corporation, Bangalore, India.
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அ.ம.தி. குருமடம், அம்பிட்டியா.
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், பரிசுத்த ஏடுகளைக் கற்றல், அமதி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2002.
- தியாகு, புனித பவுலின் திருமுகங்கள் - I, விவிலிய அறிமுகம், தியான ஆச்சிரமம், சென்னை, 1998.

**தேர்ச்சி 6.0** : பல நூற்றாண்டுகளாக இடம்பெற்ற திருச்சபையின் வளர்ச்சியை இனங்கண்டு, இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்காளிகளாவர்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : திருச்சபையின் தந்தையர்களின் காலத்தில் திருச்சபையின் வளர்ச்சியை ஆராய்வர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றல் பேறுகள்** :
- முக்கிய பொதுச்சங்கங்கள் பற்றிக் கற்பர்.
- திருச்சபையின் தந்தையர்கள் பற்றிய விளக்கமொன்றினைப் பெற்றுக்கொள்வர்.
- திருச்சபையின் தந்தையர்களின் வாழ்க்கையைத் தமது வாழ்க்கைக்கு முன்மாதிரியாகக் கொள்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 6.2.1. திருச்சபையின் முக்கிய பொதுச்சங்கங்கள்

**அறிமுகம்**
- உரோமையப் பேரரசினுள் கி.பி. 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடைபெற்ற கலாபனைகள் கொன்சன்ரைன் அரசனின் ஆட்சியோடும் மிலான் அரச சாசனத்தோடும் கி.பி.312-313ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் முடிவுற்றது. இக்காலப்பகுதியில் வெவ்வேறான பேரரசர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த மிகக் கொடிய வழிமுறைகளைக் கையாண்டனர். திருச்சபையின் தந்தையரான தேர்த்தூலியன் தமது நூலில், ''மறைசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் விதையாகும்'' என்று கூறியுள்ளார். திருச்சபை துன்புறுத்தப்பட வேண்டும் என்பது இறைவன் வகுத்த திட்டமாகும் என்பது திருச்சபைத் தந்தையரின் கூற்றாகும்.
- திருச்சபைக்கு ஏற்பட்ட இவ்வாறான வெளியரங்கத் துன்புறுத்தல்களையும் தாக்கங்களையும் விட மிகக் கொடிய தாக்கங்கள் திருச்சபைக்குள்ளேயே ஏற்பட்டதால் திருச்சபை மிகுந்த அசௌகரியத்திற்குள்ளாகியது. குறிப்பாக மறை, ஒழுக்கம், சட்டங்கள் பற்றி ஏற்பட்ட பல சிக்கல்களாகும். விசேட விதமாக மறையைப் பற்றி உருவான தப்பறையான கொள்கைகள் திருச்சபையில் சிக்கல்கள் ஏற்பட அடிப்படைக் காரணமாயிருந்தன.
- அவ்வாறான சந்தர்ப்பங்களில் திருச்சபையின் விசுவாச சத்தியங்களைப் பகிர்ந்தளிப்பதற்கும், தப்பறையான கொள்கைகளிலுள்ள தவறுகளை சுட்டிக் காட்டுவதற்கும் அவற்றைத் தீர்ப்பதற்கும் பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டன. இப்பொதுச்சங்கங்கள் அவை நடைபெற்ற இடங்களின் பெயராலேயே அழைக்கப்பட்டன. உதாரணமாக நிசேயா பொதுச்சங்கத்தை எடுத்துக்காட்டலாம்.
- பொதுச்சங்கங்களைக் கூட்டுவது, அதனை நடாத்துவது, நடாத்துவதற்கு அனுமதிப்பது என்பன திருத்தந்தையின் பணியாகும். திருத்தந்தை அல்லது அவரது பிரதிநிதி பொதுச்சங்கத்தில் கட்டாயம் பங்குகொள்ளுவார். திருத்தந்தையின் அனுமதி இன்றி நடைபெறும் எவ்வித பொதுச்சங்கமும் அங்கீகரிக்கப்படமாட்டாது. இவை ''திருடர்களின் பொதுச்சங்கம்'' என அழைக்கப்படும்.

- இருப்பினும் திருச்சபையின் ஆரம்ப காலங்களில் உரோமைப் பேரரசின் ஆட்சி காரணமாக பொதுச்சங்கத்தை நடாத்தும்போது கூடுதலான அதிகாரம் பேரரசுக்குரியதாக இருந்ததை காணக் கூடியதாகவிருந்தது. உதாரணமாக நிசேயா பொதுச்சங்கம் அப்போதிருந்த கொன்ஸ்ரன்ரைன் பேரரசனால் கூட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- திருச்சபையின் அனைத்து பொதுச்சங்கங்களுக்கும் முன்னோடியாக அமைந்தது கி.பி.49இல் திருத்தூதர்களால் எருசலேமில் நடாத்தப்பட்ட பொதுச்சங்கமாகும் (தி.ப.15:1-11). வரலாறு இதனை திருத்தூதர்களின் கூட்டம் என அறிமுகப்படுத்துகின்றது. திருச்சபையில் சேரும் புறவினத்தார் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டுமா? என்ற வினாவுக்குத் தீர்வு காண்பதற்காகவே இச்சங்கம் கூட்டப்பட்டது.
- அதன்பின் 4ஆம் நூற்றாண்டு வரை திருச்சபை பரவும் பல்வேறு பிரதேசங்களில் ஏற்பட்ட பிரதேச சிக்கல்களை அப்பிரதேசங்களில் திருச்சபை தலைவர்கள் ஒன்று சேர்ந்து தீர்வு காண்பதற்காக பிரதேச மட்டங்களில் பொதுச்சங்கங்கள் நடைபெற்றன. அவை, ஆயரவை (Synods) என அறிமுகப்படுத்தப்படுகின்றன.
- 4ஆம் நூற்றாண்டுவரை திருச்சபைக்கும் ஏற்பட்ட முக்கியமான தப்பறையான கொள்கைகளினால் 150 ஆண்டு காலப்பகுதிக்குள் நான்கு சங்கங்கள் நடைபெற்றுள்ளன. இவை, பொதுச்சங்கங்கள் என அழைக்கப்படுகின்றன. அதற்குக் காரணம் திருச்சபையில் இருந்த அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள ஆயர்கள் இப்பொதுச் சங்கங்களில் பங்கு கொள்ளுவதற்காக அழைக்கப்பட்டமையாகும். மேலும், இவை திருத்தந்தையின் அங்கீகாரத்தோடு நடைபெற்றதோடு தீர்மானங்களை உறுதிப்படுத்துவதற்கு திருத்தந்தையின் அனுமதியும் கிடைத்திருந்தது.
- முதல் பொதுச்சங்கம் கூட்டப்பட்டபோது பேரரசரின் மத்தியஸ்தத்தைக் காணக் கூடியதாயுள்ளது. காலங்காலமாக அற்றுப்போன உரோமைப் பேரரசின் ஒற்றுமையைப் பாதுகாத்துக் கொள்வது, உலக ஆட்சியாளராக திருச்சபையைப் பாதுகாப்பது என்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பேரரசு இப்பொதுச்சங்கத்தைக் கூட்டுவதற்கு முன்னின்று செயற்பட்டது. இதன் மூலம் அவர்கள் அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முயன்றனர் என்பது பலரின் கருத்தாகவிருந்தது.
- ஆரம்ப காலங்களில் நடைபெற்ற பொதுச்சங்கங்கள் நான்கும் கீழைத்தேயங்களிலேயே நடைபெற்றன. ஆரம்ப காலங்களில் திருச்சபை கூடுதலாக கீழைத்தேயங்களில் பரவியதும் பேரரசு தனது புதிய தலைநகரை கொன்ஸ்தாந்திநோபிளில் அமைத்துக் கொண்டதும் திருச்சபை பொதுச்சங்கங்களை கீழைத்தேய நகரங்களில் நடாத்துவதற்கு பிரதான காரணமாக அமைந்தது எனலாம்.
- கி.பி. 325 தொடக்கம் கி.பி. 451 வரையான காலப்பகுதிகளில் நான்கு பொதுச்சங்கங்கள் நடைபெற்றுள்ளன. அவை நான்கும் அப்பொதுச்சங்கங்கள் நடைபெற்ற இடங்களின் பெயரினாலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் பிற்காலங்களிலும் அச்சம்பிரதாயம் பின்பற்றப்பட்டுள்ளது.
- ஆரம்ப காலங்களில் நடைபெற்ற திருச்சங்கங்கள் நான்கும் முறையே கீழே தரப்படுகின்றன.
    1. நிசேயா பொதுச்சங்கம் (கி.பி.325)
    2. கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம் (கி.பி.381)
    3. எபேசு பொதுச்சங்கம் (கி.பி.431)
    4. கல்சிடோன் பொதுச்சங்கம் (கி.பி.451)
- இப்பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டதற்கு ஏதுவான காரணங்களையும் அவற்றை நடாத்துவதற்குரிய பின்னணிகளையும் ஆராய்ந்து பார்ப்பது முக்கியமாகும். பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டதற்குரிய முக்கியமான காரணங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.
    1. கிறிஸ்தவ மறை, விசுவாசம் பற்றிய திருச்சபையின் படிப்பினையை விளக்குதல்.
    2. திருச்சபையின் படிப்பினைகளை அர்ப்பணிப்புடன் வெளிப்படுத்தலும், கற்பித்தலும்.
    3. திருச்சபையின் படிப்பினைகளை காலத்திற்கேற்றவாறு தகுந்த முறையில் சீரமைத்தல்.

- கிறிஸ்துவைப் பற்றி முன்வைக்கப்பட்ட தவறான கருத்துக்களை மறுத்தலும் உண்மையான மறையுண்மைகளைத் எடுத்துக் காட்டுதலும் மேலே குறிப்பிடப்பட்ட சங்கங்களின் பணியாகும்.

### 6.2.1.1. நிசேயா பொதுச்சங்கம் (Council of Nicea) கி.பி.325

**பின்னணி (ஆரிய பேதகம்)**

- இப்பொதுச்சங்கம் கூட்டப்படுவதற்கு முக்கிய பின்னணியாக அமைவது ஆரிய வாதமாகும் (Arianism).
- இதன் ஆரம்ப கர்த்தாவான ஆரியுஸ் என்ற குரு கி.பி.310ஆம் ஆண்டளவில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்தவர். இவரின் பிரதான வாதம் கிறிஸ்து இறைவனின் படைப்பு என்பதாகும். கிறிஸ்துவில் மெய்யான இறைசாயல் இல்லை எனவும், இறைவனின் இறைத்துவத்தை வேறொருவருக்கு அளிக்க முடியாது எனவும் இவர் கூறினார்.
- ஆரியுஸ் இக்கருத்துக்களை மேலும் கொண்டுசென்று மகன் படைப்புக்களில் முதலானவர் என்றும் அவர் தேவதூதர்களை விட உயர்ந்தவர் எனவும் கூறினார். எவ்வாறாயினும் மகன் தந்தையைவிடக் கீழானவர் என்பதை உறுதியாகக் கூறினார் (Subordinationism).
- மேலும், கிறிஸ்து அதிகாரமுள்ள இறைவனுக்கு சமமானவர் அல்ல எனவும், மீட்பரான கிறிஸ்து இறைவனாக முடியாது எனவும் கூறியதோடு கிறிஸ்து இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தும் நடுநிலையானவர் மட்டுமே எனவும் எடுத்துரைத்தார்.
- மேலும், அவர் திரித்துவத்தைப் பற்றியும் தவறான கருத்துக்களை முன்வைத்தார். அவரின் மறை எதிர்ப்புக் கருத்துக்களின்படி திரித்துவம் அறிவுசார் கொள்கை மட்டுமே. ஒரே முடிவில்லா இறைவன் மட்டுமே உள்ளார். இயேசு அவரின் மகனாயினும் படைக்கப்பட்டவர். படைப்பில் அதிசிறந்த படைப்பு, அவரினுள் இறைத்துவம் இல்லை. அதனால் அவரை இறைமகன் என்று அழைக்க முடியாது. தூய ஆவியும் இறைவனல்ல, அவரும் படைக்கப்பட்டவரே எனவும் கூறினார்.
- ஆரியுஸ் இக்கருத்தை ஒவ்வொரு இடங்களிலும் போதித்தாரே ஒழிய அதை அவர் எழுத்தாக்கம் செய்யவில்லை. இருப்பினும் பிற்காலத்தில் இவை நூல் வடிவம் பெற்றதோடு அவற்றில் மிஞ்சியிருப்பது தலேய்ய (Thaleia) என்ற பெயரில் அறிமுகமாகும் பாடல்களின் சில பகுதிகள் மட்டுமே. மகனின் நீதியின் நிமித்தம் இறைமகன் என்ற பெயர் அவருக்கு அளிக்கப்பட்டது எனவும், அவர் திரித்துவத்தின் இரண்டாம் ஆளாயினும் தந்தையைப் போல் முடிவில்லாதவர் அல்ல எனவும் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.
- இவ்வாறான கருத்துக்கள் கிறிஸ்தவ விசுவாச உண்மைகளை சீர்குலைக்கச் செய்தது. கிறிஸ்துவின் இறைத்துவம் மறுக்கப்பட்டால் அவர் உலகிற்குப் பெற்றுக்கொடுத்த விடுதலை அர்த்தமற்றுப் போய்விடும். எனவே, தொடக்கத்திலிருந்தே அலெக்சாந்திரிய ஆயர் தூய சிறில் ஆரியுசின் கொள்கைகளைப் பேதகங்கள் எனக்கூறி மறுத்து வந்தார். எனினும், நிக்கமேடியாவின் ஆயரான எயுசேபியுசின் உதவியோடு இப்பேதகம் மேலைத்தேயங்களில் பரவியது.

**பொதுச்சங்கம்**

- பேரரசர் கொன்ஸ்ரன்ரைன் ஆரியவாதம் பற்றி எழுந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்க திருத்தந்தை சில்வெஸ்ரரின் அங்கீகாரத்துடன் பொதுச்சங்கத்தை கி.பி. 325ஆம் ஆண்டு கூட்டினார். முதிய வயதின் காரணமாக திருத்தந்தை இதில் கலந்துகொள்ளவில்லை. அவரின் பிரதிநிதியாக கோர்டோவா ஆயர் கோசியஸ் அமர்விற்கு தலைமை தாங்கினார்.
- இதைப்பற்றி மக்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது. பேரரசின் ஒற்றுமையையும், அமைதியையும் பாதுகாத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு பொதுச்சங்க மொன்றைக் கூட்டுவதற்கு கொன்ஸ்ரன்ரைன் பேரரசு முன்வந்தது. அப்போது திருத் தந்தையான சில்வெஸ்ரரின் அனுமதியுடன் கி.பி. 325ஆம் ஆண்டளவில் இப்பொதுச்சங்கம் நடைபெற்றது. பல்வேறு பேரரசுகளிலிருந்து வருகைதந்திருந்த ஏறக்குறைய 300 ஆயர்கள் இதில் கலந்து கொண்டனர்.

* நிகோமிடியாவின் ஆயரான எவுசேபியுஸ் ஆண்டகையால் முன்வைக்கப்பட்ட ஆரியஸின் 11 கருத்துக்களும் பொதுச்சங்கத்தினால் மறுக்கப்பட்டது.
* திருச்சங்கம் விசுவாச சத்தியங்களைத் திரட்டி ''விசுவாசப் பிரமாணம்'' ஒன்றைத் தொகுத்தது. இது ''நிசேயா விசுவாசப் பிரமாணம்'' (Nicene Creed) என அழைக்கப்படுகின்றது. இதனையே நாம் திருப்பலியில் சொல்லிவருகின்றோம். இச்சங்கம் இயேசுக்கிறிஸ்து தமது பிதாவுக்கு சரிசமமானவர் என்றும், பிதாவோடு ஒரே பொருளானவர் என்றும் அறிக்கை செய்தது.
* கிறிஸ்தவ மறையின் படிப்பினைகளை ஒழுங்கு செய்வதற்கு அலெக்சாந்திரியா ஆயர் உதவியாளரான தூய அத்தனாசியுஸ் அடிகளார் உதவினார். கிறிஸ்துவின் இறை சுபாவம் பற்றி அவர் முன்வைத்த ''Humo - Ousious'' என்ற தந்தையுடன் ஒரே பொருளானவர் என்ற கொள்கையின் விசுவாச உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**இப்பொதுச்சங்கங்களின் ஒழுங்குகள், சட்டங்கள் பற்றி எடுத்த தீர்மானங்கள்**

1. ஆரியசையும் அவரது முக்கிய சீடர்களையும் சபையிலிருந்து வெளியேற்றல்.
2. மனம்வருந்திய பகிரங்கப் பாவிகளை திருச்சபை மீண்டும் ஏற்றுக்கொள்ளல்.
3. வேதபோத கருத்துடையவர்களை மீண்டும் திருச்சபையில் சேர்க்கும்போது மீண்டும் திருமுழுக்கு அளிப்பது தேவையற்றதென்பதாகும்.
4. பாஸ்கு விழா பற்றி உரிய திகதியொன்றை உறுதி செய்தல்.
5. குருக்களுக்கான ஒழுக்க சட்டங்களை விதித்தல்.
6. வழிபாடுகள், திருப்பலி நடாத்துதல் பற்றி தேவையான சட்டதிட்ட விதிகளை முன்வைத்தல்.
7. உரோமை, அந்தியோக்கியோ, அலெக்சாந்திரியா போன்ற மூன்று நகரங்களினதும் ஆயர்களுக்கு விசேட ஆட்சி அதிகாரங்களை ஒப்படைத்தல்.
8. எருசலேம் ஆயருக்கு விசேட கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

* எனினும், ஆரிய வாதம் முடிவுறவில்லை. ஆரியசுக்கு உதவியளித்த அவரின் சீடர்கள் திருச்சபையில் பேதகங்களை ஏற்படுத்தி பேரரசினுள் பல சிக்கல்களை ஏற்படுத்தினர். அதனால், இந்த பேதகங்களை அடித்தளமாகக் கொண்டு மீண்டும் ஒருமுறை பொதுச்சங்கமொன்று கி.பி. 381ஆம் ஆண்டு நடைபெற்றது.

### 6.2.1.2. கொன்ஸ்தாந்திநோபிள் பொதுச்சங்கம் (Council of Constantinople) கி.பி.381 பின்னணி

* இப்பொதுச்சங்கம் கூட்டப்படுவதற்கு முக்கியமான காரணம் மசதோனியப் பேதகமாகும். நிசேயா பொதுச்சங்கம் முடிவுற்ற பின்னும் ஆரிய பேதகம் போதிக்கப்பட்டது. ஆரியுசை ஆதரித்த நிக்கோமேடியாவின் ஆயரான எயுசேமியுஸ் பேரரசனை தம் பக்கம் திருப்பிக்கொண்டு திருச்சபையின் பக்கமுள்ள ஆயர்களை ஒதுக்கி வைத்தான். எயுசேபியுஸ் தம் ஆதரவாளர்களோடு ஆரியுசின் கொள்கைகளைப் பரப்பி வந்தான். இதன் தொடர்ச்சியான மசதோனியஸ் என்பவர் கிறிஸ்து கடவுளிலும் கீழானவர் என்றால் தூய ஆவியும் கடவுள் அல்ல எனக் கூறி தூய ஆவியின் இறைத் தன்மையை மறுத்துப் பேசினார்.

**பொதுச்சங்கம்**

* பேதகங்களால் திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்கும் பேரரசின் அமைதிக்கும் தடை ஏற்பட்டது. இதை உணர்ந்த பேரரசர் தியோடோசியஸ் (Theodosius) கி.பி. 381இல் கொன்ஸ்தாந்திநோபிளில் திருச்சபையின் பொதுச்சங்கத்தைக் கூட்டினார். திருத்தந்தையின் அனுமதியோடு அந்தியோக்கிய ஆயர் மெலீசியுஸ் (Meletius) இதற்குத் தலைமை தாங்கினார். 180 ஆயர்கள் இதில் கலந்து கொண்டனர்.

- இச்சங்கத்தில் நிசேயா பொதுச்சங்க முடிவு மீண்டும் வலியுறுத்தப்பட்டதோடு தூய ஆவியின் இறைத்தன்மையும் எடுத்துரைக்கப்பட்டது. அந்த வகையில் நிசேயா விசுவாசப்பிரமாணத்தோடு ''பிதாவினின்றும் சுதனினின்றும் புறப்படும் ஆண்டவரும் உயிரளிப்பவருமான பரிசுத்த ஆவியை விசுவசிக்கின்றேன். இவர் பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதனையும், மகிமையும் பெறுகின்றார். தீர்க்கதரிசிகளின் வாயிலாகப் பேசியவர் இவரே'' என்ற பகுதியும் சேர்க்கப்பட்டது. இத்தீர்மானம் திருச்சபை முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 6.2.1.3. எபேசு பொதுச்சங்கம் (Council of Ephesus) கி.பி.431 பின்னணி

- எபேசு பொதுச்சங்கம் கூட்டப்படுவதற்கு நெஸ்தோரியப் பேதகம் காரணமாக அமைந்தது. இதனை கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாவான நெஸ்தோரியஸ் என்பவர் முன்வைத்தார். இவர் சிரியாவிலுள்ள ஜெர்மானிஷியா என்னும் கிராமத்தில் கி.பி. 381இல் பிறந்தார்.
- இவர் கிறிஸ்துவின் இறைத்தன்மை பற்றியும் அவரினுள் இறை சுபாவமும் மனித சுபாவமும் தொடர்பு கொண்டிருப்பது பற்றியும் தப்பறையான கருத்துக்களை முன்வைத்தார். கிறிஸ்துவில் இறை ஆளுமை, மனித ஆளுமை என்னும் இரண்டு ஆளுமைப் பண்புகள் காணப்படுகின்றன எனவும், கிறிஸ்துவில் இறை சுபாவமும் மனித சுபாவமும் வெவ்வேறாக காணப்படுகின்றது எனவும் கூறினார்.
- மேலும், மரியாவின் உதரத்தில் பிறந்தவர் மனித சுபாவம் கொண்ட கிறிஸ்துநாதர் மட்டுமே என்றும், அதனால் மரியா இறைவனின் தாய் அல்ல (Non-Theotokos); மாறாக, இயேசுக்கிறிஸ்து என்னும் மனிதனின் அன்னை (Christo-tokos) மட்டுமே என்றும், தேவநற்கருணையின் வழியாக நாம் இயேசு என்னும் மனிதனை மட்டுமே பெறுகின்றோம் என்பதும் அவரின் கருத்தாகும்.

#### பொதுச்சங்கம்

- நெஸ்தோரியக் கொள்கை பரவியபோது அலெக்ஸ்சாந்திரியாவின் ஆயரான தூய சிறில் இக்கொள்கைகளை ஆராய்ந்து திருச்சபையின் சரியான கருத்துக்களை திருத்தந்தை செலஸ்ரின் (Celestine) ஆண்டகையிடம் அனுப்பி வைத்தார். திருத்தந்தை அக்கொள்கைகளை ஆய்வு செய்தபின் ஆயர் சிறில் திருச்சபையின் மறை உண்மைகளை சரியாக அளித்திருக்கின்றார் எனக் கூறியதோடு நெஸ்தோரியஸ் திருச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரியான கொள்கைகளை பத்து நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இல்லை எனில், ஆயர் பதவியில் இருந்து விலக்கப்படுவார் எனவும் அறிவித்தார்.
- நெஸ்தோரியஸ் திருத்தந்தையின் தீர்மானங்களுக்கு இணங்காமல் பேரரசரின் உதவியை நாடினார். எனவே, பேரரசர் இரண்டாம் தியோடோசியஸ் இச்சிக்கலைத் தீர்க்க பொதுச்சங்கத்தைக் கூட்டுமாறு திருத்தந்தைக்குக் கூறினார். எனவே, கி.பி. 431இல் எபேசில் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது.
- இப்பொதுச்சங்கத்தில் நெஸ்தோரியப் பேதகம் கண்டனம் செய்யப்பட்டது. அத்துடன் கிறிஸ்து இறை ஆளுமையையும் மனித ஆளுமையையும் ஒருங்கே கொண்ட ஒருவராக இருக்கின்றார் எனவும், இவரில் தெய்வீகம், மனுசிகம் என்னும் இரு இயல்புகள் உண்டு எனவும் எடுத்துரைக்கப்பட்டதோடு, இயேசுக்கிறிஸ்து மரியாவின் உதரத்தில் மனுவுரு எடுத்து உற்பவமான இறைமகன் என்பதால் மரியாவை தேவதாய் எனக் கூறலாம் எனவும் எடுத்துரைக்கப்பட்டது.
- மரியா தேவதாய் என முழுத் திருச்சபையும் ஏற்றுக்கொண்டமை மரியாவின் பக்தி வளர்வதற்கு பெருந்துணையாக அமைந்தது. அத்துடன் மரியியல் (Mariology) படிப்பினைகள் வளர்ச்சியடையவும் உதவியாக அமைந்தது.
- இத்தகைய எபேசு சங்கத் தீர்மானங்கள் இறைமக்களால் வெற்றி ஆரவாரத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திருச்சபையில் இருந்து நீக்கப்பட்டு பேரரசால் நாடுகடத்தப்பட்ட நெஸ்தோரியஸ் தன் சிந்தனைகளைப் பாரசீக நாட்டில் பரப்பி வந்தார்.

### 6.2.1.4. கால்சிடோன் பொதுச்சங்கம் (Council of Chalcedon) கி.பி.451 பின்னணி

- இப்பொதுச்சங்கம் கூட்டப்படுவதற்கு இயுக்திக்கேயப் பேதகம் காரணமாக அமைந்தது. இதனை கொன்ஸ்தாந்திநோபிள் மடாதிபதியான இயுக்திக்கஸ் என்பவர் முன்வைத்தார்.
- இவர் அலெக்சாந்திரிய ஆயர் சிறிலின் மாணவன்.
- எபேசு சங்கத்தில் எடுக்கப்பட்ட கிறிஸ்து ஒரு ஆள் என்னும் கோட்பாட்டை வலியுறுத்திப் பேசிவந்த இவர் காலப்போக்கில் கிறிஸ்துவில் ஒரு சுபாவம் மட்டுமே உள்ளது எனவும் அது இறை சுவாவமே எனவும் கூறியதோடு கிறிஸ்துவின் மனித சுபாவம் என்பது ஒரு மாத்திரை அளவு மட்டுமே எனவும் கூறி கிறிஸ்துவின் மனித சுபாவத்தை மறுத்துப் பேசினார்.

### பொதுச்சங்கம்

- இயுக்திக்கசின் பேதகச் சிந்தனை திருச்சபையில் குழப்பத்தை ஏற்படுத்தியது.
- கொன்ஸ்தாந்திநோபிளின் ஆயர் பிலேவியன் இயுக்திக்கசின் கருத்து ஒரு பேதகமென எடுத்துக் கூறினார்.
- ஆனால், இயுக்திக்கஸ் தனது கருத்து பிழையானதல்ல எனக் கூறியதோடு பேரரசனின் உதவியை நாடினார்.
- எனவே, பேரரசன் திருச்சங்கத்தைக் கூட்டுமாறு திருத்தந்தை லியோ (கி.பி. 440-461)விடம் கேட்டுக்கொண்டார். எனவே, திருத்தந்தையின் அனுமதியோடு கி.பி. 449இல் எபேசில் சங்கமொன்று கூட்டப்பட்டது. இச்சங்கத்தில் பேரரசனின் தவறான வழிநடத்தலால் இயுக்திக்கசின் கருத்து பிழையில்லை என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக ஆயர் பிளேவியம் அவர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.
- நடந்தவற்றை திருத்தந்தையிடம் எடுத்துக்கூறிய போது அவர் நடந்தேறிய பொதுச்சங்கம் ''திருடர்களின் சங்கம்'' என எடுத்துக் கூறி சங்கத்தின் தீர்மானங்களை இரத்துச் செய்தார்.
- இதன் பின்னர் கால்சிடோன் நகரில் கி.பி.451இல் பொதுச்சங்கம் மீண்டும் கூட்டப்பட்டது. ஆசியாவைச் சார்ந்த அனேகமான ஆயர்கள் இதில் பங்குபற்றிய தோடு உரோமைய ஆயரின் பிரதிநிதியும் பங்குகொண்டார்.
- கிறிஸ்துவின் இறைசுபாவத்திலிருந்து மனித சுபாவத்தைப் பிரிக்க முடியாது எனவும் அதனால் அவர் உண்மையான இறைவனும் உண்மையான மனிதனுமாக இருக்கின்றார் என்பதும் கால்சிடோன் பொதுச்சங்கத்தின் உறுதியான முடிவாகும். அதாவது, கிறிஸ்து ஒரு ஆள் எனவும் அவர் இறையாள் எனவும் அவரில் தெய்வீகம், மனுசிகம் என்னும் இரு இயல்புகளும் ஒருங்கே இணைந்துள்ளன எனவும் எடுத்துரைக்கப்பட்டன.

### 6.2.2. திருச்சபைத் தந்தையர்கள்

### திருச்சபைத் தந்தையர்கள்

- ஆரம்ப கிறிஸ்தவ சபையின் தூய கிறிஸ்தவ மறையையும் மற்றும் நம்பிக்கையையும் பாதுகாப்பதற்காக கற்பித்தல், போதித்தல், எழுத்தாக்கங்கள் போன்றவற்றின் வழியாக பங்களிப்புச் செய்த ஆரம்பகால அறிஞர்கள் திருச்சபைத் தந்தையர்களென அழைக்கப்பட்டனர். திருச்சபைத் தந்தையர்கள் என்பவர் யார் என்பது பற்றிய பதவிளக்கம் லெறின்ஸ் வின்சன்ட் (Vincent of Lerins) என்பவரால் கி.பி. 434இல் முதல்தடவையாக முன்வைக்கப்பட்டது. இப்பதவிளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திருச்சபை தனது பதவிளக்கத்தை முன்வைத்தது. அதற்கேற்ப ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ எழுத்தாளரை திருச்சபைத் தந்தையென அழைக்கப்படுவதற்கான காரணங்கள் நான்கு ஆகும்.

அவை,
- கிறிஸ்தவ மறை உண்மைகளை தவறின்றிப் போதித்தல் (Oxthodoxy).
- பரிசுத்ததனம் (Sanctity)
- அப்போஸ்தலிக்க திருச்சபையின் அங்கீகாரம் (Apostolicity)
- வாழ்ந்த காலம் (Antiquity)

### ஆரம்பகால எழுத்தாளர்கள் 'தந்தையர்கள்'

- தந்தை எனும் சொல் கத்தோலிக்க சபையினால் வெளியிடப்பட்டதாகும். இவ்வாறாக, அது ஆயர்களையும் ஆசிரியர்களையும் மதிப்போடு அழைக்கும் பொருட்டு உபயோகப்படுத்தியதாகும். தமது சீடர்களின் ஆன்மீக ஆளுமையை கட்டியெழுப்புதவற்காக ஆசிரியர் அதிக பங்களிப்பைச் செய்தமையால் அவரை தந்தையெனக் கருதினர். இவ்வாறு ஆசிரியரை தந்தையென அழைப்பது பண்டைய கால மக்களின் வழக்கமாக இருந்தது. இதனாலேயே, திருச்சபையில் கற்பித்தல் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள ஆயர்களையும் தந்தை எனும் பெயரில் அழைப்பதை திருச்சபை வரலாற்றிலே காணக் கூடியதாயுள்ளது.
  உதாரணம் கி.பி. 251ஆம் ஆண்டளவில் வாழ்ந்த ஆயர் சிப்ரியானை சிப்ரியன் பாபா (தந்தை) என அழைத்தனர்.
- இவ்விதமாக திருச்சபையின் ஆரம்பகால எழுத்தாளர்களின் முக்கிய பணி கிறிஸ்தவ மறையை கற்பித்தலாதலால் அவர்களையும் தந்தையார்களென அழைத்தனர். கிரேக்க சபைத் தந்தையர்கள் என அத்தனாசியார், பசில், கிறிசோஸ்தம், அலெக்சாந்திரியாவின் சிறில் ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- இலத்தீன் தந்தையர்களாக கிளறி, ஜெரோம், அம்புறோஸ், அகஸ்டின் ஆகியோரைக் குறிப்பிடலாம். இதனைவிட அம்புறோஸ், ஜெரோம், அகஸ்டின், கிளரி ஆகியோரை திருச்சபையின் பெரிய தந்தையர்கள் என உத்தியோக பூர்வமாக முதன்முதலாக திருத்தந்தை 8ஆவது போனிபஸ் பெயரிட்டார்.

### திருச்சபைத் தந்தையர்களின் காலம்

- திருச்சபைத் தந்தையர்களின் பணிகளும் அவர்கள் தமது பொறுப்புகளில் ஈடுபட்ட காலப்பகுதியானது முதலாவது நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டு வரையுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இல்லாவிடின் திருத்தூதர்களுக்குப் பிற்பட்ட காலப்பகுதியிலிருந்து எட்டாம் நூற்றாண்டின் பின் அரைப் பகுதி வரையுள்ள காலப்பகுதி திருச்சபைத் தந்தையர்களின் காலமெனக் குறிப்பிட முடியும்.

### திருச்சபைத் தந்தையர்களின் பணி

- யூத சமயத்தாலும் பிற சமயங்களாலும் எழுந்த பிரச்சினைகளுக்கான விடைகளை விபரமாக அளிப்பது திருச்சபைத் தந்தையர்களின் பணியாகும். இவர்கள் பெரும்பாலும் அதிகாரத்தோடு செயற்பட்டனர். இவர்கள் திருச்சபையில் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்ட ஆயர்களாவர்.
- தூய கிறிஸ்தவ சமயத்தை, தமது புதிய உடன்படிக்கையைப் பாதுகாத்தல் அவர்களின் பிரதான கடமையாகும். இவர்களின் முக்கிய பணி கற்பித்தலாகும். திருச்சபையைப் பற்றியும் அதன் சமயத்தைப் பற்றிய வரலாற்று அடிப்படையைக் கூறுவதற்கும் இவர்களால் இயலுமாயிருந்தது. இவர்களின் போதனைகள் எழுத்தாக்கங்கள் வழியாக கிறிஸ்தவ சமயம் மென்மேலும் வளர்ச்சியடைந்தது. இவர்கள் வாழ்ந்த தூய வாழ்வு இதற்கு முக்கிய காரணமாயமைந்தது.

- **திருச்சபைத் தந்தையர்களின் இலக்கிய மொழிகள்**
  திருச்சபைத் தந்தையர்களின் இந்த இலக்கிய நூல்கள் இரண்டாம் நூற்றாண்டின் அரைப்பகுதி வரை கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளதோடு பின்னர் இலத்தீன் மொழியில் அவை எழுதப்பட்டிருந்தன. இவ்வாறு, திருச்சபைத் தந்தையர்கள் தமது நூல்களை ஆவணப்படுத்துவதற்காக உபயோகித்த மொழிக்கேற்ப அவர்கள் கிரேக்க, உரோம தந்தையர்களென அழைக்கப்பட்டனர்.

- **இலத்தீன் சபைத் தந்தையர்கள்**
  புனித இரோணிமுஸ்
  புனித அம்புறோஸ்
  புனித அகஸ்டின்
  புனித ஜெரோம்
  புனித ஜஸ்டின்
  புனித பெரிய கிறகோரி
  புனித சிறில்

- **கிரேக்க சபைத் தந்தையர்கள்**
  புனித சிறில் (அலெக்சாந்திரியாவின்)
  புனித பசில்
  புனித ஜோண் கிறிசோஸ்தம்
  புனித அத்தனாசியார்
  புனித கிறகோரி நாசியன்சுஸ்
  புனித இக்னேசியஸ் (அந்தியோக்கியா)

**திருச்சபைத் தந்தையர்களை வகைப்படுத்தல்**

- சபைத் தந்தையர்களை வகைப்படுத்துகின்ற மூன்று முக்கிய முறைகள்:
    - நூல்களுக்கிணங்க வகைப்படுத்தல்.
      (உ+ம்: அப்போஸ்தலிக்க தந்தையர், தர்க்கவியலாளர், மறைப்போதகர்கள்)
    - பிரதேச ரீதியாக வகைப்படுத்தல். (உ+ம்: கீழைத்தேய, மேலைத்தேய தந்தையர்கள், அலெக்சாந்திரியா, அந்தியோக்கியா தந்தையர், ஆசியா, கப்பதோக்கியா தந்தையர்)
    - எழுத்து மொழிக்கேற்ப வகைப்படுத்தல். (உ+ம்: கிரேக்க, இலத்தீன் தந்தையர்)

### 6.2.2.1. மறைசாட்சி புனித ஜஸ்டின் (கி.பி. 100 - 165)

- இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் தர்க்கவியலாளர் மத்தியில் சிரேஷ்ட தர்க்கவியலாளராவார். இவர் பாலஸ்தீனாவின் சிக்கேம் எனும் பிரதேசத்திலிருந்து வந்தவராவார். கிறிஸ்தவ சமயம் யூத சூழல் யௌவன (ஹெலனிஸ்த்த) சமூகத்துடன் சேர்ந்து கொண்டதனால் தர்க்கவியலாளர்களின் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. அவ்வாறே, யூத இனத்தவரிடமிருந்தும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியது. கிறிஸ்தவ மறையின் உண்மையான தத்துவத்தை முன்வைப்பது அவரது முக்கிய பணியாயிருந்தது.
- யூத அல்லது சமாரிய பரம்பரைக்கு அவர் உரித்தானவராக இல்லாததால் அவரது பெற்றோர் பிற சமயத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். அதனால், இவர் இறைவனை நம்பாதவர்கள் வாழ்ந்த சுற்றாடலில் வாழ்ந்தவராக இருந்தார்.
- கிரேக்க சம்பிரதாயத்தினூடாகவே இவர் கல்வியைப் பெற்றார். ஸ்டோயிக், அரிஸ்டோட்டில், பிளேட்டோ, பைதகரஸ் ஆகிய தத்துவவியலாளர்களின் செல்வாக்கைப் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து இவர் கல்வி கற்றார்.

- எனினும், அவர்களிடமிருந்து இவர் தேடிய உண்மையை இவரால் கண்டடைய முடியவில்லை. எனினும், பிளேட்டோனிய வாதிகளிடமிருந்து மட்டும் ஆன்மீக உண்மைக்கான வழி கிடைத்தமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- உண்மையைத் தேடும்போது திருச்சபையானது வரலாற்றிலே பல்வேறு குருகுலத்துக்குரியதாக மாற்றமடைந்தபோதும் இறுதியில் எபேசில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவ இளைஞனான விசுவாசியிடமிருந்து கிறிஸ்தவ மறையின் தத்துவ ரீதியான பண்புகளைக் கற்பதற்கு அவரால் முடிந்தது.
- அதன்பின்பு, கிறிஸ்தவ மறையைத் தழுவி மனிதரை மீட்பதற்கான முழுமையும் உண்மையும் மிக்க தத்துவம் உண்மையிலேயே கிறிஸ்தவ தத்துவம்தான் என்பதை அவர் விளங்கிக் கொண்டார். ஆகையால், கிறிஸ்தவர்களை அறிவுறுத்துவதற்காக உரோமையில் தத்துவவியற் கல்லூரிகள் பலவற்றை ஆரம்பிப்பதே அவரது பிரதான கடமையாயிற்று.
- கிறிஸ்தவ மறையைத் தத்துவ ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் கற்ற ஜஸ்டின், அக்காலத்தில் உரோமைப் பேரரசனாக இருந்த அந்தோனி பியுஸ் என்பவருக்கு உண்மை மறையை விளக்கி கிறிஸ்தவர்களை அநியாயமாகத் துன்புறுத்த வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார்.

**புனித ஜஸ்டினின் எழுத்துப் பணி**

- திருச்சபையின் வரலாற்றிலே இவரால் எழுதப்பட்ட கிறிஸ்தவர்களுக்கான பரிந்துரை மூன்று குறிப்பிடப்படுகிறது.
    1. அந்தோனி பியுஸ் பேரரசனுக்கு எழுதிய கிறிஸ்தவர்களுக்கான பரிந்துரை.
    2. உரோமைய செனட் சபைக்கு எழுதிய கிறிஸ்தவர்களுக்கான பரிந்துரை.
    3. யூத இன ற்றைபோ (Trypho) என்பவரோடு செய்த உரையாடலுடன் தொடர்புடைய ஆவணம்.

### 6.2.2.2. புனித அத்தனாசியார் (கி.பி. 295 - 373)

**வாழ்க்கைப் பின்னணி**

- கி.பி. 295இல் அலெக்சாந்திரியாவில் பிறந்த இவரது பெற்றோர் கிறிஸ்தவர்களாவர். முதலில் கிறிஸ்தவக் கல்வி கிடைக்காதபோதும் சிறுவயதிலிருந்தே துறவற வாழ்வில் பற்றுக் கொண்டிருந்தார். எனினும் கற்ற அறிவுள்ள ஒருவராக இருந்தமையால் கி.பி. 325இல் அலெக்சாந்திரியாவின் ஆயரின் செயலாளராக நியமிக்கப்பட்டார். இப்பதவியில் இருந்தமையால் நிசேயா திருச்சங்கத்தில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இத் திருச்சங்கத்தில் ஆரிய பேதகத்துக்கு எதிராக இவரால் பேசுவதற்கு முடிந்தது. இவருடைய வாழ்க்கையில் அதிக காலத்தை ஆரிய பேதகத்துக்குக்கு எதிராகப் போராடியதால் அத்தனாசியாரைப் பற்றிக் கூறுகையில் ஆரிய பேதகத்தை மறக்க முடியாது.
- கி.பி. 328இல் அலெக்சாந்திரியாவின் ஆயருக்குப் பின் அத்தனாசியார் புதிய ஆயராக நியமனம் பெற்றார். பொதுநிலையின், துறவறத்தோர் என இருபாலாரும் விரும்பியதால் அத்தனாசியார் எகிப்து, லிபியா உள்ளடக்கப்பட்ட பரந்த மாகாணத்துக்கு பேராயராக நியமனம் பெற்றார். அன்று தொடக்கம் ஏழு வருடங்கள் தனது பிரதேசத்தில் பயணம் செய்து மக்களைத் தைரியப்படுத்திப் பாரிய பணியாற்றினார். அடிப்படைவாதிகளின் பயமுறுத்தலிலிருந்து பிரதேசத்தைக் காப்பாற்றுவதே அவரது ஒரே நோக்கமாயிருந்தது.
- தவறான கொள்கைவாதியாக சபையிலிருந்து நீக்கப்பட்ட ஆரியசை திருச்சபையில் ஏற்றுக்கொள்ளும்படி உரோமையப் பேரரசன் செய்த வற்புறுத்தலுக்கு இவர் உடன்படவில்லை.

- **அத்தனாசியாரின் நூல்கள்**
துறவற மடங்களில் வாழ்ந்த காலத்தில் இவர் விசேட செயலில் ஈடுபட்டார். அதாவது, அனேக நூல்களை எழுதி திருச்சபைக்கு வழங்கினார். இவை மிகவும் எளிய கட்டுரைகளாகும். இவற்றில் அனேகமாக ஆரியஸின் தத்துவத்திற்கு எதிராக எழுதப்பட்டவையாகும். இந்நூல்களில் திருவிவிலியத்துக்கு எழுதப்பட்ட அரும்பத விளக்க நூல் (அரும்பத விளக்கம்) எஞ்சியிருந்தது. திருவிவிலியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 27 நூல்களை உள்ளடங்கியதாக முதன்முதலில் வெளியிட்டவர் புனித அத்தனாசியார் ஆவார்.
- இவருடைய நூல்களின் விசேட தன்மையானது, எப்பொழுதும் உட்பொருளுடன் முன்வைப்பதாகும். இவர் திருவிவிலியத்தை கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தொனிப்பொருளில் அறிமுகப்படுத்துகிறார்.
- இவர் எழுதிய நூல்களில் மரியாவின் கன்னிமை பற்றி எழுதப்பட்ட சில நூல்களும் உள. ஆரிய பேதகத்துக்கு எதிராக கி.பி. 325இல் கூட்டப்பட்ட நிசேயா திருச்சங்கத்தில் பிதாவோடு ஒரே பொருளானவர் எனவும் பிதாவுக்கு சரிசமமானவர் எனவும் அத்தனாசியார் எடுத்துக் காட்டினார்.
- இவர் விசுவாசப் பிரமாணத்தைத் தயாரித்தார் (Symbolum Athanasis). இவ்வாறாக நிசேயா விசுவாசப் பிரமாணத்தை இவர் எழுதினார்.
- **அத்தனாசியாரின் இறையியல்**
- இவர் ஒரு உயர்மட்ட இறையியலாளராக இல்லாவிடினும் இறைவனையும் மகனையும் பற்றியும், மரியா பற்றியும் உண்மைகளை முன்வைத்துள்ளார் என்பதற்கு அவரது நூல்கள் சான்று பகர்கின்றன. பிதாவிலிருந்தும் சுதனிலிருந்தும் புறப்பட்டு வருபவர் தூய ஆவியார் என முன்வைக்கின்ற வெளியீடு கிறிஸ்தவ இலக்கியத்தில் முதல்முறையாக இவரது நூல்களிலேயே காணக்கூடியதாகவுள்ளது. தந்தையும் மகனும் நித்தியமாக உள்ளனர் என்பதை மீண்டும் மீண்டும் வெளியிடுவது இவரது இறையியலின் விசேட அம்சமாகும். இவர் மகனைப் படைப்பின் தலைப்பேறாக அறிமுகப்படுத்துகிறார்.
- திருவிருந்து அல்லது அப்பம் பிட்டலின் வழிபாட்டின்போது திராட்சை இரசம், அப்பம் என்பவற்றில் தூய ஆவியார் எழுந்தருளுகிறார் என்று இவர் கூறியுள்ளார். கத்தோலிக்க திருச்சபை இந்த உண்மையை இன்றும் அவ்வாறே ஏற்றுக் கொள்கிறது.

### 6.2.2.3. புனித ஜெறோம் (கி.பி. 331 - 420)

**வாழ்க்கைப் பின்னணி**

- புனித ஜெறோம் (St. Jerome) கி.பி. 331 அக்விலியாவில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை உரோமையில் பெற்றுக்கொண்டார். இவர் திருத்தந்தை டாமாசுஸின் செயலாளராக சில காலம் பணியாற்றிய பின் கி.பி. 385இல் பெத்லகேமுக்குச் சென்று தனது வாழ்க்கையின் எஞ்சிய காலத்தில் துறவியாக வாழ்ந்தார்.
- திருத்தந்தை டாமாசுஸ் (Pope Damasus) கேட்டுக்கொண்டதற்கிணங்க கி.பி. 386இல் திருவிவிலியத்தை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். வல்கேத் (Vulgate) என அழைக்கப்படுகிற இந்த மொழிபெயர்ப்பினால் இவர் திருச்சபையின் வேதபாரகர் என்னும் பெயரையும் பெற்றுக்கொண்டார். இவற்றைவிட திருவிவிலியத்தைக் கற்பதற்கு உதவியாக சில நூல்களையும் இவர் எழுதினார்.
- இணைத்திருமுறை நூல்களுக்கும் யூத நூல்களுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி முதன்முதலில் இவரே விளங்கிக் கொண்டார். திருவிவிலிய நூல்களென ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நூல் வரிசையை (Canonical Books) தீர்மானிப்பதற்காக கி.பி. 397இல் கார்த்தேஜ் பொதுச்சங்கத்தில் இவரது வழிகாட்டலும் பங்களிப்பும் மிகப் பயனுள்ளதாயமைந்தது.

**புனித ஜெறோமின் இறையியல்**

- புனித ஜெறோம் ஒரிஜினின் நூல்களை (De Principiis ஆகிய நூல்கள்) இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். அத்தோடு இவ்வாறான சமய எழுத்தாளர்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நூலொன்றையும் தயாரித்தார்.
- இவ்வாறாக கி.பி. 392களில் அக்காலத்தில் வாழ்ந்த திருச்சபையின் தலைவர்களின் வாழ்க்கை சரிதைகளடங்கிய ''மிக உயரிய மனிதர்களின் வாழ்க்கை சரிதை'' எனும் நூல் இவரால் திருச்சபையின் வரலாற்றுக்கு அளிக்கப்பட்ட கொடையாகக் கணிக்கப்படுகிறது. புனித பேதுருவில் ஆரம்பித்து இவரது காலம்வரை திருச்சபையின் தலைவர்கள் அனேகரின் வாழ்க்கைச் சரிதைகள் 135 இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் புனிதர்களின் வாழ்க்கைச் சரிதைகளை எழுதுவதற்கு இவரது இந்நூல் உதாரணமாக விளங்கியது.
- இவ்வாறே தப்பறையாளர்களுக்கு எதிராக மிகவும் துரித மொழிநடையில் கடிதங்களை எழுதினார்.
- இவர் திருவிவிலியத்தை வாசிப்பதிலும் அதனைத் தியானிப்பதிலும் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கடிதங்களையும் ஆக்கங்களையும் எழுதுவதன் வழியாக தனது துறவு வாழ்வை செலவழித்தார் என வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது. புனித ஜெறோம் துறவியாக புனித பூமியின் துறவற மடத்திலே மிகக் கடினமான துறவு வாழ்க்கையை வாழ்ந்து கி.பி. 420இல் அங்கேயே உயிர்நீத்தார். விசேட திருவிவிலிய அறிஞராக இன்றைய திருச்சபையிலும் இவர் பிரசித்தி பெற்றுள்ளார்.

### 6.2.2.4. அலெக்சாந்திரியா புனித சிறில் (கி.பி. 376 - 444)

**வாழ்க்கைப் பின்னணி**

- எகிப்தில் கி.பி. 376ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் அலெக்சாந்திரியா ஆயராக இருந்த தியோபிலசின் மருமகன். அலெக்சாந்திரியா இறையியல் கல்லூரியில் இறையியல் பயின்றார்.
- கி.பி. 412ஆம் ஆண்டில் ஆயர் தியோபிலசின் மறைவின்பின், அலெக்சாந்திரியாவின் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- ஐந்தாம் நூற்றாண்டில் அவர் மிகவும் பிரசித்திபெற்ற மறைவல்லுனராகவும், திருச்சபையில் செல்வாக்கு நிறைந்த இறையியலாளராகவும் திகழ்ந்தார். இறை பக்தி நிறைந்த மரபு வழிக் கிறிஸ்தவனாகிய இவர் அஞ்ஞான முறைகளுக்கும், தப்பறைக் கொள்கைகளுக்கும் எதிராக போர் புரிந்தார். அவருடைய பிரதான எதிரி கொன்ஸ்தாந்திநோபிள் ஆயரான நெஸ்தோரியசும், அவர் ஆரம்பித்த நெஸ்தோரிய பேதகமுமாகும்.
- நெஸ்தோரியஸ், ஆரியுசின் ''இயேசுக்கிறிஸ்து இறைவனல்ல'' என்ற பேதகத்துக்கு எதிராக வாதாடி, கிறிஸ்துவின் இறைத்தன்மையை மிகைப்படுத்திப் போதித்து, இறுதியில் இயேசுவில் தெய்வ ஆள், மனித ஆள் என இரு ஆட்கள் உண்டென்றும், மரியா இயேசு மனிதனின் தாய் மட்டுமேயன்றி, இயேசு இறைவனின் தாய் அல்ல என்ற பேதகத்துக்கு ஆளானார்.
- இப்பேதகத்தை ஆராய எபேசில் கி.பி. 431இல் திருத்தந்தை முதலாம் செலஸ்தினால் கூட்டப்பட்ட பொதுச்சங்கத்தில் புனித சிறில் அதிசிறந்த இறையியல் வல்லுனராக செயற்பட்டார்.
- இயேசு இறை இயல்பும் மனித இயல்பும் ஒன்றாகக் கொண்ட ஓர் இறை ஆள் எனவும், மரியா ஒரு இயல்பைப் பெற்றெடுக்கவில்லை, மாறாக ஓர் ஆளைப் பெற்றெடுத்தார் எனவும் வாதிட்டார். இந்த இறை ஆள் இயேசுவைப் பெற்றெடுத்த மரியா உண்மையாகவே இறைவனின் தாய் என எபேசு பொதுச்சங்கம் பிரகடனம் செய்தது.
- புனித சிறில் ''மரியா இறைவனின் தாய்'' என்ற எபேசு பொதுச்சங்கத்தின் தீர்மானத்தை நிலைநிறுத்த அயராது உழைத்து பல துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது.
- மூவொரு இறைவன், கிறிஸ்துவின் இயல்பு பற்றி கிறிஸ்தவ இறையியலுக்கு மிகுந்த பங்களிப்புச் செய்தார். இவர் கி.பி. 444இல் இறந்தார்.

**ஆக்கங்கள்**

- இவரது இலக்கிய ஆக்கங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்.
- கி.பி. 428ஆம் ஆண்டு வரை இவரின் ஆக்கங்கள் திருவிவிலிய விளக்கங்கள், ஆரிய பேதகத்துக்கு எதிரான வாதங்களாக உள்ளன.
- அவற்றிற்குப் பின் எழுதப்பட்டவை நெஸ்தோரிய பேதகத்துக்கு எதிரானதல்ல.
- அவர் எழுதிய, ''ஆவியிலும் உண்மையிலும் ஆராதனையும் வழிபாடும்'' என்ற நூல் பஞ்சாகமம் பற்றிய உருவக விளக்க உரையாகும். இவை புனித சிறிலுக்கும் பல்லிடியுஸ் என்பவருக்கும் இடையே நடைபெறும் உரையாடலாகத் தரப்படுகின்றன.
- ''மூவொரு இறைவன் பற்றிய தொகுப்பு'' எனும் நூல் ஆரிய பேதகத்தை விமர்சித்து, அது தவறென நிரூபிக்கின்றது.
- ''நெஸ்தோரியுசுக்கு எதிராக ஐந்து பாகங்கள்'' எனும் நூல் நெஸ்தோரியுஸ் வெளியிட்ட போதனைகளின் தொகுப்பை விமர்சித்து அவற்றிலுள்ள தவறுகளை சுட்டிக்காட்டுகிறது.

### 6.2.2.5. புனித அகஸ்டின் (கி.பி. 354 - 430)

**வாழ்க்கைப் பின்னணி**

- திருச்சபைத் தந்தையர்களைப் பற்றிக் கூறுகையில் நிச்சயமாக அறிய வேண்டிய திருச்சபைத் தந்தையாவார். புனித அகஸ்டின் திருச்சபையிலே மிகப்பெரிய புகழ்ச்சியைப் பெற்றுக்கொண்ட அறிவுள்ள தலைவராவார்.
- கி.பி. 354ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி வட ஆபிரிக்காவிலுள்ள தகாஸ்தே (Tagaste) எனுமிடத்தில் (இன்றைய அல்ஜீரியா) பிறந்தார். இவரது தந்தை பிறமதத்தவராவார். எனினும் மொனிக்கம்மாள் எனும் இவரது தாயார் மிகவும் தூய்மையான பக்தியுள்ள கிறிஸ்தவப் பெண்ணாவார். இதனால் அகஸ்டினுக்கு கிறிஸ்தவக் கல்வியைப் பெறக்கூடியதாயிருந்தது.
- இவர் கார்த்தேஜிலுள்ள பல்கலைக்கழகத்தில் கற்று வழக்கறிஞராக வரவேண்டுமென எண்ணியபோதும் பின்னர் இலக்கிய நூல்களைக் கற்பதற்கும் எழுதுவதற்கும் காலத்தைப் பயன்படுத்தினார்.
- இறையியலைக் கற்பதில் அதிக விருப்பம் காட்டவில்லை. கிறிஸ்தவ சூழலிலிருந்து கிரமமாக தூர விலகிச் செல்வதே அவரது உபாயமாகவிருந்தது. குறிப்பிட்ட ஒரு பெண்ணோடு முறையற்ற உறவு வைத்திருந்ததே இதற்கான காரணமாகும்.
- கி.பி. 373இல் சீசரோவின் ஹொர்டென்சியஸ் (Hortensius of Cicero) எனும் நூல்களை வாசித்த பின்னர் தத்துவ இயலைக் கற்பதில் அவருக்குள் அதிக விருப்பு ஏற்பட்டதென வரலாறு கூறுகின்றது.
- இதன் மத்தியில் பரவிக்கொண்டிருந்த மணிக்கேய பேதகம் (Manichaeism) அவரது வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தியது. மணிக்கேய பேதகத்தின் ஒரு கருத்தான உலகினை ஆட்சி செய்யும் சக்தியைப் பற்றிக் கற்கலானார். இதற்கமைய ஆட்சிக்குள் சாத்தானின் அரசும், ஒளியின் அரசும் தொடக்கத்திலிருந்தே இருந்தபோதிலும் ஒரு காலகட்டத்தில் இருள் வெற்றியீட்டியதென பவுஸ்டஸ் (Faustus of Mileve) எனும் மணிக்கேய பேதகர் முன்வைத்த கருத்தைப் பற்றி அவருடன் உரையாடியபோதும் அவரது பதில்களில் திருப்தியடையாத புனித அகஸ்டின் மணிக்கேய பேதகத்தின்மீது வெறுப்படைந்தார்.
- இதன் பின்னர் உரோமைக்குச் சென்று தர்க்கவியல் (Rhetorics) தத்துவ இயல் என்பவற்றைக் கற்பிப்பதற்கு பாடசாலை ஒன்றினை ஆரம்பித்தார். எனினும், சிறிது காலத்தில் தனது மாணவர்களின் மட்டில் விரக்தியடைந்து மிலான் நகரத்துக்குச் சென்ற இவர் அங்குள்ள பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.
- இவ்வேளையில் மிலான் பேராயரான புனித அம்புறோஸ் (Ambrose) ஆண்டகைக்குச் செவிமடுக்க சந்தர்ப்பம் கிடைத்ததோடு அது அவரது வாழ்க்கையில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைந்தது. படிப்படியாக கிறிஸ்தவ சமயத்தைப்

பற்றிய அம்புறோஸின் விரிவுரைகளைப் பாராட்டியதோடு மென்மேலும் அவர் பக்கம் சார்ந்தார். நல்லவரும் ஒரே இறைவனுமாகிய படைத்தவரின் உலகில் பாவமும் துன்பமும் (Sin and Sufferings) உள்ள விதத்தினை இவர் விளங்கிக் கொண்டார்.

- எனினும், இவருக்கு தனது தனிப்பட்ட வாழ்வை கிறிஸ்தவ மனப்பாங்குகளுக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வதற்கு இலகுவாக இருக்கவில்லை. இறுதியாக புனித பவுலின் திருமுகங்களைக் கற்ற அவருக்கு உரோ. 13:13 பகுதியை வாசித்துப் பெற்ற விசேட செய்தியின் காரணத்தினால் முழுமையான வாழ்க்கை மாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியதாயிருந்தது.
- பின்னர் போதுமான காலம் வரை தனிமையிலே வாழ்ந்து கி.பி. 387இல் பேராயர் அம்புறோஸ் ஆண்டகையிடம் திருமுழுக்குப் பெற்றார். 2கொரிந்தியர் 10:4 பகுதியை வாசித்த பின்னர் தான் பாவி என விளங்கிக் கொண்டதாக அவராலேயே எழுதப்பட்ட ‘தன்னிலை ஏற்பு’ (Confessions) எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இத்தோடு இவரது சட்டபூர்வமற்ற மனைவியும் மகனும் (Adeodatus) இறந்ததையடுத்து தனிப்பட்ட வாழ்க்கை நிலையும் முழுமையான மாற்றத்துக்குள்ளாகியது. பின்பு அறிவுசார் செயற்பாடுகளில் ஈடுபட்டு திருவிவிலியத்தைக் கற்பதிலும் தத்துவ இயலை மேலும் கற்பதிலும் ஆர்வம் காட்டினார்.
- இக்காலப் பகுதியில் சில நூல்களை எழுதினார். கி.பி. 391இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் நான்கு வருடங்களின் பின்னர் ஹிப்போ நகரத்தின் ஆயராக நியமிக்கப்பட்டார். கி.பி. 397இல் ஆரம்பிக்கப்பட்டு கி.பி. 400இல் எழுதி முடித்த அகஸ்டினது ‘தன்னிலை ஏற்பு’ (Confessions) எனும் நூல் அவர் எழுதிய நூல்களில் மிகவும் உயர்ந்த படைப்பாகும். அவரது ஆன்மீகப் போராட்டத்தைப் பற்றிய கண்ணோட்டம் அந்த நூலில் காணப்படுகிறது.
- ‘இறைவனின் நகரம்’ (De Civitate Dei) எனும் நூலை கி.பி. 413-427 களுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதியுள்ளார். கி.பி. 410இல் உரோமைய நகரின் அழிவு பற்றிய விபரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 22 பகுதிகள் உள்ளன. முதலாவது பகுதியில் உரோமைப் பேரரசனின் இறுதிக் காலம் பற்றிய முக்கிய கருத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் இறையியல் பற்றிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.
- இந்நூல்களைத் தவிர மூவொரு இறைவன் (De Trinitate) பற்றிய ஆழமான உரையாடல்களடங்கிய சில நூல்களை எழுதியுள்ளார்.
- இதனைப்போலவே, மணிக்கேய பேதகத்துக்கும் தோனாத்தேய பேதகத்துக்கும் பெலாஜிய பேதகத்துக்கும் எதிராக அவர் எழுதிய நூல்கள் மிகவும் பாராட்டுக்குரியனவாகும். கி.பி. 396இல் ஹிப்போவின் ஆயராக (Bishop of Hippo) நியமிக்கப்பட்ட இவர் இறக்கும் வரையில் அப்பதவியிலேயே இருந்தார்.
- இவர் 113 நூல்களையும், 218 திருமுகங்களையும், ஐந்நூற்றுக்கு மேற்பட்ட மறையுரைகளையும் எழுதியுள்ளார்.

### 6.2.2.6. ஒரிஜன் (கி.பி. 185-253)

**வாழ்க்கைப் பின்னணி**

- புனித ஒரிஜன் கி.பி. 185ஆம் ஆண்டளவில் எகிப்தின் அலெக்சாந்திரியா எனுமிடத்தில் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். அலெக்சாந்திரியாவின் குருகுலத்தின் தலைவரென வரலாற்றில் இடம்பெற்றுள்ளார். எனினும், பிற்காலத்தில் அவர் எந்த குருகுலத்தைச் சேர்ந்தவர் என்ற சந்தேகம் எழத் தொடங்கியது.
- இவருடைய காலம் 03 காலப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
    - கி.பி. 203 - 215 வரை அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த காலம்
      (212 இல் உரோமையில்)
    - கி.பி. 215 - 231 வரை அவரது குருத்துவம் ஆசியாவில் வாழ்ந்த காலம்
      (215இல் அரேபியாவில், 216இல் பாலஸ்தீனாவில்)

- கி.பி. 231 - 253 வரை அவரது பாலஸ்தீன பயணம்
  (231இல் டெமெற்றியுஸ் (Demetrius) ஆயரினால் திருச்சபை யினால் விலக்கப் பட்டதன் பின்னர்)

- **ஒரிஜனது முக்கிய நூல்கள்**
  - **ஹெக்சப்லா (Hexapla) நூல்:** இது திருவிவிலிய விளக்கமும் ஆய்வும் பற்றி எழுதப்பட்ட முக்கிய நூலாகும்.
  - **செல்சுக்கு எதிராக எழுதிய நூல்:** இது செல்சஸ் எனும் தப்பறையான தத்துவவியலாளரின் True Discouse எனும் நூலுக்கு எதிராக எழுதப்பட்ட கிறிஸ்தவர் களுக்கான பரிந்துரை எனும் நூலாகும்.
  - **முக்கிய கோட்பாடுகள் பற்றிய நூல்:** இது சமயப் புனிதர்கள் பற்றிய நூலாகும். இறைவன், பிரபஞ்சம், மனித சுதந்திரம், இறை வெளிப்பாடு ஆகிய கிறிஸ்தவ மறை பற்றிய கோட்பாடுகள் பற்றிய ஆழமான தத்துவங்கள் இதன் வழியாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒரிஜனின் இறையியல் படிப்பினைகள்**

- திருச்சபையின் வரலாற்றிலே இவர் மிகவும் முக்கிய இடத்தினைக் கொண்டிருந்தார். திருவிவிலியத்தைப் பற்றிய அடிப்படை இறையியலாளராக திருச்சபையின் வரலாற்றிலே குறிப்பிடப்படுகிறார். எபிரேய, கிரேக்க மொழிகளில் இவர் பாண்டித்தியம் பெற்றிருந்தார். ஒரிஜனது திருவிவிலிய விளக்கத்திற்கேற்ப மூன்று நுட்ப முறைகளைப் பயன்படுத்தலாம்.
  - சொற்கருத்துடனான திருவிவிலியத்தை விளக்குதல் (Literal)
  - உளவியல் ரீதியாக திருவிவிலியத்தை விளக்குதல் (Psychological)
  - ஆன்மீக அல்லது உருவக விளக்க முறையில் திருவிவிலியத்தை விளக்குதல் (Allegorical)

### 6.2.2.7. தேர்த்தூலியன் (கி.பி. 160 - 200)

**வாழ்க்கைப் பின்னணி**

- வட ஆபிரிக்காவில் கார்த்தேஜ் (Carthage) நகரத்தில் செல்வந்த குடும்பத்தில் கி.பி. 160இல் தேர்த்தூலியன் பிறந்தார். இவரது பெற்றோரின் செல்வத்தினால் இவர் சிறுவயதிலிருந்தே சிறந்த கல்வியினைப் பெற்றார்.
- கிரேக்க, இலத்தீன் இலக்கியங்கள் பற்றி ஆழமாகக் கற்ற இவருக்கு இலத்தீன் மொழியில் நூல்களை எழுதித் தனது கருத்துக்களை வெளியிடுவதற்கான சிறந்த ஆற்றல் இருந்தது.
- வழக்கறிஞராக சில காலம் உரோமையில் வாழ்ந்தார். இக்காலப் பகுதியில் இவர் கிறிஸ்தவ மறையைத் தழுவினார் என்றும் இதன்பின்னர் இவர் கார்த்தேஜ் நகரத்தில் வாழ்ந்தார் எனவும் வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது.

**ஆக்கங்கள்**

- இக்காலத்தில் வட ஆபிரிக்காவில் செல்வாக்குச் செலுத்திய கிறிஸ்தவ சமய கலாபனையினால் விசுவாசிகள் பலவிதமான இடையூறுகளை அனுபவிக்க நேர்ந்தது. இந்த உக்கிரமான கலாபனையைத் தனது கண்களால் கண்ட தேர்த்தூலியன் அப்பாவி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துதல் பற்றி உரோமைய ஆட்சியாளர்களுக்கு குற்றம் சுமத்தி ஆவணங்களை வெளியிட்டார். பிற சமயங்களை மிகவும் நுட்பமாக ஆராய்ந்து அவற்றின் குறைபாடுகளை எடுத்துக் காட்டினார்.
- அவ்வாறே, கிறிஸ்தவ மறை ஏனைய சகல சமயங்களை விட மிகவும் உயர்ந்த தன்மை கொண்டது என வெளியிட்டார். இவரால் எழுதப்பட்ட கிறிஸ்தவர்களுக்கான பரிந்துரை (Apologeticus) எனும் நூலில் இவ்விடயங்கள் மிகத் தெளிவாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

- புனித தேர்த்தூலியன் கிறிஸ்தவ மறையை விளக்கும்போது தத்துவவியலையும், இறையியலையும், தர்க்கவியலையும் அடிப்படையாகக் கொண்டு எழுத்தாக்கங்கள் பலவற்றை எழுதியதினால் ஆரம்ப காலத் திருச்சபையின் எழுத்தாளர்களிடையே இவர் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தார். இவர் இலத்தீன் மொழியில் கிறிஸ்தவ மறை பற்றிய பாரியளவு நூல்களை எழுதியதன் காரணமாக இவரை கிறிஸ்தவ இலத்தீன் இலக்கியத்தின் தந்தையென அழைத்தனர்.
- கிறிஸ்தவர்கள் எதிர்கொண்ட கலாபனைகளை விளக்குகையில் ''மறைசாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்குகின்ற வித்தாகும்'' எனும் பெறுமதி வாய்ந்த கூற்றை முன்வைத்தவர் இவரேயாவார். இக்கூற்றின் உண்மை உரோமைய சமய கலாபனைகளின் பின்னர் ஏற்பட்ட திருச்சபையின் வளர்ச்சியின் வழியாக நன்றாக விளங்குகிறது.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு :**
- திருச்சபையின் ஆரம்ப காலத்தில் நடாத்தப்பட்ட முக்கிய பொதுச்சங்கங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- திருச்சபைத் தந்தையர்களின் வாழ்க்கை முறையை தமது வாழ்வில் முன்மாதிரியாகக் கொள்ளும் விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**

- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அ.ம.தி. குருமடம், அம்பிட்டியா, 2002.
- M.S. ஜேசுதாஸ் தங்கசாமி, திருச்சபை வரலாறு, நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில்.
- ஞானமுத்து பிலேந்திரன், கிறிஸ்தவமும் நாகரிகங்களும், கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், நல்லாயன் நிலையம், யாழ்ப்பாணம், 2008
- Alan Schreck, The Compact History of the Catholic Church, St. Paul's Publication, Mumbai, 2008.
- Fr. John Laux, Church History, Tan Books and Publishers, Illinois, 1989.
- P. Thomas, The General Councils of the Church, St. Paul's Press, Bombay, 1993.

**தேர்ச்சி 6.0** : பல நூற்றாண்டுகளாக இடம்பெற்ற திருச்சபையின் வளர்ச்சியை இனங்கண்டு, இன்றைய திருச்சபையின் வளர்ச்சிக்குப் பங்காளிகளாவர்.

**தேர்ச்சி மட்டம் 6.3** : ஐரோப்பாவில் முதன்முதல் திருச்சபை பரவியமை பற்றிய வரலாற்றை விளங்கிக் கொள்வர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றல் பேறுகள்** :

- முதல் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் திருச்சபை பரவிய விதத்தைக் கற்பர்.
- மத்திய காலத்தில் நிகழ்ந்த விசேட சம்பவங்கள் பற்றி அவதானித்துப் பரிசீலிப்பர்.
- வரலாற்றிலே திருச்சபையின் வீழ்ச்சியும் எழுச்சியும் பற்றிப் பகுப்பாய்வு செய்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 6.3.1. ஐரோப்பாவில் திருச்சபை வளர்ச்சியடைதல் (5-9ஆம் நூற்றாண்டு)
## 6.3.1.1. ஐந்தாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபை

### விசுவாசமும் புதிய அரசியல் முறையின் தாக்கங்களும்

- ஐந்தாம் நூற்றாண்டில் பேரரசின் ஆட்சி செயற்பாடுகள் அரசியல் ரீதியாக கிழக்கு, மேற்கு எனும் வகையில் இரண்டாகப் பிளவுபடத் தொடங்கியது. பேரரசின் கிழக்குப் பகுதி கிரேக்க மொழிக்கு முதலிடத்தைக் கொடுத்ததோடு மேற்கத்தைய பகுதியில் இலத்தீன் மொழி முதலிடத்தைப் பெற்றது.
- அலெரிக்கின் தலைமைத்துவத்தின் கீழ் கி.பி. 410இல் விசிகோத் எனும் கோத்திரத்தினர் உரோமை அழிவுக்குட்படுத்தியமையானது மேற்குப் பேரரசுக்குக் கடும் தாக்கத்தைக் கொடுத்தது.
- இதனைத் தவிர வன்டல், ஹன்ஸ் எனும் கோத்திரத்தாரும் மேற்கத்தேய பேரரசில் பல்வேறு பிரதேசங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றினர். இறுதியாக கி.பி.476ஆம் ஆண்டளவில் முழு மேற்கத்தேய பேரரசும் இம் மரபினரின் ஆட்சி அதிகாரத்துக்கு உட்பட்டது.
- உரோமையில் ஏற்பட்ட அரசியலின் உறுதியற்ற தன்மைகள் கிறிஸ்தவ வாழ்வுக்கு தாக்கங்களை ஏற்படுத்தியதனால் அக்காலத்திலிருந்த திருத்தந்தையர்களும் ஆயர்களும் கிறிஸ்தவர்களை அல்லது இறைமக்களை உடல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் ஊட்டம் பெறச் செய்ய, வழிகாட்ட, பாதுகாக்க முயற்சி செய்தனர்.
- இக் கிறிஸ்தவ தலைவர்களில் முதலாவது லியோ திருத்தந்தை (கி.பி.440-461) மிக முக்கிய இடத்தை வகிக்கிறார். அட்டில்லா எனும் ஏழு கோத்திரத்தின் தலைவனின் தாக்குதல்களிலிருந்து உரோமைப் பாதுகாத்ததோடு, இன்னுமொரு முறை ஜெனசரிக் எனும் வன்டல் கோத்திர தலைவன் உரோமை அழிக்காது அதன் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தான்.

### பெலாஜியப் பேதகம்

- தோனாத்திய பேதகத்துக்குப் பின்னர் மேற்கத்தேய திருச்சபையின் இறையியலுக்கு கடும் எச்சரிக்கையாக பெலாஜிய பேதகமே இருந்தது. காலம் முழுவதும் இருந்து வந்த இந்த சமய பேதகங்களின் தாக்கங்கள் கி.பி. 412இல் அரசியல் மத்தியஸ்தத்தினால் திருச்சபை வெற்றிபெற முடிந்தது. பெலாஜியுஸ் எனும் பிரித்தானியாவின் துறவி தனது பேதகத்தில் மனிதனின் மனித சுபாவத்தில் சென்ம

பாவத்தின் வழியாக அழிந்துள்ளான் எனும் கருத்தைக் கடுமையாக எதிர்த்ததோடு மனிதன் பாவத்திலிருந்து மீண்டு மீட்பைப் பெற இறையருளும் உதவியும் தேவையில்லையெனவும், மனிதனுக்கு கிறிஸ்துவைப் போன்று நன்மைத் தனத்தோடு வாழ்வதன் மூலமாக மீட்பைப் பெறும் ஆற்றல் உண்டெனவும் தனது போதனைகளில் பெலாஜியஸ் முன்வைத்தார்.

- இவருடைய பேதகத்தின்படி மீட்பு இறையருளால் அல்ல, மனிதனின் முயற்சியால் மட்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றென்பதால் மேற்கத்தேய கிறிஸ்தவ சபை பெலாஜியசின் பேதகத்தைக் கண்டனம் செய்தது.
- பெலாஜியசுக்கு எதிராக செயற்பட்டவர்களினிடையே புனித அகஸ்டின் முதலிடத்தை வகிக்கிறார். இவர் பெலாஜியசின் பேதகத்தை கடுமையாகக் கண்டித்ததோடு, மீட்பு பெரும்பாலும் இறையருளின் அடிப்படையிலேயே விளங்குகிறதெனவும் மனிதன் இதற்காக செய்யக்கூடியவை மிகவும் அற்பமானவையெனவும் வெளிப்படுத்தினார். அகஸ்டினது கருத்துக்கு ஏற்ப மீட்புச் செயற்பாட்டிலுள்ள மனிதனின் பங்களிப்பு அற்பமானது எனக் காட்டுவதனால் கி.பி. 529இல் ஒரேன்ஜில் நடாத்தப்பட்ட இரண்டாவது பொதுச்சங்கத்தின் வழியாக அகஸ்டினது கருத்துக்கள் திருத்தியமைக் கப்பட்டு, மீட்படைவதற்கு இறையருள் கட்டாயமெனினும் இறையருளை ஏற்றுக்கொள் ளும்போது மனித ஒத்துழைப்பும், உதவியும் தேவையென்பது விளக்கப்பட்டது.

## கீழைத்தேய திருச்சபை

- கிழக்குப் பிரதேசத்தில் பொதுநிலையினர், துறவறத்தோர் எனும் வகையில் உறவு இல்லாத போதும் திருச்சபைக்கும் அரசுக்குமிடையில் அத்துணை இடைவெளி நிலவவில்லை. பல பேரரசர்கள், இறையியலாளர்கள், திருச்சபையின் ஆட்சியாளர்களாக இக்காலத்தில் செயலாற்றினர். இவர்கள் திருச்சபைக்கு வழிகாட்டியதோடு ஆயர்களை நியமித்தல் அவர்களை விலக்குதல் போன்றவற்றையும் செய்தனர். திருச்சபைக்கும் அரசுக்குமிடையில் நிலவிய இந்த மிக நெருக்கமான பிணைப்பு இஸ்லாமிய ஆக்கிரமிப்பு வரை கிழக்குப் பேரரசில் நிலவியது.
- கிழக்குத் திருச்சபையில் அல்லது பைசாந்திய திருச்சபையில் கிறிஸ்தவர்கள் மிகவும் உயர்நிலையிலும் விளக்கத்துடனான ஆராதனை வழிபாட்டு முறைகளில் அதிகளவு முன்னேற்றம் பெற்றதோடு, அந்த வழிபாட்டு முறைகள் இன்றுவரை நிலவுகின்றன. இந்த வழிபாடுகளுள் நம்பிக்கையைப் பற்றிய இறைவனுடைய மறைபொருள்களின் தூய தன்மைக்கு மிகவும் அதிகளவு அவதானம் செலுத்தப் பட்டுள்ளது.
- இதன் பெறுபேறாக இவர்களின் பொது வழிபாட்டு விழாக்களும் வழிபாடுகளும் மிக அழகான முறையில் நாடக ரீதியான வடிவமொன்றைக் கொண்டிருந்தன. இவர்கள் தமக்கேயெனப் பரம்பரையாய் வரும் பொது வழிபாடுகளையும் அறிமுகப்படுத்தினர். இத்தோடு ஜோண் கிறிசோஸ்தமின் பொது வழிபாடுகள் மிக முக்கிய இடத்தை வகிப்பதோடு மேற்கு அல்லது இலத்தீன் சபையில் அக்காலத்தில் நிலவிய பொது வழிபாட்டு முறைகளைவிட அதிக வேறுபாடான தன்மைகளைக் கொண்டிருந்தன. கிழக்குச் சபையும் தேவதாய்க்கும், புனிதர்களுக்கும், தூய பண்டங்களுக்கும் அதிக பக்தியையும் வணக்கத்தையும் மரியாதையையும் காட்டியது.

## 6.3.1.2. ஆறாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ திருச்சபை

### புதிய யுகத்தின் ஆரம்பம்

- இக்காலத்தில் உரோமைப் பேரரசும் திருச்சபையும் பல்வேறு உறுதியற்ற தன்மைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது.
- ஆறாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் பல்வேறு காரணங்களினால் திருச்சபையில் நிலவிய இறையியலும் ஆன்மீக புதிய யுகத்துக்கு அல்லது திருச்சபைத் தந்தையர்களின் காலத்தின் முடிவுக்கான முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

- பேரரசின் மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு ஆகிய திசைகளிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளரான கோத்திரத்தாரிலிருந்து தப்புவதற்காக பாரிய யுத்தத்தில் ஈடுபட்டனர். பொதுவாக பாதுகாப்பாக இருந்த பேரரசின் கிழக்குப் பகுதி இஸ்லாமிய ஆக்கிரமிப்பாளர்களினால் உறுதியற்ற நிலைக்கு முகங்கொடுத்தது.
- இதன் பெறுபேறாக கி.பி. 553இல் ஒஸ்திரோகோத் கோத்திரத்தாரின் இராச்சியங்கள் வீழ்ச்சியடைந்தன. அத்தோடு கி.பி. 496இல் கிளோவிஸ் என்பவனின் தலைமையில் பிரான்க் கோத்திரத்தினர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியதோடு அவர் அக்காலத்தில் நிலவிய மேற்குச் சபைக்கு பேருதவியளித்தார்.
- கி.பி. 529இல் இத்தாலியில் மென்டே கசினோ எனும் இடத்தில் புனித பெனடிக் நிறுவிய துறவற சபையினால் ஐரோப்பாவில் நிலவிய நிலையை நன்மையானதாய் மாற்றுவதற்கு உதவியது. செபம், உடலை வருத்தி வேலை செய்தல் எனும் கொள்கைகளோடு செயற்பட்ட துறவற மடம் உரோமைய, மேற்கு கலாசாரத்தைப் பாதுகாக்கும், நற்செய்தியைப் பரப்பும் முக்கிய நிலையமாகியது.
- திருத்தந்தை முதலாவது கிறகோரி அல்லது மகா கிறகோரியின் கீழ் பெனடிக் சபையின் துறவிகள் மிகவும் பிரசித்திபெற்ற மறைத்தூதுவர்களாயினர். இவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கையின் செய்தியாளர்களாகவும், மேற்கு கலாசாரத்தின் பாதுகாப்பாளரும் நாகரீக வாழ்க்கை முறைகளை அறிமுகப்படுத்துபவர்களுமாயினர். கல்விக்காக அவர்கள் ஆற்றிய பணியானது இங்கிலாந்திலுள்ள மிகச் சிறந்த பல்கலைக்கழகமான ஒக்ஸ்வேட்டும், கேம்பிரிஜ்ஜும் ஆகிய கல்வி நிலையங்களினால் ஆற்றப்பட்ட பணியையும் விட அதிகமானதென வரலாறு கூறுகிறது.
- பெனடிக் சபைக்குப் பின்னர் புனித பற்றிக் (கி.பி.461) அயர்லாந்தில் கிறிஸ்தவ மறையைப் பரப்பியதோடு கடும் தவ வாழ்க்கைமுறையொன்றையும் அறிமுகப்படுத்தினார்.
- புனித கொலம்பா எனும் அயர்லாந்து இன துறவி செல்டிக் துறவற மடத்தை ஸ்கொட்லாந்தின் இயோனா எனுமிடத்தில் 563இல் ஆரம்பித்தார். இவற்றின் பெறுபேறாக ஆறாம் நூற்றாண்டில் பிரித்தானிய தீவுகளில் அனேகர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். இந்நூற்றாண்டின் இறுதியானது திருச்சபையின் வரலாற்றில் மத்திய காலத்தின் ஆரம்பமெனக் கருதப்பட்டது.

### 6.3.1.3. ஏழாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ திருச்சபை

**திருச்சபையும் அரசும்**

- அடுத்ததாக ஏழாம் நூற்றாண்டில் மனமாற்றத்தினால் புதிய கிறிஸ்தவர்கள் திருச்சபையில் பெருமளவில் சேர்ந்த காலமாயிருந்தது. எனினும், இக்காலத்தில் திருச்சபைக்கும் அரசுக்குமிடையில் மோதல்களும் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது.
- திருச்சபைக்கும் பேரரசுக்குமிடையில் நிலவிய மிக நெருங்கிய தொடர்பின் பெறுபேறாக கிறிஸ்தவ இராச்சியமொன்று (Christendom) உருவாகியது. இதன் வழியாக அனேக நன்மைகள் உள்ள நிலை திருச்சபைக்கு உருவாகியதோடு சிற்சில முறையற்ற பாதிப்புகள் இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணமாய் அமைந்தன. உதாரணமாகத் திருச்சபையின் தலைவர்களை நியமித்தலும் சபையிலிருந்து நீக்குதலும் சிற்சில சந்தர்ப்பங்களில் பேரரசுகளின் விருப்பத்தின்படி நிகழ்ந்தமையும், பேரரசுக்கு எதிராக நிலவிய யுத்தத்துக்காக சபையின் ஒத்துழைப்பு நல்குதலும் எதிர்பார்க்கப்பட்டதை இங்கு குறிப்பிட்டுக் கூற முடியும். (அரசு சபையில் அதிகார பலத்தோடு செயலாற்றுதல்.)
- இக்காலத்தில் மேற்கு உரோமன் கத்தோலிக்க சபையும், கிழக்கு ஓர்தடொக்ஸ் சபைக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. சபையின் உண்மையான உத்தியோக பூர்வமான போதனைகளுக்கு எதிராக சமய பேதக படிப்பினைகளும் தலைதூக்கின.

**கலையும் ஆன்மீகமும்**

- இத்தோடு இணைந்ததாக மிகவும் உயர் முன்னேற்றம் மத்திய காலத்தில் ஏற்பட்டமை வெளிப்படையானதாகும். மிகப் பிரசித்தி பெற்ற புனிதர்களும், கற்றோரும் உருவாகினர். கிறிஸ்தவ கலாசாரத்தில் கிறிஸ்தவ கலையில் இலக்கியங்களில் கட்டிட நிர்மாணக்கலையிலே, இறையியலிலே ஏற்பட்ட முன்னேற்றத்தைக் காணமுடியும்.
- புதிய துறவற சபைகள் உருவாகியதோடு, பழைய துறவற சபைகள், பிரிவுகள் மறுசீரமைக்கப்பட்டன. இது சபைக்குப் புதுவாழ்வைப் பெற்றுக்கொடுத்தது. இக்காலகட்டத்தில் சபையில் வீழ்ச்சியொன்று ஏற்பட்டபோதும் இறைவனின் உதவியால் அவற்றை வெற்றி கொள்ள சபையினால் முடிந்தது.
- அரசியல் இயக்கங்கள் சபையை ஐரோப்பாவுக்கு வெளியே மறைத்தூதுப் பணிக்காக எல்லை கடந்து ஐரோப்பாவில் கிறிஸ்தவ சபையை சக்தி பெறச் செய்ததற்கான சந்தர்ப்பமாக இது அமைந்தது.

## 6.3.1.4. எட்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ திருச்சபை மறைபரப்புப் பணி

- எட்டாம் நூற்றாண்டில் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்த மக்களின் மனமாற்றப் பணிகள் இன்னும் அதிகமாக முன்னேற்றமடைந்தன.
- கி.பி. 723-739 எனும் காலத்தில் பெனடிக் சபையைச் சேர்ந்த ஆங்கில இன துறவியான வின்பிரட் அல்லது பிற்காலத்தில் ஜெர்மனியின் திருத்தூதராக அழைக்கப்பட்ட புனித போனிபஸின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த மறைத்தூதுப் பணி ஐரோப்பா முழுவதும் பரவியது. புனித போனிபஸினால் ஆற்றப்பட்ட அருங்குறி மிக்க (புதுமையான) செயல்கள் அனேகரின் மனமாற்றத்துக்குக் காரணமாய் அமைந்தது (தேவர்களின் மரமெனக் கருதப்பட்ட மிகப்பெரிய மரத்தை ஆலயமொன்றினைக் கட்டுவதற்காக வெட்டும்போது அந்தத் தேவர்களிடமிருந்து எந்தவொரு விபத்தும் ஏற்படாமை). இவர் ஐரோப்பாவில் கிறிஸ்தவ விசுவாசத்தைத் திருத்தந்தையின் வழிகாட்டலின் கீழ் கட்டியெழுப்பினார்.

**கல்வித் துறை**

- பெரிய சாள்ஸ் அரசன் கல்வி நிலையை முன்னேற்றுவதற்காக உழைத்தார். இதற்காக, அவர் தனது செயலாளரான ஆங்கில இனத் துறவியான அல்குயின் (Alcuin) இன் தலைமைத்துவத்தின் கீழ் அறிவுள்ள ஒரு குழுவினரைத் தனது அரச மாளிகையில் ஒன்று சேர்த்தான். தத்தமது மறைமாவட்ட ஆலயங்களுக்குப் பக்கத்தில் பாடசாலை ஒன்றினை ஆரம்பிக்குமாறு ஒவ்வொரு ஆயர்களுக்கும் அரசன் கட்டளையிட்டான்.
- எனினும், இவரது மரணத்தின் பின்பு சாள்ஸ் பேரரசு இரண்டாகப் பிளவுபட்டமையினால் கல்வியை முன்னேற்றுவதற்கு இவர் எடுத்த படிகள் வீழ்ச்சியடைந்தன. துறவற மடங்களைத் தவிர ஐரோப்பா முழுவதும் அறிவிலும் ஆன்மீகத்திலும் குறைந்த நிலையொன்று ஏற்பட்டது.

## 6.3.1.5. ஒன்பதாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ திருச்சபை மேற்குப் பேரரசின் வீழ்ச்சி

- இக்காலகட்டத்தில் புற மற்றும் உள் தாக்கங்களும், கிழக்கிலிருந்து வந்த வைக்கின்ஸ் (Vikings) கோத்திரத்தாரினதும், ஹங்கேரிய கிழக்கு, தெற்குத் திசைகளிலிருந்து வந்த இஸ்லாம் ஆக்கிரமிப்பாளரினாலும் பேரரசனின் பலம் நலிவடைந்து காணப்பட்டது. இதனால், பெரிய சாள்ஸ் அரசனின் காலத்தில் பேரரசில் நிலவிய அமைதியும் ஒற்றுமையும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

- இந்த மேற்குப் பேரரசின் வீழ்ச்சியானது மேற்கு கத்தோலிக்க திருச்சபையின் வீழ்ச்சிக்கும் காரணமாயமைந்தது. முதலாவது நீக்கிலஸ் திருத்தந்தையின் பின்னர் திருச்சபையை சிறந்ததாகவும் அதிகாரத்தோடும் நடத்துவதற்கு திருத்தந்தையர் எவரும் உருவாகவில்லை.
- இதன் பெறுபேறாக கி.பி. 858-879 வரையான காலத்தில் உரோமையின் திருத்தந்தைக்கும் கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாக்களுக்குமிடையே சபையில் பிரிவினை (Schism) ஏற்படலானது. முதலாவாது நீக்கிலஸ் திருத்தந்தையின் அதிகாரப் பேராசை இந்த வீழ்ச்சிக்கு காரணமாயிற்று. அவ்வாறே, கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாவான போஷியுஸ் (Photius)னால் பிலியோக்கே (Filioque) எனும் பகுதி நிசேயா விசுவாசப் பிரமாணத்தில் சேர்த்துக் கொண்டதோடு, உத்தரிப்பு ஸ்தலம் பற்றிய திருச்சபையின் போதனைகளும் மேலும் விடயங்கள் தொடர்பான கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டன. இதுவும் இச்சபையின் பிரிவினைக்குக் காரணமாகியது.
- எனினும், பின்னர் போஷியுஸ் தனது முறைப்பாடுகளை மீளப்பெற்றுக்கொண்டார். இவர் அக்காலத்திலிருந்த புதிய திருத்தந்தையர்களோடு இணைந்து செயலாற்றியதோடு அதன் பலனாக கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில் கிழக்கு, மேற்கு ஆகிய சபைகளுக்கிடையில் அவதானிக்கக் கூடிய ஒற்றுமையொன்று ஏற்பட்டது.
- எனினும் சகல பிரச்சினைகளும் சரியான முறையில் தீர்வு காண முடியாமை பிற்காலத்தில் அதாவது, கி.பி. 1054இன் மட்டில் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு, மேற்குகளுக்கிடையில் ஏற்பட்ட பெரிய சபையின் பிரிவினைக்கு வித்திட்டது.
- திருச்சபையில் குருத்துவ, துறவறத்தோரை இவ்வுலத் தலைவர்கள் ஆட்சி செய்ததோடு அவர்களில் அனேகர் கல்வியறிவற்றவர்களும் நம்பிக்கையோடான பிரம்மச்சாரிய வாழ்க்கை நடத்தாதவர்களாகவும் இருந்தனர். துறவற மடங்கள் அவர்களுக்குப் பரம்பரையாக வந்த வாழ்க்கை முறையிலிருந்து அதிகமாக விலகி லௌகீகத்தில் உழன்று அழிவை நோக்கிச் சென்றன. திருச்சபையில் நிலவிய இவ்வாறான இருண்ட காலத்திலும் இறைவன் தனது தூதுப்பணியை திருச்சபையின் வழியாக நிறைவேற்றும் பொருட்டு செயலாற்றினார்.
- ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியில் இரு துறவிகளான மெதோடியசும் சிறிலும் கிழக்கு ஐரோப்பாவில் காஷார்ஸ் (Khazars) மற்றும் ஸ்லாவிக் கோத்திர மக்கள் மத்தியில் கிறிஸ்தவ மறையைப் பரப்பும் தூதுப் பணிக்கு உதவி செய்தனர். கிறிஸ்தவ விசுவாசத்துக்கு மேலதிகமாக இந்த புதிய மக்களான ஸ்லாவிக் கோத்திர மக்களுக்கு புனித சிறில் புதிய அரிச்சுவடி முறையொன்றையும் அறிமுகப்படுத்தினார். இந்தப் புதிய அரிச்சுவடியும் மொழியும் தமது கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான கருவியாக அமைந்தன.

## 6.3.2. மத்திய காலம் (10-12ஆம் நூற்றாண்டு)

### 6.3.2.1. பத்தாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபை

**ஓட்டோ மன்னன்**

- இது திருச்சபையின் ஆன்மீகம் நலிவடைந்திருந்த காலமாகும். திருத்தந்தையின் உத்தியோக அதிகாரம் உரோமைப் பேரரசின் முக்கிய பதவி நிலைகளிலிருந்த தகுதியற்ற உரோமைப் பிரபுக்களினால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. இதற்கு உதாரணமாக பன்னிரண்டாம் ஜோண் திருத்தந்தையாவார் (கி.பி.955-964). அவர் தீய நடத்தைமிக்க திருத்தந்தையாக இருந்ததோடு இதன் பெறுபேறாக கத்தோலிக்க திருச்சபை முதலாவது ஓட்டோ எனும் ஜேர்மனிய இனத்தவரால் ஆட்சி செய்யப்பட்டது.

- ஓட்டோ உட்பட அவருக்குப் பின் வந்த பேரரசர்கள் தமது பேரரசுக்குள் திட்டமொன்றை நிறுவுவதற்குக் கத்தோலிக்க திருச்சபையை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இங்கு பேரரசர்கள் தங்களது விருப்பம்போல பொதுநிலையினரை திருச்சபையின் பதவிகளுக்கு தேர்ந்தெடுத்ததோடு திருச்சபைக்கு ஆயர்களையும் திருத் தந்தையர்களையும் நியமிப்பதும் அவர்களுக்கு விருப்பமான விதத்தில் நிகழ்ந்தன.
- எனினும், இறையருளினால் இவ்வாறு ஜெர்மனிய பேரரசர்களால் நியமிக்கப்பட்ட திருத்தந்தையர்கள் மிகவும் நல்லவர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருந்தனர். உதாரணமாக இவ்வாறு நியமிக்கப்பட்ட இரண்டாவது சில்வெஸ்டர் திருத்தந்தையை (கி.பி.999-1003) குறிப்பிடலாம். இவர்களது உதவியானது அக்காலத்தில் நிலவிய மேற்கு சபையின் முன்னேற்றத்துக்குக் காரணமாகியது.

## துறவற வாழ்வில் மறுமலர்ச்சி

- துறவற வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மறுசீரமைப்புகள் இக்காலத் திருச்சபையில் உருவாகிய புத்துணர்ச்சிக்கு பெருமளவில் பங்களிப்புச் செய்தன.
- பிரான்சில் குளூனி எனுமிடத்தில் கி.பி. 910இல் ஆரம்பிக்கப்பட்ட துறவற மடம் இங்கு முக்கிய இடத்தை வகிக்கிறது. குளூனி துறவற சபை ஏனைய பெனடிக் துறவற சபைகளிலிருந்து வேறுபட்டது. பெனடிக் துறவற மடங்கள் மிகவும் சுதந்திரமாகச் செயற்பட்டதோடு குளூனி துறவற மடங்கள் முக்கிய துறவற மடமாகவும் மிகக் கடுமையாகவும் இணைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு துறவற இல்லங்களிலும் துறவற மடங்களுக்குப் பொறுப்பாயிருந்த துறவிகள் குளூனி துறவற மடாதிபதிக்குத் தாழ்மையோடும் கீழ்ப்படிவோடும் பணியாற்றினர். இச்சிறிய துறவற மடங்களில் தலைமைத் துறவிகள் வருடந்தோறும் குளூனி துறவற மடாதிபதியுடன் ஒன்று சேர்ந்து கலந்துரையாடலொன்றை நடாத்தினர். இந்தத் துறவற சபைகள் ஏனைய பெனடிக் துறவற சபைகளுக்கும் முன்மாதிரிகையாக இருந்தமையினால் கி.பி. 1016இல் அக்காலத்திலிருந்த திருந்தந்தையான எட்டாம் பெனடிக்டினால் குளூனி துறவற சபை மேலும் வளர்ச்சியடைய இடவசதி செய்து கொடுக்கப்பட்டது. பிற்காலத்தில் இவர்களும் செபத்துக்கும் உடலை வருத்தி வேலை செய்தவற்கும் அதிக முக்கியத்துவத்தை அளித்தனர். குளூனி துறவற மடங்கள் பிற்காலத்தில் ஐரோப்பாவில் மிகவும் செல்வந்த துறவற மடங்களாக விளங்கின.
- துறவிகள் தமது சபையின் பிரதான தலைவரை நியமித்ததோடு அவர்கள் திருத்தந்தைக்கு அடுத்தபடியாக இருந்தனர். பொதுநிலையினருக்கு அங்கு எவ்வித அதிகாரமும் இருக்கவில்லை. குளூனி துறவற மடத்தின் சிறந்த செயற்பாடுகளின் காரணமாக அனேக ஆயர்களும் கர்தினால்மார்களும் தத்தமது மறை மாவட்டங்களிலே தமது துறவற மடங்களை அமைத்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டனர்.
- அதேவேளை நெதர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் குளூனியர்களுக்கு அழைப்புக் கிடைத்தது. குளூனியர்களின் மறுசீரமைப்புகள் ஏனைய துறவற மடங்களிலும் மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கு காரணமாகியதோடு புதிய துறவற வாழ்க்கை முறைகளை உண்டாக்குவதில் தாக்கங்களை ஏற்படுத்தியது.
- இதன் பலனாக புனித றொமோல்ட் அடிகளினால் ஆரம்பிக்கப்பட்ட கம்ல்டோலெஸ் துறவற வாழ்வு, புனித புரூனோ அடிகளாரினால் ஆரம்பிக்கப்பட்ட கார்த்தூஷியன் துறவற வாழ்வும் விசேட இடத்தைப் பெற்றன.
- இது கத்தோலிக்க சபையின் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியதோடு கி.பி. பதினோராம் நூற்றாண்டில் துறவற மடங்கள் திருச்சபையிலே புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மிக உதவியாயிருந்தமையால் அனேக துறவிகளைத் துறவற மடங்களிலிருந்து வெளியேற்றி பல்வேறு மறைமாவட்டங்களில் புத்துணர்ச்சியை உருவாக்கும் வகையில் அம்மறை மாவட்டங்களில் ஆயர்களாக நியமிக்கப்பட்டனர்.

- திருத்தந்தையின் வழிகாட்டலின் கீழ் கட்டியெழுப்பப்பட்ட குளூனி துறவற இல்லங்கள் திருத்தந்தையின் ஆன்மீக, ஒழுக்க அதிகாரத்திலும் புத்துயிர் அளித்தது. எஞ்சிய இரண்டு நூற்றாண்டுகளிலும் திருத்தந்தையின் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஏழாம் கிறகோரி, இரண்டாம் ஊர்பான், இரண்டாம் பாஸ்கல் ஆகியோர் முதலில் குளூனி துறவற சபையைச் சேர்ந்தவராவர்.

### 6.3.2.2. பதினோராம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபை

- பதினோராம் நூற்றாண்டில் ஓட்டோனியர்களின் பேரரசிலிருந்த ஜெர்மனிய பேரரசர்கள் பெரும்பாலும் மேற்குச் சபையை ஆட்சி செய்தனர். சபையின் நிலங்களின் உரிமையை அவர்களின் கீழ் வைத்திருந்ததோடு திருத்தந்தையர்களை, ஆயர்களை நியமிப்பதும் அவர்களது மனதின்படி இந்தக் காலத்தில் நிகழ்ந்தது.
- இதன் பலனாக இலௌகீக இயக்கங்களினால் திருச்சபைக்கு சுதந்திரம் அற்றுப் போகுமென்பதை அக்காலத்திலிருந்த திருத்தந்தையர்களும் ஆயர்களும் விளங்கிக் கொண்டனர்.

### திருத்தந்தை ஏழாவது கிறகோரியின் மறுமலர்ச்சி

- கி.பி. 1073இல் கர்தினால் ஹில்டே பிரான்ட் ஏழாவது கிறகோரி எனும் பெயரில் திருத்தந்தையாக பொறுப்பேற்றபின் இந்நிலை மந்த நிலையை நோக்கிச் சென்றது. கி.பி. 1075இல் Dictus Papae எனும் ஆவணத்தில் திருத்தந்தையர்கள் தமது அதிகாரத்தை திருத்தூதர்களின் வழியாக கிறிஸ்துவிடமிருந்து பெற்றுள்ளதாகவும் அதனால், அவர்களிடமுள்ள அதிகாரம் மிக உயர்ந்ததெனவும் குறிப்பிட்டார். திருத்தந்தை ஏழாவது கிறகோரியின்படி திருத்தந்தைக்கு திருச்சபைக்குள் உலகளாவிய அதிகாரம் உண்டென்பதோடு அதன்படி பேரரசர்களையும் தமது அதிகாரத்தினால் நீக்கவும் இறைவனின் சட்டத்துக்கும் திருச்சபையின் சட்டத்துக்கும் அனுகூலமாக இல்லாத சட்டத்தை மாற்றுவதற்கும் அவர்களுக்கு ஆற்றல் உண்டு.
- திருத்தந்தையின் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி திருத்தந்தை கிறகோரி திருச்சபையின் அனைத்துப் பிரிவுகளிலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்தார். இவ்வாறு செய்வதனால் இறைவனின் அருளினால் திருத்தந்தையொருவரின் வழியாக தமக்குள்ளே மறுசீரமைப்பொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு திருச்சபைக்கு ஆற்றல் உண்டென வெளிப்படுத்தினார். இவர் முதலாவதாக பிரம்மச்சாரியத்தைப் பாதுகாக்கும் வாக்குறுதிக்கு பிரமாணிக்கமாக இருப்பதற்கும், பிரபுக்களிடமிருந்து விலகியிருப்பதற்கும் எந்த விதத்திலும் அருளடையாளங்களை வழங்கும்போது பணம் அறவிடக்கூடாதெனவும் குருமாரிடம் கடுமையாகக் கேட்டுக் கொண்டார். இவ்வாறு செய்யாதவர்களுக்கு எதிராக மிகக் கடும் நடவடிக்கை எடுத்ததோடு ஒரு காலத்தில் சிலரை சபையிலிருந்து விலக்கியுமுள்ளார்.
- திருத்தந்தை கிறகோரி எந்தளவு அதிகாரத்தோடு செயற்பட்டாரென்பதைக் கூறுகையில் அக்கால பரிசுத்த உரோமையிலிருந்த நான்காம் ஹென்றி பேரரசனும் சபையின் மறுசீரமைப்புக்காக உதவி செய்யாதமையால் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டார். இதன் பலனாக பின்னர் திருத்தந்தை கிறகோரி நாடுகடத்தப்பட்டதோடு அக்காலத்திலேயே அதாவது, கி.பி. 1085இல் இவர் மரணமடைந்தார்.
- துறவற மடங்களின் உதவியோடு திருத்தந்தை கிறகோரி திருச்சபைக்குள் மிகப் பாரிய அளவிலான புதிய மறுமலர்ச்சியை உருவாக்கியதோடு இலௌகீக, அரசியல் இயக்கங்களில் இருந்து திருச்சபையை விடுவித்துக் கொள்வதற்கு மிக ஊக்கத்துடன் முயன்றார். இவர் திருச்சபையின் சம்பிரதாயங்களுக்கேற்ப திருத்தந்தையுடைய அதிகாரத்தையும் தலைமைத்துவத்தையும் மீண்டும் திருச்சபைக்குப் பெற்றுக் கொடுத்தார். இவருக்குப் பின் பதினோராம் நூற்றாண்டில் இரண்டாவது ஊர்பன் (கி.பி.1088-1099) இரண்டாவது பாஸ்கல் (கி.பி.1099-1118) ஆகிய திருத்தந்தையர்களும் திருச்சபையின் புதிய மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர்.

## கீழைத்தேய மேலைத்தேய சபைகளின் பிளவு

- பதினோராம் நூற்றாண்டில் திருச்சபையின் வரலாற்றிலே இடம்பெற்ற துரதிஷ்ட சம்பவம் என கி.பி. 1054இல் கிழக்கு, மேற்கு சபைகளுக்கிடையே ஏற்பட்ட திருச்சபையின் பிளவு (The Schism between the Eastern Church and the Western Church) குறிப்பிடப்படுகிறது.
- கிறிஸ்தவ சபையானது கத்தோலிக்க சபை, ஓர்த்தொடொக்ஸ் சபை எனப் பிளவுபட்டது. கத்தோலிக்க சபையின் தலைவராக திருத்தந்தையும், ஓர்த்தொடொக்ஸ் சபையின் தலைவராக பிதாப்பிதாவும் (Patriarch) உள்ளனர். இந்த சபையின் பிளவுக்கு இரு முக்கிய காரணங்கள் உள்ளன. ஒன்று சபையின் தலைமைத்துவம் (Dealing with the Primary of the Pope); மற்றையது இறையியலாகும் (Dealing with the filioque).
- உரோமன் திருத்தந்தையின் தலைமைத்துவம் முழுத் திருச்சபைக்கும் பொதுவானதென மேற்கு சபை ஏற்றுக்கொண்டது. உரோமின் ஆயரும், கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாவும் திருச்சபையில் சமமான தலைமைத்துவம் வகிப்பவரென்பது கிழக்கு சபையின் கருத்து. இது திருச்சபையின் பிரிவுக்குக் காரணமாகியது. நிசேயா விசுவாசப் பிரமாணத்துக்கு கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாவால் ''பிலியோகே'' (Filioque) எனும் கூற்றைச் சேர்த்துக் கொள்வது அடுத்த காரணமாகும். இதனால், இச்சபைகள் இரண்டிலும் ஒரு சிலரை சபையிலிருந்து நீக்குதலும் இடம்பெற்றது.
- இந்த முரண்பாடுகள் கி.பி. 1965இல் திருத்தந்தை ஆறாவது பவுல், அக்காலத்திலிருந்த அதெனகோறஸ் பிதாப்பிதாவைச் சந்தித்து நட்புடன் உரையாடல் நடாத்தும்வரை நிலைத்தது. இதன் பலனாக இன்று இச்சபைகள் மத்தியில் ஒருமைப்பாடு நிலவியது.

### 6.3.2.3. பன்னிரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபை

## சிலுவை யுத்தங்கள் (Crusades)

- இக்காலத்தில் அரசியல் புரட்சிகளைச் செய்வதற்கு பெரும்பாலும் திருத்தந்தையர்கள் முற்பட்டமைக்கான காரணம் திருச்சபையின் சுதந்திரத்தை இலௌகீக இயக்கங்களிலிருந்து பாதுகாப்பதற்கேயாகும். இங்கு திருத்தந்தையர்கள் படையினரின் அதிகாரத்தையும் யுத்த வலிமையையும் பயன்படுத்திக் கொண்டு தமக்கு எதிரானவர்களுக்கு விரோதமாக எழுந்து நின்றனர்.
- இவற்றைத் தவிர இவ்வாறாகப் போர் செய்தலானது புனித பூமியை இஸ்லாமியரிடமிருந்து மீண்டும் பெற்றுக் கொள்ளவும், கிறிஸ்தவ விசுவாசத்தையும் கிறிஸ்தவ யாத்திரிகர்களையும் அவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கும் திருத்தந்தையர்களால் நடாத்தப்பட்டது.
- இவ்வாறான போர்கள் சிலுவைப் போர்கள் என அழைக்கப்பட்டன. மிக முக்கிய திருச்சபைத் தந்தையான புனித அகஸ்டினால் முன்வைக்கப்பட்டிருந்த ''நீதியான - யுத்தம்'' எனும் எண்ணக்கருவினால் இவ்வாறு சமயத்தையும் விசுவாசத்தையும் பாதுகாப்பதற்காக போர்களை நடாத்துதல் நல்ல செயலென அப்போது திருச்சபை கவனத்தில் கொண்டது.
- முதல் முறையாக சிலுவைப்போர் நடாத்திய இரண்டாவது ஊர்பன் பேரரசன் தனியே புகழ் மற்றும் இலௌகீக சுக செல்வங்களைச் சேர்த்துக் கொள்ளும் நோக்கத்தில் இவ்வாறான போர்களில் ஈடுபட வேண்டாமென தனது படையினருக்குக் கட்டளையிட்டிருந்தார்.
- சிலுவைப் போர்களின் நோக்கம் நல்லதெனினும் மனித பலவீனங்களின் காரணமாக அவை மிகக் கொடூர பெறுபேறுகளையும் ஏற்படுத்தியுள்ளன. முதலாவது சிலுவைப்போரில் அந்தியோக்கில் கிரேக்க பிதாப்பிதாவை அங்கிருந்து வெளியேற்றுவது அக்காலத்திலிருந்த சபைப் பேதகம் மேலோங்கக் காரணமானதோடு போரின் முடிவில் எருசலேமைக் கைப்பற்றுவதற்கு முடிந்தபோதும் போரினால் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் இறந்தனர்.

- இரண்டாம் சிலுவைப்போர் கி.பி. 1146இல் நடந்ததோடு அது வெற்றியீட்டாத முயற்சியாகியது.
- கி.பி. 1189இல் நடந்த மூன்றாவது சிலுவைப் போரில் மீண்டும் எருசலேமைக் கைப்பற்றக் கூடியதாக இருந்தாலும், இதன் வழியாக புனித பூமிக்குச் செல்லும் யாத்திரிகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் திருச்சபையால் முடிந்தது. இந்தச் சிலுவைப்போர்கள் பெரும்பாலும் கிழக்கு, மேற்கு சபைகளுக்கிடையில் நடந்ததோடு சபையில் பேதத்தை மென்மேலும் மேலோங்கச் செய்தது.

**சபையின் மறுசீரமைப்பும் முதல் சமய பேதகங்களுக்கு முகங்கொடுத்தலும்**

- கி.பி. 1098இல் மொலேஸ்மாவின் துறவியான றொபர்ட்டினால் ஆரம்பிக்கப்பட்ட சிஸ்டர்சீயன் துறவறச் சபையானது பெனடிக் துறவற சபைக்குள்ளும் திருச்சபைக்குள்ளும் ஆன்மீக புதிய மறுமலர்ச்சியை கி.பி. பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் ஏற்படுத்தியது.
- இப்புது மறுமலர்ச்சியினால் திருச்சபையின் செயற்பாடுகள் பற்றிக் கூறுகையில் திருச்சபை நற்செய்திக்கமைய வாழ்க்கை நடாத்தவில்லையென விமர்சித்த திருச்சபைக்கு எதிரான குழுவொன்று உருவானது. அத்தோடு வல்தென்சியன்கள் (Waldensians) திருச்சபையின் செல்வந்த, சுகபோக வாழ்க்கை நிலையை விமர்சித்ததோடு ஏழ்மையை அறிமுகப்படுத்தினர். திருச்சபையோடு முரண்பட்ட அவர்களைத் திருச்சபை எதிர்த்தது.

**கிறிஸ்தவ இறையியலிலும் கிறிஸ்தவ கலாசாரத்திலும் ஏற்பட்ட வளர்ச்சி**

- துறவற சபைகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சியினால் பேராலயங்களை அண்டிய பகுதிகளில் கட்டியெழுப்பப்பட்ட பாடசாலைகள் வழியாக திருச்சபைக்குப் புத்துயிரைக் கொடுத்தன.
- ஆரம்ப காலங்களில நிலவிய திறந்ததும் சதுர வடிவானதுமான உரோமைய கட்டிடங்கள் படிமுறையாக மிக உயர்ந்த கூரான வடிவங்களைக் கொண்ட கோதிக் (Gothic) பாணியின் கட்டிடங்களாகத் திகழ்ந்தன.
- அக்காலத்திலிருந்த கிறிஸ்து அரசனின் திருவுருவத்திற்குப் பதிலாக துன்புறும், சிலுவையில் மரணித்த இயேசுவின் திருவுருவங்களுக்கு முக்கிய அவதானம் கிடைக்கும் பொருட்டு ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இத்திருவுருவங்களின் வழியாக வாழ்க்கையில் துன்பப்படும், பிரச்சினையுள்ள, உறுதியற்ற தன்மைகளுக்கு முகங்கொடுக்க அவர்கள் முயற்சி செய்தனர்.
- தனிப்பட்ட பக்தி முயற்சிகளுக்கும் யாத்திரைகளுக்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டமையால் புனிதர்களின் பக்தியும் தேவதாயின் பக்தியும் வளர்ச்சியடைந்தது. இவ்வாறே, நற்கருணைக்கும் அதில் உள்ள உண்மையான கிறிஸ்துவின் பிரசன்னம் பற்றிய நம்பிக்கைக்கும் திருப்பலியில் கொடுக்க வேண்டிய அவதானத்தையும் அவர்கள் கொடுக்கத் தொடங்கினர். இந்த யாத்திரைகளும் பக்தி முயற்சிகளும் திருச்சபையின் பல்வேறு திருச்சங்கங்கள் வழியாக அனுமதிக்கப்பட்டதோடு தைரியமும் கொடுக்கப்பட்டது.
- அப்பமும், திராட்சை இரசமும் மெய்யாகவே இயேசுவின் திருச்சரீரமாகவும் திரு இரத்தமாகவும் மாறுகின்ற செயற்பாட்டை அறிமுகப்படுத்துவதற்கு இறையியலைக் கற்கும்போது பயன்படுத்தப்படுகின்ற ''டிரான்சப்ஸ்டான்சிஏஷன்" (Transubstantiation) எனும் சொல்லை முதல்முறையாக இறையியலில் உபயோகிக்க அறிமுகப்படுத்தியது இக்காலத்திலேயாகும்.
- மத்திய காலத்தில் நற்கருணையைப் பெற்றுக்கொள்வதைவிட, அதனை இரு கண்களாலும் பார்த்து அவதானத்தை செலுத்திக் கொண்டிருப்பதற்கு முதலிடம் வழங்கப்பட்டது. அவ்வாறே, அக்காலத்தில் திருப்பலியும் தனியே நாடகப் பாணியைக் கொண்டதாகவிருந்தது. திருப்பலிக்கு வருபவர்கள் அதனைப் பார்த்துக் கொண்டிருந்ததோடு அது எவ்விதத்திலும் ஒற்றுமையின், ஒருமைப்பாட்டின் அருளடையாளத்தின் இயல்பைக் கொண்டிருக்கவில்லை.

- மனித அறிவுத் திறனால் மெய்யியல், இறையியல் உண்மைகளைக் கண்டுபிடித்து, அவற்றைப் பாதுகாத்து விளக்கும் படிமுறையாகிய அணுகுமுறைமையின் (Scholastic Theology) ஆரம்பமும் இறையியலைக் கற்பிப்பதற்கு பாடசாலைகளில் (The Theology of the Schools) ஆரம்பிக்கப்பட்டதும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்த மற்றுமொரு சிறந்த சம்பவமாகும். இக்கல்லூரிகளின் நோக்கம் நம்பிக்கையின் மறைபொருளையும் இறையியலையும் பற்றிய சரியான விளக்கத்தினைப் பெற்றுக் கொடுப்பதாகும்.
- திருவிவிலியம் திருச்சபைத் தந்தையர்களின் போதனைகள் தத்துவவியல் பற்றிய அறிவை உள்ளடக்கிய சுருக்கமான கற்பித்தலை முன்வைப்பது இவ் இறையியலின் முயற்சியாகும். விசுவாசத்துக்கும் அறிவுக்கும் (Faith and Reasom) இடையே ஒன்றுக்கொன்று முரணான நிலையில்லையென்பதும் (Contadictory or conflicting) ஒன்றோடொன்று இணைந்திருக்கின்ற நிலையே அங்குள்ளதெனவும் இவர் எடுத்துக் காட்டினார். எனவே, இறையியலுக்கும், தத்துவவியலுக்கும் இடையே இருப்பது முழுமையான ஒன்றுக்கொன்று முரணான நிலையில்லையென்பது இவர்களின் முக்கிய தர்க்கமாகும்.
- இதன் பலனாக பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இவ் இறையியலின் தந்தையென அறிமுகமான காண்டற்பரி புனித அன்சலம் (கி.பி.1033-1109) இறையியலுக்கு வரைவிலக்கணத்தை முன்வைத்து ‘‘இறையியல் என்பது விளக்கத்தினைத் தேடிச் செல்லும் விசுவாசமாகும்’’ (Faith Seeking understanding) என அறிமுகப்படுத்தினார்.
- பின்பு பீற்றர் அபேலார்ட் (Peter Abelard), பீற்றர் லொம்பட் (Peter Lombard) ஆகியவர்களும் மிக உயர்ந்த நிலையிலான இறையியல் போதனைகளை முன்வைத்தார்கள். பீற்றர் லெம்பாட்டினால் எழுதப்பட்ட Book of Sentences எனும் நூல் பதின்மூன்றாம் நூற்றாண்டில் முறையான இறையியல் கைந்நூலாக இருந்தது.
- பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறேஷியன் (Gratian) எனும் கமல்டோல் துறவி சபையின் போதனைகளையும் கத்தோலிக்க சபையின் சட்டங்களையும் முறையாக ஆக்கியதோடு இதன் பலனாக சபையின் சட்டங்களுக்கு விஞ்ஞான ரீதியான அடிப்படை உருவாகியது. திருத்தந்தையர்களுக்கிடையே ஏற்பட்ட அரசியல் பிரச்சினைகளினாலும் சிலவைப் போர்களினாலும் விளைந்த கசப்பான பலன்களின் மத்தியிலும் திருச்சபையில் இறைவனின் கரம் செயற்பட்டதெனவும் இக்காலத்தில் இறையியலில் ஏற்பட்ட வளர்ச்சியின் வழியாகத் தெளிவாகிறது.
- விசேடமாக பதின்மூன்றாம் நூற்றாண்டில் திருச்சபையில் ஏற்பட்ட ஆன்மீக, கலாசார, அறிவுசார் புதிய முன்னேற்றங்களுக்கு பன்னிரண்டாம் நூற்றாண்டின் அரை இறுதியில் உண்டான திருச்சபையின் வளர்ச்சிக்கு பாரிய தூண்டுதலாக இருந்தது.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு:**

- ஆரம்ப நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் திருச்சபை பரவியமை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மத்திய காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிப் பட்டியற்படுத்துவதற்கான அறிவுரைகளை வழங்கி அவற்றைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- வரலாற்றிலே திருச்சபையின் வீழ்ச்சியும் எழுச்சியும் பற்றிய கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**


- M.S. ஜேசுதாஸ் தங்கசாமி, திருச்சபை வரலாறு, நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில்.
- Alan Schreck, The Compact History of the Catholic Church, St. Paul Training School, Mumbai, 2006.
- Fr. John Laux, M.A., Church History, Tan Books and Publishers, Illinois, 1989.

**தேர்ச்சி 7.0** : ஐரோப்பாவில் திருச்சபை எதிர்கொண்ட சவால்களும் அவற்றை வெற்றி கொண்ட விதத்தையும் கற்பதோடு விசுவாசத்தை உறுதி செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : ஐரோப்பிய திருச்சபை பிளவுபட்டமை பற்றிய விடயங்களை அறிந்து கொள்வர்.

**பாடவேளைகள்** : 30

**கற்றல் பேறுகள் :**
- மத்திய காலத்தின் பின் நிலவிய சபையின் இயல்பை விளங்கிக் கொள்வர்.
- புரட்டஸ்தாந்து மற்றும் சீர்திருத்த சபைகளின் புரட்சிக்கான காரணங்களை ஆராய்வர்.
- புரட்டஸ்தாந்து மற்றும் சீர்திருத்த சபைகளின் புரட்சியைப் பற்றிய வரலாற்று விடயங்களைக் கற்பர்.
- திருச்சபை பிளவுபட்டமையால் உரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு ஏற்பட்ட தாக்கத்தை ஆராய்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**7.1.1. திருச்சபை பிளவுபட்டமைக்கான பின்னணி**
- பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமய மறுமலர்ச்சி இயக்கமே ஏற்பட்டது. ஐரோப்பாவில் வெவ்வேறு நாடுகளில் ஏற்பட்ட சமய முன்னேற்றம் இந்தப் புதிய இயக்கத்துக்கான காரணிகளாகும். இக்காலத்தில் பல்வேறு புதிய சமய இயக்கங்கள் தோன்றியமையால் சமூக, பொருளாதாரப் பிரிவுகளில் ஏற்பட்ட நகரமயமாக்கல் (Urbanization) மற்றும் வணிகவாதம் (Mercantilism), பணப் பயன்பாடு, அச்சுக்கலை, இயந்திரக்கலை, மத்திய வர்க்கத்தின் உதயம், அடிக்கடி உருவாகிய விவசாயக் கழகங்கள், மறுமலர்ச்சி, சிந்தனைப் புரட்சி ஆகிய அனைத்துப் பிரிவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தின.
- மத்திய காலத்தில் கத்தோலிக்க சபையின் குறைபாடுகள் இருந்தன என்பதை மறைக்க முடியாது. கத்தோலிக்க சபையின் ஆரம்ப காலத்தை மத்திய காலத்தோடு ஒப்பிடும்போது கத்தோலிக்க சபை இறையியல் மற்றும் ஒழுக்கத்திலும் மிகவும் கீழ் மட்டத்தில் இருந்தது. லூத்தர் திருத்தந்தையின் வரையறையற்ற அதிகாரங்களுக்கும், வழுவாவரத்துக்கும் (Infallibility) எதிரான விடயங்களை முன்வைத்தார். பொதுநிலை மக்களுக்கு திருவிவிலியத்தைப் பயன்படுத்துவதற்கும் பரிசீலிப்பதற்கும் திருச்சபையினால் எழுந்த வரையறைகளையும் அங்கு ஏற்றுக்கொள்ளவில்லை. அக்காலத்தில் கத்தோலிக்க திருச்சபையில் நிலவிய துறவற வாழ்க்கை முறையும் அவர்களின் விமர்சனத்துக்குள்ளாகியது.
- பொதுநிலை மக்களின் சமய வாழ்க்கையைவிட குருத்துவ துறவற வாழ்க்கை உயர் நிலையிலுள்ளதெனும் கருத்தை ஏற்க மறுத்த மறுசீரமைப்புவாதிகள் மரியாவின் பரிந்துரைக்கும் தன்மையையும் புனிதர்களின் பக்தியையும் நம்பிக்கையையும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். மத்திய காலத்தில் கத்தோலிக்க சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அருளடையாளங்களில் திருமுழுக்கு, திருப்பலி என்பவற்றை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். குருவுக்கும் பொதுநிலையினருக்குமிடையே நிலவிய வேறுபாட்டை இல்லாமற் செய்து கிறிஸ்தவர்கள் அனைவரும் இறைவனால் குருத்துவத்துக்கு அழைப்புப் பெற்றவர்களென அவர்கள் கூறினர். இதன் வழியாக குருக்களின் அதிகாரத்துக்குட்பட்ட பொதுநிலை மக்களை அகற்றுவதற்கு முயற்சி

எடுத்தனர். மறுசீரமைப்பு வாதிகளின் இச்செயலுக்கு எதிராக கத்தோலிக்க சபையின் ஏனையவர்கள் முறைப்பாடு செய்யததோடு, அதற்குப் பதிலாக லூத்தர் தமது முயற்சியை திருச்சபையை அதன் ஆரம்ப இயல்பை நோக்கிக் கொண்டு செல்வதே எனக் கூறினார். மறுசீரமைப்புவாதிகள் இறையியலை விசுவாசத்துக்குள் இறைவனை மையப்படுத்துகின்றனர். அவர்களுக்கிடையே பல இறையியல் கருத்துக்கள் நிலவின.

### 7.1.2. மாட்டின் லூத்தரின் புரட்சி (கி.பி. 1483 - 1546)

- இவர் ஜெர்மனியைச் சேர்ந்த இறையியலாளராவார். புரட்டஸ்தாந்து சீர்திருத்த முன்னேற்றத்தைத் தொடங்கியவரும் இவரேயாவார். கி.பி. 1483ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி பிறந்த இவர் 1501இல் எர்பர்ட் (Erfurt) பல்கலைக் கல்வி கற்று கி.பி.1505இல் முதுமாணி எனும் பட்டத்தைப் பெற்றார். கி.பி.1507இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் கி.பி.1510இல் சென்றார். இப்பிரயாணத்தின் போது உரோமாபுரியில் அப்போது நிலவிய ஊழல்கள் பற்றியும் சுகபோக வாழ்க்கை முறையைப் பற்றியும் தெரிந்துகொள்ள அவரால் முடிந்தது. கி.பி.1512இல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்ற லூத்தர் கற்பித்தலில் ஈடுபட்டிருந்த வேளையில் புதிய ஏற்பாட்டின் விசுவாசமும் இறையருளும் பற்றி அதிக கவனத்தைச் செலுத்தினார்.
- கி.பி.1517ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி திருச்சபையின் முறையற்ற செயற்பாடுகளை வெளிக்கொணரும் பத்திரமொன்றை வெளியிட்டார். இதில் முக்கிய கோட்பாடுகள் 95 அடங்கியிருந்தன. அத்தோடு திருச்சபையில் நிலவிய பரிபூரணபலன் (Indulgences) விமர்சனத்துக்குள்ளாகியது. பரிபூரணபலன் எனப்படுவது சிற்சில பாவங்களுக்குரிய தண்டனையிலிருந்து முழுமையாக அல்லது அரைவாசி விடுதலை பெறுவதாகும். இவ்விடுதலை பெறுவதற்குப் பணத்தைப் பயன்படுத்துவது இங்கு குற்றமாகியது. அவர் இந்த பலன்களை வியாபாரம் அல்லது தூய வியாபாரம் என அழைத்தார். இதன் பெறுபேறாக கி.பி.1520ஆம் ஆண்டு யூன் மாதம் 15ஆம் திகதி லூத்தரின் போதனைகள் கண்டனத்துக்குள்ளாகின. பின்னர் 1521ஆம் ஆண்டு ஜனவரி மாத அளவில் அவரைத் திருச்சபையிலிருந்து வெளியேற்றினர்.

### மாட்டின் லூத்தரின் கருத்துக்கள்

- எந்தவொரு மதத்தைச் சேர்ந்தவராயினும் இறைச் சட்டத்தையும் இறைவனின் விருப்பத்தையும் தனது சொந்த மெய்யறிவினாலும் கலாசாரத்தின் வழியாகவும் அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் உண்டு.
- இறையருளைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் தனித்தனியே செயற்பட வேண்டும்.
- மீட்பு இறைவனிடமிருந்து பெறுகின்ற கொடையே தவிர நற்செயல்களின் வழியாக உரிமைகோரும் ஒன்றல்ல.
- உலகில் வாழும் வரை கிறிஸ்தவர்கள் பாவிகள் போன்றே புனிதர்களுமாவர்.
- தமது சக்தியால் அல்ல, இறைவனின் உதவியை ஏற்றுக்கொள்பவர்களே புனிதர்களாவர்.
- சபைக்குள்ளும் உலகத்தினுள்ளும் பாவம் நிலவுகிறது.
- புனிதர்கள் நல்வாழ்வைப் பின்பற்றிய உன்னத முன்மாதிரிகையல்ல, இறை உதவியை ஏற்றுக்கொண்ட பாவிகளாவர்.
- நற்பிரசையாயிருப்பின் ஒருவர் இறைவனின் மன்னிப்பை வேண்டுகின்ற குற்றவாளியாவார்.
- இறைவன் எமக்கு வெளிப்படுத்துகின்ற அளவுக்கு ஏற்ப அவரைப்பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

**லூத்தர்வாதம்**

- இது பதினாறாம் நூற்றாண்டளவில் உருவாகிய ஒரு அமைப்பாகும். இதனை ஆரம்பித்தவர் மாட்டின் லூத்தராவார். இவ் அமைப்பு கட்டியெழுப்பப்படுவதற்கான காரணம் சபையினால் அவரை வெளியேற்றியமையாகும். இதன் பெறுபேறாக உரோமையின் தலைமைத்துவத்தில் நிலவிய மேற்கத்தேய கிறிஸ்தவ சபைகள் பிளவுபட்டமையாகும்.
- லூத்தர்வாதம் எனும் அமைப்புப் பற்றி அவர் மிகவும் தெளிவாக இருந்ததோடு இவ் அமைப்பு முதலாவதாக இவான்ஜலிக்கல் சபை என (Evangelical Church) அல்லது ஆக்ஸ்பேர்க் விசுவாச சபை (Augsburg Confession) என அழைக்கப்பட்டது.
  - லூத்தர்வாதத்தின் போதனைகளில் திருவிவிலியத்துக்கு மிக உயர்ந்த இடம் வழங்கப்பட்டது.
  - திருவிவிலியக் கற்கையில் அடிப்படைத் தொனிப்பொருள் கிறிஸ்து ஆவார்.
  - ஒருவர் மீட்பைப் பெற்றுக்கொள்வது அவர் செய்த புண்ணியங்களினால் அல்ல, இறைவனுடைய கொடையாகிய இறை இரக்கத்தினாலாகும்.
  - சென்ம பாவத்தினால் எல்லா மனிதரும் பாவத்தின் அடிமையாவான்.
  - மனிதன் பாவத்துக்கு அடிமையானதால் தனது மீட்பைப் பெற்றுக்கொள்ள தன்னால் முடியாது.
  - மீட்புக் கிடைப்பது விசுவாசத்தினால் அல்லது நம்பிக்கையால் மட்டுமேயாகும் (Sola fide).
  - கிறிஸ்தவ வாழ்வின் மையம் திருவிவிலியமாகும்.
  - அருளடையாங்கள் ஏழு அல்ல, இரண்டாகும். அதாவது திருப்பலி (Lord's Supper)யும் திருமுழுக்குமாகும். திருவிவிலியத்தில் குறிப்பிடப்படும் அருளடையாளங்கள் இவை மட்டுமேயாகும்.
  - ஆராதனைச் சடங்குகள் செய்ய வேண்டியது மக்களின் மொழியிலன்றி இலத்தீன் மொழியிலல்ல. இதனால் திருவிவிலியம் ஜெர்மனிய மொழியில் மொழிபெயர்க்கப் பட்டது.
  - திராட்சை இரசம், அப்பம் இரண்டும் வழங்கப்படல்.
  - சென்ம பாவத்தினால் திருமுழுக்கை குழந்தைப் பருவத்திலேயே பெற்றுக் கொடுத்தல்.
  - புனிதர்கள், கிறிஸ்தவ வாழ்வுக்கு உன்னத முன்மாதிரிகையல்ல, இறைவனின் உதவியை ஏற்றுக்கொண்ட பாவிகளாவர்.
  - ஆண் - பெண் ஆகிய அனைவரும் இறைபணிக்கான குருத்துவ அழைப்பினைப் பெறுதல்.
  - போதகர் பதவி உயர் பதவியாகும்.
  - போதகர்கள் திருமணம் செய்ய உரிமை உண்டு.
  - அப்போஸ்தலரின், நிசேயா விசுவாசப் பிரமாணங்களை ஏற்றுக்கொள்ளல்.

## 7.1.3. கல்வினும் சுவிங்கிலியும் (Calvin and Swingli)

### 7.1.3.1. ஜோன் கல்வின் (கி.பி.1509 - 1564)

- பிரான்சில் பிறந்த ஜோன் கல்வின் (John Calvin) பரீஸ் நகரில் இறையியலையும் சட்டத்தையும் கற்றுத் தனது வாலிப வயதிலேயே லூத்தரின் புரட்டஸ்தாந்து சீர்திருத்த அமைப்புகளுக்கு தலைமைத்துவம் வகிப்பதற்கு முன்வந்தார். பின்னர் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவா நகரில் வாழ்வதற்காகச் சென்ற அவர் கடும் சட்டதிட்டங்களுள்ள கிறிஸ்தவ வாழ்வை சபையில் மீண்டும் அறிமுகப்படுத்தினார். ஸ்கொட்லாந்தில் ஜோண் நொக்ஸ் (John Knox கி.பி. 1513 - 1572) கல்வினின் இப்புதிய இறையியல் கல்லூரிகளை விளக்கி அந்தப் படிப்பினைகளை தனது நாட்டுக்கு எடுத்துச் சென்று பிரஸ்பிடேரியன் சபையை உருவாக்கினார். கல்வினினால் எழுதப்பட்ட முக்கிய நூலானது கி.பி. 1536இல் வெளியிடப்பட்ட ''கிறிஸ்தவ மறையின் நிறுவனங்கள்''

எனும் நூலாகும் (Institutes of Christian Religion). இது கல்வின்வாதத்தின் சுய உருவத்தை மிக நன்றாக நாம் அறிந்து கொள்ளக்கூடிய ஒரு கைந்நூலாகும். இந்நூலை எழுதியமைக்கான நோக்கம் யாதெனில் புரட்டஸ்தாந்து இறையியலாளர் திருவிவிலியத்தின் படிப்பினைகளை ஏற்றுள்ளனர் என்பதை பிரான்சின் முதலாவது பிரான்சிஸ் அரசனுக்கு (கி.பி. 1515-1547) விளக்குவதாகும். திருவிவிலியத்தை ஆராய்தல் தொடர்பாக கல்வினின் உபாயங்கள், நுட்பமுறைகள் என்பனவற்றை இந்நூலில் காணலாம். சமகால மானிடவாதிகளும் (Humanists) வேறு கற்ற குருகுலத்தோரும் பயன்படுத்திய கற்றல் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மேலும் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறு நூலின் அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

- கல்வின் திருவிவிலியத்தில் குறிப்பிடப்படாத எல்லா விசுவாசங்களையும் எதிர்த்ததோடு அவரது ஆதரவாளர்களின் நம்பிக்கை திருவிவிலியத்தின் கருத்துக்களை மட்டும் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென கட்டாயப்படுத்தினார். அவரால் கட்டியெழுப்பப்பட்ட தேவாலயங்கள் மிகவும் எளிய தன்மையினைக் கொண்டனவாகும். இவை வேறு சித்திரங்கள் இல்லாத வெள்ளைநிற சுவர்களைக் கொண்டதும், பீடம், திருச்சுருபங்கள், சமயப் படங்கள், இசைக்கருவி, நிறக்கண்ணாடிகளைக் கொண்ட யன்னல்கள் ஆகியன இல்லாத தேவாலயங்களாகும். கல்வின் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்ட இறையியலாளர் ஆவார்.
- ஜோண் கல்வின் சீர்திருத்த சபைகளின் இரண்டாவது பரம்பரையைச் சேர்ந்தவர். அவருடைய இறையியலின் நோக்கம் கிறிஸ்தவ சபையைத் திடம்பெறச் செய்தலாகும். சீர்திருத்த, புரஸ்பிடேரியன் சபைகளின் ஸ்தாபகரும் அவரேயாவார்.

## கல்வின்வாதம் (Calvinism)

- இவர் முன்வைத்த முக்கிய போதனை உலகம் தொடங்கியது முதல் மீட்பு கிடைப்போர் அல்லது கிடைக்காமலிருப்போர் எவரென்பதை இறைவன் தீர்மானித்துள்ளார் என்பதாகும் (Predestination). எனவே, தமது மீட்புக்காக மனிதன் இவ்வுலகில் செய்யக்கூடியது எதுவுமே இல்லை. கல்வின் தனது போதனைகளைத் திருவிவிலியத்தின் அடிப்படையில் செய்தார். திருவிவிலியம் இறை ஏவுதலால் எழுதப்பட்டுள்ளதென்பதை ஏனைய சீர்திருத்த சபைகளின் தலைவர்களைப் போன்று தானும் ஏற்றுக்கொண்டார். இயற்கையான உலகிலே இறைவன் தம்மை வெளிப்படுத்தியிருப்பினும் சென்ம பாவத்தின் காரணத்தினால் இறை வெளிப்பாட்டை சரியான முறையில் தனது சக்தியினால் விளங்கிக் கொள்வதற்கு மனிதனிடம் ஆற்றல் இல்லை என்பது அவரது கருத்தாகும். இயற்கையின் வெளிப்பாட்டினால் சரியான முறையில் இறைவனின் மீட்பின் தன்மை வெளிப்படுத்தவில்லையெனினும், இதற்கான உதவியாக இருப்பது இறைவனின் நேரடியாக வெளிப்படுத்திய இறைவாக்கினர், திருத்தூதர்கள், கிறிஸ்து ஆகியோர் போதித்த இறைவார்த்தையாகும்.
- திருவிவிலியத்தைப் பற்றிய அவருடைய ஆய்வு அவர் எப்பொழுதும் பயன்படுத்திய திருவிவிலியத்தில் மட்டும் (Sola Scriptura) உள்ள ஈடுபாட்டில் தெளிவாகும். திருவிவிலியத்தைக் கற்கும்போது மத்திய காலத்தில் பயன்படுத்திய உட்கருத்து, ஆன்மீகமயம், ஒழுக்கம், இலக்கியம் ஆகிய நான்குவித விளக்கங்களையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. திருவிவிலியத்தை முறையாக ஆராய்வதற்கு அதன் வரலாற்றுப் பின்னணியை விளங்கிக்கொள்ள வேண்டுமென்பதை அவர் கூறுகிறார்.
- தெய்வீகத் தன்மை தொடர்பாக கல்வின் பாரம்பரியமான திரித்துவத்தை (மூவொரு இறைவன்) ஏற்றுக்கொண்டார். இறைவன் உன்னதமானவர். அவர் அனைத்திலும் முழுமையுடையவராவார். பரிசுத்த தனத்திலும் நீதியிலும் நிறைவுடையவராவார். அவர் நித்தியமானவர், அவர் அனைத்தையும் கடந்தவர். மனிதன் இறைவனுடைய சுய படைப்பென்பது மறைபொருளாகும். அவர் அனைத்தினதும் முதன்மையானவரென்பது படைத்தவரென்பதனாலாகும்.

- இறைவன் மனிதனைத் தமது சாயலாகப் படைத்தார். இறைவன் மனிதனுடன் உடன்படிக்கை செய்து படைப்பு அனைத்தின்மீதும் வல்லமையை மனிதனுக்கு அளித்து அனைத்திலும் தமக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனக் கட்டளையிட்டார்.
- தனது கீழ்ப்படியாமையினால் பாவத்தில் விழுந்த மனிதன் மீட்புப் பெறுவது விசுவாசத்தினால் மட்டும் எனவும் (Sola Fide) கல்வின் கூறினார். பாவத்தினால் இழந்த இறை-மனித உறவை மீண்டும் பெற்றுக்கொள்வது திருமுழுக்கின் வழியாகவேயாகும். பாவம் அனைவருக்கும் பொதுவானது என்பதால் சிறு குழந்தை முதல் முதியோர்வரை அனைவரும் இதனைப் பெற வேண்டும். நற்கருணை கிறிஸ்துவின் மீட்புச் செயலை நினைவுகூருவதோடு அங்கு விசுவாசத்தோடு அப்பமும் இரசமும் பெறுபவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கிறது. சபையின் நிர்வாகம் பற்றிப் பேசும் கல்வின் சபையின் நிர்வாகத்தை அதன் சிரேஷ்டர்கள் அல்லது முதியோரினால் செய்யப்பட வேண்டும் எனக் கூறினார்.

### 7.1.3.2. சுவிங்கிலி (கி.பி.1484 - 1531)

- லூத்தர், கல்வின் ஆகிய புரட்டஸ்தாந்து சீர்திருத்த தலைவர்களைத் தவிர இன்னும் அதிகமானோர் கத்தோலிக்க நம்பிக்கையிலிருந்து விலகி பல்வேறு சபைகளை உருவாக்கினர். இவர்களுக்கு மத்தியில் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சுவிங்கிலி சுவிட்சர்லாந்தின் தலைநகரமான சூரிச் (Zurich) நகரத்தில் புதிய சபையை உருவாக்கினார். ஆண்டவரின் இறுதி இரவுணவு தனி நினைவுகூரல் மட்டும் என்றும் அது நினைவுகூரலாக நாம் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் பெறுகின்ற நற்கருணை வழியாக உண்மையாகக் கிறிஸ்துவை நாம் பெறுவதில்லையென்பதும் அவருடைய அடிப்படை படிப்பினையாகும். எவ்வாறாயினும் கடும் கருத்துவாதியான புரட்டஸ்தாந்து தலைவரான லூத்தரும் சுவிங்கிலியின் இக்கருத்தை கி.பி. 1529இல் மார்பர்க்கில் (Marburg) நடந்த கலந்துரையாடலில் கடுமையாக எதிர்த்தார். சுவிங்கிலி கி.பி. 1531இல் நடந்த யுத்தத்தில் உயிர் இழந்தார்.

### 7.1.4. எட்டாவது ஹென்றி அரசன்

- சீர்திருத்த சபைகளுக்கிடையில் அதிகமாக கத்தோலிக்க சபையின் வெளிப்பண்புகளைக் கொண்டிருக்கும் சபை இங்கிலாந்து சபை அல்லது அங்கிலிக்கன் சபையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்து சபை என்பது இங்கிலாந்தில் எட்டாவது ஹென்றி அரசன் (கி.பி. 1507 1547) நல்லொழுக்கம், அரசியல் காரணங்களின்மீது உருவாக்கிய சபையெனக் கருதப்படுகிறது.
- எட்டாவது ஹென்றி அரசனுக்கு முன்பிருந்த திருத்தந்தையினால் நம்பிக்கையின் காவலர் (Defender of faith) எனும் புகழ்மாலைக்குரிய அரசராவார். தனது அரசாட்சிக்கு உரிமையான வாரிசை இவ்வுலகில் உருவாக்க முடியாது போன குற்றத்துக்காக தனது மனைவியாகிய கத்தரீன் என்பவரை (Catherine of Aragon) விவாகரத்துச் செய்ய எடுத்த தீர்மானம் அவரைக் கத்தோலிக்க சபையிலிருந்து வெளியேறுவதற்குக் காரணமாகியது.
- அக்காலத்திலிருந்த திருத்தந்தை ஏழாவது கிளெமென்ட் அரசனின் விவாகரத்துக்காக கேட்டுக்கொண்ட கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அக்காலத்தில் காண்டற்பரியின் பேராயராக இருந்த கர்தினால் வோல்சே (Caridnal Wolsey) இன் வழியாகக் கேட்ட கோரிக்கையிலும் பெறுபேறு கிடைக்காதமையால் ஹென்றி அரசன் கி.பி. 1529இல் கர்தினால் வோல்சேயை அவரது பதவியிலிருந்து நீக்கிவிட்டு தனது அன்புக்குரிய சேர் தோமஸ் மூர் (Sir Thomas Moore) எனும் கத்தோலிக்க சட்டத்தரணியை இங்கிலாந்தின் துணைவேந்தன் ஆக (Chancellor of England) நியமித்துக் கொண்டார்.

- எனினும், சேர் தோமஸ் மூர் திருத்தந்தைக்கு மிகவும் கீழ்ப்படிவுள்ள ஒரு கத்தோலிக்கனாக தனது நண்பன் ஹென்றி அரசன் தனக்குத் தந்த பதவியை ஏற்பதற்கு முன் தனக்கு அரசனின் விவாகரத்து தொடர்பான பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு முடியாதென அரசனுக்கு அறிவித்திருந்தார்.
- இறுதியாக கி.பி. 1534இல் எட்டாவது ஹென்றி அரசன் இங்கிலாந்து சபையை அமைத்து அதன் தலைமைத்துவத்தையும் தானே உரிமையாக்கிக் கொண்டார். இவர் கத்தோலிக்க சபையுடனும் விசேடமாக உரோமாபுரியுடன் மிகவும் வெறுப்புடன் செயலாற்றினான். சேர் தோமஸ் மூர் என்பவரும் தனது பதவியை ஏற்றுக்கொள்ளும்போது இங்கிலாந்தின் அரசனின் முன்னிலையில் செய்ய வேண்டியிருந்த உறுதியளிப்பையும் கூட மறுத்துவிட்டார். அவர் செய்தவை சட்டபூர்வமாக இல்லையெனினும் இங்கிலாந்தின் சட்டமுறையில் நிலவிய மௌனத்தினால் சேர் தோமஸ் மூருக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனினும் ஹென்றி அரசன் அவருக்கு மன்னிப்பு அளிக்காததோடு கி.பி. 1535இல் தோமஸ் மூரை சிரச்சேதம் செய்தான். இவ்வாறாக சேர் தோமஸ் மூர் கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாத்தமையினால் உயிரைத் தியாகம் செய்த வேதசாட்சியான நிலையையடைந்தார். பின்னொரு காலத்தில் றொசெஸ்டரின் ஆயராக (Bishop of Rochester) இருந்த ஜோண் பிசரும் (John Fisher) பிற்காலத்தில் கத்தோலிக்க சபையால் தமது புனிதர் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.
- இங்கிலாந்து சபை ஆரம்ப காலத்தில் திருத்தந்தையின் அதிகாரத்தை மறுத்ததோடு கத்தோலிக்க சபையிலிருந்து விலகி பின்னர் கல்வின்வாதத்தோடு இணைந்து பெரும்பாலும் புரட்டஸ்தாந்து தன்மையை எடுத்தது. கி.பி. பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் கத்தோலிக்கர் மிகவும் கடுமையாகத் துன்பத்துக் குள்ளாக்கப்பட்டனர். திருத்தந்தைக்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களை அரசியல் ரீதியாக அரசுக்கு எதிரான குழுவினர் என அவர்களைத் துன்புறுத்தினர். எனினும், பின்னர் காலத்தின் மாற்றத்தினால் இங்கிலாந்து சபையின் பெரும்பாலானோர் மீண்டும் கத்தோலிக்கராக மாறினர். இதன் மத்தியில் விசேடமாக இங்கிலாந்து சபையின் உயர் சபையைச் சேர்ந்த அங்கிலிக்கன் பிரிவினர் (High Church Anglcans) புரட்டஸ்தாந்து பண்புகளை விட கத்தோலிக்க பண்புகளைக் கொண்ட குழுவினராகக் காட்டப்பட்டனர்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு:**

- மத்திய காலத்தின் பின்னர் திருச்சபையில் நிலவிய செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடல்.
- புரட்டஸ்தாந்துப் புரட்சியும் சீர்திருத்தப் புரட்சியும் உருவாகுவதற்கான காரணிகளையும் அவற்றின் விளைவுகளையும் பற்றியும் கலந்துரையாடல்.
- திருச்சபை பிளவுபட்டமையானது உரோமன் கத்தோலிக்க சபையில் ஏற்படுத்திய தாக்கம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**


- M.S. ஜேசுதாஸ் தங்கசாமி, திருச்சபை வரலாறு, நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில்.
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அ.ம.தி. குருமடம், அம்பிட்டியா.
- Alan Schreck, The Compact History of the Catholic Church, St. Paul Press Training School, Mumbai, 2006.
- Ignatius Puthiadam S.J. A Short History of Religious Life, Asian Trading Corporation, Bangalore, India.

**தேர்ச்சி 7.0** : ஐரோப்பாவில் திருச்சபை எதிர்கொண்ட சவால்களும் அவற்றை வெற்றி கொண்ட விதத்தையும் கற்பதோடு விசுவாசத்தை உறுதி செய்வர்.

**தேர்ச்சி மட்டம் 7.2** : உலகியல் கொள்கையின் எழுச்சியையும் திருச்சபையின் செயற்பாடுகளையும் விபரிப்பர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றல் பேறுகள்** :

- புனரமைப்பு, திருச்சபையின் மறுமலர்ச்சி பற்றி கற்றறிவர்.
- மறுமலர்ச்சிக் காலத்தில் உருவாகிய துறவற சபைகளைப் பற்றி விளக்குவர்.
- திரிதெந்தின் பொதுச்சங்கத்தைப் பற்றிய விபரங்களைச் சேகரிப்பர்.
- திருச்சபையின் மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த புனிதர்களைப் பற்றிக் கூறுவர்.
- நவீன கால திருத்தந்தையரைப் பற்றியும் முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தைப் பற்றியும் விபரிப்பர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி:

### 7.2.1. புனரமைப்பும் மறுமலர்ச்சியும் (கி.பி. 1500 - 1750)

- சீர்திருத்த சபைகளின் புரட்சியினால் ஐரோப்பிய நாடுகளான சுவீடன், டென்மார்க், ஒல்லாந்து, நோர்வே, இங்கிலாந்து போன்ற பிரதேசங்கள் முழுவதும் சீர்திருத்த மறையைத் தழுவிக் கொண்டன.
- கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பெருந்தொகையான மக்கள் பிரிந்து சென்றனர். திருச்சபையில் மறுமலர்ச்சியும் மாற்றமும் ஏற்படவேண்டுமென திருச்சபைத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

### 7.2.1.1. புதிய துறவற சபைகளின் உருவாக்கம்

- இக்காலகட்டத்தில், கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சியையும் புதுப்பித்தலையும் ஏற்படுத்துவதற்காக பல துறவற சபைகள் உருவாகின. அதே சமயம் ஏற்கெனவே இருந்த துறவற சபைகளிலும் மறுசீரமைப்புத் தேவை உணரப்பட்டது. திருச்சபையின் மறுசீரமைப்புப் பணியை முன்னெடுப்பதற்கு புனிதத்தன்மையும், ஆர்வமும், தூய்மையும் உள்ள குருக்களின் தலைமைத்துவம் தேவையாக இருந்தது.

**இயேசு சபை**

- கி.பி. 1534ஆம் ஆண்டு புனித லொயோலா இஞ்ஞாசியாரால் ஆரம்பிக்கப்பட்ட இயேசு சபையானது இப்பணியின் முன்னோடியாகவுள்ளது.
- பாமர மக்களுக்கும் ஏழைகளுக்கும் என ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பணி பின்னர் இளவரசர்களுக்கும் அரசர்களுக்கும் வழங்கப்பட்டது.
- திருச்சபைக்கும் திருத்தந்தைக்கும் விசேடமாக கீழ்ப்படிவது இச்சபையினரின் சிறப்பம்சமாகும். கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கோட்பாடுகளைப் போதித்து அவற்றைப் பாதுகாப்பது இவர்களது பணியாக இருந்தது.
- புனித லொயோலா இஞ்ஞாசியார் ஆன்மீகத்திலும் இறையியலிலும் சிறந்து விளங்கினார். இவரது ''ஆன்மீகப் பயிற்சிகள்'' (Spiritual Exercises) எனும் நூல் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றது. சீர்திருத்த சபையினரால் கூடப் புகழப்பட்ட கத்தோலிக்க விசுவாசத்தின் மறைக்கல்வி நூலை புனித பீட்டர் கனீசியஸ் எழுதியுள்ளார். திரிதெந்தின் பொதுச்சங்கத்தில் புனித றொபர்ட் பெலார்மின் முக்கிய இறையியலாளராகச் செயற்பட்டார்.

**வின்செனசியன் சபை**

- புனித வின்சென்ட் டி போல் மறுமலர்ச்சிக்காக மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டார். ஏழைகள் மட்டில் மிகவும் அன்பும் கரிசனையும் கொண்டவராகப் பணியாற்றினார்.
- கி.பி. 1626இல் பிரான்சு நாட்டின் மறைமாவட்டக் குருக்களின் புனிதத்தன்மையை வளர்ப்பதற்கென துறவற சபையை ஆரம்பித்தார். மறைபரப்புக்கான குருக்களின் சபையென (Congregation of the Priests of the Missions) ஆரம்பிக்கப்பட்ட இத்துறவற சபையானது வின்செனசியன் சபை எனவும் அழைக்கப்படுகிறது.
- புனித வின்சென்ட் டி போல் அன்புக் கன்னியர் சபையையும் (Sisters of Charity) ஆரம்பித்தார். கி.பி. 1633ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது அப்போஸ்தலிக்கப் பணிகளில் முழுநேரப் பணியாளராக செயலாற்றுவதற்கு பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட துறவற சபைகளில் முதலாவது சபையாக அன்புக் கன்னியர் சபை திகழ்கின்றது.

**கார்மேல் சபை**

- பாலஸ்தீனா, கார்மேல் மலையில் ஆரம்பமாகிய தனிவாச வாழ்வுக்கு எருசலேம் பிதாப்பிதா 12ஆம் நூற்றாண்டில் ஒரு நெறிமுறையை அமைத்துக் கொடுத்தான்.
- புனித சைமன் ஸ்டொக் இத்துறவு வாழ்வின் பாரம்பரியத்தை இங்கிலாந்துக்குக் கொண்டுபோய் கார்மேல் துறவற சபை வாழ்வை ஊக்குவித்தார்.
- கார்மேல் சபையில் துறவியாக வாழ்ந்த **புனித அவிலா தெரேசாள்** (கி.பி. 1515 - 1582) தமது துறவற சபையின் உள்ளேயே மறுமலர்ச்சியை ஏற்படுத்த முயற்சிகள் எடுத்தார். இறைவன் இவருக்கு பல காட்சிகளைக் கொடுத்தார். கார்மேல் சபையின் தொடக்க கால தப வாழ்வையும் ஆழ்தியான நிலை வாழ்வையும் (Contemplative) கார்மேல் சபையில் மீண்டும் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். ''நிறைவாழ்வின் வழி'' (The way of Perfection), ''உள்ளக மாளிகை'' (Interior Castle) எனும் ஆன்மீக நூல்களை எழுதியுள்ளார்.
- புனித அவிலா தெரேசாளின் தூண்டுதலாலும் வழிநடத்துதலாலும் **புனித சிலுவை அருளப்பரும்** (கி.பி. 1542 - 1991) இம்மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபட்டார். இவரும் ஆன்மீக வாழ்வு பற்றிய நூல்களை எழுதியுள்ளார். அவை: கார்மேல் மலை ஏற்றம் (The Ascent of Mount Carmel), இருண்ட இரவு (The Dark Night), ஆன்மீகப் பாடல் (The Spiritual Canticle), அன்பின் அணையாச் சுவாலை (The Living Flame of Love).
- இவர்கள் இருவரதும் ஆன்மீக வாழ்வின் நூல்கள் பலரது வாழ்வில் மிகவும் உதவியாக இருந்தன. செப வாழ்வு, ஆழ்தியான நிலைச் செபம் (Contemplative Prayer) போன்றவற்றை அனுபவமாக்கும் முறைகள் பற்றிய இவர்களது ஆன்மீக ஆக்கங்கள் மிகப் பயனுள்ளவை.
- ஆன்மீக வாழ்வில் இறை ஒன்றிப்பை அனுபவிப்பதற்கு தாழ்ச்சி இன்றியமையாதது எனும் அறிவுரைக்கு குழந்தை இயேசுவின் புனித தெரேசாள் சாட்சியாக உள்ளார்.

**கப்புச்சின் சபை**

- 13ஆம் நூற்றாண்டில் புனித பிரான்சிஸ் அசீசியால் ஆரம்பிக்கப்பட்ட பிரான்சிஸ்கன் துறவற சபையில் மறுமலர்ச்சி தேவையென உணரப்பட்டது.
- 16ஆம் நூற்றாண்டில் புனித பிரான்சிஸ் அசீசியின் சட்டங்களை மிக நுணுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், தொடக்க கால சபையின் நற்செய்தி அறிவுரை வாழ்க்கை முறையை மீண்டும் வலியுறுத்தவும் மத்தேயு டீ பஸ்ஸி (Matteo Di Passi) எனும் பிரான்சிஸ்கன் சபைத் துறவியின் தலைமையில் பல துறவிகள் தீர்மானித்தனர்.
- இம் மறுமலர்ச்சி மெதுவாக முன்னெடுக்கப்பட்டது. தங்களது போதிக்கும் பணியையும் மடவாச வாழ்க்கையையும் இணைத்து வாழ்ந்தனர். நோயாளரைப் பராமரிப்பதிலும், கடின உழைப்பினால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர்.
- சீர்திருத்த சபைகளின் படிப்பினைகளுக்கு எதிராகப் போதித்தனர்.

### 7.2.1.2. திரிதெந்தின் பொதுச்சங்கம் (கி.பி. 1545 - 1563)

- சீர்திருத்த சபைகளின் போதனைகளுக்குப் பதிலளிப்பதற்காக கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள் பொதுச்சங்கம் கூட்டப்பட வேண்டுமென்று விரும்பினர். கத்தோலிக்க திருச்சபையின் கூட்டுத்தீர்மானத்தையும் மறைக்கோட்பாடுகளையும் பகிரங்கமாக வெளிப்படுத்துவதே இப்பொதுச்சங்கத்தின் நோக்கமாகும்.
- திருத்தந்தை மூன்றாவது சின்னப்பரினால் கி.பி. 1545ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திரிதெந்தின் திருச்சங்கத்தின் தீர்மானங்கள்:
  - திருவிவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று.
  - பழைய, புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களும் இறை ஏவுதலால் எழுதப்பட்டவை. திருமறை வசனங்கள் கடவுளிடமிருந்து வந்தவை. எனவே, அவற்றிற்குப் பொருள் கூறும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உரியது.
  - போதிக்கும் அதிகாரத்தையும் கற்பிக்கும் அதிகாரத்தையும் திருச்சபைக்கு கிறிஸ்து வழங்கியுள்ளார்.
  - புனித பேதுருவும், அவருக்குப் பின் உரிய முறையில் திருத்தந்தையானவர்களுமே திருச்சபைக்குத் தலைவர். திருத்தந்தை வழுவாவரம் பெற்றவர்.
  - வல்கேட் (Vulgate) என்று அழைக்கப்படும் இலத்தீன் திருவிவிலியமே திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது.
  - ஏழு அருளடையாளங்களும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை.
  - திருப்பலி, கல்வாரிப்பலி, உத்தரிக்கும் ஸ்தலம், புனிதர் வணக்கம், திருச்சுருபங்களை வைத்தல், பரிபூரண பலன்கள் என்பன திருச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
  - திருமணம் ஒரு அருளடையாளம். திருமணப் பிணைப்பு என்றுமே பிரிக்கப்படாத ஒன்று.
  - விசுவாசக் கனிகளான நற்செயல்கள் வெளிப்படுத்தும் விசுவாசத்தினால் மனிதன் நீதிமானாகிறான்.

- பொதுச்சங்கம் முன்வைத்த மறுமலர்ச்சித் திட்டங்கள்:
  - பரிபூரண பலனை வழங்க பிரச்சாரப் போதகம் செய்யும் முறை நீக்குதல்.
  - மரியன்னை, புனிதர் வணக்கம் தகுந்த முறையில் ஊக்குவித்தல்.
  - குருத்துவப் பயிற்சிக்காக குருமடங்கள் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் நிறுவுதல்.
  - வாரத்தில் ஒரு தடவையாவது கத்தோலிக்கர் நற்கருணையை உள்வாங்குதல்.
  - அடிக்கடி ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக பாவ மன்னிப்புப் பெறுதல்.
  - நற்கருணை ஆராதனையையும் நற்கருணை ஆசீரையும் ஊக்குவித்தல்.
- திருச்சபையின் மறைப்போதகருக்காக ''திரிதெந்தின் மறைக்கல்வி'' எனும் நூல் திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதரால் (Pius V) கி.பி. 1566இல் வெளியிடப்பட்டது.

### 7.2.2. நவீன காலம் (கி.பி. 1750 முதல்)

### 7.2.2.1. பிரான்சுப் புரட்சி (கி.பி. 1789 - 1795)

- கி.பி. 1788ஆம் ஆண்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. வேளாண்மை தவறியதால் கடும் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் உணவின்றி மடிந்தனர். வாழ்க்கைப் பழுவைத் தாங்க முடியாத ஏழைக் குடியானவர்களும் தொழிலாளர்களும் நாட்டின் நீதி முறை மாற்றப்பட வேண்டுமெனப் புரட்சி செய்தனர். சில அடிமட்டக் குருக்களும் பிரபுக்களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர்.
- நாடு மக்களின் விருப்பத்திற்கு அமையவே ஆளப்பட வேண்டும் என்ற ரூஸ்ஸோவின் கொள்கை இதற்கு உரமூட்டியது. ஆட்சியிலிருந்த அரசர் லூயிசைக் கொலை செய்தனர். குடியரசு மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆயிரக்கணக்கான பிரபுக்கள், குருக்கள், துறவியர் கொலை செய்யப்பட்டனர். பெரும் பிரபுக்களும், நில உரிமையாளர்களும் தமது நாட்டை விட்டு ஓடினர். ஏனையவர்கள் தமது பரம்பரை உரிமைகளைக் கைவிட்டனர்.

- நிலைமையைச் சீர்படுத்த பிரான்ஸ் நாட்டு சட்ட சபையான ஸ்டேட்ஸ் ஜெனரல் (States General) கி.பி. 1789, மே 5ஆம் திகதி வெர்செயில்சில் கூட்டப்பட்டு புதிய அரசியல் சட்டத்தொகுப்பு உருவாக்கப்பட்டது.
- தேசிய சட்ட சபையின் மேலாண்மையின் கீழ் திருச்சபை கொண்டுவரப்பட்டது. பொருளாதார நெருக்கடியைப் போக்க கி.பி. 1789இல் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி திருச்சபையின் சொத்துக்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டது. இச்சட்டம் குருக்களையும் ஆயர்களையும் அரச ஊழியர்களாக மாற்றியது. கி.பி. 1790 துறவியர் இல்லங்கள், கன்னியர் மடங்கள் மற்றும் துறவற சபைகள் அனைத்தும் மூடப்பட்டு அவற்றின் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டன. மக்களுக்கு ஆயர்களையும் குருக்களையும் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது.
- இச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளாத ஆயர்களையும் நூற்றுக்கணக்கான குருக்களையும் துன்புறுத்தினர். சிலர் கொலை செய்யப்பட்டனர். இன்னும் சிலர் நாடு கடத்தப்பட்டனர். கி.பி. 1793இல் பிரான்சில் கிறிஸ்தவத்தை அழிக்க வேண்டுமென திட்டமிட்டு தொழில் விழா, அறிவு விழா, நற்செயல் விழா என்ற விழாக்களை நடாத்தி கிறிஸ்தவத் திருநாட்களையும் ஞாயிறு தின ஆராதனையையும் தடை செய்தனர். புகழ் பெற்ற நோட்டர் டாம் (Notre Dame) ஆலயப் பீடத்தின் மேல் துர்நடத்தையுள்ள பெண்ணை நிற்க வைத்து இவள்தான் பகுத்தறிவின் கடவுள் என வழிபட்டனர்.
- கி.பி. 1797இல் நெப்போலியன் பேரரசனாகி திருத்தந்தை ஆறாம் பத்திநாதருடன் (Pius VI) ஒப்பந்தம் செய்து திருச்சபையிடமிருந்த ஏராளமான நிலப்பரப்பையும், பல நாடுகளையும், பல விலையுயர்ந்த கைப்பிரதி நூல்களையும் கலைப் பொருட்களையும் பெற்றுக்கொண்டான். கி.பி. 1798இல் உரோமில் ஒரு பிரான்சுக்காரர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து உரோமை முற்றுகையிட்டு திருத்தந்தையின் உடமைகளைக் கைப்பற்றி, திருத்தந்தையை வாலன்சிற்கு நாடு கடத்தினான். கி.பி. 1799இல் அவர் இறந்தார்.
- நெப்போலியன் திருத்தந்தை ஏழாம் பத்திநாதரோடு (Pius VII) கி.பி. 1802இல் ஒப்பந்தம் செய்து திருச்சபையின் உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுத்தான். ஆலயங்கள் திறக்கப்பட்டன; துறவற சபைகள் தத்தம் பணிகளை மீண்டும் தொடங்கின; கத்தோலிக்க மதம் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டது.
- எனினும் நெப்போலியன் சர்வாதிகாரியாக மாறி உரோமையை மாகாண தலைநகராக்கி திருச்சபையை மீண்டும் துன்புறுத்தத் தொடங்கினான். எனினும், திருத்தந்தை ஏழாம் பத்திநாதர் துணிவுடன் நெப்போலியனை எதிர்த்து நின்று திருச்சபையைப் பாதுகாத்தார். கி.பி. 1815இல் வாட்டர் லூ (Water Loo) போரில் நெப்போலியன் தோல்வியுற்றதன் பின் திருச்சபை பிரான்சில் சுதந்திரமாக வளரத் தொடங்கியது.
- திருத்தந்தை ஏழாம் பத்திநாதரின் காலத்தில் புதிய துறவற சபைகள் ஆரம்பிக்கப்பட்டன: மாரியனிஸ்ட் (Marianists), மாறிஸ்ட் (Marist), டிலாசால் சகோதரர்கள் (Christian Brothers), அன்புக் கன்னியர் (Sisters of Charity), லொறெட்டோ கன்னியர் (Sisters of Loretto), பவுலிஸ்ட் (Paulists), சலேசியன் சபை (Salesians), இறைவார்த்தை சபை (Society of Divine Word), வெள்ளை தந்தையர் (White Fathers). இத்துறவற சபைகள் மறைபரப்புப் பணி, சமூகப் பணி, கல்வி, மேய்ப்புப் பணி ஆகியவற்றில் ஈடுபட்டு திருச்சபைக்கு புத்துணர்ச்சியையும் புதுப்பித்தலையும் வழங்கின. கி.பி. 1815ஆம் ஆண்டு விசுவாசப் பரப்புதல் சபையை நிறுவினார்.

### 7.2.2.2. முதலாம் வத்திக்கான் திருச்சங்கம் (கி.பி. 1869 - 1870)

- கி.பி. 1869 டிசம்பர் 8இல் முதலாம் வத்திக்கான் திருச்சங்கம் உரோமையில் கூடியது.
- திருச்சபையின் அடிப்படை உண்மைகள், இறைவன் உள்ளார் என்ற கோட்பாடு, இயற்கையும் இறைவனும், இறைவனின் வெளிப்படுத்துதல்கள், பகுத்தறிவுக்கும் இறை வெளிப்படுத்தலுக்கும் இடையேயுள்ள தொடர்பு ஆகிய படிப்பினைகள் டேயி பீலியுஸ் (Dei Filius) எனும் முதலாவது கொள்கைத் திரட்டில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

- திருத்தந்தை தலைமை ஆயராக புனித பேதுருவின் அரியணையிலிருந்து மறைக்கோட்பாடுகளை அறிவிக்கும்போது அல்லது விளக்கம் செய்யும்போது தூய ஆவியின் அருளால் உண்மையையே பேசுகிறார். இது திருத்தந்தையின் வழுவாவரம் (Infallibility) என அழைக்கப்படுகிறது. அத்துடன் திருத்தந்தையின் முதன்மைத் தலைமைத்துவமும் (Primacy) ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- கி.பி. 1870ஆம் ஆண்டு பிரான்சு - புரூசிய யுத்தம் ஆரம்பமாகியதால் திருச்சங்கம் இடைநிறுத்தப்பட்டது. இதனால் திருச்சபையின் பணி, பொதுநிலையினர், துறவியர் ஆகியோரின் நிலை என்பன கலந்துரையாடப்பட முடியாத நிலை ஏற்பட்டது.
- எனினும், 18ஆம் நூற்றாண்டில் தளர்ச்சியடைந்த திருத்தந்தையின் பதவியும் ஆன்மீக அதிகாரமும் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மிகப்பெரிய ஆன்மீக, அறநெறி (Spiritual and Moral) அதிகாரம் திருத்தந்தைக்கு மீண்டும் வழங்கப்பட்டது.

### 7.2.2.3. முக்கிய திருத்தந்தையர்கள் (கி.பி. 1878 - 1963)

**திருத்தந்தை பதின்மூன்றாம் சிங்கராயர் (Pope Leo XIII) (கி.பி. 1878 - 1903)**

- திருத்தந்தையின் தலைமைத்துவத்தையும் திருச்சபையின் செல்வாக்கையும் நவீன காலத்தில் மீளப் பெற முயற்சிகள் மேற்கொண்டார்.
- திருத்தந்தையின் வழுவாவரத்தை ஏற்காதவர்களை பணி நீக்கம் செய்தார். தனது சிந்தனையை காலத்தின் சீர்கேடுகள் எவை எனக் கண்டறிவதில் செலுத்தி பயனுள்ள பல சுற்றுமடல்களை வரைந்தார்.
- விசுவாசமும் அறிவியலும், திருச்சபையும் அரசும், சோசலிசத்தின் ஆபத்துக்கள், திருமணத்தின் புனிதத்தன்மை, உரிமையும் அதிகாரமும், தொழிலாளரின் உரிமைகள் என்ற விடயங்களில் இவர் பல சுற்றுமடல்களை எழுதி திருச்சபையை வழிநடத்தினார்.
- பெரும் இறையியல் அறிஞராக இருந்த இவர் இறையியல் கல்வியை சீர்திருத்தினார். புனித அக்குவினாசின் இறையியலைப் படிக்க வேண்டுமென்றார். விஞ்ஞான ரீதியில் திருவிவிலியத்தைக் கற்க வழிவகுத்தார். வத்திக்கான் ஆவண மன்றத்தை அனைவரும் பயன்படுத்தலாம் என அறிவித்து, கல்வி ஆய்வினை ஆதரித்தார்.
- இவர் ஜனநாயக ஆதரவாளராதலால் பல நாடுகளுடன் நட்பு கொண்டார். கத்தோலிக்கரை நல்ல முறையில் நடத்த ரூசிய அரசைக் கேட்டுக்கொண்டார்.
- தொழிலாளர்களின் சாசனம் என அழைக்கப்படும் ''றேறும் நொவாறும்'' (Rerum Novarum) எனும் சுற்றுமடல் வழியாக தொழிலாளருக்கு நியாயமான கூலியும், உரிமைகளும் கொடுக்கப்படுவதே கிறிஸ்தவ நியதி என விளக்கினார்.
- கி.பி. 1902இல் உரோமில் விவிலிய ஆணைக்குழுவை நிறுவினார்.

**திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் (Pope Pius XI) (கி.பி. 1922 - 1939)**

- திருத்தந்தை பதினோராம் பத்திநாதரின் காலம் கலாபனைகள் மிகுந்ததாகக் காணப்படுகின்றது.
- இத்தாலியில் பெனிட்டோ முசலோனியின் பாசிசக் கொள்கைக்கு முகங் கொடுத்து திருச்சபையைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. திருச்சபையின் பாரம்பரிய உரிமைகளை அரசிடம் கையளிக்க திருத்தந்தை விரும்பவில்லை. ஒரு சுதந்திர எல்லையில் சுதந்திரமாக ஆட்சி செய்வதே திருச்சபையின் உண்மையான சுதந்திரமென்றார். முசலோனி திருத்தந்தையின் இக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டதன் விளைவாக இத்தாலிய அரசுக்கும் திருத்தந்தைக்கும் இடையே கி.பி. 1929 பெப்ரவரி 11ஆம் திகதி ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. இவ் ஒப்பந்தம் இலாத்தரன் ஒப்பந்தம் (Lateran Treaty) என அழைக்கப்படுகிறது.

- இலாத்தரன் ஒப்பந்தத்தின்படி வத்திக்கான் ஒரு தனிநாடாகவும், நடுநிலை நாடாகவும், அதன் மன்னர் திருத்தந்தை எனவும் அறிவிக்கப்பட்டது. மேலும், இத்தாலி நாட்டின் மதம் கத்தோலிக்க மதம் என்றும் புனித நிலையையுடைய திருத்தந்தையை தாக்குபவரோ, தாக்க முயற்சிப்பவரோ, பழித்துரைப்பவரோ கடின தண்டனைக்குரியவர் என்றும் உரைத்தது. இத்தாலிய பாடசாலைகளில் மறைக்கல்வி நிரந்தரமாகப் போதிக்கப்பட வேண்டுமென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திருச்சபையின் நெறிப்படி நடைபெற்ற திருமணங்களை அரசு அங்கீகரித்தது.
- கல்வி போதிப்பது அரசின் உரிமை என்று முசலோனி பிரகடனம் செய்தபோது திருத்தந்தை அதை வன்மையாகக் கண்டித்தார். ''இளைஞரின் கிறிஸ்தவ கல்வி'' பற்றி கி.பி. 1929 டிசம்பர் 31இல் இவர் எழுதிய சுற்றுமடலில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். எல்லா கத்தோலிக்க இளைஞர்களுக்கும் கத்தோலிக்க கல்வி அளிப்பது திருச்சபையின் உரிமை; தங்களுக்கென தனிப்பாடசாலைகள் வேண்டுமென கத்தோலிக்கர் போராடுவது அரசியல் தலையீடு ஆகாது. ஒரு நல்ல கத்தோலிக்கன் நல்ல குடிமகனாக இருப்பான்; அரசிற்கும் பணிந்திருப்பான். இத்தகைய மேலான இளைஞர்களை உருவாக்குவது கத்தோலிக்க பாடசாலைகளே என இச்சுற்றுமடலில் குறிப்பிட்டுள்ளார்.
- திருத்தந்தை 13ஆம் சிங்கராயரின் (Leo XIII) தொழிலாளர் சாசனம் (Rerum Novarum) வெளியிடப்பட்டு 41ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாட தொழிலாளர் உரோமைக்கு வந்தனர். முதலீடு, உழைப்பு என்பன பற்றி இவர் குவாத்திரஜெசிமோ ஆனோ (Quadragesimo Anno) எனும் சுற்றுமடலில் வலியுறுத்தியுள்ளார். செபம், சேவை, பரித்தியாகம் வழி சமூக நல்வாழ்விற்காக தொழிலாளர் உழைக்க வேண்டும். பொருளாதாரக் கோட்பாடுகள் காலத்திற்கேற்ப நீதியின் அடிப்படையில் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் பயனளிக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். சோசலிசக் கொள்கை கிறிஸ்தவ நெறிக்கு முரணானதால் ஒரு கத்தோலிக்கன் ஒரே சமயத்தில் உண்மையான கத்தோலிக்கனாகவும் உண்மையான சோசலிசவாதியாகவும் இருக்க முடியாது என இச்சுற்றுமடலில் குறிப்பிட்டுள்ளார்.
- கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக அனைவரும் செயற்பட வேண்டுமென அழைப்பு விடுத்தார். கிறிஸ்துவின் அரசாட்சி வழியாகத்தான் உண்மையான அமைதியும் மகிழ்ச்சியும் உருவாகுமென்று வலியுறுத்தி கிறிஸ்து அரசர் பெருவிழா கத்தோலிக்க திருச்சபையில் கொண்டாடப்பட வேண்டுமெனப் பிரகடனம் செய்தார்.

## திருத்தந்தை இருபத்து மூன்றாம் அருளப்பர் (Pope John XXIII) (கி.பி. 1958-1963)

- திருச்சபையின் மேலாண்மையை உலகிற்கு வெளிப்படுத்தினார். மனிதாபிமானம் நிறைந்தவராய் மறை ஆர்வம் நிறைந்தவராய் கிறிஸ்தவ ஒன்றிப்புக்காகவும் மனித நல்வாழ்வுக்காகவும் உலக அமைதிக்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றினார்.
- கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் முன்னோடியாக இவர் திகழ்கின்றார். திருத்தந்தையின் கலந்துரையாடல் கொள்கை சீர்திருத்த சபைகளுக்கும் திருச்சபைக்குமிடையில் இருந்த பிணக்குகளைத் தீர்த்து வைத்தது. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான தனிச் செயலகத்தை உரோமையில் உருவாக்கினார்.
- ''அன்னையும் ஆசிரியையும்'' (Mater Et Magistra) எனும் சுற்றுமடல் வழியாக மனித மாண்பு மதிக்கப்பட வேண்டுமென்றும், ஏழைகள் பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு மறைய வேண்டும் என்றும் வற்புறுத்தினார். ''அவனியில் அமைதி'' (Pacem in Terra) எனும் சுற்றுமடலில் தனி மனித மாண்பையும் சுதந்திரத்தையும் வலியுறுத்தி சமாதான சமூகம் உருவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

- தூய ஆவியினால் தூண்டப்பட்டு திருச்சபையை இக்காலத்திற்கு ஏற்ப வழிநடத்த வத்திக்கானில் ஒரு திருச்சங்கத்தை கூட்டவிருப்பதாக அறிவித்தார். இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் என அழைக்கப்படும் இச்சங்கத்தில் திருச்சபையின் இயல்பு பற்றியும் ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர் எந்தெந்த வழியில் திருச்சபை வளர்ச்சியில் பங்குபற்றலாம் என்பதும் நிர்ணயிக்கப்பட்டது.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு:**

- திருச்சபையின் மறுமலர்ச்சி பற்றிய விபரங்களைச் சேகரித்து விளக்குங்கள்.
- திருச்சபையின் மறுமலர்ச்சிக் காலத்தில் உருவாகிய துறவற சபைகள் பற்றியும், அவை ஒவ்வொன்றும் மேற்கொண்ட பணிகள் பற்றியும் ஆய்வுக் கட்டுரை வரையுங்கள்.
- திரிதெந்தின் பொதுச்சங்கம் கூட்டப்பட்டதற்கான காரணத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டும் வகையில் சுவரொட்டி ஒன்று தயாரியுங்கள்.
- திருச்சபையின் மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த புனிதர்களின் விபரங்களைச் சேகரித்து (படங்களுடன்) சுவர்ப்பத்திரிகை ஒன்று தயாரித்துக் காட்சிப்படுத்துங்கள்.
- நவீன காலத் திருத்தந்தையர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டி, கையேடு ஒன்று தயாரியுங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**


- Rev. George Johnson, The Story of the Church, Tan Books and Publishers, Illinois, 1980.
- Fr. John Laux, Church History, Tan Books and Publishers, Illinois, 1989.
- Alan Schreck, The Compact History of the Catholic Church, St. Paul's Publication, Bombay, 2006.
- M.S. ஜேசுதாஸ் தங்கசாமி, திருச்சபை வரலாறு, நாஞ்சில் பதிப்பகம், நாகர்கோவில்.
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அ.ம.தி. குருமடம், அம்பிட்டியா, 2002.

**தேர்ச்சி 7.0 :** ஐரோப்பாவில் திருச்சபை எதிர்கொண்ட சவால்களும் அவற்றை வெற்றி கொண்ட விதத்தையும் கற்பதோடு விசுவாசத்தை உறுதி செய்வர்.

**தேர்ச்சி மட்டம்7.3 :** உலகில் திருச்சபையின் பங்களிப்பை விளங்கி மக்களின் முன்னேற்றத்துக்காகத் தம்மை அர்ப்பணிப்பர்.

**பாடவேளைகள் :** 10

**கற்றல் பேறுகள்:**

- கல்வி மட்டில் திருச்சபையின் அர்ப்பணிப்பை விளங்கி அதனைப்பற்றிப் பேசுவர்.
- விஞ்ஞானத்துக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்த கிறிஸ்தவ விஞ்ஞானிகளைப் போன்று தாம் வாழுகின்ற சமூகத்திலே சமூகப் பணி ஆற்றுவதற்கு முன்வருவர்.
- கொன்ஸ்தாந்தீன் பேரரசன் வழங்கிய சுதந்திரத்தின் பின் ஆலய கட்டடங்களின் முறைகள் படிமுறையாக ஆரம்பிக்கப்பட்டன எனக் கூறுவர்.
- ஆரம்ப கால கிறிஸ்தவர்கள் நற்கருணை வழிபாட்டுக்காக (யூக்கறிஸ்ற்) உபயோகித்த கிறிஸ்தவ அடையாளங்கள் கிறிஸ்தவ சித்திரக் கலையின் ஆரம்ப கால சித்திரங்கள் என்பதை ஏற்றுக்கொள்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

### 7.3.1. கல்விக்கான திருச்சபையின் அர்ப்பணிப்பு

- உரோமைப் பேரரசின் வீழ்ச்சியோடு ஏற்பட்ட அரசியல் கலவரத்தினாலும் யுத்த சூழ்நிலையினாலும் ஐரோப்பாவில் அறிவு வளர்ச்சி மிகவும் பாதிப்புக்குள்ளானது. எனினும், கிறிஸ்தவ குருக்கள் தமக்குத் தேவையான அறிவை ஏதோவொரு மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கு முயன்றனர். மத்திய காலத்தில் எழுத்தறிவு, ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி, பல்கலைக்கழகங்கள் உருவாகுதல், வளர்ச்சியடைதல், பண்டைய உரோம - கிரேக்க அறிவு, இஸ்லாமிய அறிவு ஆகியவை ஐரோப்பாவுக்குள் கொண்டு வரப்பட்டன. இது மேற்கத்தேய அறிஞர்களின் சிந்தனைக்கு வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகியது.
- கி.பி. 800ஆம் ஆண்டளவில் சாளிமேனின் ஆட்சிக் காலத்தில், அவரின் கட்டளையின்படி எல்லா ஆலயங்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான பிரதேசங்களில் ஆரம்பப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், வைக்கிங் (Viking) களின் ஆக்கிரமிப்புகளினால் ஆரம்பக் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. ஆயினும், ஆரம்பக் கல்வியாது சில மடங்களுக்குச் சொந்தமான ஆலயங்களை அண்டிய இடங்களில் வளர்ச்சியடைந்தது. எனினும், கி.பி. 1050ஆம் ஆண்டுவரை மேற்கு ஐரோப்பாவில் ஆரம்பக் கல்வியின் தரமும் வளர்ச்சியும் மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்பட்டது.
- பதினோராம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய மறுசீரமைப்பின் பெறுபேறாக மறைமாவட்ட ஆலயங்களை அண்டிய பாடசாலைகளில் (Cathedral School) சுதந்திரமான கல்வி கற்பிக்கப்பட்டது. கன்ரபெரி (Canterbary), சாட்டஸ் (Chartes), பரிஸ் (Paris) ஆகிய இடங்கள் சுதந்திர கல்வியை (Liberal Arts) வழங்கும் முக்கிய இடங்களாகின.
- பொதுநிலையினருக்கான பாடசாலைகள் உருவாதல், பொதுநிலையினருக்குக் கல்வியை வழங்கும் திருச்சபையின் பாடசாலைகளின் செயற்பாடுகள் ஆகியவை பொதுநிலையினரின் கல்வி பாரிய அளவிலான வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்தது.

- ஐரோப்பாவின் வரலாற்றிலே உயர் கல்வியில் மத்திய காலத்தில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியின் பெறுபேறாக பல்கலைக்கழகங்கள் ஐரோப்பாவில் உருவாதல், மருத்துவவியலுக்கு முதலிடம் அளித்த சலேர்னோ (Salerno), சட்டக் கல்விக்கு முதலிடம் கொடுத்தப் பொலொஞ்ஞா பல்கலைக்கழகம் என்பன விசேடமானவை யாகும்.
- பன்னிரண்டாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் பரிஸ் பல்கலைக்கழகம் உருவாகியது. பரிசின் ஆயர்களினால் இது பல்கலைக்கழகமாக பிரகடனப்படுத்தப்பட்டதுடன் பல்வேறு நிறுவனங்கள், பீடங்களினால் இது முழுமை பெற்றது.
- பதின்மூன்றாம் நூற்றாண்டில் இப் பல்கலைக்கழகம் நான்கு பீடங்களாகப் பிரிக்கப்பட்டது. இவை இறையியல் பீடம், மருத்துவ பீடம், திருச்சபையின் சட்ட பீடம், கலைப்பீடம் என்பனவாகும். கிறிஸ்தவ இறையியல், கிரேக்க, இஸ்லாம் தத்துவங்கள் இங்கு கற்பிக்கப்பட்டதால் இவற்றின் தொடர்பு தத்துவ உலகில் பெரும் புரட்சியினை ஏற்படுத்தியது. பதினான்காம் நூற்றாண்டின் போது இப்பல்கலைக்கழகங்களக்குச் சொந்தமான 40 தனியார் கல்லூரிகள் உருவாகின. இவை லௌகீக, ஆன்மீகமானவையாகும்.
- ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் கி.பி. 872இல் பெரிய அல்பேட்டினால் உருவாக்கப்பட்டது. கி.பி. 1226இல் கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் உருவானது. கி.பி. 1218இல் ஒன்பதாம் அல்போன்ஸ் அரசனால் சலமன்கா பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஸ்பெயினில் உள்ள மிகப் பழைமை வாய்ந்த பல்கலைக்கழகமாகும். இது கி.பி. 1254இல் திருத்தந்தை நான்காவது அலெக்சாந்தரால் உலகிலே உள்ள முக்கியமான நான்கு பல்கலைக்கழகங்களில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டது (ஒக்ஸ்வேட், பரிஸ், பொலெஞ்ஞா ஆகியனவற்றுடன்).

### 7.3.2. விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திக்காக

**கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பங்களிப்பு**

- நவீன உலகிலே விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திக்காகப் பங்களிப்புச் செய்தவர்களுள் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களாவர். இவ்விஞ்ஞானிகளின் ஆற்றல்கள், திறமைகளின் வழியாக இறைவனின் கரம் செயற்பட்டுள்ளது.

**இயேசு சபையைச் சேர்ந்த அருட்தந்தை ரெயாட் டீ ஷார்டேன் (Pierre Teilhard de Chardin) கி.பி. 1881 - 1955**

- பூமியில் வாழ்கின்ற மனிதனின் பரிணாம வரலாற்றைப் பற்றிய முழுமையான தத்துவத்தை முன்வைத்துள்ள சிந்தனையாளரிடையே இவருக்கு விசேட இடம் உரித்தாகின்றது.
- உயிரற்ற (Inanimate) பொருள்களிலிருந்து ஆரம்பித்து உயிரியல் ஏற்படுவதைக் கடந்து இன்றைய மனிதனின் வளர்ச்சியை மட்டுமல்லாமல் எதிர்காலம் வரை செல்கின்ற மனித வளர்ச்சியைப் பற்றிய எறிகையுடன் (Projection) கூடிய விரிவான தத்துவங்களை இவர் உலகுக்குக் கொடுத்துள்ளார்.
- கார்டேனின் சிந்தனை மிக முக்கியமானது. ஏனெனில், அவர் ஒரு கிறிஸ்தவனும், மிக உயர்ந்த நிலையிலிருந்த விஞ்ஞானியுமாவார். சமயமும் விஞ்ஞானமும் வேறுபட்டதாக அவர் ஒருபோதும் நினைக்கவில்லை. பழமை வாய்ந்த உயிரினங்களின் எலும்புகள் பற்றிய ஆராய்ச்சியானது நிறைவு பெறுவது உயிருள்ள இயேசுக்கிறிஸ்துவை அவற்றினூடாக அனுபவிப்பதால் மட்டுமே என்று அவர் எப்பொழுதும் கூறுவார்.

**அலெக்சாந்தர் கிறஹம்பெல் (கி.பி. 1847 - 1922)**

- கி.பி. 1847இல் ஸ்கொட்லாந்தின் எடின்பரோ நகரத்தில் பிறந்தார். இவர், இலண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று கி.பி. 1876 மார்ச் 10ஆம் திகதி தொலைபேசியைக் கண்டு பிடித்துள்ளார்.
- மேலும் கேள்வி, பார்வை குறைபாடுள்ள பிள்ளைகளின் நிலையை மகிழ்ச்சிகரமாக்கும் பொருட்டு கருவிகள் சிலவற்றை உற்பத்தி செய்ததோடு, அப்பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்காக வேறாக ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும், அதற்காக விசேட பாடசாலைகளை ஒழுங்கு செய்வதற்கும் இவர் முன்னோடியானார். பொஸ்மன்னில் செவிப்புலனற்ற பிள்ளைகளுக்கான பல்கலைக் கழகமும் அவரால் உருவாக்கப்பட்டது.

**சேர் ஐசக் நியூட்டன் (கி.பி. 1643 - 1727)**

- இங்கிலாந்தின் வுல்ஸ்தோப் எனும் கிராமத்தில் பிறந்த ஐசெக் நியூட்டன் பௌதிகவியல், கணிதம், வானவியல், நவீன கால தத்துவஞானியாகவும், இறையியலாளராகவும் இருந்தார்.
- விஞ்ஞானத்துக்கு முரணற்ற இறைவனைப் பற்றி இவர் நம்பிக்கை வைத்ததோடு புவியீர்ப்புக் கொள்கை இவரினால் கண்டுபிடிக்கப்பட்டதோடு அசைவு (Motion) பற்றிய மூன்று விதிகளை இவர் முன்வைத்துள்ளார்.
- நிறங்களை அறிதல், சூரிய மண்டலத்தைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தல், பிரதி பிம்பம் காட்டும் தொலைநோக்குக் கருவியை நிறுவுதல், கடலில் ஏற்படும் ஏற்றம், இறக்கம் ஆகிய பல தகவல்களை வெளியிட்டு உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

**அல்பட் அயின்ஸ்டயின் (கி.பி. 1879 - 1955)**

- ஜெர்மனியின் உல்ம் (ULM) நகரில் பிறந்த இவர் யூத இனக் கத்தோலிக்கராவார்.
- ஒப்பீட்டுவாதத்தை முன்வைத்ததோடு மிகவும் பிரபல்யமான இவர் மின், காந்த சக்தி, புவியீர்ப்புச் சக்தி ஆகியன ஒரே மூலத்தினால் உருவாகிறதென்பதை எடுத்துரைத்தார்.
- கி.பி. 1847இல் இவருக்கு பௌதீகவியல் பற்றிய நோபல் பரிசு கிடைக்கப் பெற்றது.

**அலெக்சாந்தர் பிளேமிங் (கி.பி. 1881 - 1955)**

- கி.பி. 1881இல் ஆகஸ்ட் மாதம் 06ஆம் திகதி ஸ்கொட்லாந்தின் அயேஷர் லோஜீபிள்ட் எனும் ஊரில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த கிறிஸ்தவராவார். இவர் பொருளாதாரப் பிரச்சினைகளினால் துன்பப்பட்டு, இளமைக் காலத்திலேயே இலண்டன் நகருக்குச் சென்று எழுதுவினைஞராக வேலை செய்து சேமித்த பணத்தில் இலண்டன் புனித மேரி மருத்துவமனையோடு இணைக்கப்பட்ட மருத்துவக் கல்லூரியில் இணைந்து 28 வயதில் மருத்துவ நிபுணரானார்.
- பென்சிலின் மாற்று மருந்தினைக் கண்டுபிடித்த இவருக்கு கி.பி. 1945இல் இதற்காக நோபல் பரிசும் கிடைக்கப்பெற்றது.
- தோமஸ் அல்வா எடிசன் (கி.பி. 1847 - 1931)
  லுவீ பாஸ்ச்சர் (கி.பி. 1822 - 1895)
  நிகோலஸ் கொபர்நிகஸ் (கி.பி. 1473 - 1543)
  எட்வட் ஜேனர் (கி.பி. 1749 - 1823)
  ஆகிய விஞ்ஞானகளைப் பற்றி மேலும் கற்றுக்கொள்ளலாம்.

### 7.3.3. கலையின் அபிவிருத்திக்காக திருச்சபையின் பங்களிப்பு

- கிறிஸ்தவ சபையின் வரலாற்றிலே பல்வேறு காலகட்டங்களில் கிறிஸ்தவக் கலை வளர்ச்சியடைந்துள்ளது. கிறிஸ்தவ இலக்கிய நூல்கள், கிறிஸ்தவ சங்கீத, கட்டடக் கலை, சித்திரம், சிற்பம் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக பல்வேறு குழுக்கள், ஆட்கள் பங்களிப்புச் செய்துள்ளனர். மேற்கூறப்பட்ட எல்லா அம்சங்களும் கலையில் உள்ளடக்கப்படுகின்றன.

- **கிறிஸ்தவ இலக்கிய நூல்கள்**
  - மத்திய காலம் வரை இலத்தீன் மொழியில் இலக்கிய ஆக்கங்கள் எழுதப்பட்டிருந்தன. டான்டே அலிகியேரி (கி.பி. 1265 - 1321) இத்தாலி மொழியில் ஆக்கங்களைத் தயாரித்தார். உதாரணமாக 'The Divine Comedy' எனும் நூலை எடுத்துக் காட்டலாம். தோமஸ் ஆ கெம்பே எழுதிய 'கிறிஸ்து வழி வாழ்வு' (The Imitation of Christ) எனும் ஆக்கம் முக்கியமானதாகும்.
  - புனித அவிலா தெரேசாள், புனித சிலுவை அருளப்பர், ஜோன் மில்டன், ஆகிய எழுத்தாளர்களினால் உலக கிறிஸ்தவ இலக்கியத்துக்கு முதன்மையான பணி ஆற்றப்பட்டுள்ளது.

- **சங்கீதம்**
  - முதன்முதலாக கிறிஸ்தவ சங்கீதம் கி.பி. 500 - 1000 இடைப்பட்ட காலப்பகுதியிலேயே ஆரம்பமானது. இருண்ட காலம் என இனங்காணப்பட்ட இக்காலகட்டத்தில் திருவழிபாட்டு முறை முறைமை சார்ந்ததாக தயாரிக்கப்பட்டது. புனித பெனடிக் மடத்திலே தயாரித்த திருவழிபாட்டு முறையை கிறிஸ்தவ சபைக்குப் பொருத்தமான மாதிரியாக திருத்தந்தை பெரிய கிறகோரி (கி.பி. 540 - 604) யால் தயாரிக்கப்பட்டது. இத் தனிஇசை முறை (Plain chant) கிறகோரியன் இசை முறை (Gregorian Chant) எனப் பிரபல்யமானது.
  - 11, 12ஆம் நூற்றாண்டுகளில் கிறகோரியன் இசை முறையை விட வேறுபட்ட சேர்ந்திசை முறைகள் பரீஸ் நோத்திரடாம் பேராலயத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இது பொலிபோனி சங்கீத முறையென அழைக்கப்பட்டது. திருப்பலியின் போது தாளத்தோடு பாட வேண்டிய ஆறு பகுதிகள் சேர்ந்திசை முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. திருப்பலியில் இப்பகுதிகள் பாடப்பட்டன.

    i) கீறியே (ஆண்டவரே இரக்கமாயிரும்)<br>
    ii) கிளோறியா (உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக)<br>
    iii) கிறேடோ (நான் விசுவசிக்கிறேன்)<br>
    iv) சான்துஸ் (பரிசுத்தர்)<br>
    v) பெனடிக்டுஸ் (வருகை தருபவர் ஆசீர் பெற்றவர்)<br>
    vi) ஆஞ்ஞுஸ் டேயி (இறைவனின் செம்மறிப்புருவை)
  - திரிதெந்தின் பொதுச்சங்கத்தின் பின்னர் விசேடமான சேர்ந்திசை முறை உருவானது.
  - இசைக் கருவிகளையும் குரலொலியையும் ஒன்றாகக் கலந்து ஒறத்தோறியோ சங்கீத முறை தயாரிக்கப்பட்டுள்ளது.
  - 19வது நூற்றாண்டில் பாடல் திருப்பலி, துக்கப் பாடல் திருப்பலி உருவாக்கப்பட்டது.

- **கட்டடக் கலை**
  - கி.பி. 313இல் கொன்ஸ்ரன்ரைன் பேரரசனால் கிறிஸ்தவ சமயத்துக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டதன் பின்பு கிறிஸ்தவ கட்டடக் கலை ஆரம்பமாகியது. இக்காலகட்டத்தில்
    - உரோமை ஆலய முறை
    - பைசாந்திய ஆலய முறை

    என ஆலய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
  - கி.பி. 1000 இலிருந்து 1500 வரையான காலத்தில் அதாவது மத்திய காலத்தில் கிறிஸ்தவ அடையாளத்திலான ஆலய கட்டிடங்கள் அமைக்கும் இரு முறைகள் உருவாகின. அவையாவன:

    i) உரோமைய அல்லது மத்திய கால உரோமைய ஆலயங்கள்

    ii) கோதிக் (Gothic) ஆலயங்கள்

- **சிற்பக் கலை**

  • கிறிஸ்தவ சிற்பக்கலை மத்திய காலத்திலேயே ஆரம்பமானது. ஐரோப்பிய பேராலயங்களைக் கட்டுவதோடு சிற்பக்கலை ஆரம்பமாகியது. எனினும், இக்காலத்தில் சிற்பக் கலை ஆரம்பிக்கப்பட்டபோதும் அது சுதந்திரமான கலையாக இருக்கவில்லை. கட்டிடங்களை அலங்கரிக்கும் முறையிலேயே சிற்பக்கலை பயன்படுத்தப்பட்டது. அதாவது கட்டிடக் கலையின் ஓர் அம்சமாகவே இருந்தது.

  **உதாரணம் :**

  i) கோபுர உச்சிகளை அலங்கரிப்பதற்காக வானதூதர்களை உபயோகித்தனர்.

  ii) மழை நீரை வெளியேற்றும் பீலிகளை மனித, மிருக உருவங்களின் வாய்களை உபயோகித்துச் செய்தனர்.

  iii) மண்டபங்களில் பழைய, புதிய ஏற்பாடுகளின் கதைகளைக் காட்டுகின்ற உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வுருவங்கள் முழுமையான சிலைகள் அல்ல. அவற்றின் ஒரு பகுதி சுவரில் பொருத்தப்பட்டிருந்தன.

  - கிறிஸ்தவ சிற்பக்கலை சுதந்திரமான ஒரு கலையாக கிரேக்க, உரோமைய மறுசீரமைப்பின் ஒரு பயனாக வளர்ச்சி கண்டது. கிறிஸ்தவ வரலாற்றிலே சிற்பக் கலையை சுதந்திரமான ஒரு கலையாக மைக்கல் அஞ்சலோ ஏற்படுத்தினார். பியேடா (Pieta) சிற்பம் அவரது முதன்மையான ஆக்கமாகும்.
  - மத்திய காலத்தில் கட்டப்பட்ட பேராலயங்களில் விசேடமாக கோதிக் (Gothic) ஆலயங்களை அலங்கரிப்பதற்காக சிற்பக் கலையைப் பயன்படுத்தினர். கோபுரங்களில் வானதூதர்கள், மனித உருவங்கள், மிருக உருவங்கள் ஆக்கப்பட்டிருந்தன.
  - சமய மறுமலர்ச்சிக்குப் பிற்பட்ட கத்தோலிக்க கலை அல்லது பரோக் பாரம்பரியத்தில் வருகின்ற லோறன்சோ பர்னினியின் சிற்பக் கலையில் உரோமை புனித பேதுரு பேராலயத்தின் மக்கள் அமரும் ஆசனங்களுக்கு மேல் அமைக்கப்பட்டுள்ள வெண்கல மேற்பந்தல் அவரது முதன்மையான ஆக்கத்திற்கான உதாரணமாகக் காட்டலாம்.

- **சித்திரக் கலை**

  • வேத கலாபனைக் காலத்தில் நிலத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த சுரங்கக் கல்லறைகளில் (Catacombs) நன்றிப்பலி அல்லது யூகறிஸ்து நடாத்தப்பட்டது. அங்கு கிறிஸ்தவர்களுக்கு மட்டும் விளங்கக் கூடிய இரகசியமான கிறிஸ்தவ அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டன. முதலாவது கிறிஸ்தவ சித்திரங்கள் இந்த சுரங்கங்களை அண்டிய பகுதிகளில் காணப்பட்டன. மனிதர் அவற்றை சுரங்கக் கல்லறைச் சித்திரங்களென அழைத்தனர். ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய அடையாளங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

i) மீன் - கிறிஸ்து
ii) புறா - ஆன்மா
iii) மயில் - நித்தியம்
iv) கழுத்தில் செம்மறி ஆட்டை வைத்திருக்கும் இளைஞன் - நல்லாயன்
v) இரு கைகளையும் உயர்த்தி நிற்கும் மனிதன் அல்லது பெண் - செபமும் இறைவனோடு உள்ள உறவும்

- கி.பி. 1931இல் கண்டுபிடிக்கப்பட்ட டூரா யுரோப்பஸ் வீடொன்றில் உரோமையில் அமைந்துள்ள டொமிற்றில்லாவின் சுரங்கக் கல்லறையில் இருந்த கிறிஸ்தவ சுவர்ச் சித்திரங்கள் பல கிடைத்துள்ளன. இச்சித்திரங்களில் திருவிவிலியத்திலுள்ள கதைகள் வரையப்பட்டுள்ளன.
    - ஆதாம், ஏவாள்
    - மோசே கற்பாறையிலிருந்து தண்ணீர் வரச்செய்தல்
    - யோனா பெரிய மீனிலிருந்து காப்பாற்றப்பட்டமை.
    - சிங்கத்திடமிருந்து தானியேல் பாதுகாக்கப்பட்டமை.
    - இயேசுவும் திருத்தூதர்களும் உள்ள சித்திரங்கள் போன்றவையாகும்.
    - அழகியல் நோக்கோடு பார்க்கும்போது இவை மிகவும் ஆரம்ப பண்புகளைக் கொண்டு ஆக்கப்பட்டனவென்றும் அக்காலத்தில் விசுவாசிகள் வாழ்ந்த கஷ்டமான வாழ்க்கை முறையை விளங்கிக் கொள்ளக் கூடியதுமாயிருந்தது.

- **மோசயிக் அல்லது கண்ணாடி ஓவியக் கலை**

    - மோசயிக் சித்திரம் பைசாந்திய கலையின் நவீன கலை அம்சமாகும். கண்ணாடி சிற்பக் கலையென அழைக்கப்படுவதோடு வீடுகளிலும் ஆலயங்களிலும் கூரை, சுவர்கள், நிலம் என்பனவற்றை அலங்கரிப்பதற்கு இம் முறையைப் பயன்படுத்தியுள்ளனர்.

- **மோசயிக் சித்திரக் கலையின் பண்புகள்**

i) சித்திரங்கள் அழகானவையாகவும் ஒளியுள்ளவையாகவும் இருப்பதைக் காணலாம்.
ii) கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்டிருப்பதால் சித்திர உருவங்கள் முரடானவை.
iii) அணிந்துள்ள ஆடைகளில் சுருக்கங்கள் இல்லை.
iv) இவற்றில் பக்தியும் ஆன்மீகத் தன்மையும் விளக்கப்படுவதை வெளிப்படுத்துகின்றன.
v) ஆளின் முழுமையான தன்மையைக் காண முடியாது. ஆகவே, இந்தக் கலைஞர்கள் சித்திரத்தின் இயற்கையான தன்மையைவிட கம்பீரத் தன்மைக்கு முதலிடம் அளித்துள்ளனர்.
vi) பண்டோகிறாரோர் (Pantocrator) அல்லது அனைத்துக்கும் அதிபதியாக கிறிஸ்துவை ஆக்கியுள்ளனர்.

- **அயிகோன் உருவம்**

மோசயிக் சித்திரங்களைப் பின்பற்றிய பூச்சு சித்திர முறை உருவானது. ஆலயங்களில் காணப்பட்ட மோசயிக் சித்திரங்களின் வடிவத்தில் இயேசுவின், மரியாவின், புனிதர்களின் உருவங்கள் சிறிய மரப் பலகைகளில் பிரதி செய்யப்படும் பாரம்பரியம் உருவாகியது. எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லக் கூடிய இச்சித்திர உருவங்கள், கிரேக்க மொழியில் அயிகோன் என அழைக்கப்பட்டன. அயிகோன் உருவங்களும் பைசாந்திய கலையினது ஓர் அம்சமாகும்.

- **அயிகோன் உருவங்களின் பண்புகள்**

i) சிறிய பலகைகளில் பூச்சினால் இச்சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.
ii) எப்போதும் பின்னணி பொன்நிறத்தைக் கொண்டிருந்ததோடு மோசயிக்சித்திரத்தைப் போன்று முகம் பயம் நிறைந்ததாக இருந்தது.
iii) ஆன்மீக கம்பீரத்தன்மை காணப்பட்டது.

- அயிகோன் சித்திரத்துக்கான விசேட உதாரணமாக இலங்கையில் அதிகளவு பிரபல்யமாகவுள்ள சதா சகாய அன்னையின் சித்திரத்தை எடுத்துக் கொள்ளலாம்.

- **வர்ணக் கண்ணாடிக் கலை (Stained glass)**
  - வர்ணக் கண்ணாடி சித்திரக் கலை கோதிக் (Gothic) கலைக்கு உரித்தான கலைப் பாரம்பரியமாகும். கோதிக் ஆலயங்களில் பெரிய யன்னல்கள் பல இடுவதனால் இவற்றிலிருந்த கண்ணாடிகளில் இச்சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. இவை பெரும்பாலும் வளைந்த, வரைபுகளாகிய பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டிருந்தன. இச்சித்திரங்களிலுள்ள விசேட தன்மை யாதெனில் கண்ணாடிக்குள் சாயம் விட்டு இச்சித்திரங்கள் ஆக்கப்பட்டுள்ளமையாகும். இந்த நுட்ப முறையானது மோசயிக் ஆக்கங்களிலும் பார்க்க மிகவும் கஷ்டமாகவுள்ள தென்பதைக் கூறலாம். கண்ணாடிக்குள் நிறம் இடும் இம் முறையானது கோதிக் கலைஞர்களினால் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தமையால் பழைய முறை மறைந்து போயிற்று. நவீன நிறக் கண்ணாடிக் கலை இருப்பினும் பழைய முறைக்கு இவை சமமெனக் கொள்ள முடியாது.

**மத்திய காலத்தில் சித்திரக் கலையின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவர்கள்.**

- பிரஸ்கோ (Fresco) சித்திரங்கள் அல்லது சுவரின்மீது (அதாவது சுவரில் பூச்சு காய்வதற்குமுன்) சித்திரங்கள் வரையும் முறையைக் கண்டுபிடித்த கியோற்றோ டீ போர்டோனே சித்திரக் கலைஞர் விசேடமானவராவார்.
- பிரா அஞ்சலிக்கோ (Fra Angelico) கி.பி. 1387 -1455, லியோனாடோ டா வின்சி (Leonardo da Vinci) கி.பி. 1452 - 1519, மைக்கல் அஞ்சலோ (Michael Angelo) கி.பி. 1475 - 1564, இறபாயேல் சான்ஸியோ (Rafael Sanzzio) கி.பி. 1483 - 1520. ஆகியோரின் அழியாத கலை ஆக்கங்களினால் இவர்கள் சிறப்புப் பெறுகின்றனர்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு:**

- கல்விக்காகத் திருச்சபையின் அர்ப்பணிப்பைப் பற்றிய விமர்சன ரீதியான கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.
- விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்துக்காக கிறிஸ்தவ விஞ்ஞானிகளின் பங்களிப்பைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ஆரம்பகால கிறிஸ்தவர்கள் சித்திரங்களையும் அடையாளங்களையும் பயன்படுத்தி நன்றிப்பலி நிகழ்த்திய விதத்தினை துணை நூல்களின் உதவியோடு சேகரிப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சுதந்திர காலத்திலும் மத்திய காலத்திலும் ஆலயங்கள் கலை அம்சமாக இருந்தமை பற்றிய சுவரொட்டி ஒன்றை ஆக்குவதற்கு மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- கிறிஸ்தவ எழுத்தாளர்கள் கிறிஸ்தவ கலைக்குப் பங்களிப்புச் செய்த சித்திரக் கலைஞர்கள் வழியாக இலக்கியத்துக்கும் கலைத்துறைக்கும் உதவிய விதத்தினை ஆராய்ந்து பார்ப்பதற்கு மாணவர்களை ஆய்வில் ஈடுபடுத்துங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**

- www.Salamanca-University.org.
- www.Liv.Ac.UK/History.
- UK.eucarta.msn.com.
- www.eug.Unibo.it.
- ஞானமுத்து பிலேந்திரன், கிறிஸ்தவமும் நாகரிகங்களும், கத்தோலிக்க மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணம், 2008.
- எஸ்.ஏ.ஐ. மத்தியூ, உலகக் கலைகள் - ஒரு பார்வை, 2009.

**தேர்ச்சி 8.0** : இலங்கைத் திருச்சபையின் வரலாற்றைக் கற்பதோடு இலங்கைக் கிறிஸ்தவ திருச்சபையை இனங்கண்டு சாட்சியம் பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : ஐரோப்பிய காலத்திலல் இலங்கைத் திருச்சபையின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் விளக்குவர்.

**பாடவேளைகள்** : 30

**கற்றல் பேறுகள்:**

- இலங்கைக் கிறிஸ்தவ சபையின் ஆரம்பம் பற்றிய தகவல்களைத் தேடிப் பார்ப்பர்.
- இந்நாட்டுக்கு வருகைதந்த வெளிநாட்டு மறைத்தூதுவர்கள் நிறைவேற்றிய பணிகளையும் பொறுப்புகளையும் கற்பர்.
- பல்வேறு வாழ்க்கை நிலைகளுக்கு உட்பட்ட கிறிஸ்தவ சபை வளர்ச்சியடைந்த விதத்தினை விளங்கிக் கொள்வர்.
- முத்துப்பேறுபெற்ற ஜோசப்வாஸ் அடிகளார் உட்பட்ட ஒறத்தோரியன் துறவற அருட்தந்தையர்களினால் இந்நாட்டு கிறிஸ்தவ சபைக்கு அளிக்கப்பட்ட பணியினைப் பாராட்டுவர்.
- கிறிஸ்தவ மறைத்தூது இயக்கங்களினால் இலங்கையின் சமய, கல்வி, சமூகப் பிரிவுகள் பெற்ற பங்களிப்பினை இனங்காண்பர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**அறிமுகம்**

- இலங்கைத் திருச்சபையின் வரலாறு என்பது கிறிஸ்தவ மறை இலங்கையில் ஆரம்பமாகி, வளர்ச்சி பெற்று இன்றுவரை வந்த பயணத்தைப் பற்றிய வரலாற்று விளக்கங்களாகும். இந்நாடு அரசியல், சமய, சமூக கலாசாரம் எனும் சிறுபாதைகளின் வழியாகத் தடைகளையும் சவால்களையும் கடந்து இறைத் திட்டத்தின்படி கிறிஸ்தவ சபை பயணம் செய்த விதத்தினை இவ்வரலாற்றின் வழியாக நாம் அறிந்து கொள்ளலாம்.
- இலங்கைத் திருச்சபையின் வரலாற்றினைக் கற்பதன் முக்கியத்துவம்.
    - தேசிய கிறிஸ்தவர்களாக எமது ஆரம்பத்தையும் அடையாளத்தையும் பற்றிய சரியான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளல்.
    - திருச்சபையின் வரலாற்றிலே இறைவனுடைய மத்தியஸ்தத்தையும் செயற்பாட்டினையும் விளங்கிக்கொண்டு எமது நம்பிக்கை வாழ்வினை சக்தி பெறச் செய்தல்.
    - இந்நாட்டு கிறிஸ்தவ சபையைக் கட்டியெழுப்பப் பங்களிப்புச் செய்தவர்களைப் பாராட்டுவதோடு அவர்களது முன்மாதிரிகைகளுக்கேற்ப ஒழுகி சபையின் வளர்ச்சிக்காக நாம் அர்ப்பணிப்போடு பணியாற்றுவதற்கு தைரியத்தினைப் பெறல்.
    - சபையின் கடந்த கால வரலாற்றினைப் பார்த்து அதற்கேற்ப தற்காலத்தையும் எதிர்காலத்தையும் தகுதியான முறையில் ஒழுங்குபடுத்தல்.
    - இலங்கையின் திருச்சபை வரலாற்றின் பல்வேறு காலங்கள்
        1) பழைய காலம் - போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்
        2) போர்த்துக்கேயர் காலம் - கி.பி. 1505 - 1657
        3) ஒல்லாந்தர் காலம் - கி.பி. 1658 - 1796
        4) ஆங்கிலேயர் காலம் - கி.பி. 1796 - 1948
        5) சுதந்திர காலம் - கி.பி. 1948க்குப் பின்

### 8.1.1. போர்த்துக்கேயரின் வருகைக்கு முற்பட்ட காலம்

- இலங்கையின் கத்தோலிக்க திருச்சபை பற்றி எழுதப்பட்ட வரலாறு 16ஆம் நூற்றாண்டிலேயே ஆரம்பமானது. அதாவது, கி.பி.1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயரின் வருகையோடு ஆரம்பமானது. எனினும், இந்நாட்டில் கிறிஸ்தவ நம்பிககையின் உரிமை இதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்து வந்ததென்பதைக் கூற வேண்டும். போர்த்துக்கேயரின் வருகைக்கு முன் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தனரென்பதற்குச் சான்றுகள் உள.

**1. கொஸ்மஸ் இன்டிகொப்லேசுஸ்டஸ் எனும் உல்லாசப் பிரயாணியின் சான்று:**

- கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் தனது உல்லாசப் பயணங்களின்போது கண்ட, கேட்டவற்றின் வழியாக நூலொன்றினைத் தயாரித்தனர் (The Christian Topography).
- அக்காலத்தில் இலங்கைக்குப் பாரசீகத்திலிருந்து கிறிஸ்தவ பக்தர் குழுவொன்று வருகை தந்திருந்ததாகவும், அவர்களுக்கு ஒரு குருவும் திருத்தொண்டரும் இருந்தார்களெனவும் இறை ஆராதனைக்குரிய பொருட்கள் இருந்ததாகவும் கொஸ்மஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**2. அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட நெஸ்தோரிய சிலுவை:**

- அனுராதபுரத்தில் கி.பி. 1912ஆம் ஆண்டளவில் சிதைவுகளுக்கிடையில் இருந்து நீண்ட காலத்துக்கு முன் செதுக்கப்பட்ட சிலுவையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது பாரசீக இன நெஸ்தோரிய கிறிஸ்தவ பக்தர்களுக்குச் சொந்தமானது என்பது வரலாற்றாளரின் கருத்தாகும். அவ்வாறெனில், இது கொஸ்மஸ் குறிப்பிட்டிருந்த கிறிஸ்தவர்களாகவும் இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

**3. சிகிரியாக் காலம் தொடக்கம் மிகார் சேனாதிபதி வரை:**

- கி.பி.5ஆம் நூற்றாண்டளவில் இந்தியாவிலிருந்து வருகை தந்த முதலாவது காசியப்பன் அரசனும் இதன் பின்னர் அரசனான முதலாவது முகலனின் கீழ் பணியாற்றிய கிறிஸ்தவ விசுவாசியாகிய மிகார் எனும் சேனாதிபதியைப் பற்றியும் மூலவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் ''அபிஷேக - மக்களுக்காக'' ஆலயமொன்றைக் கட்டி அதனை அர்ப்பணிப்பதற்காகக் கொண்டாட்டம் ஒன்றினையும் நடாத்தியதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. முன்னாள் தொல்பொருள் ஆணையாளர் செனரத் பரணவிதானவின் கருத்துக்கமைய அங்கு ''அபிஷேக - மக்கள்'' எனக் குறிப்பிடப்பட்டவர் இயேசுக் கிறிஸ்துவாகும். அப்படியானால் சிகிரியாக் காலத்தில் இந்நாட்டில் கிறிஸ்தவர்கள் இருந்தனரென்பதற்கு இது ஒரு முக்கிய சான்றாகும். மேலும், முகலன் அரசனின் காலத்தில் கிறிஸ்தவ அடையாளங்களுடனான தங்க நாணயங்கள் இருந்ததாகவும் பரணவிதான கூறுகிறார்.

**4.** கி.பி. 52இல் தோமஸ் எனும் திருத்தூதர் இந்தியாவுக்கு வருகை தந்து மறைப்போதனை செய்ததாகவும் அவரைப் பின்பற்றுபவர்களாகக் கருதப்படும் கிறிஸ்தர்கள் குழுவொன்று போர்த்துக்கேயர் வருகைதர முன்பிருந்தே தென்னிந்தியாவில் வாழ்ந்தது எனவும் இவர்களில் சிலர் பல்வேறு தேவைகளுக்காக இலங்கைக்கு வந்திருக்கலாம். அதனால், இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வருகைதர முன்பே கிறிஸ்தவர்கள் இங்கு இருந்தனர் என்பதற்கு இதுவும் ஒரு காரணியாகும்.

- பழைய காலத்தில் இலங்கையில் நிலவிய கிறிஸ்தவ விசுவாசம் பற்றிய நூற்தகவல்கள் அரிதாயினும், உள்ள சான்றுகளிலிருந்து இந்நாட்டில் கிறிஸ்தவ விசுவாசத்துக்கு நீண்ட வரலாறு உண்டென்பது உறுதியாகிறது. இக்காலத்தில் கிறிஸ்தவ நம்பிக்கை இந்நாட்டில் ஊட்டம் பெறுவதற்குக் காரணமாகக் கருதக்கூடிய விடயங்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

- இலங்கை இந்தியாவுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளமை:- எனவே, இந்தியாவின் அரசியல், சமய, பொருளாதார, கலாசாரம் ஆகியவற்றின் தாக்கங்கள் இலங்கையையும் வந்தடையும். எனவே, தென்னிந்தியாவின் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வளர்ச்சியடைந்த கிறிஸ்தவ மறையையும் இந்நாட்டில் அறிமுகம் செய்தல் இலகுவாக நடைபெற்றிருக்கலாம்.
- வெளிநாடுகளுடனான தொடர்புகள்:- வர்த்தகத் தொடர்புகளினால் இந்நாட்டுக்கு வருகைதந்த இந்திய, பாரசீக கிறிஸ்தவ வர்த்தகர்களினால் கிறிஸ்தவ மறை இந்நாட்டுக்கு வந்திருக்கலாம் எனவும் கருதலாம்.
- எமது பழைய அரச பிள்ளைகள் பின்பற்றிய திறந்த சமயக் கொள்கைகளும் இந்நாட்டில் கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆரம்பத்துக்குக் காரணமாகும் எனவும் கூறலாம்.

## 8.1.2. போர்த்துக்கேயர் காலம் (கி.பி. 1505 - 1657)

### போர்த்துக்கேயர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகை தரல்

- 15, 16ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் ஒரு அங்கமாக புதிய நாடுகளைக் கண்டுபிடித்தல் அமைந்தது. போர்த்துக்கேய இனம் அனேக வருடங்களாக எல்லா இடங்களிலும் கஷ்டப்பட்டு ஆபிரிக்காவின் கேப் முனையைக் கடந்து கிழக்கு ஆபிரிக்காவின் கடற்கரைத் துறைமுகங்களில் வந்திறங்கினர். இம் முயற்சியின் பெறுபேறாக வாஸ்கொடகாமா இந்தியாவுக்குச் செல்லும் கடல் மார்க்கத்தைக் கண்டடைந்ததோடு கீழைத்தேய நாடுகளுடனும் போர்த்துக்கேயரின் வர்த்தகம் ஆரம்பமாயிற்று. அவர்கள் இந்தியாவின் கோவா நகரத்தைத் தமது கீழைத்தேய வர்த்தக மத்திய நிலையமாகக் கொண்டனர்.
- போர்த்துக்கேயருக்கும் முஸ்லீம்களுக்குமிடையே இருந்த வர்த்தகப் போட்டியே போர்த்துக்கேயர் கீழைத்தேசங்களுக்கு வருகை தருவதற்கான இன்னுமொரு விடயமாகும். ஒரு காலத்தில் முஸ்லீம்களின் ஆட்சிக்குப் பணிந்திருந்த போர்த்துக்கேயர் அதிலிருந்து மீட்கப்பட்டவுடன் இவ்விரு இனங்களுக்கிடையே பகைமை மூண்டது. இவ்வாறு அன்றைய ஐரோப்பிய இனத்தினுடைய வர்த்தக அதிகாரத்தைச் சொந்தமாக்கிக் கொண்டு இருந்த முஸ்லீம்களிடமிருந்து அதனைத் தமதாக்கிக் கொள்ள வேண்டுமென்ற அபிலாஷை போர்த்துக்கேயருக்கிருந்தது.
- இவர்கள் கீழைத்தேசங்களுக்கு வருகை தருவதற்கு மற்றுமொரு காரணம் மறைப்போதனையாகும். ''பத்றோ ஆடோ'' எனும் திட்டமே இவ்விடயத்தில் அவர்கள் முயற்சி செய்தமைக்கான காரணமாகும்.

### பத்றோஆடோ முறை (PADROADO)

- கைப்பற்றிய நாடுகளில் கிறிஸ்தவ மறையைப் பிரசாரம் செய்வதற்காக திருச்சபையினால் ஐரோப்பிய மேற்கத்திய நாடுகள் ஸ்பெயினுக்கும், கீழைத்தேய நாடுகள் போர்த்துக்கலுக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது பத்றோ ஆடோ திட்டம் எனப்பட்டது. இதற்கமைய அடிமைகொண்ட நாடுகளுக்கு மறைத்தூதுவர்களை அனுப்புதல், அவர்களைப் பாதுகாத்தல், பண உதவி வழங்குதல், தேவாலயங்களையும் துறவற மடங்களையும் கட்டுதல், அவற்றைப் பேணல், அதேபோன்று அப்பிரதேசங்களுக்கு ஆயர்களை நியமித்தல் என்பன இவ்விரு நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

### லோறன்சோ த அல்மெய்டா இலங்கைத் தீவில் வந்திறங்குதல்

- பிரான்சிஸ்கோ த அல்மெய்டா கீழைத்தேய போர்த்துக்கேய அரசின் ஆளுநராக இருந்த காலத்தில் இந்து சமுத்திரத்தில் மாலைதீவுப் பிரதேசத்தில் பயணம் செய்த முஸ்லீம் வர்த்தகக் கப்பல்களைப் பிடிக்குமுகமாக போர்த்துக்கேய கப்பலில் குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டது. இந்தியாவின் கொச்சின் நகரத்திலிருந்து பயணத்தைத் தொடங்கிய 7 கப்பல்களைக் கொண்ட இக்குழுவினரின் தலைவனாக பிரான்சிஸ்கோ த அல்மெய்டாவின் மகன் லோறன்சோ த அல்மெய்டா இருந்தார். அவர்களின் மறைசெயற்பாடுகளுக்காக பிரான்சிஸ்கன் சபை 'விசென்னே' எனும் பெயருடைய குரு ஒருவரும் இருந்தார். இந்தப் போர்த்துக்கேய கப்பல் குழுவினர் மாலைதீவை நோக்கிச் செல்வதை நோக்காகக் கொண்டபோதும் கடலில் புயல் வீசியதால் எதிர்பாராத விதமாக காலித் துறைமுகத்தை வந்தடைந்தனர். தாம் வந்தடைந்த நாடு இலங்கையெனத் தெரிந்ததும் அவர்கள் வட திசைக்குச் செலுத்தி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர். கி.பி.1505 நவம்பர் 15ஆம் திகதியே இது நிகழ்ந்தது.
- பின்னர் அக்காலத்திலிருந்த கோட்டை அரசனிடம் அனுமதியைப் பெற்று போர்த்துக்கேய வர்த்தகப் பண்டகசாலையொன்றைக் கொழும்பில் அமைத்தனர். அதற்குப் பக்கத்தில் சிறிய தேவாலயமொன்றையும் கட்டி அதனை றோறன்சோ த அல்மெய்டாவின் பெயர் கொண்ட புனிதரான புனித லோறன்சியாரின் பெயரில் அர்ப்பணித்தனர். கப்பலில் வந்த அருட்தந்தை விசென்னேயினால் அத்தேவாலயத்தில் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது. இது இலங்கையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட முதலாவது திருப்பலியாகும்.

### திருத்தந்தைக்கு அறிவித்தல்

- அக்காலத்தில் ''தப்றபோன்'' என அழைக்கப்பட்ட இத்தீவுக்கு போர்த்துக்கேயரின் வருகையின் செய்தியினைப் போர்த்துக்கப்பலில் இருந்த அரசன் முதலாவது மனுவேலுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அக்காலத்தில் இருந்த பரிசுத்த ஆயரான இரண்டாவது யூலியன் திருத்தந்தைக்கு அறிவித்தார்.
- ''மேன்மை மிக்க தந்தையே உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய நற்செய்தியொன்றினை அறியத் தருகிறோம். புதிய இனத்துக்கு இறைவனின் நற்செய்தியைக் கொண்டு செல்லும் நல்ல செய்தியை உங்களுக்கு மிக்க மகிழ்ச்சியோடு அறிவிக்கிறோம். எமது கீழைத்தேய தலைவனின் மகனுடன் எமது எதிரிகளைத் தோற்கடித்து மிகவும் முக்கிய தீவொன்றில் நுழைந்துள்ளோம். அதன் பெயர் தப்றபோன் என்பதாகும்...."

### கோட்டை இராச்சியத்துக்குள் போர்த்துக்கேயரின் பலம் வளர்ச்சியடைதல்

- போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தபோது இங்கு மூன்று அரசர்களின் கீழ் மூன்று ராஜதானிகள் ஆட்சியிலிருந்தன.

  | | | |
  |---|---|---|
  | கோட்டை | - | 9வது தர்ம பராக்கிரமபாகு (1489 - 1513) |
  | மலையகம் | - | சேனாசம்மத்த விக்கிரமபாகு (1469 - 1511) |
  | வடக்கு | - | பரராஜசேகரன்(1478 - 1519) |

- இவற்றில் கோட்டை இராச்சியமே மிகவும் பலம் வாய்ந்ததாகும். புதிதாகத் தீவுக்கு வருகைதந்த ஐரோப்பியர்கள் பலம்வாய்ந்த இனமென அறிந்த கோட்டை அரசன் போர்த்துக்கேயரோடு ஒப்பந்தங்கள் செய்து தொடர்பினை ஏற்படுத்தத் தொடங்கினார். இதற்கேற்ப கோட்டை இராச்சியத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு போர்த்துக்கேயரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்காக போர்த்துக்கேயருக்கு வர்த்தகச் செயற்பாடுகளைச் செய்யவும் சமயத்தைப் பிரசாரம் செய்யவும் சுதந்திரம் கிடைத்தது.
- தர்ம பராக்கிரமபாகு அரசனுக்கப் பின்னர் கோட்டையின் அரசனான ஆறாவது விஜயபாகு அரசனின் காலத்தில் இந்த இராச்சியம் நெருக்கடி நிலைமைக்குத் தள்ளப்பட்டது. விஜயபாகு அரசன் தான் வளர்ந்த ஒருவருக்கு அரசுரிமையை வழங்குவதற்கு எண்ணியபோது, அரசனின் மூன்று புதல்வர்களும் அதனை எதிர்த்தனர்.

இதன் பெறுபேறாக புதல்வர்கள் தந்தையைக் கொன்று, அரச மாளிகையில் இருந்த பொருள்கள் யாவற்றையும் கொள்ளையடித்து இராசதானியைத் தமக்குள்ளே பகிர்ந்து கொண்டனர். கி.பி.1521இல் நடந்த இச் சம்பவம் 'விஜயபாகு கொள்ளை' எனும் பெயரில இலங்கை வரலாற்றில் இடம்பெற்றது. அன்று முதல் கோட்டை இராச்சியத்தை இளவரசர்கள் மூவரும் பகிர்ந்த கொண்டனர்.

| | | |
|---|---|---|
| மூத்தவனான 7வது புவனேகபாகு | - | கோட்டைக்கும் |
| இரண்டாவது மத்தும பண்டார | - | றயிகமவுக்கும் |
| இளையவன் மாயதுன்னை | - | சீதாவக்கைக்கும் |

அரசர்களாயினர்.

- இப்பிரிவுகளினாலும் இதன் பின் ஏற்பட்ட பேதங்களினாலும் வர்த்தகத்துக்காக இந்நாட்டுக்கு வருகைதந்த போர்த்துக்கேயருக்கு கோட்டை இராச்சியத்தின் அரசியலில் தலையிடுவதற்கான சந்தர்ப்பம் உருவானது. மாயாதுன்னை அரசனினால் கோட்டை இராச்சியத்துக்கு ஏற்பட்ட இடையூறுகளினால் இராச்சியத்தைப் பாதுகாப்பதற்காக ஏழாவது புவனேகபாகு அரசன் போர்த்துக்கேயரின் உதவியை நாடவேண்டியேற்பட்டது. இதற்காக போர்த்துக்கேயருக்கும் சிங்கள அரசனுக்குமிடையில் உள்ள தொடர்பினை மேலும் உறுதிசெய்து கொள்வதற்காக புவனேகபாகுவின் அரச தூதுவரான சேலப்பு ஆராய்ச்சியை போர்த்துக்கலிலிருந்த மூன்றாவது ஜோன் அரசனிடம் அனுப்பி தனது வேண்டுகோள்களையும் முன்வைத்தான்.
- அதாவது,
  - தனக்குப் பின் தனது மகளி (சமுத்திராதேவி)ன் புதல்வன் இளவரசன் தர்மபாலாவைக் கோட்டை அரசனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும்
  - இதனை ஏற்றுக்கொள்வதன் அடையாளமாக தான் அனுப்புகின்ற தர்மபாலனின் சிறிய தங்கச்சிலைக்கு முடிசூட வேண்டுமெனவும்
  - தன்னையும் இளவரசன் தர்மபாலாவையும் பாதுகாக்க வேண்டுமெனவும்
  - கோட்டை இராச்சியத்துக்கு கத்தோலிக்க மறைத்தூதுவர்களை அனுப்ப வேண்டு மென்பதுமாகும்.
- 1551இல் புவனேகபாகு அரசன் இறந்ததன் பின்னர் இளவரசன் தர்மபால அரசனாக நியமிக்கப்பட்டார். போர்த்துக்கேயர் அவரை கத்தோலிக்க சமயத்துக்கு மதமாற்றம் செய்ய முயற்சித்தபோதும் புவனேகபாகு அரசன் அதனை விரும்பாமைக்கான காரணம் பௌத்த நாட்டுப் பிரசையான தன்னை விட்டுவிட்டு மாயாதுன்னையுடன் சேரலாம் என்ற பயமாகும். எனினும், மறைத்தூதுவர்களுக்கு மறைப்பிரசாரத்துக்குத் தேவையானவற்றை வழங்கினான். பின்னர் 1557இல் தர்மபால அரசன் ''தொன் சுவான் தர்மபாலன்'' எனும் பெயரில் திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்க மதத்தைத் தழுவினான். சிங்கள அரச பரம்பரையின் முதலாவது கத்தோலிக்க அரசனாக அவர் வரலாற்றில் இடம்பெற்றார்.
- தர்மபால அரசன் கத்தோலிக்கனாக மாறிய பின்னர் இதற்கு முன் பௌத்தனாக இருந்த தானும், தனக்கு முன்னிருந்த பௌத்த அரசர்களும் பௌத்த சமயத்துக்குச் செய்த உதவிகளை இப்போது கத்தோலிக்க நிறுவனங்களுக்குக் கொடுக்கலாம் எனும் நோக்கத்தோடு, கோட்டை இராச்சியத்தின் பௌத்த விகாரைகள், அவற்றின் நிலபுலன்கள், கட்டடங்கள், அவற்றின் வருமானம் என்பவற்றை எழுத்து மூலம் பிரான்சிஸ்கன் மறைத்தூதுவர்களிடம் ஒப்படைத்தனர். இவ்விருள் சூழ்ந்த செயற்பாட்டினால் நாட்டுப் பிரசைகள் அனேகர் மாயாதுன்னையின் பக்கம் சாய்ந்தனர். மறைத்தூதுவர்களின் இச்செயலில் நற்பண்பற்ற தன்மை விளங்கியது.
- தர்மபால அரசன் செய்த வேறொரு செயலினால் கோட்டை இராச்சியத்தின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குப் போர்த்துக்கேயருக்கு இலுகுவானதாயிற்று. தர்மபால அரசனுக்குப் பிள்ளைகள் இல்லாதிருந்தமையால், தனக்குப் பின் அரசுரிமையை போர்த்துக்கேய அரசனுக்கு நன்கொடை உறுதியின் மூலம் ஒப்படைத்தார். இதற்கேற்ப 1579இல் தர்மால அரசன் இறந்ததன் பின்னர் முழுக்கோட்டை இராச்சியமும் போர்த்துக்கேயர் வசமானது.

- தொன் சுவான் தர்மபால சிங்கள அரச பரம்பரையில் முதலாவது கத்தோலிக்க அரசனானது மட்டுமல்ல, தனது இராச்சியத்தைப் போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்ததால், கோட்டை அரசு முடிவுக்கு வந்த துர்ப்பாக்கிய நிலை வரலாற்றிலும் இடம்பெற்றது. அவரது ஆட்சிக்காலம் மிகவும் துரதிஷ்டமானதொன்றாகும். பௌத்த விகாரைகளை மறைத்தூதுவர்களுக்கு வழங்குவதான அறிவற்ற, அநீதியான செயலினால் அரசனின் துரதிஷ்ட நிலை இன்னும் அதிகரித்தது. இச்செயல் பௌத்த சமயத்துக்கு மட்டுமல்ல, கத்தோலிக்க சமயத்துக்கும் பொதுவாக நாட்டுக்கும் பாதகமானதோடு, கேடும் விழைவித்தது.

## மறைத் தூதுவர்கள் இலங்கைத் தீவுக்கு வருகை தரல்

- கி.பி.1543இல் முதன்முதலாக மறைத்தூதுவர்களாக பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்தநதையர்கள் இலங்கைக்கு வருகைதந்தனர். ஏழாவது புவனேகபாகு அரசன் போர்த்துக்கேய அரசனுக்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஜோண் த சில்வா த கொண்டே என்ற அருட்தந்தையின் தலைமையில் ஐந்து பேர் அடங்கிய மறைத்தூதுக் குழுவினர் இங்கு வருகை தந்தனர். புவனேகபாகு அரசனின் காலத்தில் மறைப் பிரசாரம் ஓரளவு மெல்ல பயணித்தபோதும் அந்த மறைத்தூதுவர்கள் மிக ஊக்கத்தோடு மறைப்பிரசார செயலில் ஈடுபட்டனர். இலங்கையில் வடக்கு, மேற்கு பிரதேசங்களில் அவர்கள் பணியினை மேற்கொண்டதோடு, இடத்துக்கிடம் ஆலயங்களைக் கட்டி சமயத்தைக் கற்பித்து சிறு குழுக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து சிறிய கிறிஸ்தவ சபையை நிறுவினர்.
- 1597இல் தர்மபால அரசன் இறந்த காலத்தில் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டதோடல்லாமல் மறைப் பிரசாரத்துக்கும் அதிக சுதந்திரமும் சந்தர்ப்பங்களும் உதயமானது. அத்தோடு இந்நாட்டுப் பணிக்காக வேறு சபைகளைச் சேர்ந்த மறைத்தூதுவர்களைக் கொண்டு வருவதற்கு, அப்போது இலங்கைத் தீவுக்குப் பொறுப்பாயிருந்த ஆயரான கொச்சின் ஆயர் செயற்பட்டார். இதன் பெறுபேறாக கி.பி.1602இல் இயேசு சபை மறைத்தூதுவர்களும் 1605இல் டொமினிக்கன் சபை மறைத்தூதுவர்களும், 1606இல் அகுஸ்தீனார் சபையின் மறைத்தூதுவர்களும் இலங்கையில் மறைபணியாற்றுவதற்கு முன்வந்தனர். இக்குழுவினருக்கு கொச்சின் ஆயர் கீழ்வரும் பிரதேசங்களைப் பிரித்தளித்தார்.

| | | |
|---|---|---|
| மகா ஓயாவின் வடக்கு | - | இயேசு சபை |
| சப்பிரகமுவ | - | அகுஸ்தீனார் சபை |
| ஏழு கோறளை | - | டொமினிக்கன் சபை |
| ஏனைய பிரதேசங்கள் | - | பிரான்சிஸ்கன் சபை |

- இவ்வாறாக, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிரதேசங்களில் பணியாற்றிய மறைத்தூதுவர்கள் சமயத்தைப் பிரசாரம் செய்ததோடு மட்டுமல்லாமல் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டனர். அத்தோடு கல்விக்கும் விசேட இடம் அளிக்கப்பட்டது. தேவாலயங்களுக்குப் பக்கத்தில் சிறிய பாடசாலைகளை உருவாக்கிப் பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வியோடு சமயத்தையும் கற்பிப்பதற்கு வழிவகுத்தனர். இதைத்தவிர, இயேசு சபை அருட்தந்தையர்கள் 'கொலிஜ்' எனும் பெயரில் உயர்தர பாடசாலைகள் சிலவற்றை ஆரம்பித்து உயர்தரக் கல்விக்குச் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தனர்.
- கல்வியைவிட மேலதிகமாக அனாதைப் பிள்ளைகளைப் பாதுகாத்தல், நோயாளரை உபசரித்தல், முதியோரைப் பாதுகாத்தல், கைத்தொழில் பாடசாலைகளை ஆரம்பித்தல், புண்ணிய நிலையங்கள் நடாத்திச் செல்லல் போன்ற பணிகளைப் போர்த்துக்கேய மறைத்தூதுவர்கள் நிறைவேற்றினர்.

**போர்த்துக்கேய மிஷனரிகளின் முயற்சிகள் வெற்றியளிப்பதற்கான காரணங்கள்**

1. மறைத்துதுவர்களின் ஆழ்ந்த அர்ப்பணமும் முயற்சியும்:- அறியாத தேசத்தில் தெரியாத மக்களுக்குப் பணியாற்றும்போது மொழி, கலாசாரம், சுவாத்தியம், பழக்கமில்லாதவையாயினும் எல்லாவற்றையும் பழகிக்கொண்டு தமது வாழ்நாளை அர்ப்பணிப்பதில் மறைத்தூதுவர்கள் பின்னடையவில்லை.
2. மறைத்தூதுவர்களுக்குப் போர்த்துக்கேய ஆட்சியாளரிடமிருந்து கிடைத்த உதவி:- போர்த்துக்கேயர் ஆட்சி செய்த பிரதேசங்களில் மறைப் பிரசாரத்துக்கு முழுச் சுதந்திரமும் உதவியும் போர்த்துக்கேய அரசினால் பெற்றுக்கொடுக்கப்பட்டது.
3. மறைத்தூதுவர்களின் மறைப் பிரசாரமுறை:- அவர்கள் தேசிய மொழியினைக் கற்று அம்மொழிகளிலேயே மறையைப் பிரசாரம் செய்தல், சமய நூல்களைத் தேசிய மொழிகளிலே தயாரித்தல், சிறிய பிள்ளைகளுக்கு மறையைக் கற்பிப்பதற்காக ஆரம்ப பாடசாலைகளை ஆரம்பித்தல், பல்வேறு இரக்கப் பணிகளில் ஈடுபடல், போர்த்துக்கேய மறைப்போதக முறைகளை நாடகம், சுற்றுப் பிரகாரம் செல்லல், சுரூபங்களின் உபயோகம் போன்றவற்றின் வழியாக சமய விழிப்பினை ஏற்படுத்தல்.
4. மறைத்தூதுவர்களின் எளிமையான வாழ்க்கை, முன்மாதிரிகையான வாழ்க்கை.

**போர்த்துக்கேய மறைத்தூதுவர்களின் குறைகள்**

- போர்த்துக்கேய காலத்தில் ஐரோப்பிய மறைத்தூதுவர்கள் நூறு வருடங்களுக்கும் அதிக காலம் இந்நாட்டில் பணியாற்றியபோதும், தேசிய அங்கத்தவர்களை குருத்துவ வாழ்வுக்கு ஆயத்தப்படுத்தவில்லை. அதன் பெறுபேறு யாதெனில் ஒல்லாந்தர் காலத்தில் அவர்களை நாட்டிலிருந்து துரத்தியபோது தேசிய கத்தோலிக்க மக்களுக்குப் பணியாற்றுவதற்கு இலங்கைத் தீவில் குருக்கள் இருக்காதமையாகும்.

**போர்த்துக்கேயர் காலத்தில் ஏற்பட்ட கத்தோலிக்கத்துக்கு எதிரான துன்புறுத்தல்கள்**

**1. விதிய பண்டாரவின் துன்புறுத்தல்**

- தொன் சுவான் தர்மபாலவின் தந்தையான விதிய பண்டார போர்த்துக்கேயரோடு ஏற்படுத்திக்கொண்ட வெறுப்பினால் அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்பதால் கிறிஸ்தவர்களை அழிப்பதற்கு ஆரம்பித்தான். அதற்கேற்ப தெற்குப் பிரதேசத்தில் தேவாலயங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அவற்றில் பணியாற்றிய அருட்தந்தையர்களும் கிறிஸ்தவர்களும் அழிக்கப்பட்டனர். கி.பி.1555இல் இடம்பெற்ற இந்த விரோதத்தினால் கிறிஸ்தவ பக்தர்களும், மறைத்தூதுவர்கள் சிலரும் தாக்கப்பட்டனர்.

**2. சங்கிலி அரசனின் கீழ் துன்புறுத்தல்**

- 1542இல் இந்தியாவுக்கு வருகை தந்த பிரான்சிஸ் சவேரியார் அடிகளார் தென்னிந்தியாவின் தென்கிழக்கின் நீண்ட கடலோரத்தில் வாழ்ந்த மக்களுக்குப் பணியாற்றினார். அங்கு வாழ்ந்த பரத குல மக்களுக்கும் கரையோரத்தில் வாழ்ந்த மக்களுக்கும் கிறிஸ்தவ மறையை அறிமுகம் செய்தார். அக்காலத்தில் இலங்கையில மன்னார் தீவின் கரையோரத்தில் வாழ்ந்த மக்களும் பிரான்சிஸ் சவேரியார் அடிகளாரை தமக்குத் திருமுழுக்கு வழங்க இங்கு வரும்படி அழைத்தனர். அதற்கமைய சவேரியார் அடிகளின் பிரதிநிதியொருவர் மன்னாருக்கு அனுப்பப்பட்டார். நூற்றுக்கணக்கான இந்து பக்தர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவினர். இதனை இந்துக் குருக்கள் யாழ்ப்பாண சங்கிலி அரசனுக்கு அறிவித்தனர். கோபமடைந்த சங்கிலி அரசன் படையொன்றினை அனுப்பி 600பேர் மட்டிலான கிறிஸ்தவர்களைக் கொன்றான். இந்தக் கிறிஸ்தவர்கள் ‘மன்னார் மறைசாட்சிகள்’ என அழைக்கப்பட்டனர்.

## கிறிஸ்தவ மறையைத் தழுவிய அரச பிள்ளைகள்

### 1. இளவரசன் தர்மபாலன்

- ஏழாவது புவனேகபாகு அரசனின் பேரனான இளவரசன் தர்மபாலன் தொன் சுவான் தர்மபால எனும் பெயரில் திருமுழுக்குப் பெற்றார். போர்த்துக்கேயரின் உதவி தேவையானதாலும், நாட்டு மக்கள் சமூகம் கத்தோலிக்க மதத்தைத தழுவியதாலும், மறைத்தூதுவர்களின் முயற்சியினாலும் தர்மபால கத்தோலிக்கனானான். இது எவ்வாறெனினும், அவர் கத்தோலிக்க மறையை நன்றாக அறிந்திருந்தமையும் இறக்கும்வரை அந்த மறையில் பற்று இருந்தமையும் என்பது இங்கு வெளிப்படையாயுள்ளது.

### 2. ஜெயவீர பண்டார

- கண்டியை ஆட்சி செய்த விக்கிரமபாகு அரசனின் மகனாவார். போர்த்துக்கேயரின் உதவியை நாடி கிறிஸ்தவ மதத்தைத் தழுவியபோதும், சீதாவாக்கையின் அரசனான இராஜசிங்கவின் ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட்டவுடன் சமயத்தை மறுதலித்தார்.

### 3. கரலியட்ட பண்டார

- இவர் ஜயவீர பண்டாரவின் புதல்வராவார். கண்டியில் சமயப் பிரசாரத்துக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தவர். முதலாவது இராஜசிங்க அரசன் கண்டியை முற்றுகையிட்டபோது போர்த்துக்கேயரின் பாதுகாப்பை வேண்டி திருகோணமலைக்குத் தப்பியோடியதோடு அரச குடும்பத்தில் அனைவரும் கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

### 4. வீரசுந்தர பண்டார

- மலைநாட்டு இளவரசனான இவரைப் போர்த்துக்கேயர் கோவாவுக்கு அனுப்பினார். அங்கு ‘விக்டர் லேபானோ’ எனும் பெயரில் திருமுழுக்குப் பெற்றார்.

### 5. தொனா கத்தரினா (குசுமாசன தேவி)

- கரலியட்ட பண்டாரவின் மகளான இவர், அரச பதவியைப் பெறுவதற்காகப் போர்த்துக்கேய படையினரால் கண்டிக்கு அழைத்து வரப்பட்டார். எனினும், போர்த்துக்கேயரின் படை தோல்வியடைந்தமையால் தொனா கத்தரினா இளவரசி, விமலதர்மசூரிய அரசனுக்கும், அதன் பின்னர் செனரத் அரசனுக்கும் அரசியாக இருந்தமையால் அவரது சமயத்தை வழிபடத் தடையும் ஏற்பட்டது.

### 6. யாழ்ப்பாண அரசகுடும்பத்தின் இளவரச, இளவரசிகள்

- பரராஜசிங்கம் அரசனின் பிள்ளைகள் போர்த்துக்கேயரினால் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டனர். இளவரசன் ‘கொன்ஸ்தாந்தினு’ எனும் பெயரிலும் இளவரசிகள் இருவரும் முறையே ‘இசபெல்’ ‘மரியா’ எனும் பெயர்களிலும் திருமுழுக்குப் பெற்றனர். இளவரசன் கோவாவுக்கு அனுப்பப்பட்டதோடு பிரான்சிஸ்கன் சபையின் குருவுமானார். இளவரசிகள் இருவரும் கோவாவில் அகுஸ்தீனார் சபையின் கன்னியர்களாயினர்.

### 7. தொன் சுவான் யமசிங்க

- கண்டியரசன் பிலிப் யமசிங்கவின் புதல்வராவார். இவர் இந்தியாவின் கோவாவில் கல்வியைக் கற்று போர்த்துகலில் ‘கொயிம்பிரா’ பல்கலைக்கழகத்தில் இறையியல் கற்று குருவாகினார். லிஸ்பனில் ‘டெல்கிறாஸ்’ எனும் இடத்தில் தேவாலயம் ஒன்றையும் இவர் கட்டினார்.

### போர்த்துக்கேயரின் ஆட்சியின் பெறுபேறு

1. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகைதந்ததோடு உரிமையான விசேட கொடைகத்தோலிக்க மறையாகும். போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவடையும்போது இலங்கையின் கரையோரப் பகுதிகளில் உள்ள மக்களில் அனேகமானோர் இம்மறையைத் தழுவியவர்களாயிருந்தனர்.
2. மேற்கத்தைய மொழிகளும் மேற்கத்தைய கல்விமுறைகளும் இந்நாட்டில் போர்த்துக்கேயரின் காலத்திலே வளர்ச்சியடைந்தது. விசேடமாக இலத்தீன், கிரேக்கம், போர்த்துக்கேய மொழிகள் இந்நாட்டு மக்களுக்கு போர்த்துக்கேயரினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதேபோன்று முறைசார் பாடசாலைகளின் வழியாகக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் முறையும் அவர்களினாலேயே எமக்குச் சொந்தமானது.
3. போர்த்துக்கேயரின் கலாசாரம் செல்வாக்குச் செலுத்தியதனால் இந்நாட்டு கலாசாரத்திலும், மக்களின் அன்றாட வாழ்விலும் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. போர்த்துக்கேயரின் பாடல்கள், சங்கீதம், நடனம் என்பன இன்றும் எமது மத்தியில் உள்ளன (பயிா, கபிறிஞ்ஞா).
4. போர்த்துக்கேய மொழி மக்கள் மத்தியில் வளர்ச்சியடைந்தமையால் எமது மொழிகளின் வளர்ச்சிக்குத் துணையாகவும் இருந்தது. கொன்ன, குருசு, சுரூபம், கவும், கொக்கிஸ், அல்மாரி, பெட்டகம், சாராயம், பாண் எனும் சொற்கள் இவற்றில சிலவாகும்.
5. திருமணத்தின் நிலையான தன்மை உறுதிசெய்யப்பட்டதும் போர்த்துக்கேயரின் செல்வாக்கினாலாகும். இந்நாட்டு உணவுப் பழக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.
6. போர்த்துக்கேயர் கல்வியோடு சமயத்தையும் இணைத்ததனால் இன்றுவரை சமயம் கல்வியில் ஒரு முக்கிய அங்கமாகக் கவனிக்கப்படுகின்றது.
7. ''போர்த்துக்கேய இரக்கச் சங்கம்'' (Misericordia) வழியாக ஏழைகளுக்கும், நோயாளருக்கும், முதியோருக்கும், அனாதைகளுக்கும் உதவுவதற்காக சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நாட்டில் வைத்தியசாலைகளை நிறுவியதோடு மேல்நாட்டு வைத்திய விஞ்ஞானம் அறிமுகப்படுவதற்கும் முன்னோடியாயிருந்தவர்கள் போர்த்துக்கேயரேயாவார்.
8. முதலாவது சிங்கள யுத்த காவியமென கருதப்படுகின்ற ''கொன்ஸ்தாந்தினு யுத்தம்'' போர்த்துக்கேயர் காலத்தில் தயாரிக்கப்பட்டது. இது போர்த்துக்கேயர் காலத்தில் தோம்பு தயாரிப்பவரான கிறிஸ்தவ மறையைத் தழுவிய அழகிய வண்ண முகவேட் என்பவரால் தயாரிக்கப்பட்டது.

## 8.1.3. ஒல்லாந்தர் காலம் (கி.பி. 1658 - 1796)

### போர்த்துக்கேய ஆட்சியின் முடிவும் ஒல்லாந்தர் ஆட்சியின் உதயமும்

- கோட்டை இராச்சியமும் யாழ்ப்பாண இராச்சியமும் போர்த்துக்கேயரின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. எனினும், மலையக இராச்சியம் சுயாதீன சிங்க அரசரொருவரின் கீழ் இருந்தது. சிங்கள அரசருக்கும், நாட்டு மக்களுக்கும் போர்த்துக்கேயரின் ஆட்சி சுவையற்றுப் போவதற்குச் செல்வாக்குச் செலுத்திய பல காரணங்கள் உள.
    - தமது நாடு வெளிநாட்டவரின் கீழ் இருப்பது அரசருக்கும் நாட்டு மக்களுக்கும் விருப்பமின்மை.
    - சில போர்த்துக்கேய ஆட்சியாளரினதும், அதிகாரிகளினதும கொடூர தன்மையும், முறையற்ற செயல்களும்.
    - போர்த்துக்கேயரின் யுத்தங்களினால் இரத்தம் சிந்துதலும், உயிர்ச்சேதமும் ஏற்படல்.
    - போர்த்துக்கேயர் தமது சமயத்தை முதன்மைப்படுத்தி இந்நாட்டு பௌத்தர்களுக்கு பல்வேறு இடையூறுகள் விளைவித்தல்.

- இவ்வாறான நிலைமைகளினால் போர்த்துக்கேயர் இந்நாட்டிலிருந்து துரத்தப்பட்டு நாட்டைக் காப்பாற்றுவதற்கு மலையக இரண்டாம் இராஜசிங்க அரசன் ஒல்லாந்தரின் உதவியை நாடினார். இதன்பொருட்டு ஒல்லாந்தரோடு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டார். இதற்கேற்ப கடற்கரைப் பிரதேசங்களில் இருந்த போர்த்துக்கேய கோட்டைகளை ஒவ்வொன்றாக ஒல்லாந்தர் கைப்பற்றினர். இறுதியாக, 1656இல் கொழும்புக் கோட்டையும், 1658இல் யாழ்ப்பாணக் கோட்டையும் ஒல்லாந்தர் வசமானதால் இலங்கைத் தீவில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் முடிவுற்று ஒல்லாந்தரின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டது. இராஜசிங்க அரசன் எதிர்பார்த்த விதத்தில் போர்த்துக்கேயரிடமிருந்து மீட்டெடுத்த பிரதேசங்களை சிங்கள அரசர்களிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக அப்பிரதேசங்களில் தமது அதிகாரங்களை ஒல்லாந்தர் நிலைநாட்டினர்.

## போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் நிலவிய கருத்து வேறுபாடு

- 16ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தத்தினால் போர்த்துக்கேயத்தில் கத்தோலிக்க மதத்துக்கும் ஒல்லாந்த ஜோண் கல்வினது புரட்டஸ்தாந்து மதத்துக்குமிடையில் பிரிவினை ஏற்பட்டது. இதன் காரணமாக போர்த்துக்கேயருககும் ஒல்லாந்தருக்குமிடையில் பகையேற்பட்டது. இவ்வாறே, 16ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் ஒல்லாந்து ஸ்பெயினின் ஆதிக்கத்திலிருந்து மீட்டு ஐரோப்பாவில் வல்லமையுள்ள நாடாகியது. ஒல்லாந்து பலமுள்ள நாடாவதற்கு விசேடமாக வர்த்தக சங்கங்கள் சில ஒன்றாக இணைந்து ஒழுங்குசெய்யப்பட்ட ‘‘கீழைத்தேய இந்திய கம்பனி” உதவியளித்தது. இக் கம்பனியின் நோக்கமானது வர்த்தகத்தை முன்னேற்றுவதாகும். கி.பி.1602இல் கீழைத்தேய இந்தியா கம்பனி நிறுவிய அதிகாரப் பத்திரத்தில் சமயத்தைப் பரப்புதல் கம்பனியின் வேலையாக குறிப்பிடப்படவில்லை. எனினும், கம்பனியின் பொது நடவடிக்கைகளில் கத்தோலிக்கருக்கு எதிரான கட்டளைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.
- இவ்வாறாக போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஒருவருக்கொருவர் எதிரான இரு மதங்களைத் தழுவியதாலும் கீழைத்தேய வர்த்தகத்தில் போட்டியாளர்களாகியதாலும், அது இருபாலாரிடமும் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தியது. எனவே, போர்த்துக் கேயரைக் கீழைத்தேய நாடுகளிலிருந்து துரத்தி விடுதல் ஒல்லாந்தரின் அபிலாஷையாகும்.

## ஒல்லாந்தரின் கத்தோலிக்கருக்கு எதிரான கொள்கை

- ஒல்லாந்தரின் கீழைத்தேய இந்திய கொம்பனியை நிறுவும்போது மதத்தைப் பிரசாரம் செய்தல் கொம்பனியின் வேலையாக இல்லாவிடினும், கி.பி.1642இல் அந்த வர்த்தகக் கொம்பனி வெளியிட்ட பெத்தாவியானு சஞ்சிகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தைத் தவிர வேறு எந்தவொரு சமயத்தையும் பகிரங்கமாகவோ இரகசியமாகவோ வழிபடுவதற்கு எந்தவொரு தருணத்தையும் கொடுக்கக் கூடாது. இச்சட்டத்துக்கு எதிராக செயற்படுபவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதோடு அவர்கள் நாடுகடத்தப்படுதல் வேண்டும்.....”
- போர்த்துக்கேயரைத் துரத்தி விடுவதற்காக இராஜசிங்க அரசனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையே ஏற்படுத்திய ஒப்பந்தத்தில் நிபந்தனையாக எந்தவொரு கத்தோலிக்க மதகுருவுக்கும், துறவிக்கும் தனது இராச்சியத்தில் தங்கியிருப்பதற்கு அரசு இடமளிக்கக் கூடாதெனவும், அவர்களை நாட்டிலிருந்து துரத்த வேண்டுமென்பதுமேயாகும்.
- 1682 யூலை முதலாம் திகதி ஆணைச் சட்டத்தினால் கத்தோலிக்கருக்கு
    - பிரசித்தமாகவோ மறைமுகமாகவோ கூட்டங்கள் நடாத்துவது
    - கத்தோலிக்க வழிபாடுகளை நடாத்துவது, அவற்றில் பங்குபற்றுவது
    - குரு இல்லாமல் சமய போதனைகளுக்குச் செவிமடுத்தல் பாட்டுப்பாடுதல்
    - தமது வீடுகளில் கிறிஸ்தவ படங்கள், சிலைகள் வைத்திருப்பது

- எந்தவொரு குருவினாலும் வழிபாடுகளை நடாத்துவது
- குருவினால் எவருக்கும் திருமுழுக்குக் கொடுப்பது என்பன தடைசெய்யப் பட்டிருந்தன.

இந் நிபந்தனைகளை மீறுவோருக்குத் தண்டம் வழங்குதல், சிறையில் அடைத்தல், கைகளுக்கு கடுந்தண்டனை போன்றன விதிக்கப்பட்டன.

- இவ்வாறு ஒல்லாந்தர் காலம் இலங்கைத் தீவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு முறையற்ற துன்புறுத்தல்கள் உள்ள காலமாயிருந்தது. மறைவாகத் தமது சமயத்தை வழிபடுதல் சட்டப்படி தடைசெய்யப்பட்டிருந்தது. திருப்பலி நடத்துவதற்கும் தடைபோடப் பட்டிருந்தது. சகல கத்தோலிக்கப் பாடசாலைகளும் ஆலயங்களும் புண்ணிய நிலையங்களும் அழிக்கப்பட்டதோடு புரட்டஸ்தாந்து மத குருக்களிடம் ஒப்படைக்கப் பட்டனர். சகல பாடசாலைகளிலும் புரட்டஸ்தாந்து மதம் கற்பிக்கப்பட்டதோடு, இப்பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்ப விரும்பாதவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. புரட்டஸ்தாந்து மத ஆலயத்தில் திருமுழுக்குப் பெறாதவர்களின் பிறப்பு பதிவு செய்தல் செல்லுபடியாதல் கவனிக்கப்படமாட்டாது. புரட்டஸ்தாந்து கருத்துகளுக்கேற்ப நடைபெறாத திருமணங்கள் வரவேற்கப்படமாட்டாது. புரட்டஸ்தாந்து மதத்துக்கு மாறியவர்களுக்கு விசேட சலுகைகள் கொடுக்கப்பட்டதோடு, கத்தோலிக்கர் எனக் கூறிக் கொண்டவர்களுக்கு அரசில் எந்தவொரு உதவியும் வழங்கப்படவில்லை. கத்தோலிக்கர் முகங்கொடுத்த மிகப்பெரிய துன்புறுத்தலானது அவர்களது ஆன்மீக செயற்பாடுகளுக்கு குருக்கள் இல்லாதிருந்தமையாகும். ஒல்லாந்தரினால் இந்நாட்டில் பணியாற்றிய மறைத்தூதுவர்கள் நாட்டிலிருந்து நாடுகடத்தப்பட்டனர். எவராவது குரு ஒருவர் இந்நாட்டில் மறைந்து இருந்தால் மரணதண்டனை பெறுவதற்கான காரணமாகக் கணிக்கப்பட்டது. பொதுநிலையினரால் குருக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படின் அது தண்டனைக்குரிய குற்றமாயிருந்தது. போர்த்துக்கேய காலத்தின் முடிவின்போது 120 குருக்கள் இந்நாட்டில் பணியாற்றியபோதும ஒல்லாந்தரின் காலத்தில் ஒரு குருவாவது இந்நாட்டில் இருக்கவில்லை.

**ஒல்லாந்தர் கத்தோலிக்கரைத் துன்புறுத்துவதற்கான காரணம்**

1. கத்தோலிக்க சமயம் புரட்டஸ்தாந்து ஒல்லாந்தரினால் விருப்பமற்ற சமயமாக இருந்தது. கத்தோலிக்க மறையில் சுரூபங்கள் உபயோகிப்பது, புனிதர்களை வணங்குவது, திருப்பலி போன்ற வழிபாட்டு முறைகளினால் அவர்கள் இதனை சிலை வழிபாட்டு சமயமாகக் கருதினர். இதற்குப் பதிலாக தேசிய கத்தோலிக்கர் ஒல்லாந்தரின் புரட்டஸ்தாந்து சமயத்துக்கு மாற்றப்படுவது தமது சமய கடமையென ஒல்லாந்தர் கருதினர்.
2. தேசிய மக்கள் தமது புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியதால் அவர்களுக்கும் தமக்குமிடையில் நல்ல தொடர்பினை ஏற்படுத்துமெனவும் இது ஆட்சிக்குப் பயன்படுமெனவும் ஒல்லாந்தர் எதிர்பார்த்தனர்.
3. விசேடமாக கத்தோலிக்க மறை இந்நாட்டில் கத்தோலிக்கருக்கும் ஒல்லாந்தருக்கு மிடையே என நினைந்தமையால் ஆகும். இவ்வாறான, சமயத் தொடர்புகளினால் கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தருக்கு பக்கச் சார்பில்லாமல் இருந்தனரெனவும் மீண்டும் போர்த்துக்கேயர் அழைக்கப்படுவதற்கு முயற்சி செய்கிறார்கள் எனவும் அவர்கள் நினைத்தனர்.

**ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களை எதிர்கொண்ட இந்நாட்டு கத்தோலிக்கரின் நடவடிக்கைகள்**

- ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களாலும் சட்டங்களினாலும் கத்தோலிக்கருக்குத் தமது மறையை வழிபடுவதற்கான சுதந்திரம் முழுமையாகவே இல்லாமற் போய்விட்டது. அதுமட்டுமல்ல, பல்வேறு துன்புறுத்தல்களையும் அனுபவிக்க வேண்டியேற்பட்டது. குருக்கள் ஒருவரும் இல்லாமல் (30) முப்பது வருடங்களாகத் தமது நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டிய நிலை பொதுநிலையினருக்கு ஏற்பட்டது.

- ஒல்லாந்தரின் சட்டதிட்டங்களை எதிர்கொண்ட தங்களது இலாபத்தை முன்னிட்டு கத்தோலிக்க சமயத்தைக் கைவிட்டுப் புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவிய சிறு குழுவினரைத் தவிர, கத்தோலிக்கரில் அதிகமானோர் தமது சமயத்துக்கு பக்கச்சார்பாகவும் அதனைக் கைவிடாமலும் அதற்கு அதிகளவு ஈடுபாட்டோடு இருந்தனரென்பதும் தெரிய வருகிறது. தமது நம்பிக்கைக்காக எந்தத் தண்டனையையும் அனுபவிக்கத் தயாராகவும் இவர் இருந்தனர். விசேடமாக நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த கத்தோலிக்கர், தாம் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவுவதற்கு விருப்பமில்லையெனப் பகிரங்கமாகவும் கூறினார்கள். அதுமட்டுமல்லாமல், தமது பிள்ளைகள் புரட்டஸ்தாந்து மறையைக் கற்பதையும் எதிர்த்தனர். நீர்கொழும்பு கத்தோலிக்கருக்கிடையே தலைமைத்துவம் வகித்தவர் அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான அரசின் முக்கிய அதிகாரியான 'தொன் அபோன்சு பெறெய்ரா' எனும் பிரபு ஆவார். கத்தோலிக்க விசுவாசத்துக்காக அவர் தனக்குச் சொந்தமான அனைத்தையும் தியாகம் செய்ய நேரிட்டதோடு மட்டுமல்லாமல் பல துன்பங்களையும் அனுபவித்ததன் பின் நாட்டிலிருந்து கடத்தப்பட்டு வாழ்வின் இறுதிக் காலத்தில் உயிர்த்தியாகியாகினார். அவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் இத்தலைவிதியே கிடைத்தது. இவ்வாறு துன்புறுத்தல்கள் மத்தியல் கத்தோலிக்க சமயத்தில் பயமின்றி இருந்தவர்கள் அனேகராவர்.
- இந்நாட்டில் கத்தோலிக்க குருக்கள் ஒருவரும் இல்லாதிருந்தமையால் எமது கத்தோலிக்கர் மிகவும் அனாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால், கத்தோலிக்க குரு ஒருவர் இல்லாதிருந்தும் மீண்டும் கொழும்புத்துறைமுகத்துக்குச் சென்று எப்பொழுதும் கொழும்பு நகரத்தில் கத்தோலிக்கர் தமக்கு நேரிடக் கூடிய அபாயத்தையும் கவனியாது கப்பலுக்குள் சென்று அருளடையாளங்களைப் பெற்றனர்.
- கண்டி இராச்சியத்தில் வாழ்ந்த கத்தோலிக்கருக்கு ஓரளவு சுதந்திரம் இருந்தபோதிலும் அவர்களுக்கு ஆலயங்கள் இருக்கவில்லை; குருக்களும் இருக்கவில்லை. இதனால், ஞாயிறு தினத்தில் ஒன்றாகக் கூடி இறை ஆராதனை நடாத்த முடியாதிருந்ததெனவும், ஒவ்வொரு கத்தோலிக்கரும் வீடுகளில் தமக்கு இயன்ற விதத்தில் செபித்தனர் எனவும், பிள்ளைகளுக்குப் பொதுநிலையினரே திருமுழுக்குக் கொடுத்தனரெனவும், தமது பிள்ளைகளுக்குச் செபிக்கக் கற்றுக் கொடுத்தனரெனவும் தாம் கத்தோலிக்கர் என்பதை வெளிப்படுத்தும் வெளி அடையாளமாக சிலர் செபமாலையையும் சிலர் சிலுவையையும் அணிந்தனரெனவும் றொபட் னொக்ஸ் 1680இல் எழுதியுள்ளார்.
- பொதுநிலையினராகத் தம்மால் செய்யக்கூடிய அனைத்தையும் செய்தபோதும், குரு ஒருவரினால் தாம் பெறக்கூடிய பணிகளை விசேடமாக திருப்பலி, நற்கருணை, பாவசங்கீர்த்தனம் போன்ற பணிகள் கிடைக்காமை கத்தோலிக்கருக்கு பாரிய இழப்பாக இருப்பினும், இந்நாட்டுக்கு குருக்களைத் தரும்படி கேட்டு கோவாவிலுள்ள திருச்சபையின் தலைவர்களுக்குக் கடிதம் எழுதினார். இதில் குரு ஒருவர் இலங்கையிலுள்ள கத்தோலிக்கருக்கு ஆறுதல் தரும்படி ஒல்லாந்தரிடம் தாழ்மையோடு கேட்டிருந்தபோதும் இவை யாவும் பயனற்றுப் போயின. எந்தவொரு குருவையும் இலங்கைக்கு அனுப்புவதற்கு அனுமதியளிப்பதில்லையென ஒல்லாந்த அரசு உறுதியான தீர்மானம் எடுத்திருந்தது.

## ஒல்லாந்தர் காலத்தில் கல்வி

- ஒல்லாந்தரின் கல்வியின் நோக்கமும் போர்த்துக்கேயிரின் கல்வியின் நோக்கமும் சமனாக இருந்ததோடு கல்வியினூடாக சமயப் பிரசாரம் செய்வதற்கு முன்னுரிமை கொடுத்ததைக் காணலாம். எனினும், போர்த்துக்கேயரைவிட முறையான, ஒழுங்கமைப்பட்ட தன்மை ஒல்லாந்தரின் கல்விச் செயற்பாடுகளில் இருந்தன. சகல பங்குகளிலும் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டதோடு ''கடிகிஸ்க்'' எனும் ஆசிரியருக்கு எல்லாப் பாடசாலைகளிலும் சமயம் கற்பிப்பது ஒப்படைக்கப்பட்டது. தேசிய குருக்களைப் பயிற்றுவிப்பதற்கான (செமினரி) நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

- ஒல்லாந்தர் காலத்தில் கல்வி கட்டாயமாககப்பட்டிருந்தது. 15 வயதுவரை கட்டாயக் கல்வியாக்கப்பட்டதோடு கல்வி முடிவடைந்ததும் பாடசாலையிலேயே பரீட்சை நடாத்தப்பட்டு ''லாகிரிடன்'' எனும் சான்றிதழும் வழங்கப்பட்டது. இத்தோடு நிறுத்தப்படாமல் பிள்ளைகளுக்கு 19 வயது வரையும் தொடர் ஒழுங்கு முறை தயாரிக்கப்பட்டது. மிகத் திறமையான பிள்ளைகளுக்கு உயர் கல்விக்கும், ஆசிரியர் பயிற்சிக்கும் சில வேளைகளில் உயர் கல்விக்காக வெளிநாடு செல்வதற்கும் பாடசாலை முறை வழிவகுத்தது.
- அக்காலத்தில் கல்வி பற்றிய நேரடி பொறுப்பினையும் ஒல்லாந்த அரசினால் பொறுப்பேற்கப்பட்டு எல்லாச் செலவுகளையும் ஏற்று ஆசிரியர்களை நியமிப்பது, பயிற்சியளிப்பது, நிர்வாகம் பரீட்சகர்களின் வழியாக பாடசாலைப் பரீட்சைகளை நடாத்துதல் போன்றன மேற்கொள்ளப்பட்டன. இச்செயற்பாடுகளை ''ஸ்கோலாகல் கொமிஷம்'' எனும் விசேட நிறுவனத்தின் வழியாக நிர்வகிக்கப்பட்டது.

## ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் உருவான பண்புகள்

- 140 ஆண்டுகளை அண்மித்த காலங்கள் ஒல்லாந்தரினால் இந்நாட்டிலுள்ள கரையோரப் பிரதேசங்கள் ஆட்சி செய்யப்பட்டன. இக்காலம் கத்தோலிக்கருக்கு துன்புறுத்தலான காலமாயினும் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம் இலங்கையின் முன்னேற்றத்துக்குப் பெரும் பங்களிப்பினை செய்ததாக ஏற்றுக்கொள்ள முடியும்.

1. வர்த்தகத்தில் முன்னேற்றம் பொருளாதார, தானியங்கள் உற்பத்தியில் ஈடுபட்டதனால் இந்நாட்டு பொருளாதாரம் உயிரூட்டப்பட்டது.
2. வர்த்தக நடவடிக்கைகளுக்கான வழிகளை வகுத்தல், வாய்க்கால்கள் அருவிகளை உண்டாக்குதல், போக்குவரத்துக்கான நீர் வழிகளை ஏற்படுத்துவதும் ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தன.
3. உரோம ஒல்லாந்த சட்டம் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. நீதிமன்றத்தினால் வழக்குகளை விசாரித்தல் சட்டப்படி தண்டனைகள் வழங்குதல் என்பன ஒல்லாந்தரினால் ஆரம்பிக்கப்பட்டன.
4. நிர்வாகச் செயற்பாடுகள் நல்லமுறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததோடு கச்சேரிகள் ஆரம்பிக்கப்பட்டமையும் அதன் வழியாக பிரசைகளின் பிறப்பு, திருமணம், மரணம் என்பவை பதியப்படுவதும் ஆரம்பிக்கப்பட்டது.
5. கல்வி நடவடிக்கைகள் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமை ஒல்லாந்தரின் கால பெறுபேறாகும்.
6. ஒல்லாந்த புரட்டஸ்தாந்து சமயம் இந்நாட்டில் பரவியதனால் இச்சமயத்தின் போதனைகள் இந்நாட்டின் மக்கள் சமூகத்துடன் கலந்தது.
7. அச்சு இயந்திரங்களை இந்நாட்டில் அறிமுகம் செய்தல், திருவிவிலியத்தின் சிங்கள மொழிபெயர்ப்பும் மக்கள் மத்தியில் பரம்பியதும் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

## யோசப்வாஸ் அடிகளார் இலங்கையில் ஆற்றிய பணிகள்

- கி.பி.1680ஆம் ஆண்டளவில் இலங்கையில் ஒரு கத்தோலிக்க குருவும் இருக்கவில்லை. அவ்வாறான, காலத்தில் இந்நாட்டு கத்தோலிக்கருக்காக தனது வாழ்வையே அர்ப்பணித்த உன்னத மறைபணிக்காக தியாகம் செய்த கிறிஸ்தவ வீரராக யோசப்வாஸ் அடிகளாரை அறிமுகப்படுத்தலாம்.
- இவர் இந்தியாவின் கோவா பிரதேசத்தின் சென்தோ ஆல் எனும் கிராமத்தில் பிராமண வம்சத்தில் கிறிஸ்தோபர் வாஸ், மரியா மிறெண்டா எனும் பெற்றோருக்கு கி.பி. 1651 ஏப்ரல் 21ஆம் திகதி பிறந்தார். சிறு வயது முதல் சமயப் பற்றோடு வளர்க்கப்பட்டார். வாலிப வயதில் குருத்துவ வாழ்வை மேற்கொண்டார். இது 1676இல் கோவாவின் மறைமாவட்ட பணிக்காக கோவாவின் பேராயரினால் அளிக்கப்பட்டது. ஐந்து வருடங்கள் கோவாவில் பணியாற்றிய வாஸ் அடிகளார், கோவாவுக்குத் தெற்கில் இருந்த கனரா பிரதேசத்தில் பிரதேசாதிபதியாக நியமிக்கப்பட்டு, அங்கு பணியில் ஈடுபட்டார்.

- இதற்கிடையில் வாஸ் அடிகளாரின் மனம் இலங்கையின் கத்தோலிக்க மக்களின்பால் ஈர்ப்பை ஏற்படுத்தியது. கத்தோலிக்கர் கைவிடப்பட்ட நிலை பற்றிக் கேள்விப்பட்டார். ஒல்லாந்த காவலாளரிடமிருந்து தப்பி கத்தோலிக்க குரு ஒருவர் இலங்கைத் தீவுக்குள் நுழைவது எவ்வளவு கஷ்டமானதென அறிந்திருந்த அடிகளார் இதற்கான பொருத்தமான வழியைத் தேடிச் சிந்திக்கலானார். கி.பி.1685இல் கனராவில் பணியை முடித்துக்கொண்டு மீண்டும் கோவாவுக்குச் சென்ற அடிகளார் இந்திய ஒறத்தோரியன் குருத்துவ சபையின் அங்கத்துவத்தைப் பெற்றார். கி.பி.1687இல் தொழிலாளியாக வேடம் பூண்டு மன்னாரில் வந்திறங்க அடிகளாரால் முடிந்தது.
- யோசப்வாஸ் அடிகளார் யாருடைய அழைப்புமின்றி சுய விருப்பத்தோடு இலங்கைக்கு வருகை தந்தார். ஆழமான நம்பிக்கையோடிருந்த அடிகளார், தமது வாழ்க்கையைக் கூட சவாலாக வைத்து, அறியாத நாட்டில், தெரியாத மொழி பேசுகின்ற, அறிமுகமற்ற மக்கள் மத்தியில் எந்தவொரு உதவியும் எதிர்பார்க்க முடியாத கஷ்டமான பணிக்காக ஈடுபட்டமை தனக்கு இறைவன் தந்த அழைப்பென ஏற்றுக்கொண்டார். இந்நாட்டில் காலடி எடுத்து வைத்த வேளையிலிருந்து தனது சுகத்தைப் பற்றிக் கொஞ்சமும் எண்ணவில்லை. கிறிஸ்தவர்களைத் தேடி அவர்களுக்குப் பணியாற்றியது மிக்க அர்ப்பணத்தோடாகும்.
- ஒல்லாந்தர் காலத்தில் 20 வருடங்களளவில் இலங்கையில் இருந்த ஒரே ஒரு குரு யோசப்வாஸ் அடிகளாராவார். அத்தோடு இவர் வடக்கிலிருந்து தெற்கு வரையும், தெற்கிலிருந்து மத்திய மாகாணம் வரை பல்வேறு கஷ்டமான பாதைகளின் வழியாக நடந்தே பிரயாணம் செய்தார். உண்ண உணவின்றியிருந்த சந்தர்ப்பங்களும் உண்டு. கண்டிக்குச் சென்ற முதல் சந்தர்ப்பத்தில் அவர் ஒரு ஒற்றன் எனச் சந்தேகித்து அரசனால் சிறையில் அடைக்கப்பட்டார். இவ்வாறு, பல துன்பதுயரங்களை அனுபவித்து இலங்கையில் கத்தோலிக்க மதத்தை ஒல்லாந்தர் காலத்தில் பாதுகாத்துக் கொடுக்க யோசப்வாஸ் அடிகளாரினால் ஆற்றப்பட்ட மறைப்பணியானது விபரிக்க முடியாதளவு பெறுமதி வாய்ந்ததாகும்.
- யோசப்வாஸ் அடிகளார் 20 வருடங்களாக ஆற்றிய பணியை தனது மரணத்தின் பின்னும் முன்னெடுத்துச் செல்வதற்காகவும் செயல்களை ஒழுங்கு செய்திருந்தார். அதாவது, இந்தியாவின் ஒறத்தோரியன் சபை குருக்களை இந்நாட்டின் பணிக்காக அழைத்துக் கொண்டதாகும்.
- கி.பி.1711 ஜனவரி 16ஆம் திகதி யோசப்வாஸ் அடிகளார் இறைபதம் அடையும்போது அவரது வயது 66 ஆகும். குருவாக 35 வருடங்களும், இலங்கையின் பணியில் 24 வருடங்களும் நிறைவெய்தியிருந்தது. அவருடைய மரண நேரத்தில் அவரைச் சுற்றி இருந்த ஏனைய குருக்களின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கப்பட்ட இறுதி அறிவுரையானது

  *''விளங்கிக் கொள்ளுங்கள், எந்த ஒருவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்டது எதையும், அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது''*

  என்பதாகும்.

## யோசப்வாஸ் அடிகளாரின் மறைத்தூதுக் கொள்கை

1. இவர் இந்நாட்டுக்கு வருகை தந்ததும் பணியாற்றியதும் தனியே கிறிஸ்துவின் பிரதிநிதியாக மட்டுமே ஆகும். எந்தவொரு அரசியல் தொடர்போ அரச உதவியோ இல்லாமலும் சமய பிரசாரம் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமென தனது பணியின் மூலம் கத்தோலிக்க உலகுக்குக் காட்டியுள்ளார்.
2. அடிமைப்பட்டிருந்த காலத்தில் ஐரோப்பிய மறைத்தூதுவர்களால் கிறிஸ்தவரல்லாத சமயத்தவர் தவறான கொள்கைகள் உள்ளவர்களெனவும், சிலைகளை வழிபடுபவர்களெனவும் கருதப்பட்டனர். எனினும், வாஸ் அடிகளார் ஏனைய சமயத்தவரைப் பற்றி வேறு மனப்பாங்கில் செயற்பட்டார். இரக்கப் பணிகளின்போது கிறிஸ்தவரல்லாதவர்களையும் ஒரேவிதமாகக் கவனித்தார். கத்தோலிக்க மறைக்குத் தன் வாழ்வின் மூலம் சான்று பகர்ந்தார்.

3. தேசிய மொழிகளை நன்றாகக் கற்று மறைதூதுப் பணியில் ஈடுபடல் மிகக் கஷ்டமானது என ஏற்றுக்கொண்ட வாஸ் அடிகளார், சிங்களம் தமிழ் மொழிகளைத் தமது பணியின் நன்மைக்காகவே நன்றாகக் கற்றார். இந்நாட்டுக்கு வருகை தந்த ஏனைய மறைத்தூதுவர்களுக்கும் மொழியைக் கற்குமாறு ஊக்கமளித்ததோடு யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரை நூல்களை எழுதுவதில் ஈடுபடுத்தியதால் தேசிய மொழிகளில் மறைநூல்கள் வெளிவந்தன.
4. இலங்கையில் கத்தோலிக்க மறைக்கு தேசிய கலாசாரப் பண்புகளை தொடர்புபடுத்துவதற்கும் யோசப்வாஸ் அடிகளார் முயற்சி செய்தார். அக்காலத்து பழக்கங்களுக்கேற்ப பொது வழிபாடுகள் இலத்தீன் மொழியில் நடைபெற்ற போதும் தேசிய மொழிகளில் செபிப்பதற்கு வழி சமைத்துக் கொடுத்தார். தேசிய பாடல்களையும் கருவிகளையும் உபயோகித்தார். இவ்வாறு, தேசிய மயமாக்குதலில் கலாசாரத்தின் திறந்த தன்மைக்கு வழிகாட்டினார்.
5. மறைப் பிரசாரத்துக்காகவும் தனது மறைமாவட்டத்தின் நிர்வாகத்துக்காகவும் ஐரோப்பிய மறைத்தூதுவர்களைத் திருப்பியனுப்பிய காலத்திலும் தேசிய மறைத்தூதுவர்களும் வெற்றிகரமாக இச்செயலில் ஈடுபடக் கூடிய தன்மையை தமது வாழ்க்கையின் முன்மாதிரிகையினாலும், ஒறத்தோரியன் குருக்களின் பணியினாலும் எடுத்துக் காட்டியுள்ளார்.

### யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார்

| | |
|---|---|
| 1676 | கோவாவில் திவாரி எனும் கிராமத்தில் பிறந்தார் (1676.06.08). |
| 1695 | குருவாக திருநிலைப்படுத்தப்படல். |
| 1700 | ஒறத்தோரியன் துறவற சபையில் சேருதல். |
| 1705 | இலங்கையில் பணியாற்ற வருகை தரல். |
| 1708 | நீர்கொழும்பு, கொழும்பு, மாத்தறை பிரதேசங்களில் பயணம் மேற்கொள்ளல். |
| 1710 | சிங்கள மொழியைக் கற்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல். |
| 1687 | இலங்கைக்கு வருகை தரல் (மன்னார் கரையில் இறங்குதல்). |
| 1724 | இலங்கையின் துணைத் தலைவராக நியமிக்கப்படல். |
| 1730-1740 | போளவத்த பிரதேசத்தில் நிரந்தரமாக வதிதல், சிங்கள கத்தோலிக்கநூல்கள் பலவற்றை எழுதுதல். |
| 1742 | போளவத்தையில் இறைபதமடைதல் (1742.07.17). |

### யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் ஆற்றிய பணிகள்

- யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் உள்ளார்ந்த ஆற்றல் பல நிறைந்த மிகவும் அபூர்வமான சக்தியுடைய ஒருவராகத் திகழ்ந்தார். அவர் கூர்மையான அறிவும், மொழிகளைக் கற்றுக்கொள்ளும் ஆற்றலும், இசை ஞானமும் எழுத்தாற்றலும் நிறையப் பெற்ற அறிஞராவார். இதனால், அவர் இலங்கைத் தீவுக்கு வருகை தந்தமை இலங்கைக் கிறிஸ்தவ சமயத்துக்கு புதிய யுகம் ஒன்று பிறந்ததெனக் கூற முடியும்.
- தமது தாய்மொழியாகிய கொங்கனியையும் இலத்தீன், ஸ்பானிய, போர்த்துக்கேய மொழிகளையும் அறிந்திருந்த கொன்சால்வேஸ் அடிகளார் இலங்கையில் தமிழ், சிங்களமாகிய மொழிகளையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்தார். இந்த மொழியறிவைப் பயன்படுத்தி நூல்கள் எழுதுவதில் ஈடுபட்ட அவர் சிங்கள மொழியில் 21 நூல்களையும், தமிழ்மொழியில் 15 நூல்களையும், போர்த்துக்கேய மொழியில் 4 நூல்களையும், ஒல்லாந்து மொழியில் ஒரு நூலையும் எழுதியுள்ளதாக ஒறத்தோரியன் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சில நூல்கள் பேச்சு மொழியிலும் சில நூல்கள் கவிதை நடையிலும் எழுதப்பட்டுள்ளன. அவரது மொழி ஞானத்தையும் மொழி நடையையும் பார்க்கும்போது மிகவும் ஆழமான இறையியல் கோட்பாட்டு விடயங்களைச் சிங்கள மொழியில் முன்வைக்கும்போது வடமொழிச் சொற்கள் பலவற்றையும்

பயன்படுத்தியுள்ளார். சான்றோர்களுக்காக எழுதிய நூல்களை ஆழமான மொழிநடையிலும், சாதாரண மக்களுக்கு எழுதிய நூல்களை எளிமையான கிராமிய பேச்சு வழக்கிலும் எழுதியுள்ளதைக் காணமுடிகிறது. இதிலிருந்து அவருக்கிருந்த பரந்த மொழி ஞானம் தெரிய வருகிறது. இசையாற்றல்கள் நிறைந்திருந்த கொன்சால்வேஸ் அடிகளார் கிறிஸ்தவ பக்திப் பாடல்கள் பலவற்றை ஆக்கியுள்ளார். பசான் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், பொதுப் பாடல்கள் என்பவற்றுக்குரிய கவிதையாக்கம், தாள அமைப்பு ஆகியவற்றை ஆக்கி கத்தோலிக்க சிங்கள இசைக்குப் புத்துயிர் ஊட்டினார். பல்வேறு சந்தரப்பங்களுக்குப் பொருந்தக் கூடியதாக ஆக்கப்பட்ட இந்தப் பாடல்கள் இன்றும் பயன்படுத்தப்படுகிறது.

- கத்தோலிக்க இலக்கியத்தின் முன்னோடியாக விளங்கிய யாக்கோமே கொன்சால்வேஸ் எழுதிய முக்கிய நூல்கள் சில பின்வருமாறு.
    - தேவ வேத புராணய
    - சுவிசேச விசர்ஜனய
    - ஞானாஞ்ஜனய
    - சுக்குர்ன தர்சனய
    - அஞ்ஞான ஓளசதய
    - வேத காவிய
    - பசான் புத்தகம்
    - மங்கள கீதம்
    - ஆனந்தக் களிப்பு
    - வியாகுலப் பிரசங்கம்

## ஒறத்தோரியன் சபை மறைத்தூதுவர்கள் ஆற்றிய பணிகள்

- 16ஆம் நூற்றாண்டில் புனித பில்னோரியாரினால் உரோமாபுரியில் ஆரம்பிக்கப்பட்ட ஒறத்தோரியன் சபையானது துறவற சபையாக அல்லாமல் மறைமாவட்ட குருக்களுக்குத் துறவியாக வாழ்வதற்கு உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும். ஒறத்தோரியன் சபையின் சுதந்திரமான உறுப்பினர்கள் இடத்துக்கிடம் மாற்றப்படுவதில்லை. சகல சபைகளும் தமக்கேயுரிய பொது யாப்பில் உட்படுகின்றன. (அப்பொதுயாப்பு விதிகளின் கீழ் உருவாக்கப்பட்ட கோவாவின் ஒறத்தோரியன் சபைக்கும் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்நாட்டு கத்தோலிக்கருக்கு குருக்களின் பணி கிடைக்காத நிலையில், ஒல்லாந்தரின் ஆட்சி முடிவடையும் வரையிலும், ஆங்கிலேயர் காலத்தின் முதல் ஐம்பது ஆண்டுகள் முடிவிலிருந்து ஆங்கிலேய மறைத்தூதுவர்கள் மீண்டும் இத்தீவுக்கு வருகை தரும் வரைக்கும் இந்நாட்டு கத்தோலிக்க மக்களுக்கு கோவாவின் ஒறத்தோரியன் சபை குருக்களே பணியாற்றினர். மடுக்கோயில், புத்தளம், கொழும்பு, கொச்சிக்கடை, கல்கமுவ, குருபாவில ஆகிய பிரதேசங்களில் ஒறத்தோரியன் சபையில் மறைப்பணி பரவியது.
- கஷ்டமான காலத்தில் இந்நாட்டின் கிறிஸ்தவ சபைக்கு யோசப்வாஸ் அடிகளும், யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளும் உள்ளடங்கிய ஒறத்தோரியன் மறைத்தூதுப்பணியாளர் ஆற்றிய முதன்மையான பணிக்கு நாம் என்றும் நன்றி கடன்பட்டிருக்கிறோம்.

## பிலிப்புஸ் பல்தேவுஸ் அடிகளார்

- ஒல்லாந்தர் காலத்தில் புரட்டஸ்தாந்து சமயப் பிரசாரத்துக்காக அரும்பாடுபட்ட இவர் 1658இல் இலங்கைக்கு இராணுவத்துக்குப் பொறுப்பாகச் செயலாற்றுவதற்காக இலங்கைக்கு வந்தார். முதலில் காலியில் ஒல்லாந்தர் படையினரின் குருப்பணிக்குப் பொறுப்பாகச் செயலாற்றியதோடு பின்னர் யாழ்ப்பாணத்தில் பணியாற்றினார். வினைத்திறனுள்ள பணியை ஆற்றுவதற்காக அவர் சமய நூல்களை உள்ளூர் மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிடுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

கெடிகிஸ்ட் என்கிற மறையாசிரியர்களுக்குப் பயிற்சிகளை அளித்தார். எல்லாக் கோவில்களுக்கு அண்மையிலும் பரிஷ் பாடசாலைகளை ஆரம்பித்து அரசாங்கத்தின் உதவியோடு அவற்றினூடாக மறைதூதுப் பணியை ஒழுங்கு செய்தார். பிற்காலத்தில் ஒல்லாந்த ஆட்சியாளருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளின் காரணமாக இந்நாட்டுப் பணியை முடித்துக் கொண்டு ஒல்லாந்துக்குச் சென்றார்.

## 8.1.4. ஆங்கிலேயர் காலம்

- கி.பி.1789இல் ஐரோப்பாவில் தோன்றிய பிரான்சியப் புரட்சியினால் டச்சுக்காரரின் நாடாகிய ஒல்லாந்து உறுதியற்ற நிலைமைக்கு உள்ளானது. ஒல்லாந்து ஆட்சித் தலைவன் நாட்டைவிட்டு வெளியேறி பிரித்தானியாவுக்குச் சென்று ஒல்லாந்தரின் கீழ் அடிமைப்பட்டிருந்த சகலவற்றையும் பிரித்தானியாவுக்கு ஒப்படைத்தான். அக்கட்டளையை ஏற்றுக்கொள்ளாமல் 1795இல் ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியானது திருகோணமலையிலுள்ள ஒல்லாந்தரின் கோட்டையைத் தாக்கி அதனைக் கைப்பற்றினர். அதன் பின் 1796இல் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழிருந்த சகல பிரதேசங்களையும் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்ததோடு ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்தது. அது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் தொடக்கமாகியது. ஆரம்பத்தில் கரையோரப்பிரதேசங்களை மட்டும் ஆட்சி செய்த ஆங்கிலேயர் 1815இல் தீவு முழுவதையும் தமது ஆட்சியதிகாரத்தின் கீழ் கொண்டுவர முடிந்தது.

### சமயச் சுதந்திரம்

- 1796இல் ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையின் சகல பிரதேசங்களையும் ஆங்கிலேயருக்கு ஒப்படைத்ததன் பின்பு இலங்கையின் முதலாவது ஆங்கிலேய தேசாதிபதியாக பிரடரிக் நோர்த் விளங்கினார். அவர் ஆங்கிலேய அரசாங்கத்தின் உத்தரவின்படி 1799 செப்டம்பர் 23ஆம் திகதி இலங்கை மக்கள் அனைவரும் தமக்கு விருப்பமான சமயத்தை அனுஷ்டிக்கின்ற சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு ஆங்கிலேயர் காலம் ஆரம்பித்ததோடு சமயச் சுதந்திரமும் உதயமானது. இருந்தபோதும் கத்தோலிக்கருக்கு எதிரான சட்டதிட்டங்கள் இன்றும் பல நூல்களில் காணப்படுகின்றன.

### கத்தோலிக்கருக்கு முழுமையான சமயச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த (Magna Carta) சட்டம்

- பிரடரிக் நோர்த்தின் பின்பு தேசாதிபதியாக தோமஸ் மெயிட்லண்ட் நியமிக்கப்பட்டார். அவர் நாட்டின் சமயங்களுக்கு மிகவும்ட நியாயமானதும், இரக்கமானதுமான நடைமுறையொன்றைப் பின்பற்றினார். இந்நாட்டு கத்தோலிக்கரின் சமயச் சுதந்திரம் தொடர்பாக எதுவித சந்தேகத்துக்கும் இடம் தராதபடி மிகவும் முக்கியமான நடைமுறையொன்றை எடுத்தார். இதனால், கத்தோலிக்கருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த சகல சட்ட ஆணைகளையும் நீக்கிவிட்டு அவர்களுக்கு முழுமையான சமய சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கின்ற ஒழுங்கு விதிகளைச் சட்டமாக்கினார். அதுவே 1806 மே 27ஆம் திகதி வெளியிட்டப்பட்ட மெக்னா கார்ட்டா சட்டமாகும்.
- இதனைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இலங்கையின் சகல பிரதேசங்களிலும் கத்தோலிக்கருக்கு எதுவித தடைகளுமின்றி தங்களது சமயததை அனுஷ்டிப்பதற்கு சுதந்திரம் உரித்தானது. சகல அரச சலுகைகளும் மற்றும் நியமனங்களும் அவர்களுக்கு உரித்தானது. கத்தோலிக்க ஆலயங்களில் நடாத்தப்படுகிற திருமணங்கள் யாவும் செல்லுபடியாகுமென ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இவ்வாறு உதயமான சமய சுதந்திரத்தின் மூலம் உச்சளவு பயனைப் பெற்றுக்கொள்வதற்காக ஒறத்தோரியன் குருமார் பின்வாங்காது செயற்பட்டனர். சபைக்குச் சொந்தமான சொத்துக்களை மீளவும் கோருதல் சபையின் செயற்பாடுகளின்

புனருத்தாபனம், சிதைவடைந்த ஆலயங்களை மீளக் கட்டிபெயழுப்புதல், கிறிஸ்தவ வழிபாடுகளை ஒழுங்கமைத்தல், மற்றும் இந்நாட்டின் கிறிஸ்தவ மக்களை ஒன்றுபடுத்துதல் போன்ற பணிகள் யாவுமே ஆங்கிலேயர் ஆட்சியின்போது இம் மறைத்தூதுவர்களால் முதலில் ஒழுங்குசெய்யப்பட்டன. அவர்களின் முயற்சியின் காரணமாக கிறிஸ்தவ சபைக்கு உறுதித் தன்மையொன்று கிடைத்தது.

## இலங்கைக்கு வெளிநாட்டு மறைத்தூதுவரின் வருகை

- இந்நாட்டு கிறிஸ்தவர்களுக்கு முழுமையான சமயச் சுதந்திரம் உரித்தானதோடு, இந்நாட்டுப் பணிக்காக மறைத்தூதுவர்கள் இங்கு வருகைதரும் சுதந்திரமும் கிடைத்தது. அதற்கேற்ப சமயப் பிரசாரங்களுக்காக அங்கிலிக்கன் மற்றும் புரட்டஸ்தாந்து மறைத்தூது அமைப்புகள் தமது கிளைகளை இந்நாட்டில் நிறுவி மறைப்பணியைத் தொடங்கினர். பெரும்பாலும் அவ்வமைப்புக்களிலிருந்த பொதுநிலையினரினாலேயே மறைத்தூதுப்பணி நிறைவேற்றப்பட்டது.
- இவ்வாறாக,
  1805 இல் இலண்டன் மறைத்தூதுக் குழுவினரும்
  1812 இல் பப்டிஸ்ட் மறைத்தூதுக் குழுவினரும்
  1814 இல் வெஸ்லியன் மறைத்தூதுக் குழுவினரும்
  1816 இல் அமெரிக்க மறைத்தூதுக் குழுவினரும்
  1818 இல் சபை மறைத்தூதுச் சங்கம் (சீ.எம்.எஸ்)
  1883 இல் இரட்சணிய சேனையின் மறைத்தூதுக் குழுவினரும்
  இந்நாட்டின் பணியில் இணைந்தனர்.
- இம்மறைத்தூதுக் குழுக்களின் உறுப்பினர்கள் தேசிய மொழிகளைத் கற்று மிகவும் அக்கறையோட மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டனர். விசேடமாக முக்கிய நகரங்களில் பாடசாலைகளை அமைத்து ஆங்கிலக் கல்விக்காக முன்னணியில் செயற்பட்டனர். அதன் வழியாக சமயப் பிரசாரமும் நிகழ்ந்தது. அதுமட்டுமல்ல, சுகாதாரப் பணி, ஏழை எளியவர்களுக்கு உதவுவதற்காக இரக்கப்பணிகளும் அவர்களால் நிறைவேற்றப்பட்டன.

## இலண்டன் மறைத்தூதுக் குழுவினர்

- இங்கிலாந்து திருச்சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி நம் நாட்டுக்கு வருகை தந்த முதலாவது மறைத்தூதுக் குழுவாகும். நம் நாட்டில் அவர்களது சபை இலங்கைத் திருச்சபை என அழைக்கப்பட்டது. ஆலயங்களையும் பாடசாலைகளையும் கட்டியெழுப்பி மறைத்தூதுப்பணியில் ஈடுபட்டதோடு 1840இல் தேசிய குருமாரைப் பயிற்றுவிப்பதற்காக நிலையங்களையும் ஆரம்பித்தனர்.

## பப்டிஸ்ட் மறைத்தூதுக் குழுவினர்

- ஜேம்ஸ் சாட்டார் என்பவரால் இலங்கையில் இச்சபையின் பணி ஆரம்பிக்கப்பட்டது. பப்டிஸ் சபையின் குருவாகிய சாள்ஸ் கார்ட்டர் சிங்கள - ஆங்கிலம், ஆங்கில - சிங்களம் அகராதிகளின் உருவாக்கத்துக்கு முன்னோடியாக இருந்தார்.

## அமெரிக்க மறைத்தூதுக் குழுவினர்

- கல்விக்கு விசேட இடமளித்த குழு இதுவாகும். வடக்கில் யாழ்ப்பாணத்தில் மறைத்தூதுப் பணித் திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. விடுதி வசதியுடன், ஆரம்ப, உயர், உயர்நிலை, கிராமிய, நடுநிலை, பகல்நேர, மகளிர் எனும் படியாகப் பல்வேறு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக சிறப்பான நன்கு திட்டமிடப்பட்ட பணிகளும் நிறைவேற்றப்பட்டன. இம் மறைத்தூதுப் பணியின் குழுவிலிருந்த மகளிர் மறைத்தூதுப் பணியினரால் இந்நாட்டின் பெண்கள் கல்வியைப் பிரபல்யமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## வெஸ்லியன் மறைத்தூதுக் குழுவினர்

- இவர்கள் விசேடமாக மேற்குக் கரையோரப் பிரதேசங்களில் பணியாற்றினர். சமயப் பிரசாரம், கல்வி, மற்றும் சுகாதாரப் பணிகளை நிறைவேற்றுவதில் விசேட கவனம் செலுத்தினர்.

## சபை மறைத்தூதுச் சங்கம்

- மறைப் பிரசாரம் மற்றும் கல்விக்காக மிகவும் கஷ்டப்பட்டு செயலாற்றினார். கொழும்பு மகளிர் கல்லூரி, கண்டி ஹில்வுட் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் சபை மறைதூதுச் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்டது.

## இரட்சணிய சேனையின் மறைத்தூதுக் குழுவினர்

- இது வேறுவிதமான மறைதூதுப் பணியானதோடு பசியைத் தீர்த்தல், சுத்தப்படுத்தல், இரட்சிப்பு எனும் தொனிப்பொருளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு ஏழை எளியவர்களுக்கு உதவும் பணிகளில் ஈடுபட்டனர்.

## ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையின் கத்தோலிக்க சபை

- 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் வருகையின் பின் கத்தோலிக்க மறை இலங்கையருக்கு அறிமுகப்படுத்தப்பட்டதோடு இந்நாட்டு சமயச் செயற்பாடுகள் தென் இந்தியாவின் கோவையில் உள்ள மறைமாவட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டது. ஆனாலும், 1834இல் XVIவது கிரகோரி பாப்புவினால் இலங்கை கோவா மறைமாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு திருத்தூதரக மறைவட்டம் (Vicariate) என உருவாக்கப்பட்டது. இதன்படி இலங்கையின் முதலாவது ஆயராக ஒறத்தோரியன் சபையின் மேதகு வின்சன் றொசாயிறோ நியமிக்கப்பட்டார். இவர் 1842இல் இறைபதம் அடைந்ததன் பின்னர் 1843இல் இந்தியாவின் மறைத்தூதுவரான அருட்தந்தை அந்தோனியோ கைதானோ அடிகளார் இப்பதவியில் அமர்த்தப்பட்டார்.
- 1833இல் போர்த்துக்கேய அரசினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி கோவாவில் ஒறத்தோரியன் சபை இரத்துச் செய்யப்பட்டது. இதனால், இந்நாட்டுப் பணிக்காக இந்திய ஒறத்தோரியன் மறைத்தூதுவர்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. எனினும், இதுவரை இந்நாட்டில் இருந்த இந்திய ஒறத்தோரியன் மறைத்தூதுவர்கள் தாம் ஆற்றிய பணியைத் தொடர்ந்தும் ஆற்றினர். ஐரோப்பிய மறைத்தூதுவர்கள் வருகை தந்த போதிலும் இவர்கள் அவர்களோடு இணைந்து பணியாற்றினர். இந்நாட்டிலேயே வாழ்க்கையையும் முடித்துக் கொண்டனர்.
- இலங்கைத் தீவின் பணிக்காக ஐரோப்பிய மறைத்தூதுவர்களை அக்காலத்தில் தேடுவது மிகக் கஷ்டமாயிருந்தது. எனினும், திருச்சபை (போபகன்தாவ) யினால் அனுப்பப்பட்ட முதலாவது ஐரோப்பிய மறைத்தூதுவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஒறத்தோரியன் சபையின் ஒராஷியோ பட்டிகினி அடிகளார் 1842இல் இலங்கைக்கு வருகை தந்தார். இவர் இலங்கையின் வட பகுதிக்குப் பொறுப்பாகப் பணியாற்றினார்.
- 1845இல் சில்வெஸ்டர் சபையின் அருட்தந்தை ஜோசப் பிராவி அடிகளாரும், சிஸ்டர்சியான் சபையிலிருந்து இருவரும் இந்நாட்டுக்கு வருகை தந்தனர். இதுவரை நாட்டுக்கு துறவற சபையைச் சேர்ந்த மறைத்தூதுவர்களே அனுப்பப்பட்ட போதிலும் 1847இல் திருச்சபையினால் மறைமாவட்டக் குருக்கள் நான்கு பேர் அனுப்பப்பட்டனர்.
- இவ்வாறாக, இலங்கையில் இந்திய மறைத்தூதுவர்களின் எண்ணிக்கை குறைந்தும், ஐரோப்பிய மறைத்தூதுவர்களின் எண்ணிக்கை கூடுதலாகவும் இருந்தது. இக்காலத்தில் திருச்சபையினால் ஐரோப்பிய மறைத்தூதுவரான இத்தாலியைச் சேர்ந்த அருட்தந்தை ஒராஷியோ பட்டிகீன் இந்நாட்டு திருத்தூதரக மறைவட்ட (Apostolic Vicariate) ஆயராக இது கி.பி.1845ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி நியமிக்கப்பட்டார். கி.பி. 1846இல் அவர் ஆயர் அபிஷேகம் பெற்றார். இலங்கை மண்ணில் முதன்முதலாக ஆயர் அபிஷேகம் பெற்றவர் இவரேயாவார். (இதற்கு முன் ஆயர் அபிஷேகம் இந்தியாவிலேயே இடம்பெற்றது.)

- இதுவரை ஒரு திருத்தூதரக மறைவட்டத் (Apostolic Vicariate) தலமாக இருந்த இலங்கைத் தீவு கி.பி.1847இல் வடக்கு, தெற்கு என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஆயர் பட்டிகீன் அவர்களிடம் வடக்குப் பிரதேசத்தின் பொறுப்பு வழங்கப்பட்டது. கயினாகோ அந்தோனியோ ஆயருக்கு தெற்குப் பிரதேசத்தின் பொறுப்பு வழங்கப்பட்டது. அத்தோடு ஜோசப் பிராவி அருட்தந்தை தெற்கு துணை ஆயராகப் பதவியேற்றார். கி.பி.1833வரை 36 வருடகாலம் இவ்வாறு இரண்டு திருத்தூதரக மறைவட்டங்களாக (Apostolic vicariate) செயற்பட்டு வந்தன.

**அமலமரி சபையின் மறைத்தூதுவர்கள் இலங்கைக்கு வருகை தரல்:**

- வடக்கின் திருத்தூதரக மறைவட்டச் (Vicariate) செயற்பாடுகளைப் பொறுப்பேற்ற ஆயர் பட்டகீனி முகங்கொடுத்த முக்கிய பிரச்சினை மறைத்தூதுவர்களின் குறைவாகும். அதனால், மறைத்தூதுவர்களைத் தேடி ஐரோப்பாவுக்குச் சென்ற அவர் பிரான்சிலுள்ள அமலமரி சபையின் ஸ்தாபகர் இயூஜின் த மெசனட் ஆயரைச் சந்தித்து, இலங்கைத் தீவுக்கு அச்சபையின் அருட்தந்தையரை அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். அதற்கமைய ஸ்டீவன் செமேரியா அருட்தந்தையின் தலைமையின் கீழ் நான்கு பேரைக் கொண்ட மறைத்தூதுக் குழுவொன்று கி.பி.1847இல் இலங்கைக்கு வந்தது. இந்த அருட்தந்தையர்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மறைத்தூதுச் செயற்பாடுகளை மிக வேகமாகப் பரப்பினர். காலத்துக்குக் காலம் அமலமரி சபையின் அருட்தந்தையர்கள் இங்கு அனுப்பப்பட்டனர். கி.பி.1850வரையான போது மறைத்தூதுவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்தது. கி.பி.1856இல் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அங்கு அமலமரி சபையோடு இணைந்த கிறிஸ்டோபர் பொன்ஜின் அடிகளார் சிறந்த மறைத்தூதுவராகத் திகழ்ந்தார். பிற்காலத்தில் அவர் யாழ்ப்பாணத்தின் ஆயராகவும் கி.பி.1887இல் கொழும்பு மறைமாவட்டத்தின் முதலாவது பேராயராகவும் பதவியேற்றார்.
- இவ்வாறாக, அமலமரி சபையின் அருட்தந்தையர்கள் இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கு மிகவும் முக்கிய பணியினை ஆற்றினர். விசேடமாக கொழும்பு, யாழ்ப்பாண மறைமாவட்டங்களில் ஆங்கில பாடசாலைகள் சில உருவாகின. கி.பி.1900இன் பின்னர் கொழும்பு, யாழ்ப்பாண மறைமாவட்டங்களில் பணிக்காக பல்வேறு துறவற சபைகள் இந்நாட்டுக்கு அழைக்கப்படுவதற்காக அமலமரி சபை அருட்தந்தையர்கள் செயலாற்றினர். இவ்வாறாக, வருகைதந்த சில சபைகள் பின்வருவனவாகும். மரியாவின் பிரான்சிஸ்கன் சபை அருட்சகோதரிகள், திருக்குடும்ப அருட்சகோதரிகள், அப்போஸ்தலிக்க கார்மேல் அருட்சகோதரிகள், இறைபராமரிப்பு அருட்சகோதரிகள், சதாசகாய அருட்சகோதரிகள், டொமினிக்கன் அருட்சகோதரிகள் எனப்படுவன.

**சில்வெஸ்டர் பெனடிக்ற் சபையின் மறைத்தூதுவர்கள்**

- இச்சபையின் பணி இலங்கையில் கி.பி.1845இல் ஜோசப் பிராவி அருட்தந்தையவர்களின் இந்நாட்டு வருகையோடு ஆரம்பிக்கப்பட்டது. கி.பி.1857இல் அவர் தென் திருத்தூதரக மறைவட்டப் (கொழும்பு) பிரதேசத்திற்குப் பொறுப்பானவராக நியமிக்கப்பட்டதோடு அப்பிரதேசத்தின் பணிக்காக மேலும் பெனடிக்ற் துறவற சபை அருட்தந்தையர்கள் இங்கு வருகை தந்தனர். கி.பி.1863 - 1878 ஆகிய காலங்களுக்கிடையில் திருத்தூதரக மறைவட்டத்தைப் பொறுப்பேற்றவர் செய்தவர் ஹிலேரியன் சில்லானி எனும் பெனடிக்ற் துறவற சபை ஆயராவார். அவரது காலத்தில் தெற்கு திருத்தூதரக மறைவட்டத்தின் முன்னேற்றத்துக்காக அவர் பாரிய பணியாற்றிய காலமாகக் குறிப்பிடப்படுகிறது.
    - புனித லூசியா பேராலயம் கட்டத் தொடங்கியமை
    - புனித பெனடிக்ற் கல்லூரி உட்பட பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை
    - நல்லாயன் கன்னியர் சகோதரிகளை இந்நாட்டுப் பணிக்காக அழைத்தல்
    - கொழும்பை அண்டிய பங்குகளான முகத்துவாரம், கிரான்பாஸ் ஆகிய பிரதேசங்களில் பெரிய ஆலயங்கள் கட்டப்படல்

- கத்தோலிக்க பத்திரிகைகள் Ceylon Catholic Messenger (கி.பி. 1869இல்) உம் ஞானார்த்த பிரதீப்பய (கி.பி. 1873இல்) ஆரம்பிக்கப்பட்டமை
- கண்டிப் பிரதேசத்தில் சில இடங்களுக்கு பெனடிக்ற் துறவறக் குருமார் அனுப்பப்படல்

ஆகிய பணிகள் இதற்குரிய உதாரணங்களாகத் தரக்கூடியனவாயுள்ளன.

- கி.பி.1878இல் ஹிலேரியன் சில்லானி ஆயரின் மரணத்துக்குப் பின்னர் கிளமென்ட் பதேதோனி எனும் ஆயர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். இவர் 4 வருடங்கள் கொழும்புப் பிரதேசத்தில் சமய நிர்வாகச் செயற்பாடுகளைச் செய்தார். இக்காலத்தில் பெனடிக்ற் குருமாரின் வருகை குறைவடைந்ததால் கொழும்பு பிரதேசத்தின் பணியை முடித்துக் கொண்டதோடு அப்பணியை அமலமரி சபை குருமாரிடம் ஒப்படைக்க நேர்ந்ததோடு, பெனடிக்ற் துறவர குருமார் இலங்கையின் மத்திய பகுதியிலும் ஊவா மாகாணத்திலும் பணியில் ஈடுபட்டனர்.
- கி.பி.1887 ஆகும் போது இலங்கை கத்தோலிக்க சபை மூன்று மறைமாவட்டங்களாக ஒழுங்கமைக்கப்பட்டது. அவை, யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு என்பனவாகும். யாழ்ப்பாணம், கொழும்பு அமலமரி சபை குருமாரின் கீழும், கண்டி பெனடிக்ற் குருமாரின் கீழும் நிர்வகிக்கப்பட்டன.
- இவ்வாறாக, பிரான்சில் அமலமரி சபை குருமாரும் இத்தாலியில் பெனடிக்ற் சபை குருமாரும் அவ்வாறே பெல்ஜியத்தில் இயேசு சபை குருமாரும் மாரிஸ்ட் சகோதரரும், டி லாசால் சகோதரரும் துறவற சகோதரிகளும் இந்நாட்டுப் பணியில் இணைந்து இலங்கையில் சமய, கல்வி, சமூக, சுகாதாரம் போன்ற எல்லாப் பிரிவுகளிலும் பணியில் ஈடுபட்டு மிகவும் பாராட்டத்தக்க பங்களிப்பினை அளித்தனர்.

**துறவறத்தாரின் பணிகள்**

- சமயச் சுதந்திரத்தோடு இந்நாட்டிற்கு வருகை தந்த துறவிகளின் பணியானது இந்நாட்டு கத்தோலிக்க சமயத்தின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தது. போர்த்துக்கேயரின் காலத்தின் ஆரம்பத்திலிருந்து 19ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை அதாவது, 350 வருட காலங்களில் இந்நாட்டு கத்தோலிக்கருக்கு மறைத்தூதுவர்களின் பணியினைப் பெறக் கூடியதாக இருந்தது. எனினும், இக்காலம் முழுவதும் இந்நாட்டு மக்களுக்கு பெண் துறவிகளை அறிந்து கொள்வதற்குக்கூட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கி.பி.1862இல் முதன்முதலில் பெண் துறவிகள் இந்நாட்டுக்கு வருகை தந்தனர். இங்கு யாழ்ப்பாணத்தில் (Vicariate) ஸ்டீவன் செமாறியா ஆயர் அவர்களால் பிரான்சிலிருந்து திருக்குடும்ப கன்னியர் சபையின் துறவிகள் அழைக்கப்பட்டனர். இவர்கள் வடக்கில் (Vicariate) தமது பணியை ஆரம்பித்தனர்.
- கி.பி. 1869இல் தென் திருத்தூதரக மறைமாவட்டத்திற்கு முதல்முறையாக பெண் துறவிகள் வருகை தந்தனர். கொழும்பில் திருத்தூதரக மறைவட்ட ஆயரான மேதகு சில்லானி ஆயர் ஆண்டகையின் அழைப்பின் பேரில் நல்லாயன் சபையின் பெண் துறவிகள் பிரான்சிலிருந்து வருகை தந்தனர். அவர்கள் கொட்டாஞ்சேனையில் மகளிருக்கான கல்விப் பணியில் ஈடுபட்டனர்.
- பொன்ஜின் ஆயர் அவர்கள் கொழும்பு திருத்தூதரக மறைவட்டத்தை நிர்வாகம் செய்தபோது கி.பி.1886இல் மரியாவின் பிரான்சிஸ்கன் மறைத்தூதுவர்கள் மொறட்டுவப் பிரதேசத்தில் மகளிர் வித்தியாலயத்தையும் அனாதை இல்லத்தையும் ஆரம்பித்தனர்.
- கி.பி.1888இல் ஏழைகளின் சிறிய சகோதரிகள் எனும் சபை பிரான்சிலிருந்து வருகைதந்து முதியோருக்கான பணியினை ஆரம்பித்தனர். முதியோருக்கான இல்லமொன்றையும் மருதானையில் ஆரம்பித்தனர்.
- கி.பி.1896இல் சகோதரிகளின் சபை வருகை தந்ததோடு இவர்கள் காலியில் திரு இருதய மகளிர் வித்தியாலயத்தில் பணியை ஆரம்பித்தனர்.
- கி.பி.1922இல் அப்போஸ்தலிக்க சபையின் பெண் துறவிகள் இந்நாட்டுக்கு வருகை தந்து அவர்களின் முதலாவது பணியை திருகோணமலையில் ஆரம்பித்தனர்.

- கி.பி.1903இல் காலியில் ஆயராக இருந்த ஜோசப் வான்ரீன் அவர்களால் தேசிய துறவற சபை ஆரம்பிக்கப்பட்டது. அது விண்ணகத் தூதர்களின் சகோதரிகளின் சபையாகும்.

## ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையின் கல்வி

- ஆங்கிலேய அரசு ஆரம்பத்தில் நாட்டின் கல்வியை அங்கிலிக்கன் குருமாரிடம் ஒப்படைத்து அவர்களுக்கு உதவியாக பணத்தையும் பெற்றுக் கொடுத்தனர். அடிக்கடி இந்நாட்டுக்கு வருகை தந்த சீர்திருத்த மறைத்தூதுச் சங்கங்களும் அரசிடமிருந்து பண உதவியையும் பெற்று கல்விப் பணியில் ஈடுபட்டனர். இவர்களின் கீழ் ஆங்கிலக் கல்வி முன்னேற்றமடைந்தது.
- அமெரிக்க மறைத்தூதுவர்கள் ஆரம்பத்திலிருந்து விடுதியுடனான பாடசாலைகளை ஆரம்பித்தனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த ஆரம்பப் பாடசாலையின் திறமையான பிள்ளைகளுக்காக ''மத்திய" (Central) பாடசாலையையும் உருவாக்கினர். உயர்தர பாடசாலைகளை ஆரம்பித்து அப்பாடசாலைகளில் ஆங்கிலம், புவியியல், இலக்கியம், தர்க்க சாஸ்திரம், ஐரோப்பிய இலக்கியம், இயந்திரவியல் ஆகிய விடயங்களைக் கற்பித்தனர். இதற்கு மேலதிகமாக மகளிர் வித்தியாலயங்களை ஆரம்பிப்பது நடைபெற்றது. இவ்வாறு வடபகுதியின் கல்வியை முன்னேற்றுவதற்கான வழியை வகுத்தனர்.
- ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் ஆரம்ப காலத்தில் பாடசாலைகள் தொடர்பாக கத்தோலிக்க சமயம் மிகவும் நலிவடைந்த நிலையிலிருந்தது. துன்புறுத்தல் கால முடிவோடு கத்தோலிக்கரின் கல்வி தேவாலயங்களைக் கட்டுவதில் ஈடுபட்டமையாலோ, பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்தமையாலோ, அக்காலத்தில் இருந்த இந்திய மறைத்தூதுவர்களுக்கு ஆங்கில மொழி ஒரு பிரச்சினையாயிருந்ததாலோ ஆங்கிலப் பாடசாலைகளை ஆரம்பிப்பது இலகுவாக இருக்கவில்லை. பிற்காலத்தில் வருகைதந்த துறவற சபைகளினால் கல்வியில் மிகப்பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.
- கி.பி.1832இல் கோல்புறூக் கமிஷனின் ஆலோசனைக்கு ஏற்ப, ஆங்கில மொழியை அரசின் சகல நிர்வாகப் பிரிவுகளிலும் உபயோகப்படுத்த வேண்டுமென்பதால் பாடசாலைகளில் கற்பிக்கவும், கத்தோலிக்கருக்கும் ஆங்கிலப் பாடசாலைகள் தேவைப்பட்டன.
- ஆங்கிலம் தெரிந்திருத்தல் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் வழி சமைத்தது. கோல்புறூக் கமிஷனின் மறுசீரமைப்பினால் நகரங்களில் கல்வி முன்னேற்றமடைந்தது. இலங்கையின் கல்வி ஒழுங்கமைப்பு கி.பி.1841இல் மத்திய பாடசாலை கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கமிஷன் மிஷனரி, துறவற சபைகளின் வழியாக உருவாக்கப்பட்ட பாடசாலைகளுக்குப் பண உதவியும் வழங்கப்பட்டது. இவ்வாறாக, மிஷனரி கல்வி முன்னேற்றமடைந்ததோடு அரசின் கீழ் இருந்த கல்வி உயிரற்ற நிலையில் இருந்தது. இந்நிலைமையிலே மிஷனரி கல்வியில் மக்களின் விருப்பு மேலோங்கியது.
- கி.பி.1841இல் உருவாக்கப்பட்ட மத்திய பாடசாலைகள் கமிஷனினால் கீழ்க்காணும் வகையில் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது.
    - பணியில் ஈடுபட்டுள்ள பயன்களினால் ''கொழும்பு அக்கடமி" செல்வாக்காயிருந்தது.
    - ஆசிரியர் பயிற்சிக்காக ''சாதாரண பாடசாலை" (Normal School) ஆரம்பிக்கப் பட்டது.
    - கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்காக காலி, கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் மத்திய பாடசாலைகள் மூன்று மத்திய கமிஷன் வழியாக ஆரம்பிக்கப்பட்டது.
    - கொழும்பிலும் கண்டியிலும் மகளிர் உயர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

## உதவி பெறும் பாடசாலைகள் (சுவீகரிக்கப்பட்ட பாடசாலை)

- கி.பி.1869 - 1896 வரை நிலவிய கல்வி முறையில் இலங்கைப் பிள்ளைகளுக்கு வெற்றிகரமான கல்வியை ஆங்கில மொழி மூலம் மட்டுமே பெறக் கூடியதாயிருந்தது. ஆங்கில பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு தமது தாய்மொழியையோ நாட்டின் வரலாற்றையும், சூழலையும் பற்றிய அறிவு இருக்கவில்லை. சுயமொழிக் கல்வி பயனற்ற ஒன்றாகக் கருதப்பட்டது. சகல பாடசாலை நூல்களும் ஆங்கில மொழியிலாலானதோடு கற்பிக்கும் முறைகள், பரீட்சைகளை நடாத்துதல் என்பன ஆங்கிலேய முறையில் இடம்பெற்றன. இவ்வாறான, நிலைமைகளினால் சுயமொழிக் கல்வி பற்றி அரசுக்கு ஆலோசனைகளை அருட்தந்தை கிறிஸ்டோபர் பொன்ஜின் முன்வைத்தார்.
- ஆங்கில மொழியைப் போன்றே தேசிய மொழிகளும் பாடசாலைக் கல்வியில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென அவர் அரசுக்கு வலியுறுத்திக் கூறினார். கல்வியில் தாய்மொழியை ஈடுபடுத்தும் தேவையை எடுத்துக் காட்டினார். அரசின் நியாயமற்ற கல்வி முறையையும் சகல கிறிஸ்தவ சபைகளுக்கும் பொதுவான கிறிஸ்தவ சமயத்தைக் கற்பிக்கும் பாடசாலை முறையையும் பற்றிக் கடுமையாக விமர்சித்தார். வீட்டைப் போன்று பாடசாலையிலும் பிள்ளையின் கல்வி சமயத்தோடு தொடர்புடையதாயிருப்பதோடு, அவ்வாறான கல்வியை அளிப்பது அவ்வவ் சமய நிறுவனங்களினால் மேற்கொள்ள வேண்டியதோடு, இதனால் எந்தச் சமயத்துக்கும் பாடசாலைகளை நடாத்துவதற்கு இடமளிப்பதோடு, அரசு இவ்வாறான பாடசாலைகளுக்கு பண உதவி அளிக்க வேண்டுமெனவும் அவர் கூறினார். அருட்தந்தை பொன்ஜின் அவர்களின் ஆலோசனைகள் அரசின் கல்வி கமிஷன் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு உதவி பெறும் பாடசாலை அல்லது சுவீகரிக்கப்பட்ட பாடசாலை முறை ஆரம்பிக்கப்பட்டது. இதனால், கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு மட்டுமல்லாமல் அரசின் கவனிப்பற்ற பௌத்த, இந்து, இஸ்லாம் சமயங்களுக்கும் இந்தக் கல்வி முறை பெருந்துணையாய் அமைந்தது.

## அருட்தந்தை கிறிஸ்டோபர் பொன்ஜீன் அவர்கள்

- கி.பி.1823ஆம் ஆண்டு செப்டம்பர் 23ஆம் திகதி பிறந்த இவர் கி.பி.1847இல் பரீஸ் மறைத்தூதுச் சபையின் அங்கத்தவராக இந்தியாவுக்குச் சென்று அங்கு ஒன்பது வருடங்கள் பணியாற்றினார். கி.பி.1856இல் இலங்கைக்கு வருகைதந்து யாழ்ப்பாணத்தில் அமல மரி தியாகிகள் சபையில் சேர்ந்து வடக்கில் பணியாற்றினார். இலங்கைத் தீவுக்கு வருகைதந்த காலம் முதல் அவர் இலங்கைக் கத்தோலிக்க சமயத்தின் குரலொலியானார். அவர் முக்கியமாக கல்வித்துறைக்காகப் போராடினார். அவரது முயற்சியின் பெறுபேறாக இந்நாட்டில் உதவி பெறும் பாடசாலை முறை உருவாகியது. எனவே, உதவி பெறும் பாடசாலையின் தந்தையென அவர் அழைக்கப்பட்டார். யாழ்ப்பாண ஆயராக நியமிக்கப்பட்ட அவர் பின்னர் இந்நாட்டின் முதலாவது பேராயராக நியமனம் பெற்றார். தேசிய குருமாரைப் பயிற்றுவிப்பதற்காக இலங்கையின் முதலாவது பாடசாலையான புனித மார்டீன் குருத்துவக் கல்லூரி கி.பி.1869இல் பொன்ஜின் ஆயர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்புக்கு வருகைதந்த பின்னர் கி.பி.1883 இல் புனித பெர்னாட் குருத்துவக் கல்லூரியையும் திறந்து வைத்தார். கொழும்பு புனித ஜோசப் கல்லூரியையும் வேறு கல்லூரிகளையும் திறந்து வைப்பதற்கு அவர் பங்களிப்புச் செய்தார். கொழும்பு பெரிய வைத்தியசாலையில் பணிபுரிவதற்காக கத்தோலிக்க பெண் துறவிகளை ஈடுபடச் செய்தமையும் ஆயர் பொன்ஜீன் அவர்களின் காலத்திலாகும். அது மட்டுமல்ல, பல்வேறு இடங்களிலிருந்து யாத்திரிகர்களை வரவழைத்து கி.பி.1870 யூலை மாதத்தில் மடுத் திருத்தலத்தில் விழாவினை ஆரம்பித்ததும் ஆயர் பொன்ஜின் அடிகளாரேயாவார்.

- 69 வருட தனது வாழ்க்கையில் 36 வருடங்கள் இலங்கையில் பணியாற்றிய பொன்ஜின் அடிகளார் இந்நாட்டில் கத்தோலிக்கருக்கு மட்டுமல்ல பிற மறையினரது உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவும் அவர் போராடினார்.

**இலங்கையில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கப் பங்களிப்புச் செய்த கிறிஸ்தவர்கள்**

- ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலக் கல்வியினால் சில குழுவினர் வெளிநாட்டு சிந்தனைகள், கலாசாரம் மேல்நாட்டு நடத்தைகளுக்கேற்ப பழகிக் கொண்டதோடு வேறு சில குழுவினர் நாட்டின் சுதந்திரத்துக்காக உழைத்தனர். கிறிஸ்தவ பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியினைப் பெற்ற F.R. சேனநாயக்க, E.W. பெரேரா, வைத்தியலிங்கம், இராமநாதன், D.S. சேனநாயக்க ஆகியோர் இனம், மதம், சாதி பேதமின்றி முன்னணி வகித்தனர்.
- இவ்வாறு கிறிஸ்தவ விசுவாசிகளும் தேசியப் பற்றோடு தமது வாழ்க்கையில் தோல்விகளோடு சுதந்திரப் போராட்டத்துக்குப் பங்களிப்புச் செய்ததாக வரலாற்றின் வழியாக வெளியிடப்படுகிறது. அதற்கு உதாரணம் E.W. பெரேரா அவர்களாவார். கி.பி.1915இல் இந்நாட்டில் ஏற்பட்ட பௌத்த, முஸ்லீம் கலவரத்தின்போது அக்காலத்தில் இந்நாட்டிலிருந்த ஆங்கில தேசாதிபதி இந்நாட்டு பௌத்த குருமாருக்கு எதிராக எடுத்த தீர்ப்பை உடனடியாக செல்லுபடியற்றதாக்குவதற்கு கிறிஸ்தவராகிய E.W. பெரேரா முன்வந்தார். அதற்குத் தேவையான ஆணைப் பத்திரத்தை இரகசியமாகப் பெற்று தனது காலணியினுள் வைத்துக் கொண்டு அவர் பிரித்தானியாவுக்குச் சென்றார்.
- ஸ்ரீமத் ஜேம்ஸ் பீரிஸ், அல்பேட் A. விக்கிரமசிங்க, J.A.L. குறே, ஸ்டான்லி சொய்சா ஆகிய கிறிஸ்தவ பிரபுக்கள் சுதந்திரத்திற்காக பங்களிப்புச் செய்தவர்களாவார்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு :**

- இலங்கையில் கிறிஸ்தவ சபையின் ஆரம்பம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- இந்நாட்டுக்கு வருகைதந்த பிறநாட்டு மறைத்தூதுவர்கள், அவர்கள் ஆற்றிய பணிகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பல்வேறு துன்புறுத்தல்களின் மத்தியில் இலங்கை திருச்சபை வளர்ச்சியடைந்த முறை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ஜோசப்வாஸ் அடிகளார், யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் ஆகியோர் திருச்சபைக்கு ஆற்றிய பணிகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கிறிஸ்தவ மறைத்தூதுவர்கள் இலங்கையின் சமய, ஆன்மீக, சமூகப் பிரிவுகளுக்கு வழங்கிய பங்களிப்பினைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**


- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அமதி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2002.
- எஸ். ஏ. ஐ. மத்தியு, கர்ம யோகி பவுல், கோல்டன் அச்சகம், கல்முனை, 2008.
- The Most Rev. Dr. Oswald Gomis, Some Christian Contributions in Sri Lanka, Colombo - 8, 2009
- G. Pilendran, A Brief History of the Cotholic Church in Sri Lanka, Bishop's House, Jaffna, 2007.

**தேர்ச்சி 8.0** : இலங்கைத் திருச்சபையின் வரலாற்றைக் கற்பதோடு இலங்கைக் கிறிஸ்தவ திருச்சபையை இனங்கண்டு சாட்சியம் பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : சுதந்திர இலங்கையில் திருச்சபை தொடர்பான விடயங்களை அறிந்து அதற்கேற்ப செயற்படுவர்.

**பாடவேளைகள்** : 30

**கற்றல் பேறுகள்:**

- சுதந்திர இலங்கையில் அரசியல் மற்றும் சமூகப் பின்னணியில் கிறிஸ்தவ சபை முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட பிரச்சினைகளையும் அதற்கான காரணங்களையும் ஆராய்ந்து விளங்கிக் கொள்வர்.
- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் கண்ணோட்டமும் படிப்பினைகளும் இலங்கைத் திருச்சபைக்கு ஏற்படுத்திய தாக்கங்களைப் பற்றிக் கற்றுப் புதிய உதயத்துக்காகச் செயற்படுவர்.
- இன்றைய இலங்கைத் திருச்சபையின் தூதுப் பணியையும் திருச்சபை முகங்கொடுக்கும் சவால்களையும் ஆராய்ந்து கிறிஸ்தவ அடையாளத்துக்குச் சான்று பகர்வர்.
- இலங்கைச் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் திருச்சபை வழங்கிய பங்களிப்பைக் கற்று கிறிஸ்தவர்களாக இன்றைய சமூக அபிவிருத்திக்கான தமது பங்களிப்பை வழங்குவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**8.2.1. சுதந்திரத்தின் பின் திருச்சபை எதிர்கொண்ட பிரச்சினைகள்**

- இலங்கை பிரித்தானிய பேரரசின் கீழ் ஆங்கில ஆட்சிக்குட்பட்டு, பின்னர் கி.பி. 1948 பெப்ரவரி 04ஆம் திகதி அரசியல் சுதந்திரம் அடைந்தது. அக்காலத்தில் நாட்டில் நிலவிய அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதாரப் பின்னணியில் மனுவுருவான கிறிஸ்துவின் மீட்பின் நற்செய்தியை இந்நாட்டில் பரவச் செய்து தூதுப் பணியில் ஈடுபடும்போது திருச்சபை முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் பலவாகும். அவற்றில் முக்கிய சில பிரச்சினைகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

**8.2.1.1. கல்வி மற்றும் பாடசாலைகளை அரசு சுவீகரித்தல்**

- கி.பி. 1960இல் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஆட்சிக்கு வந்த அரசினால் உதவி பெறுகின்ற சமய பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டதும் அதன் விளைவுகளும் இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் திருச்சபை எதிர்கொண்ட பிரச்சினைகளில் முக்கிய இடத்தை வகிக்கிறது.
- அன்று அத்தீர்மானத்தை அரசு எடுப்பதற்கான காரணம் எதுவாக இருப்பினும், அன்று முதல் அரை நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் இந்நாட்டு கல்வியின் முன்னேற்றம் மற்றும் ஒழுக்கம் பற்றிப் பேசுகின்ற நடுநிலை விமர்சகர்கள் அத்தீர்மானத்தினால் ஏற்பட்ட விளைவுகள் முழு நாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்திய விதத்தை அடிக்கடி வெளிப்படுத்தியதை அறிகின்றோம்.
- கி.பி. 1886இல் கொழும்பின் பேராயராக நியமிக்கப்பட்ட மேதகு கிறிஸ்தோபர் பொன்ஜின் ஆண்டகை இந்நாட்டு கத்தோலிக்க கல்வி மற்றும் பாடசாலை முறைகளின் முன்னேற்றம் கருதி அருட்தந்தையாக இருந்த காலத்திலிருந்தே அர்ப்பணத்தோடு அதற்கான அத்திவாரத்தை அமைப்பதில் முக்கியமானவராயிருந்தார். உதவி பெறும் பாடசாலை முறைமைக்குச் சமனான, ஆங்கில மொழியைப் போன்றே தேசிய மொழியும் கல்வியில் இணைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியவர் இவராவார்.

- இவர் ஒழுங்கு செய்த உதவி பெறும் பாடசாலைத் திட்டமானது கி.பி. 1867இல் அரசின் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு சமய உதவி பெறும் பாடசாலை முறை எனும் பெயர் வழக்கத்திற்கு வந்தது.
- இம்முறையின் கீழ் எல்லாப் பிரஜைகளும் தத்தமது சமயத்தை வழிபடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியதோடு, தமது பிள்ளைகளின் கல்விக்காக தாம் விரும்பிய பாடசாலையைத் தேர்ந்தெடுப்பதற்கு பெற்றோருக்குள்ள உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. கல்வி தொடர்பாக எவ்வித பேதமுமின்றி உதவி செய்தல் அரசின் கடமையெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இவ்வாறாக இந்த முறையின் கீழ் எல்லாச் சமயத்துக்கும் தமது பாடசாலைகளை அமைப்பதற்கும் பாடசாலை நிர்வாகம், முகாமைத்துவத்துக்கான முழுமையான சுதந்திரம் கொடுக்கப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையின் வழியாக நிர்வகிக்கப்பட்ட பாடசாலைகளில் நிலவிய ஒழுக்கம், ஒழுங்குமுறை மற்றும் கல்வியின் நுட்ப முறையினால் இப்பாடசாலைகள் பிறமறையினரின் மத்தியிலும் பிரபல்யமாயின.
- பிற மறையினரும் தமது பிள்ளைகளை கத்தோலிக்கப் பாடசாலைகளில் அனுமதிப்பதற்கு முயன்றனரெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கத்தோலிக்கரல்லாத மாணவர்களும் இப்பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவதற்கான காரணம் என்னவெனில் இக்கத்தோலிக்கப் பாடசாலைகள் கத்தோலிக்க பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் நடத்தை உருவாக்குதலை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தமையேயாகும்.
- இவ்வாறான சமூகப் பின்னணி உருவாகியிருக்கும்போது கி.பி. 1956இல் பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கையில் உதவி பெறும் சமய பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்படுதல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பரிந்துரையின்படி கி.பி. 1960இல் கத்தோலிக்க சபையின் தலைவர்களதும் மக்களதும் கடும் எதிர்ப்பின் மத்தியில் சமய பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டன.
- இத்தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டதால் படசாலைகளின் கல்வி அணுகுமுறை, ஒழுக்கம் மற்றும் ஒழுக்க நெறிகள், நடத்தை உருவாக்கத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றி பின்னர் இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள் என்பவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது விளங்கிக் கொள்ளலாம்.

### 8.2.1.2. கிறிஸ்தவ சமயத்தவர்கள் மீதான இரக்கமற்ற விமர்சனங்கள்

- போர்த்துக்கேயர் காலத்தில் சில போர்த்துக்கேய தளபதிகளதும் படைவீரர்களதும் கொடூர செயல்களை எடுத்துக்காட்டி அக்குற்றங்களை கத்தோலிக்கர் மீது சுமத்தி இரக்கமற்ற விதத்தில் விமர்சித்தலும், கத்தோலிக்கர் போர்த்துக்கேயரின் ஒரு மக்கள் பிரிவு என்பதால் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படுவதும் இங்கு கவனிக்கக் கூடியதாயுள்ளது. தேசிய பழக்க வழக்கங்களின் காப்பாளராக இருந்த உயர்மட்ட சமூகத்தினர் கிறிஸ்தவர்களை விமர்சித்தும் கிறிஸ்தவர்கள் வித்தியாசமான தேசிய கலாசாரத்தை மதிக்காத பழக்கவழக்கங்களை உடைய பிரிவினரெனவும் குற்றம் சாட்டினர்.
- நற்செய்தியைப் பரப்பும் தூதுப் பணியாகிய கிறிஸ்தவ கடமையை ‘‘கத்தோலிக்க முற்றுகை’’ என முறையற்ற உள்ளத்தோடு பார்த்து இரக்கமற்ற விமர்சனத்துக்கு உள்ளானது.

### 8.2.1.3. இன ரீதியான மோதலும் அமைதிச் செயற்பாடும்

- கி.பி. 1970இன் முதல் அரைப்பகுதியில் இலங்கைச் சமூகத்திலே தோன்றிய சிங்கள - தமிழ் மோதல் இந்நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் நடாத்தப்பட்ட அழிவு அற்பமானதல்ல. சிலரால் இனரீதியான கலகமாகவும், பயங்கரவாதமாகவும் பொருள் கூறப்பட்ட இந்த மோதல்களையும் இம்சையான செயல்களையும் எதிர்கொண்டு கிறிஸ்தவ நற்செய்திக்கு ஏற்ப செயலாற்றுவதற்கு இந்நாட்டு கிறிஸ்தவ சபை ஆற்றிய

முயற்சியும் நிலைப்பாடும் வெளிச் சமூகத்தில் பிழையாக விளங்கிக் கொள்வதற்கான காரணமானதோடு, அவை கிறிஸ்தவ சபைக்குக் கூறப்பட்ட முறைப்பாடுகளிலிருந்து காணக் கூடியதாகவுள்ளது.

- திருவிவிலிய சிந்தனையும் கிறிஸ்தவக் கண்ணோட்டமும் இம்சையையும் போர் மோதல்களையும் இழிவானதாக எதிர்க்கின்றது. மனித மாண்பை மாசுபடுத்தும், மனித உரிமைகள் மீறப்படும் இம்சையான கொள்கைகளுக்கு வாழ்த்துக் கூறுவதற்கு கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவ சபைகளுக்கும் இயலாது.
- அவ்வாறே, இந்த கலவரங்களுக்கு அடிப்படையான சிங்கள - தமிழ் இரு இனங்களும் வடக்கையும் தெற்கையும் இணைப்பதன் வழியாக ஒரே கிறிஸ்தவ சபையின் ஒரே பிள்ளைகளாக இருப்பதும் கிறிஸ்தவர்களாக ஒரே இறைவனை வழிபடும் ஒரே பிள்ளைகளாவதும் என்ற காரணங்களினால் இனவாத கலகத்தை இம்சையிலிருந்து விலக்கி உரையாடலின் வழியாகவும் அமைதிச் செயல்களினாலும் தீர்வுகளைப் பெற்று, அரசியல் தீர்வுக்குச் செல்லுமாறு சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு அறிவிப்பதற்கும் வலியுறுத்துவதற்கும் இந்த உறுதிப்பாட்டிற்காக அச்சமின்றி முன்னிற்க வேண்டிய நிலை திருச்சபைக்கு ஏற்பட்டது.
- இவ் உறுதிப்பாட்டிற்காகவே, கிறிஸ்தவர்கள் இந்நாட்டிற்கு அன்பில்லாதவர்களாக, பயங்கரவாதத்திற்குத் துணைபோகிற பிரிவினராக ஊடகங்களில் நீதியற்ற விமர்சனங் களுக்கு உள்ளானதும் திருச்சபை எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினையாகியது.
- எனினும், ‘‘அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்....’’ எனக் கிறிஸ்து கூறியதைப் பின்பற்றும், அமைதியான அரசியல் தீர்வொன்றுக்காக முன்னின்று இம்சையையும் மோதல்களையும் ஏற்றுக்கொள்ள மறுத்து உண்மையான கிறிஸ்தவ சான்று பகர கிறிஸ்தவ சபை முன்வந்தது. உண்மையான அமைதியை உருவாக்குவதற்கு அனைவரதும் நியாயமான உரிமைகளை மதிப்பதன் வழியாக அனைவருக்கும் நீதி நிறைவேற்றப்பட வேண்டுமெனும் திருச்சபையின் போதனைக்காக முன்னிற்பதும் சமூகச் சவாலாகியது என்பது தெளிவாகும்.

### 8.2.1.4. பிரிந்து சென்ற கிறிஸ்தவ இயக்கங்கள்

- அண்மைக்கால வரலாற்றிலே கிறிஸ்தவ சபை எதிர்கொள்ள வேண்டியேற்பட்ட பாரிய பிரச்சினையானது சிலரால் அடிப்படைவாதிகள் என அழைக்கப்படும் பிரிந்து சென்ற கிறிஸ்தவ சமய இயக்கங்கள், இவற்றைப் பின்பற்றுபவர்கள், இவர்கள் பின்பற்றும் மறைப் பிரச்சார அணுகுமுறைகள் என்பனவாகும்.
- நல்லொழுக்கத்திற்கு எதிரான செயல்கள் வழியாக பிற மறையினரை தமது மறைக்கு மாற்றுவதாக முறைப்பாடு செய்வதோடு அதனைக் கட்டாய மதமாற்றம் எனவும் வரைவிலக்கணம் வழங்கப்படுகிறது.
- பாரம்பரியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கிறிஸ்தவ சபைகளுக்கும் இந்த கிறிஸ்தவ சமய இயக்கங்களுக்குமிடையிலுள்ள தெளிவான வித்தியாசத்தைத் தெரிந்தும் தெரியாமலும் இதைப் பற்றிய பிறசமயத் தலைவர்களும் அமைப்புகளும் கத்தோலிக்க சபையையும் முக்கியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரம்பரிய சபைகளையும் விமர்சனம் செய்தனர்.
- இந்த விமர்சனங்களும் அடிப்படைவாத சமய இயக்கங்களினதும் ஒழுக்கமற்றதாக அழைக்கப்படும் செயற்பாடுகள் இந்நாட்டு திருச்சபைக்கு பிரச்சினையானது.
- இதனைப் பற்றி சமூகத்தில் நிலவுகின்ற சிந்தனைகள் எந்தளவு உக்கிரமம் அடைந்துள்ளதெனப் பார்க்கையில் மதமாற்றத் தடைச்சட்டப் பிரதியொன்று 2004இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதனைப் பற்றிய பல்வேறு உரையாடல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளைக் காரணங்காட்டி இலங்கைத் திருச்சபை எதிர்பாராத விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமை பாரதூரமான பிரச்சினையாக உள்ளது.ரூ

## 8.2.2. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் தாக்கங்கள்

- இரண்டாம் வத்திக்கான் சங்கமானது திருச்சபையினுள்ளே நிகழ்ந்த மிகப்பெரிய செயற்பாடாகவும் திருச்சபையின் வரலாற்றிலே புதிய உதயத்துக்கு வழியைக் காட்டிய உன்னத நிகழ்வாகவும் விளங்குகின்றது. முதல் பெந்தகோஸ்து தினத்தன்று பேதுருவின் வழியாகப் பேசிய தூய ஆவியானவருக்குச் செவிமடுப்பதற்கு பல்வேறு இனத்தவர் வருகை தந்ததைப் போன்று, திருச்சபையின் புதுப் பிறப்பாகக் கருதக்கூடிய இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் புனித பேதுருவின் வாரிசாக நியமிக்கப்பட்டு முழு உலகினதும் மேய்ப்பரான திருத்தந்தையின் வழியாகப் பேசிய தூய ஆவியாரின் குரலுக்குச் செவிமடுப்பதற்கு பல்வேறு கண்டங்களைச் சேர்ந்த நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் வருகை தந்தனர்.
- இத்திருச்சங்கத்துக்கு முன்னும் ஆரம்பத்திலேயும் நிலவிய கடும் கொள்கைகளும் கடும் போக்குகளும் எளிமையடைந்து நெகிழ்ச்சியுடன் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுப்பதற்கும், புதிய உதயத்துக்கு அவசியமான திறந்த தன்மையுடன் பயணம் செய்வதற்கும் இச்சங்கத்தினூடாக தூய ஆவியானவரின் வழிநடத்துதலுக்கும் செயற்பாட்டிற்கும் இது மிகச் சிறந்த உதாரணமாகும்.
- பல்வேறு நாடுகளையும், கலாசாரங்களையும் ஒன்றிணைத்து கலந்துரையாடலின் மூலம் புதிய கண்ணோட்டத்தை நோக்கி திருச்சபை நடாத்திய திருச்சங்கமாக இதனை அழைக்கலாம்.
- இத்திருச்சங்கத்தின் படிப்பினைகள் அடங்கிய 16 வெளியீடுகள் வெளியிடப்பட்டன. கி.பி. 1965இலிருந்து சங்கத்தில் கலந்துரையாடப்பட்ட புதிய உதயம், கட்டுப்படும் சிந்தனை என்பவற்றின் அடிப்படையில் இலங்கையில் நிகழ்ந்த முன்னேற்றமும் எதிர்காலப் பயணமும் பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது அது கடந்து சென்ற கால எல்லையுடன் தொடர்புடைய அளவு போதாது என்பது தெரிகிறது.
- எனினும், கலந்துரையாடலில் சில படிப்பினைகளும் முற்போக்குவாத சிந்தனையும் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் பல்வேறு அங்கங்களில் ஏற்படுத்தி செய்த தாக்கங்களினால், பண்புகளால் மகிழ்ச்சியுறக் கூடியதாயுள்ளது.

### 8.2.2.1. திருவழிபாடு

- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வெளியீடுகளில் திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம் முதலாவதாகப் பிரகடனம் செய்யப்பட்டது. சங்கத்தின் படிப்பினைகள், மறுசீரமைப்பு என்பன விரைவாகவும் பெரும்பாலான தாக்கத்தையம் பொது வழிபாட்டிலேயே ஏற்படுத்தியது.
- இக்கொள்கைத் திரட்டுக்கேற்ப,
  - திருவழிபாடு இறை - மனித உறவைக் காட்டுகிறது. மக்களை இறைவன்பாலும், இறைவனை மக்கள் பாலும் கொண்டு செல்வதே திருச்சபையின் ஒரே பணியாகும். திருச்சபையிலுள்ள எல்லோரும் தாம் பெற்ற திருமுழுக்கினால் கிறிஸ்துவினுடைய குருத்துவப் பணியில் செயற்பாட்டோடு பங்காளிகலாகலாம். இறைவனை மகிமைப்படுத்துவதும் மனிதனைப் புனிதப்படுத்துவதும் திருவழிபாட்டில் நிறைவேறுகின்றது.
  - திருச்சபையின் செயல்கள் அனைத்தும் நாடி நிற்கும் ''சிகரமாக''வும் திருச்சபையின் ஆற்றல்கள் அனைத்தும் ''பெருக்கெடுக்கும் ஊற்றாகவும்'' திருவழிபாடு விளங்குகிறது (இறைபணி 10).
- எனவே, திருவழிபாட்டில் பயனுள்ள விதத்தில் பங்குகொள்வது மிக முக்கியமாகும்.
  - திருவழிபாட்டின் உத்தியோக மொழி இலத்தீன் மொழியாகும். எனினும், கலந்துரையாடலின் பின்பு சுயமொழிகளில் வழிபாடுகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டதோடு இலங்கையில் சிங்கள - தமிழ் மொழிகளில் திருவழிபாட்டுச் சடங்குகளை நடாத்திட நேர்ந்தது.

- திருவழிபாட்டு சடங்குகளுக்காக செயற்பாடுள்ள பங்களிப்பு முக்கிய இடத்தை வகித்தமையால் மக்களின் செயற்பாடுள்ள பங்களிப்பு அதிக வளர்ச்சியடைந்தது.
- திருவழிபாட்டுச் சடங்குகளில் குறிக்கப்பட்ட பணிகளுக்காக அவ்வப் பதவி களுக்குரியதான பணிகளை அர்த்தமுள்ள முறையில் நிகழ்த்திட வழி சமைக்கிறது.
- தேசிய மொழிகளில் பாடல்களை ஆக்கிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதை யடுத்து, தேசிய இசைக்கேற்ப பாரம்பரியத்துக்கேற்ப உள்நாட்டுப் பாடல்களுக்கும் ஆக்கங்களுக்கும் இடமளிக்கப்படல்.
- திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படும் திருப்பலிப் பொருட்களும் உடைகளும் உள்நாட்டுப் பழக்கங்களுக்கும் பண்புகளுக்கும் ஏற்ப ஆக்கப்பட்டன.
- ஆலயங்கள் கட்டும்போது உள்நாட்டுக் கலைக்கும், கட்டடக்கலைக்கும் ஏற்ப நிர்மாணித்தல்.
- திருமணம் மற்றும் வேறு விழாக்களின்போது உள்நாட்டு சம்பிரதாயங்களின்படி அலங்காரம், கலை அம்சங்களைச் சேர்த்துக்கொள்ளல்.
- இறைவார்த்தைக்கு முக்கிய இடம் கொடுத்தல்; மற்றும் அதற்கு உயிரூட்டமுள்ள அன்பையும் மரியாதையையும் அளித்தல்.
- உரோமன் சடங்குகளின் தனித்துவத்தைப் பாதுகாப்பதைப் போல திருவழிபாட்டு நூல்களை சுயமொழிகளில் மொழிபெயர்ப்பதற்கான அனுமதி கிடைத்தமையால் சுயமொழிகளிலான நூல்கள் வழிபாடுகளில் பயன்படுத்தப்படல்.

### 8.2.2.2. ''இறைமக்கள்'' எனும் எண்ணக்கரு

- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகையிலே கட்டாயமாகக் குறிப்பிடப்பட வேண்டிய கோட்பாட்டு விளக்கம் ''இனங்களின் ஒளி'' (லூமென் ஜென்டிசியூம்) அதாவது ''திருச்சபை'' பற்றிய மறை உண்மைகளின் கோட்பாட்டு விளக்கம் என்பது விவாதமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இக் கொள்கைத்திரட்டில் திருச்சபையைப் பற்றித் தரப்படுகின்ற மிகச் சுருக்கமானதும் பாராட்டிற்குரியதுமான வரைவிலக்கணமாவது ''திருச்சபை'', ''இறைமக்கள்'' என்பதாகும். இவ்விரு சொற்களும் திருவிவிலியத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளதால் அது விசேடமானதாகும்.
- ஆபிரகாம் எனும் விசுவாசத்தின் தந்தை வழியாக வழங்கப்பட்ட ஆசீரின்படி தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் இறைவனின் மக்களாக ஆக்கப்பட்டதன் பின்பு அந்த ஆசிர் வேறு மக்களுக்குப் பெருக்கெடுத்துச் சென்றதை திருவிவிலியத்தினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் வழியாகக் கட்டியெழுப்பப்படும் புதிய இறைமக்கள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஒற்றுமையாக செயற்படும் விதம் விளக்கப்பட்டுள்ளது.
- இந்த இறைமக்கள், சிறு பிரிவினரைப் போன்று புளிப்புமாவு போல் உலகில் செயற்படுவர். அதைப் போன்று புதிய இறைமக்களுக்கு இவ்வழைப்பின் வழியாக புனிதத்தன்மையை நோக்கிச் செல்வதற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.
- இந்தப் புனிதத்தன்மையைப் பெறுவதற்கு இறைவனோடுள்ள உறவும் ஏனைய மக்களோடுள்ள சகோதரத்தன்மையின் பிணைப்பும் காரணமாகின்றது. இறைமக்கள் எனும் எண்ணக்கருவினால் உருவாகும் ஒற்றுமையின் பிணைப்பு இதைவிட விளக்கமாயுள்ளது.
- தற்காலத் திருச்சபையின் வாழ்க்கையிலே கிறிஸ்துவுக்குச் சான்று பகரும்போது, ஒற்றுமையாகச் செயற்படுவது அல்லது ஒருமைப்பாட்டின் வழியாகத் தெளிவாகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் இந்த ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பற்றி எப்பொழுதும் பேசுவதோடு தற்கால சவால்களை வெற்றி கொள்வதும் இவ்வொருமைப்பாட்டினாலேயாகுமென்பது எமக்கு விளங்குகிறது.

- மேலும் எந்தவொரு உயர்வு - தாழ்வு பேதமும் இல்லாமல் அனைத்து இனங்களும் இறைமக்களாக இருப்பதற்கு அனைவரிடமும் உள்ள சமமான தன்மையும் சமநிலைத் தன்மையும் இலங்கையின் மக்கள் சமூகத்தில் ஆகக் குறைந்த நல்ல முன்மாதிரிகையாகும்.

### 8.2.2.3. பொதுநிலையினரின் மறைத்தூதுப்பணி

- துறவறத்தையும் குருத்துவத்தையும் பெறாத அனைவரும் பொதுநிலையினர் எனும் பாரம்பரிய வரைவிலக்கணத்திலிருந்து கடந்து சென்று திருமுழுக்கின் வழியாக இறைமக்கள் எனும் அங்கத்துவத்தைப் பெறுகின்ற பொதுநிலையினர் கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்கு எனும் முப்பணிகளில் பங்குபற்றி திருச்சபையிலும் உலகிலும் பணியாற்றுபவர்களாக பொதுநிலையினரைப் பற்றிப் பெறுமதியுள்ள வரைவிலக்கணத்தை பொதுச்சங்கம் முன்வைத்துள்ளது.
- திருமுழுக்கின் வழியாக இறைமக்களெனும் அங்கத்துவத்தைப் பெறுகின்ற பொதுநிலையினர் தமக்குப் பரம்பரையாக வருகின்ற வகையில் திருச்சபையிலும், உலகிலும் பணியில் ஈடுபடுகின்றனர்; குருத்துவ, துறவறத்தைப் போன்று உலகிலிருந்து விலகாமல், நேரடியாக உலகில் / சமூகத்தில் தமது அழைப்புக்குச் சான்று பகர்கின்றனர். பொதுநிலையினரின் மறைத்தூது அழைப்புப்பணி பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் ''பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி பற்றிய விதித்தொகுப்பில்'' தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.
- சங்கத்தின் பின்பு இலங்கைத் திருச்சபையில் பொதுநிலையினரின் பங்களிப்பும் மறைத்தூதுப் பணியும் முன்னரைவிட மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும் என்பது தெளிவாகும். திருச்சபையின் வாழ்விலும் உலகிலும் பொதுநிலையினரின் செயற்பாடு பல்வேறு பணிகளிலும் சந்தர்ப்பங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. திருச்சபையின் அங்கத்தவர்ளுக்கிடையே அதிகமானோர் பொதுநிலையினராகையால் திருச்சபையின் புதிய உதயத்துக்காக செயலாற்றுதில் பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணியின் பங்களிப்பு மிக முக்கியமாகும்.

### 8.2.2.4. கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமையும் உரையாடலும்

- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கிறிஸ்தவ சபைகளுக்கிடையே ஒன்றிப்பைக் கட்டியெழப்புதல் பற்றிய விதித்தொகுப்பை நன்றாக விளங்கிக் கொள்வதற்கு ஆரம்பத்திலிருந்தே திருச்சபை எதிர்கொண்ட சவால்கள், பேதகங்கள், இப்பேதகங்களுக்கு ஏதுவாயிருந்த விடயங்கள் என்பவற்றை விளங்கிக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.
- சபையில் பிரிவினைகள் ஏற்பட்டமைக்கு வரலாற்றிலே மனித பலவீனங்களும் தவறுகளுமே காரணமாகும். இப்பேதகங்களும் சபையின் பிரிவினைகளும் இறைவனது விருப்பத்துக்கு எதிரானவையாகும். எனவே, கடந்த காலத்தில் இடம்பெற்ற தவறுகள், பலவீனங்கள்மீது குறை கண்டுபிடிக்காது கிறிஸ்துவுக்குள் ஒரே சபையைக் கட்டியெழுப்புவதற்கு சபையின் உரையாடல் வழியாக முயற்சி செய்ததோடு அதற்காக செபித்தும் தார்மீக விடயங்களை ஆரம்பித்து உரையாடலில் ஈடுபட்டு ஒரே கிறிஸ்துவுக்கு சான்று பகர்தல் பற்றி இதன் வழியாக வழிகாட்டப்படுகிறது.
- தற்கால இலங்கையில் பல்வேறு கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கிடையேயும் உத்தியோகபூர்வமாக சபைகளுக்கிடையேயும் ஒற்றுமைக்காக அண்மைக்கால வரலாற்றிலே நடந்தேறிய முயற்சிகள் இச்சங்கம் முன்வைத்த சபைகளின் ஒன்றிப்பு பற்றிய படிப்பினைகளின் வழியாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

### 8.2.2.5. சமயங்களுக்கிடையே உரையாடல்

- இலங்கை உலகின் முக்கிய சமயங்களைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட பல்சமய நாடாகும். ஆகவே பல்வேறு சமயங்களுக்கிடையே புரிந்துணர்வு மிக முக்கியமாகும்.
- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் கிறிஸ்தவமல்லாத மறைகள் பற்றிய திருச்சபையின் உறவு தொடர்பான அறிக்கையின் அடிப்படையில் இந்நாட்டின் பல்வேறு சமயங்களுக்கிடையே உரையாடலை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிகாட்டுதலானது இலகுவான காரியமல்ல.
- திருச்சபை எந்தவொரு சமயத்தினதும் நல்ல விடயங்களைப் புறக்கணிப்பதில்லை. அவ்வவ் சமயங்களிலுள்ள விழுமியங்களை மிகவும் பாராட்டுகின்றது.
- சங்கத்துக்குப் பின்பு பல்வேறு சமயங்களுடன் உரையாடலுக்காக இடப்பட்ட அத்திவாரத்தினால் சமயங்களுக்கிடையே இருந்த இடைவெளியும் சந்தேகமும் பெரும்பாலும் நீங்கி புரிந்துணர்வுடன் செயலாற்றுவதற்கான சூழலும், உரையாடலும் எமது மக்கள் சமூகத்தில் ஏற்பட்டுள்ளது.

### 8.2.2.6. குருத்துவ, துறவற வாழ்வு

- குருத்துவ வாழ்வும், துறவற வாழ்வும் தொடர்பாக இச்சங்கத்தின் படிப்பினைகளின் வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் தேசிய பண்பாட்டுக்குப் பொருத்தமான குருத்துவ, துறவற பயிற்சியை இந்நாட்டில் ஏற்படுத்துவதற்கு குருத்துவக் கல்லூரி, துறவற மடங்கள், பயிற்சி நிலையங்களில் பல்வேறு மாற்றங்கள் கடந்த சில தசாப்தங்கள் முழுவதிலும் நிகழ்ந்நதன.
- மக்களின் பிரச்சினைகளை உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்கின்ற இலங்கைச் சமூகத்துக்கு பரம்பரையாக வருகின்ற மறைத்தூதுப் பணியில் ஈடுபடக்கூடிய குருக்களை உருவாக்குவதற்குப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 8.2.2.7. தொடர்பாடல் ஊடகம்

- தொடர்பாடல் ஊடகங்கள் பற்றி நிலவிய குறுகிய கருத்துக்கள் பொதுச்சங்கத்தில் அது தொடர்பான படிப்பினைகள் மூலம் மாற்றத்துக்குள்ளாகின.
- ஊடகங்கள் மனிதனின் நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும். மக்களை அறிவுறுத்துவதற்காக, கற்பிப்பதற்காக, சமயப் போதனைப் பணிகளுக்காக ஊடகக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட வழிகாட்டல்களினால் இலங்கை சமூகத்திலேயும் இந்நோக்கத்துக்காக ஊடகப் பாவனையில் வளர்ச்சி காணப்பட்டது.
- வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சினிமா, கணணித் தொழில் நுட்பத்தோடு இணைந்த செயற்பாடுகள் கிறிஸ்தவ மதிப்பீடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் சமூக நல்லொழுக்க வளர்ச்சிக்கு ஈடுபடுத்தப்பட வேண்டுமென சங்கப் படிப்பினைகளின் வழியாகத் தெளிவாகிறது.
- இங்கு இலங்கைச் சமூகத்தின் வளர்ச்சி போதியளவு இல்லாதபோதும் தொடர்பாடல் ஊடாகக் கருவிகளின் பாவனையின் போது கிறிஸ்தவ சபையின் முயற்சிகளைப் பாராட்ட வேண்டும்.

### 8.2.2.8. மனிதத்துவம், மனித உரிமைகள் மற்றும் கடமைகள்

- இறைவனின் உன்னத படைப்பாகிய மனிதனின் சமூக வாழ்க்கை பற்றிய விசேடமாக பண்பாடு, பொருளாதாரம், அரசியல், சமயம் ஆகிய பல்வேறு துறைகளில் மனிதனின் பங்களிப்பைப் போன்றே உலக அமைதிக்காக மனிதனுடைய கடமையும் பொறுப்பும் பற்றி இச்சங்கத்தின் முயற்சியினால் பேசப்பட்டது.
- அதைப்போன்றே மனிதனாவதற்காக உரிமையாகும் மாற்றமுடியாத அடிப்படை மனித உரிமைகள் பற்றியும் அதனைப் பாதுகாப்பதற்குள்ள பொறுப்புப் பற்றியும் கற்பிக்கின்றது.

### 8.2.3. தற்கால சமூகத்தில் இலங்கைத் திருச்சபை

- சுதந்திர இலங்கையில் கடந்த 60 வருட காலத்துக்குள் பல்வேறு மோதல்கள், சவால்கள், கஷ்டங்களைக் கடந்து கிறிஸ்தவ சபை இன்று வரை பயணித்த பாதை பற்றி வெளிப்படுத்தும்போது அது எதுவிதத்திலும் இலகுவான, மகிழ்ச்சியான வழியல்லை என்பது தெளிவாகிறது.
- பல்வேறு காலகட்டங்களில் நிலவிய அரசியல், சமூக, பொருளியல், சமய சூழ்நிலைகளில், சவால்கள், மோதல்கள், அவமானங்கள் போன்றவற்றிற்கு முகங்கொடுத்து அவற்றில் மென்மேலும் பலமடைந்து, நிலவுகின்ற சமூக யதார்த்தங்களை எதிர்கொண்டு உறுதியாக, பயமின்றி கிறிஸ்துவின் நற்செய்திக்குச் சான்று பகர்ந்து வந்த இப்பயணம் முழுக் கிறிஸ்தவ சபையினதும் பேறு என்பதைக் கவனிக்கலாம்.
- இங்கு மலைப்பொழிவில் கிறிஸ்து கூறிய ''என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே'' (மத். 5:11) எனும் வசனம் கிறிஸ்தவ சபையின் அங்கத்துவத்துக்கு மாபெரும் சக்தியும் தைரியமுமாகும்.
- தற்கால சமூகத்தில் இலங்கைத் திருச்சபையை ஆராய்ந்து பார்க்கும்போது மேற்கூறப்பட்ட தேர்ச்சியைக் கற்றறிந்தவாறு கத்தோலிக்க திருச்சபையும் ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட கிறிஸ்தவ சபைகளின் வழியாக நிகழ்த்தப்படுகிற தூதுப் பணியும் கிறிஸ்தவ சான்று பகர்வதைப் பற்றியும் கவனிப்பது மிகவும் முக்கியமாகும்.
- இச்சபைகள் உத்தியோபூர்வமாகவும், சபையின் அங்கத்துவம் தனிப்பட்ட முறையிலும் கிறிஸ்தவ அழைத்தலுக்குள் செயலாற்றுவதோடு இந்நாட்டுப் பிரஜைகளாக தமது தாய்நாட்டை நேசிப்பவர்களாக நாட்டைப் பற்றிய உணர்வோடு செயலாற்றியுள்ளனர் என்பது தெளிவாகும்.
- இந்நாட்டு கிறிஸ்தவர்கள் என்போர் வெளிநாட்டு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றும் குழுவினரல்ல. இந்நாட்டில் பிறந்து, இந்நாட்டு சமூகத்தில் வளர்ந்த, தமக்குரிய ஆற்றல்கள், திறமைகளை சமூக வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் ஈடுபடுத்தும் குழுவினராவர்.
- சுதந்திர போராட்டத்துக்காகப் பாடுபட்ட, அர்ப்பணித்த, பல்வேறு பரித்தியாகங்களை நிறைவேற்றிய முன்னோடிகள் மத்தியில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இருந்தனர் என்பது வெளிப்படையாகும்.
- இதனைப் போன்று இந்நாட்டில் ஒருமைப்பாட்டில் பன்மைத்தன்மை, அமைதிக்காகவும் கடந்த முப்பது வருட காலமாக நிலவிய மோதல்கள், போரில் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தோர் மத்தியில் கிறிஸ்தவர்களும் பெரும்பாலானோர் ஆவர்.
- இவ்வாறே, இந்நாட்டுக் கல்வி, பண்பாடு, கலை, நாடகம், எழுத்துக்கலை, கூத்துக்கலை, சமூக நலன்புரி, இரக்கப்பணிகள் ஆகிய பல்வேறு துறைகளில் பங்களிப்புச் செய்து கிறிஸ்தவ சபை நிறைவேற்றிய பணிகளும், இங்கு ஆற்றல்களினாலும் திறமைகளினாலும் நிறைந்த கிறிஸ்தவர்கள் காட்டிய பங்களிப்பும் பல்வேறு விமர்சனங்களுக்கும் மதிப்பீட்டுக்கும் உள்ளானது. இதில் சில துறைகளில் முன்னோடிகளானவர்கள் கிறிஸ்தவர்களேயென்பதை வரலாறு உறுதிப்படுத்துகிறது.
- சுதந்திரத்தின் பின் திருச்சபை எதிர்கொள்ள வேண்டியேற்பட்ட மோதல்கள், சவால்கள் எவ்வளவெனினும், எவ்வடிவத்திலெனினும் அவற்றுக்கு முகங்கொடுத்து கசப்பான வழியை மாற்றி கிறிஸ்தவ சபை இன்றும் பல்வேறு துறைகளில் தமது பங்களிப்பை நல்குகின்றது.
- தாம் பெற்றுள்ள வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும், கல்வியிலும் கிறிஸ்தவ சபையின் பங்களிப்பு மிக முக்கியமாகும். கிறிஸ்தவ பிள்ளைகளை கிறிஸ்தவ விழுமியங்களுக்குள் வளர்ப்பதற்கும் நடத்தை விருத்திக்கும் ஆளுமையைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் கிறிஸ்தவ சபையினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளையும் கல்வி நிறுவனங்களையும் பிறசமயத்தவர் அதிகமாக விரும்பினர்.

கல்வி, தொடர்பாடல், பண்பாடு, சமூக நல இரக்கப்பணிகள் ஆகிய எத்துறையாயிருப்பினும் கிறிஸ்தவ சான்றினை முன்னெடுத்து கிறிஸ்தவ விழுமியங்களின் வழியாக அவற்றை நடாத்திச்சென்று சமூகத்தில் புளிப்பு மாவைப் போன்று ஏனையோருக்கும் முன்மாதிரிகையாக இருந்து கிறிஸ்துவின் நற்செய்திக்கு சான்று பகர்வதற்கு தற்கால சமூகப் பின்னணியில் இலங்கைக் கிறிஸ்தவ சபை செயற்படுகின்றது.

- கிறிஸ்து என்பவர் எமக்குரிய ஆசியாவிலே பிறந்து, எமக்கேயுரிய ஆசிய பண்பாட்டைச் சேர்ந்த மனுவுருவான இறைமகனாவார். எனவே, அவருடைய படிப்பினைகளை வெளிப்படுத்துவதற்கு விசேடமாக திருவழிபாடு, இறை ஆராதனைச் சடங்குகளின்போது தேசியமயமாக்கலின் வழியாக மக்களின் இதயத்தைத் தொடும்படியாக கிறிஸ்தவ சபை பெருமுயற்சியெடுப்பதைக் காணலாம்.
- கடந்த காலத்தைப் போலல்லாது, இன்று இந்நாட்டின் கிறிஸ்தவ சபையின் தலைவர்கள், துறவிகள் பொதுநிலைத்தலைவர்கள், தலைவிகளில் பெரும்பாலானோர் சுதேசிகளாவர். எனவே, பிறநாட்டு மிஷனரிமார் இந்நாட்டு திருச்சபையை நடாத்திய காலத்தைவிட இந்நாட்டுப் பண்பாட்டு விழுமியங்கள், இந்நாட்டு பழக்க வழக்கங்கள், நடத்தை இதயத்துடிப்புக்குள் தேசிய தனித்துவத்தினால் நிறைந்த கிறிஸ்தவ சபையைக் கட்டியெழுப்புவதற்கு உள்ள வசதிகள் முன்னரைவிட அதிகமாக உள்ளதென்பது தெளிவாகும்.
- இப்படியான தேசிய தனித்துவத்தைக் கட்டியெழுப்புவது நீண்டகால பணியாவது மட்டுமல்ல, ஒரு சவாலுமாகுமென்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.
- தற்கால கிறிஸ்தவ சபை எதிர்கொள்ள வேண்டியுள்ள சவால்கள் பலவாகும். பணியாற்றும்போதும் முகங்கொடுக்கும் எதிர்ப்புகள், தவறாக விளங்கிக்கொள்ளல், நிந்தனைகள், தீவிரவாதிகளின் தாக்குதல்கள் என்பவற்றை எதிர்கொண்டு இந்நாட்டுச் சமூகத்தில் உண்மையான கிறிஸ்தவ பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு கிறிஸ்தவ பிரஜைகளாக, நாட்டுக்காகத் தமது கடமைகளை நிறைவேற்ற கிறிஸ்தவ சபை ஒருபோதும் பின்னிற்க முடியாது.
- இதனைப் போன்றே இந்நாட்டில் நிலவுகின்ற பௌத்த, இந்து, இஸ்லாம் ஆகிய சமயங்களின் தலைவர்கள், அங்கத்தவர்களுடன் புரிந்துணர்வோடு செயற்படுவதோடு, கிறிஸ்தவர்கள் அவரவர்களுக்கிடையே அன்னியொன்னிய அன்போடு செயற்பட்டு கிறிஸ்துவின் நற்செய்திக்கு சான்று பகர்தல் தற்கால இலங்கைக் கிறிஸ்தவ சபையின் பண்பாகும்.
- ஒரு திருச்சபையாக ஒரே கிறிஸ்துவுக்குள் சான்று பகர்வதற்கு இதன் வழியாக இலங்கை சமூகத்துக்கு கிறிஸ்து உயிருள்ள அடையாளமாவதற்கு இந்நாட்டு கிறிஸ்தவ சபைக்கு, சபையின் அங்கத்தவர்களும் செயலாற்ற வேண்டும். இதற்காக இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் படிப்பினைகளிலுள்ள வழிகாட்டல்களை திருச்சபை சந்தர்ப்பம் கிடைக்கும்போது உச்ச அளவில் ஈடுபடுத்திக்கொண்டு செயலாற்ற வேண்டும்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு :**

- சுதந்திர இலங்கையில் அரசியல் மற்றும் சமூகப் பின்னணியில் திருச்சபை முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட பிரச்சினைகளையும், அதற்கான காரணங்களையும் பற்றி ஆராய்ந்து தெளிவாக விளங்கிக் கொள்ளுங்கள்.
- இரண்டாம் வத்திக்கான பொதுச்சங்கத்தின் திருப்புமுனை, இலங்கைத் திருச்சபைக்கு ஏற்படுத்திய தாக்கங்களைப் பற்றி அறிந்து, புதிய உதயத்துக்காக செயற்பட வேண்டிய தன்மையைக் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.
- இன்று இலங்கைத் திருச்சபையின் மறைத்தூதுப் பணியையும், திருச்சபை எதிர்கொள்ளும் சவால்களையும் ஆராய்ந்து, கிறிஸ்தவ அடையாளத்துக்கு எவ்வாறு சான்று பகர்வீர் என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குங்கள்.

**உசாத்துணை நூல்கள்**


- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அமதி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2002.
- விசுவாசத்தின் புதிய விடியல், தேசிய மேய்ப்புப்பணி மாநாடு, 1995.
- புத்தாயிரமாம் புது யுகத்தினுள் இலங்கைத் திருச்சபையின் பயணம், இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களின் மில்லேனிய மேய்ப்புப் பணி நிருபம், 2001.
- Bishop Lakshman Wickremasinghe: His Life and Work, Devasarana Development Centre, 1983.
- Acts of the Second Provincial Synod of Colombo in Ceylon: 1968 - 1969, Quest, No. 135, 1995.

**தேர்ச்சி 8.0** : இலங்கைத் திருச்சபையின் வரலாற்றைக் கற்பதோடு இலங்கைக் கிறிஸ்தவ திருச்சபையை இனங்கண்டு சாட்சியம் பகர்வர்.

**தேர்ச்சி மட்டம் 8.3** : இலங்கைச் சமூகத்தில் திருச்சபையின் பங்களிப்பை விளக்குவர்.

**பாடவேளைகள்** : 10

**கற்றல் பேறுகள்** :

- அந்நியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் நிலவிய கல்வி முறைக்கு திருச்சபை பங்களிப்புச் செய்த விதத்தினை ஆராய்வர்.
- சுதந்திரத்தின் பிற்காலத்தில் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு கத்தோலிக்க கல்வியில் ஏற்பட்ட தாக்கங்களின் மத்தியிலும் அதன் வளர்ச்சிக்காக செயற்பட்ட கல்வியாளர்களைப் பற்றி அறிந்து கொள்வர்.
- இலங்கைச் சமூகத்திலே சமய முன்னேற்றத்துக்காக கிறிஸ்தவர்களால் ஆற்றப்பட்ட திறமைகளையும் ஆற்றல்களையும் பாராட்டுவர்.
- ஆரம்ப கால மறைதூதுவர்களின் உறுதியான அர்ப்பணிப்பினால் கிறிஸ்தவ கலைக்கு அத்திவாரம் இடப்பட்டதென ஏற்றுக்கொள்வர்.
- திருவிவிலியத்தின் சிந்தனைக்கும் கிறிஸ்துவின் படிப்பினைகளுக்குமேற்ப கிறிஸ்தவ அன்பு பற்றிச் சரியாக விளங்கிக் கொண்டு இவ்வன்புக்காக சமூக நலன் கருதி பங்களிப்புச் செய்வர்.
- இலங்கைச் சமூகத்தின் நலன் கருதி திருச்சபையின் பங்களிப்பைக் கற்று கிறிஸ்தவ அழைப்பில் இந்நலனுக்காக செயற்பட முழு மனதோடு முன்வருவர்.
- சமூகக் கடமைகளை நிறைவேற்ற சமூக நலன், சமூக நலன்புரிப் பணிகளின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டு கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு வாழ முன்வருவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 8.3.1. இலங்கையின் கல்வியில் திருச்சபையின் பங்களிப்பு

### போர்த்துக்கேயர் காலக் கல்வி (கி.பி. 1505 - 1658)

- போர்த்துக்கேயரின் வருகையைத் தொடர்ந்து கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த துறவறச் சபைகளான பிரான்சிஸ்கன் சபையினர், இயேசு சபையினர், டொமினிக்கன் சபையினர், அகுஸ்தீன் சபையினரும் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைத்ததோடு, போதனைகள், வழிபாடுகள், பாடசாலைக் கல்வி, இலக்கியங்கள், நாடகங்கள், மனித நேயப் பணிகள் ஆகியவற்றிலும் அக்கறை காட்டலாயினர்.
- இவர்களது இந்தப் பணிகள் யாவும் மேற்கத்தேய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு ஆற்றப்பட்டமையால், பௌத்த, இந்து சமயச் சடங்குகளில் அதிகளவு மாற்றங்கள் ஏற்பட்டன.
- போர்த்துக்கேயர் காலத்தில் சுதேசிகள் மத்தியில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பி அவர்களைக் கத்தோலிக்கர்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட கல்வியே வழங்கப்பட்டது.
- இவர்களின் காலத்தில் பல்வேறு மறைபரப்புச் சபைகளிலுள்ள குருக்கள் ஆசிரியர்களாக பணியாற்றியமையால் எனவும் பாடசாலைகளில் சமயக் கல்விக்கு வழிகாட்டலும் கிடைத்தது.

- இக்காலத்தில் மேற்கத்தேய கல்வி முறையை அறிமுகஞ் செய்தல், இலங்கைக் கல்வி முறையில் ஏற்பட்ட பாரிய மாற்றமெனக் கூறலாம்.

**ஒல்லாந்தர் காலக் கல்வி (கி.பி. 1658 - 1796)**

- ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைப் போன்று மத நிறுவனங்களில் கல்வியை முற்றுமுழுவதுமாக விட்டுவிடாது அரச கட்டுப்பாட்டின் கீழ் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கல்வி முறையை வழங்க முற்பட்டனர்.
- குறைந்த செலவில் உயர் கல்வியை வழங்கக்கூடிய நுட்பமுறைகளையே கையாண்டனர்.
- ஒல்லாந்தர் காலத்தில் நான்கு விதமான பாடசாலைகள் நடைமுறையில் இருந்தன.
  i) கோயில்பற்று பாடசாலைகள்
  ii) செமினரிகள்
  iii) ஒல்லாந்த பாடசாலைகள்
  iv) அனாதை இல்லங்கள்
- போர்த்துக்கேயர் நிருவகித்து வந்த கோயில்பற்று பாடசாலைகளையே ஒல்லாந்தர் தொடர்ந்தும் நிருவகித்து வந்தனர்.
- அரச பிரமாணங்கள் வழியாக பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்குரிய வேலை நேரம், பயிற்சி, அவர்களின் கடமைகள் ஆகியனவற்றை அடிக்கடி தெளிவுபடுத்தலாயினர்.
- பாடசாலைகளில் பணிபுரிந்த ஆசிரியர் குழாமில் வயது முதிர்ந்த, கிறிஸ்தவ, உயர் பிரபல குடும்பத்தைச் சார்ந்த ஒரு ஆசிரியர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.
- இந்த தலைமை ஆசிரியரே ''தோம்பு'' பொறுப்பையும் நடாத்தி வந்தார் (வட்டாரப் பதிவுப் பொறுப்பு). பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு, திருமுழுக்குப் பதிவு ஆகியவற்றையும் இவர் மேற்கொண்டார். சில வேளைகளில் காணிகளுக்கான உறுதிகளையும் இவர் பதிவு செய்தார். இதனால் தலைமை ஆசிரியரின் மதிப்பும் மரியாதையும் சமூகத்திலே உயர்ந்து விளங்கியது.
- ஒல்லாந்தர் கல்வித்துறையில் தம் செலவைக் கட்டுப்படுத்த ஒல்லாந்தில் இருந்து ஆசிரியர்களை வரவழைப்பதற்குப் பதிலாக சுதேசிகளை ஆசிரியர்களாகப் பயிற்றுவித்து பாடசாலைகளில் பணிக்கு அமர்த்தினர்.
- சுதேசிகள் பணிபுரிந்த கோயில்பற்று பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மொழிகளையும் கற்பித்தனர். கற்பித்தல் முறையில் வினாவிடை முறை, வாசிப்பு, எழுத்து கிறிஸ்தவ சட்டதிட்டங்கள் என்பவற்றையும் புகுத்தினர்.
- 8-15 வயது வரையுள்ள பிள்ளைகள் எல்லோரும் பாடசாலை செல்ல வேண்டுமென வற்புறுத்தப்பட்டனர். அதன் பின்னும் மூன்று அல்லது நான்கு வருடங்கள் வாரம் இரு தடவை சமயப் பாடசாலைக்குச் செல்ல வற்புறுத்தப்பட்டனர்.
- ஒல்லாந்த பாடசாலைகளை கிழக்கிந்திய கொம்பனியின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்ததோடு, அரச நிர்வாகத்தைச் சீர்ப்படுத்துவதற்கென கி.பி. 1663இல் இலங்கையில் அரச ஆணைக்குழு ஒன்றையும் நியமித்தனர்.
- இவ்வாணைக் குழுவில் ஒல்லாந்த குருக்கள் முதன்மை இடத்தை வகித்ததோடு, இக்குழுவே ஆசிரியர்களை நியமித்தல், பரீட்சித்தல், மேற்பார்வை செய்தல் ஆகிய விடயங்களையும் கவனித்தது.
- மாணவர்களின் வாசிப்பு, எழுத்து, சமய வினாவிடை, பத்துக் கட்டளைகள், விசுவாச உண்மைகள், இயேசு கற்பித்த செபம் போன்றவற்றை மேற்பார்வைக் குழு பரீட்சித்தது. முதலில் வினாவிடை நடாத்தப்பட்டு பின்பு பரிசில்களும் வழங்கப்பட்டன.
- ஒல்லாந்தர் காலத்தில் கோயில்பற்று பாடசாலைகளை விட செமினரிகள் முதலிடம் வகித்தன. செமினரி பாடசாலைகளில் மேற்கத்தேய கல்விமுறை கையாளப்பட்டது.
- உயர்சாதிக் குடும்பத்தில் தோன்றிய உயர்சாதி மாணவர்கள் அரச செலவில் ஒல்லாந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

- ஒல்லாந்தர் காலத்தில் ஒல்லாந்த பாடசாலைகள் சில இலங்கையில் நிலவி வந்தன. இங்கு ஒல்லாந்த, பறங்கிப் பிள்ளைகள் கல்வி கற்றனர். குருமாரும், உபதேசிமாரும் இங்கு கல்வி கற்பித்தனர். எழுத்து, வாசிப்பு, கணிதம் போன்றன கற்பிக்கப்பட்டன.
- கி.பி. 1737இல் இலங்கையில் அச்சகம் ஆரம்பமாயிற்று. இவ் அச்சகங்களில் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளுக்குத் தேவையான கையேடுகள், இலக்கிய நூல்கள் என்பன அச்சிடப்பட்டன.

## ஆங்கிலேயர் காலக் கல்வி (கி.பி. 1796 - 1948)

- இலங்கையில் அதிகமானோர் ஆங்கில மொழியைக் கற்றனர்.
- கி.பி. 1798இல் ஆங்கிலேயர் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது அவற்றை அங்கிலிக்கன், பப்டிஸ்ட், வெஸ்லியன், அமெரிக்க மிஷன் குருக்களைக் கொண்ட குழுவினரிடம் ஒப்படைத்தனர்.
- ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் மூன்று விதமான பாடசாலைகள் காணப்பட்டன.
  i) அரச பாடசாலைகள்:
  இவை பெரும்பாலும் தமிழ், சிங்கள மொழிகளில் இயங்கி வந்தன. இவை பெரும்பாலும் அங்கிலிக்கன் திருச்சபையைச் சார்ந்த குருக்களினால் நடாத்தப்பட்டு வந்தன.
  ii) மிஷன் பாடசாலைகள்:
  இவை புரட்டஷ்தாந்து மிஷனரிமாரால் நடாத்தப்பட்டு வந்தன.
  iii) பிரிவென பாடசாலைகள்:
  இவை பௌத்த பிக்குகளால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலைகள்.
- கி.பி. 1829 - 1832க்கும் இடைப்பட்ட காலத்தில் இயங்கிவந்த கோல்புறூக் - கெரோன் கொமிஷன் கொழும்பில் ஒரு பாடசாலை ஆணைக்குழுவையும், ஏனைய மாகாணங்களில் பாடசாலைச் சபைகளையும் அமைக்கலாயிற்று.
- கொழும்பில் அமைக்கப்பட்ட பாடசாலை ஆணைக்குழுவில் அங்கிலிக்கன் திருச்சபைக் குருக்களும் அங்கம் வகித்தனர். இக்குழு பல ஆங்கிலப் பாடசாலைகளை நடாத்தியது.
  **உதாரணம்** : கொழும்பு றோயல் கல்லூரி.
- இப்பாடசாலைகள் மிக உயர் மட்டத்தில் செயற்பட்டமையால் பலர் இங்கு ஈர்க்கப் பட்டனர். ஆங்கிலேயர் காலத்திலும் பாடசாலைக் கல்வி முறையானது மறையறிவைப் பரப்பும் ஊடகங்களாகச் செயற்பட்டன.
- ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அனேக கிறிஸ்தவ குருக்கள் கல்வித் துறையில் ஈடுபட்டனர்.
  i) கி.பி. 1801இல் பப்டிஸ்ட் மிஷனரி சங்கம் இலங்கைக்கு வருகை தந்து கல்வித் துறையில் ஈடுபட்டனர். கொழும்பு றோயல் கல்லூரியை இவர்களே ஆரம்பித்தனர்.
  ii) கி.பி. 1815இல் வெஸ்லியன் மிஷனரி சபை இலங்கையில் சில மாகாணங்களில் கல்வி நிறுவனங்களை ஆரம்பித்தன. கொழும்பில் வெஸ்லி கல்லூரி, மெதடிஸ்ட் கல்லூரி, கண்டியில் கிங்ஸ்வூட் கல்லூரி, காலியில் றிச்மென்ட் கல்லூரி என்பன இவர்களால் ஆரம்பிக்கப்பட்டவையாகும்.
  iii) அமெரிக்கன் மிஷனரி சபையினர் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டையில் உயர்தரப் பாடசாலையொன்றும், யாழ் நகரில் மத்திய கல்லூரியும், உடுவில் மகளிர் பாடசாலையும் இவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளாகும்.
  iv) கி.பி. 1845ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகைதரத் தொடங்கிய கத்தோலிக்க திருச்சபைக் குருக்கள் பல்வேறு துறவறச் சபைகளைச் சார்ந்த அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் பல்வேறு பாடசாலைகளை இலங்கையில் அமைக்கலாயினர். முகத்துவார டி லா சால் கல்லூரி, கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி, நல்லாயன் மகளிர் கல்லூரி, திருக்குடும்ப மகளிர் கல்லூரி, யாழ்ப்பாண புனித பத்திரிசியார் கல்லூரி என்பன இவற்றில் முக்கியமானவையாகும். காலப்போக்கில் கத்தோலிக்கர் வசம் 750க்கும் மேற்பட்ட பாடசாலைகள் இருந்தன.

- இவ்வாறாக நாடு சுதந்திரமடைவதற்கு முன் ஆங்கிலேயர் 235க்கும் மேற்பட்ட பாடசாலைகளை அமைத்து நாடு முழுவதிலும் 10, 000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியருக்கு கல்வியளித்து வரலாயினர்.
- ஆங்கிலேயர் காலக் கல்வி விசேடமாக சாதி, சமயம் என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாகக் கற்கவும், பெண்கள் கல்வியில் மிக்க அக்கறையும் காட்டலாயினர்.
- இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அருட்தந்தை கிறிஸ்தோபர் பொன்ஜீன் இலங்கைக் கல்வித் திட்டத்தையிட்டு ஆழமானதோர் ஆய்வை மேற்கொண்டு அம்முறை எவ்வாறு அங்கிலிக்கன், புரட்டஸ்தாந்து மதத்தைச் சாராதவர்களைப் பாதிக்கின்றதென மூன்று முக்கிய ஆய்வுக்கட்டுரைகளைப் பிரசுரிக்கலானார்.
    - i) இலங்கை கத்தோலிக்க கல்வி பற்றிய ஒரு சில வார்த்தைகள் (இது கி.பி. 1860ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது).
    - ii) பல்வேறு மதங்களும் கலவன் பாடசாலைகளும் என்ற தலைப்பில் இன்னுமொரு கட்டுரை கி.பி. 1861ஆம் ஆண்டு பிரசுரித்தார்.
    - iii) கத்தோலிக்க திருச்சபையும் நாகரிகமும் என்ற தலைப்பில் மூன்றாவது கட்டுரையை கி.பி. 1867ஆம் ஆண்டு பிரசுரித்தார்.
- இவரது இந்த ஆய்வுக் கட்டுரைகள் வழியாக இலங்கையின் கல்வி நிலையை நன்குணர்ந்த ஆங்கிலேய அரசானது கி.பி. 1869ஆம் ஆண்டு கல்வித் திணைக்களத்தை அமைக்கலாயிற்று. இது இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது.
- இதன் வழியாக கத்தோலிக்க திருச்சபைக்கு மட்டுமல்ல, இலங்கையிலுள்ள எல்லா மதத்தவர்களும் பௌத்தம், இந்து, இஸ்லாம் ஆகிய அனைவரும் தங்கள் பாடசாலைகளை நிறுவலாம், தாய்மொழியில் கல்வி கற்பிக்கலாம் என்ற ஆணையும் பிறப்பிக்கப்படலாயிற்று.
- இவ்வாறாக பல்வேறு மதத்தவருக்கும் இலங்கையில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு வித்திட்டவர் அருட்தந்தை பொன்ஜீன் ஆவார்.

**சுதந்திரத்தின் பின் இலங்கையில் கத்தோலிக்க கல்விப்பணி**

- கி.பி. 1969இல் அமுலாக்கப்பட்ட புதிய சுற்றறிக்கையின்படி கல்வித் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதோடு கத்தோலிக்க பாடசாலைகள் மேலும் வளர்ச்சியடைந்தன.
- நகர்ப்புறங்களில் உயர்தரக் கல்லூரிகள் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்டன. அவை அரசின் மேற்பார்வையில், பல்வேறுபட்ட திருச்சபை நிர்வாகிகளின் கீழ் இயங்கின.
- கத்தோலிக்க பாடசாலைகளைக் கண்காணிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டதோடு, ஒவ்வொரு பங்குத்தந்தையும் பொது முகாமையாளரின் பிரதிநிதியாக செயற்படலானார்.
- கத்தோலிக்க ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கென ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மக்கோனா, போலவலானை, கொழும்புத்துறை போன்ற இடங்களில் அமைக்கப்படலாயின.
- கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான பாடசாலைகளை நிர்வகிப்பதற்காக சிற்சில ஆண், பெண் துறவற சபைகள் முன்வந்துள்ளன.
    - i) ஆசீர்வாதப்பர் சபையினர் (OSB)
    - ii) அமல மரித் தியாகிகள் (OMI)
    - iii) இயேசு சபையினர்
    - iv) டி லா சால் சகோதரர்கள்
    - v) மாறிஸ்ட் சகோதரர்
    - vi) திருக்குடும்பக் கன்னியர்
    - vii) நல்லாயன் கன்னியர்
    - viii) பிரான்சிஸ்கன் கன்னியர்
    - ix) அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர்
    - x) அன்புக் கன்னியர் சபை

- தேசிய மொழிகளில் கல்வித்துறையை வளர்ச்சியடையச் செய்வதற்காக மக்கோனாவிலும், மாத்தளையிலும் புனித பிரான்சிஸ்கன் சபை சகோதரர், யாழ் கொழும்புத்துறையில் புனித வளனார் சகோதரர், புனித சவேரியார் அருட்சகோதரிகள் போன்ற சபைகளும் இலங்கையிலே நிறுவப்பட்டன.
- இவ்வாறாக சுதந்திர இலங்கையிலே பல்வேறுபட்ட கிறிஸ்தவ திருச்சபைகளினால் கல்வித்துறையில் ஒரு பெரும் மறுமலர்ச்சி ஏற்படலாயிற்று.
- கி.பி. 1960ஆம் ஆண்டு சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் 750க்கும் மேற்பட்ட கத்தோலிக்க பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டன. கட்டிடங்கள், காணிகள், தளபாடங்கள் யாவும் எதுவித நஷ்ட ஈடுகளும் இன்றி சுவீகரிக்கப் படலாயின.
- பாடசாலைகள் மட்டுமல்ல ஆசிரியர் கலாசாலைகளும் அரசமயமாயின. 40 கத்தோலிக்க பாடசாலைகள் மட்டுமே அரசின் உதவியின்றி மாணவர்களிடமிருந்தும் எதுவிதமான உதவியையும் எதிர்பார்க்காமல் நடாத்தலாம் என அனுமதி வழங்கப்பட்டாலும், காலப்போக்கில் நிதிப் பற்றாக்குறை காரணமாக அவற்றுள் பல அரசிடம் ஒப்படைக்கப்பட்டன.
- கி.பி. 1980இல் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்ததும் ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தனவின் அனுமதியுடன் மிகுதியான பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு அரசினால் சம்பளம் வழங்கப்பட்டது.
- இந்நிலை கத்தோலிக்க திருச்சபையைப் பெரிதும் பாதிக்கலாயிற்று. பாடசாலைகளில் கத்தோலிக்க மாணவர்களுக்கு சமயக் கல்வி மறுக்கப்பட்டதோடு பெரும்பாலான பாடசாலைகளில் கத்தோலிக்க ஆசிரியர்கள், கத்தோலிக்க அதிபர் இல்லாத நிலையும் உருவானது.
- பங்கு மட்டத்திலே மறைக்கல்விப் பாடசாலைகள் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்தது.
- கத்தோலிக்க திருச்சபையிலே பொதுநிலையினரின் விழிப்புணர்வு வளர்ச்சியடைந்தது மாத்திரமல்ல பங்குத்தந்தை, பெற்றோர், மாணவர்களுக்கிடையே நெருங்கிய உறவும் ஏற்படலாயிற்று.

### 8.3.2. இலங்கையின் பண்பாட்டுக்கும் கலைக்கும்

### திருச்சபையின் பங்களிப்பு

- இலங்கையின் கலையில் கிறிஸ்தவ அடையாளததைப் பாதுகாப்பதற்கு முடியுமாயிருந்தது. இலக்கியக்கலை, சித்திரக்கலை, சங்கீதம், அரங்கியற்கலை ஆகிய துறைகளுக்கான பங்களிப்பை கிறிஸ்தவர்கள் வழங்கியுள்ளனர்.

### இலக்கியக் கலை

- இலங்கையில் ஆரம்பகால கிறிஸ்தவ இலக்கியப் பாரம்பரியமானது மறையை, திருவழிபாடுகளை நோக்காகக் கொண்டிருந்தது. நாட்டு மக்களுக்குப் பணிபுரிவதாயின் இலங்கையின் தாய்மொழியைக் கற்றல் மிகவும் அத்தியாவசியமாகும். தேசிய மக்கள் தம் மொழியில், கலாசாரத்தில் கொண்டிருந்த பற்றை போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய யுகங்களிலிருந்த பிறநாட்டு கத்தோலிக்க எழுத்தாளர்கள் அறிந்திருந்தார்கள்.

### போர்த்துக்கேயர் கால கிறிஸ்தவ இலக்கியம்

- கி.பி. 1645இல் இயேசு சபையைச் சேர்ந்த அருட்பணி பியரே பேர்கு மூன்று பகுதிகளைக் கொண்ட சிங்கள இலக்கண நூலை எழுதியுள்ளார் (Artu E Grammmatica de Linguwa Chingala).

- மல்வானை அருட்பணி போதே பிரான்சிஸ்கோ எனும் பெயருடைய இயேசு சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் எழுதியுள்ள 26 புனிதர்களின் வாழ்க்கை வரலாறு, மறைக்கல்வி நூல், கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிய நூல் ஆகியனவற்றைப் பிரதான நூல்களெனலாம்.
- மிகப் பழைய தமிழ் கத்தோலிக்க இலக்கியமான ''சந்தியோகு மாயோர் அம்மானை'' எனும் நூல் கி.பி. 1647இல் இயேசு சபை அருட்தந்தையான சுவாங் கருவாருவினிடமிருந்து கிறிஸ்தவ மறையை அறிந்து கொண்ட பேதுரு என்பவரால் எழுதப்பட்டுள்ளது.
- கி.பி. 1612இல் கிறிஸ்தவ மறையைத் தழுவிக்கொண்ட அழகிய வண்ணன், டொன் ஜெரோனிமோ எனும் பெயரில் திருமுழுக்குப் பெற்றார். நற்செய்தி, சவுலின் திருமுகம் போன்ற பிரசித்தி பெற்ற கவிதை நூலாக வெளியிட்டார். ''குஸ்தன்னீனு ஹட்டன'' எனும் பெயரில் முதலாவது சிங்கள கிறிஸ்தவ கவிதையை கி.பி. 1620இல் எழுதியுள்ளார். கொன்ஸ்டைன்தின் த சா எனும் போர்த்துக்கேய போர்வீரன் அந்தோனியோ பரேத்து அல்லது குருவிட்டரால என்பவரை வென்றது பற்றி எழுதப்பட்ட இக்கவிதை பழைய சிங்கள இலக்கிய பாரம்பரியத்தின் இறுதி இலக்கியமாகும்.

## ஒல்லாந்தர் கால கிறிஸ்தவ இலக்கியம்

- ஒல்லாந்தரின் இலக்கண நூல், வாக்கிய நூல், அகராதி போன்றவை டச்சு, சிங்கள மொழிகளில் ஆக்கப்பட்டுள்ளன. திருப்பாடல்கள், பக்திப்பாடல்கள், திருவழிபாட்டு நூல் ஒல்லாந்த மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
- கி.பி. 1755இல் கொழும்பு குருத்துவக் கல்லூரியின் கலாநிதி மண்டலசே அன்ரனி பெரேரா, லுவி த சேரம் என்பவர்களால் இயற்றப்பட்ட பாடல் புத்தகம் உருவாக்கப் பெற்றது. இதற்கான பாடற்குறிப்பு ஐரோப்பிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது.
- ஒல்லாந்து அரசும் கிறிஸ்தவ இலக்கியத்துக்கு அளித்துள்ள முக்கியமான பங்களிப்பானது திருவிவிலியத்தின் புதிய ஏற்பாடு முழுவதும், பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளும் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டமையேயாகும்.
- கி.பி. 1705இல் மே மாதம் 09ஆம் திகதி இலங்கைக்கு வந்த யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் சிங்கள கிறிஸ்தவ இலக்கியத்துக்கு மாபெரும் பணியாற்றினார் என்பதை வார்த்தைகளினால் விவரிக்க முடியாது. முழுமையான இலக்கியவாதியாவார். இவர் ஆற்றிய பணியைப் பற்றிய 8.1 தேர்ச்சி மட்டத்தின் கீழ் கற்ற விடயங்களைப் பற்றிய உங்கள் கவனத்தை மீண்டும் ஈடுபடுத்தவும்.

## 19ஆம், 20ஆம் நூற்றாண்டின் கிறிஸ்தவ இலக்கியங்கள்

- இந்நூற்றாண்டில் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் பலர் இலக்கியத்துக்குப் பங்களிப்பை வழங்கியுள்ளனர். கிறிஸ்தவ குருக்களைப் போன்று, கிறிஸ்தவ பொதுநிலையினரும் இப்பணிக்குத் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.
- கி.பி. 1866 ஜுன் மாதம் 7ஆம் திகதியிலிருந்து இன்று வரைக்கும் இலங்கையின் மிகப் பழைமை வாய்ந்த சிங்களப் பத்திரிகையான ''**ஞானார்த்த பிரதீபய**'' ஊடாக பல எழுத்தாளர்கள் உருவாகியுள்ளனர்.
- இலங்கையின் கிறிஸ்தவ கலைக்கு மகுடமாக கி.பி. 1902ஆம் ஆண்டு ஜுன் 03ஆம் திகதி தங்கொட்டுவயில் பிறந்த அருட்பணி மர்சலின் ஜயக்கொடி விளங்கினார்.
- கி.பி. 1949ஆம் ஆண்டின் இறுதியில் இவர் ஞானார்த்த பிரதீப்பய பத்திரிகையின் பதிப்பாசிரியராக பதவியேற்றார். கத்தோலிக்கர்களின் உண்மையான சிங்களத் தன்மையையும் தாய்மொழியின் அறிவினையும் எடுத்துக்காட்ட இவர் ஞானார்த்த பிரதீப்பய பத்திரிகையை ஓர் ஆயுதமாகக் கொண்டார்.
- அமல மரித் தியாகிகளால் இன்றும் பொறுப்பேற்று வெளியிடப்படும் ''**பக்தி பிரபோதன**'' எனும் சஞ்சிகை இலங்கையின் மிகப் பழமை வாய்ந்ததொன்றாகும். இது 1889ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

## தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள்

- மேலைத்தேய மறைபரப்பாளர்கள் இலங்கைக்கு வந்து மறைபரப்புப் பணியை மேற்கொண்ட போது கிறிஸ்தவ மறைக் கொள்கைகள், திருவிவிலியம், புனிதர்கள் வரலாறு என்பவற்றை மக்களுக்குப் போதிப்பதற்கு இலகுவாகத் தமிழ் இலக்கியங்களைப் பயன்படுத்தினர்.
- போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலத்தில் பல்வேறு தமிழ் கிறிஸ்தவ நூல்கள் ஆக்கப் பட்டதோடு அவை தொடர்ந்தும் ஆக்கப்பட்டு வருகின்றன.

## போர்த்துக்கேயர் காலம்

- போர்த்துக்கேயர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இங்கு வருகை தந்த பிரான்சிஸ்கன், இயேசு சபை மறைபரப்பாளர்கள் பல்வேறு தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களை ஆக்கியதோடு, சுதேசிகளையும் தமிழ் எழுத்துக் கலையில் ஈடுபடுத்தினர்.
- தமிழ் கிறிஸ்தவ இலக்கியத்தின் தந்தை என 'ஹென்றி ஹென்றிகஸ்' அழைக்கப் படுகிறார். அவர் தென்னிந்தியாவிலே பணியாற்றிய காலத்தில் தமிழ் மொழியில் பல்றேு நூல்களை எழுதியுள்ளார். இவர் மூன்று வருடங்கள் மன்னாரில் பணியாற்றியதோடு, அங்கு பல்வேறு மொழிபெயர்ப்புகளைச் செய்தாரென வாய்மொழி சம்பிரதாயத்தில் குறிப்பிடப்படுகிறது. எனினும், இந்நூல்களைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.
- தென்னிந்தியாவில் மறைதூதுப்பணியில் ஈடுபட்டிருந்த டி நொபிலே அடிகளாரும் பல கிறிஸ்தவ தமிழ் நூல்களை எழுதியுள்ளார். இவர் தமது முதிர் வயதில் யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பளையில் இரு வருடங்கள் வசித்தபோது பல்வேறு கிறிஸ்தவ நூல்களை எழுதியுள்ளதாக சம்பிரதாயங்கள் கூறுகின்றன.
- **''சந்தியோகு மாயோர் அம்மானை''** எனும் தமிழ் கிறிஸ்தவ நாட்டார் பாடல் முதலாவதாக எழுதப்பட்ட போதும் இன்று வரை அது வழக்கில் உள்ளது. யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பளையில் பணியாற்றிய இயேசு சபையைச் சேர்ந்த சுவாங் கார்வாலு அடிகளாரின் உதவியோடு தெல்லிப்பளையில் கத்தோலிக்க மறைக்கு மனந்திரும்பிய புலவர் பேதுருவினால் இந்நூல் ஆக்கப்பட்டது.
- **''ஞானப்பள்ளு''** எனும் சிற்றிலக்கிய நூல் சிற்றிலக்கியங்கள் 96இல் முக்கியமானதாகும். இந்நூலைத் தழுவி ஆக்கப்பட்ட கிறிஸ்தவ இலக்கியம் ''ஞானப்பள்ளு'' என அழைக்கப்படுகிறது. கத்தோலிக்க மறையை தழுவிய இந்துக்கள் வயலில் வேலை செய்யும்போது மறையைக் கற்பிப்பதற்கு இவ்விலக்கியம் பயன்படுத்தப்பட்டது. பண்ணைக்காரன் (இறைவன்), பள்ளன் (கிறிஸ்து), மூத்த பள்ளி (எருசலேம்), இளைய பள்ளி (உரோமை) ஆகிய நான்கு நடிபங்குகளை மையமாகக் கொண்டு இவ்விலக்கியம் ஆக்கப்பட்டுள்ளது. கி.பி. 1645 - 1650 வரையான காலத்தில் இவ்விலக்கியம் தெல்லிப்பளை புலவர் பேதுருவினால் எழுதப்பட்ட ஆக்கமாக இருக்கலாமென மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆய்வின் வழியாக குறிப்பிட்டுள்ளார்.

## ஒல்லாந்தர் காலம்

- ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் கல்வினின் சீர்திருத்தக் கொள்கையைப் பரப்புவதற்காக பிலிப் பல்தேயுஸ் என்பவர் முன்னிலை வகித்தார்.
- பேர்சிவல் ஐயவர் என்பவர் ஆறுமுக நாவலரின் உதவியுடன் திருவிவிலியத்தை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## 19ஆம், 20ஆம் நூற்றாண்டில் தமிழ் கிறிஸ்தவ இலக்கியம்

- 20ஆம் நூற்றாண்டில் தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களை ஆக்குவதற்குப் பலர் பங்களிப்புச் செய்துள்ளனர்.
- ‘‘நல்லூர் சுவாமி’’ என அழைக்கப்படும் அருட்பணி ஞானப்பிரகாசியார் அ.ம.தி. (O.M.I) அடிகளாரினால் இலக்கியங்கள் ஆக்கப்பட்டன. இவர் இலங்கைத் திருச்சபை வரலாறு, யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் வரலாறு, மோட்சபாதை, செபச் செண்டு, பக்தி பொக்கிசம், மோட்ச கபாடம், நித்திய ஆராதனை, ஆண்டவர் ஆய்ந்த கனி, காவல் சம்மனசு ஆகிய நூல்களை எழுதியுள்ளார். தர்க்கப் பிரசங்கங்களையும் இவர் எழுதியுள்ளார். கி.பி. 1877இல் இருந்து ‘‘அமல உற்பவ இராக்கினித் தூதர்’’ எனும் மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டார்.

### உதய தாரகை

- இலங்கையின் மிகப் பழைமை வாய்ந்ததும் முதலாவதுமான சஞ்சிகையாக இது உள்ளது. கி.பி. 1841இல் அமெரிக்க மறைத்தூதுவர்களினால் யாழ்ப்பாணத்தில் இச் சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டது.

### பாதுகாவலன்

- யாழ் மறைமாவட்டத்தின் வெளியீடான இது இலங்கையின் முதலாவது கத்தோலிக்க தமிழ் சஞ்சிகையாகும். கி.பி. 1876இல் இது ஆரம்பிக்கப்பட்டது. கத்தோலிக்கரின் விசுவாசத்தை உறுதிசெய்வது இதன் நோக்கமாயிருந்தது.

### சித்திரக்கலை

- கற்றலை இலகுவாக்குவதற்காக போர்த்துக்கேயருக்கு முற்பட்ட காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கிறிஸ்தவ அடையாளங்கள், சித்திரங்கள் பற்றிக் கற்பது முக்கியமாகும்.

### I அநுராதபுரச் சிலுவை

- கி.பி. 1912இல் இ. ஆர் அயர்ட்டன் எனும் அகழ்வாய்வாளரால் அநுராதபுரத்தின் மத்திய நகரில் இருந்த கல்லினால் செதுக்கப்பட்ட விசேட வடிவத்தினைக் கொண்ட சிலுவை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச்சிலுவை கருங்கல்லினால் செதுக்கப்பட்டுள்ளதோடு, இச் சிலுவையின் அடையாளம் அங்கு கட்டப்பட்டிருந்த ஆலயமொன்றின் தூண் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- இச்சிலுவை அடையாளத்தை கி.பி. 2000இல் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்று பாவிக்கப்படும் இலங்கைக் கத்தோலிக்க கொடியில் இச்சிலுவை பொறிக்கப்பட்டுள்ளது.
- ஒரு காலத்தில் இந்த அநுராதபுர சிலுவை அடையாளம் சமய பேதகங்களில் ஒன்றான நொஸ்தேரியர்களின் சிலுவை என தவறாக நம்பப்பட்டது. ஆயினும் பிற்காலத்தில் கிடைத்த தகவல்களின்படி இது அக்கால கீழைத்தேய கத்தோலிக்கரின் மத்தியில் பிரபல்யம் வாய்ந்த சிலுவையின் அடையாளம் என விபரமாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இது திருத்தூதர் தோமையாரினால் ஆக்கப்பட்டுள்ள சிலுவையைத் தழுவிச் செய்யப்பட்டுள்ளதென்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

### II திருமுழுக்குத் தடாகம்

- இது வவுனியாவில் அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கல்லினால் ஆக்கப்பட்டுள்ள திருமுழுக்கு நீர்ப்பாத்திரமாகும்.
- இதன் சுற்றளவு 300 சென்ரி மீற்றராகும். உயரம் 118 சென்ரி மீற்றராகும். ஆழம் 35 சென்ரி மீற்றராகும். கன அளவு 7 சென்ரி மீற்றராகும்.

- இது ஒரே கல்லில் நேர்த்தியாகச் செய்யப்பட்டுள்ளது. இது மாதொட துறைமுகத்துக் கருகாமையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

### III தோமாவின் ஞாபகார்த்த சிலுவை

- களனி கங்கைக்கு அருகில் புனித தோமாவின் ஞாபகார்த்த சிலுவையுடனான கோபுரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நவீன இங்கிலாந்து சபையின் கட்டடமான ஜிந்துபிட்டி புனித தோமையார் ஆலயம் இவ்விடத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என வரலாற்றாய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

### போர்த்துக்கேயர் காலம்

- கல்லினால் செதுக்கப்பட்ட போர்த்துக்கேயரின் உத்தியோக முத்திரை ஜனாதிபதி மாளிகைக்குக் கீழுள்ள காணியில் ''ஹோர்டன் தோட்டத்தில்'' அமைக்கப்பட்டுள்ளது.
- **புனித அன்னாள் திரை**

  கி.பி. 1666இல் புனித அன்னாள் திரை நவகமுக ஆலய திரையிலுள்ள இந்தச் சித்திரம் இன்று தேவத்தை அரும்பொருட்காட்சி யகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

### ஒல்லாந்தர் காலம்

- குருணாகலை வெள்ளி விகாரையின் தலைமை ஆசனத்தில் கிறிஸ்தவ சித்திரங்கள் வரையப்பட்ட பல ஓடுகள் தொல்பொருள் திணைக்களத்தால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கீழ்க்குறிப்பிடப்படும் கிறிஸ்தவ தொனிப்பொருள் இவற்றில் காணப்படும்.
- கிறிஸ்துவின் விண்ணேற்றம், இயேசுவை ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தல், இயேசு கடல்மீது நடத்தல், இயேசுவின் உருமாற்றம், மார்த்தாவும் மரியாவும் ஆகிய புதிய ஏற்பாட்டுக் கதைகள் இச்சித்திரங்களின் தொனிப்பொருளாக உள்ளது.
- இயேசுவுக்கு ஒல்லாந்தரது ஆடை அணிவித்திருப்பது இச்சித்திரங்களின் விசேட தன்மையாகும். அவருடைய தலையைச் சுற்றி ஒளிக்கதிருள்ள வளையம் வைத்து வரையப்பட்டுள்ளது.

### ஆங்கிலேயர் காலம்

- **பெசலேல் நவரத்ன அல்லது முகாந்திரம் முதியன்சே நவரத்ன** எனும் சிறந்த சித்திரக் கலைஞர் பௌத்த விகாரைகளில் செதுக்குச் சித்திரம் செய்த ஒருவராவார். இவர் திருமுழுக்குப் பெற்று தனது பெயரை பெசலேல் நவரத்ன என மாற்றிக்கொண்டார்.
- பேராதனையிலுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் மரச்சிற்பங்கள் நிறைந்த ஆலயமொன்றை இவர் ஆக்கியுள்ளார்.

### சுதந்திரத்தின் பிற்பட்ட காலம்

- **போல் நவரத்ன**

  கி.பி.1939 - 1940ஆம் ஆண்டளவில் கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய சித்திரத்தை இவர் வரைந்துள்ளார்.
- **ஹென்றிக்கஸ்**

  முகத்துவாரம் புனித யாகப்பர் ஆலயத்தின் சித்திரங்களை வரைந்துள்ளார். இவர் வரைந்துள்ள இயேசுவின் கடைசி இராவுணவு சித்திரத்தில் தன்னையே சீடனாக நினைத்து வரைந்துள்ளார்.
- **என். எஸ். கொடமான்ன**

  நீர்கொழும்பு பெரிய தெருவில் அமைந்துள்ள புனித மரியாள் ஆலயத்தின் அடிக்கூரை யில் சித்திரம் வரைந்தார். இவர் ஒரு பௌத்தராவார். இவர் திருவிவிலியத்தில் இலகுவான சம்பவங்களைச் சித்திரங்களாக வரைந்துள்ளார்.

**சங்கீதம்**

- திருச்சபையின் இசைத்துறையானது இலங்கையின் இசைத்துறையில் மிகவும் முக்கியமான ஒரு பிரிவாகும்.
- சிங்கள இசைக்கு கத்தோலிக்க இசையின் பங்களிப்பு
  - அருட்பணி யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் பழைய ஆவணங்கள் வழியாக.
  - வாஹகோட்டை, நீர்கொழும்பு, தூவ, போலவத்த மக்களின் பாடல்களான ஒப்பாரி, பசான் கீதம், புலம்பல்களின் வழியாக.
  - நத்தார் கரோல் பாரம்பரியங்கள் வழியாக.

**தேசிய கிறிஸ்தவ இசையின் அபிவிருத்திக்குப் பங்களித்தவர்கள்**

- அதி வண. யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார்
  - மூவொரு கடவுள், வாழ்க வாழ்க மரியே, வானமும் பூமியும் படைத்தவராம், ஆரம்பத்துக்கு முன், கடவுள் பிறந்துள்ளார் ஆகிய பழைய கிறிஸ்தவ பாடல்கள் இன்றும் எம்மத்தியில் பயன்படுத்தப்படுகின்றன.
  - பக்திப் பாடல்கள் மட்டுமல்ல நாடக பாடல்கள், நாட்டிய நாடகம் ஆகியவற்றிலும் யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் ஆக்கங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. மனமே நாடகத்தில் வருகின்ற 'பிரேமயின் மனரஞ்சிதவே' எனும் பாடலில் தமிழ் கத்தோலிக்க நாடகங்களின் தாளம் பின்பற்றப்பட்டுள்ளது.
  - இவருடைய பாடல்களுக்கான சுரம், தாளம் போன்றவற்றைத் தேடி அவர் மலைநாடு, தென்னிலங்கை சபரகமுவ நோக்கிச் சென்றுள்ளார். இங்கு தவில், தம்மட்டம், முரசு, மேளம், கைத்தாளம் ஆகிய ஐந்து இசைக் கருவிகளைத தேடிச் சென்றார். தேசிய மக்களின் பாடல் தாளத்தைத் தனது இசைக்கு எடுத்துக் கொண்ட இவர், தேசிய நாடகம், நடனம் என்பவற்றுடன் தான் பிறந்த நாட்டில் பெற்றுக்கொண்ட நாடகக்கலை அனுபவங்களின் அடிப்படையில் கத்தோலிக்க இசையை உயிரூட்டம் பெறச் செய்தார்.
  - இவர் ஐந்து பாடல் பிரபந்தங்களை எழுதியுள்ளார்.
    - i) வேத காவிய (வேத காவியம்)
    - ii) பசன் பொத (பசன் புத்தகம்)
    - iii) ஆனந்த களிப்புவ (ஆனந்த களிப்பு)
    - iv) மங்கள கீதய (மங்கள கீதம்)
    - v) லதோனி பொத (ஒப்பாரி புத்தகம்)
  - மேதகு ஆண்டகை எட்மன் பீரிஸ் (அ.ம.தி), J.K.S. பெரேரா, சுனில் சாந்த, அதி. வண. மோசெசி பெரேரா, அருட்பணி. மர்சலின் ஜயக்கொடி (அ.ம.தி) ஆகியோர் தேசிய இசைக்கு மெருகூட்டிய கிறிஸ்தவர்களாவர்.

- **அரங்கியற் கலை**
  - முக்கிய கிறிஸ்தவ விழாக்கள் நிகழும் சந்தரப்பங்களில் விழாவுக்கான பிரதான விடயங்களைப் பக்தர்களுக்கு அர்த்தமுள்ள முறையில் விளக்குவதற்கான நோக்கத்தோடு ஆலயத்தை அண்டிய பகுதியில் இச் செய்தியினை நாடகமாக நடித்துக் காட்டுவது வழக்கிலிருந்து வந்தது.
  - நாடகங்கள் நடிப்பதற்காகவே ஆலயத்தை அண்டிய பகுதியில் அரங்கொன்று அமைக்கப்பட்டிருக்கும். ஒல்லாந்த பல்தேவுஸ் அடிகளார் கி.பி. 1656 -1665 காலப்பகுதியில் செய்த அவதானிப்புக்கேற்ப இவர் பழைய கத்தோலிக்க ஆலயங்கள் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார். இங்கு அனேக ஆலயங்களின் அயலில் அட்டாளை அல்லது நாடக மேடை அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் இயேசு சபையைச் சேர்நத போர்த்துக்கேய குருக்களால் விழாக்களின்போது திருவிவிலிய சம்பவங்கள் மேடையேற்றப்பட்டன.

**போர்த்துக்கேயர் காலத்தில் மறைத்தூதுவர்கள் கிறிஸ்தவ நாடகங்களை மேடையேற்றிய சந்தர்ப்பங்கள்**

- **இயேசு சபையினர்**
  - கி.பி. 1604ஆம் ஆம் ஆண்டில் கொழும்பில் இயேசு சபைக்குச் சொந்தமான ஆலய விழாவின்போது உடன்படிக்கையும் அன்னை மரியாவும் என்ற கருப்பொருளில் நாடகமொன்று மேடையேற்றப்பட்டது.
  - கி.பி. 1617இல் சிலாபத்தை அண்மித்த ஆலயத்தின் அபிஷேக விழாவின்போது கொன்ஸ்தாந்தின் பேரரசனின் மனமாற்றம் என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது.

- **பிரான்சிஸ்கன் சபை**
  - மாத்தறையில் மறைபணியாற்றிய அந்தோனியோ பெஷோரோ என்பவர் முக்கியமானவராவார். கி.பி. 1636இல் எழுதப்பட்டுள்ள நூலொன்றில் இயேசு, ஆதாம், ஏவாள் ஆகியோர் பற்றிய காவியங்கள் சில எழுதப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

- **பாஸ்கா நாடக சம்பிரதாயம்**
  - தவக்காலத்திலும் பரிசுத்த வாரத்திலும் கிறிஸ்துவின் பாடுகள் மேடையேற்றப்படுவது பொது வழக்கமாயிருந்தது.
  - கி.பி. 1706 மேற்கூறப்பட்ட சூழலில் கோவா ஒறத்தோறியன் சபையிலிருந்து கொண்டுவரப்பட்ட உடையலங்காரத்தைப் பயன்படுத்தி பாஸ்கா நாடகம் மேடையேற்றப்பட்டதாக அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.
  - 16ஆம் நூற்றாண்டிலிருந்து இவ்வாறான நாடகக் காட்சிகள் நகரங்களில் பிரபல்யமான கலையாக இருந்ததோடு, இந்நாட்டு மறைபணிக்காக வருகை தந்த குருக்கள் நாடகக் கலை பற்றிய அறிவையும் பெற்றிருந்தனர். யோசப்வாஸ் அடிகளார், யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார் ஆகியோர் அக்காலத்தில் கோவாவில் பிரபல்யமான பாஸ்கா நாடகக் கலையைப் பற்றிய தேர்ச்சிகளைப் பெற்றிருந்தனர்.

- **பாஸ்கா நாடகக் கலையின் ஆரம்பம்**
  - சம்பிரதாய சிங்கள நாடகக் கலைக்கான வரலாற்றுத் தகவல்கள் இல்லாமையால், போர்த்துக்கேய, ஸ்பானிய நாடகக் கலையைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட பாஸ்கா நாடகங்களே இலங்கையில் தேசிய நாடகக் கலை உருவாகக் காரணமாயமைந்தது.

- **இலங்கையில் பாஸ்கா நாடகக் கலையின் வளர்ச்சி**
  - பேசாலை, தூவ, பிரிபன, பமுனுகம, பொறலஸ்ஸ ஆகிய பிரதேசங்களில் முழுமையான, உயிருள்ள கலைஞர் குழுவினரால் கிறிஸ்துவின் பாடுகள் நாடகமாக நடிக்கப்பட்டது.

- **சிங்கள நாடகக் கலை**
  - மேற்குக் கரையோரத்தை அண்டிய கரையோரப் பிரதேசங்களான சிலாபம் தொடக்கம் தங்கல்ல வரையான பகுதிகளில் நாடகங்கள் மிகவும் பிரபல்யமடைந்தன.
  - நாடகங்கள் உருவாவதற்கு முன் கிராம நாட்டியம் மிக விசேடமாக, முழுமையாக காணக்கூடிய காவியங்களாக இருந்தன. சொகரி, கொபோடா, கங்காரிய, கவி நாடகம் ஆகியவற்றை விட, காவியப் பண்புகளுடனும், நாடகப் பாணியுடனும் உள்ள நடனத்திலும் விசேடமானது நாடகமாகும்.

**யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரும் சிங்கள நாடகக் கலையும்**

- சிங்கள இலக்கிய வரலாற்றிலே நாடக இலக்கியம் தோன்றாத காலத்தில், சிங்கள கிறிஸ்தவ இலக்கியமும் நாடகக் கலையும் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளாரின் பங்களிப்பெனில் அது மிகையாகாது.
- ‘தேவ நீதி விசர்ஜனய’ என்பது மிகவும் பிரபல்யமான நாடகக் கலையாக உள்ளது. இதனை சிலர் ‘நடு பொத’ எனவும் அழைப்பர்.
- சிங்கள நாடக எழுத்தாளர்கள் வண. கொன்சால்வெஸ் அடிகளின் ‘‘மங்கள கீத’’, ‘‘பசான் பொத’’ என்பவற்றிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளனர் எனப் பேராசிரியர் எம். எச். குணதிலக தனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார். **உதாரணம்** : பழைய மூவிராசாக்கள் (றஜதுன்கட்டுவ) நாடகத்தை எழுதும்போது எழுத்தாளரான கொன்சால்வெஸ் அடிகளார் எழுதிய தேவவேத புராணய என்பதைத் தழுவியதாக விளங்குகிறது. அவ்வாறே, பௌத்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நாடகங்களும் ‘‘சுவிசேஷ விசர்ஜனய’’ என்பவற்றைப் பின்பற்றியது மிகத் தெளிவாகக் காணப்படுகிறது.

**தமிழ் நாடகக் கலை**

- **நாட்டார் நாடகக் கலை**
  - நாடகம், நாட்டார் நாடகம், கிராமிய நாடகம், நாட்டுக்கூத்து, கூத்து ஆகியன ஒரே பொருளைக் குறிக்கின்றன. இந்த ஆடலும் பாடலும் ஒருங்கே, அவையிலுள்ளோருக்கு செய்தியொன்றை எடுத்துக் கூறும் ஊடகமாகும். தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளில் நாட்டுக்கூத்துக் கலையானது பொது மக்களிடையே பிரபல்யமானதுடன், பேணப்பட்டும் வந்துள்ளது.
  - இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்த யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், மாதோட்டம், வன்னி, புத்தளம், சிலாபம் போன்ற பிரதேசங்களில் நாடகக் கலை பேணப்பட்டது. தமிழ் நாடகக் கலை, இந்து சமயத்தின் புராணக் கதைகளில் இருந்த பக்தி, காதல், வீரம், போர் ஆகிய தொனிப் பொருள்களில் உருவாகின.
  - கத்தோலிக்க மதத்தின் போதனைகளையும், விழுமியங்களையும் மக்களுக்குப் பரப்பும் நோக்குடன் இலங்கைக்கு வருகை தந்த போர்த்துக்கேய மறைபரப்பாளர்களான பிரான்சிஸ்கன் சபைக் குருக்களும், இயேசு சபைக் குருக்களும் நாட்டுக்கூத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தினர். இங்கு முக்கிய தொனிப்பொருளான புனிதர்களின் வரலாறு, ஐரோப்பியக் கதைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கத்தோலிக்க நாடகக் கலை இந்நாட்டில் உருவாகும் சந்தர்ப்பத்தில் ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டதால் நாட்டுக்கூத்தில் துன்புறுத்தல் முக்கிய தொனிப்பொருளாக அமைந்தது.
  - கத்தோலிக்க நாட்டுக்கூத்தில் பெரும்பாலும் புனிதர்களின் வாழ்க்கை பின்பற்றப் பட்டுள்ளது. புனிதர்களுக்கு பக்தியும் மரியாதையும் காட்டும் பொருட்டு இதை ஓர் ஊடகமாகப் பயன்படுத்தினர். இதனால் புனிதர்களின் வாழ்க்கையை நடித்துக் காட்டவில்லை. அதற்காக பாடல்களைப் பாடினர். புனிதர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காகவே இவ்வாறு செய்தனர்.

- **மரபு ரீதியான கத்தோலிக்க நாடகக் கலையின் ஆரம்பம்**
  - மரபு ரீதியான நாட்டுக்கூத்து மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் ஆரம்பமாகி வளர்ச்சியடைந்துள்ளது.
  - புலவர் லோறன்சுப்பிள்ளை அவர்களின் பேரனான கீத்தாம்பிள்ளை எருமை நொண்டி, என்றிக் எம்பரதோ, புரிசீன கன்னி ஆகிய நாடகங்களைப் பாடியுள்ளார். இங்கு வட பாங்கு (யாழ்ப்பாணப்) பாணியைப் பயன்படுத்தியுள்ளார்.

- **ஆங்கிலேயர் கால நாட்டுக்கூத்து**
    - ஆங்கிலேயர் காலத்தில் கத்தோலிக்க நாடகங்களுக்குப் பெரும் எதிர்ப்பு இருந்தது. மது பாவித்தல், ஆண், பெண் இருபாலாரும் ஒருமித்து செயற்படுவதும் வழியாக ஒழுக்கத்துக்குத் தடையேற்படுமென்பதால் நாடகம் தடைசெய்யப்பட்டது.

- **சிங்கள நாடகக் கலைக்குப் பங்களிப்பு**
    - சிங்கள நாடக சம்பிரதாயம் உருவாகி வளர்ச்சியடைவதற்கு தமிழ் நாட்டுக்கூத்தே அடிப்படையாயாய் அமைந்துள்ளது. விசேடமாக சில சிங்கள நாட்டுக்கூத்து, தமிழ் நாட்டுக்கூத்திலிருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

      **உதாரணம்** : எஸ்தாக்கி, யோசபாத், சன்நீக்கிளார், ஞான சவுந்தரி ஆகிய நாடகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 8.3.3. கிறிஸ்தவ அன்பும் சமுதாய நலனும்
### திருவிவிலிய சிந்தனை

**பழைய ஏற்பாடு**

- அனைத்துப் படைப்புகளிலும் உயர்ந்த படைப்பு மனிதன் என்பதும், மனிதன் தனியே இருப்பது இறைவனது விருப்பம் இல்லை என்பதும் தொடக்க நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது (தொடக்கநூல் 2/18). எனவே மனிதன் ஒரு சமூகப் பிராணியாவான். இறைவன் மனிதனை குடும்ப வாழ்வுக்கு அல்லது சமூக வாழ்வுக்கு அழைக்கிறார் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. சமூக வாழ்வின் வெற்றிக்காக சுயநலத்தை உடைத்தெறிந்து அர்ப்பணத்தோடு வாழ்தல் முக்கியமாகும். இதற்காக இறையன்பிலும், இறை இரக்கத்திலும் வாழ்வைக் கட்டியெழுப்புதல் முக்கியமாகும். அன்பை முதன்மைப்படுத்திக் கொண்டு நீதியாக செயற்படுவதனால் சமூகத்தின் பொது நலனையும் உண்மையான அமைதியையும் கட்டியெழுப்பலாமென திருவிவிலிய சிந்தனை எமக்குக் கூறுகிறது.
- மோசேயின் தலைமைத்துவத்தின் கீழ் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்லும் பயணத்தில், இறைவன் அவர்களுக்குக் கொடுத்த சட்ட திட்டங்களினதும் படிப்பினைகளினதும் கருத்தாயமைவது சகோதர அன்பில் ஒருவருக்கொருவர் நியாயத்தையும் நீதியையும் நிறைவேற்றுவதாகும். விசேடமாக அந்த சமூகத்தில் வாழ்ந்த ஏழை எளியவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும், விதவைகளுக்கும், பிள்ளைகளுக்கும் அன்பு காட்டுதலும், உதவுதலும், இந்தக் கட்டளைகளினாலும், ஆணையினாலும் இவற்றை மேலும் அறிந்து கொள்ளலாம்.
    - லேவியர் 19/9, 10, 13, 15, 17 - 19/18
    - லேவியர் 25/35 - 38
    - விடுதலைப் பயணம் 22/21 - 27
- ‘‘கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்” (விடுதலைப் பயணம் 21.∵24) எனும் சட்டத்தினால் சமூக நீதி எடுத்துக்காட்டப்படுகிறது. இதனைப் பார்க்கும் போது பழிவாங்குதல் போலத் தோன்றினாலும், அக்கால சமூக கலாசாரத்தின்படி தனக்கு ஏற்பட்ட கேட்டுக்கு மேலாக கேடு செய்வதற்கு அனுமதியை ஒரு போதும் அளிக்காத நியாயம் அங்கு வெளிப்படுகிறது.

**புதிய ஏற்பாடு**

- ''கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்'' எனும் பழைய ஏற்பாட்டின் சட்டத்துக்கு அப்பால் சென்று கிறிஸ்துவின் போதனைகளும் வாழ்க்கையின் முன்மாதிரிகைகளினதும் வழியாக முழுமையாக மாற்றியமைத்து உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்'' (மத்தேயு 5/43) என்பதனால் சகோதர அன்பின் புதிய கண்ணோட்டத்தில் வெளிக்கொணரப்பட்ட விதத்தினை கிறிஸ்துவின் மலைப்பொழிவில் காணக்கூடியதாகவுள்ளது.
- அவரது படிப்பினைகளினதும் போதனைகளினதும் வழியாக வெளிப்படுத்தப்பட்ட இந்த அன்பு புதிய உயரிய தர்மமான சிலுவையில் பலியானதன் மூலம் உறுதியாக்கப்பட்டு பகைவர்களையும் மன்னிக்கின்ற எல்லை மீறிய அன்பை அவரது வாழ்வில் நாம் காணக்கூடியதாயுள்ளது.
- மக்களினத்தாரின் தீர்ப்பு நாளிலே ஆயன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிப்பது போல் இறைவன் மக்களை இரு பக்கமாகப் பிரித்து ''நான் பசியாய் இருந்தேன்; என் தாகத்தைத் தணித்தீர்கள் ... (மத்தேயு 25/31-46) எனும் படிப்பினையில் அவர் மிகத் தெளிவாகக் கூறுகிறார். அன்பு வாழ்வையும் இரக்கம் காட்டுதலையும் கிறிஸ்துவின் சீடர்களின் உரிமையும், பிரிக்கமுடியாத, புறக்கணிக்கமுடியாத பொறுப்பும் கடமையுமாகும்.
- சமூகத்தில் துன்பப்படுவோர் யாராக இருப்பினும் அவர்களுக்கு நன்மை செய்யும் போது கிறிஸ்துவுக்கே இதனைச் செய்தோம் என்பது தெளிவாகும். ''மிகச் சிறியோராகிய என் சகோரரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத்தேயு 25:40). நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்குச் செய்யவில்லை (மத்தேயு 25:45).
- எனவே, கிறிஸ்தவ அன்பு என்பது கிறிஸ்தவ சீடத்துவத்தின் இன்றியமையாத கடமையாகும். தாம் வாழ்கின்ற சூழலில், தொழில் செய்யும் இடத்தில், சமூக நலன் கருதி பொது நன்மைக்காக இரக்கச் செயலில் அர்ப்பணத்துடன் ஈடுபட கிறிஸ்துவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவன் இதை புறக்கணிக்க முடியாது. எவரும் இதைத் தடைசெய்ய முடியாது.
- திருவிவிலிய கண்ணோட்டத்துக்கு அமைய கட்டியெழுப்பப்பட்ட கிறிஸ்தவ சிந்தனையானது அயலானை அன்பு செய்ய வேண்டிய கடமையை எமக்கு நினைவூட்டுகின்றது. மேலும் தன்னைப்போல் அயலானை அன்பு செய்தல் இறையன்பினாலே நிகழ்வதாகும் (1பேதுரு 4/7-19). கிறிஸ்தவ அன்பின் நோக்கமானது அயலானை அன்பு செய்வதன் வழியாக இறைவனையே அன்பு செய்தவதென்பது இதிலிருந்து தெளிவாகும்.
- சகல தருமங்களிலும் அன்பே முதன்மையானதாகும். அன்பு இல்லாத இடத்தில் வெறுமையே உள்ளது; ஒலிக்கும் வெண்கலமேயாகும் (1கொரிந்தியர் 13/1-13). ஆகையால் அன்பும், இரக்கமும் இல்லாதவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக வாழ முடியாதென்பது தெளிவாகும்.
- இறைவனையும் அயலானனையும் அன்பு செய்வதைத் தவிர முதன்மையான கட்டளை எதுவுமில்லை (மாற்கு 12/29-31). ''நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்'' என்பது இயேசு தனது திருத்தூதர்களுக்குக் கொடுத்த புதிய கட்டளையாகும் (யோவான் 13/34). நாம் கிறிஸ்துவுடைய சீடர்களென்பதை இவ்வாறு அன்பு செய்வதாலேயே அனைவரும் அறிந்து கொள்கின்றனரென கிறிஸ்து கூறியுள்ளார்.

**கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி**

- **இல. 1889, 2196**

  **இலங்கைச் சமுதாயத்தில் நலன்புரிச் செயல்கள்**

- கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு சமூகத்தின் பொது நன்மைக்காக செயலாற்றுவதும் சமூக நலனுக்காக பங்களிப்புச் செய்வதும் கிறிஸ்தவ பொறுப்பாகும். சமூக நலனென்பது பௌதீக அபிவிருத்தி மட்டும் முக்கிய இடத்தைப் பெறுவதல்ல. மனிதன் முழுமையான மனிதனாக சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான பின்னணியை ஒழுங்கமைத்துக் கொடுப்பதாகும். இறைச் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் இந்த கௌரவத்தை மேலோங்கச் செய்வதற்காகச் செயலாற்ற உதவுவதாகும்.
- இலங்கையின் வரலாற்றிலே, விசேடமாக இன்று இந்தக் கண்ணோட்டத்திற்கேற்ப கிறிஸ்தவ அன்பை முதன்மையாகக் கொண்டு இன, சமய, சாதி ஆகிய பேதங்களைக் கடந்து சமூக நலனுக்கும் மனித அபிவிருத்திக்குமான செயல்களில் ஒரு சபையாகவும் பல்வேறு இயக்கங்களாகவும் அமைப்புக்களாவும் தனிப்பட்ட ரீதியாகவும் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டுள்ளனர்.
- 16வது நூற்றாண்டில் இந்நாட்டுக்கு வருகை தந்த கிறிஸ்தவ மறைபரப்பு சபைகளின் பணிகள் பற்றிக் கூறுகையில் இவர்களுடைய தூதுப்பணியின் நோக்கமாக ‘ஆன்மாக்களை மீட்பதே’’ இருந்தது என்பது வரலாற்று ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- எனினும் மனிதன் ஆன்மாவை மட்டும் கொண்டவனல்ல உடலையும் கொண்டவனாவான். எனவே ஆன்மீகத் தேவைகளைப் போன்றே உடல் சார்ந்த தேவைகளும் உள்ளன. மனிதத்துவத்துக்கு கௌரமற்ற நிலை ஏற்படாதவாறு வாழ்க்கையை நடாத்திச் செல்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் கருத்திற் கொண்டு செயற்பட்டனரென்பது தெளிவாகத் தெரிகிறது.
- ஆரம்பத்திலிருந்தே திருச்சபை மனித தேவைகளை நிறைவேற்றுவதற்காக இரக்கச் செயல்களில் ஈடுபடும் பணி புரிந்ததென்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இன்று வெவ்வேறு உடல், பௌதீக எனும் மனித தேவைகளுக்காக கிறிஸ்தவ ஆலயங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் ஆகியவை அவ்வாறான கிறிஸ்தவ இரக்கப் பணிகள் பற்றிய சமூகமயமான மனப்பாங்குகளைக் காரணமாகக் கொண்டுள்ளதென்பது தெளிவாகும்.
- போர்த்துக்கேயரின் வருகையிலிருந்து இன்று வரை எந்தவொரு கிறிஸ்தவ இரக்கப் பணிபற்றி நோக்குகையில் பெண் துறவற சபைகளின் வருகை அல்லது அருட் சகோதரிகளின் தூதுப்பணியானது முக்கிய காரணியாக உள்ளதென்பதை அறியக் கூடியதாகவுள்ளது. இது இலங்கை வரலாற்றிலே அடிமைப்படுத்தப்பட்ட காலத்தில் நிகழ்ந்த முக்கிய மீட்பு ரீதியான சம்பவமென்று கூறினாலும் தவறில்லை.
- பின்னர் வருகை தந்த ஆண் துறவற சபைகளினால் முன்னெடுக்கப்பட்ட பணிகளையும் இவற்றோடு இணைக்கலாம். இச்சபைகள் ஆற்றிய பணிகளையும் வரலாற்று பற்றியும் தனிக் கற்கையில் ஈடுபடுதல் மிகவும் பொருத்தமாகும்.
- மேற்கூறப்பட்ட வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த துறவற சபைகளைப் போன்றே இதற்கு இணையாக இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற துறவற சபைகள் தமக்குப் பரம்பரையாக வருகின்ற தனிவரத்தைப் பின்பற்றி பணிகளில் ஈடுபட்டபோதிலும் இந்த அனைத்துப் பணிகளும் கிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படையான கிறிஸ்தவ இரக்கத்தையே வெளிப்படுத்துகின்றன.
- இந்த துறவற சபைகளில் ஆற்றிய, இன்றும் தொடர்ந்து ஆற்றும் பணிகளில் நோயாளிகள் நலம் பேணல், அனாதை பிள்ளைகள், தவறு செய்து திருமணம் செய்யாத அன்னையர்களைப் பாதுகாத்தல், பார்வையற்ற, பேசமுடியாத, செவிப்புலனற்ற மற்றும் வேறு குறைபாடுகளுக்குள்ளான பிள்ளைகளைப் பாதுகாத்தலும் அவர்களுக்குப் பொருத்தமான கல்வியையும், தொழிற் பயிற்சியையும்

பெற்றுக் கொடுத்தல், வயோதிபர்களையும் விசேட இல்லங்களில் பாதுகாத்தல், முறைசார் பாடசாலைக் கல்வி, வீதிவாழ் பிள்ளைகளுக்கான முறைசாராக் கல்வி, சிறையிலுள்ளோர், உளவியல் ரீதியாக குறைபாடுகளுக்குள்ளானவர்களுக்கான அபயம், ஆலோசனைப் பணிகள், மருத்துவப் பணிகள், மந்த புத்தியுள்ள பிள்ளைகளைப் பராமரித்தல், குடும்ப அப்போஸ்தலிக்கப் பணி, போர்களினால் இடம்பெயர்ந்த பிள்ளைகள், அகதி முகாம்களில் உள்ளோருக்கான பணி போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இப்பணிகள் பல்வேறு இடங்களில் பரவி இருப்பினும் இவற்றின் நோக்கமும் அடிப்படையும் கிறிஸ்தவ அன்பைத் தவிர வேறு ஒன்றுமில்லையென்பது தெளிவாகின்றது.

- இன்றைய திருச்சபையில் பங்கு மற்றும் கிறிஸ்தவ ஆலய மட்டங்களிலும் துறவற சபைகள், குருக்கள், ஆயர்கள் ஆகியோரின் உதவியோடு இவ்வாறான அனேக இரக்கப் பணிகள் நடைமுறையிலுள்ளன. இவை பல்வேறு நிறுவனங்கள், அமைப்புக்கள் வழியாக செயற்படுகின்றன.

### கிறிஸ்தவ சமூக நலன்புரி, இரக்கப்பணி நிறுவனங்கள்
### கரிதாஸ் இலங்கை - செடேக் (SEDEC)

- அண்மைக்கால வரலாற்றிலே இந்நாட்டின் கத்தோலிக்க அன்புப் பணிகள், சமூக அபிவிருத்தி, நலன்புரிச் செயல்கள் என்பவற்றை அவதானிக்கும் போது இலங்கை ஆயர் பேரவையின் கீழ் செயற்படுகின்ற, கத்தோலிக்க திருச்சபையின் சமூகப்பணிப் பிரிவான கரிதாஸ் (இலங்கை) செடக் நிறுவனம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.
- 1968இல் நிறுவப்பட்டு இன்று இலங்கையின் சகல மறைமாவட்டங்களிலும் பல்வேறு பெயர்களால் இரக்கப் பணிகளிலும் சமூக நலன்புரிப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள கரிதாஸ் (இலங்கை) செடக் நிறுவனம் விசேடமாக மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், சமூகத் தேவைகளை நிறைவுசெய்தல் மானிட அபிவிருத்தி, நீதியுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்திட்டங்கள், செயற்பாடுகள் வழியாக பங்களிப்புச் செய்கிறது.

### புனித வின்சன்ட் டீ பவுல் இரக்கப்பணி

- சர்வதேச மட்டத்தில் செயற்படும் இந்த இரக்கப் பணி இலங்கையில் பல்வேறு மறைமாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள மத்திய சபையை முதன்மையாகக் கொண்டு பங்கு மட்டத்தில் செயற்படுகின்றது. ஆலய மட்டத்தில் பொதுநிலையினர் ஒன்றிணைந்து அர்ப்பணமுள்ளோரின் உதவிகளின் வழியாக இரக்கச் செயல்களில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம்.

### கிறிஸ்தவ இளைஞர் கழகம் (YMCA)

- பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் அங்கத்தவர்கள் சேர்ந்து ஏற்படுத்தியுள்ள தேசிய கிறிஸ்தவ சங்கத்தோடு இணைந்ததான சமூகப்பணிகளிலும் இரக்கப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள நிறுவனமாகும்.

### கிறிஸ்தவ மகளிர் கழகம் (YWCA)

- பல்வேறு சமூகப் பணிகளிலும் இரக்கப் பணிகளிலும் ஈடுபட்டுள்ள, பல்வேறு கிறிஸ்தவ சபைகளின் அங்கத்தவர்கள் (பெண்கள்) தேசிய கிறிஸ்தவ சங்கத்துடன் இணைந்து செயற்படும் ஒரு நிறுவனமாகும்.

**மனித உரிமையும் சமுதாய முன்னேற்றமும்**

- எந்தவொரு சமூகத்தினதும் முன்னேற்றமும் அபிவிருத்தியும் அச் சமூகத்தில் கட்டியெழுப்பப்படும் அமைதியிலும், புரிந்துணர்விலும் தங்கியுள்ளது. இவ்வமைதியும் புரிந்துணர்வும் ஏற்படுவதற்கான விசேட காரணமாயமைவது பிரசைகளினது மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதனாலாகும். சகல மனிதர்களதும் மனிதத்துவத்துக்கு உரித்தான கௌரவத்தைப் பாதுகாப்பது நீதியானதாகக் கருதப்படும்.
- மனித வரலாறு முழுவதிலும் காண்பதைப் போன்று தற்காலத்திலும் மனித உரிமைகளைக் களங்கப்படுத்தல், மீறப்படுதல், மனித கௌரவத்துக்கு பொருத்தமற்ற சம்பவங்கள் ஆகியன ஊடகங்கள் வழியாக வெளிப்படுத்தப்பட்டன.
- எவ்வாறாயினும், மனித உரிமைகள் மீறப்பட்ட இருண்ட கடந்த காலத்தோடு, உருவாகிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனமானது மனித குடும்பத்தைச் சேர்ந்த சகலருக்கும் உரித்தாக வேண்டிய மற்றவர்களால் உரிமை பாராட்ட முடியாத மீறமுடியாத மனித உரிமைகள் பற்றிய 30 விடயங்களை அறிக்கையிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் கடைப்பிடிக்க கடமைப்பட்டுள்ள இப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள விடயங்களுள் மனித மாண்பு தொடர்பான திருவிவிலிய சிந்தனை, கிறிஸ்தவக் கண்ணோட்டம், அண்மைக்கால வரலாற்றிலே திருச்சபை போதனைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- திருவிவிலிய சிந்தனைக்கேற்ப மனிதனாகப் பிறத்தல் விசேட கொடையாகும். மனிதன் இறைவனது சாயலாகவும் உருவாகவும் படைக்கப்பட்ட ஒரு படைப்பாகும் (தொடக்கநூல் 1/26). படைப்பனைத்திலும் முதலிடத்தை வகிப்பது மனிதனாவான் (திருப்பாடல் 8/4-6).
- இந்தக் கிறிஸ்தவ சிந்தனைக்கு ஏற்ப இன, மத, குல ஆகிய பேதங்களில்லாமல் இலங்கை மக்கள் சமூகத்தில் மனிதத்தன்மையின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும், மனித உரிமைகளைப் பேணுவதற்கும் பல்வேறு காலங்களிலும், விசேடமாகத் தற்காலத்திலும் திருச்சபை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.
- இலங்கையைப் போன்று பல்வேறு இனத்தவர், பல்வேறு மதத்தவர் வாழ்கின்ற சமூகச் சூழலில், மனித உரிமைகள் மட்டில் ஒருவரை உயர்வாகவும், இன்னொருவரைத் தாழ்வாகவும் கருதுவதும் பிரிப்பதும் ஒரு போதும் நீதியாகாதெனவும், அது உண்மையான, அமைதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் சமூக அபிவிருத்திக்கும் பாரிய தடையாக அமையும் என்பதையும் திருச்சபை விளக்கமாக எடுத்துக் காட்டியுள்ளது.
- அண்மைக்கால வரலாற்றிலே இலங்கையில் மனித மாண்பு மாசுபடுத்தப்பட்டு, மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து அமைதிக்காகவும் சமத்துவத்துக்காகவும் திருச்சபை சகல இனத்தவருக்கும் அறிவுரை கூறிய சந்தர்ப்பங்கள் பலவாகும். இவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு காணலாம்.

**பல்வேறு இன, சமய, சமூகக் குழுக்களின் சம உரிமைகளுக்கும், நீதிக்கும் குரல் கொடுத்தல்.**

- 1983 யூலை மாதத்தில் நிகழ்ந்த இனவாத பிரச்சினைகளின் பின்பு இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட பேதங்கள், பிளவுகள், துன்புறுத்தல்கள், மோதல்களையும் எதிர்கொண்டு அமைதிக்கான சவால்கள் தொடர்பாக 1984ஆம் ஆண்டு யூன் மாதம் 10 திகதி இலங்கையின் கத்தோலிக்க ஆயர் பேரவை வெளியிட்ட ''இலங்கை மக்களை மீண்டும் கட்டியெழுப்புவதை நோக்கி'' எனும் அறிவுரை.

- 1983 யூலை மாதத்தில் நிகழ்ந்த வன்முறைகள் பற்றி ஆராய்ந்து ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்'' என்று இனப்பழிவாங்களைவிட தாழ் மட்டத்திலான ஒழுக்கத்தில் நாம் உட்பட்டுள்ளோம் என்பதைக் கூறுவதோடு, அப்பாவித் தமிழ் மக்களுக்கு இலக்கு வைத்த தாக்குதல்கள் பற்றிக் கவலைப்பட்டு, கிறிஸ்தவ அன்பின் கண்ணோட்டத்தில் சமூக நீதிக்காக செயற்படுவதற்கு அழைத்ததோடு திருச்சபையின் உறுப்பினர்களுக்கும் இலங்கை மக்களுக்கும் குருணாகலை மாவட்டத்தில் மேன்மை தாங்கிய இலஷ்மண் விக்கரமசிங்க ஆயர் அவர்களால் வெளியிடப்பட்ட அவரது இறுதிச் செய்தி.
- முப்பது ஆண்டுகளாக தொடர்ந்த போர், நாளுக்கு நாள் ஏற்பட்ட வன்செயல்கள் ஆகியவற்றுக்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து, கலந்துரையாடல் வழியாக அமைதியான தீர்வொன்றுக்கு வரும்படி உரிய பகுதியினருக்கு வலியுறுத்திய திருச்சபையின் பரிந்துரைப்புகளும், அறிவுரைகளும் அடங்கிய கோரிக்கைகள்.
- போரில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரலெழுப்புதல், அநியாயமாகக் கைது செய்யப்படல், தடுத்துவைத்தல் ஆகியவற்றுக்கு எதிராகக் குரலெழுப்புதல்.
- தொழில்சார் உரிமைகளுக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதன் காரணமாக வேலை இழந்தோர், 1980 யூலை வேலை நிறுத்தம் செய்தோரின் வேலைகளை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்காக குரலெழுப்பல், திருச்சபை அவர்களின் புகலிடமாகுதல்.
- 1988 - 1989 ஊழல்கள் நிலவிய காலத்தில் ஆட்கடத்தல்கள், கொலைகள், சட்டரீதியற்ற முறையில் கைது செய்தல், தடுத்து வைத்தல், மறைத்து வைத்தல், துன்புறுத்தல், வதை முகாம்கள் ஆகியவற்றை எதிர்த்து, இவ்வாறாகத் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உதவி செய்தல்.
- சுதந்திர வர்த்தக வலையத்தில் தொழில் புரிபவர்களின் முக்கியத்துவத்தை மிகத் தெளிவுபடுத்தி தொழிலாளரின் உரிமைகளை ஆட்சியாளரின் கவனத்துக்குக் கொண்டு வரல், தொழிலாளர் உரிமைக்காக முன் நிற்றல்.
- சூழலுக்கும் மக்களுக்கும் கேடு விளைவிக்கும் மிகப் பெரிய அபிவிருத்திச் செயற்திட்டங்களினால் ஏற்பட்டுள்ள தீய விளைவுகள் பற்றி அறிவுறுத்தி, அகிம்சைக்கு எதிரானவைகளை, கலந்துரையாடலின் வழியாக அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்து மக்களின் நன்மைக்காகக் குரலெழுப்புதல்.

**மருத்துவப் பணி**

- மருத்துவத் துறையையும் மருத்துவசாலைப் பணிகளையும் பற்றி அவதானிக்கும் போது போர்த்துக்கேயரின் காலத்தில் இந்நாட்டில் மருத்துவமனைகள் இருந்ததாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. போர்த்துக்கேய படைவீரர்களுக்கு சிசிச்சை அளிப்பதற்காக மருத்துவமனையொன்று கொழும்பு கோட்டேயில் ஆரம்பிக்கப்பட்டது.
- இது பிரன்சிஸ்கன் மிஷனரிகளால் நடாத்தப்பட்டு வந்தது. சிலாபத்திலும் யாழ்ப்பாணத்திலுமாக இரு மருத்துவமனைகள் இருந்தன. ஒன்று படைவீரர்களுக்கும், மற்றது கத்தோலிக்கருக்கும்.
- கத்தோலிக்கரல்லாத அனைவருக்குமாக மருத்துவமனைகள் இரண்டு மன்னார் தீவில் அமைக்கப்பட்டன. ஜெரம்யோ அடிகளாரால் அதிகாரிகளுக்கான மருத்துவமனை யொன்று மன்னார் கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் அங்கு சுய விருப்போடு பணி புரிந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- அம்மை நோய், கொலரா, மலேரியா ஆகிய தொற்று நோய்கள் பரவியபோது கிராமங்களையும், வீடுகளையும் விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு மாற்று வழியும், சுகாதாரப் பணிகளும் அக்காலத்தில் முன்னேற்றமடையாமலும் இருந்தன.
- 1612 இல் அனுப்பப்பட்ட கடிதத்தின் படி இயேசு சபை மறைதூதுப் பணியாளர்களும் அம்மை நோய்க்கு இலக்காயினரெனக் கூறப்படுகிறது.
- றொபர்ட் நொக்ஸ்சும் தனது ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றோரும், நோயினால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளும், கணவன் மனைவியரும் தகுந்த சுகாதாரப் பணி இல்லாமையால் பயந்து ஊர்களை விட்டு ஓடினர்.

- எனினும் கிறிஸ்தவ மறைதூதுப்பணியாளர் நோயாளிகளைக் கைவிட்டுப் பயந்து ஓடவில்லை. அனைவரும் அவர்களது இந்த நற்செயலையும் அர்ப்பணத்தையும் பாராட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1609இல் மொரட்டுவ, கம்வல பிரதேசங்களில் அம்மைநோய் பரவியதாகவும் கம்வலயில் 70 கிறிஸ்தவர்கள் மட்டில் இறந்தனரெனவும் கூறப்படுகிறது.
- ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் 1697இன் இறுதியில் கண்டியில் அம்மைநோய் பரவிய சந்தர்ப்பத்தில் முத்திப்பேறுபெற்ற ஜோசப் வாஸ் அடிகளார் நோயாளிகளைப் பராமரிக்கும் இரக்கப் பணிகளை ஆரம்பித்தமை வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் தொற்று நோயின் காரணமாக உறவுகளையும் ஊர்களையும் நோயாளரின் இறந்த உடல்களையும் விட்டுவிட்டு பயந்து மக்கள் ஓடினர். இரண்டாம் விமலதர்ம சூரிய அரசனும் கண்டியை விட்டு பயந்து ஓடினான். எனினும் ஜோசப் வாஸ் அடிகளார் தனக்கு நோய் ஏற்படும் என்பதைக் கவனியாது உதவியாளரான ஜோசப் கர்வால்லோ அடிகளுடன் ஒவ்வொரு வீடாகச் சென்று நோயாளரைப் பராமரிப்பதையும், இறந்த உடல்களை அடக்கம் செய்வதையும் கத்தோலிக்கர், கத்தோலிக்கரல்லாதோர் என்ற பாகுபாடின்றிச் செய்தனர்.
- அரசனும் மக்களும் இந்த அன்பு, இரக்கப் பணிகள் தொடர்பாக ஆச்சரியமடைந்தன ரெனக் குறிப்பிடப்படுகிறது. மனிதன் ஆன்மாவோடு மட்டுமல்லாது உடலும் உள்ளவன் என்பதால் உடல் நலனுக்காக ஜோசப் வாஸ் அடிகளாரினால் ஆற்றப்பட்ட இந்த இரக்கப் பணிகளையும் இந்நாட்டின் மருத்துவப் பணியையும் உடல் நலனுக்காக வழங்கப்பட்ட கிறிஸ்தவப் பங்களிப்பையும் மறக்க முடியாது.
- ஆங்கிலேயர் காலத்திலும் இந்த நோயாளரைப் பராமரிக்கும் இரக்கப்பணி நடைமுறையிலிருந்தது. அமல மரித் தியாகிகளின் சபை அருட்தந்தையர்கள் இலங்கைக்கு வருகை தந்து மூன்று ஆண்டுகளில் 1850 இல் கொடிய கொலரா நோய் பிரதேசங்கள் முழுவதிலும் பரவியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மறைதூதுப்பணியாளர் மிகக் கடின உழைப்பினால் நோயாளரைப் பராமரித்தனர். இச் சபையின் பிலிக்ஸ் அலெக்சாண்டர், விக்டர் ஆகிய அருட்தந்தையர்கள் தமது தூதுப்பணியின் ஆரம்பத்திலேயே நோயினால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தனரென குறிப்பிடப்பட்டுள்ளது. ''கொடிய தொற்று நோய் நிலவிய போதும் எமது மறைதூதுப்பணியாளர் இரக்கத்தின் அருஞ்செயல்களைச் செய்தனர்'' என மசனட் ஆயர் இச்சபைக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார்.
- **பிரான்சிஸ்கன் அருட்சகோதரிகள்** 1886இல் அரசின் கோரிக்கைக்கிணங்க தாதியார் பயிற்சிப் பாடசாலையொன்றை கொழும்பில் ஆரம்பித்த பின்னர் இப்பணி மன்னாருக்கும் பரவியது. ஹெந்தலையிலும் மாந்தையிலும் தொழுநோய் வைத்தியசாலைகள் இரண்டை ஆரம்பித்த இச்சபையினர், அங்கு நோயாளர்களுக்காக அர்ப்பணத்துடன் பணியாற்றினார். இச்சபையின் அருட்சகோதரிகள் சிறிது காலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் தாதியராகப் பணியாற்றினர்.
- **மென்சிஸ்கன் திருச்சிலுவைக் கன்னியர்** யாழ் மறைமாவட்ட ஆயர் அல்பிரட் கியோமார், அமதி, அவர்களின் அழைப்பை ஏற்று மென்சிஸ்கன் திருச்சிலுவை கன்னியர் இந்தியா கேரளாவிலிருந்து 1930ஆம் ஆண்டு ஆடி மாதம் யாழ் ஊர்காவற்றுறையில் (Kayts) அமைந்திருந்த அரசினர் வைத்தியசாலையில் பணியாற்ற வந்தனர். இதைத் தொடர்ந்து யாழ் போதனா வைத்திசாலையிலும் மருத்துவப் பணியாற்றினர். 1960 - 1961 ஆண்டுகளில் வெளிநாட்டு மறைப்பணியாளர் வைத்தியசாலைகளில் பணியாற்றுவது அரசினால் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சுதேச திருச்சிலுவைக் கன்னியர் மருத்துவப் பணியை இலங்கையில் தொடர்ந்து ஆற்றுகின்றனர்.

## அமெரிக்க மிஷன் ஊழியரின் மருத்துவப் பணி

### கிறீன் மருத்துவமனை (Green Hospital)

- சமயத்துறையிலும் கல்வித்துறையிலும் ஈடுபட்டு ஆலயங்களையும் பாடசாலைகளையும் நிறுவிய அமெரிக்கன் மிஷன் ஊழியர்கள் 1819ஆம் ஆண்டில் மருத்துவப் பணியையும் ஆரம்பிப்பதென தீர்மானித்தனர். அவர்களின் முதலாவது மருத்துவமனை 1820 இல் பண்டத்தரிப்பில் நிறுவப்பட்டது.
- 1847ஆம் ஆண்டு ஒக்டோபர் 06ஆம் திகதி வைத்தியர் கிறீன் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்து தமது பணியை ஆரம்பித்தார். விரைவிலே சமய வேறுபாடுகளின்றி அநேகர் கிறீன் வைத்தியரிடம் வரத் தொடங்கினர்.
- 1848 ஆம் ஆண்டில் மருத்துவமனை மானிப்பாயில் நிறுவப்பட்டு அமெரிக்க மிஷனின் மத்திய மருத்துவமனையாகத் திகழ்கின்றது. இது இன்று கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை என்று அழைக்கப்படுகின்றது.

### மக்லொயிட் மருத்துவமனை (Mcloyd Hospital)

- 1898ஆம் ஆண்டு செம்டம்பர் 24ஆம் திகதி இனுவிலில் இன்னுமொரு மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. மறைப் போதகர் மக்லொயிட்டினதும் அவரது மனைவியினதும் நினைவாக மக்லொயிட் மருத்துவமனை எனப் பெயரிடப்பட்டது.

### உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு:

- இலங்கையில் கல்விக்கான திருச்சபையின் பங்களிப்பைப் பற்றி விமர்சன ரீதியான கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.
- இலங்கையின் கலாசாரத்துக்கும், கலைக்கும், திருச்சபையின் பங்களிப்பு பற்றிய விடயங்களைச் சேகரிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- இலங்கை சமூகத்துக்கு திருச்சபையின் பங்களிப்புப் பற்றி கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.
- சமூக நலன் கருதி அர்ப்பணிக்கப்பட்டுள்ள இரக்கப்பணி நிறுவனங்கள், மனித உரிமையும் சமூக அபிவிருத்தியும், வைத்தியசாலைகள் பற்றிய கலந்துரையாடலை நடாத்தி எதிர்பார்க்கப்பட்ட பாட விடயங்களை எடுத்துக் காட்டவும்.

### உசாத்துணை நூல்கள்:


- Barcatta, B.A., History of the Southern Vicariate of Ceylon, 2 Vol. Ampitiya, Kandy Sri Lanka, 1991.
- Boudens, R., The Catholic Church in Ceylon Under Dutch Rule, Rome Catholic Book Agency, 1957.
- Boudens, R., Catholic Missionaries in British Colony, 1796 - 1893, Immensee, 1979.
- Don Peter, W.L.A., View Points on Education in Sri Lanka, Colombo, 1987.
- The Voice of our Pastors: Pastoral Letters of the Catholic Bishops of Sri Lanka 1984-1994, Lanka Publishing House, Colombo - 1995.
- Bishop Lakshman Wickremasinghe: His life and work, Devasarana Development Centre, 1983.
- ஞானமுத்து பிலேந்திரன், தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்கள், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம், 2009.
- பெஞ்சமின் செல்வம், மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம், யாழ்ப்பாணம், 1978.
- விசுவாசத்தின் புதிய விடியல், தேசிய மேய்ப்புப் பணி மாநாடு, 1995.

**தேர்ச்சி 9.0** : கிறிஸ்தவ திருவழிபாட்டில் பங்குபற்றுவதன் வழியாக வாழ்வு வளர்ச்சியடைகிறது என்பதை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : விசுவாசத்தை வளர்க்க திருவழிபாட்டின் பங்களிப்பை ஆராய்வர்.

**பாடவேளைகள்** : 12

**கற்றல் பேறுகள்** :

- ஆரம்பகால திருச்சபையின் திருவழிபாடு பற்றிக் கற்பர்.
- கீழைத்தேய சபைகளின் திருவழிபாட்டு முறைகளையும் மேலைத்தேய சபைகளின் திருவழிபாட்டு முறைகளையும் கற்றறிவர்.
- கத்தோலிக்க திருச்சபையில் வெவ்வேறு வழிபாட்டு மரபுகள் உள்ளன என ஏற்றுக்கொள்வர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி:

## 9.1.1. தொடக்க கால கிறிஸ்தவக் குழுவும் திருவழிபாடும்

- திருச்சபை அதன் ஆரம்பகாலம் தொடக்கம் வழிபாட்டு முறையைக் கொண்டிருந்தது. இவ்வழிபாட்டின் பல அம்சங்கள் யூத, கிரேக்க, உரோம பண்பாடுகளைத் தழுவியிருந்தன என்பது வெளிப்படையான ஒன்றாகும். திருவிவிலியத்தில் திருத்தூதர் பணி நூலும் புனித பவுலின் திருமுகங்களும் இதற்கான உதாரணங்களாக உள்ளன. திருத்தூதர்களும் யூத கிறிஸ்தவர்களும் யூத கோவிலுக்கே சென்றனர்.

  ''*ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள். பேருவகையோடும், எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள்.*'' (தி.ப. 2:46)

  ''*ஒருநாள் இறைவேண்டல் செய்யும் நேரமாகிய பிற்பகல் மூன்று மணிக்குப் பேதுருவும் யோவானும் கோவிலுக்குச் சென்றனர்.*'' (தி.ப. 3:1)

  ''*நீர் யூதராயிருந்தும் யூத முறைப்படி நடவாமல் பிற இனத்தாரின் முறைப்படி நடக்கிறீரே! அப்படியிருக்க பிற இனத்தார்* யூத முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென நீர் எப்படிக் கட்டாயப்படுத்தலாம்?' என்று கேட்டேன்.'' (கலா. 2:14)

- ஆரம்ப கால திருச்சபையின் வழிபாட்டில் அக்காலத்தில் நிலவிய யூத, கிரேக்க வழிபாட்டுப் பண்புகள், மரபுகள் ஆகியவையும் உரோமை மரபுகளும் தழுவியமைக்கப்பட்டு கிறிஸ்தவ மயமாக்கப்பட்டன.

### யூத கலாசாரத்தின் தாக்கங்கள்

- ஏழு நாட்களைக் கொண்ட வாரம், ஞாயிறு தினத்துக்கு மாற்றப்பட்ட சபத் தினம், விசுவாசிகளின் மன்றாட்டு, இறைவார்த்தை வழிபாடு, அப்பம் பிட்கும் வழிபாடு, பாஸ்கா விழா, பெந்தக்கோஸ்து விழா, இறைபுகழ்மாலை மன்றாட்டு நேரம், புகழ்ச்சிப் பாடல் ஆகியவற்றை இங்கு குறிப்பிடலாம்.

**கிரேக்க கலாசாரத்தின் தாக்கம்**

- திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான சொற்கள் (Liturgy, Eucharist, Mystery), வளர்ந்தோருக்கான திருமுழுக்கு வழிபாடுகளில் சேர்க்கப்பட்ட தைலம் பூசுதல், தீய ஆவிகளை விரட்டுதல், முழு இரவுத் திருமுழுக்கு, திருமுழுக்கை திருவிழிப்புக் கொண்டாட்டமாக்குதல், மன்றாட்டு மாலை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.
  **உதாரணம்:** Kyrie Eleison

**உரோமை மரபுகளின் தாக்கங்கள்**

- உரோமைய மரபுகளின் தாக்கங்களாக திருப்பலி ஆடைகள், விளக்குகள், தூபம் பயன்படுத்தல், திருவழிபாட்டு மன்றாட்டுகள், இலத்தீன் மொழி, கிறகோரியரின் இசை, குறிப்பிட்ட சில திருமண, மரணச் சடங்கு முறைகள் ஆகியன குறிப்பிடத்தக்கவை.
- எனினும், திருப்பலியின் முக்கிய இரு பகுதிகளான
  i) இறைவார்த்தை வழிபாடு
  ii) நற்கருணை வழிபாடு
  என்பன யூத மரபிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும்.

**திருத்தூதர் கால நற்கருணை வழிபாடு**

- திருத்தூதர் காலம் எனப்படுகின்ற முதலாவது நூற்றாண்டில் உணவு விருந்துகளோடு உள்ளடக்கப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.
- அவ்வாறே கிறிஸ்து நிறைவேற்றிய முதலாவது அப்பம் பிட்கும் வழிபாடும் பாஸ்கா விருந்தும் தொடர்புபடுத்தப்பட்டன.
- கிரேக்க மொழியில் ''அகபே'' (Agape) எனும் பெயர் இந்த அப்பம் பிட்டலோடு தொடர்புடைய உணவு விருந்துக்குக் கொடுக்கப்பட்டது. ''அன்பின்'' விருந்து என்பது இதன் அர்த்தமாகும். பிறருக்கு இரக்கம் காட்டுதல், ஒற்றுமையாக வாழ்தல் ஆகியன இறைவனுக்குச் செலுத்தும் ஆராதனையின் பண்பெனக் கருதப்பட்டதோடு இந்த உணவு விருந்து வழிபாட்டு முறையின் ஒரு அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- திருத்தூதர் கால திருவழிபாடு மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும்.
  i) இறைவார்த்தை வழிபாடு
  ii) ''அகபே'' உணவு விருந்து
  iii) அப்பம் பிட்கும் வழிபாடு
  என்பனவாகும்.
- அப்பம் பிட்கும் வழிபாட்டுக்கு ஆரம்ப கால கிறிஸ்தவ மக்கள் தத்தமது உணவையும் பானத்தையும் எடுத்துக்கொண்டு ஒரு வீட்டில் ஒன்றுகூடினர். தாம் கொண்டு வந்தவற்றைத் தமக்குள்ளே பகிர்ந்து உண்டனர். இதன் பின்பு குடும்பத்தில் உள்ள மூத்தவர் அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் எடுத்து அதன்மீது நன்றிகூறி அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் கிறிஸ்துவின் திருவுடலாகவும் திரு இரத்தமாகவும் மாற்றினார். பின்பு அப்பத்தைப் பிட்டு ஒன்று கூடியிருந்தவர்களுக்கு உண்பதற்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. கூடியிருந்தவர்கள் கிண்ணத்தையெடுத்து அருந்திய பின் குழுத் தலைவர் திரு உரை நிகழ்த்தினார். திரு உரையின் இறுதியில் பாடல் ஒன்றினைப் பாடி வழிபாட்டை முடித்தனர். வழிபாட்டில் பங்குபற்றியவர்கள் தத்தமது வீடுகளிலிருந்து வருகை தராதவர்களுக்காக உணவு விருந்தின் ஒரு பகுதியை எடுத்துச் சென்றனர். இவ்வாறாக, உணவும் பானமும் மட்டுமே எடுத்துச் செல்லப்பட்டது. அப்பமும் திராட்சை இரசமும் அல்ல.

**அருளடையாளங்கள்**

- **திருமுழுக்கு**
- இன்று போல் அன்றும் திருச்சபைக்குள் நுழைகின்ற வாயில் திருமுழுக்காகும். தற்காலத்தைப் போன்று அன்று பக்தியான வழிபாடுகள் வளர்ச்சியடைந்திருந்தமையால் திருமுழுக்கை வழங்கும் முறை மிகவும் எளிமையானதாயிருந்தது. திருமுழுக்கை வழங்கும் அதிகாரம் திருத்தூதர்களுக்கு மட்டுமல்ல ஏனையோருக்கும் இருந்தது.
  **உதாரணம்:**
  - எத்தியோப்பிய அரச அலுவலர் திருத்தொண்டர் பிலிப்புவினால் திருமுழுக்குப் பெற்றார்.
  - அனனியா எனும் சீடர் புனித பவுலுக்குத் திருமுழுக்கு வழங்கினார்.
  - திருத்தூதர் பணிகள் 10:48 கொர்னேலியுவின் இல்லத்தில்....
  - கி.பி. 30-70ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு வழங்கப்பட்டது (தி.ப. 2:38, 10:48; கொலோ. 2:12).
- இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருமுழுக்கு ''திருத்தூதரின் படிப்பினைகள்'' நூல்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இங்கு திருமுழுக்குப் பெறவிருப்பவர்கள் அனைவருக்கும் நீண்ட காலம் நல்வழியையும், தீய வழியையும் கற்பித்தனர். இங்கு,
  - திருமுழுக்குப் பெறுவதற்கு முன் ஒருசந்தி கடைப்பிடித்தல் வேண்டும்.
  - ''பிதா, சுதன், தூய ஆவியின் பெயராலே'' திருமுழுக்கு வழங்கப்பட்டது.
  - நீரில் மூழ்கச் செய்து திருமுழுக்கு வழங்குதல் பொது வழக்கிலிருந்தது.
  - தண்ணீரைத் தலையில் ஊற்றுவதும் திருமுழுக்காகும்.
- அப்படியானால் திருத்தூதர் காலத்தில் திருமுழுக்கு வழிபாடு முதல் அரைப் பகுதியில் இருந்ததைவிட பிற்பகுதியில் வேறுபாடுகளுக்குள்ளானது.

- **உறுதிப்பூசுதல் அல்லது கைகளை வைக்கும் வழிபாடு**
- திருத்தூதர்களின் காலத்தில் திருமுழுக்கின் வழியாக திருச்சபையில் சேர்ந்த புதியவர்களின் மீது திருத்தூதர்கள் தமது கைகளை வைத்து தூய ஆவியை வழங்கினர். பொதுவாக இவ்வழிபாடு திருமுழுக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே நிறைவேற்றப்பட்டது. இது ''கைகளை வைக்கும் வழிபாடு'' எனவும் அழைக்கப்பட்டது. ஐந்தாம் நூற்றாண்டிலே இதற்கு உறுதிப்பூசுதல் எனும் பெயர் உபயோகிக்கப்பட்டது. இதன் விசேட பண்பு என்னவெனில் இவ்வழிபாட்டை திருத்தூதர்களும், திருத்தூதர் அதிகாரத்தைப் பெற்றவர்களுமே வழங்க முடியும்.
- **ஒப்புரவு அருளடையாளம்**
- பாவங்களை மன்னிக்கும் அதிகாரமும் அதனை மன்னிக்காத அதிகாரமும் கிறிஸ்துவினாலேயே சீடர்களுக்கு வழங்கப்பட்டது (யோவா. 20:23).
- ஆரம்ப கால முதல் திருச்சபை இவ்வதிகாரத்தை செயற்படுத்தி வந்ததைக் காணலாம்.
  **உதாரணம்:**
  - அனனியாவும் சப்பிராவும் (தி.ப. 5ஆம் அதிகாரம்).
  - தூய ஆவியாரின் வல்லமையை பணங்கொடுத்து வாங்க நினைத்த சீமோனை பேதுரு கண்டித்தல் (தி.ப. 8:9-24).
  - புனித யாக்கோபுவின் திருமுகத்தில் பாவிகளுக்குத் தங்கள் கைகளைத் தூய்மை யாக்கவும், உள்ளங்களைத் தூய்மையாக்கவும் செய்யப்படும் எச்சரிக்கை.
- திருத்தூதர் காலத்தில் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெறுவதற்காக இதய பூர்வமான மனஸ்தாபம் மட்டும் அல்ல, தாம் செய்த பாவங்களை உச்சரிப்பதும் முக்கியமாகும் (1யோவா. 8:10; யாக். 5:6).
- ஆரம்ப காலத்தில் சிலை வழிபாடு, கொலை செய்தல், தகாத உறவு ஆகிய பாவங்களை மன்னிப்பதற்கு திருச்சபை கடும்போக்கைக் கொண்டிருந்தாலும் இரண்டாம் நூற்றாண்டில் இந்த கடுமையான சட்டம் எளிதாக்கப்பட்டது.

- **நோயில்பூசுதல்**
- கிறிஸ்துவின் காலத்திலும் நோயாளருக்குத் தைலம் பூசுதல் ஒரு பழக்கமாக இருந்ததென நற்செய்தியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அவர்கள் அனேகமான தீய ஆவிகளை விரட்டியும் பல நோயாளிகளைத் தைலம் பூசி குணமடையச் செய்தனர் (மாற். 6:13). திருத்தூதர்களின் காலத்திலும் இப்பழக்கம் திருச்சபையில் இருந்ததாக புனித யாக்கோபுவின் திருமுகத்தில் கூறப்பட்டுள்ளது (யாக். 5:14-16).

- **குருத்துவம்**
- திருத்தூதர்களின் காலத்தில் குருத்துவம் எனும் அருளடையாளம் தொடர்பான வழிபாடு மிக எளிமையாகக் காணப்பட்டது. இதில் விசேட அம்சமாக குருத்துவம் பெறுபவர் மீது திருத்தூதர்களோ அல்லது திருத்தூதர்களின் பிரதிநிதி ஒருவரோ கைகளை வைத்தலும், அவர்களுக்காகச் செபிப்பதுமாகும் (தி.ப. 6:6; 1திமொ. 4:14; 2திமொ. 1:6).
- இரண்டாம் நூற்றாண்டில் உரோமையில் குருத்துவத்தை வழங்குதல் பற்றி புனித ஹிப்போலிரஸ் அடிகளாரின் ''திருத்தூதரின் பண்பாடு'' எனும் நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

### 9.1.2. கீழைத்தேய சபைகளின் திருவழிபாட்டு முறைகள்

- கி.பி. 395இல் முதலாவது தியடோசியஸ் எனும் பேரரசனின் காலத்தின் பின்பு நிருவாக மாற்றமொன்று உரோமை பேரரசில் ஏற்பட்டது. கி.பி. நான்காம் நூற்றாண்டின் பின்னர் கொன்ஸ்தாந்திநோபிளில் (துருக்கிய - ஸ்தாம்புல்) தோன்றிப் பரவிய வழிபாடுகள் கீழைத்தேய திருவழிபாடுகளென அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் மென்மேலும் கீழைத்தேயத்தில் நிலையங்கள் உருவாகின.

**கீழைத்தேய கத்தோலிக்க வழிபாடுகள்**

- கொன்ஸ்தாந்திநோபிள் (துருக்கி)
- அலெக்சாந்திரியா (எகிப்து + வட ஆபிரிக்கா)
- அந்தியோக்கியா (சீரியா)
- ஆர்மேனியா

- இவ்வழிபாடுகளின் முக்கிய பண்பு என்னவெனில், அவை பண்பாட்டு மயமாக்கப்பட்டமையாகும். கீழைத்தேய திருப்பலிக்காக $3^1/_2$ மணித்தியாலங்கள் செலவிடப்பட்டது (கொப்திக் திருப்பலி). இங்கு திருப்பலியில் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் நிகழ்த்துவதன் வழியாக ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துவதாகும். திருப்பலி நடாத்தும் விதம் வேறுபட்டதாகும். இதற்கான காரணம் பண்பாட்டுத் தாக்கமாகும்.
- கீழைத்தேய வாசகங்கள் நூல் முறைப்படி வாசிக்கப்பட்டன. இங்கு மொழிநடை கற்றலானபடியால் முன் கற்கையொன்று அவசியமாகிறது. கீழைத்தேய வழிபாடுகளில் கவனம் 100% இருக்க வேண்டும். கீழைத்தேய எண்ணக்கருவுக்கிணங்க நேரத்துக்குச் செல்வதென்றால் திருப்பலிக்கு முன் செல்வதாகும். இதனால் பல்வேறு பணிகளை நிறைவேற்றுகின்ற இறைபணியாளர் தமது பணிகளை உயர் பண்புசார் தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- எப்பொழுதும் மணியை ஒலிக்கச் செய்வது திருவழிபாட்டில் அதிக சம்பிரதாயமான தன்மையை எடுத்துக் காட்டுகிறது. பாடுவதில் சிறந்து விளங்கிய விசேட பண்பானது உரத்துப் பாடுவதாகும். இவ்வழிபாட்டில் விசேட அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டன. அதிகமாக தூபம் காட்டுதல், ஒளி, விளக்குப் பவனியுடன் அலங்காரமான பவனியும் இங்கு சிறந்து விளங்கியது.

- சித்திரக்கலை இங்கு சிறப்புமிக்கதாகக் காணப்பட்டது (Icons). இச்சித்திரக் கலையில் முப்பரிமாண படங்களைக் காண்பது கடினமாயிருந்தது. இவை பரந்த சித்திரங்களாக முன்வைக்கப்பட்டிருந்தன. கேத்திர கணித வடிவங்களாக சித்திரங்களும் மிதக்கும் வடிவத்திலானவையும் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சித்திரங்களுக்குள் சமனிலைத் தன்மை, புரியாத தன்மை என்பனவும் ஒழுங்கு முறையான வர்ண சேர்க்கையும் உள்ளது. உருவங்களை வரையும்போது கண்கள் மிகப் பெரிதாக வரையப்பட்டிருப்பதோடு வாயும் மூக்கும் மிகச் சிறியதாக வரையப்பட்டுள்ளன. உடலும் விரல்களும் மெல்லியதாக வரையப்பட்டுள்ளன. கண்களில் விசேட குவிவுத்தன்மை இல்லை.
- இவை முன்வைக்கும் கருத்துக்கள் சில உள்ளன. மீட்பின் மறைபொருளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரகசியங்கள் இவற்றில் முக்கியமானவையாகும். சமதள சித்திர ஆக்கங்கள் இவற்றை ஊடுருவிச் செல்ல வேண்டுமெனக் கருதப்பட்டன. வர்ணம் பற்றிய கருத்துக்களில் பெரும்பாலும் செப்பு நிறம், தங்க நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளதால் இறைத்தன்மை காட்டப்பட்டுள்ளது. கண்களைக் கொண்டு தியான நிலைத் தன்மையையும் பல விடயங்களை சொந்தமாக்கிக் கொள்ளும் ஆற்றலையும் கொண்டதாக வெளிக்காட்டப்பட்டிருந்தன.
- இங்கு சமயப் படங்களும் தேவதாயின் சுரூபங்களும் அதிகமாகக் காணக்கூடிய தாயிருந்தன.
- இவ்வழிபாடுகளில் பண்பாட்டு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆலயங்களில் கட்டட நிர்மாணக்கலை மிகப் பழைமை வாய்ந்ததாகும். பழைமை வாய்ந்த ஆடை அணிகலன்களையும் காணக்கூடியதாயிருந்தது.

### 9.1.3. மேலைத்தேய சபைகளின் திருவழிபாட்டு முறைகள்

- மேலைத்தேய கத்தோலிக்க வழிபாடுகளில் முக்கிய நிலையமாக உரோமை விளங்கியது.

**மேலைத்தேய கத்தோலிக்க வழிபாடுகள்**

↓

உரோமை

| உரோமை | மிலான் | ஸ்பானியா | பிரான்ஸ் | அயர்லாந்து |
|---|---|---|---|---|
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| உரோமன் | அம்புரோஸ் | ஸ்பானிய | கள்ளிக்கன் | செல்திக் |

- முழுமையாக நோக்கின் மேலைத்தேய வழிபாடுகளுக்கு ஒதுக்கப்படும் காலம் மிகக் குறைவாகும். நேரடியாகவும் சுருக்கமாகவும் கருத்துக்களை வெளிப்படுத்தும் கலாசாரப் பண்பே இதற்கான காரணமாகும்.

- **உரோமை வழிபாடுகளின் விசேட பண்புகள்**

**I) கம்பீரத் தன்மை**

இரு முக்கிய விடயங்கள் உள.

i) சிறந்த முன் ஆயத்தம்

ii) பொது நிலைமையை விட உயர்ந்த பண்புகளைக் கொண்டதாகும்.

**உதாரணம்:**

திருப்பலியின்போது குருவுக்கும், திருத்தொண்டர்களுக்கும் வெவ்வேறாக ஆடைகள் இருந்தன (திரு உடை). இவ்வுடைகளை அணிவதால் கம்பீரமான தோற்றம் இருந்தது. பொருட்களிலும் பழக்கவழக்கங்களிலும் கம்பீரத் தன்மை வெளிப்பட்டமை விசேடமாகும்.

**II) அடக்கமாக இருத்தல்**

மொழியும் ஆடை அணிகலன்களும், நடமாட்டம், பேசுதல் ஆகிய அனைத்துமே அடக்கமாக இருந்தன. இது மிகவும் அமைதியான வழிபாடாகும். பேசும்போது சொற்கள் அடக்கமாக இருக்க வேண்டும்.

**உதாரணம்:** பாடகர் குழுவின் பாடல்கள் (கிறகோறியன் இசை)

**III) அறிவு சார்ந்தவை:**

எமது செபங்களும் திருப்பலியும் அறிவு சார்ந்தவையாகவே உள்ளன. உணர்ச்சிபூர்வமான விடயங்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

**IV) குறுகியது**

மேலைத்தேய நாடுகளின் திருப்பலியில் (உரோமன் வழிபாடுகள்) இன்றியமையாத விடயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன.

- குறிப்பிட்ட நேரத்தில் திருப்பலிக்குச் சமூகமளித்தல் இங்கு காணக்கூடிய சிறப்பியல்பாகும். உரோமன் வழிபாடுகள் நான்காம், ஏழாம் நூற்றாண்டுகளுக் கிடையில் வாழ்ந்த மிகவும் கற்றறிந்த அறிஞர்களினால் எழுதப்பட்டன. இவை காவிய மற்றும் சான்றோர் மொழிநடையில் எழுதப்பட்டன.
- அண்மைக் காலங்களில் தேசிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பொழுது அவற்றின் சான்றோர் மொழிநடை பெரும்பாலும் பேணப்பட்டுள்ளது.

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

- ஆரம்ப கால கிறிஸ்தவ சபையின் திருவழிபாட்டு முறைகளை திருவிவிலியத்தின் துணையுடன் மேலும் பகுத்தாராயுங்கள்.
- கீழைத்தேய திருச்சபையினது திருவழிபாட்டு முறையையும் மேலைத்தேய திருச்சபையின் திருவழிபாட்டு முறையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.
- ஆரம்ப கால கிறிஸ்தவ சபை தொடக்கம் இன்று வரையுள்ள திருவழிபாட்டின் ஆன்மீகத்தன்மை வளர்ச்சியடைந்த விதத்தினைப் பற்றிய குறுங்கட்டுரை ஒன்றைத் தயாரியுங்கள்.

## உசாத்துணை நூல்கள்


- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அமதி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2002.
- ஜேசுதாஸ் தங்கசாமி, திருச்சபை வரலாறு, நாஞ்சில் பதிப்பகம், நாகர் கோயில்.

**தேர்ச்சி 9.0** : கிறிஸ்தவ திருவழிபாட்டில் பங்குபற்றுவதன் வழியாக வாழ்வு வளர்ச்சியடைகிறது என்பதை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம்9.2** : அருளடையாளங்களைப் பெறுவதன் முக்கியத்து வத்தை விளக்குவர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றல் பேறுகள்:**

- அருளடையாளங்கள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டது என்பதை விளங்கிக் கொள்வர்.
- கிறிஸ்துவே முதன்மையான அருளடையாளம் என்பதை அறிந்து கொள்வர்.
- கிறிஸ்தவர்கள் திருமுழுக்கு அழைப்புக்கு சான்று பகர்வதற்கு முயற்சி செய்வர்.
- நற்கருணை வழியாக மற்றவர்களை ஒற்றுமையான வாழ்க்கைக்கு இட்டுச் செல்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**9.2.1. கிறிஸ்துவே அருளடையாளங்களின் ஊற்று**

**அறிமுகம்**

- அனைத்து அருளடையாளங்களும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளன என்ற உண்மையை நாம் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். அருளடையாளங்கள் யாவும் கிறிஸ்துவின் பெயராலேயே அளிக்கப்படுவதோடு, கிறிஸ்துவே அங்கு முக்கியமாகச் செயற்படுபவருமாவார். எனவே, கிறிஸ்தவர்கள் அருளடையாளங்களை உரிமையாக்கிக் கொள்வதற்கான வழி திறந்தே உள்ளது. இவ்வாறாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அருளடையாளங்களை வழங்குவதற்கான நோக்கத்தைப் பற்றியும் நாம் எமது கவனத்தைச் செலுத்துவது மிக முக்கியமாகும்.
- திருச்சபையின் அங்கத்துவத்தைப் பெற்று இயேசுக் கிறிஸ்துவோடு இணைந்து கொள்வதால் எமது ஆன்மா வளர்ச்சியடைவதோடு இதன் வழியாக நிறைவை நோக்கிச் செல்வதற்கும் எமக்குப் பேருதவியாகவுள்ளது.
  *''ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்.'' (மத். 5:48)*

- மேலும், இந்நிறைவை உரிமையாக்கிக் கொள்வதற்கு முயற்சிப்பதோடு அவரோடு இணைந்தும் இருத்தல் வேண்டும்.
  *''உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்.'' (யோவா. 11:25)*

  *''நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்.'' (யோவா. 10:11)*
- கிறிஸ்து மைய தன்மையுடன் ஆரம்பித்துச் செல்லும் மனித வாழ்வு தூய்மையடையும். இதற்காக, கிறிஸ்துவின் செயற்பாட்டிற்குள் தூய ஆவியின் வல்லமையால் அல்லது அருள்களினால் ஊட்டம் பெறுவதற்கு விசுவாசிகளுக்குச் சந்தர்ப்பம் அருளப்படுகிறது.

- கிறிஸ்துவின் மறையுடலை வளர்க்கும் பொறுப்போடிணைவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் என நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அழைப்பென்றும் விபரிக்கலாம். வாழ்வில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காக அழைப்பு விடுக்கும் அருளடையாளங்கள் கிறிஸ்துவுக்குள் அதனை மென்மேலும் உறுதிப்படுத்துவதற்கான அழைப்பு விடுக்கின்றது. சக்கேயுவின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டமை, கனானியப் பெண்ணின் சொந்த வாழ்வில் மாற்றம் ஏற்படல் என்பனவற்றை உதாரணங்களாக முன்வைக்கலாம்.
*‘‘சக்கேயு எழுந்து நின்று, ‘ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன்; எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்’ என்று அவரிடம் கூறினார்.’’ (லூக். 19:8-9)*

*‘‘அப்பெண் தம் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் சென்று மக்களிடம், ‘நான் சொன்ன எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ!’ என்றார். அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு இயேசுவிடம் வந்தார்கள்.’’ (யோவா. 4:28-30)*

**இயேசுக்கிறிஸ்துவே முழுமுதல் அருளடையாளமாவார் (Primordial Sacrament)**

- கிறிஸ்துவே இறைவனின் அருளடையாளமென்பதை புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடியும். புதிய ஏற்பாட்டில் உள்ள அவருடைய சொற்களும் செயல்களும் இறைவனையும் அவரது வல்லமையையும் இருப்பையும் எடுத்துக் காட்டும் முக்கிய அடையாளமாக விளங்கிக் கொள்வதற்கு அழைப்பு விடுக்கின்றது. மேலும், இறைவனின் எல்லையில்லா அன்பையும் இரக்கத்தையும் பராமரிப்பையும் காட்டுவதைக் காணக்கூடியதான அடையாளமாக இயேசுக் கிறிஸ்துவைக் கருத முடியும்.
- இவ்வாறே அவருடைய முழு வாழ்வைப் போன்று மறைதூதுப் பணியும் இறைவனின் வல்லமையான செயலும் மேலும் விபரிக்கப்படுகின்றது. இங்கு கிறிஸ்துவின் அருளடையாள வாழ்வு பற்றியும் எமது கவனத்தைச் செலுத்துவது முக்கியமானதொரு விடயமாகும். (2கொரி. 4; கொலோ. 1:1-5; எபி. 1:1-2; 1யோவா. 1:1)
- இதனைப் போன்றே மனுவுருவாதலின்போது முழு மனுக்குலத்திற்கும் தமது இறையன்பை வெளிப்படுத்துவதற்காக முற்பட்ட இறைவன் முழு மனுக்குலத்தோடும் இவ்வாறு நேரடியாகத் தொடர்பு கொண்டாரென திருவிவிலியம் எமக்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இறை-மனித உறவை மென்மேலும் நிரந்தரமாக்குவதைப் போன்றே உறுதிப்படுத்தவும் இது சிறந்த சந்தர்ப்பமாகும். இறைவனின் எல்லையில்லா தனி அன்பின் சுபாவத்தை மனிதனில் எல்லையற்ற விதமாக ஈடுபடுத்துவதன் வழியாக மனித வாழ்வை அதனுள் இணைப்பதற்கும் உதவியாக உள்ளது.
- இயேசு இறைவனின் அருளடையாளம் என இன்னும் அதிகமாக விளங்கிக் கொள்வதற்கு புதிய ஏற்பாட்டு இறையியலில் ‘‘மறைபொருள்’’ (Mystery) பற்றிய சிந்தனையைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் மறைவாயிருக்கும் ஒன்றை வெளிப்படுத்துவதை விளக்குவதற்கு இச்சொல் பயன்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டில் இது மறைவாயிருக்கும் ஒரு உண்மையை அல்ல, கிறிஸ்துவில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட இறை அன்பைக் குறிப்பதாக இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (எபி.1:1-2). புனித பவுல் எபேசு, கொலோசை எனும் நகரங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதிய திருமுகங்கள் இதற்கான மிகச் சிறந்த உதாரணங்களாகும் (எபே. 1:9-10; கொலோ. 1:20, 1:26, 27, 2:2). இயேசுக்கிறிஸ்துவில் இறையன்பும் இறைவல்லமையும் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது.
- தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் வாழ்வில் ‘‘மறைபொருள்’’ இறைவனைக் குறித்தது. அதற்குப்பின் இறைவனின் ஞானம், திருவுளம், இறைத்திட்டம் ஆகியவற்றையும் குறித்துள்ளது (1கொரி. 2:7-12; கொலோ. 1:26-27; எபே. 1:9-10). இவ்வாறு இறைவனின் மீட்புத்திட்டத்தின் முழுமைக்கும் ‘‘மறைபொருள்’’ எனும் சொல் பயன்படுத்தப்பட்டது.

- இவ்வாறாக வரைவிலக்கணப்படுத்துவதற்கு இருந்ததாக சபைத் தந்தையர்களில் புனித தோமஸ் அக்குவைனஸ் எனும் மிகப்பெரிய இறையியலாளர் ஒரு முறை இயேசுக் கிறிஸ்து ''அடிப்படை அருளடையாளம்'' எனக் குறிப்பிட்டுள்ளார் (Fundamental Sacrament). மேலும், அவரது மனித சுபாவம் இறைத்தன்மையின் அடையாளமாவதோடு அது மீட்புக்கான வழியையும் காட்டுகிறதெனவும் குறிப்பிடுகிறார்.
- இயேசுக்கிறிஸ்துவின் அருளடையாள இயல்பிலும் திருச்சபையின் அருளடையாள இயல்பிலும் நிலவுகின்ற நெருங்கிய உறவு பற்றி அவதானத்தைச் செலுத்துகையில் 19ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்ட திருச்சபையியல் மறுமலர்ச்சியிலும் எமது அவதானம் செல்கிறது. இவ்வாறாக, இயேசுக்கிறிஸ்து ''உன்னத அருளடையாளம்'' எனும் கருத்து பரவிய போதிலும் இயேசுக்கிறிஸ்துவே ''முழுமுதல் அருளடையாளம்'' எனும் சிந்தனை 20ஆம் நூற்றாண்டளவில் Carl Feckes என்பவரால் முன்வைக்கப்பட்டது. மேலும், எல்லா அருளடையாளங்களும் அவரில் தங்கியிருப்பதாக உறுதிப்படுத்தலாம். ஒவ்வொரு அருளடையாளமும் முக்கியமாக இந்த அத்திவாரத்தின் மீது உறுதிப்படுத்தப்படுகிறதென்பது நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய உண்மையாகும்.
- கிறிஸ்து இறைச் சந்திப்பின் அருளடையாளம் எனும் நூலில் இறையியலாளர் எட்வட் ஸ்கிலபெக்ஸ் வரலாற்று இயேசு இறைவனின் முழுமுதல் அருளடையாளம் எனக் குறிப்பிடுகிறார். வரலாற்றில் இயேசுவைச் சந்தித்தவர்கள் இறைவனையே சந்தித்தார்கள். வரலாற்றில் உயிருள்ள இறைவனின் அன்புப் பிரசன்னம் கிறிஸ்துவில் வெளிப்பட்டது.

**திருச்சபை: இயேசுக்கிறிஸ்துவின் அடிப்படை அருளடையாளம் (Fundamental Sacrament)**

- இறைவனின் அளப்பரிய படைப்பு முழுமையடையும் வகையில் தூய ஆவியின் வல்லமையினுள் மனித வர்க்கத்தின் நல்வாழ்வுக்கான மறைதூதுப்பணியை உயிர்த்த கிறிஸ்து நிறைவேற்றினார். இவை யாவும் இறைவனின் மகிமைக்காக நிகழ்த்தப்படுகின்ற செயற்பாடாகும்.
- திருச்சபை முதல் திருத்தூதரின் சபை என அழைக்கப்பட்டது. இவ்வடிப்படை சபை உன்னிப்பாகத் தெரிவதற்கான விசேட தன்மை யாதெனில், கிறிஸ்துவை மையமாகக் கொண்டமையாகும். மேலும், அவர்மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளதோடு, அவருக்குள் ஊட்டம் பெற்று அவருடைய கடமைப் பொறுப்புகளை முன்னெடுத்தும் செல்வதாகும். இந்த கிறிஸ்துவின் பணியை அவரது திருத்தூதர்களின் வழியாக செயலாற்றலோடு முன்னெடுத்துச் சென்று வளர்ப்பது தூய ஆவியின் வழிநடத்துதல் வழியாகவே என்பதை ஒருபோதும் மறக்க முடியாது. இயேசுக்கிறிஸ்துவின் பிரசன்னம் உண்மையாகவே பிரதிபலிக்கும் விதத்தில் இச்சபை தூய ஆவியின் வல்லமையினால் புதிய வடிவம் பெற்றுள்ளமை சிறப்பாக அவதானிக்கக் கூடிய உண்மையாகும்.
- புனித பவுல் எபேசியருக்கும், பிலிப்பியருக்கும் எழுதிய திருமுகங்களில் குறிப்பிட்டுள்ளபடி இயேசுக்கிறிஸ்து திருச்சபையின் தலையாவார். இக்கருத்து புதிய ஏற்பாட்டில் விசேடமான முறையில் பாரம்பரியமாக வந்ததோடு திருச்சபை கிறிஸ்துவில் நிரந்தரமாக தங்கியிருப்பதாகவும் அவர் நல்லாயனாகவும் மணமகனாகவும் இருப்பதாகவும் வலியுறுத்தியது. மேலும், திருச்சபையின் அரண் எனவும் பொருள் கொள்ளலாம். கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையிலுள்ள பிணைப்பு அவர்மீது கட்டியெழுப்பப்படுகிறது. ''தங்கியிருத்தல்'' என்பது தொடர்பாக நினைவூட்டப்படும். அதேபோன்று, இருக்கின்ற நெருங்கிய உறவு தங்கியிருத்தலையும் அடிப்படை கிறிஸ்து என்பதையும் சிறந்த முறையில் வெளிப்படுத்தப்படுகின்றது. இத்தங்கியிருத்தல் விசுவாசிகளுக்கு மீட்பைப் பெற்றுக் கொள்வதற்கு வழியாகவும் உதவியாகவும் உள்ளது. மேலும், திருச்சபையானது இப்பணி மட்டில் இறைவார்த்தையை வெளிப்படுத்துதலும் அருளடையாளங்களை வழங்குவதன் வழியாக கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழ விசுவாசிகளுக்கு அழைப்பு விடுக்கின்றது.

அருளடையாளங்களின் வழியாக ஆழமானதும் நெருக்கமானதும் புதுமையானதும் ஆக வெளிப்படுத்தப்படுகின்ற இறையன்பையும் மிகப் பாதுகாப்பான தன்மையையும் மேலும் உருவாக்குகின்றது.

- இறைவார்த்தைக்கு முதலிடம் வழங்குவதோடு இறைவார்த்தையில் முதிர்ச்சி பெறுவதற்கும் பாரம்பரியங்களை திருச்சபை இவ்வாறு செயற்படுத்துவதற்கும் தேவையான ஆற்றலைக் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுள்ளதை எமது உள்ளங்களில் நிலைநாட்டுதல் முக்கியமாகும். அவருடைய உயிருள்ள பிரசன்னத்தைக் காணக்கூடிய பொருத்தமான வசதியுள்ள இடத்தைப் போன்றே செயலாற்றும் அருளையும் அவர் உரிமையாக்கிக் கொண்டார். இதேபோன்று நம்பிக்கையுள்ள பாரம்பரியங்களைக் கொண்ட திருச்சபையாக தமது பொறுப்புக்களை தூய ஆவியானவருக்குள் பயனளிக்க முயற்சி செய்வதோடு மிக ஆழமான உறவினை தூய ஆவியானவரின் வல்லமைக்குள் ஏற்படுத்திக் கொண்டது.
- இறைவனுடைய கரங்களில் உள்ள அடையாளமென மிகச் சிறந்த கடமைப் பொறுப்பில் இது ஈடுபட்டுள்ளதோடு பாரம்பரியங்களின் வழியாக மக்களைத் தூய்மையான தன்மைக்கு இட்டுச் செல்வதில் அதிக முயற்சியையும் இது வகிக்கிறதென்பது வெளிப்படையானதாகும். (இன்றைய உலகில் திருச்சபை எனும் அறிக்கை ஆழமாக இதனைத் தெளிவுறுத்துகிறது.) இறைவனின் அதிகாரத்தைப் பரப்புவதில் பங்களிப்புச் செய்யும் திருச்சபை தொடர்ச்சியாகத் தனது தூதுப்பணிக்குள் ஆற்றல் பெறுவதற்குத் தூய ஆவியின் வல்லமைக்காக திறந்தே இருக்கின்றது. இதனை எட்வட் ஸ்கிலபேக்ஸ் எனும் இறையியலாளர் வெளிப்படுத்தியுள்ளார்.
- திருச்சபையின் அருளடையாள இயல்பு தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவி உள்ளதோடு ஆதர் பிவ்ரான் (1968) என்பவர் திருச்சபையின் பயணிக்கும் தன்மையையும் பற்றிக் கூறியுள்ளார். புனித சிப்பிரியன் (258) திருச்சபையை ''சாக்கிரமேன்டும் யுனிடாடிஸ்'' என அறிமுகப்படுத்துகிறார். புனித அகுஸ்தீனும் திருச்சபையை ''மாபெரும் மீட்பின் செயற்பாட்டில் நேரடியாகத் தொடர்புடையது'' என அறிமுகப்படுத்தியுள்ளார். இரண்டாம் வத்திக்கான் சங்கமும் இது தொடர்பாக கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளது. இயேசுக்கிறிஸ்து, திருச்சபை, ஒவ்வொரு அருளடையாளம் தொடர்பாகவும் கவனத்தைச் செலுத்தியுள்ளது. இயேசுக்கிறிஸ்துவே முழுமுதல் அருளடையாளமென கவனிக்கையில் திருச்சபையை அடிப்படை அருளடையாளமெனக் கருத முடியும். முதன்மையான அருளடையாளம் எனும் கருத்து முதலாவதாக ஒத்தோ செமல்றோன், கால் ரானர் எனும் இறையியலாளர்களி னால் முன்வைக்கப்பட்டது. எனினும், சில தெளிவற்ற தன்மை இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது.
- திருச்சபை கிறிஸ்துவிடமிருந்து புறப்படுவதோடு மீண்டும் அவரிடமே செல்ல வேண்டுமென்பது உண்மையாகும். மேலும், இதனடிப்படையில் முழு மனுக்குலத்திற்குமான அன்புப் பணியின் அடையாளமெனத் திருச்சபை நியமிக்கப்பட்டுள்ளது. வெளியரங்கமாகக் காணக்கூடிய ஓர் அலகாக நிலவினாலும் ஆன்மீக இயல்பும் பொதிந்துள்ளதென்பதையும் அறிவோம். மேலும், இறைவார்த்தையின் தூதுப் பணிக்காக ஈடுபடும் திருச்சபை அதனுள்ளே கிறிஸ்துவின் தூதுப் பணிக்காக நேரடியாகத் தொடர்பு கொள்கிறதென்பது தெளிவாகும். இறைவனின் தந்தைக்குரிய அன்பானது பாவத்தின் சுய உருவத்தைக் கவனியாது மீட்பின் பணிக்காக தொடர்பினைக் கொண்டுள்ளது. இது இறைவனால் கொடுக்கப்பட்டுள்ள ஒரு வழியாகும். இது அனைவரது மீட்புக்காகவும் என்பதை எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது.
- மனுவுருவான மறைபொருளில் இறைத்தூய்மையுள்ள தொடர்பு மிக ஆழமான மனித உருவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருச்சபை மற்றும் ஒவ்வொரு அருளடையாளத்திலும் வெளியே இருக்கின்ற இறைவன் மத்தியஸ்தம் வகிப்பவர் அல்ல, மனித வரலாற்றின் அமைப்பிலே அவருடைய அளவில்லாத அன்பினை வெளிக்காட்டுவதாகும். இதிலிருந்து அவரது உயிருள்ள சுபாவம் பிரதிபலிக்கின்றது.

- இயேசுக்கிறிஸ்து, இறை அருளின் வரலாற்றுச் சின்னம் என்றால், அவரது வரலாற்று அடையாளம் திருச்சபையாக அமைகிறது. திருச்சபை அதன் இயல்பை அருளடையாளங்களின் கொண்டாட்டங்கள் வழியாகவே பெறுகிறது எனக் கூறலாம். திருச்சபை, திருச்சபையாக இருப்பதும் திருவருட்சாதனங்கள் வழியாகவே; அது இறைமக்களுக்கு வழங்குவதும் திருவருட்சாதனங்களே.

## 9.2.2. திருமுழுக்கு அழைப்பு

### கிறிஸ்துவின் திருமுழுக்கு

- கிறிஸ்து தாமாகவே திருமுழுக்கினைப் பெற்றுக் கொண்டார் என்பதை நாம் தெளிவாகக் காணலாம். கிறிஸ்துவின் திருமுழுக்கைப் பற்றிய விளக்கங்களை சமநோக்கு நற்செய்திகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ''அவர் நாசரேத்தூரை விட்டு சபுலோன், நப்தலின் பிரதேசங்களின் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள கப்பர்நகூமுக்கு வந்து அங்கே வாழ்ந்தார். எசாயா இறைவாக்கினரின் கூற்று நிறைவேறும் படியாகவே இவ்வாறு நடந்தது. அதாவது யோர்தானுக்கு அக்கரையிலுள்ள கடற்பகுதியில் அமைந்துள்ள எம்பா செபுலோன் நாடு நப்தலிக்கு அந்நியரின் கலிலேயாவின் இருளில் காலம் போக்கிய மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண இருளைக் கொண்ட தேசத்தில் துன்பப்பட்டவர்களுக்கு ஒளி உதயமாக வேண்டும். அக்காலம் தொடக்கம் இயேசு,

  *''மனம் மாறுங்கள், விண்ணரசு நெருங்கி வந்துள்ளது' எனப் போதிக்கத் தொடங்கினார்.''* *(மத். 3:13-17)*

  *''அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடுவதையும் தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது, 'என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.''*
  *(மாற். 1:9-11)*

  *''மேலும், மக்களெல்லாம் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்த போது வானம் திறந்தது. தூய ஆவி புறாவடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது.அப்பொழுது, 'என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.''* *(லூக். 3:21-22)*

- நான்காவது நற்செய்தியாளர் இந்நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிடாவிட்டாலும் வேறு வகையில் குறிப்பிடுகிறார்.

  *''இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால், இஸ்ரயேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும் பொருட்டே நான் வந்துள்ளேன்; தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தும வருகிறேன்' என்றார். தொடர்ந்து யோவான் சான்றாகக் கூறியது, 'தூய ஆவி புறாவைப் போல வானிலிருந்து இறங்கி இவர்மீது இருந்ததைக் கண்டேன்.'''*
  *(யோவா. 1:31-32)*

- மாற்கு 1:9-11இல் அறிவித்திருப்பது இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்கு யோவானால் திருமுழுக்குப் பெற்றார் எனும் சம்பவமாகும். இச்சந்தர்ப்பத்தில் வானிலிருந்து வெளிவந்த, 'என் அன்பார்ந்த மகன் நீயே' எனும் குரலொலியின் வழியாக கிறிஸ்துவின் அழைப்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

- கிறிஸ்துவின் இந்த அழைப்பைப் பற்றிய சொற்கள் உச்சரிக்கப்படுவது பழைய ஏற்பாட்டு மொழியலாகும். இச்சொற்களினால் எமக்குத் தரப்படுகின்ற கருத்தென்ன? 'நீர் என் மைந்தர்' (தி.பா. 2:7): ஆண்டவர் ஆணையிட்டு உரைத்ததை நான் அறிவிக்கிறேன். 'இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன்; நான் தேர்ந்து கொண்டவர் அவர்; அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது; அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன்; அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்' (எசா. 42:1). அழைப்பினை வெளிப்படுத்துவதற்காக (தி.பா. 2:3) 'அவர்கள் பூட்டிய தளைகளைத் தகர்ப்போம்' 'நாம் விடுதலையைப் பெறுவோம்' என அவர்கள் கூறுகிறார்கள். 'இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன்; நான் தேரந்து கொண்டவர் அவர்; அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது; அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன்; அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்' (எசா. 42:1). இறைவனை இங்கு தொடர்புபடுத்தியது ஏன்? திருப்பாடல் இலக்கம் 2 என்பது அபிஷேகம் செய்யும் திருப்பாடலாகும் (இது அரசர் பற்றிய திருப்பாடலாகும்). சில வேளைகளில் அரசரொருவரை அபிஷேகம் செய்யும்போது பாடப்படும் பாடலாகும்.
- நாசரேத்தூர் இயேசு பழைய இஸ்ரயேல் அரசர்களைப் போன்ற அரசர் அல்ல என இறைவன் வெளிப்படுத்தியுள்ளார். ஊழியரான அரசராக இல்லாவிடினும் துன்புறும் அரசரென அவர் கூறியுள்ளார். 'என் அன்பாரந்த மகன் நீயே...' என்பது துன்புறும் ஊழியர் எனக் கொள்ளப்படும். 'உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்' எனும் பகுதியின் தொடர்புக்கு இதுவே காரணமாகும்.
- இயேசு திருமுழுக்குப் பெற்றதைத் தொடர்ந்து அவருக்கு சோதனைகள் எழத்தொடங்கின. ஏனைய நற்செய்திகளில் குறிப்பிடப்படுவதைப் போன்று, இயேசு வல்லமையைப் பயன்படுத்தி கல் அப்பமாகும்படியும், விண்ணகத் தூதர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு மகிமையடைவதற்கும், பொருட் செல்வங்களின் முன்னிலையில் வணங்குவதற்கும் அலகை விரும்பியதை நாமறிவோம். பொருட் செல்வம், வல்லமை, மகிமை என்பன அரசரொருவரைச் சார்ந்த பண்புகளாகும். இவற்றினால் அரசரொருவரின் தனித்துவம் வெளிப்படுகிறது. இதன்படி வல்லமை, பொருள்கள், மகிமை என்பனவற்றினால் ஆட்சி செய்த இஸ்ரயேல் அரசர்கள் போன்ற அரசராவதற்கு இயேசுவும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார் என்பது எமக்கு விளங்குகின்றது. எனினும், இயேசு தமது திருமுழுக்கின் அழைப்பாகிய ஊழியரான அரசராகும் அழைப்புக்கு நம்பிக்கைக்குரியவராவதன் வழியாக இவ்வாறான அரசத்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார்.
- ''அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடுவதையும் தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது, 'என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது'' (மாற். 1:9-11). அவ்வாறே, ''செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் அவரை அணுகிச் சென்று அவரிடம், 'போதகரே, நாங்கள் கேட்பதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறோம்' என்றார்கள். அவர் அவர்களிடம், 'நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள்?' என்று கேட்டார். அவர்கள் அவரை நோக்கி, 'நீர் அரியணில் இருக்கும்போது எங்களுக்குள் ஒருவர் உமது வலப்புறமும் இன்னொருவர் இடப்புறமும் அமர்ந்து கொள்ள எங்களுக்கு அருளும்' என்று வேண்டினர். இயேசுவோ அவர்களிடம் 'நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? நான் பெறும் திருமுழுக்கை உங்களால் பெற இயலுமா?' என்று கேட்டார். அவர்கள் அவரிடம், 'இயலும்' என்று சொல்ல, இயேசு அவர்களை நோக்கி, 'நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள்; நான் பெறும் திருமுழுக்கையும் நீங்கள் பெறுவீர்கள்.

ஆனால், என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவது எனது செயல் அல்ல; மாறாக, இவ்விடங்கள் யாருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவர்களுக்கே அருளப்படும்' என்று கூறினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த பத்துப் பேரும் யாக்கோபு மீதும் யோவான் கோபங் கொள்ளத் தொடங்கினர். இயேசு அவர்களை வரவழைத்து அவர்களிடம், 'பிற இனத்தவரிடையே தலைவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். அவர்களுள் பெரியவர்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். ஆனால், உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்'' (மாற். 10:35-43).

- கிறிஸ்தவ அடையாளத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கையில், 'திருமுழுக்கின் அழைப்பு' பற்றிய கவனத்தைச் செலுத்த வேண்டும். கிறிஸ்தவ வாழ்வின் விதை திருமுழுக்காகும். பரவசப் பேச்சும் வல்ல செயல் செய்வதும் கிறிஸ்தவ அடையாளத்தின் முழுமையான அடிப்படை என நாம் அறிவோம். எனவே, திருமுழுக்கின் அழைப்புக்குச் சான் பகர எடுக்கும் உண்மையான முயற்சியானது அன்புள்ள இறைத்தந்தையின் முன்னிலையில் பிரியமான ஒன்றாக உள்ளது. இயேசுக் கிறிஸ்துவை மேலும் மேலும் பிரதிபலிப்பதற்கு எமக்குள் இருக்கும் ஒளியினை ஊட்டம் பெறச் செய்வது அயலவரோடு நாம் ஏற்படுத்திக் கொள்ளும் 'அன்பும் - உறவும்' ஆகும் என்பதை நாம் மறக்கலாகாது. திருமுழுக்கின் அழைப்பினால் குருத்துவ, மேய்ப்பு, இறைவாக்கு ஆகிய பணிகளை நாம் வாழும் சூழலில் செயற்படுத்துவது எமது முக்கிய பொறுப்பாகும்.

## கிறிஸ்தவர்களான எமது குருத்துவ பங்களிப்பு

- எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆசிரியர் கிறிஸ்துவின் குருத்துவப் பணியைப் பற்றி எமக்கு நினைவூட்டுகிறார். குருக்களின் வம்சத்திலிருந்து வராவிட்டாலும் அவர் குரு என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. குரு என்பவர் மத்தியஸ்தம் வகிப்பவராவார். இறை-மனித உறவின் நிகரற்ற மத்தியஸ்த தன்மை அவருடைய மறைதூதுப் பணிக்குள் உன்னிப்பாகத் தெரியக்கூடியதாயிருந்தது. எமது வாழ்க்கையிலும் இந்த மத்தியஸ்த தன்மையை வாழ வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். உறுதிப்பூசுதலின் வழியாக திருமுழுக்கு வழங்குகிற 'குருத்துவ அழைப்பு' பயனளிக்க வேண்டும்.
- சமூகத்திலே இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இடைநிலையாளராக இருக்க முயற்சி செய்தல் எமக்குள்ள முக்கிய பொறுப்பாகும். இதனை சான்று பகரும் பொறுப்பு எனவும் கொள்ளலாம்.

## கிறிஸ்தவர்களாகிய எமது மேய்ப்பு பணி (அரச)

- இது சீடத்துவத்தை (அரச) அடிப்படையாகக் கொண்ட தூதுப் பணியாகும் (மாற். 10:45). ''ஏனெனில், மானிட மகன் தொண்டு ஏற்படுத்துவதற்கல்ல, மாறாக, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்.'' கிறிஸ்தவர்களாக எமக்கு உரிமையான தலைமைத்துவத்தை அனுபவிப்பதற்காக விடுக்கும் அழைப்பு என்பது கவனத்துக்குரியதாகும். ''கிறிஸ்தவ தலைமைத்துவம்'' என்பதை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். இதை இவ்வுலகைச் சார்ந்த மதிப்பீடுகளோடு இணைத்துக் கொள்வது ஞானமற்ற செயலாகும்.
- தத்தமது பெயருக்குப் பின்னால் சில எழுத்துக்களைப் போட்டுக் கொள்வது தலைமைத்துவம் அல்ல. மேலும், சர்வாதிகார செயற்பாடுகளில் நுழைதலும் தலைமைத்துவம் அல்ல என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். யோவான் நற்செய்தியில் 10ஆவது அதிகாரத்துடன் தொடர்புடைய பகுதியில் இதனை விளங்கிக் கொள்வதற்கு முயல்வது காலத்திற்கேற்றதாகும். சரியான தலைமைத்துவம் என்றால் என்ன என்பதை கிறிஸ்துவின் இறுதி இராவுணவுச் சம்பவம் மேலும் விளங்கிக் கொள்ள எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

**கிறிஸ்தவர்களாகிய எமது இறைவாக்குப் பணி**

- இறைவனுக்குப் பதிலாளியாகப் பேசுகின்ற ஒருவர் இறைவாக்கினராவார். ஆண்டவர் எரேமியாவுக்கு அருளிய வாக்கு, ''இவ்வுடன்படிக்கையின் விதிமுறைகளைக் கேட்டு யூதாவின் மக்களுக்கும் எருசலேமில் குடியிருப்போருக்கும் அறிவிப்பாய்'' (எரே. 11:1-2).
- யூதர்களின் அரசர்களாகிய உசியா, யோத்தாம், ஆகாசு, எசேக்கியா என்பவர்களின் காலத்திலும் யோசுவாவின் மகனும் இஸ்ரயேலின் அரசனுமாகிய எரொபாவாமின் காலத்திலும் பெயேரியின் மகன் ஓசேயாவுக்கு ஆண்டவர் அருளிய வாக்கு இதுவே. இறைவன் ஓசேயாவின் வழியாக முதலில் இஸ்ரயேல் மக்களுடன் பேசியபோது இவ்வாறு கூறினார். ''நீ போய் விலைமகள் ஒருத்தியைச் சேர்த்துக் கொள்; வேசிப் பிள்ளைகளைப் பெற்றெடு; ஏனெனில், நாடு ஆண்டவரை விட்டு விலகி, வேசித்தனத்தில் மூழ்கியுள்ளது'' என்றார். அப்படியே அவர் போய் திப்லயிமின் மகளாகிய கோமேரைச் சேர்த்துக் கொண்டார். அவள் கருவுற்று அவருக்கொரு மகனைப் பெற்றெடுத்தாள்'' (ஓசே. 1:1-3).
- இறைவன் செய்தியை எடுத்துச் செல்வது இப்பின்னணியின் மையமாகும். பழைய ஏற்பாட்டைப் பகுப்பாய்வு செய்யும் போது ''செய்தி'' உம் ''அறிவிப்பவன்' என இருவராக விளங்கினாலும் கிறிஸ்துவில் இது முழு நிறைவடைந்தது. அவரே செய்தியாகவும் அறிவிப்பவராகவும் இருந்தார். இது விஷேச சிறந்ததொரு நிலைமையாகும்.
- நாமும் உண்மைக்குச் சான்று பகரும்போது நேர்மைக்காகத் தாகம் கொள்வோமேயானால், நீதிக்காக செயலாற்றுவோமேயானால் இறைவனுடைய வார்த்தையின் கருவிகளாவோம்.
- கிறிஸ்தவ அடையாளத்தை முதிர்ச்சியடையச் செய்ய வேண்டுமேயானால், இக்கடமைகளைச் சரியாக நிறைவேற்றுதல் அத்தியாவசியமாகும். திருமுழுக்கின் வழியாக எமக்குக் கொடுக்கப்படுகின்ற குருத்துவப் பணி மற்றவர்களுக்காகச் செபிப்பதன் மூலம் காணக் கூடியதாக உள்ளது. நாமும் செபிப்பதன் மூலம் இறைத் தந்தையோடு உறவு கொள்ளும்போது எப்பொழுதும் மற்றவர்களையும் நினைத்து அவர்களுக்காக இறையாசீரை வேண்டி நிற்பது முக்கியமாகும்.
- உறுதிப்பூசுதல் எனும் அருளடையாளத்தின் வழியாக இது தொடர்பாக செயலாற்றுவதற்காக நாம் தூய வரங்களினால் ஊட்டம் பெறுவதாக நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்வோம். அதிகமான வேலைப்பழு நிலவுகின்ற இக்கால சமூக அமைப்புக்குள் மத்தியில் வாழ்கின்ற எமக்கு இது பெறுமதி மிக்க அனுபவமாகும். சுயநலமான குணங்களுள் மூழ்கியிருக்கும் எமக்கு சிலவேளைகளில் இதனைச் செய்ய முடியாததாகவும் நினைக்க முடியாத எதிர்மறையான சவாலாகவும் இருக்கலாம்.
- இறைவனுக்காகப் பேசுவதற்கும், செயலாற்றுவதற்கும் எமக்குச் சந்தரப்பம் தரப்படாவிடினும் அதனை நாமே நம்மைக் கேட்டு அறிய வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் எமது தனிப்பட்ட இலாபத்தை முன்னிட்டு அதற்காக இறைவனை ஒரு சிறு நேரத்திலாவது மறக்க நாம் தூண்டப்படுவதில்லையா என்பது முக்கியமான கேள்வியாகும்.
- இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டு நாம் செய்யக் கூடிய இறைவாக்குப் பணியை முறையாகச் செய்ய வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளல் முக்கியமாகும்.
- ''தலைவன் ஊழியன்'' தலைமைத்துவம் பணியேற்பதற்கல்ல, பணிபுரிவதற்கேயாகும். பிரான்சிஸ் அசிசியினுடைய முன்மாதிரிகையான வாழ்க்கை இதனை எமக்கு மென்மேலும் உறுதிப்படுத்திக் காட்டும் விடயமாகும். ''அன்பும் தியாகமும்'' என்பதனடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட பணியின் கருவியாக எல்லாக் கிறிஸ்தவர்களின் வாழ்வும் மாற்றம்பெற வேண்டும். இதன் வழியாக திருமுழுக்கின் அழைப்பான மேய்ப்புப் பணியும் நிறைவேற்றப்படுவதனை நாம் அறிவோம்.

- ‘‘யோவான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தார். நீங்களோ இன்னும் சில நாள்களில் தூய ஆவியினால் திருமுழுக்குப் பெறுவீர்கள்’’ என்று கூறினார். திருத்தூதர்கள் பணி 1:5 திருவிவிலியம் எமக்கு விளக்கமாக நினைவூட்டுவதாவது, இயேசுக்கிறிஸ்துவால் தூய ஆவிக்குள் நாம் பெறுகின்ற ஆற்றலும் சக்தியுமாகும். கிறிஸ்தவர்களாகிய எமது அடையாளத்தை முழுமையாக நிறைவேற்றுவது தூய ஆவிக்குள்ளேயாகும். எனவே, தூய ஆவியின் வல்லமை பெருக்கெடுத்தும் எம்முள் செயலாற்றுவது, ‘‘தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால், விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி!’’ (லூக். 11:13) இருத்தல் மிக முக்கியமாகும். ஆனால், தூய அவியாரைப் பழித்துரைப்பவர் மன்னிப்புப் பெறமாட்டார் (லூக். 12:8-12).
- இறுதியாக நாம் விளங்கிக் கொள்வதாவது, கிறிஸ்தவ அடையாளம் என்பது, ‘‘அன்பில் இணைக்கப்பட இடப்படும் பலமுள்ள அத்திவாரமாகும்’’.

### 9.2.3. நற்கருணையும் ஒற்றுமையும்

**நற்கருணையைச் சுற்றி நாம் ஒன்றுகூடும்போது**

*‘‘இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல்.... இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள். இது... உடன்படிக்கையின் இரத்தம்.’’மத். 26:26-29)*

*‘‘எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்.’’ (லூக். 22:19; 1கொரி. 11:23-25)*

- நற்கருணை மைய ஆராதனை வழிபாடுகளின் அடிப்படையாக இருப்பது இம் மறைபொருளான இவ்வாக்கியங்களாகும். கிறிஸ்துவைச் சுற்றி ஒன்றுகூடிய திருத்தூதரின் குழுமத்தின் புதிய வழிக்கான திருவிருந்து வழிபாட்டின் புதிய சம்பிரதாயத்தை ஏற்படுத்திய இந்த இரக்கமுள்ள வல்லமையுள்ள கட்டளை கத்தோலிக்க திருச்சபையில் மட்டுமல்ல, வேறு கிறிஸ்தவ சபைகளுக்குள்ளும் இன்று தொடர்ந்து செயற்படுகிறது.

  *‘‘இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்.’’ (மத். 28:20)*

- கிறிஸ்துவின் இந்த உறுதிப்பாடும் மேற்கூறப்பட்ட கட்டளைகளும் ஒன்றிணைகின்ற மாபெரும் மறைபொருளான அருளடையாளமே நற்கருணையாகும். கிறிஸ்துவினுடைய விண்ணேற்றத்துக்குப் பின் தூய ஆவியானவரினால் நிறைவடைந்த திருத்தூதர்களைச் சுற்றி கட்டியெழுப்பப்பட்ட ஆரம்ப கிறிஸ்தவ சபைக்குள் இது சம்பிரதாயமான வழிபாடானது.

  *‘‘அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.’’ (தி.ப. 2:42)*

- பொது இறைவழிபாட்டினுள் ‘‘அப்பம் பிடுதல்’’ நற்கருணை ஆராதனை வழிபாடாக அறிமுகமானது.

  *‘‘ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில தவறாது கூடி வந்தார்கள்; பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள்.’’ (தி.ப. 2:46)*

- ஆரம்ப கால கிறிஸ்தவ சபை நற்கருணையை மையமாகக் கொண்டதோடு அவர்களின் அடிப்படை நோக்கம் இறைவனை புகழ்வதும் அதனோடு தொடர்புடைய சகோதர அன்புமாக இருந்தது.

  *‘‘உன் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து; உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.’’ (மத். 22:36-40)*

- தொடக்க கால கிறிஸ்தவர்களைப் போன்று திருச்சபையும் திருப்பலியின்போது உன்னத இறை ஆராதனையை நிகழ்த்தி இறுதி இராவுணவு வழிபாட்டில் பங்குபற்றத் தமது இறைமக்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. இதில், அர்த்தமுள்ள முறையில் பங்குபற்றுவதற்காக நற்கருணையின் மட்டில் விசுவாசத்தை ஆழமாக்குவது முக்கியமாகும்.

## பழைய ஏற்பாட்டில் இறைமக்கள்

- எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு செங்கடலைக் கடந்து வெளியேறிச் சென்ற மக்கள் சீனாய் மலையடிவாரத்தில் ''இறைமக்கள்'' எனும் நிலையைப் பெற்றார்கள்.

  *''எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்.''*
  *(வி.ப. 19:6)*

  *''மக்கள் அனைவரும் ஒரே குரலாக ஆண்டவர் கூறியபடியே அனைத்தும் செய்வோம்.'' (வி.ப. 19:8)*

- இது இரு சாராரைச் சார்ந்த உடன்படிக்கையாகும். இவ்வுடன்படிக்கைக்கேற்ப இறைவன் அவர்களை ''மன்னா'' எனும் உணவினால் போஷித்ததோடு பல்வேறு ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்தும் வந்ததோடு செங்கடலைக் கடக்கச் செய்து வெளியேற்றப்பட்ட அவர்களுக்கு வழிகாட்டியதோடு ஆபிரகாமுக்கு வாக்களித்த நாட்டை நோக்கியும் வழிநடத்திச் சென்றார். மெசியா பற்றிய எண்ணக் கருவில் அடிக்கடி இறைவாக்கினர் வழியாக மீட்பின் எதிர்பார்ப்பை உயிரூட்டம் பெறச் செய்து அவர்களைப் பலப்படுத்தினார். மக்களும் பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதிலும், பலிகள் நிறைவேற்றுவதிலும், துன்பங்களின்போது புலம்புவதும் சிலவேளைகளில் முறையிடுவதும், முணுமுணுத்தும் இறைவனைச் சுற்றி ஒன்று கூடியிருந்தனர். இவ் விடுதலை நினைவுகூர்ந்து பாஸ்கா விழா உணவு மேசையைச் சுற்றி ஒவ்வொரு வருடமும் இந்த இறை மக்கள் ஒன்று கூடினர்.

## புதிய ஏற்பாட்டில் இறைமக்கள்

- உடன்படிக்கையின் மக்களாக விடுதலைபெற்ற விழாவினைக் கொண்டாடிய யூத மக்களின் பலி உணவாக, தலைப்பேறும் மாசற்ற செம்மறி ஆட்டுக்குட்டியுமாயிருந்தது. யோவான் நற்செய்திக்கமைய நிசான் மாதம் 13ஆம் திகதி அதாவது புளியாத அப்பப் பண்டிகையின் முதலாம் நாள் இயேசுவும் தமது திருத்தூதரோடு எருசலேமுக்கு வந்து பாஸ்காப் பலிக்கு ஆயத்தம் செய்வதற்காக மேல்மாடியில் ஒன்றுகூடினர். அவர்கள் அவ்விரவிலேயே உணவு மேசையைச் சுற்றி ஒன்றுகூடி அப்பத்தை உண்டு இரசத்தையும் பருகினர். இயேசு அக்குழுவினரின் தலைவராகவும் குருவாகவும் இருந்து அப்பத்தைப் பிட்டு பகிர்ந்தளித்தார்.
- எனினும் வேறு நாட்களைப் போலன்றித் தமது உடலையும் இரத்தத்தையும் வழங்கினார்.
- திருப்பலியைப் பற்றிக் கலந்துரையாடுகையில்மாற்ற முடியாத உண்மைகள் சில உண்டென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். திருப்பலியில் உபயோகப்படுத்தப்படும் அப்பம் திராட்சை இரசத்துக்காக வேறு எந்த மாற்றுப்பொருளையும் எடுக்க முடியாது. மேலும், திராட்சை இரசம் இயற்கையானதாக இருக்க வேண்டியதோடு வேறு எப்பொருளும் கலக்கப்படக் கூடாதென்பதும் நாம் அறிந்ததே.

- திருப்பலியை ஒரு உணவாக விளங்கிக் கொள்ள முடியுமென்பது நாம் அறிந்ததாகும். மக்களின் செயற்பாடுள்ள பங்களிப்பு இங்கு மிகவும் முக்கியமானதாகும் என்பது பிரதிபலிக்கின்றது. சிலவேளைகளில் உண்மையாக மக்கள் மத்தியில் இதைப் பற்றிப் பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுவதைக் காணலாம். முழுமையாகத் திருப்பலியில் பங்குபற்றாது நற்கருணையைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்பவர்களும் இருப்பதோடு, நற்கருணையைப் பெறாதவர்களும் அதனைக் குறைவாக நினைப்பவர்களும் இருக்கின்றனர். இங்கு நற்கருணையில் உயிருடன் எழுந்தருளியிருக்கின்ற இயேசுவைப் பெற்றுக்கொள்ளும்போது அருளப்படுகின்ற ஆன்மீக சக்தியைக் கவனிப்பதில்லை. ஆன்மீக சக்தியைத் திருப்பலிக்கு முன்னும் திருப்பலியின்போதும் சரியான முறையில் ஆயத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், இது தொடர்பாக சட்டம் கூறுவதாவது, ''திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் முழங்காலிலிருந்தோ அல்லது நின்று கொண்டு இயேசுவைப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தரப்பம் உள்ளது. மேலும், தம் வலது கையிலும் பக்தியோடு நற்கருணையைப் பெற முடியும்.
- கிறிஸ்தவர்களாகிய நாம் எமக்கு அளவில்லாத இறை அன்பினால் வழங்கப்பட்ட அனைத்துக்குமாக நன்று கூறுவதற்கு உள்ள முக்கியமான வழி நற்கருணையாகும். அதுபோன்று நற்கருணையில் இயேசுக்கிறிஸ்து பிரசன்னமாகவும் உயிருள்ளவராகவும் எழுந்தருளியுள்ளதை நாம் அறிவோம். இதனாலேயே, மக்கள் நற்கருணையைச் சுற்றி ஒன்றுகூடுவர். நற்கருணையை உணவாகக் கொடுத்த சந்தர்ப்பங்களை வரலாறு எமக்கு ஞாபகப்படுத்துகிறது.
- ''மிடியாதோர் தேயி'' (இறை நடுநிலையாளர்) எனும் சுற்றுமடலில் நற்கருணைக்குச் செய்யும் வணக்க ஆராதனைகளைப் போன்று அதனோடு தொடர்புள்ளதாயுள்ள பல்வேறு பக்தி முயற்சிகளில் எமது கவனத்தைச் செலுத்துகிறது. மேலும், நோயாளிகளுக்கும் மரணத் தருவாயில் உள்ளவர்களுக்கும் நற்கருணையை உணவாக வழங்கி வலுவூட்ட வேண்டும். நற்கருணையை வைப்புச் செய்வதன் நோக்கம் இதுவேயாகும். பின்னர் இது மக்களது ஆராதனைக்கும், மரியாதைக்கும், புகழ்ச்சிக்கும் உள்ளாகியது.
- இரண்டாவது யோவான் பவுல் திருத்தந்தையினால் 2003ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுமடலாகிய ''நற்கருணையின் புனிதத்துவம்'' (எக்லோசியாத எயுக்கரசிதியா) என்பதற்கேற்ப நற்கருணை மிகவும் உன்னத நிலையையடைவது திருச்சபையைத் தூய்மைப்படுத்தும் முக்கிய வழி என்பதனாலாகும்.
- ''மிஸ்றேரியும் பீதேயி'' (விசுவாசத்தின் மறைபொருள்) எனும் சுற்றுமடலில் திருப்பலி கிறிஸ்தவர்களின் மையம் என உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்தவ வாழ்வின் மையத் தன்மையைப் பற்றி மேலும் ஆராயும் சுற்றுமடல் விசேடமாக நற்கருணை பற்றிய மறைபொருள் நாம் பங்குபற்றும் பொது வழிபாட்டின் இதயமென உறுதிப்படுத்துகின்றது. எமது நம்பிக்கையோடு இறைவனை வழிபட உள்ள முதன்மையும் முக்கியத்துவமுமான வழி திருப்பலியாகும். ''இறை வழிபாடு'' எனும் இரண்டாம் வத்திக்கான் ஏடு இல. 10உம் இதற்குச் சான்று பகரும்.
- ''நற்கருணையில் நம்பிக்கையுள்ளவர்கள் கிறிஸ்துவிடம் சக்திமிக்க அன்பினால் ஈர்க்கப்படுவர். இது அன்புத் தீயில் பற்றியெரியும். அவ்வாறே இறை மக்கள் பொது வழிபாடுகளில், விசேடமாக நற்கருணை ஊற்றிலிருந்து இறையருள் எம்மை நோக்கிப் பெருக்கெடுத்துப் பாய்வதோடு, திருச்சபையின் எல்லாச் செயற்பாடுகளினதும் நோக்கமான இயேசுக் கிறிஸ்துவில் இறைமக்களின் ஆன்மா இறைவனின் மகிமையிலும் உச்சப்பயனை உரிமையாக்கிக் கொள்ள முடியும்.''
- மேலும் நற்கருணையை ஏற்படுத்திய பெரிய வியாழக்கிழமை இறுதி இராவுணவுடன் தொடர்புடைய அறிக்கையொன்றில் கவனத்தைச் செலுத்துவது இங்கு முக்கியமானதாக உள்ளது.

**மத்தேயுவின் அறிக்கை**

- அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்த பொழுது இயேசு அப்பத்தை எடுத்துக் கடவுளைப் போற்றி (எவ்லோகேசாஸ்) அதைப் பிட்டுச் சீடருக்குக் கொடுத்து, ''இதைப் பெற்று உண்ணுங்கள்; இது எனது உடல்'' என்றார். பின்பு, கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி (எவ்ஹறிஸ்தேசாஸ்) அவர்களுக்குக் கொடுத்து, ''இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்; ஏனெனில், இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படம் இரத்தம்'' (மத். 26:26-28). இயேசு இங்கு தன்னுடைய இரத்தத்தை உடன்படிக்கையின் இரத்தம் என அறிமுகப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டில் உயிரப்பலியாக மிருகத்தைக் கொன்று இரத்தத்தை பீடத்தின்மீதும் மக்களின்மீதும தெளித்து உடன்படிக்கையின் நிபந்தனைகளை பாதுகாப்பதாக வாக்குறுதி செய்யப்பட்டது. இவ்வாறு, இறைத்தந்தையினால் உலகின் மீட்புக்காக அனுப்பப்பட்டவரும் பாவ மன்னிப்புக்காக பலியிடப்பட்ட செம்மறி ஆடு தாம் என்பதை உறுதி செய்துள்ளார்.

**மாற்குவின் அறிக்கை**

- அவர்கள் உணவு அருந்துகையில் அவர் அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி (எவிலோகேசாஸ்) அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, ''இதைப் பெற்றுக் கொள்ளுங்கள்; இது னது உடல்'' என்றார். பின்பு அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி (எவ்ஹரிஸ்தெசாஸ்) அவர்களுக்குக் கொடுத்தார். ''இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம்'' (மாற். 14:22-24). பழைய ஏற்பாட்டில் இறைமக்கள் இருபக்க உடன்படிக்கையை மீறினர். எனினும், இறைவன் தமது உடன்படிக்கையை மீறாமல் இறுதியாக தமது ஒரேபேறான மகனை, அதாவது மெசியாவை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவர் தமது திரு இரத்தத்தை சிந்தி இவ்வுடன்படிக்கையை முழுமையடையச் செய்தார்.

**லூக்காவின் அறிக்கை**

- அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து, ''இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல், எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்'' உணவருந்திய பின்பு கிண்ணத்தை எடுத்து, ''இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை'' (லூக். 22:19-20).
- இயேசு இரத்தம் சிந்தியது மனிதருக்காகவே, நீங்களும் அதன் வழியாகப் புதிய உடன்படிக்கையைக் கட்டியெழுப்புகிறீர்கள் என்பதும் மற்றும் இந்த உடன்படிக்கை வழிபாட்டினைத் தொடர்ந்து கொண்டு செல்வதால் எதிர்காலத்தில் அவருடைய உயிரப்பலியை நினைவுகூர வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

**பவுலின் அறிக்கை**

- ஆண்வராகிய இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு ''இது உங்களுக்கான என் உடல், என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்'' என்றார். அப்படியே உணவு அருந்திய பின் கிண்ணத்தையும் எடுத்து, ''இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்'' என்றார் (1கொரி. 11:23-25).
- சில கிறிஸ்தவ சபைகளில் அப்பம் பிட்க முன் உணவு விருந்தொன்று நடைபெறுகின்றது. இது அன்பின் விழா. அதாவது, ''அகபே'' என அழைக்கப்படுகிறது. இயேசுவின் வாழ்க்கைப் பலியின் வழியாக புதிய உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்படுவதாக இதிலிருந்து கருதப்படுகிறது. கிண்ணத்தில் பருகும் போதெல்லாம் இராவுணவுச் சம்பவம் நினைவுகூரப்பட வேண்டுமென்பதாகும்.

- மாற்கு, மத்தேயு நற்செய்திகளில் இயேசு அப்பம், இரசம் என்பனவற்றின் மீது ஆசீர்கூறுவது குறிப்பிடப்படுகின்றது. இது அலெக்சாந்திரியாவின் மரபாகும். லூக்காவும் பவுலும் அப்பம், கிண்ணம் என்பவற்றின் மீது நன்றி கூறுவதாகக் கூறுகின்றனர். இது பலஸ்தீன மரபாகும். ஆசீர்வதிப்பதும் நன்றி கூறுவதும் ஒரே கருத்தையே குறித்து நிற்கின்றன. இவை இரு மரபுகளின் பண்புகளாகும். எனினும், வழிபாடு ஒன்றேயாகும்.இது உடன்படிக்கை மரபுக்கேற்ப இறைவாக்கு நிறைவேற்றப்படுவதாகும். *''இதோ நாள்கள் வருகின்றன. அப்பொழுது நான் இஸ்ரயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வேன். என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன்; அதை அவர்களது உள்ளத்தில் எழுதி வைப்பேன். அவர்களது தீச்செயலை நான் மன்னித்து விடுவேன்; அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவுகூரமாட்டேன்'' (எரே. 31:31-40).*

## யோவான் நற்செய்தி

- யோவான் நற்செய்தியில் (13-17 அதிகாரங்கள்) வாழ்வு தரும் உணவு நானே (யோவா. 6:35-58) எனக் கூறிய போதகரும் தலைவருமாகிய இயேசு இறுதி உணவின் போது கூறிய விடைபெறும் (இறுதி) அறிவுரையாகும். அன்று திருத்தூதர்கள் உணவு மேசையைச் சுற்றி ஒன்று கூடியது இயேசுவோடு சேர்ந்து இறைத்தந்தைக்கு நன்றி கூறுவதற்காகும். இயேசு மனிதனின் பாவத்துக்காக இரத்தம் சிந்தி சிலுவையில் மரித்து, உயிர்த்தது - பாவங்களை மன்னிக்கும் பலியாகி, திரு இரத்தத்தினால் நிலைநாட்டப்பட்ட புதிய உடன்படிக்கையில் சகோதரத்துவத்தை பகிர்ந்து கொள்வதற்கும் பங்குபற்றுவதற்குமேயாகும். எதிர்கால திருச்சபைக்கு எடுத்துச் செல்வதற்கும் - தாழ்மையான தலைமைத்துவத்தைப் பயிற்றுவதற்கும் - இப்பொழுது அவர்களுக்குச் சந்தரப்பம் வழங்குவதைக் காணலாம்.
- இவ்வாறாகப் பயிற்றப்பட்ட திருத்தூதர்கள் குழுமம் தூய ஆவியானவரின் வல்லமையால் முழுமையடைந்த பின்னர் இயேசுவின் தூதுப் பணியைத் தொடங்குவதற்சு ''அப்பம் பிட்டல்'' நிகழ்வை முதன்மையாகக் கொண்டனர். இந்த அப்பம் பிட்டலை திருப்பலியின் வழியாக நிகழ்த்துகின்ற திருச்சபையின் மறைபொருளான அப்பமும் இரசமும் என்பவற்றுள் எழுந்தருளியுள்ள நற்கருணையைச் சுற்றி தமது இறைமக்களை ஒன்று சேர்ப்பது ஆரம்ப திருத்தூதர்கள் குழுமம் அப்பம் பிட்டல் வழியாகப் பெற்றுக்கொண்ட பேறுகளை வழங்குவதற்கேயாகும்.
- விசேடமாக மத்திய காலத்தில் திருச்சபைத் தந்தையர்கள் வழியாக நற்கருணையின் உண்மைத்தன்மைக்கு எதிராக வந்த சவால்களுக்கப் பதில் அளிக்கப்பட்டதோடு, திருச்சங்கங்கள் வழியாகவும் திருச்சபை தனது நம்பிக்கையை நேரடியாக வெளிப்படுத்தியது. அதாவது, கிறிஸ்து தனது திருவுடலையும் இரத்தத்தையும் உயிரப்பலியின் வழியாக நற்கருணைப் பலியாக ஏற்படுத்தினார் என்றும், அதன் உண்மைத் தன்மை அவரோடு ஒன்றித்திருக்கிறது என்பதுமாகும். இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றிய வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு (எபே. 4:13இற்கேற்ப) கிறிஸ்துவினுடைய உயிருள்ள உறுப்புக்களாக ஒன்று சேர வேண்டுமானால் நற்கருணையின் வழியாக அவரைப் போன்று மாற்றமடைய வேண்டும் என்பதாகும்.
- ''லூமென் ஜென்சியும்'' அல்லது ''திருச்சபை'' எனும் கொள்கைத் திரட்டில் திருச்சபை மறைபொருளாக அறிமுகப்படுத்துவதோடு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையிலுள்ள பிணைப்பு அவருடைய பலியையும் நற்கருணையைப் பற்றியும் விபரிப்பதோடு நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் சிகரமும் என அறிமுகப்படுத்துகிறது (இல.37).

- எம்மாவுஸ் நகருக்குச் செல்லும் இரு திருத்தூதர்களின் அழைப்பாகிய, ‘‘எங்களோடு தங்கும்’’ எனும் வாக்கியத்துக்கமைய இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தையினால் வெளியிடப்பட்ட அப்போஸ்தலிக்க மடலில் குறிப்பிடப்படுவது: ‘‘உலகின் ஒளியும் உயிருள்ள இயேசுவும் ஆகிய நற்கருணையானது அவிசுவாசம் எனும் இருளை அகற்றும் ஒளியாக இருக்கின்ற இறை மறைபொருளை அறிமுகப்படுத்துகிறது என்பதாகும்.
- ஆதலால், கிறிஸ்தவர்களாக நாம் திருப்பலியில் பங்குபற்றுவதாயினும், இறைவார்த்தைக்குச் செவிமடுப்பதாயினும் இறைவனுடைய திருவிருந்தில் பங்கேற்பதற்காக நற்கருணையைச் சுற்றி நாம் அனைவரும் தகுந்த ஆயத்தத்துடன் ஒன்றுகூடி இருக்க வேண்டும். ‘‘ஆகவே எவராவது தகுதியற்ற நிலயில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார் (1கொரி. 11:27). எனவே, இது திருச்சபைக்கும் சகோதரருக்கும் எதிராகப் புரியும் குற்றமாகும்.
- இவ்வருளடையாளம் நினைவுகூரலின் சம்பவத்துக்கு மட்டும் ஒரு அடையாளமாக மட்டுப்படுத்தப்பட்டதல்ல. எனவே, இறைமக்களாகிய நாம் இறைவனது திருவிருந்தின் மேசையைச் சுற்றி ஒன்றுகூடும்போது ஒரு குடும்பமாக திருவிருந்தில் பங்கேற்கும்போது எம்மோடு உழைக்கும் சகோதர மக்களுக்கும் தகுதியான கௌரவத்தைக் காட்டுதல் வேண்டும். மனித உரமைகளை நீதியான முறையல் பகிர்ந்து கொள்வதன் வழிழயாக சமூக மீட்புக்காகப் பங்களிப்புச் செய்ய வேண்டும். எமது உழைப்பை செலவழித்து சமூக நன்மையைக் கருதி ஆணவத்தைக் கைவிட வேண்டும். நல்ல சமாரியனின் உவமையின்படி எமது அயலவர்கள் மட்டில் சகோதர அன்போடு செயலாற்றுவதனால் நற்கருணை வாழ்வை சமூகத்தில் உயிருள்ளதாக்குவது புதிய ஏற்பாட்டு இறைமக்களாகிய எமது பொறுப்பாகும்.
- எம்மீது கொண்டுள்ள அளப்பரிய தமது அன்பால் எமக்காகத் தம் வாழ்வைச் சிலுவையில் பலியாக்கிய ஆண்டவரின் உயிர்வாழும் உடலாகத் திருச்சபை திகழ்கிறது. புனித பவுல் கொரிந்து கிறிஸ்தவ சபைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுவதன்படி, இச்சபையினர் விருந்தின் சமூகத் தன்மையை அதிகமாக வலியுறுத்தி, விருந்து குறித்துக் காட்டும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வழங்க வேண்டிய முக்கியத்துவத்தை வழங்கவில்லை. அத்தோடு, கிறிஸ்துவில் ‘‘நினைவுகூருவதற்காக’’ நிறைவேற்றப்படும் சடங்கில் கட்டாயமாக நிலவவேண்டிய அன்பு, பாசம் ஆகிய பண்புகள் குன்றிப்போயின. அன்பிற்குப் புறம்பாக நிகழ்த்தப்படும் இத்தகைய விருந்து இயேசுக்கிறிஸ்துவின் விருந்தை சுயநலத்துக்காகப் பயன்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது (1கொரி. 11:17-37).
- இது சான்று பகர வேண்டிய சந்தரப்பமாக அமைய வேண்டியதோடு அதனை அவமரியாதைக்குட்படுத்தல் பொருத்தமற்றது. இவ்வாறாக, ஒரு சபையாக ஆண்டவருக்குள் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் இருக்கும்போது அவர்களிடையே கட்டாயமாக ஒருமைப்பாட்டின் ஆற்றல் காட்டப்படவேண்டியதோடு, அவரது உயிருள்ள வல்லமைமிக்க பிரசன்னமும் ஒளிர வேண்டும். நற்கருணைத் திருவிருந்தானது அவரைச் சுற்றி மற்றவர்களை ஒன்றுசேர வைக்கிறது. கிறிஸ்தவ வாழ்வின் மையமான திருப்பலியின் வழியாக இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள ஆழமான உறவானது மேலும் வலுவடைந்து முன்னெடுத்துச் செல்வதோடு திருப்பலியின்போதும் ஆண்டவரின் உடலும் இரத்தமும் பகிரப்படுகின்ற ஒரே சபையாக மாற்றமடைகிறது. நற்கருணையின் வழியாக அருளப்படுகின்ற ஆன்மீகம் உண்மையானதும், மக்களின் வாழ்க்கையை மறு உருவமாக மாற்றுவதற்குமான அழைப்பை விடுக்கிறதுமாயிருக்கிறது.

- இவ்வாறு கலந்துரையாடும்போது திருச்சபையானது நற்கருணையை ஒரு கொடையாகப் பெற்றுள்ளதெனக் கூறுகிறது (1கொரி. 11:23; மத். 26:19; மாற். 14:22-23; லூக். 22:14). அவரது வாழ்நாளில் இடம்பெற்ற அனைத்து விருந்துகளும் ஏதோவொரு விதத்தில் இறையாட்சி அண்மித்துள்ளமையைப் பிரதிபலிப்பதாயிருந்தன. திருவிருந்தின் வழியாக வெளிப்படுகிற நட்புறவு இறையாட்சியோடு தொடர்புடையதென்பதை எமக்கு மிகத் தெளிவாக வெளிப்படுத்துவதோடு மீட்பின் மறைபொருளோடு எம்மை ஈடுபடுத்துகிறது.
- அப்பம் பிட்டலின் வழியாகப் பிரதிபலிக்கும் அவரது பிரசன்னமானது அவரது திருத்தூதர்களுக்கு அனுபவத்தைப் பெற வழிகாட்டியது. இவ்வாறாக, ஆண்டவரின் திருவிருந்து ஆண்டவருடைய வார்த்தைகளாலும் செயல்களினாலும் முக்கிய அருளடையாளமாக உயர்த்தப்பட்டது. நற்கருணை எனப்படும் அருளடையாளமானது திருவிருந்துக்கான அடையாளமான குறியீடாக இயேசுவுக்குள் இறைவனின் அளவில்லா அன்போடு விசுவாசிகளை இணைக்கின்ற ஆழமான ஒரு உறவாகும்.
- 1கொரிந்தியர் 11:24, திருத்தூதர் பணிகள் 2:42 ஆகிய திருவிவிலியப் பகுதிகளில் குறிப்பிடப்படும் விதத்தில் நற்கருணை வழிபாடு இரு பெயர்களால் அழைக்கப்படுகிறது: அப்பம் பிட்டல், ஆண்டவரின் திருவிருந்து, ஆரம்ப கிறிஸ்தவ சபையின் சில பண்புகளாவன கற்பித்தல், நட்புறவு, இறைவேண்டல் என்பனவற்றையும் நாம் காணலாம். மேலும், ஆண்டவர் தமது திருத்தூதர்களோடு உட்கொண்ட இராவுணவின்போது நற்கருணையை ஏற்படுத்தல் பற்றிய விளக்கம் கொடுக்கப்படுவதைக் காணலாம் (1கொரி. 15:26; மத். 26:30; மாற். 14:22-26, லூக். 22:14-20). பவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்துக்கேற்ப அவர் சீரியா, அந்தியோக்கியா சபைகளுடன் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தாரென்பது தெளிவாகியுள்ளது. இதன் வழியாக அறிய வருவது யாதெனில், அந்தியோக்கிய சபை சம்பிரதாயங்கள் திருவழிபாட்டின் செயற்பாடுகளிலிருந்து எடுக்கப்பட்டவையென்பது திருவிவிலிய அறிஞர்களின் கருத்தாகும்.
- ஆண்டவரின் திருவிருந்தைப் பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது அது இயேசுக்கிறிஸ்துவின் பாடுகள், மரணம் என்பவற்றோடு தொடர்புடையதாய் நிகழ்ந்ததென்பது தெரிகிறது. இதனால், இறைவனால் எமக்குத் தரப்பட்ட மிகவும் பெறுமதி வாய்ந்த கொடையாக நற்கருணை விளங்குகிறது. திருப்பலியில் பங்குபற்றுதல், நற்கருணையைப் பெற்றுக்கொள்ளல் என்பன விசுவாசிகளுக்கு மற்றவர்களை அன்பு செய்யவும் அவர்களுக்காகத தியாகத்தோடான வாழ்க்கைப் பின்னணியை ஏற்படுத்திக் கொள்ளவும் பெருமளவில் உதவியாகவுள்ளது. ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றும் நாம் மற்றவர்களுக்காக பணிசெய்வதாலும் அவர்களின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிக்கவும் மிக விருப்போடு இருத்தல் வேண்டும். ஆண்டவரின் திருவிருந்தில் அப்பம் பிட்டல் செயற்பாடானது எம்மை சிலுவையில் தமது உயிரைப் பலியாக்கிய கிறிஸ்துவுக்கு வழங்க வேண்டிய மரியாதையையும் பக்தியையும் நாம் செலுத்துகிறோம். எனினும், ஆண்டவரை திருப்பலியின்போது பெற்றுக்கொள்ளும் எமக்கு சரியான விளக்கம் உள்ளதாவென்பது கவனிக்க வேண்டிய விடயமாகும். நற்கருணை அல்லது அன்பின் அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்வதால் மீட்பில் பங்களிப்புச் செய்யும் வாழ்க்கைக்காக நாமும் பங்காளிகளாகலாம்.

- ஆண்டவரின் உடலோடும் இரத்தத்தோடும் உறவு கொள்ளும் மீட்பின் கொடையாகவும் நற்கருணையை அழைக்கலாம். இக்கொடையைத் தருவதற்காக வல்லமையோடு செயற்படுகின்ற தூய ஆவியானவரின் செயற்பாட்டை நாம் ஒருபோதும் மறந்து விடமுடியாது. இக்கொடையின் வழியாக எமது படைப்பாளரான மிக உன்னதரான இறைவனோடு நிரந்தரமாக ஆழமான உறவில் வாழ்வதற்கு எம்மை இட்டுச் செல்கிறது. இதில் எமது பாவ நாட்டத்துக்கு மன்னிப்புப் பெற்றுக் கொள்ளலாம் (மத். 26:28). இவ்வாறாக, இறைவனுக்கு நன்றிப் புகழ் கூறுவதைப் போன்று அவரிடமிருந்து எமக்குக் கிடைக்கின்ற முடிவற்ற மன்னிப்பு, இரக்கம், அன்பு என்பனவற்றில் எமது உள்ளங்களை ஈடுபடுத்துவதற்கான வழியை அமைப்போம்.
- மனிதனது பாவ இயல்பைக் கவனியாது எமக்காகத் தரப்படுகின்ற அருள்களுக்காக நற்கருணையைச் சுற்றி ஒன்றுகூடும் விசுவாசிகளாக நாம் நன்றி கூற வேண்டும்.

**ஒரே அப்பம் ஒரே உடல்**

- நற்கருணை ஒன்றிப்பு வழியாக ஏற்படுகின்ற இந்த விசேட பிணைப்பானது திருச்சபையின் ஒன்றிப்பு உறவுடன் தொடர்புள்ளது. ''நற்கருணையில் திருச்சபை'' எனும் சுற்றுமடலில் இதனைப் பற்றி மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளேன. திருச்சபை என்பது கிறிஸ்துவினுடைய உடலாகும். நாம் ''கிறிஸ்துவோடு'' பயணம் செய்வது ''அவரது உடலோடு'' உறவு கொண்டுள்ள அளவுக்கேற்பவேயாகும். தூய அவியானவரைப் பொழியச் செய்வதன் வழியாக கிறிஸ்து இந்த ஒன்றிப்பை உண்டாக்குவதற்கும் அதனை வளர்ச்சியடையச் செய்வதற்கும் தேவையானவற்றை தந்துள்ளார். தாம் நற்கருணையில் வீற்றிருப்பதன் வழயாக கிறிஸ்து இந்த ஒன்றிப்பை எப்பொழுதும் கட்டியெழுப்புகிறார். எம்மை ஒரே உடலாகச் செய்வதும் இந்த நற்கருணை அப்பமாகும். திருத்தூதரான பவுல் பின்வருமாறு கூறுகிறார்.

  ''*அப்பம் ஒன்றே. ஆதலால், நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான்* பங்குகொள்கிறோம்.''
  (1கொரி. 10:17)
- இயேசுவின் வேண்டலில் வெளிவருகின்ற மிக உயர்ந்த முன்மாதிரிகைக்கேற்ப நற்கருணை மறைபொருளினுள் இயேசு திருச்சபையை ஒன்றிப்பில் வளர்ச்சியடையச் செய்கிறார்.

  ''*எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்.*'' (யோவா. 17:21)
- நற்கருணை திருச்சபையின் ஒன்றிப்பின் அடித்தளமாகவும் மூல வளமும் அதன் வல்லமையை வெளிப்படுத்துவதுமாகவும் உள்ளது. நற்கருணை ஒன்றிப்பின் தூய்மை வெளிப்படுத்துகின்றது. இக்காரணத்தினால் திருப்பலி நடைபெறும்போது அதில் முழுமையாகப் பங்குபற்றல் தொடர்பாக திருச்சபை நிபந்தனைகளை விடுக்கின்றது. இவ்வாறான பல்வேறு முடிவுகள் நற்கருணை ஒன்றிப்பு தொடர்பாக இயேசு எம்மிடம் கேட்கின்ற விசேட நிலைகள் பற்றி முன்னரை விட மிகவும் கவனத்தோடு செயலாற்ற எம்மை இட்டுச் செல்ல வேண்டும்.
- திருப்பலியின் நன்றி மன்றாட்டுப் பகுதியில் திருத்தந்தை மறைமாவட்ட ஆயர்களைக் குறிப்பிட்டு விசுவாசிகளின் ஒன்றிப்பாக மன்றாடப்படுகிறது. இங்கு வெவ்வேறு நிலைகளில் உள்ளவர்களின் ஒன்றிப்பும் அடையாளப்படுத்தப்படுகிறது. இது அன்னியொன்னிய திறந்த மனம், இரக்கம், புரிந்துணர்வு, மன்னித்தல் போன்றவற்றைக் குறித்து நிற்கும் 'ஒன்றிப்பு ஆன்மீகத்தை' வளர்ச்சியடையச் செய்யும் ஒன்றிப்பாகும்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

- அருளடையாளங்கள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டுள்ளமை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கிறிஸ்தவர்கள் தமது திருமுழுக்கு அழைப்புக்கு சான்று பகருவர் எனக் கலந்துரையாடுங்கள்.
- கிறிஸ்துவின் நற்கருணை வழியாக ஒற்றுமையான வாழ்வுக்கு பிறரை ஈடுபடுத்தும் முறை பற்றிக் கலந்துரையாடலொன்றினைக் கட்டியெழுப்புங்கள்.

**உசாத்துணை நூல்கள்**


- அருட்திரு S. யோசப் லயன்ஸ், அருள்வாழ்வு, தூய இராயப்பர் குருத்துவக் கல்லூரி, பெங்களூர், 2007.
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அமதி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2002.
- ஒஸ்வல்ட் கோமிஸ், பெரிய குறிப்பிடம், மறைக்கல்வி நடுநிலையம், கொழும்பு, 2006.
- செ. சூசை மாணிக்கம், நற்செய்தியின் தூதுவர், வைகறை வெளியீடு, திண்டுக்கல், 2008.
- இரண்டாம் வத்திக்கான் சங்க வெளியீடு.

**தேர்ச்சி 9.0 :** கிறிஸ்தவ திருவழிபாட்டில் பங்குபற்றுவதன் வழியாக வாழ்வுவளர்ச்சியடைகிறது என்பதை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**தேர்ச்சி மட்டம் 9.3 :** புதிய கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தூய ஆவியின் முக்கியத்துவத்தை விளக்குவர்.

**பாடவேளைகள் :** 12

**கற்றல் பேறுகள் :**
- உலகில் தூய ஆவியின் செயற்பாட்டை விளங்கிக் கொள்வர்.
- தமது வாழ்க்கையினூடாக தூய ஆவிக்குச் சான்று பகரும் விதத்தினைக் கற்பர்.
- தமது வாழ்க்கையில் தூய ஆவியின் செயற்பாட்டினை விளங்கிக் கொள்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**9.3.1. உலகில் தூய ஆவியின் செயற்பாடு**
**கிறிஸ்தவ அடையாளம் (Identity)**
- நம்பிக்கையின் அடிப்படையில் திருமுழுக்கு எனும் அருளடையாளத்தால் நாம் பெற்றுக்கொண்ட புதிய வாழ்வை ஊட்டம்பெறச் செய்வதற்கும் அதேபோல் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்வதற்கும் தூய ஆவியின் வல்லமை எமக்குத் தேவைப்படுகின்றதென்பது புனித பவுலின் திருமுகங்களை ஆராயும்போது நாம் விளங்கிக்கொள்ளும் உண்மையாகும் (உரோ. 8:1-17). எனினும், தூய ஆவியானவர் செயற்படும்போது அருளப்படுகின்ற கனிகளாவன அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பனவாகும் (கலா. 5:22). ‘‘கடவுளின் தூய ஆவியார்க்குத் துயரம் வருவிக்காதீர்கள். மீட்பு நாளை முன்னிட்டு உங்கள் மீது பொறிக்கப்பட்ட முத்திரையாக அவர் இருக்கிறார்’’ (எபே. 4:30).
- மேலும், தூய ஆவியாரின் பூசுதலால் எமக்கு அருளப்படுகின்ற பொறுப்புக்களையும் கடமைகளையும் குறைவின்றி நிறைவேற்றுவதற்கு மிகவும் உதவியாகவும் உள்ளது. கிறிஸ்துவின் ‘‘ஆன்மா’’ என தூய ஆவியாரை புனித பவுல் வரைவிலக்கணப்படுத்து கிறார். மேலும், அவருக்குச் சான்று பகர்வதற்கான ஊட்டத்தினைப் பெறுவதும் தூய ஆவியாரினாலேயாகும். இதேபோன்று, கிறிஸ்தவ மனப்பாங்குகளை உருவாக்குவதற்கும் இதன் வழியாக கிறிஸ்தவ படிப்பினைகளுக்கேற்ப விசுவாசிகள் வாழ்வதற்கும் வழியை அமைத்துக் கொடுப்பதும் தூய ஆவியாரே என்பதை நாமறிவோம்.
- தூய ஆவியாரின் செயற்பாட்டில் எம்மைப் படைத்தவரான அன்புள்ள இறைவனுக்கும் எமக்குமிடையில் இருக்க வேண்டிய ‘‘அன்புறவை’’ மேலும் உறுதிப்படுத்தும்போது அது வலுவடைந்து உயிருள்ள நித்திய அனுபவமாகிறது. அவ்வாறே, நித்திய வாழ்வை நோக்கி எம்மை இட்டுச் செல்வதும் தூய ஆவியாரேயாவார். எமது வாழ்வை கிறிஸ்துவின் உயிர்ப்போடு இணைத்து உயிரப்பின், ஒளியின் மக்களாக வாழுகின்ற வழியைக் காட்டுவதும், இதன் வழியாக எமது வாழ்க்கைக்குப் புதுத்தன்மையை வழங்குவதும் தூய ஆவியாரேயாவார்.
- மிகத் தெளிவாக அறியக்கூடிய இன்னுமொரு விடயம் யாதெனில், இயேசுவினுடைய திருத்தூதர்களும் பயமின்றி நற்செய்திக்கு சான்று பகரும் ஆற்றலைப் பெற்றதும் தூய ஆவியாரின் வருகையின் பின்னரேயாகும். பெந்தக்கோஸ்து அனுபமென்பது தூய ஆவியார் எமது வாழ்வில் முழுமையாகச் செயலாற்றுவதற்கு இடமளிப்பதாகும். இதன் வழியாக மீட்பின் மறைபொருளில் நாமும் உறுதியாகப் பங்குபற்றலாம். இக்கருத்துக்கள் புனித பவுலின் அனேக திருமுகங்களில் காணப்படுகின்றன.

**கிறிஸ்தவ பொறுப்பு**

- உயிர்த்த கிறிஸ்துவை அனைத்து அருளடையாளங்கிளலும் சந்திக்கலாம் என்பது எமது நம்பிக்கையாகும். ஆகையால், அவருடைய உயிர்ப்பை உறுதியுள்ளதாக எமது வாழ்வோடு இணைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்தல் கிறிஸ்தவர்களாகிய எமது ஒரே பொறுப்பாகும். திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக்கொண்ட அழைப்பு (குருத்துவ, இறைவாக்கு, மேய்ப்புப்பணி) உறுதிப்பூசுதலின் வழியாக மேலும் முதிர்ச்சியையடைய வேண்டுமென்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.
- விசுவாசிகளை முதிரைச்சியடைந்த அங்கத்தவர்களாக செயலாற்றுவதற்கு வழி திறந்துள்ளதோடு இவ்வழைப்பை உறுதியுள்ள வாழ்க்கையாக ஆக்குவதற்கான சந்தர்ப்பம் உதயமாகிறது. எனினும், இங்கு எமது மனதிலிருத்த வேண்டிய இன்னுமொரு விடயம் யாதெனில், தூய வரங்களைப் பெற்றிருப்பினும் எமக்குள் நேர்மையான முயற்சியின் மீதான அடிப்படை பண்புகள் இல்லாவிட்டால் தூய ஆவியாரரின் செயற்பாடு நலிவடைந்து விடும் என்பதாகும். ஆன்மீக வாய்பினை ஏற்படுத்திக் கொள்வதோடு இறையாட்சியைக் கட்டியெழுப்பும் பணியினை இலகுவாக எமது உள்ளங்களில் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். இதன் வழியாக திருமுழுக்கினால் நாம் பெற்ற அழைப்பாகிய குருத்துவ, இறைவாக்கு, மேய்ப்புப் பணிகளை உயிர்பெறச் செய்ய வேண்டும்.
- இறைவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்வது ‘‘கிறிஸ்தவ அடையாளம்’’ என மிக எளிதாக வரைவிலக்கணப்படுத்தலாம். இறைவனுடைய கட்டளைகள் என்றால் என்ன என்பதை முதலில் விளங்கிக் கொள்வது பொருத்தமானதாகும். இறைவனிடமிருந்து வருகின்ற எல்லாக் கட்டளைகளும் ‘‘இதய அன்பு’’ என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் மிகவும் முக்கியமானதாகும். இக்கட்டளைகளை எமக்கிடையில் உயிருள்ளதாக்கிய உயிர்த்த ஆண்டவரோடு நெருக்கமான உறவினை ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.
- கிறிஸ்தவ அடையாளத்தின் (Identity) மையம் உயிர்த்த ஆண்டவராவார். இவ்வடையாளத்தை உரிய முறையில விளங்கிக் கொள்வதற்காக ஆவியின் வல்லமை தேவை என்பது அறிந்த விடயமாகும். தூய ஆவியானவருக்கு எமது வாழ்வில் உள்ள திறந்த தன்மை ‘‘கிறிஸ்து மைய வாழ்வுக்கு’’ எம்மை இட்டுச் செல்கின்றது. கிறிஸ்தவ மறையின் விசேட தன்மை முழுமையாக இதன் அடிப்படையிலேயே கோவைப்படுத்தப்பட்டுள்ளதென்பது உண்மையாகும். உயிர்த்த கிறிஸ்து எம்மோடு வாழ்வதை நாம் உரிமையாக்கிக் கொள்வது அனுபவமாகும். தமது திருத்தூதர்களை ஆற்றல் பெறச் செய்த அவர் ‘‘இருவர் வயல்வெளிக்கு நடந்து சென்றபோது இயேசு அவர்களுக்கு வேற்று உருவில் தோன்றினார் (மாற். 16:12). தற்கால சமூகத்தில் பல்வேறு துன்ப நிலைகளில் சவால்களோடு வாழ்கின்ற எம்மையும் ஆற்றலடையச் செய்கிறார் என்பது தெளிவாகும். இது எமது பலம் வாய்ந்த அனுபவமாகும். ‘‘வழியும் உண்மையும் வாழ்வும் நானே’’ (யோவா. 14:6). இறந்த காலத்தில் மட்டும்ட அல்ல, நிகழ்காலத்தைப் போன்று எதிர்காலத்திலும் எமக்கு அருளப்படுகிற எல்லா அருளடையாளங்களின் வழியாகவும் உயிர்த்த ஆண்டவரை நாம் உறுதியான அனுபவமாக்கிக் கொள்வோம். அவர் எங்களோடு ஏற்படுத்திக் கொள்ளும் ‘‘நெருங்கிய-அன்பு’’ உறவை மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்வது கிறிஸ்தவ அடையாளத்தை மென்மேலும் உறுதியடையச் செய்வதாகும். இது எமது அன்றாட வாழ்க்கைச் சட்டகத்திலே இடம்பெறுகின்றது.
- இறைவன் இஸ்ரயேல் மக்களை அளவில்லாத வகையில் அன்பு செய்தார் என்பது உண்மையாகும். ‘‘பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன்’’ (எசா. 49:15). புதிய இஸ்ரயேல் மக்களாகிய எமக்கும் இவ்வாறே இறை அன்பு உரிமையாகும் என்பது உண்மையாகும். இங்கு நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய இன்னுமொரு விடயம் யாதெனில், இப்பாதுகாப்பானது எமது வாழ்வில் புதியதொரு மாற்றத்தினை உருவாக்குகின்ற

தென்பதாகும். இறைவனை சந்திப்பது எமது வாழ்வை மென்மேலும் செயற்பாடுள்ள வாழ்க்கையாக மாற்றுகிறதென்பது எமது ஆழமான நம்பிக்கையாகும். திருவிவிலியமும் இந்த உண்மையை மேலும் உறுதி செய்கிறது.

- இவ்வாறு அவர் புறப்பட்டுச் சென்று தமஸ்குவை நெருங்கியபோது திடீரென வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்து வீசியது. அவர் தரையில் விழ ''சவுலே ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?'' எனும் குரலொன்றைக் கேட்டார். ''ஆண்டவரே நீர் யார்?'' எனக் கேட்டார். ''நீ துன்புறுத்தும் இயேசு நானே. நீ எழுந்து நகருக்குள் செல்; நீ என்ன செய்ய வேண்டுமென்பது அங்கே உனக்குச் சொல்லப்படும்'' என்றார். அவரோடு பயணம் செய்தோர் இக்குரலைக் கேட்டனர். ஆனார், ஒருவரையும் காணாமல் வாயடைத்து நின்றனர். சவுல் எழுந்து கண்களைத் திறந்தபோது அவரால் எதையும் பார்க்க முடியவில்லை. அவர்கள் அவருடைய கைகளைப் பிடித்து அவரைத் தமஸ்குவிற்கு அழைத்துச் சென்றனர். அவர் மூன்று நாட்கள் பார்வையின்றியும் ஒன்றும் உண்ணாமலும் குடிக்காமலும் இருந்தார் (தி.ப. 9:3-9).
- சவுலின் வாழ்வில் மாற்றத்துக்குக் காரணமான உயிர்த்த ஆண்டவரை அனுபவித்த சம்பவத்தை இங்கு நாம் காணக்கூடியதாயுள்ளது. இச் சக்தி வாய்ந்த அனுபவமானது வாழ்க்கையில் மாற்றத்தினை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல் அழிவை நோக்கிச் சென்ற ஒரு வாழ்வை இறையாட்சியைக் கட்டியெழுப்பும் கருவியாக ஏற்படுத்தியது ஓர் உண்மையாகும்.
- மேலும், ஆண்டவரைச் சந்தித்ததனால் வாழ்வு உறுதியோடு செயற்படுகின்றது என்பதும் விளங்குகின்றது. ஆண்டவரோடு ஏற்படுத்திக் கொள்கின்ற உறவு எமக்குரிய மதிப்பீடுகளைப் போலவே பொறுப்புகள் மீதும் எம்மை ஈர்த்துச் செல்கின்றது.
- அப்பெண் அவரிடம், ''ஐயா, நீர் ஓர் இறைவாக்கினர் எனக் கண்டு கொண்டேன். எங்கள் முன்னோர் இம்மலையில் வழிபட்டு வந்தனர். ஆனால், நீங்கள் எருசலேமில்தான் வழிபட வேண்டும் என்கிறீர்களே'' என்றார். இயேசு அவரிடம் ''அம்மா, என்னை நம்பும் காலம் வருகிறது. அப்போது நீங்கள் தந்தையை இம்மலையிலோ எருசலேமிலோ வழிபட மாட்டீர்கள். யாரை வழிபடுகிறீர்கள் எனத் தெரியாமல் வழிபடுகிறீர்கள். ஆனால், நாங்கள் தெரிந்து வழிபடுகிறோம். யூதரிடமிருந்தே மீட்பு வருகிறது. காலம் வருகிறது. ஏன் வந்தேவிட்டது. அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்'' என்றார். அப்பெண் அவரிடம் ''கிறிஸ்து எனப்படும் மெசியா வருவார் என எனக்குத் தெரியும். அவர் வரும்போது அனைத்தையும் எங்களுக்கு அறிவிப்பார்'' என்றார். இயேசு அவரிடம், ''உம்மோடு பேசும் நானே அவர்'' என்றார் (யோவா. 4:19-26).
- உயிர்த்த ஆண்டவரோடு உறவு கொள்ளும்போது வெளிப்படுத்தப்படுகிற அளவில்லாத இறையன்பும் இறைவிருப்பமும் படிப்படியாக எமக்குள்ளும் பரவி இருக்கும். இயேசுவின் ''நானே'' கூற்றை ஆராய்ந்து பார்க்கும்பொது இதில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் தெளிவாகிறது. ''நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே, நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்'' (யோவா. 15:16).

### 9.3.2. தூய ஆவியும் சான்று பகரலும்

### சான்று பகரல் கிறிஸ்தவ வாழ்வின் ஓர் அம்சமாகும்

- கிறிஸ்தவ அடையாளத்தைப் பக்தியுள்ள மக்கள் தாம் நம்பிக்கை வைத்தவற்றுக்குச் சான்று பகர்வதற்காக மாற்றுவதில் ஈடுபடுவதை நாமறிவோம். சான்று பகரல் என்பது தனியே வார்த்தையைவிட செயலில் காட்டுவதாகும்.
- பேதுரு அவரிடம் ''நீர் என் காலடிகளைக் கழுவ விடமாட்டேன்'' என்றார். இயேசு அவரைப் பார்த்து, ''நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கில்லை'' என்றார் (யோவா. 13:8). அளவற்ற விதத்தில் மன்னிப்பதற்குத் திருத்தூதர்களுக்குக் கற்பித்த கிறிஸ்து சிலுவை மரத்தில் தமது செயற்பாட்டை உறுதிப்படுத்தினாரென்பதை நாமறிவோம். நம்பியவற்றுக்கு சான்று பகர எம்மைச் சக்தி பெறச் செய்பவர் தூய ஆவியாராவார். திருத்தூதர்கள் ஆண்டவர் செய்தவற்றையும் போதித்தவற்றையும் சரியாக விளங்கிக் கொண்டு அதற்குச் சான்று பகர்வதில் ஈடுபடுத்தியதும் தூய ஆவியாரே என்பதை நாம் நம்புகிறோம். தமது வாழ்க்கையையும் ஆண்டவருக்காகத் தியாகம் செய்வதற்குத் தேவையான சக்தியை அவர்கள் பெற்றது தூய ஆவியினாலென்பதை திருவிவிலியம் எமக்கு நினைவூட்டுகிறது.

### தூய ஆவியின் ஆற்றல்

- புனித பவுல் உரோமருக்கு எழுதிய திருமுகத்தில் 8:1-17வரை தூய ஆவியாரின் வல்லமை பற்றிய சிறந்த விளக்கமொன்றை முன்வைப்பதை நாமறிவோம்.
- ''ஆகவே, கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு இனித் தண்டனைத் தீர்ப்பே கிடையாது. ஏனெனில், கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூய ஆவியின் சட்டம் பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்துவிட்டது. ஊனியல்பின் காரணமாய் வலுவற்றிருந்த திருச்சட்டம் செய்ய முடியாத ஒன்றைக் கடவுள் செய்தார். அதாவது, ஊனியல்பு கொண்ட மனிதரைப் போன்றவராய்த் தம்சொந்த மகனை அனுப்பி மனிதரிடமுள்ள பாவத்துக்கு முடிவு கட்டினார். ஊனியல்புக்கேற்ப நடவாமல், ஆவிக்குரிய இயல்புக்கேற்ப நடக்கும் நாம் திருச்சட்டமட்தின் நெறிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவ்வாறு செய்தார். ஏனெனில், ஊனியல்புக்கேற்ப வாழ்வோரின் நாட்டமெல்லாம் அந்த இயல்புக்கு உரியவற்றின்மீதே இருக்கும். ஊனியல் மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது சாவே; ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது வாழ்வும் அமைதியுமாகும். ஏனெனில், ஊனியல் மனநிலை கடவுளுக்குப் பகையானது; அது கடவுளின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருப்பதில்லை. இருக்கவும் முடியாது. ஊனியல்புக்கேற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது. நாம் பிள்ளைகளாயின், உரிமைப்பேறு உடையவர்களாய் இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப் பேறு பெற்றவர்கள். கிறிஸ்துவின் பங்காளிகள். அவருடைய துன்பங்களில் நாம் பங்குபெற வேண்டும்; அப்போது தான் அவரோடு மாட்சியிலும் பங்குபெறுவோம்'' (உரோ. 8:1-17).
- இங்கு கிறிஸ்தவர்களாகிய எமது நம்பிக்கைக்கு முக்கிய இடம் வழங்கப்படுவதோடு திருமுழுக்கு எனும் அருளடையாளத்தின் வழியாக ஆரம்பமாகும் ''புதுவாழ்வுக்கு'' தூய ஆவியாரின் வல்லமை தேவைப்படுவதை நினைவூட்டுகிறது. அவ்வாறே, தூய ஆவியாரைப் பற்றிய சிறந்த அறிவோடு வாழ்வது இறைவனோடு ஆழமான உறவை உரிமையாக்குவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கிறது.
- ''எனவே, இக்கட்டளைகளைப் புறக்கணிப்போர், மனிதரை அல்ல, தம்முடைய தூய ஆவியை உங்களுக்கும் அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர். சகோதர அன்பைப் பற்றி உங்களுக்கு எழுத வேண்டிய தேவையில்லை. ஏனெனில், ஒருவருக்கோருவர் அன்பு செலுத்த, கடவுளிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்டவர் களாய் இருக்கிறீர்கள்'' (1தெச. 4:8-9).

- இறைவனோடு நாம் கட்டியெழுப்பும் ஆழமான, நெருங்கிய உறவுக்காக தூய ஆவியின் வல்லமை உடனுக்குடன் செல்வாக்குச் செலுத்துகிறது என்றே கூறலாம். முன்பு கூறப்பட்டதன்படி திருமுழுக்கின் வழியாகப் பெற்றுக்கொண்ட ‘‘புதுவாழ்வின்’’ அழியாத் தன்மை தூய ஆவியின் வழியாகவே உயர்த்தப்படுகிறது.
- எனவே, திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவராக நாம் வாழும்போது தூய ஆவியானவர் நிலையாக நம்முள் இருந்து புனிதப்படுத்தும் செயலை ஆற்றுகிறார் எனும் நம்பிக்கையில் நாம் வளரவேண்டும். கிறிஸ்தவ வாழ்வு ஆண்டவரின் மீட்பு மறைபொருளுக்குச் சான்று பகரும் வாழ்வாக அமைய தூய ஆவியானவரில் நாம் பெற்றுக் கொள்ளும் ஆற்றலை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. தூய ஆவியாரின் வரங்கள், கொடைகள், கனிகள் ஆகியவற்றின் வழியாக எம் வாழ்வில் தூய ஆவியாரின் ஆற்றல்கள் மட்டில் அவதானத்தைச் செலுத்துவோம்.
- புனித பவுல் கொரிந்து நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதிய முதலாவது திருமுகத்தில் கூறுவதை நாம் அறிய வேண்டும்.

## கொரிந்தியருக்கு எழுதப்பட்ட திருமுகம் (12-14 அதிகாரங்கள்)

- ‘‘அருள் கொடைகள் பல வகையுண்டு; ஆனால், தூய ஆவியார் ஒருவரே. திருத்தொண்டுகளும் பல வகையுண்டு; ஆனால், ஆண்டவர் ஒருவரே. செயல்பாடுகள் பல வகையுண்டு; ஆனால், கடவுள் ஒருவரே. பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. தூய ஆவியார் ஒருவருக்கு ஞானம் நிறைந்த சொல்வளத்தை அருளுகிறார். இன்னொருவருக்கோ அதே ஆவியார் அறிவு செறிந்த சொல்வளத்தை அளிக்கிறார். அதே ஆவியார் வேறொருவருக்கு நம்பிக்கை அருளுகிறார். தூய ஆவியார் ஒருவருக்கு வல்ல செயல் செய்யும் ஆற்றலையும் இன்னொருவருக்கு இறைவாக்குரைக்கும் ஆற்றலையும் மற்றொருவருக்குப் பலவகை பரவசப் பேச்சுப் பேசும் ஆற்றலையும் பிறிதொருவருக்கு அப்பேச்சை விளக்கும் ஆற்றலையும் அருளுகிறார். அந்த ஒரே ஆவியாரே இவற்றையெல்லாம் செயல்படுத்துகிறார்; அவரே தம் விருப்பம்போல ஒவ்வொருவருக்கும் இவற்றைப் பகிர்ந்தளிக்கிறார். நீங்கள் கிறிஸ்துவின் உடல் ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள். இவ்வாறே கடவுள் முதலாவது திருத்தூதர்களையும், இரண்டாவது இறைவாக்கினர்களையும், மூன்றாவது போதகர்களையும், பின்னர் வல்ல செயல் செய்வோரையும், அதன்பின் பிணி தீர்க்கும் அருள்கொடை பெற்றவர்கள், துணை நிற்பவர்கள், தலைமையேற்று நடத்துபவர்கள், பல்வகைப் பரவசப் பேச்சு பேசுகிறவர்கள் ஆகியோரையும் ஏற்படுத்தினார். எல்லோருமே திருத்தூதர்களா? எல்லோருமே இறைவாக்கினர்களா? எல்லோருமே போதகர்களா? எல்லோருமே வல்ல செயல் செய்பவர்களா? இல்லை. எல்லோருமே பிணி தீர்க்கும் அருள் கொடையைப் பெற்றவர்களா? எல்லோருமே பரவசப் பேச்சுப் பேசுபவர்களா? எல்லோருமே விளக்கம் அளிப்பவரா? இல்லையே! எனவே, நீங்கள் மேலான அருள்கொடையையே ஆர்வமாய் நாடுங்கள் (1கொரி. 12:1-31).
- இப்பகுதி ஆன்மீகத்தோடு தொடர்புடையதாகும். கொடைகள் பலவாயினும் ஆவியாரின் வல்லமையுடன் தொடர்புடைய அர்த்தத்தினை இங்கு எடுக்கும் அதேவேளை அவர் செயலாற்றுகையில் எமது வாழ்க்கை தூய ஆவியாரின் வல்லமையினால் ஊட்டம் பெறுவதை ஞாபகப்படுத்துகிறது.
- இப்பகுதி ஆன்மீகத்தோடு தொடர்புடையதாகும். கொடைகள் பலவாயினும் ஆவியாரின் வல்லமையுடன் தொடர்புடைய அர்த்தத்தினை இங்கு எடுக்கும் அதேவேளை அவர் செயலாற்றுகையில் எமது வாழ்க்கை தூய ஆவியாரின் வல்லமையினால் ஊட்டம் பெறுவதை ஞாபகப்படுத்துகிறது.
- ‘‘கிறிஸ்து இயேசுவின் முன்மாதிரிகைக்கேற்ப நீங்கள் ஒரே மனத்தினராய் இருக்குமாறு மன உறுதியையும் ஊக்கத்தையும் தரும் கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக! இவ்வாறு நீங்கள் அனைவரும் ஒருமனப்பட்டு, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவரை ஒருவாய்ப்படப் போற்றிப்புகழ்வீர்கள்’’(உரோ.15:5-6).

- நாம் பெறுகின்ற ஆன்மீகக் கொடைகளின் பல்வேறு தன்மைகளைப் போலவே ஒற்றுமை தொடர்பாகவும் விளக்கமான அறிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும், கொடைகளின்மீது கிறிஸ்தவ வாழ்வு தவறாக மதிப்பீடு செய்யப்படக் கூடாதென்பதும் இங்கு தெளிவாகவுள்ளது. தூய ஆவியின் கொடைகளுக்குப் பணிகின்றவர்களிடம் ஒருபொழுதும் மற்றவர்களை இழிவாகக் கருதும் நிலை உருவாக முடியாது.
- ''கண் கையைப் பார்த்து, நீ எனக்குத் தேவையில்லை என்றோ தலை கால்களைப் பார்த்து நீங்கள் எனக்குத் தேவையில்லை என்றோ சொல்ல முடியாது'' (1கொரி. 12:21).
- கண் - காட்சிகள் காணுகின்ற கிறிஸ்தவ மக்களை அடையாளப்படுத்துகிறது.
  கை - அன்றாட வாழ்க்கைப் பயணத்தில் ஏதாவது பணிபுரிபவர்களாக வரைவிலக்கணப்படுத்தலாம்.
  தலை - தலைமைத்துவத்தில் உள்ளவர்களையோ, தலைமைத்துவம் வகிப்பதற்குத் தகுதி பெற்றவர்களையோ குறிப்பிடலாம்.
  பாதம் - விசேட கொடைகளைப் பெறாமல் இருக்கின்ற சாதாரண கிறிஸ்தவ மக்களாகக் கருதலாம். மேலும், 12:22இல் வலுவற்றவர்களெனக் குறிப்பிடப்படுபவர்கள் சபையில் வாழுகின்ற மிகவும் வலுவற்ற விசுவாசி களைக் குறிக்கின்றதெனலாம்.
- i) திருத்தூதர்கள்:
  உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்றுபகர அவராலேயே அனுப்பப் பட்டவர்களாவர்.
  ii) இறைவாக்கினர்கள்:
  இதன் பின் இறைவாக்கினர் அடுத்த நிலையில் உள்ளதை நாமறிவோம். ''இறைவாக்குச் செல்வாக்குள்ள தன்மை'' என்பதை ஆரம்ப கிறிஸ்தவ சபை கவனம் செலுத்தியுள்ளது வெளிப்படையானது.
  iii) ஆசிரியர்:
  ''அந்தியோக்கிய திருச்சபையில் பர்னபா, நிகர் எனப்படும் சிமியோன், சிரேன் ஊரானாகிய லூக்கியு, குறுநில மன்னன் ஏரோதுவுடன் வளர்ந்த மனாயீன் சவுல் ஆகியோர் இறைவாக்கினராகவும், போதகராகவும் இருந்தனர்''
  (தி.ப. 13:1).
- ''ஆகையால், விண்ணரசு பற்றிக் கற்றுக்கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும வீட்டு உரிமையாளரைப் போல் இருக்கின்றனர் என்று அவர்களிடம் கூறினார்''
  (மத். 13:52).
- ''நான் வானதூதரின் மொழிகளிலும் பேசினாலும் அன்பு எனக்கில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாவேன். இறைவாக்கு உரைக்கும் ஆற்றல் எனக்கு இருப்பினும், மறைபொருள்கள் அனைத்தையும் அறிந்தவனாய் இருப்பினும், அறிவெல்லாம் பெற்றிருப்பினும், மலைகளை இடம்பெயரச் செய்யும் அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும் என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை. அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும்; பொறாமைப்படாது; தற்புகழ்ச்சி கொள்ளாது; இறுமாப்பு அடையாது; அன்பு இழிவானதைச் செய்யாது; தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம்கொடாது; தீங்கு நினையாது. அன்பு தீவினையில் மகிழ்வுறாது; மாறாக உண்மையில் அது மகிழும். அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் நம்பும்; அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்; அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும். இறைவாக்கு உரைக்கும் கொடை ஒழிந்து போம்; பரவசப் பேச்சு பேசும் கொடையும் ஒழிந்து போம்; அறிவும் அழிந்து போம். ஆனால், அன்பு ஒருபோதும் அழியாது. ஏனெனில், நமது அறிவு அரைகுறையானது; அரைகுறையாகவே இறைவாக்கும் உரைக்கிறோம். நிறைவானது வரும்போது அரைகுறையானது ஒழிந்துபோம். நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது
  (1கொரி. 13:1-13).

- இங்கு அன்பின் ஒப்பற்ற இயல்பைக் காணலாம். அன்பில்லாமல் எந்தக் கொடையிலும் பயனில்லை என்பது தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது.
- அன்பு செலுத்த முயலுங்கள். ஆவியார் அருளும் கொடைகளையும் குறிப்பாக இறைவாக்குரைக்கும் கொடையையும் ஆர்வமாய் நாடுங்கள். ஏனெனில், பரவசப் பேச்சு பேசுகிறவர் மக்களிடமல்ல, கடவுளிடமே பேசுகிறார்கள். அவர் பேசுவது எவருக்கும் விளங்குவதில்லை. அவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு மறைபொருள்களைப் பேசுகிறார். ஆனால், இறைவாக்குரைப்பவரோ மக்களிடமே பேசுகிறார். அவர் பேசுவது அவர்களுக்கு வளர்ச்சியையும் ஊக்கத்தையும் ஆறுதலையும் அளிக்கிறது. பரவசப் பேச்சுப் பேசுகிறவர் தம்மை மட்டுமே வளர்ச்சியுறச் செய்கிறார். கடவுளின் வார்த்தை உங்களிடமிருந்தா வந்தது? அல்லது அது உங்களிடம் மட்டுமா வந்தடைந்தது? தாம் ஓர் இறைவாக்கினர் அல்லது தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர் என ஒருவர் நினைத்தால், நான் உங்களுக்கு எழுதுபவற்றை அவர் ஆண்டவரின் கட்டளையாக ஏற்றுக் கொள்ளட்டும். இவற்றை எவராவது ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவரும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார். எனவே, அன்பர்களே! இறைவாக்கு உரைக்க ஆர்வமாய் நாடுங்கள். பரவசப் பேச்சுப் பேசுவதைத் தடுக்காதீர்கள். ஆனால், அனைத்தும் பாங்காகவும் ஒழுங்காகவும் நடைபெற வேண்டும் (1கொரி. 14:1-40).

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு :**
- உலகில் தூய ஆவியின் செயற்பாட்டின் தன்மை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- தூய ஆவிக்குத் தமது வாழ்வின் வழியாகச் சான்று பகரும் முறைகளைப் பற்றிய காரணிகளை விளக்குங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**

- பிலிப்ஸ் இ. யேசுதாசன், பரிசுத்த ஏடுகளைக் கற்றல், அமதி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2002.
- டி. ஜெயராஜ், சே.ச., அப்போஸ்தலர் பணி விளக்கவுரை, அருள்வாக்கு மன்றம், 1990.

**தேர்ச்சி 10.0 :** நவீன சமூக போராட்டங்களின் மத்தியில் மனித நேயத்துடன் செயற்படுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.1 :** மானிட சமூக வாழ்வு பற்றிய கிறிஸ்தவ சிந்தனையை விளக்குவர்.

**பாடவேளைகள் :** 16

**கற்றல் பேறுகள்:**

- இவ்வுலகில் மனிதனாகப் பிறப்பது இறைவன் அளித்த உன்னத கொடை என்பதை அறிந்து மனிதத்துவத்தின் உயரிய தன்மையைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவர்.
- உலகின் நிலைப்பாட்டிலும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதிலும் பெண்களின் தனித்துவத்தையும் பங்களிப்பையும் விளங்கிக்கொண்டு பெண்களை உயர்வாக மதிப்பர். (பெண்களாய் இருப்பதை உயர்வாக மதிப்பர்.)
- மனிதன் தனித்து வாழ முடியாத ஒருவன் என்பதை விளங்கிக் கொண்டு முழுச் சமூக சூழலுடன் இணைந்து நல்லுறவைக் கட்டியெழுப்புவர்.
- சமூக முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்குமாக மனிதன் செயற்பட இறை அழைப்புக் கிடைத்துள்ளது என்பதை விளங்கிக்கொண்டு தமது வாழ்க்கை நிலையையும் சமூக சூழலில் பொதுநன்மைக்காகவும் உயர்வுக்காகவும் செயற்படுவர்.
- மனித அபிவிருத்தி, நிலைப்பாடு, சமூக உயர்வு ஆகிய பகுதிகளை அறிந்து கொண்டு கிறிஸ்தவனாக தமது அதியுயர் பங்களிப்பையும் உதவியையும் பெற்றுக்கொடுப்பர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**10.1.1. மனித மாண்பு**

- ஒவ்வொருவரும் இவ்வுலகில் ஒரு மனிதனாகப் பிறப்பதன் காரணமாக இயல்பாகவே விசேட மாண்பும் உயர்ந்த தன்மையும் உரித்தாகிறது.
- மனிதனின் இருப்பும், முன்னேற்றமும், சமூக செயற்பாடும் பற்றி அவதானிக்கும்போது பிறக்கின்ற சகல மிருகங்களிலும் உயிர்களிலும் பார்க்க அறிவு, ஞானம் கூர்மையான சிந்தனை ஆற்றலும் சிறந்த தொடர்பாடல் போன்றவற்றை நிறைவாகப் பெற்ற உயர்ந்த உயிரினம் மனிதராவர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

**திருவிவிலிய சிந்தனை**

- திருவிவிலியத்தின் சிந்தனைக்கேற்ப மனிதனாக இவ்வுலகில் பிறப்பதனால் விசேடமான பெறுமதியும் கௌரவமும் உண்டு. இறைவனின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட மனிதனின் மிக உயர்ந்த தன்மை பற்றி திருவிவிலியம் முழுவதிலும் மீண்டும் மீண்டும் கூறப்படுகிறது. இது மனிதத் தன்மையின் மிக உயர்ந்த மாண்பு பற்றிய கிறிஸ்தவ கண்ணோட்டத்துக்கும் திருச்சபையின் படிப்பினைகளுக்கும் அடிப்படையாயுள்ளது.
- திருவிவிலியத்தின் சிந்தனைக்கும் கிறிஸ்தவ விசுவாசத்துக்குமேற்ப மனிதன் இறைவனின் உருவாகவும் சாயலாகவும் படைக்கப்பட்ட ஒரு படைப்பாகும். ''மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்'' (தொ.நூ. 1:26). ''கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்'' (தொ.நூ. 1:27). எனவே, இறைவனின் படைப்புகள் அனைத்திலும் முதல் இடமும் கிரீடமும் உரித்தாவது மனிதனுக்கேயாகும்.

- ‘‘மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்? ஆயினும், அவர்களை கடவுளாகிய உமக்குச் சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர்; மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர்; எல்லாவற்றையும் அவர்களின் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்’’ (தி.பா. 8:4-6).
- இறைவன் மனிதனைப் படைத்தபோது அறிவையும், சுதந்திரத்தையும், அழியாத ஆன்மாவையும் மனிதனுக்குக் கொடையாகக் கொடுத்துள்ளார். வேறு படைப்புகளுக்குக் கொடுக்கப்படாத மனிதனுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட இந்த மிக உயர்ந்த தன்மையும், மனிதத் தன்மையின் பெறுமதியும், உத்தம தன்மையும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திருவிவிலியத்தின் சிந்தனைக்கேற்ப அனைத்துப் படைப்புகளிலும் (உயிர்கள்) முதன்மையானதும் அறிவிலும் ஞானத்திலும் நிறைந்து கூர்மையான சிந்தனை ஆற்றலிலும், சிறந்த தொடர்பாடல் முறைகளிலும் முழுமையானவன் மனிதனேயாகும் என்பது கிறிஸ்தவர்களாகிய எமக்குப் புதிதல்ல.

### அறிவு

- மனித அறிவும், ஞானமும் அனைத்து ஞானத்தினது ஊற்றாகியவரும் முழுமையான வருமான இறைவனிடமிருந்தே உருவாகின்றன. படைப்புகளுக்கு இல்லாததும், மனிதன் பெற்றுள்ளதுமான இந்த அறிவு இறை சாயலின் பண்பாகும். அறிவு எனும் இறைவனின் பரிசைப் பயன்படுத்தும் மனிதன் புதிய படைப்புகளை உருவாக்குகிறான். இதன் வழியாக படைப்பாளியாக இறைவனின் படைப்புச் செயலிலும் பங்குபற்றுகிறான். உண்மையானவரும் நன்மையானவருமான இறைவனைத் தேடிச் செல்வதற்கு ஞானத்தின் வழியாக மனித அறிவைப் பயன்படுத்துகிறான். இந்த ஞானத்தில் நிறைவுகாண, ஞானத்தின் ஊற்றும், முழுமையுமானவருமான இறைவனை மன்றாட வேண்டும். ‘‘ஞானத்தையும் அறிவையும்’’ (Wisddom & knowledge) கேட்டு சாலமோன் அரசன் இறைவனிடம் அழுது பிரார்த்தித்தமை மிகச் சிறந்த உதாரணமாகும் (2குறி. 1:10). அறிவுள்ளோராகச் செயற்படுவதற்கு ஞானம் அவசியமாகும். இந்த ஞானம் தூய ஆவியாரிடமிருந்து பெறப்படுகிற கொடை என்பதை திருவிவிலிய சிந்தனை எமக்குக் கற்பிக்கின்றது.

### சுதந்திரம்

- மனிதனிடமுள்ள சுதந்திரம் அல்லது சுதந்திரமான மனச்சான்று அவனிடமுள்ள இறைவனின் சாயலின் அடையாளமாகும். மனிதன் சுதந்திரமாகச் செயலாற்றுவது இறைவனின் விருப்பமாகும். மனச்சான்றின் குரலுக்குச் செவிசாய்த்து நன்மையையும் உண்மையையும் விளங்கிக் கொண்டு இறைவனை நோக்கிப் பயணம் செய்வது இறைவனது திட்டமாகும். ‘‘அவரே தொடக்கத்தில் மனிதரை உண்டாக்கினார்; தங்கள் விருப்புரிமையின்படி செயல்பட அவர்களை விட்டுவிட்டார். நீ விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடி; பற்றுறுதியுடன் நடப்பது உனது விருப்பத்தைப் பொறுத்தது. உனக்கு முன் நீரையும் நெருப்பையும் அவர் வைத்துள்ளார்; உன் கையை நீட்டி உனக்கு விருப்பமானதை எடுத்துக் கொள். மனிதர் முன் வாழ்வும் சாவும் வைக்கப்பட்டுள்ளன. எதை அவர்கள் விரும்புகிறார்களோ அதுவே அவர்களுக்குக் கொடுக்கப்படும் (சீரா. 15:14-17).

### அழியாத ஆன்மா

- மனிதன் உடலோடு மட்டுமல்ல, ஆன்மாவோடும் படைக்கப்பட்டுள்ளான். எனவே, மனிதத்தன்மையில் இறைவனுடைய பிரதிபலிப்பு நன்றாகத் தெரிகிறது. ‘‘அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்’’ (தொ.நூ. 2:7). உடலோடு ஆன்மா இணைந்தது. உடல் மரணத்தின் பின் அழிந்தாலும் ஆன்மா அழியாது. இவ் ஆன்மா மரணத்தின் பின் மீண்டும் இறைவனோடு இணைவது இறைவனின் திட்டமாகும். மனிதனின் நிலையான மகிழ்ச்சியும் அதுவேயாகும். ‘‘என் நெஞ்சம் கடவுள்மீது, உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது; எப்பொழுது நான் கடவுள் முன்னிலையில் வந்து நிற்கப்போகிறேன்?’’ (தி.பா. 42:2).
- திருத்தூதரான புனித பவுலின் இறையியல் சிந்தனையில் மனிதனில் இருக்கும் அழியாத ஆன்மா பற்றி அதிகமாக விளக்குகிறார். மனிதனுக்குள் இறைவனின் ஆவியானவர் பிரசன்னமாக இருப்பதால் மனித உடல் இறைவனின் ஆலயமாகும். எனவே, அது தூய்மையானதாகும். ‘‘நீங்கள் கடவுளுடைய கோலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?’’ (1கொரி. 3:16). இதனைப் போன்று மனித உடல் என்பது தூய ஆவியானவரின் ஆலயமாகும். ‘‘உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல?’’ (1கொரி. 6:19).
- கீழ்ப்படியாமை எனும் பாவத்தினால் இறையருளிலிருந்து விலகி பாவத்தில் விழுந்த பலவீனமான மனிதனுக்கு மீட்பைக் கொடுக்க இறைவன் மனுவுரு எடுத்து மனித உடலோடு இவ்வுலகிற்கு வருகை தந்தார். ‘‘வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்’’ (யோவா. 1:14). எனும் திருவிவிலியப் பகுதி மிகத் தெளிவாக மனுவுரு எடுத்தலின் மறைபொருள் வழியாக மனிதத்தன்மையை மேலும் மிக உயரிய நிலையில் வைத்த இறைவன் தனது மக்களுடன் வாழ்ந்தார். ‘‘வாழும் கடவுளின் கோவில் நாமே. என் உறைவிடத்தை அவர்கள் நடுவில் நிறுவுவேன். அவர்கள் நடுவே நான் உலவுவேன். நானே அவர்கள் கடவுள்! அவர்கள் என் மக்கள்!’’ என்று கடவுளே சொல்லியிருக்கிறார் (2கொரி. 6:16).
- இறைமகனாகிய கிறிஸ்து தனது திரு இரத்தத்தினால் நலிவான, பலவீனமான, பாவியான மனிதனுக்கு மீட்பைப் பெற்றுத்தந்து தூய நிலையில் வைத்தார். ‘‘அவர் பலியாகப் படைத்த இரத்தம் வெள்ளாட்டுக் கடாக்கள், கன்றுக் குட்டிகள் ஆகியவற்றின் இரத்தம் அல்ல. அவரது சொந்த இரத்தமே. அவர் ஒரே ஒருமுறை தூயகத்துக்குள் சென்று எக்காலத்துக்குமென அதைப் படைத்து நமக்கு என்றுமுள்ள மீட்பு கிடைக்கும்படி செய்தார்’’ (எபி. 9:12).
- திருவிவிலியத்தின் சிந்தனைக்கேற்ப மனிதனின் மிக உயரிய தன்மையானது ஏனைய படைப்புகளின் மத்தியில் முதன்மையான இடத்தை வகிப்பது இறைவனால் வழங்கப்பட்ட மாபெரும் கொடை என்பது மிகத் தெளிவாகிறது.

### திருச்சபையின் படிப்பினை

- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ‘‘இன்றைய உலகில் திருச்சபை’’ எனும் வெளியீட்டின் ஆரம்பத்திலேயே அதன் முதலாவது அதிகாரத்தில் (12-18) மனிதத் தன்மையின் உயர்ந்த நிலை, அதனைப் பாதுகாக்க வேண்டிய முறை பற்றி அவதானம் செலுத்தப்படுகின்றது.

### மனிதத் தன்மையின் உயர்நிலை

- இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டமையால் அனைத்துப் படைப்புகளிலும் மனிதன் உன்னதமானவன்.
- மனிதன் இறைவனின் உருவாகவும் சாயலாகவும் உள்ளான்.
- மனிதன் முக்கியமாக உடலையும் ஆன்மாவையும் கொண்டுள்ளான்.
- மனிதன் உள்ளார்ந்த இயல்பில் ஒரு சமூகப் பிராணியாவான்.

- அறிவும், ஞானமும் உள்ளதால் மனிதன் இறைவனின் சிந்தனைகளிலும் பங்காளியாகிறான். அவனுடைய அறிவின் தன்மை ஞானத்தினால் முழுமையடைகிறது.
- மனிதனின் உன்னதத் தன்மை நிலைத்திருப்பது அவனது மனச்சான்றினாலாகும். இதன் காரணமாக இறைவனின் உதவியோடு நன்மையையும் உண்மையையும் நாடுகிறான். தீமையிலிருந்தும் பொய்மையிலிருந்தும் விலகிக் கொள்கிறான்.
- சுதந்திரம் இறைசாயலின் விசேட அடையாளமாகும். இறைவனைத் தேடிச் சென்று தமது நிறைவை இறைவனின் வழியாகப் பெற்றுக்கொள்வதற்காக இதனைப் பயன்படுத்த வேண்டும்.
- அறிவு மனிதன் பெற்றுக்கொண்ட இறைவனின் கொடையாகும். இதனைப் பயன்படுத்தும் மனிதன் படைப்புச் செயலில் உதவுவதோடு படைப்பை முழுமையடையச் செய்கிறான்.
- உடலும், ஆன்மாவும் உள்ள மனிதனை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்காக கிறிஸ்து சிலுவையில் தமது உயிரைப் பலியாக்கினார்.
- உடல் இறைவனால் படைக்கப்பட்டமையால் இறுதிநாளில் அது மீண்டும் உயிர்பெற்று எழுவதனால், அது நன்மையானதும் மகிமைக்குரியதும் எனக் கருத்தில் கொள்ள வேண்டும். உடல் ரீதியான வாழ்வைத் தாழ்வாக எண்ணக் கூடாது. எனினும், மனிதன் தனது உடலை இறைவனது மகிமைக்காகக் கட்டியெழுப்ப வேண்டும்.

## கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (C.C.C / க.தி.ம)

- படைப்பவரான இறைவனின் படைப்பில் முதன்மையான இடத்தை வகிப்பவன் மனிதனேயாவான். (343)
- கண்களுக்குப் புலப்படுகின்ற ‘‘படைப்பு அனைத்திலும் படைத்தவரை அறிந்து அவரை அன்பு செய்யக் கூடியவன்’’ (இன்றைய உலகில் திருச்சபை 24:3) மனிதன் மட்டுமேயாவான். ‘‘இறைவனின் படைப்பு அனைத்திலும் அவர் அவனுக்காகவே திடசங்கற்பம் கொண்ட ஒரே படைப்பு’’ ((இன்றைய உலகில் திருச்சபை 24:3) மனிதனேயாவான். (356)
- இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்டதனாலேயே மனிதன் மிக உயர்ந்த நிலையை அடைகிறான். அவன் ‘‘பொருள்’’ அல்ல, ‘‘ஒருவன்’’ அல்லது ‘‘ஒரு நபர்’’. சுய அறிவு நிறைந்த ஏனைய நபர்களோடு உறவு கொள்ளக்கூடிய அவன் படைத்தவருக்கு நம்பிக்கையோடும் அன்போடும் உறவுகளைக் கட்டியெழுப்பக் கூடிய உடன்படிக்கை வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளான். அவனைத் தவிர வேறு எந்தப் படைப்பும் இவ்வாறு உடன்படிக்கை வாழ்வுக்கு அழைக்கப்படவில்லை. (357)
- இறைவன் மனிதனுக்காகவே அனைத்தையும் படைத்தார் (இன்றைய உலகில் திருச்சபை 12:1). எனவே, இறைவனுக்குப் பணிபுரியவும், அன்பு செய்யவும் ஏனைய படைப்பனைத்தையும் மீண்டும் அவரிடம் ஒப்படைக்கவுமே மனிதனைப் படைத்தார். (358)
- இறை சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் ஒரே முறையில் உடலையும் ஆன்மாவையும் கொண்டுள்ளான். ‘‘அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத’’ (தொ.நூ. 2:7) மனிதன் நிறைவுள்ளவனாக, முழுமையாக இறைவனின் திட்டத்திற்குரியவன் ஆனான். (362)
- மனித உடல் ‘‘இறைவனின் உருவில்’’ பங்காளியாகின்றது. எனினும், அது இன்னும் மனித உடலேயாகும். ஏனெனில், ஆன்மாவினால் உயிர்பெற்று, கிறிஸ்துவின் உடலுக்குள் தூய ஆவியாரின் ஆலயமாவதற்கு முழுநபரும் இதனால் அழைக்கப்பட்டுள்ளான். (364)
- திருச்சபை கற்பிக்கின்றபடி எல்லா ஆன்மாக்களும் இறைவனால் படைக்கப்படுவதே தவிர அது பெற்றோரினால் உருவாக்கப்படுவதில்லை. இவ்வான்மா நித்தியமானதாகும். மரணத்தினால் உடலை விட்டு வேறுபட்டாலும் அது அழிவல்ல. இறுதி உயிர்ப்பின்போது அது மீண்டும் உடலோடு இணைகிறது. (366)

## 10.1.2. பெண்கள் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை

**பழைய ஏற்பாடு**

- திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இறைவன் முதலில் மனிதனைப் படைத்து, பின்னர் அவனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, ''அவன் உறங்கும்பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு'' எடுத்த விலா எலும்பை ''ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்து வந்தார்'' (தொ.நூ. 2:21). படைப்பின் செயற்பாட்டில் மனிதனுக்குப் பின் பெண் படைக்கப்பட்டாலும் பெண் ஒரு பொழுதும் ஆணைவிட தாழ்ந்தவள் அல்ல. இருவரும் இறைச் சாயலிலே படைக்கப்பட்டனர் (தொ.நூ. 1:27). எனவே, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் சமமான தன்மை உள்ளது. ஒருவர் மற்றவரை விட உயர்ந்தவர் அல்ல.
- பின்னர் இறைவன் ஆசீரை வழங்கியதும் பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் என ஆண், பெண் ஆகிய இருவருக்கும் கூறினார் (தொ.நூ. 1:28).

  ''*மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று; அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்.'' (தொ.நூ. 2:18)*
- எபிரேய பிரதியில் ''மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று'' எனும் முதல் வசனத்தின் அர்த்தம் சமூக ரீதியாக தனித்திருப்பது, துணையில்லாதிருப்பது அல்லது முழுமையற்ற நிலை என்ற கருத்தாகும். இந்த துணையற்ற நிலையையும் தனிமையையும் நிறைவு செய்வதற்காக ''தகுந்த துணையை'' என இறைவன் பெண்ணை ஆணுக்குப் பெற்றுக்கொடுத்தார்.
- எனவே, பெண் என்பவள் ஆணுடைய பணியாள் அல்ல; சேவகியல்ல, ஆணோடு வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபடும் சமனான தன்மையுள்ள துணையாவாள். எபிரேய அர்த்தம் குறிப்பால் உணர்துவதைப் போன்று ''துணையை'' என்பது ஏதோ ஒன்றை முழுமையடையச் செய்வதாகும். தனிமையில் இருக்கும் ஆணின் தனிமையை இல்லாமற் செய்வதும், முழுமையடையச் செய்வதும் மிருகங்களாலும், மரஞ்செடி கொடிகளாலும் அல்ல. ''துணையை'' எனும் பெண்ணாலேயாகும்.

**''மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து...'' (தொ.நூ. 2:21)**

- மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து, அவனிடமிருந்து எடுத்த விலா எலும்பிலிருந்து பெண்ணைப் படைத்தமை என்பதன் கருத்து சமூக ரீதியாக முழுமையற்ற மனிதன் பெண்ணின் வழியாக முழுமையை அடைவதாகும்.

**''மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி...'' (தொ.நூ. 2:23)**

- திருவிவிலிய அறிஞர்களின் கருத்தின்படி விலா எலும்பு அடையாளப்படுத்துவது இரத்த உறவை, பிரிக்க முடியாத நெருங்கிய உறவையாகும். மனிதனுடைய விலா எலும்பிலிருந்து உருவாக்கிய பெண், மனிதனுடைய சதையே; அவனுடனேயே கட்டுப்பட்டிருப்பவள். முதலில் பெண்ணைக் காணும் மனிதன் அவளைப் பற்றிக் கூறியதில் இது நன்றாக விளங்குகிறது.

**''எலும்பு பெண்'' எனக் கூறப்படுகிறது.**

- படைப்புச் செயற்பாட்டின் பின் படைக்கப்பட்ட எல்லா விலங்குகளுக்கும் ஆகாயத்தின் எல்லாப் பறவைகளுக்கும் பெயரிடும்படி இறைவன் மனிதனிடம் ஒப்படைத்தார். பெயரிடல், அப்படைப்புகளின் மட்டில் அதிகாரமும் செல்வாக்கும் செலுத்தும் அடையாளமாகும். எனினும், மனிதன் ஏனைய படைப்புகளுக்குப் பெரிட்ட முறை பெண் தொடர்பாகக் காணப்படவில்லை. அதற்காக ''இவள் 'பெண்' எனக் கூறப்படுகிறது'' என்ற செயற்பாட்டுவினையில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிவிலியத்தில் செயற்பாட்டுவினையைக் குறிப்பால் உணர்த்துவது இறைவனின் செயற்பாட்டையாகும்.

எனவே, பெண் ஆணின் செல்வாக்குக்கு கீழ்ப்பட்ட பணியாள் அல்ல. ஆணின் முழுமைத்தன்மைக்கு மிக உதவியாகவுள்ள துணையென திருவிவிலிய சிந்தனை கவனம் செலுத்துகிறது.

## புதிய ஏற்பாடு

- மீட்பு வரலாற்றிலே மீட்புச் செயற்பாட்டிற்கு பல்வேறு விதமாகப் பங்களிப்புச் செய்த பல பெண்களின் உன்னதமான வாழ்க்கையைக் காண முடிகிறது. இதன் மத்தியில் பாவிகளான மனித சந்ததியைப் பாவத்திலிருந்து மீட்டு மீட்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக இவ்வுலகில் பிறந்த இயேசுக் கிறிஸ்துவின் பிறப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேறுபெற்ற என்றும் கன்னிகையான மரியன்னையின் வாழ்க்கை விசேடமானதாகும். அவர் ''காலம் நிறைவேறிய போது'' இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்ணாவாள் (கலா. 4:4).
- இயேசுக்கிறிஸ்துவின் தூதுப் பணியில் அவரைப் பின்பற்றிய, உதவிய, நெருக்கமாக இருந்த, குணம் பெற்ற, ஆறுதலை அனுபவித்த, சிலுவையடியில் நின்ற இவ்வாறான பல பெண்களைப் பற்றி நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதேபோன்று, உயிர்ப்பின் நற்செய்தியைத் திருத்தூதருக்கு எடுத்துச் செல்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் பெண்ணாவாள்.
- ஆரம்ப கால கிறிஸ்தவ சபையில் மறைத்தூதுப் பணியில் திருத்தூதருக்கு உதவிய பெண்கள் பற்றித் திருத்தூதர் பணி நூலிலும், திருமுகங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.
- புனித பவுல் திருத்தூதர் கூறுவதைப் போன்று, ''ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை'' கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாயிருக்கிறீர்கள் (கலா. 3:28).
- இதன்படி திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணோட்டத்தின்மீது கட்டியெழுப்பப்பட்ட கிறிஸ்தவ சிந்தனையில் பெண்ணும் ஆணைப் போன்று மதிப்புடனும் சமமான தன்மையுடனும் கவனிக்கப்படுகிறாள்.

## திருச்சபையின் படிப்பினை

- ''இன்று சமூக வாழ்வு முழுவதிலும் பெண்கள் அதிகமாகக் குறிப்பிடத்தகுந்த வகையில் பங்குகொள்கின்றனர். எனவே, திருச்சபையின் பல்வேறு அப்போஸ்தலப் பணித் துறைகளிலும் இவர்கள் அதிகமதிகமாய்ப் பங்குகொள்வது மிக முக்கியமானது'' (பொதுநிலையினரின் அப்போஸ்தலப் பணி 09 Apostolicam Actuositatem).
- ''எல்லா மனிதர்களிலும் மிளிர்கின்ற இறைசாயலுக்கு சரியான மதிப்புக் கிடைக்கும் படியாகவும் பெண்களுக்குக் காட்டப்படுகிற பாகுபாடுள் மற்றும் பால் ரீதியான தாக்கங்களிலிருந்து விடுவிப்பதற்காகப் பொருத்தமான இறை வழிநடத்தல் பணிகளை ஆரம்பிப்பது நம் எல்லோரினதும் கடமையாகும்'' (Familiaris Consortio 24).
- திருச்சபையிலும் சமூகத்திலும் பெண்களின் தனித்துவம் வளரும் இக்காலத்தில் தலைமைத்துவப் பொறுப்புக்களைப் பெண்களே ஏற்க வேண்டும் (Christi Fidelis Laici 24)
- ''மனிதனையும் பெண்ணையும் படைத்தல் இறைவனுடைய விருப்பமாகும். மனிதன் என்ற மட்டில் முழுமையான சாயலாகவும் ''ஆண்'', ''பெண்'' என தமக்குப் பரம்பரையாய் வரும் உருவிலும் இருவருக்கும் படைத்தவரான இறைவனிடமிருந்து கிடைக்கப்பெறும் உயரிய மதிப்பு உரித்தாகும். இருவருக்கும் ஒரே சமனான மிக உயர்ந்த தன்மையும் உரித்தாகிறது. இது ''இறைசாயலாகும்''.

### 10.1.3. மனிதனின் சமூக வாழ்வு

- இறைவனுடைய எல்லாப் படைப்புகளிலும் இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மிக உயரிய படைப்பாகிய மனிதன் ஒரு சமூகப் பிராணி எனத் திருவிவிலியம் எமக்கு எடுத்துரைக்கின்றது. ''மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று'' (தொ.நூ. 2:18). படைப்புச் செயற்பாட்டில் படைத்தவரான இறைவனின் விருப்பமானது மனிதன் தனிமையில், தனியே வாழ்வது அல்ல; ஆணும் பெண்ணுமாக, குடும்பமாக வாழ்வதாகும்; உறவினைக் கட்டியெழுப்புவதாகும்.
- எந்தவொரு மனித சமூகத்திலும் மிகச் சிறிய அலகாக இருப்பது குடும்பமாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நிகழ்கின்ற திருமணம் குடும்ப கூட்டுறவை அடிப்படையாகக் கொண்டதாகும். திருவிவிலிய சிந்தனைக்கேற்ப, ஆதாம்-ஏவாள் எனும் ஆதிப்பெற்றோராகிய முதல் மனிதனும் பெண்ணும் சமூகமென்ற வகையில் குடும்பமாக வாழ்தல் இறைவனின் விருப்பமாகும். தனிமையில் இருந்த மனிதனுக்கு துணையாப் பெற்றுக்கொடுத்தது இந்த சமூக வாழ்வின் அர்த்தத்தை முழுமையடையச் செய்வதாகும். தனிமையில் இருந்த மனிதன் - ஆதாம் தனக்குச் சமனான பெண் - ஏவாளினால் முழுமையைப் பெற்றான்.
- மீட்பு வரலாறு முழுவதும் செல்லும் மனிதனின் சமூக வாழ்வுடன் இணைந்த கருத்துக்கள் கட்டியெழுப்பப்பட்ட பல்வேறு அனுபவங்கள் மற்றும் சம்பவங்கள் விளக்கப்பட்டுள்ளன. இந்த எல்லா அனுபவங்களிலும் காணக்கூடிய விசேட பண்பானது மனிதன் சமூகமாக இறைவனை அனுபவிப்பதும் சமூகமாக நிகழ்கின்ற இறைவெளிப்பாடுமாகும். இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் தனி மனிதனாக இருப்பினும் பெண்ணினால் முழுமையடைந்து குடும்பமாக்கப்பட்டு, குடும்பம் பிள்ளைகள் சந்ததியையும், கோத்திரத்தையும் பின்னர் பன்னிரண்டு கோத்திரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகி, அது எல்லா வேறுபாடுகளையும் கடந்து ஒரு மானிட குடும்பமாக கட்டியெழுப்பப்பட்ட முறை மிகவும் ஆச்சரியமான வரலாற்று அனுபவமாகிறது.
- எனவே, மானிட சமூகத்தில் தனித்தனியாக, பிரிந்து தனியே வாழ்வதற்கு மனிதனால் முடியாது. மானிட மதிப்பு மிக உச்ச நிலையை அடையக் காரணம் மனிதன் சமூக மயமாதலினாலாகும். ஆகையால், மனிதன் இறையன்பைப் போல ஆழமான சகோதர அன்பிலும் நிறைந்து வாழ வேண்டும்.
- மனிதன் இறைவனோடும் ஏனையவர்களோடும் எந்தளவு உறவைக் கட்டியெழுப்புகிறானோ அப்போது பூரணமடைகிறான். மனிதன் உன்னத படைப்பென்பதால் நல்லொழுக்கமும், விழுமியங்களுடனும் வாழ்வதற்கு அவனால் / அவளால் மட்டுமே முடியும். மேலும் அறிவு, சுதந்திரம், அழியா ஆன்மா ஆகிய பரிசுத்தமான மனிதன் பெற்றுள்ளான்.
- சுதந்திரம் இறைவனின் கொடையெனினும் தாம் விரும்பிய எதையும் தன்னிச்சையாகச் செய்வதற்கு இதனால் அனுமதி கிடையாது. சமூக நன்மைக்காகச் செயலாற்றல், நல்லொழுக்க வாழ்க்கைக் கொள்கைகளில ஈடுபடுதல் என்பன இயற்கையாகவே மனிதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமையும் பொறுப்புமாகும். இதிலிருந்து மனிதனுக்குள் இருக்கும் இறைசாயலும் உருவமும் பிரதிபலிக்கின்றது.
- இதன்படி பார்க்கையில் சமூக வாழ்வுக்காக ஒருவரையொருவர் ஈடுபடுத்தும் 'அன்பு' எனும் இறைகுணம் உன்னதமாகும். இறைவனுக்குக் காட்டும் அன்பையும் சமூகத்தில் அயலவர்களுக்குக் காட்டும் அன்பையும் வேறுபடுத்த முடியாது. ''நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும்'' (யோவா. 15:12). எல்லா மனிதர்களும் சமூகமாக ஒன்றாக வாழ்ந்து இறைவனோடும் ஒன்றாக இணைவதற்கு மனிதனுக்கு அழைப்பு கிடைத்துள்ளது. ''நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக...'' (யோவா. 17:21).
- சமூக வாழ்வின்போது ஒற்றுமை வளர்ந்த, அனைவரும் மற்றவரின் மானிட மாண்பைக் கவனித்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், பொது நன்மையை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுதல் மிக முக்கியமாகும்.

- மனிதன் தனியே இருப்பது இறைவனது விருப்பம் இல்லையென்பதால், சமூக வாழ்வை வளர்த்துக்கொண்டு இதன் வழியாகத் தனக்குள் இருக்கும் இறைசாயலையும், உருவையும் உலகிற்குக் காட்டுவதும் மற்றவரை மதிப்பதோடு பொது நன்மைக்காக செயலாற்றுவதும் அவன் / அவள் செய்ய வேண்டியதாகும்.

### திருச்சபையின் படிப்பினை

- ‘‘மனிதன் இயல்பாகவே சமூகத் தனமையுடையவன என்பதால் அடுத்தவருடன் இணைந்து வாழவும், ஒருவர் மற்றவரின் நல்வாழ்விற்காகப் பணிபுரிவதும் இன்றியமையாததாகும்’’ (உலகில் அமைதமி Pacem in Terris).
- ‘‘... (இன்றைய உலகில் திருச்சபை 12).
- ‘‘மனித அழைப்பை நிறைவுபெறச் செய்ய சமூக வாழ்வு இன்றியமையாத ஊடகமாகவுள்ளது’’ (க.தி.ம. 1886).

## 10.1.4. மனித வளர்ச்சியும் கிறிஸ்தவ பங்களிப்பும்

- இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் தனியே வாழ்வது அவரது விருப்பமன்று. ஆகவே, மனிதன் சமூகப் பிராணியாவான். இந்த திருவிவிலியக் கண்ணோட்டத்துக்கமைய செயலாற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ள மனிதனுக்கு (கிறிஸ்தவனுக்கு) அனைத்து மானிட குடும்பத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியனவற்றுக்காக செயலாற்றுவதற்கான பொறுப்பும் கடமையும் மனிதனாதல் (கிறிஸ்தவனாதல்) இயல்பாகவே உரிமையாயிற்று. இதன் வழியாக அவன் / அவள் இறைவனின் படைப்பை வளர்ச்சியடையச் செய்ய பங்காளியாகிறான். சமூகத்தின் பொதுநன்மைக்ககும் மானிட அபிவிருத்திக்குமாகச் செயலாற்றுவது கிஸ்தவ பொறுப்பு என்பது இதிலிருந்து விளங்குகின்றது.

### பொது நன்மை

- சமூகத்தின் ஒரே கடமையும் நோக்கமுமாக இருக்க வேண்டியது அச்சமூகசத்தின், பிரசைகளின் பொது நன்மையேயாகும். பொது நன்மை என்பது ‘‘முழுமையாக நோக்கின் சமூக நலனையும் அன்னியோன்னியமாக ஒருவர் மற்றவருடனும் சமூகத்தோடும் இணைந்துள்ள தனி நபரின் நன்மையைக் கருத்தில் கொள்வதாகும் (க.தி.ம. 1906). பொது நன்மையைத் திட்டமிடுகையில் சமூகத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் செயலாற்றுவதற்கு கிறிஸ்தவனுக்குள்ள பொறுப்பை திருவிவிலிய கண்ணோட்டம் எமக்கு முன்வைக்கிறது.

### திருவிவிலியத்தின் சிந்தனை

- படைக்கப்பட்ட மனிதனுக்கு ஆசீர் அளிப்பதோடு, முழுப்படைப்பையும் விருத்தி செய்வதற்கும் ஆட்சி செய்வதற்கும் அதிகாரம் அவனுக்கு / அவளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ‘‘பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்...’’ (தொ.நூ. 1:28)
- சமூகத்தில் துன்பப்படும் சகோதர சகோதரிகளின் நன்மைக்காக செயலாற்றுவதற்கு - நல்ல சமாரியர் உவமை (லூக். 10:25-27), செல்வரும் இலாசரும் பற்றிய உவமை (லூக். 16:19-31), ‘‘...தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் சகோதரர் சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை’’ (1யோவா. 4:20-21).
- மேற்கூறப்பட்ட திருவிவிலிய சிந்தனையால் விளக்கப்படுவது இறைப்படைப்பை விருத்தி செய்வது அதாவது, மானிட குடும்பத்தின் அபிவிருத்தியும் பொது நன்மைக்கான அர்ப்பணிப்பும் இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட அழைப்பின் தன்மையாகப் பாரம்பரியமாக வருவதும் என்பதாகும்.

**திருச்சபையின் படிப்பினை**

- மனிதன் தனது கடமைகளைப் பரிவுடனும் அன்னியொன்னியமும் மிக்கதாக ஒத்துழைப்புடன் ஒவ்வொருவரினதும் நலனுக்காக நிறைவேற்ற வேண்டும்.
- ''மனிதர் இயற்கையாகவே சமூக இயல்புள்ளவர்கள். அவர்கள் மற்றவர்களோடு ஒன்றித்து வாழ்வதும் ஒருவரொருவரின் நலன் கருதி செயலாற்றுவதும் முக்கியமாகும். ஒருவரொருவரின் அன்னியொன்னிய உரிமைகளை ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு மதிப்பளிப்பதும், கடமைகளை உணர்ந்து அவற்றை நிறைவேற்றுவதும் முறையான மனித சமூகத்தின விசேட பண்புகளாக இருத்தல் வேண்டும்'' (உலகில் அமைதி 31-33).
- மனிதன் பொறுப்புள்ளவனாக சமூகத்தின் நல்வாழ்வுக்காகவும் நலனுக்காகவும் செயற்படுதல் முக்கியமாகும்.
- ''சுதந்திரமாகவும் பொறுப்புடனும் செயலாற்றவது மனித மாண்புக்குப் பொருத்தமான அம்சமாகும். எனவே, சமூகத் தொடர்புகளின்போதும், உரிமைகளைச் செயற்படுத்தும்போதும், கடமைகளை நிறைவேற்றும் போதும் ம்ககியமாக தனது சுதந்திரமான பொறுப்பு மற்றும் நிறைவேற்றக்கூடிய ஆற்றலுக்கு ஏற்ப செயலாற்றுவதற்கு அவனுக்கு சந்தரப்பம் இருத்தல் வேண்டும்'' (உலகில் அமைதி 34).
- ''மனிதனின் முன்னேற்றமும் சமூகத்தின் வளர்ச்சியும் ஒன்றின்மேல் ஒன்று சார்ந்திருக்கின்றன என்பது மனிதனின் சமூகப் பண்பிலிருந்து தெளிவாக விளங்குகிறது...'' (இன்றைய உலகில் திருச்சபை 25).
- ''... பொதுநலன் என்பது குழுக்களும் தனி உறுப்பினர்களும் தத்தம் நிறைவை முழுமையாகவும் ஏற்ற முறையிலும் அடைய உதவும் சமூக வாழ்வின் சூழ்நிலைகள் அனைத்தின் முழு மொத்தம்...'' (இன்றைய உலகில் திருச்சபை 26).
- ''சமூகமென்பது, ஒற்றுமைமையை நோக்காகக் கொண்டு ஒன்றாக இணைந்த நபர்களின் கூட்டமாகும். அது இறந்த காலத்தைப் பற்றிக் கற்று எதிர்காலத்தைத் திட்டமிடுகின்ற ஒரு சமூகமாகும். சமூகத்தின் வழியாக எல்லா மனிதரகளும் அதன் ''உரிமையுடையவர்கள்'' ஆகின்றனர். இதேபோன்று அவனது ''தாலந்து''களின் வழியாக தமது எதிர்காலத்தை முன்னேற்றிக் கொண்டு அவற்றை வளர்த்துக்கொள்வர்'' (க.தி.ம.1880).
- ''மனித அபிவிருத்திக்காக 'பங்கபற்றல்' என்று அழைக்கப்படுவது ஒருவரோடொருவர் சமூக நல்வாழ்வுக்காகவும் பொதுநன்மைக்காகவும் தன்னார்வத்தோடும் அர்ப்பணிப்போடும் முன்வருவதாகும். பொதுநன்மைக்ககாக ஒவ்வொருவரும் தமது நிலைமைகளுக்கும் வகிபாகத்துக்குமேற்ப பங்களிப்புச் செய்ய வேண்டும். இக்கட்டாய கடமையானது மனிதத்தன்மையோடும் இயற்கையோடும் இணைந்து காணப்படுகிறது'' (க.தி.ம. 1913).
- மனித அபிவிருத்தி, கிறிஸ்தவ பங்களிப்பு ஆகியன பற்றிப் பேசும்போது சமூகத்தின் பொது நன்மை, மக்களின் முன்னேற்றம் என்பவற்றுக்காக அர்ப்பணித்து முக்கியமானதொரு விடயமாகும். சமூக, பொருளியல், கலாசார, அரசியல் ஆகிய அம்சங்கள், கிறிஸ்தவ பங்களிப்புக்கள் இறையாட்சி விழுமியங்களினால் ஊட்டம் பெறும்போது, மனித சமூகம் இவ்வுலகை 'இறையாட்சி' நிலவுகின்ற இடமாக மாற்றுகிறது. இறையாட்சியின் உதயத்துக்காக செயலாற்றுவது கிறிஸ்தவ அழைப்பாகும்.
- இங்கு **முதலாவதாக** தனிநபருக்கு மதிப்பு அளிப்பது, **இரண்டாவது** சமூக நலனுக்காகவும் அபிவிருத்திக்காகவும் செயலாற்றல், **மூன்றாவதாக** சமூக அமைதிக்காகவும், ஒற்றுமைக்காகவும் உழைத்தல் எனும் மூன்று அம்சங்களும் மிகவும் முக்கியமானவையாகும்.

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

- மனித மாண்பு இறைவன் அளித்த உன்னத கொடை என்பதை அறிந்து, மனிதத்துவத்தின் உயரிய தன்மையைப் பாதுகாப்பதற்கு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைக் கலந்துரையாடி விளக்குங்கள்.
- உலகின் நிலைப்பாட்டிலும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதிலும் பெண்களின் தனித்துவம், பங்களிப்பு, உயரிய தன்மை ஆகியவற்றை மதித்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் நாடகப் பிரதிகள் ஆக்கம் செய்து நடித்துக் காட்டுங்கள்.
- மனிதனது இறை அழைத்தல் சமூக முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்குமாக உழைத்தல் என்பதற்கமைய உங்கள் சமூகத்தில் உங்கள் பங்களிப்பு என்ன என்பதை விளக்கும் வகையில் ஒப்படை தயாரியுங்கள்.

**உசாத்துணை நூல்கள்**


- இரண்டாம் வத்திக்கான் சங்க வெளியீடு.
- X.D. செல்வராசு, புத்துலகம் படைக்கவே, பவுல் இறையியல் மன்றம், சென்னை, 1991.

**தேர்ச்சி 10.0** : நவீன சமூக போராட்டங்களின் மத்தியில் மனித நேயத்துடன் செயற்படுவர்.

**தேர்ச்சி மட்டம்10.2** : தற்கால சமூக முரண்பாடுகளையும் கிறிஸ்தவர்களின் பொறுப்பையும் பற்றி விளங்கிக் கொள்வர்.

**பாடவேளைகள்** : 08

**கற்றல் பேறுகள்** :

- படைப்பனைத்தையும் மனிதனிடம் கொடையாக ஒப்படைத்ததோடு, மனிதன் வன்செயல்களையும் இம்சையையும் தவிர்த்து எல்லாப் படைப்புகளோடும் அமைதியாகவும், ஒன்றிணைந்தும் வாழ வேண்டும் என்பது இறைவனது விருப்பமாகும் என்பதை விளங்கிக் கொள்வர்.
- திருவிவிலிய சிந்தனைக்கும் கிறிஸ்தவ கண்ணோட்டத்துக்கும் ஏற்ப, 'அமைதி' என்பது வன்செயல்கள், போர், மோதல்கள் இல்லாதிருத்தல் மட்டுமன்று, ஒவ்வொருவரின் பொதுவான எதிர்பார்ப்புகளையும் உரிமைகளையும் நிறைவேற்றுவதன் வழியாக அவர்களுக்குள் ஏற்படுகின்ற நிறைவையும் மகிழ்ச்சியையும் முழுமையின் அனுபவம் என்பதை அறிந்து கொள்வர்.
- இறைவனின் சாயலாகவும் உருவாகவும் படைக்கப்பட்ட மனிதன், இயற்கையின் சூழலின் பொறுப்பாளியும் தலைவனும் என்பதை விளங்கி சூழலைப் பாதுகாக்கவும் மென்மேலும் அழகுபடுத்தவும் தனக்குள்ள பொறுப்புகளை நன்றாக விளங்கிக் கொள்வர்.
- இயற்கையில் வெளிப்படுத்தப்படுகின்ற இறைவனின் மகிமையையும் அதிகாரத்தையும் விளங்கி இயேசு கிறிஸ்துவைப் போன்று சூழலோடு அதிகமான பிணைப்போடு இயற்கைக்கும் சூழலுக்கும் மென்மேலும் சமீபமாக செயலாற்ற வேண்டும் என்பதை மனதில் கொள்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 10.2.1. முரண்பாடுகளைக் களைதலும் அமைதியைப் பேணலும்

### 'அமைதி' பற்றிய திருவிவிலிய சிந்தனை

- திருவிவிலிய சிந்தனைக்கேற்ப 'அமைதி' என்பதனால் கருதப்படுவது, போர் இல்லாத முரண்பாடுகள் இம்சையற்ற சூழலை உருவாக்குவது மட்டுமல்ல; அதற்கும் மேலாக, ஆழமான அர்த்தமொன்று இதில் அடங்கியுள்ளது.
- பழைய ஏற்பாட்டில் 'அமைதி' என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட 'சாலோம்' (Shalom) எனும் எபிரேய சொல்லின் பரந்த அர்த்தமான ஒருவரின் பொது எதிர்பார்ப்பு, சிந்தனைகளை நிறைவேற்றுவதை அடிப்படையாகக் கொண்டு அவன் / அவள் இடம் ஏற்படுகின்ற நிறைவால் அல்லது திருப்பதியடைதலால் பிறக்கின்ற மகிழ்ச்சியாகும். இது ஒரு நபரில் ஏற்படுகின்ற முழுமையின் அனுபவமாகவும் கருதப்படலாம். 'அமைதி' எனும் எண்ணக்கருவில் எப்பொழுதும் ஒருவரின் பொதுவான விண்ணப்பம், உரிமைகள், நியாயமான எதிர்பார்ப்புகள் ஆகியன ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளன. இவை நிறைவேற்றப்படும்போது அமைதி உதயமாவது அல்லது முழுமையைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் உதயமாகிறது. நீதி கிடைக்காத போது முரண்பாடுகள் ஏற்படுகின்றன. எனவே, முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு நீதியை நிறைவேற்றி அமைதியை உருவாக்க வேண்டும்.
- படைப்பனைத்தையும் தமது கொடையாக மனிதனிடம் ஒப்படைத்த இறைவனது விருப்பமானது மனிதன் அனைத்துப் படைப்புகளோடம் அமைதியாகவும், ஒருங்கிணைந்தும் வாழ்வதாகும். எனவே, வன்செயல்கள், முரண்பாடுகள், இம்சைகள், போர் என்பன ஒருபோதும் இறைவனது விருப்பமன்று என்பதை திருவிவிலிய சிந்தனை எமக்குக் கூறுகிறது.

- பழைய ஏற்பாட்டில் 'அமைதி' தனி ஒருவரின் இதயத்தினுள்ளே உருவாகின்ற உணர்வைவிட மக்கள் சமூகம் குழுமமாகவும் ஒன்றாகவும் பெறுகின்ற அனுபவமென விளக்கப்பட்டுள்ளது. திருச்சபையில் அனைவரினதும் தேவைகள் நிறைவேற்றப்படல், சமமான உரிமைகள் பெற்றுக்கொடுக்கப்படல், பகிர்ந்து கொள்ளல் ஆகியன வழியாக நீதி நிறைவேற்றப்படுவதன் வழியாக பிறக்கின்ற முழுமை அமைதி என அழைக்கப்படுகிறது.
- மெசியா அமைதியின் அரசராவார் (எசா. 9:6). அமைதியின் உதயத்தைப் பற்றி இறைவாக்கினர் எசாயா ஆச்சரியமான வரைவிலக்கணத்தை முன்வைக்கிறார். ''ஓநாய் செம்மறி ஆட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும்...'' (எசா. 11:6-9).
- அனைத்து இனத்தவரோடும் ஒன்றித்து அழிவுகள், ஆயுதங்களை உபயோகித்தல், அழிவுகளை நிறுத்தி உலகின் அபிவிருத்தி, நன்மை என்பனவற்றுக்காகச் செயலாற்ற வேண்டும். ''வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், தங்கள் ஈட்டிகளைக் கருக்கரி வாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்...'' (எசா. 2:1-5).
- அவரே அமைதியை அருள்வார் (மீக். 5:5).
- மெசியாவின் படிப்பினைகளுக்கேற்ப அமைதியை நிலைநாட்டுவதற்கு இன்றியமையாத நிபந்தனைகள் இரண்டு நிறைவேற்றப்பட வேண்டும். அதாவது, நீதி, தார்மீகம் என்பன.

  நீதி - ஒருவருக்கு உரித்தாக வேண்டிய பொதுவான உரிமைகளை அவனுக்கு / அவளுக்கு பெற்றுக்கொடுத்தல்.

  தார்மீகம் - இறைவனுடைய விருப்பத்தினை ஆராய்ந்து பார்த்து, அதற்குக் கீழ்ப்படிந்த அதன் வழியாக செயற்படுதல்; வாழ்தல். (எசா. 9:7, 11).
- இதன்படி, அமைதி என்பது தானாக உருவாகும் ஒன்றல்ல. அமைதியை ஏற்படுத்துதல் என்பது நியாயம், நீதி என்பவற்றை நிறைவேற்றுதலாகும். நீதி எங்கு நிறைவேற்றப்படுகிறதோ அங்கே அமைதி உதயமாகும் என்பதை திருவிவிலிய கண்ணோட்டம் எமக்குக் கூறுகிறது. உரிமைகள் மீறப்படும்போது, ஏழைகள் சுரண்டப்படும்போது, இரக்கமற்ற கண்டனங்களின்போது அமைதி மீறப்பட்டு, அர்த்தமிழக்கப்படுகினற்து என அது எமக்குக் கூறுகிறது (ஆமோ. 4:1-2; எரே. 22:13-14).
- அமைதி இல்லாத இடத்தில் முரண்பாடுகள், பொல்லாத் தன்மைகள் மேலெழுவதோடு சமூகம் மென்மேலும் அழிவை நோக்கி இழுத்துச் செல்வதற்கு இது காரணமாகிறது.

## புதிய ஏற்பாட்டுக் கண்ணோட்டம்

- புதிய ஏற்பாட்டில் அமைதி எனும் எண்ணக்கருவைப் பற்றி பேசும்போது, பழைய ஏற்பாட்டில் 'சாலோம்' எனும் சொல்லுக்குச் சமமான அர்த்தம் உபயோகிக்கப்படினும், பழைய ஏற்பாட்டின் படிப்பினைகளுக்கு மேலதிகமாக ஆன்மீகத் தன்மை இதில் தெளிவாகிறது.
- இறைவாக்கினர் எதிர்பார்த்த மெசியா 'அமைதியின் மன்னனாவார்'. எனவே, அவருடைய பிறப்பு ஒரு நற்செய்தியாகும். ''எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை'' எனப்படுகிறது.
- இந்த அமைதியின் கொடையை அவரிடமிருந்து பெறுவோர் ''இறையருள் உள்ளோர்'' அல்லது அவருக்கு உகந்தோராவார் (Men of goodwill) இறையருள் உள்ள மக்கள் என்பது இறைவனுடைய விருப்பத்தை அறிந்துகொண்டு அதன்படி வாழும் மக்களாவர். (லூக். 2:10-14). அவர்களால் மட்டுமே, இறைவனிடமிருந்து வருகின்ற அமைதியை அனுபவிக்கவும் அமைதியை உருவாக்கவும் இயலும்.

- இயேசுக்கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் அமைதி உலகிலுள்ளோரிடமிருந்து பெறுகின்ற அமைதியைவிட அதிக வேறுபட்டதாகும் (யோவா. 14:27). மனிதனுடைய தேவைகள், விருப்பங்கள் எவ்வவளவு நிறைவேறுகிறதோ இதயத்தினுள்ளே அமைதியை அனுபவிப்பதற்கு முடியாவிட்டால் அமைதிய்மையும், கலவரமும் ஏற்படும். இயேசுக்கிறிஸ்து எமக்கு அளிப்பது, உலகிலுள்ளோர் அளிக்க முடியாத இது போன்ற மிக உயர்ந்த அமைதியாகும். அவர் மற்றவர்களுக்காக வெறுமையாகி தனது வாழ்வைப் பலியாக்கி அமைதிக்கு வழிவகுத்தார் (எபே. 2:14-16). தனது உயிர்ப்பின் பின் காட்சி கொடுத்த எல்லாச் சந்தர்ப்பத்திலும் ‘‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக’’ என (லூக். 24:36) வழங்கினார். இந்த மிகப் பெறுமதியுள்ள அமைதியின் கொடையை உலகிலுள்ளோர் அமைதியைப் பற்றிக் கருதுவதற்கும் அவர் எமக்கு அளிக்கும் அமைதிக்குமிடையில் உள்ள ஒன்றுக்கொன்று முரணான தன்மையை இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.
- கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, அமைதியை உருவாக்குவதற்காகச் செயற்படும் போது அர்ப்பணிப்பு அத்தியாவசியமாகும். அர்ப்பணிப்பின்றி அமைதி பிறக்காது (யோவா. 15:12-13). அமைதி, அன்பு, அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கிடையில் அதிக தொடர்பு உள்ளது. மலைப்பொழிவில் நாம் காணும் அவருடைய அஹிம்சையான கொள்கை மிகவும் முக்கியமானதாகும். ‘‘உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்’’ (மத். 5:39).
- கிறிஸ்தவ திருமறையில் தீமைக்கும் வன்செயல்களுக்கும் போர் மோதல்களுக்கும் இடமில்லை என்பது இதிலிருந்து உறுதியாகிறது. துன்புறுத்தல்களுக்கு அஹிம்சையால் பதிலளித்து, துன்புறுத்தல்கள், வன்செயல்கள் என்பவற்றைத தோல்வியடையச் செய்தல் கிறிஸ்தவனின் ஒரே கடமையாகும்.
- தாம் வாழும் சமூகத்திலே அமைதியை உருவாக்கும் பொறுப்பு கிறிஸ்தவனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மலைப்பொழிவில் பேறுகள் பற்றிய பகுதியில் வருகின்ற ‘‘அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்’’ (மத். 5:9) எனும் கடவுளின் பேறுகள் பற்றிய வசனங்களின்படி அமைதிக்காக அர்ப்பணிப்புடன் தியாகம் செய்தல் கிறிஸ்தவனின் முக்கிய பொறுப்பாகும் (1கொரி. 1:10).

**திருச்சபையின் படிப்பினை**

- ‘‘உலகில் அமைதி’’ (Pacem in Terris) 23ஆம் அருளப்பர் திருத்தந்தையின் சுற்றுமடல்.
- இன்றைய உலகில் திருச்சபை, G.S: 5ஆவது அதிகாரம் - அமைதியை வளர்த்தலும் அனைத்து நாட்டுச் சமூகத்தைப் பேணலும். இல. 77-82
- கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (க.தி.ம)
  2302 - 2306 அமைதியைப் பாதுகாத்தல்.
  2307 - 2330 போரைத் தவிர்த்தல்.

## 10.2.2. சூழல் பாதுகாப்பும் கிறிஸ்தவனின் பொறுப்பும் படைப்புக் கதையில் சூழலோடுள்ள தொடர்பு

**படைப்பு பற்றிய முதலாவது கதை (தொ.நூ. 1:1 - 2:4a)**

- ‘‘படைப்புக்கள் அனைத்தின்மீதும் அதிகாரத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்தி உறுதிப்படுத்துவதே முதலாவது படைப்புப் பற்றிய கதையின் நோக்கம் என அதன் ஆசிரியர் கருதுகிறார். ஆதலால், படைப்பின் ஒழுங்கற்ற, அமைப்பற்ற, வெறுமையான தன்மை இறைவனின் படைப்பாற்றலால் ஒழுங்கு, அமைப்பு நிறைவு அடைந்தது.
- ‘‘தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவமற்று வெறுமையாக இருந்தது’’ (தொ.நூ. 1:1).
- படைப்பு அனைத்தும், இயற்கையும் அல்லது சூழலும் உண்டாக்கப்பட்டது இறைவனின் அதிகாரத்தினாலேயாகும். அதன் ஆரம்பம் மனிதனுக்கு முன்பே உண்டாக்கப்பட்டது. பின்னர் இறுதியாக இறைவனின் சாயலாகவும் உருவாகவும் படைக்கப்பட்ட மனிதன் சூழலின் பொறுப்பாளியாகவும், தலைவனாகவும் நியமிக்கப்பட்டான். படைப்பைப் பாதுகாப்பதற்கு மனிதன் இறைவனால் நியமிக்கப்பட்டுள்ளான். முழுமையான பரந்த இயற்கையிலும் சூழலிலும் இறைவனது அருள் பிரதிபலிக்கின்றது.
- அவரது படைப்பு அனைத்தும் ‘‘மிகவும் நன்றாக’’ இருந்ததாக இறைவன் காண்கிறார் (தொ.நூ. 1:31). இந்த நன்றான தன்மை, அழகான தன்மை, இயற்கையின் அழகை மாசடையச் செய்யாமல், அழிவுக்குட்படுத்தாமல் பாதுகாப்பதும் மென்மேலும் அழகுள்ளதாக்குவதும் மனிதனது கடமையாகும். முழுப் படைப்பையும் மனிதனிடம் ஒப்படைக்கப்பட்டு அதனைப் பாதுகாப்பதற்கு இறைவன் அவனோடு / அவளோடு உடன்படிக்கை செய்து கொண்டார் (தொ.நூ. 2:15).
- ஆகையால், சூழலின் பொறுப்பை ஏற்பது மட்டுமல்ல, அதனை விருத்தி செய்வதும், பாதுகாப்பதும் மனிதனது முக்கிய பொறுப்பாகும்.

**படைப்பு பற்றிய இரண்டாவது கதை (தொ.நூ. 2:4a - 3:24)**

- இறைவன் ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்து அதனைப் பார்த்தபோது உண்பதற்குச் சுவையானதுமான எல்லா வகை மரங்களையும் வளரச் செய்து மனிதனை அங்கே வைத்தார் (தொ.நூ. 2:9).
- இவ்வாசிரியரின் நூலிலே ‘ஆதாம்’ எனும் சொல்லை மண்ணுக்கும் மனிதனுக்கும் பயன்படுத்துவதால் மனிதன் மண்ணோடு எவ்வளவு தொடர்புள்ளவன் என்பது தெளிவாகிறது. மனிதன் நிலத்தின் மண்ணால் படைக்கப்பட்டுள்ளான் (தொ.நூ. 2:7). நிலத்தின் செறிவு செழிப்புள்ள பலனைத் தருகிறது. எனவே, அது பண்படுத்தப்பட வேண்டும். நிலத்தைப் பண்படுத்தப்பட வேண்டுமெனில் அது பாதுகாக்கப்பட வேண்டும். அதனை மனிதனே பாதுகாக்க வேண்டும்.
- திருவிவிலியத்தின் கண்ணோட்டத்துக்கிணங்க நிலத்தைப் பண்படுத்துவது இறைவனை மகிமைப்படுத்தும் சொல் இறைவனை புகழ்வதாகும்; சூழலையும் இயற்கையையும் விருத்தி செய்வதும பாதுகாப்பதும் இறை புகழ்ச்சியென்பதால் அதன் பொறுப்பின் சிறப்பான தன்மையை விளங்கிக் கொள்ளலாம்.
- மனிதனுக்கும் சூழலுக்கும் இடையிலிருப்பதுபோல மனிதனுக்கும் விலங்குகளுக்கு மிடையேயும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மனிதன் மண்ணால் படைக்கப்பட்டான் (தொ.நூ. 2:7). விலங்குகள் மண்ணிலிருந்து படைக்கப்பட்டான் (தொ.நூ. 2:19).
- சில திருவிவிலிய அறிஞர்கள் கூறுவதாவது: தொடக்க நூலில் உள்ள படைப்புக் கதை, தொடக்க நூல் 9ஆம் அதிகாரத்திலுள்ள நோவாவுடன் செய்துகொண்ட கடவுளின் உடன்படிக்கையோடு தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். ‘‘எனக்கும் உங்களுக்கும் உங்களுடன் இருக்கும் உயிருள்ள எல்லாவற்றுக்குமிடையே தலைமுறை தோறும் என்றென்றும் இருக்கும்படி, நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக’’ (தொ.நூ. 9:12).

- இவ்வுடன்படிக்கையானது இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே மட்டும் ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல; மாறாக, சூழலும் இயற்கையும் இதில் இணைக்கப்பட்டுள்ளபடியால், மனிதன் படைப்பு அனைத்தினதும் பொறுப்பை ஏற்றுள்ளான்.

### திருப்பாடல்களில் வரும் சூழல் - ஆன்மீகம்

- இறைவனின் படைப்பில் மனிதனே முதலிடத்தை வகிப்பதாக திருப்பாடலும் உறுதிப்படுத்துகின்றது. ''...மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர்; எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்...'' (தி.பா. 8:4-7).
- இம் மாபெரும் படைப்பின் வழியாக மனிதன் இறைவனை மகிமைப்படுத்துகிறான். இயற்கையினால் செய்ய முடியாத புகழ்ச்சி, நன்றி என்பவற்றை மனிதன் தனது வழிபாட்டினாலும், புகழ்ச்சியினாலும் நேரடியாக செய்வதனூடாக முழுப்படைப்பிலும் முதன்மைப் படைப்பு அவனே என்பதைத் திருப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.
- திருப்பாடல்களில் உள்ள நன்றி, புகழ்ச்சி போன்ற பாடல்களில் காணப்படுகின்ற ஒளி, வானம், நிலம், மரம், செடிகள், சூரிய சந்திர மண்டலங்கள், மீன்கள், பறவைகள், மலைகள், மலைச்சிகரங்கள், சமுத்திரங்கள், நிலத்தின் அடித்தளம், ஆழங்கள், பள்ளத்தாக்குகள், மலைத்தொடர்கள் போன்றவற்றை மனிதன் என்றும் நினைத்துப் பார்க்கும்போது, படைத்தவரான இறைவனின் படைப்பின் மீதுள்ள அதிகாரத்தை ஆழமாகப் புகழ்கின்றமை இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.

### கிறிஸ்துவும் சூழலுடனான தொடர்பும்

- கிறிஸ்துவின் தூதுப் பணிக்கு பாலஸ்தீனாவின் அழகிய சூழல் தொடர்புபடுத்தப்பட்ட விதம் நற்செய்தி நூல்களில் வெளிப்படுத்தப்படுகின்றது.
- பாலஸ்தீனாவின் பாலைவனம், மலைத்தொடர்கள், மரஞ்செடிகள், மிருகங்கள், பறவைகள், பூக்கள், பழங்கள், குளம் குட்டை, நதிகள், ஆற்றுப்படுக்கைகள், கடல், குளங்கள், வானம், சூரியன், சந்திரன், காற்று, மலைகள் என்பன அவரது வாழ்வில் ஒருபோதும் புறம்பாக இருக்கவில்லை.

  அவர் இயற்கைக்கும், சூழலுக்கும் அதிபதியாயிருந்தார். இயற்கை அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தது (மாற். 4:35-41; மத். 14:22-35).

  சூழல், இயற்கை என்பன வழியாக இறைவெளிப்பாடு நிகழ்கிறது. இதன் வழியாக இறை வல்லமையை உணரமுடிகிறது (மத். 24:29-31).

  வாழ்க்கையைப் பற்றியும் நாளைய நாளைப் பற்றியும் கவலைப்பட வேண்டாமென நிகழ்த்திய போதனை இயற்கையோடு அற்புதமாக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது (மத். 6:26-31, லூக். 12:22-29).

  அவருடைய பிறப்பின்போது விண்ணகமும் மண்ணகமும் மகிழ்ச்சியில் மிதந்தன (லூக். 2:14). விண்மீன்கள் வானில் ஒளிர்ந்தன (மத். 2:2, 9-10).

  அவர் யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றார் (மாற். 1:9-11). இவ்வேளையில் தூய ஆவியார் புறா வடிவத்தில் வந்திறங்கினார்.

  பாஸ்கா மறைபொருளுக்கும் ஒலிவமலை, கெஸ்தமனித் தோட்டம், கொல்கொத்தா, கீதோன் குளம், சிலுவை மரணத்தின் போது உண்டான காரிருள், நில நடுக்கம், பாறைகள் பிளத்தல், கல்லறைகள் திறத்தல் (மத். 27:45-56) ஆகிய இயற்கையின் செயல்கள் சூழல் என்பன மிகவும் தொடர்புடையதாகும்.
- மேற்கூறப்பட்ட திருவிவிலியத்தில் காட்டப்படுகிற இயற்கையாகிய இறைவனின் கொடை பற்றித் தியானிக்கும்போது சூழலைப் பேணல், இயற்கையைப் பாதுகாத்தல், விருத்தி செய்தல் கிறிஸ்தவர்களின் பொறுப்பென்பது நன்றாக விளங்குகிறது. எனவே, சூழலை மாசடையச் செய்தல், அழித்தல் ஆகியன கிறிஸ்தவ, கண்ணோட்டத்துக்கு எதிரானவையாகும்.

- ஆகையால், தாம் வாழுகின்ற சூழலின் தூய்மையைப் பேணுதல், சூழலைப் பாதுகாத்தல், சூழலின் அழகைப் பேணல் ஆகியவற்றுக்கு கிறிஸ்தவன் கடமைப்பட்டுள்ளான். இது இயற்கையின் நீதியை நிறைவேற்றுவதாகும்.
- எனவே, இரசாயன உலகம், தாவர உலகம், விலங்குகள் உலகம் மற்றும் மனித உலகம் ஆகியவற்றைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தவற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.
- மனிதன் இறைவனுடனும், ஏனைய மனிதர்களுடனனும், இயற்கையுடனும் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்ப வேண்டுமென்பது இங்கு மிகவும் தெளிவாயுள்ளது.

## திருச்சபையின் படிப்பினைகள்

- இன்றைய உலகில் திருச்சபை, 69.
- க.தி.ம.

| | |
|---|---|
| 299 | இறைவன் அழகான உலகை மனிதனுக்குக் கொடையாக அளித்துள்ளார். |
| 338 | இறைவன் அனைத்தையும் படைத்தார். |
| 347 | படைப்புகள் அனைத்தும் இறைவனை மகிமைப்படுத்துதல் வேண்டும். |
| 341 | படைப்பு மிகவும் அழகானதாகும். |
| 2415-2418 | படைப்பையும், சூழலையும் நேசிப்பதும், பாதுகாப்பதும். |
| 668 | கிறிஸ்து படைப்பின் தலைவராவார். |

## உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு

- அமைதி பற்றிய திருவிவிலியத்தின் சிநதனையைத் தெளிவாகக் கலந்துரையாடுங்கள்.
- சூழலைப் பாதுகாத்தல் கிறிஸ்தவனின் கடமை என்பதைப் பற்றிக் கட்டுரை எழுதுங்கள்.
- இயேசுக்கிறிஸ்துவும் உண்மையான சூழல் பிணைப்பும் பற்றிய ஆக்கம் ஒன்றை உருவாக்குங்கள்.
- படைப்புப் பற்றிய திருச்சபையின் படிப்பினைகள் எவையெனத் தொகுத்து வழங்குங்கள்.

## உசாத்துணை நூல்கள்


- இரண்டாம் வத்திக்கான் சங்க வெளியீடு.
- பிலிப்ஸ் இ. யேசுதாசன், கிறிஸ்தவ வாழ்வு, அமதி வெளியீடு, தொடர்பகம், யாழ்ப்பாணம், 2002.
- ச.தே. செல்வராசு, புத்துலகம் படைக்கவே: திருச்சபையின் சமுதாயப் படிப்பினை, வைகறைப் பதிப்பகம், 2006.
- விசுவாசத்தின் புதிய விடியல், தேசிய மேய்ப்புப்பணி மாநாடு, 1995.

**தேர்ச்சி 10.0** : நவீன சமூக போராட்டங்களின் மத்தியில் மனித நேயத்துடன் செயற்படுவர்.

**தேர்ச்சி மட்டம் 10.3** : கிறிஸ்தவ ஒன்றிப்புக்காகவும் பல்வேறு சமயங்களு டன் உரையாடலுக்காகவும் மிகப் பொறுப்புடன் செயற்படுவர்.

**பாடவேளைகள்** : 12

**கற்றல் பேறுகள் :**
- இலங்கையின் முக்கிய கிறிஸ்தவ சபைகள் பற்றிய விடயங்களை அறிந்து, அவ்வேறுபாடுகளுக்குள் ஒரே கிறிஸ்துவுக்கு சான்று பகர்வதோடு, நற்செய்தி, மறைத்தூது பொறுப்புகளை விளங்கிக் கொள்வர்.
- வரலாற்றிலே ஏற்பட்ட மனித பலவீனங்களினால், திருச்சபையில் பிரிவுகளும், வேறுபாடுகளும் ஏற்பட்ட போதும், அது கிறிஸ்துவின் விருப்பம் இல்லையென்பதால் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுக்காக சபைகளின் உரையாடலின் முக்கியத்துவத்தை விளங்கி அதற்காக அர்ப்பணிப்பர்.
- ஏனைய மறைகள் பற்றிய கிறிஸ்தவின் மனப்பாங்குகளையும் திருச்சபையின் படிப்பினைகளையும் அறிந்து அனைத்து மறைகளின் ஒற்றுமையின் வழியாக சமயங்களுக்கிடையிலான ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்வர்.
- கிறிஸ்தவமல்லாத மறைகளுக்கிடையில் காணக்கூடிய நற்பண்புகள், மதிப்பீடுகள் மற்றும் நற்படிப்பினைகளை மதித்து நல்ல உள்ளத்தை ஏற்படுத்தி தூதுப் பணியில் ஈடுபடுவதோடு அவர்களுக்கு மீட்பின் செய்தியை வெளிப்படுத்துவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**10.3.1. இலங்கையிலுள்ள முக்கிய கிறிஸ்தவ சபைகள்**

கத்தோலிக்க திருச்சபை, இலங்கைத் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, பிரஸ்பிடேரியன் சபை, பப்டிஸ்ட் திருச்சபை, கிறிஸ்தவ சீர்திருத்த சபை, இரட்சணிய சேனை, தென்னிந்திய திருச்சபை

**கத்தோலிக்க திருச்சபை**
- பொது வழக்கில் றோமன் கத்தோலிக்க திருச்சபை என அழைக்கப்படும் இச்சபை கிறிஸ்துவினாலேயே நிறுவப்பட்ட (மத். 16:18-19) ‘‘திருத்தூதர்களிலிருந்து தொடர்ந்து வருகின்ற ‘‘அப்போஸ்தலிக்கம்’’ (Apostolic), ‘‘ஏகம்’’ (One), ‘‘பரிசுத்தம்’’ (Holy), ‘‘கத்தோலிக்கம்’’ (Catholic) எனும் பண்புகளைக் கொண்ட சபையாக வரலாறு முழுவதும் அழைக்கப்படுகிறது. திருத்தூதர் புனித பேதுருவைத் தொடர்ந்து உரோமை ஆயர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திருத்தந்தை இச்சபையின் தலைமை மேய்ப்பனாக தலைமைத்துவம் வகிக்கிறார். அவரின் தலைமைத்துவத்தின் கீழ் பல்வேறு மறைமாவட்டங்களில் ஆயர்கள் இணைந்து பணியாற்றுகின்றனர்.
- இலங்கையில் பெரும்பான்மையான கத்தோலிக்க மக்களைக் கொண்ட கத்தோலிக்க சபையில் பதினொரு மறைமாவட்டங்களில் ஆயர்களின் வழிகாட்டலில் தூதுப்பணி நடைபெறுகின்றது.

**இலங்கைத் திருச்சபை**
- அங்கிலிக்கன் சகோதரத்துவத்தோடு இணைந்து செயற்படுகின்ற இலங்கைத் திருச்சபை கொழும்பு, குருணாகல் எனும் பேராயங்களாக உருவாகி பணியில் ஈடுபட்டுள்ளனர். அந்தந்த பேராயங்கள் சுயாதீனமாக செயற்படுகின்றன. ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினரையும் உள்ளடக்கிய பேராய ஆலோசனைச் சபை (Diocesan Council) யின் வழியாக அந்தந்த பேராயங்களுக்குரிய பணிகள் தொடர்பான தீர்வுகளும், கொள்கைகளும் ஒழுங்கு செய்யப்படும்.

**மெதடிஸ்த திருச்சபை**

- அங்கிலிக்கன் சபையின் மதிப்புக்குரிய ஜோண் வெஸ்லியின் நற்செய்திப் பணியின் மறுசீரமைப்பாக மெதடிஸ்த சபையின் ஆரம்பத்தைக் கவனத்தில் கொள்ளலாம். இச்சபையைச் சேர்ந்த ஐவரைக் கொண்ட முதற்குழு முதன்முதலாக கி.பி.1814ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி காலிக்கு வருகை தந்து இச்சபையை இந்நாட்டில் ஆரம்பித்தனர்.

**பிரஸ்பிடேரியன் சபை**

- இச்சபையானது கி.பி. 1742இல் காலி நகரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தின் ஒல்லாந்த சபையின் உதவியுடனும் வரவேற்பையும் பெற்று இது விரைவாகப் பரவியது. இதன் மறைத்தூதுப் பணி கொழும்பு, கண்டி ஆகிய பிரதேசங்களில் நடைபெறுகிறது.

**பப்டிஸ்ட் திருச்சபை**

- இச்சபையின் மதிப்புக்குரிய ஜேம்ஸ் கார்ட்டர் என்பவர் கி.பி. 1812இல் இலண்டனிலிருந்து இலங்கைக்கு வருகை தந்தார். அக்காலத்தின் ஆங்கிலேய அரசின் உதவியுடன், அவரது மறைப்பணியானது கிராண்பாஸ் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்திலிருந்தே இச்சபையின் பணியானது மேல் மாகாணம், வடமேல் மாகாணம், மத்திய மாகாணம் ஆகிய மாகாணங்கள் வரை பரந்து சென்றது.

**கிறிஸ்தவ சீர்திருத்த சபை**

- அண்மைக் காலம் வரை (2007) ஒல்லாந்த சீர்திருத்த சபையாக அழைக்கப்பட்ட இச்சபை இந்நாட்டில் தூதுப்பணியை கி.பி. 1642இல் ஆரம்பித்தது. ஆரம்ப காலத்தில் ஒல்லாந்த இனத்துக்குரியதாக இருப்பினும், பின்னர் சிங்கள மக்கள் மத்தியிலும் பரவியது. ஒல்லாந்தரின் வருகையோடு ஆரம்பிக்கப்பட்ட இச்சபையானது இலங்கையின் மிகப் பழைய புரட்டஸ்தாந்து சபையாகும்.

**இரட்சணிய சேனை**

- இச்சபையின் தூதுப் பணியானது இலங்கையில் கி.பி.1883இல் ஆரம்பிக்கப்பட்டது. சேனையொன்றின் சுய உருவைக் கொண்ட இச்சபையில் பொதுநிலையினர் பதவிகளை வகித்து செயற்பட்டனர். சமூகப் பணி, வெளிக்களப் பணி ஆகியனவற்றின் வழியாக விசேட பணிகள் ஆற்றப்படுகின்றன.

**தென்னிந்தியத் திருச்சபை**

- அங்கிலிக்கன், மெதடிஸ்த, கொன்கிறிகேஷனல், பிரஸ்பிடேரியன் ஆகிய பல்வேறு சமய சம்பிரதாயங்களைக் கொண்ட சில சபைகளின் இணைப்பின் பலனாக கி.பி. 1947ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இச்சபை இந்தியாவில் உருவாகியது. ஆயர்களின் ஆன்மீக வழிகாட்டல்களின் கீழ் செயற்பட்டது. மறைமாவட்டம் பேரவை நிருவகிக்கப்படுகிறது (Synod). இந்த பேரவையிலேயே ஆயர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

### 10.3.2. கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான ஒன்றிப்பு

- மீட்புத் திட்டமானது மனுக்குலம் முழுவதும் உலக முடிவு வரை நிகழ வேண்டுமென மீட்பின் அடையாளமாக, இயேசு கிறிஸ்துவால் திருத்தூதர் புனித பேதுருவின் தலைமைத்துவத்தில் திருச்சபை நிறுவப்பட்டது. அவர் ஒரு திருச்சபையையே நிறுவினார். பல சபைகளையல்ல. இத்திருச்சபையில் பிரிவுகளும், வேறுபாடுகளும் ஏற்படுவது அவருடைய விருப்பமல்ல.

- வரலாறு முழுவதும் ஏற்பட்ட சபையின் பிரிவினைகளைக் கற்கும்போது பல்வேறு காரணங்களினால் அப்பிரிவினைகள் நிகழ்ந்தன என்பது மிகத்தெளிவானபோதும் அது தொடர்பான மனிதர்களின் பலவீனங்களும், பாவ இயல்புகளும் பொதுக் காரணிகளாகும். ஆதலால், இச்சபையின் பிரிவினைகள், பரந்து செல்லல் என்பன வரலாற்றில் மிகவும் துரதிர்ஷ்டமான நிகழ்வுகளாக உள்ளன.
- வரலாற்றிலே ஏற்பட்ட பிரிவினைகள், பிரிந்து செல்லல் ஆகியவற்றுக்கு ஏதுவான காரணங்கள் எவையாயினும் அவை, கிறிஸ்துவின் விருப்பத்துக்கு முரணானதாகும். தனது உன்னதகுருவின் வேண்டுதலில் அவர் தந்தையாம் இறைனிடம் தன்னைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவும், ஒருமைப்பாட்டோடும் இருக்க வேண்டுமெனச் செபித்தார் (யோவா. 17:11). அவ்வாறாயின் இன்று பல்வேறு சபைகளாகவும், குழுக்களாகவும் பிரிந்து சென்று ஒரே கிறிஸ்துவை வழிபடுவதோடு நற்செய்திக்குச் சான்று பகரும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களான எம் அனைவரதும் பொறுப்பு ''ஒருமைப்பாடுடைய கிறிஸ்தவ சபையின்'' வழியாக அவருடைய விருப்பை, ஒருமைப்பாட்டை கட்டியெழுப்புதலும் சான்று பகர்தலுமாகும்.
- எனவே, திருச்சபையின் வரலாற்றிலே ஏற்பட்ட மனித பலவீனம், சிறு பிழைகள், பிரிவினைகள், பிரிந்து செல்லல் என்பன எவையாயினும் அவை அனைத்தையும் அழித்தொழித்து ஒரே கிறிஸ்தவின் ஒரே சபைக்காக அர்ப்பணித்தல் அல்லது அதற்காக எடுக்கும் முயற்சிகள் ''கிறிஸ்தவ சபைகளின் உரையாடலாகும்''. எனவே, இந்தப் பிரிவினை, பிரிந்து செல்லல் என்பனவற்றுக்குள் மேலும் சபையின் ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்குமாக செயலாற்ற முடியாதென்பதைக் கிறிஸ்தவர்கள் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். வரலாற்றின் ஒடுங்கிய எல்லைகளையும் பிழைகளையும் பற்றிக் கொள்ளாமல் திருச்சபையின் ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பனவற்றுக்ககாகச் செயலாற்ற கிறிஸ்துவின் விருப்பத்தின்படி ஒரே சபையாக கிறிஸ்துவின் மறு உருவைக் காண வழிவகுக்கலாம்.

### திருச்சபைப் படிப்பினை

- வரலாற்றினை நாம் திரும்பிப்ப பார்க்கும்போது கத்தோலிக்க திருச்சபையினால் அதிகாரபூர்வமாக திருச்சபையின் ஒற்றுமைக்காகக் காணக்கூடிய முதலாவதும் பிரபல அத்திரவாரமுமாக இரண்டாம் வத்திக்கான பொதுச்சங்கத்தை அழைக்கலாம் (1962-1965). கிறிஸ்து பல சபைகளை நிறுவவில்லை. ஒரே ஒரு திருச்சபையை மட்டுமே நிறுவினார். ''அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் எனும் நிலை ஏற்படும்'' (யோவா. 10:16) எனும் ஒருமைப்பாட்டின் சபைக்கான தீர்மானத்தை எடுப்பதற்கு இப்பொதுச்சங்கம் பேருதவியாயிருந்தது. இச்சங்கத்தின் வெளியீடுகள் 16இல் கிறிஸ்தவ சபை உரையாடல், சபையின் ஒற்றுமை பற்றிய கத்தோலிக்க சபையின் படிப்பினைகளை வெளிப்படுத்துவதற்காக இரு தொகுப்புகள் வேறாக்கப்பட்டன.
    - கீழைத்தேய கத்தோலிக்க சபை பற்றிய அறிவுரைகள்.
    - கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் அறிவுரைகள்.
- இவற்றைத் தவிர, வத்திக்கான் பொதுச்சங்கத்தில் திருச்சபை பற்றிய ''கோட்பாட்டு விளக்கம், இலக்கம் 15. வேறு கிறிஸ்தவ சபைகளுக்குள் உள்ள காரணிகள், நல்ல பண்புகளை எடுத்துக் காட்டி கிறிஸ்தவ சபையின் ஒற்றுமையை அன்புள்ளத்தோடு பரிந்துரைக்கின்றது.
- இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் திருத்தந்தையின் ''ஒருமைப்பாடு ஏற்படுவதற்கான'' (ut unum sinct) எனும் சுற்றுமடலில், கிறிஸ்தவ சீடர்களின் மனித பலவீனங்களினால் கடந்த காலங்களில் ஏற்பட்ட பிழைகள், விளக்கமில்லாத கருத்துக்கள், சபையின் பிரிவினைகள், பிரிந்து செல்லல் ஆகியன ஏற்பட்டபோதும் இவை மென்மேலும் பிரிந்து வேறாகச் செல்வதற்குக் காரணமாகாமல், மனமாற்றத்தாலும் சகோதர உணர்வினாலும் இறைவிருப்பத்துக்கும் தூய ஆவியின் செயற்பாட்டுக்கும் இடமளிததுச் செயலாற்றினால் இறைவன் தமது விருப்பத்துக்கேற்ப தகுதியான பொருத்தமான சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை ஒருமைப்பாடு எனும் இவ்வுலகிற்கு

அப்பாலுள்ள கொடையை எமக்குத் தருவார் என்பதில் சந்தேகமில்லை என எடுத்துரைக்கிறார்.

- ஆகவே, கிறிஸ்தவ சபைகளுக்கிடையில் இறையியல் ரீதியாகவும் உறுப்பினர்கள் அனுபவிக்கின்ற ஒன்றிப்பினை அடிப்படையாகக் கொண்டு உரையாடலொன்றில் ஈடுபட்டு சபைகளின் ஒற்றுமையை முன்னிட்டு செபித்தலும், அதற்காக உழைத்தலும் கிறிஸ்தவர்களாகிய எம்மனைவரதும் கடமையாகும். ‘‘ஒரே ஆயரின் கீழ் ஒரே மந்தையாவதற்கு’’ இறைவன் எம்மை அழைத்துள்ளார்.

### சபைகளின் உரையாடலின் பெறுபேறு

- கிறிஸ்தவ சபைகளின் உரையாடலின் பெறுபேறாக இலங்கையில் கிறிஸ்தவ சபையில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட ஒற்றுமையின் பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடலாம்.
    - கத்தோலிக்க ஆயர்களின் ஆணைக்குழுவும் ஏனைய கிறிஸ்தவ சபைகளும் ஒன்றிணைந்து வெளியிட்ட பொது திருவிவிலியம்.
    - உலக சபைகளோடு தொடர்புகொண்டு, ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் சபைகளின் ஒற்றுமைக்காகச் செய்யப்படும் செப வாரம்.
    - சமய, சமூக செயற்பாடுகளின்போது நட்புடன் செயலாற்றல்.
    - இறையியல் ஒன்றிப்பினை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்ற கலைகள், மறைசார் கலந்துரையாடல்களும் உரையாடல்களும்.
    - கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சைக்காக எல்லாக் கிறிஸ்தவ சபை களுக்காகவும் பொதுவான பாடத்திட்டத்தைத் தயாரித்தல்.

### 10.3.3. பல்வேறு சமயங்களுக்கு மத்தியில் உரையாடல்

- பல்வேறு சமயங்களோடு நல்லுறவுடன் செயலாற்றல் அல்லது ‘‘சமயங்களுக்கிடையி லான உரையாடல்’’ என அழைக்கப்படுவது சமூகத்தில் நிலவுகின்ற பல்வேறு சமயங்களோடும் சமய மக்கள் குழுக்களோடும் ஒற்றுமையாக வாழ்வதற்காகச் செய்யப்படுகின்ற முயற்சியாகும்.
- உலகில் பல்வேறு சமயங்களும், தத்துவங்களும் தத்தமது படிப்பினைகளின் துணையுடன் உண்மையைத் தேடிச் செல்லும் பயணத்தில் ஈடுபட்டுள்ளன. இலங்கையும் உலகில் முக்கிய சமயங்கள் நான்கினையும் பின்பற்றுபவர்களைக் கொண்ட பல்சமய நாடாகும். எனவே, பௌத்த, இந்து, இஸ்லாம் எனும் ஏனைய சமயத்தவர்களோடு உரையாடலில் ஈடுபட்டு நல்லுறவோடு செயலாற்றல் கிறிஸ்தவர்களாகிய எமது மிக முக்கிய பொறுப்பாகும்.

### ஏனைய சமயங்கள் பற்றிய திருவிவிலியப் பின்னணி

- திருவிவிலிய ஆசிரியர்களின் கண்ணோட்டம், நோக்கமானது அக்காலத்திலிருந்த பிற சமயங்கள் பற்றிய படிப்பினைகள் அல்ல, மனித வரலாற்றிலே தாம் அனுபவித்த, வெளிப்படுத்தப்பட்ட ஒரே இறைவனைப் பற்றிய தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதாகும். ஆகையால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் கண்களில் யூதரல்லாத பிற சமயங்களை திறந்த மனத்துடன் நோக்குவதை பெரும்பாலும் காண முடியாதிருந்தது.
- எனினும், விடுதலைப் பயண நிகழ்வுக்கு முன் நிலவிய உடன்படிக்கைகளின் வழியாக இறைவனது மீட்பு அனைவருக்கும் திறந்திருப்பதாக எடுத்துக் காட்டுகிறத (தொ.நூ. 1:11). அனைத்து மனித வர்க்கத்துக்கும் உரியது ஒரே மீட்பு வரலாறு என்பது இதிலிருந்து மிகத் தெளிவாகும். நோவாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை மனித வரலாற்றில் இறை மத்தியஸ்தமாகும். எனவே, இஸ்ரயேலில் இறைவனுடைய விருப்பமானது சிலருடைய மீட்பல்ல, அனைவரும் அவருடைய மீட்பை அனுபவிப்ப தாகும். ஒரே இறைவனது செயற்பாடானது வேறுபாடின்றி, எல்லையின்றி எல்லா இனத்தவருக்கும், சமயங்களுக்கும், தத்துவங்களுக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### பிற சமயங்கள் பற்றி கிறிஸ்துவின் முன்மாதிரிகை

- கிறிஸ்து பிற சமயங்களையும் சமயத்தவர்களையும் ஏற்றுக்கொண்டு, பிறர் கருத்துக்களைப் பொறுத்து, உரையாடலில் ஈடுபட்ட சில சந்தர்ப்பங்களை நற்செய்தி நூலில் காணக்கூடியதாயுள்ளது.
    - சமாரியப் பெண்ணோடு கிணற்றடியில் செய்த உரையாடல் (யோவா. 4:1-22).
    - கானானியப் பெண்ணைச் சந்தித்தல் (மாற். 7:24-30).
    - நூற்றுவர் தலைவரின் பையன் குணமடைதல் (மத். 8:5-13; லூக். 7:1-10).
- இவ்வாறே இறையாட்சி பற்றிய அவரது படிப்பினைகள் ஒரு மக்கள் இனத்தவருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதொன்றல்ல, அனைவருக்குமான திறந்த செய்தியாகும். மீட்பு யூத இனத்தவருக்கு மட்டும் உரியதொன்றல்ல. சகல மனித குடும்பங்களைச் சேர்ந்த எல்லோருக்குமென அவரது படிப்பினைகள் உவமைகள் உருவகங்கள் வழியாக விளக்கப்பட்டுள்ளன (மத். 8:10-11, 11:20-24, 25:31-32, 34).

### புனித பவுலும் பல்வேறு சமயங்களும் அறியாத தெய்வம் பற்றிய அரையோகுபாகில் போதனை (தி.ப. 14:25-27)

- இலங்கைக் கிறிஸ்தவர்களாகிய நாம் பல்சமய சமூகத்தில் வாழ்வதனால் எமது கிறிஸ்தவ நம்பிக்கையை வெளிக்காட்டுவதன் மூலம் இறைவனை வழிபடுகின்றோம். இவ்வாறான, பல்சமய சமூகத்தில் சமயங்களுக்கிடையிலான நல்லுறவு அல்லது சமயங்களுக்கிடையிலான உரையாடல் எமனக்கு மிகவும் முக்கியமாகும். இது அமைதியான வாழ்க்கைக்குக் காரணமாகிறது. இறைவனுடைய மீட்பின் கொடையை நாம் அனுபவிக்கக் கூடியதாயிருப்பது எல்லா சமயங்களுடனும் ஏற்படுகின்ற உரையாடலின் காரணமாக உருவாகும் அன்னியொனனிய விளங்கிக் கொள்ளும் தன்மை, நட்புறவு, உதவிகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்படுகின்ற அன்பில் நிறைந்த சமூகம் வழியாகும்.

### திருச்சபையின் படிப்பினைகள்

- **இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம்**
- இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பல வெளியீடுகள் கிறிஸ்தவம் அல்லாத பிற மறைகள் பற்றிய திருச்சபையின் கண்ணோட்டம், மனப்பாங்குகள், தொடர்புகள் பற்றிக் கவனம் செலுத்தியுள்ளன. இது தொடர்பாக இச்சங்கத்தின் பின்னர் வெளியிடப்பட்ட படிப்பினைகளும் ஏராளமாகும். இச்சங்கத்தின் கண்ணோட்டம் செயல்படுவதற்கு கி.பி.1964இல் ஆறாம் சின்னப்பர் செயலகம் நிறுவப்பட்டது.
- கிறிஸ்தவம் அல்லாத சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு எனும் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் விதித்தொகுப்பு (NA) உலக சமயங்களில் உள்ள உண்மைகளைக் கண்டு, அவற்றைப் பாராட்டுகிறது. அவ்வுண்மைகளைத் தேடிப் பார்த்து விளங்கிக் கொள்வதற்கு திருச்சபைக்கு அழைப்பு விடுக்கின்றது. இந்து, இஸ்லாம், பௌத்த, யூத சமயங்களில் பொதிந்துள்ள உண்மைகள் மிகச் சுருக்கமாக இவ் வெளியீட்டில் குறிப்பிடப்பட்டு அந்த உண்மைகளைக் காணும் எல்லோரது இதயங்கள் திறக்கப்படும்.
- ''இச்சமயங்களிலே காணக்கிடக்கின்ற உண்மையானதும் தூயதுமான எதையுமே கத்தோலிக்க திருச்சபை வெறுத்து ஒதுக்கவில்லை. தன்னுடைய கொள்கைகளிலிருந்தும் போதனைகளிலிருந்து பலவற்றில் மாறுபடினும் எல்லா மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையின் ஒளிச்சுடரை மீண்டும் மீண்டும் பிரதிபலிக்கின்ற செயல்முறைப் பாணிகள், வாழ்க்கை முறைகள், நெறிகள், கோட்பாடுகள் ஆகியவற்றைக் கத்தோலிக்கத் திருச்சபை உண்மையாகவே மதித்துப் போற்றுகின்றது (NA 2)
- கிறிஸ்தவம் அல்லாத சமயங்களை விசுவசிப்பவர்களும் கடவுளின் மக்களோடு பல்வேறு முறைகளில் தொடர்புகொண்டவர்கள். எனவே, அவர்களுக்கும் நல்ல உள்ளமும் தூதுப் பணியை நிறைவேற்றுவதற்கு அழைப்பும் உண்டு (LG 16, 17).

- இது மட்டுமல்ல திருச்சபைக்கு இடையூறுகள் செய்பவர்கள் மட்டிலும் நல்ல உள்ளமும் மீட்பை அறிவிப்பதற்கும் திருச்சபைக்கு அழைப்பொன்று உண்டென இப்பொதுச்சங்கம் எடுத்துக் காட்டுகிறது (GS 92).
- பிற சமயங்களிலுள்ள மதிப்பீடுகள், உண்மைகள், ஆகியவற்றைத் திருச்சபை பாராட்டி மதிப்பளிக்கின்றது என்பதனால் அந்த சமயங்களில் பலவீனங்கள், பூரணமற்ற தன்மை என்பன இல்லையென நினைக்கக்கூடாது.
- இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் மனிதன் தான் விரும்பிய சமயத்தை விசுவசிக்க முடியுமென்னும் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்கிறது. இச் சுதந்திரம் தனிநபருக்கும் குழுக்களுக்கும் இருக்க வேண்டுமென்பதொடு, எவரும் ஒரு சமயத்தை ஏற்றுக்கொள்வதில் இன்னுமொருவரை கட்டாயப்படுத்தாதிருத்தல் வேண்டுமெனவும் கூறுகிறது (DH 2).

- **கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (க.தி.ம)**
    - CCC 839 - 848

- **உரையாடலும் வெளியீடுகளும்**
- திருச்சபையின் சமயங்களுடனான உரையாடல் பற்றிய செயலக வெளியீடு 1991.
- சில பிரதேசங்களில் கிறிஸ்தவ மக்கள் மிகவும் குறைவாக உள்ளது. அனேக பிறமறையினர் மத்தியில் வாழும்போது கிறிஸ்தவர்களான நாமும் அவர்களுடன் வாழ்வதோடு உரையாடலிலும் ஈடுபட வேண்டும். ''இவர்கள் இம்மனிதரோடு கௌரவமாகவும் அன்பாகவும் தொடர்புகொண்டு தாமும் இக்குழுக்களின் அங்கத்தவரென ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் இம் மனிதரின் சமூகத்தவராயினும் கலாசாரத்தையும் வாழ்வில் வெவ்வேறு விதத்தில் பரிமாற்றங்களில் செயற்றிட்டங்களில் பங்காளிகளாவர்'' (AG 11)

**உத்தேச கற்றல் கற்பித்தல் செயற்பாடு :**
- இலங்கையின் முக்கிய கிறிஸ்தவ சபைகளின் பட்டியலொன்றைத் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்குங்கள்.
- இலங்கையின் முக்கிய கிறிஸ்தவ சபைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- இன்றைய கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான உரையாடலொன்றின் முக்கியத்துவம் பற்றி விவாதம் ஒன்று நடாத்துங்கள்.
- பிற மறைகள் பற்றிய கிறிஸ்துவினுடைய மனப்பாங்கு, திருச்சபையின் படிப்பினைகள் மூலம் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையின் வழியாக சமயங்களுடனான சக வாழ்வினை உருவாக்கும் விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

**உசாத்துணை நூல்கள்:**
- திருவிவிலியம்.
- இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்
    - திருச்சபை (Lumen Gentium)
    - கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு (Nostra Aetate)
    - சமய சுதந்திரம் (Dignitatis Humanae)
    - இன்றைய உலகில் திருச்சபை (Gudium et Spes)
    - கிறிஸ்தவ ஒன்றிப்பு (Unitatis Redintaratio)
        - ✧ கத்தோலிக்க கீழைச் சபைகள் (Orientalium Ecclesiarum)

## பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீடு மதிப்பீட்டை பயன்படுத்த வேண்டும் என்பதும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயமாகும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) மதிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும் போதே மதிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம் பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாக கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ, சோதனை நடாத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர்களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். அதனால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங்களையும் இனங்கண்டு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமாகும்.

கற்றல் - கற்பித்தல் செயல் மூலம் தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப்படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தை செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்களது செயற்பாடுகளை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவர் ஆற்றல் அபிவிருத்தி எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தகுந்த அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து அவற்றை மாணவர்கள் சரியாகப் பெற்றுக்கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல்-கற்பித்தல் ஊடாகத் நிகழ வேண்டும். அத்தோடு அதற்கு தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். மதிப்பீட்டில் (கணிப்பீட்டில்) ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பொதுவாக பின்னூட்டல், முன்னூட்டல் எனப்படும். மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பின்னூட்டலையும், மாணவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனம்காணும்போது அவற்றை மேன்படுத்த முன்னூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர்களுக்கு அவசியமாகின்றது. மதிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட மதிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் -கற்பித்தல் மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தத் தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சை திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த அணுகுமுறை வகைகள்:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்.
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடுகள்
14. பேச்சுக்கள்
15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா - விடை நிகழ்ச்சிகள்
21. வினா - விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்.
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லாப் பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர்பார்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

மேற்படி ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும்** முதலாம் தவணை
**உபகரண இலக்கமும் :** இல. 01

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம் :** 6.1

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம் :**
- ✪ திருச்சபையின் ஆரம்ப காலம்.
- ✪ புனித பவுலின் மறைத்தூதுப் பணிகள்.
- ✪ புனித பவுலின் முக்கிய படிப்பினைகள்.

**4. கணிப்பீட்டு வகையும்** சுவர்ச் செய்திப் பத்திரிகை
**இலக்கமும் :** 18

- ✪ தூய ஆவியின் வருகையோடு திருச்சபையின் ஆரம்பத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளை அறிந்து கொள்வர்.
- ✪ ஆரம்ப கால கிறிஸ்தவ சபையின் விசேட பண்புகளை எடுத்துக் காட்டுவர்.
- ✪ புனித பவுலின் மறைத்தூதுப் பயணங்கள் அவரது முக்கிய படிப்பினைகள் தொடர்பான தகவல்களை எழுதுவர்.

| | **நியதிகள்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1. | கற்றல் கற்பித்தல் செயன்முறையும் காட்டும் தொடர்பு பொருத்தப்பாடும். | 04 |
| 2. | ஒழுங்கமைவும் பொதுவானதாக இருத்தலும். | 04 |
| 3. | அழகுபடுத்துவதற்காகக் கையாளப்பட்ட உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும். | 04 |
| 4. | உள்ளடக்கத்தின் ஆக்கபூர்வமான தன்மையும் தர்க்க ரீதியான தன்மையும். | 04 |
| 5. | சுவர்ச் செய்திப் பத்திரிகை என்ற வகையில் ஆக்கத்திறன் வெற்றிகரமான தன்மை. | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும்** முதலாம் தவணை
**உபகரண இலக்கமும் :** இல. 02

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம் :** 6.2

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம் :** ✪ முக்கிய திருச்சங்கங்கள்.
✪ திருச்சபைத் தந்தையர்கள்.

**4. கணிப்பீட்டு வகையும்** உடனடிச் சொற்பொழிவு
**இலக்கமும் :** 22

✪ முக்கிய திருச்சங்கங்கள் பற்றி விமர்சன ரீதியாக விடயங்களை முன்வைப்பர்.

✪ திருச்சபைத் தந்தையர்களின் வாழ்க்கை தமது வாழ்க்கைக்கு முன்மாதிரிகையான விதத்தை விளக்குவர்.

| | **நியதிகள்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1. | அணுகுமுறையும் தலைப்பைத் தெளிவாக முன்வைத்தலும் அதன் பொருத்தப்பாடும். | 04 |
| 2. | ஒழுங்கமைப்பு, தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தல், மொழிச்செம்மை. | 04 |
| 3. | சிறப்பான மொழிப் பிரயோகங்கள் மேற்கொள்ளல். | 04 |
| 4. | தெளிவு, குரல் கட்டுப்பாடு, முகபாவனை, அங்க அசைவுகள், சரியான உச்சரிப்பு. | 04 |
| 5. | தொகுப்பு முடிவுகளுக்குக் காரணங் காட்டல். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : முதலாம் தவணை இல. 03

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 6.3

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** :
- ✪ 5-9ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் திருச்சபை வளர்ச்சியடைதல்.
- ✪ மத்திய காலம்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : கட்டமைப்புக் கட்டுரை வினாக்கள் 8.ii

- ✪ ஆரம்ப நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் திருச்சபை வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குவர்.
- ✪ மத்திய காலத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகளை எடுத்துக் காட்டுவர்.
- ✪ வரலாற்றிலே திருச்சபையின் வீழ்ச்சியையும் எழுச்சியையும் விபரிப்பர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | தலைப்பு அறிமுகம் செய்தல் | 04 |
| 2. | பாடங்களின் முக்கியத்துவம் தலைப்புக்கு பொருத்தமானதாக இருத்தல். | 04 |
| 3. | ஒழுங்கமைப்பு, பந்தி பிரித்தல், பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தல். | 04 |
| 4. | மொழிச் செம்மை, இலக்கணச் செம்மை, நிறுத்தக் குறிகள், மொழி சார்ந்த பிரயோகங்கள், தெளிவான ஆக்கபூர்வத் தன்மை. | 04 |
| 5. | முடிவெடுத்தல், நியாயப்படுத்தல், விடயங்களைத் தர்க்க ரீதியாக முன்வைத்தல். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : இரண்டாம் தவணை இல. 04

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 7.2

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** :
- ✪ புனரமைப்பும் திருச்சபையின் மறுமலர்ச்சியும்.
- ✪ நவீன காலம்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : ஒப்படை 1

- ✪ திருச்சபையின் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு செல்வாக்குச் செலுத்திய காரணங்களை அறிந்து கொள்வர்.
- ✪ மறுமலர்ச்சியால் திருச்சபையில் ஏற்பட்ட புனரமைப்பை விளக்குவர்.
- ✪ நவீன காலத்தில் காணப்பட்ட திருச்சபையின் செயற்பாடுகளை விபரிப்பர்.

| | **நியதிகள்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1. | ஒப்படையின் குறிக்கோளை விளக்குதலும் குறிக்கோள்களுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடலும். | 04 |
| 2. | தரவு / தகவல்கள் சேகரிப்பதற்காகக் கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு. | 04 |
| 3. | தரவு / தகவல்கள் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 04 |
| 4. | பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தர்க்க ரீதியான தன்மையும். | 04 |
| 5. | முடிவுக்கு வருதலும் அவற்றுக்குக் காரணங்காட்டலும் அத்தகைய ஆக்கத்தை முன்வைத்தலும். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும் :** இரண்டாம் தவணை இல. 05

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம் :** 7.3

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம் :**
- ✪ கல்வி.
- ✪ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்.
- ✪ கலைகள்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும் :** விவாதம் 20

- ✪ திருச்சபையினால் உலகுக்குக் கிடைத்த பங்களிப்பை விளக்குவர்.
- ✪ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் திருச்சபையின் முன்னேற்றத்துக்கு உதவிய முறையை விபரிப்பர்.
- ✪ கலையினால் உருவாகிய ஆக்கங்களின் காரணமாக திருச்சபை முகங்கொடுத்த சவால்களை விமர்சனபூர்வமாக விளக்குவர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | அணுகுமுறை, தலைப்பைத் தெளிவாக அறிமுகஞ் செய்தல். | 04 |
| 2. | தலைப்புக்குப் பொருத்தமான விடயங்களை முன்வைத்தலும் ஒழுங்கமைவும். | 04 |
| 3. | தகவல்கள் ஆக்கபூர்வமாகவும் தர்க்க ரீதியிலும் முன்வைக்கப்பட்டிருத் தல். | 04 |
| 4. | பொருத்தமான முகபாவனையும் அங்க அசைவுகளும். | 04 |
| 5. | பொழிப்பாக்கல், முடிவுகளையும் அம்முடிவுகளுக்கான காரணங்களையும் முன்வைத்தல். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : இரண்டாம் தவணை
இல. 06

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 8.2

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** :
- ✪ சுதந்திரத்தின் பின் திருச்சபை எதிர் கொண்ட பிரச்சினைகள்.
- ✪ இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத் தின் தாக்கங்கள்.
- ✪ தற்கால சமூகத்தில் இலங்கைத் திருச்சபை.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : செயற்றிட்டம்
2

- ✪ சுதந்திரத்தின் பின் திருச்சபை எதிர்கொண்ட பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்வர்.
- ✪ இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தாக்கங்களை பகுப்பர்.
- ✪ தற்கால சமூகத்தில் இலங்கைத் திருச்சபையின் பணிகளை விளக்குவர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | தலைப்பை / பிரச்சினையை விளங்கிக் கொள்ளலும் விளக்கமளித்தலும் பாடப்பரப்புடன் அத்தொடர்பை விளங்கிக் கொள்ளலும் குறிக்கோள் களைக் கட்டியெழுப்பலும். | 04 |
| 2. | திட்டமிடல், கால வரையறைச் சட்டத்தினைத் தயாரித்தல், தகவல் சேகரிப்பதற்காக அனுசரிக்கும் உத்திகளைத் தீர்மானித்தலும் அவற்றை ஒழுங்கு செய்து கொள்ளலும். | 04 |
| 3. | தகவல் சேகரித்தலும் அவற்றின் செம்மையும் | 04 |
| 4. | திட்டத்துக்கு அமைய குறித்த காலத்திற்குள் வேலைகளை நிறைவு செய்தலும் சேகரித்த தகவல்களைக் கொண்டு முடிவெடுத்தலும் காரணங் காட்டலும். | 04 |
| 5. | பிரச்சினை, குறிக்கோள்கள் ஆகியவற்றுக்கு அமைய எடுத்த முடிவுகளினூடாக கருத்து வெளியிடலும் அறிக்கை எழுதுவதும் பாடப்பரப்புடன் தொடர்புறும் விதத்தை விளக்குதலும். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும் :** மூன்றாம் தவணை இல. 07

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம் :** 9.1

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம் :**
- ✪ தொடக்க கால கிறிஸ்தவ குழுவும் திருவழிபாடும்.
- ✪ கீழைத்தேய சபைகளின் திருவழிபாட்டு முறை.
- ✪ மேலைத்தேய சபைகளின் திருவழிபாட்டு முறை.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும் :** செய்து காட்டல் / முன்வைத்தல் 6

- ✪ தொடக்க கால திருச்சபையில் நிலவிய திருவழிபாட்டு முறையை எடுத்துக் காட்டுவர்.
- ✪ கீழைத்தேய சபைகளின் திருவழிபாட்டு முறைகளை சித்திரங்களாகக் காட்டுவர்.
- ✪ மேலைத்தேய சபைகளின் திருவழிபாட்டு முறைகளை சுவரொட்டியின் வழியாக முன்வைப்பர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | செய்து காட்டல், தலைப்பின் பொருத்தப்பாடும் அதற்கும் பாடப்பரப்புக் கும் இடையிலான தொடர்பும், குறிக்கோள்களை உருவாக்கல். | 04 |
| 2. | குறிக்கோள்களின்படி பயன்படுத்தும் பல்வேறு பொருள்கள் ஊடகங்களின் பொருத்தப்பாடும் அவற்றை ஒழுங்குபடுத்தலும். | 04 |
| 3. | அயற் பிரதேசத்தில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி பொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அழகூட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும். | 04 |
| 4. | குறிக்கோள்களுக்கமைவாக ஆக்கபூர்வமாக முன்வைத்தல். | 04 |
| 5. | செய்து காட்டலை விளைபயனுடைய வகையில் கற்றலுடன் தொடர்பு படுத்தல். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும் :** மூன்றாம் தவணை இல. 08

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம் :** 10.2

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம் :**
- ✪ முரண்பாடுகளைக் களைதலும் அமைதியைப் பேணலும்.
- ✪ சூழல் பாதுகாப்பும் கிறிஸ்தவனின் பொறுப்பும்.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும் :** வினாவிடை நிகழ்ச்சி 19

- ✪ மனிதன் வன்முறை, துன்புறுத்தல் என்பவற்றைத் தவிர்த்து, படைப்பு அனைத்தோடும் அமைதியோடும் புரிந்துணர்வோடும் வாழ்வதே இறைவிருப்பம் என்பதை விளக்குவர்.
- ✪ சூழலைப் பாதுகாத்தல் கிறிஸ்தவ பொறுப்பு என்பதை திருவிவிலியத்திலிருந்து ஆதாரங்களைக் காட்டுவர்.
- ✪ முரண்பாடுகளைக் களைதல், அமைதியைப் பேணல் தொடர்பாக திருச்சபை வெளியிட்டுள்ள சுற்றுமடல்களின் உள்ளடக்கத்தை முன்வைப்பர்.

| | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | பாடத்துக்குப் பொருத்தமானவாறு வினாக்கொத்து தயாரிக்கப்பட்டிருத்தல். | 04 |
| 2. | பொருத்தமாக குழுக்களை அமைத்துக் கொள்ளல். | 04 |
| 3. | வினாக்களை முன்வைக்கும் திறன். | 04 |
| 4. | விடையளிப்பதில் காட்டும் பங்களிப்பு. | 04 |
| 5. | புள்ளிகளைப் பதிவு செய்தலும் ஒட்டுமொத்தப் பங்களிப்பும். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |

## கற்றல் கற்பித்தல் பாவனை உபகரணங்கள்

**1. பாடசாலைத் தவணையும் உபகரண இலக்கமும்** : மூன்றாம் தவணை இல. 09

**2. உள்ளடக்க வேண்டிய தேர்ச்சி மட்டம்** : 10.3

**3. உள்ளடக்க வேண்டிய பாட விதானம்** :
- ✪ இலங்கையில் முக்கிய கிறிஸ்தவ சபைகள்.
- ✪ கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான உரையாடல்.
- ✪ பல்வேறு சமயங்களுக்கு மத்தியில் நல்லுறவு.

**4. கணிப்பீட்டு வகையும் இலக்கமும்** : கண்டறிகை 4

- ✪ இலங்கையில் முக்கிய கிறிஸ்தவ சபைகளின் பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பர்.
- ✪ கிறிஸ்தவ சபைகளின் ஒருமைப்பாட்டுக்காக சபைகளுக்கிடையிலான உரையாடலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவர்.
- ✪ கிறிஸ்தவமல்லாத சமயத்தவர்களோடு ஒருமைப்பாட்டோடு வாழும் முறைக்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பர்.

| | **நியதிகள்** | **புள்ளிகள்** |
|---|---|---|
| 1. | பிரச்சினைகள் / பாடத்தலைப்பினை விளங்கிக் கொள்ளலும் குறிக்கோள்களைக் கட்டியெழுப்பலும், குறிக்கோள்களுக்கும் பாடத்துக்குமுரிய தொடர்புகள் பற்றிய அறிவு. | 04 |
| 2. | செயற்பாடுகளைத் திட்டமிடலும் ஒழுங்குபடுத்தலும் தரவுகளைச் சேகரிக்க எடுக்கும் செயற்பாடுகளைத் தீர்மானித்தல். | 04 |
| 3. | தரவு சேகரித்தலும் அவற்றின் பிழையின்மையும். | 04 |
| 4. | தரவு பகுப்பாய்வு, அட்டவணை, வரைபுகள். | 04 |
| 5. | முடிவுகளுக்கு வருதல். | 04 |
| | மொத்தப் புள்ளி | 20 |
| | இறுதிப் புள்ளி 20/2 | 10 |